In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்பே அருளே அபிராமி



In Public domain. Digitization Muthulakshmi Research Academy



நவராத்ரி (2017) கொலுவில் ஸ்ரீ அபிராமி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஸ்ரீ மஹா கணபதி துணை

அன்பே அருளே அபிராமி

திருமதி ரஞ்சனா பாலசுப்ரமணியன்

திரு. N. பாலசுப்ரமணியன்

"ஸ்ரீ ஆனந்த நிலையம்"
அபார்ட்மெண்ட் நம். 5, "ராஜ்வில்லா"
6, ராமாராவ் ரோடு மைலாப்பூர், சென்னை 600004
தொலைபேசி: 24982519, 9444016789, 9080114249
இமெயில்: balajiranjana@gmail.com

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏவிளம்பி வருட (2017) வெளியீடு
விலை ரூபாய் 240/

பொருளடக்கம்

1. அன்பே அருளே அபிராமி 1
2. சாக்தமே சமயங்களின் அடிப்படை 22
3. அபிராமி அந்தாதியின் பெருமைகள் 30
4. திருக்கடையூர் சிறப்பு 32
5. அன்னை அபிராமியின் ஆவிர்பாவம் 38
6. ஸ்ரீமார்கண்டேயர் 49
7. பட்டரைக் காத்த பராசக்தி 58
8. மகளானாள் மகாசக்தி 73
9. பக்தனுக்காக பாரம் சுமந்த பராசக்தி 81
10. பிணிக்கு மருந்தாவாள்! 84
11. மனநலம்காத்த மகேஸ்வரி 86
12. அம்பிகையின் அருள்பெற்ற தொழிலாளி 89
13. நம்பினார் கெடுவதில்லை 92
14. அற்புதமே அபிராமி! 95
15. தேவியின் திருவடித் தியானம் 97
16. திருக்கடவூர் அபிராமியின் திருக்கோயில் 99
17. தினந்தோறும் வைபவம் காணும் திருக்கடவூர் 114
18. அனைத்தும் அருள்வாள் அபிராமி........ 118
19. சத்யமேவ ஜயதே 125
20. பூரண வளம் தரும் பௌர்ணமியில் அம்பிகை பூஜை 130
21. அபிராமி அம்பிகை திருத்தலங்கள் 137
22. திருக்கடவூர் தலபுராணத்தை ஒட்டிய திருத்தலங்கள் 151
23. வல்வினையை மாற்றும் அபிராமவல்லி 161
24. மீண்டும் சந்திப்போம் 168
25. பக்தி பாடல்கள் / தோத்திரங்கள் 173

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓம் கார ஸ்வரூபிணி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரய ஸ்வாமிகள் அவர்களுக்கு
எங்கள் அநேக கோடி நமஸ்காரங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Website : www.kamakoti.org.
email : kanchimutt@gmail.com

☎ : 044-27222115
Acts : 044-27224236
Fax : 044-27224305

II Sri Chandramouleeswaraya Nama: ||

Sri Sankara Bhaghavadpadacharya Paramparagatha Moolamnaya Sarvajnapeeta

His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL

Srimatam Samsthanam

No. 1, Salai Street, KANCHEEPURAM - 631 502.

Date : 30.10.17

சென்னை மைலாப்பூரைச் சேர்ந்த திருமதி.ரஞ்சனா பாலசுப்ரமணியன் மற்றும் திரு.பாலசுப்ரமண்யன் எழுதிய 'அன்பே அருளே அபிராமி' என்ற நூல் பெறப்பட்டு ஸ்ரீ ஆசார்யாள் சந்நதியில் ஸமர்ப்பிக்கப் பட்டது.

திருக்கடவூரில் கோயில் கொண்டுள்ள அம்பாள் அபிராமியின் வரலாறும், அவர்கள் நிகழ்த்திய அதிசயங்களையும் மிகவும் சுவையாக பக்தி பெருக்குடன் எளிய தமிழில் இந்த நூலில் அளிக்கப்பட்டுள்ளது. நிகழ்ந்த சில அற்புத நிகழ்ச்சிகளையும் கொடுக்கப் பட்டுள்ளது. ஆதிசங்கர பகவத்பாதர்கள் தங்களின் சிவானந்த லஹரியின் 63வது சுலோகத்தில் 'பக்தி: கிம் ந கரோத்யஹோ' என்று கூறியுள்ளதை உறுதிபடுத்தும் வகையில் நிகழ்வுகள் அமைந்துள்ளன.

இவர்களின் எழுத்து படிப்பவர் மனக்கண் முன் படமாக தெரியும் வகையில் பக்தி பெருக்குடன் உள்ளது ஒரு சிறப்பு. பாராட்டத்தக்கது.

அபிராமிபட்டரின் அபிராமி அந்தாதி, அபிராமி அம்மை பதிகங்கள், அமிர்தகடேச்வரர் பதிகம், திருக்கடவூர் கால ஸம்ஹார மூர்த்தி சபதம், திருக்கடவூர் கால ஸம்ஹார மூர்த்தி பின்முடுகு ஆகியவைகளையும் சேர்த்து அளித்துள்ளது தனிச் சிறப்பு.

அபிராமி அம்பிகை எங்கெல்லாம் கோயில் கொண்டிருக்கிறாா் என்றதொரு பட்டியல் முழு விவரங்களுடன் அளிக்கப்பட்டுள்ளது. அபிராமி அன்னையை தரிசித்து அருளாசி பெற விரும்பும் அடியார்கட்கு மிகவும் உதவியாக இருக்கும்.

இத்தகைய நற்தொண்டினை செய்து மக்களிடம் பக்தி வளர உதவும் இந்த நூலாசிரியர்கள் இத்தகைய மேலும் பல நூல்களை மக்களுக்கு வழங்க வேண்டும் என்றும் அதற்காக அவர்களின் வாழ்வில் எல்லா நலன்களும் பெற்று நீண்ட காலம் வாழ வேண்டும் என்றும் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ஆசீர்வதிக்கின்றார்கள்.

For. Sri Kanchi Kamakoti Peetam
Srimatam Samsthanam.

MANAGER





தருமை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்களுக்கு எங்கள் அநேக கோடி நமஸ்காரங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
இளைய சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த சுவாமிகள்

தருமபுரம்
மயிலாடுதுறை (அஞ்சல்) 609 001.

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே"

வாழ்த்துரை

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர் தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதிய முனி
காதிற் பொருபடைத்தந்தன் கணபதி காமன் முதற்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே - அபிராமிபட்டர்

'அன்பே அருளே அபிராமி' எனும் நூலினை திருமதி ரஞ்சனா பாலசுப்பிரமணியன், திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் எழுதியது. நவராத்திரி வெளியீடாக வெளிவருவது அறிந்து மகிழ்ச்சி.

திருக்கடவூர் தல வரலாறு, அபிராமி அம்மையின் அருட்செயல்கள், அபிராமி வீற்றிருந்து அருளும் தலங்கள், கள்ளவாரண பதிகம், அபிராமி அந்தாதி, அபிராமி அம்மை பதிகம், அபிராமி ஸ்தோத்திரம், மஹாமிருத்யும் ஜய ஸ்தோத்திரம் முதலிய தோத்திர பாடல்களைத் தொகுத்து வெளியிடுவது அனைவருக்கும் பயனுடையதாகும்.

'நம்பினோர் கெடுவதில்லை. இது நான்குமறை தீர்ப்பு" என்ற பாரதி பாடலுக்கு ஏற்ப சென்னை வண்ணாரப்பேட்டை சேணி செட்டியார் அனுபவம் காட்டுவது பலருக்கும் பக்தியுணர்வை, தெய்வ நம்பிக்கையை வளர்ப்பதாகும்.

பிணிக்கு மருந்தாவாள் எனும் கட்டுரையில் கே.கே. பிள்ளை பிச்சைக்கட்டளை உருவான வரலாறு காட்டியிருப்பது போன்ற சம்பவங்களையும் தொகுத்து மக்களுக்குப் பயனுள்ளதாக "அன்பே அருளே அபிராமி" எனும் நூலாக வெளியிடும் திருமதி.ரஞ்சனா பாலசுப்பிரமணியம், திரு. பாலசுப்பிரமணியன் இருவருக்கும் எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கநாதப்பெருமான் திருவருளும், தருமையாதீன குருவருளும் கிடைப்பதாகுக.

தருமை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்களுக்கு எங்கள் அநேக கோடி நமஸ்காரங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக் கயிலாயப் பரம்பரை திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்களுக்கு
எங்கள் அநேக கோடி நமஸ்காரங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்து நான்காவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்
திருவாவடுதுறை (அஞ்சல்) - 609 803, நாகை மாவட்டம். தொலைபேசி : 04364 - 232021

நாள் : 15.09.2017

அருள் வாழ்த்துரை

நலந்தரு ஞானமும் கல்வியும் எல்லாம்
உரந்தரு வல்வினை உம்மை விட்டோடும்
சிரந்தரு தீவினை செய்வது அகற்றி
வரந்தரு சோதியும் வாய்த்திடும் தானே. – திருமூலர் திருமந்திரம்.

அண்டப் பெருவெளியையும் கடந்தருளும் ஆதிநாயகன் சிவபெருமானின் இடப்பாகத்தே அருளும் அன்னையின் பல்வேறு திருக்கோலங்களில் ஒன்றான அபிராமியம்மையின் அருட்டிறத்தை உணர்ந்து உரை செய்தோரின் உயரிய கருத்துகளைத் தொகுத்து படிப்போர் அனைவரும் பயன்கொள்ளும் வகையில் 'அன்பே! அருளே! அபிராமி' எனும் தலைப்பில் நூலாக்கி நவராத்திரி விழாத் தொடக்கத்தில் வழங்கியமை மிகவும் பாராட்டுக்குரியது; சைவ மக்களுக்கும் பிறருக்கும் நலம் மிகப் பயப்பது.

இந்நூலைத் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் பெற்று பயன்கொள்வோரும், விழா நாட்களில் பங்கேற்போரும் வாழ்வில் வளம்பல பெற்று இருமை இன்பமும் எய்திடவும் எல்லாம் வல்ல நமது வழிபடு கடவுளாகிய ஸ்ரீ ஞான மாநடராஜப் பெருமானின் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

பெறுநர்

சைவத்திரு. என். பாலசுப்ரமணியன் அவர்கள்,
ப்ளாட் எண்: 5, ராஜ் வில்லா,
கதவு எண்: 6, ராமாராவ் ரோடு,
மைலாப்பூர், சென்னை – 4.

இணைப்பு

திருநீற்றுச் செல்வம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Ph. : 044 - 2461 1632
Cell : +91-98406 97321

Sahiya - Mimamsa - Nyaya - Vedanta Siromani,
Advaita Siddhi Ratnakara, Vidya Varidhi, Vidya Vachaspathi
Brahma Vidya Bhushanam

DR. GODA VENKATESWARA SASTRI

M.Sc., Ph.D., C.A.I.I.B.

Reserve Bank of India Chennai (Retd.)

Flat No. 1, Vignesh Apts., No.3, Thiruvengadam Street
Raja Annamalaipuram, Chennai - 600 028
Email : godasastry@gmail.com

அம்பாளின் மகிமையை விளக்கும் துதிகள் பல உள்ளன. வேதங்களில் ஸ்ரீ சூக்தம், துர்கா சூக்தம் போன்றவை மிகவும் முக்கியமானவை. சங்கர பகவத் பாதர் சௌந்தர்ய லஹரீ எனும் மிகச்சிறந்த ஸ்தோத்திரம் அருளி உள்ளார். வாக்தேவிகள் ஸ்ரீ லலிதா ரஹஸ்ய நாம ஸ்தோத்திரத்தை செய்து அதை அம்பாளுக்கே சமர்பித்தார். துர்கா சப்தசதி எனும் தேவி மாஹாத்மிய கிரந்தம் உலகில் மிகவும் புகழ்பெற்றது. தேவி பாகவதம் வியாசரால் அருளிய புராணங்களில் ஒன்று. இப்படிப்பட்ட அன்னையின் மஹிமையை கூறும் நூல்களில் அபிராமி பட்டரின் அபிராமி அந்தாதியும் மிக சிறப்பாக பெயர் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் பலரால் தினந்தோறும் பாராயணம் செய்யப்பட்டு அம்பாளை வழிபடும் கிரந்தங்களில் இந்த அபிராமி அந்தாதியும் மிகச்சிறந்தது. இந்த அபிராமி அந்தாதி திருக்கடவூர் என்று பிரசித்திப் பெற்ற சோழநாட்டில் இருக்கும் திருத்தலம். இந்த திருத்தலத்தில் தான் தேவர்கள் கணபதியை வணங்கத் தவறியதால் கள்ளவாரண பிள்ளையார் அம்ருத கலசத்தை மறைத்தார் என்றும் பிரசித்தி உள்ளது. இத்திருத்தலத்திலேயே மார்க்கண்டேயரை ஆட்கொள்ள சிவபெருமான் யமனை இடதுகாலால் உதைத்து அனுப்பினார் என்றும் கூறப்படுகிறது. இத்திருத்தலத்தில் தான் அபிராமிபட்டர் அமாவாசை தினத்தை பௌர்ணமியாக செய்து அன்னையின் அருளை உலகத்திற்கு விளக்கிக் காட்டினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

300 வருடங்களுக்கு முன்பு சோழ நாட்டில் அந்தணர் பரம்பரையில் வந்த சுப்ரமணியன் எனும் பக்தர் சிறுவயதிலேயே வேதங்கள், சங்கீதம், ஜோதிடம் மற்றும் பல கலைகளில் தேர்ச்சி பெற்றார். அவருக்கு சிறுவயதிலிருந்தே குலதெய்வமான அன்னையினிடத்தில் ஆழ்ந்த பக்தியுடன் வளர்ந்து கொண்டிருந்தார். இவர் சிறந்த ஸ்ரீ வித்யா உபாசகர். தவறாமல் ஒவ்வொரு நாளும் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தை பாராயணம் செய்து வருவார். ஒருநாள் தை அமாவாசை தினம் அபிராமிபட்டர் அன்னையின் திருக்கோயிலில் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்து இருந்தார். அப்போது அங்கு வந்த சரபோஜி மன்னர் அவரிடத்தில் சல்லாபம் செய்ய வேண்டும் என்று கருதி சில கேள்விகளை கேட்டு பிறகு இன்று என்ன திதி என்று கேட்க அன்னை மகிமையின் சிந்தனையிலேயே ஆழ்ந்து தன்னையும் மறந்த அபிராமி பட்டர் இன்று பௌர்ணமி என்று கூறினார். பிறகு தன்னிடத்திற்குச் செல்ல சரபோஜி மன்னர் இன்று அமாவாசை ஆயிற்றே ஆனால் பட்டர் பௌர்ணமி என்று கூறியுள்ளாரே ஏன் என்று சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தார். பட்டரும் வீட்டுக்குச் சென்று நடந்த விஷயங்களை நினைத்து தவறுதலாக கூறியதற்கு கவலையடைந்து அன்னையின் பொற்பாதங்களில் தன்னைஅர்ப்பித்துக் கொண்டார்.

ஓர் சுத்தமான பக்தரின் மனநிலையை அறிந்த அன்னை மனமிரங்கி தம் தாடங்கத்தை (தோடை) ஆகாசத்தில் வீசினாள் அது சரத் காலத்தில் பௌர்ணமி அன்று ஒளிக்கும் பரிபூர்ண சந்திரன் போல் ஒளித்துக் கொண்டிருந்தது. இதைக் கண்டு சரபோஜி மன்னன் தான் பட்டரை சோதித்ததற்கு வருந்தினான். நேராக பட்டரின் இடத்திற்கு வந்து அவரின் திருவடிகளை சிரம் சாய்த்து வணங்கி மன்னிப்பை கேட்டார். அவருக்கு தன் ராஜ்யத்தையே கொடுக்கிறேன் என்று கூறினார். ஆனால் பட்டர் அதற்கு அங்கீகாரத்தை தெரிவிக்கவில்லை. ஆயினும் பட்டர் சந்ததிக்கு உதவட்டும் என்று பல மான்யங்களை அளித்ததாக சாசனங்கள் கூறுகிறது.

102 பாடல்களால் ஆன இந்த அபிராமி அந்தாதி 'உதிக்கின்ற செங்கதிர்' என்று தொடங்கி நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றனவே என்று அபிராமி அந்தாதியை முடித்துள்ளார். ஆகையால் ஆத்யந்தங்களில் அன்னையின் தோற்றம் நம் இதயத்தில் உதித்துக் கொண்டிருப்பதே ஆசிரியரின் தாத்பர்யம் என்று தெளிவாகிறது. இந்த அபிராமி அன்னையை சிந்தித்திருப்போர்க்கு எந்த வகையான தீங்கும் வராது என்று கடைசி பாடலில் 'ஆத்தாளை எங்கள் அபிராமி வல்லியை... தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே' என்று நூற்பயனை தெளிவாக்கி உள்ளார். அன்னையின் திருமேனி நிறத்தை தன் பாடலிலும் அன்னையே திரிபுரசுந்தரீ என்றும் சிவனுடன் கூடி மனதில் எப்பொழுதும் தோன்ற வேண்டும் என்று 4வது பாடலிலும் தல் மூன்று கடவுள்களும் வணங்கும் முதல்வியே அபிராமி என்றும் முற்பிறவியில் செய்த நற்செயல்களின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பலனே அன்னையின் பக்தி என்று பனிரெண்டாம் பாடலிலும் 'பூத்தவளே புவனம் பதினாங்கையும்' என்ற 13வது பாடலை அம்பாளின் மாபெரும் தெய்வமாக பாடியுள்ளார். அன்னையின் பக்தர்களுக்கு மண் அளிக்கும் செல்வத்துடன் விண் அளிக்கும் செல்வம் அழியா முக்தியும் கிட்டும் என்று அடுத்த பாடலிலும் தெரிவித்து உள்ளார். சாஸ்த்தீரியமான பல விஷயங்களை 'வெளி நின்ற நின் திருமேனியை' என்கிற பாடலில் சூழ்ச்சித்துள்ளார். 'கொடியே' என்று தொடங்கும் 22வது பாடலில் பிறவாமலிருக்கும் வரத்தையே பிரார்த்தனை செய்துள்ளார். அதேப்போல் மனிதர்கள் விரும்பும் அனைத்தையும் அருளுபவள் அபிராமியே என்று 'சொல்லும் பொருளும்' போன்ற பாடல்கள் தெரிவிக்கின்றன. மந்த்ர சாஸ்த்ரங்களில் கூறும் குண்டலிணியாக ஆதார கமலங்களில் விளங்குகிறாள் அபிராமி என்றும் பாடியுள்ளார். அபிராமி பட்டர் 'கைக்கே அணிவது கன்னலும்' எனும் பாடலில் அன்னையை சர்வாபரண பூஷிதையாக கூறுகிறார். 50வது பாடலில் நாயகி, நான்முகி என்று தொடங்கி அம்பாளின் திருநாமங்களை தொடங்கி வரிசையிடுகிறார் பட்டர். 'இல்லாமை சொல்லி' 'மின்னாயினும்' எனும் பாடல்களில் உலகத்தை தோன்ற வைத்த அம்பாளை அவ்யாஜ கருணா மூர்த்தியாக வர்ணித்து உள்ளார்.

அபிராமியின் சொல், பாலை விட இனிது என்று நாம ரஸ மஹிமையை 60வது பாடல்களில் கூறி அன்னை அபிராமியே ஆறு சமயங்களுக்கு அதிபதி என்றும் 'தேரும்படி' என்ற பாடலில் தெளிவாக்கி உள்ளார். இங்ஙனம் இந்நூல் முதலிலிருந்து கடைசி வரை அன்னையின் பக்திரஸ பெருங்கடலாக அமைத்து உலகத்திற்கு பேருதவியை அளித்துள்ளார் அபிராமி பட்டர்.

இந்த நூலுக்கு பல உரைகளும் வியக்யானங்கள் இருந்த போதிலும் திருமதி ரஞ்சனா பாலசுப்ரமணியம் தம்பதிகள் தமக்கென்றே உரித்தான பாணியில் தெளிவாக பல சம்பவங்களையும் சேர்த்து மிகவும் உற்சாகமாக இப்புத்தகத்தை படிக்க, ஊக்கத்தை சாதாரண மனிதர்களுக்கும் அருளியுள்ளார். இந்த இவர்களின் செயல் பக்த ஜனங்களுக்கு பக்தியும் வளர்த்து புதிதாக படிப்பவர்களுக்கு பக்தியை மனதில் உண்டாக்கி அன்னையின் அருள் எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்துள்ளார். இந்த தம்பதிகளுக்கும் இந்நூலை வாசிப்பவர்களுக்கும் அன்னையின் திருவருளால் ஆரோக்கியம், ஐஸ்வர்யம், மனநிம்மதியும் சதாசார்ய லாபம் கிடைக்கட்டும் என்று குருவின் பொற்பாதங்களிலும், அன்னையின் பாதகமலங்களிலும் அங்கே ஆசிகளுடன்.

இங்ஙனம்

கோடா வேங்கடேஸ்வர சாஸ்திரிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

கணபதி துதி

திருக்கடவூர் கள்ள விநாயகர் பதிகம்

திருக்கடவூரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ கள்ள விநாயகரை ஸ்ரீஅபிராமி பட்டர் அவர்கள் அருளிய கட்டளைக் கலித்துறையில் அமைந்த பதிகத்தால் முதற்கண் தொழுது, நம் குறைகள் நீங்கி, எடுத்த செயல் இனிது நிறைவேற பிரார்த்திப்போம்.

பங்கயத் தாளும் ஒருநான்கு தோளும் படாமுகமும்
திங்களின் கோடும் வளர்மோ தகத்துடன் செங்கையிலே
அங்குச பாச மாகிவந்(து) என்றனை ஆண்டருள்வாய்;
வெங்கய மே!கட வூர்வாழுங் கள்ள விநாயகனே! 1

உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுதும் ஒருதொழிலைப்
பண்ணும் பொழுதும் பகரும் பொழுதும்நின் பாதத்திலே
நண்ணுங் கருத்துத் தமியேனுக் கென்றைக்கு நல்குவையோ?
விண்ணும் புகழ்கட வூர்வாழும் கள்ள விநாயகனே! 2

யாதொன்றை யாகிலும் எண்ணிய போ(து) உன் இணைக்கமல்
பாதம் பரவிய பேர்கட் கலாது பலித்திடுமோ?
பேதம் தெரிந்த மறையோர் தமது பெருதெருவில்
வேதம் பயில்கட வூர்வாழுங் கள்ள விநாயகனே! 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அரனென் பவனையும் அம்புயத் தோனையும் ஆழிசங்கு
கரனென் பவனையுங் கைதொழ வேண்டி உன் கால்தொழுவார்
இரவும் பகலும் இயலிசை நாடக மென்னும் நன்னூல்
விரவுந் தமிழ்க்கட வூர்வாழுங் கள்ள விநாயகனே! 4

துதியேன் எனினும் தொழுகேன் எனினும் தொழுபவர்தமை
மதியேன் எனினும் வணங்கேன் எனினும் வலியவந்து
கதியே தரும்வழி காட்டிடுவாய்; நின் கருணையினால்
விதியே புகழ்க்கட வூர்வாழுங் கள்ள விநாயகனே! 5

நாக ந்துரகம் பலபணி அடை நவநிதிகள்
பாகஞ்சு மென்மொழியாள் போகம் உன்றன் பாதமதில்
மோகந் திகழப் பணிந்தோர்க்(கு) அலாமல் முயன்றிடுமோ?
மேகம் பயில்கட வூர்வாழுங் கள்ள விநாயகனே! 6

இளங்குஞ் சரச்செழுங் கன்றே! எனச்சொலி ஏத்திநின்றாய்
உளங்கசிந் தங்கையால் குட்டிக்கொண் டோர்க்கோர் குறையுண்டோ?
வளங்கொண்ட மூவர் தமைமறித் தேதமிழ் மாலைகொண்டு
விளங்கும் புகழ்க்கட வூர்வாழுங் கள்ள விநாயகனே! 8

மூவரும் தங்கள் தொழிலே புரிந்திட முந்திமுந்தித்
தாவரும் நெற்றியில் தாக்கியுன் நாமத்தைச் சாற்றிடுவார்;
தேவரும் போற்றிய தேவே! உனையன்றித் தெய்வமுண்டோ?
மேவருஞ் சீர்கட வூர்வாழுங் கள்ள விநாயகனே! 9

மைப்பொரு வாரண மாமுக மீதினில் வாய்ந்ததுதிக்
கைப்பொரு ளே! என்று கைதொழு வோர்குன் கருணைவைப்பாய்;
பொய்ப்பணி யோஅறி யாத தீசன் புகழுமெங்கள்
மெய்ப்பொரு ளே!கட வூர்வாழுங் கள்ள விநாயகனே! 10

--அபிராமிபட்டர்

ஸர்வ விக்நஹரம் தேவம் ஸர்வவிக்ந விவர்ஜிதம்
ஸர்வஸித்தி ப்ரதாதாரம் வந்தேஹம் கணநாயகம்

வினை தீர்க்கும் விநாயகா எங்கள் அனைவரின் நல்ல முயற்சிகளிலும்
என்றென்றும் துணை நின்று வெற்றி அருள்வாய்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதயம் பேசுகிறது...

இந்து மதம் பெண்களுக்கு ஓர் உயர்வான இடத்தைக் கொடுத்துள்ளது. நவராத்திரி, ஒன்பது நாட்களும் நாம் அம்பிகையை கொண்டாடுகிறோம். ஔவையார், 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றார். வேதம் தாயாரைத் தெய்வமாகவே நினைக்கவேண்டுமென்று உபதேசிக்கிறது. இவ்வாறு ஒரு பிறவிக்கு ஏற்பட்ட தாயையே நாம் தெய்வமாக கொண்டாட வேண்டிய போது எல்லா ஜென்மத்திற்கும், எல்லாக் குழந்தைகளுக்கும், எல்லாக் காலத்திலும் தாயாக இருப்பவளான அம்பிகையைக் கொண்டாட வேண்டியது மிகவும் அவசியமல்லவா?

ஈரேழ் உலகுக்கும் தாயாக இருப்பவள் அம்பிகை, இவளது கருணை ஏற்பட்டு விட்டால் நமக்கு எல்லாவிதமான சுகங்களும் கிடைக்கும். எல்லாமே வெற்றியாக முடியும். துரும்பைக் கொண்டு மலையைத் தூக்கலாம். இதற்கு உதாரணமாகத் திகழ்பவன் மன்மதன். இவனுக்கு உடலே கிடையாது. இவனது வில் பூவால் ஆனது. வண்டுகள்தான் நாண்கயிறு. பாணங்கள் மொத்தம் ஐந்துதான். அதுவும் பூவால் ஆனது. படைபலம் கிடையாது. வஸந்தகாலம் ஒன்றுதான் துணைவன். மலயமலையின் காற்று இவனது தேர். இவ்வாறு இருப்பினும் இந்த மன்மதன் உலக உயிர்கள் அனைத்தையும் வெற்றி கொள்கிறான். பரமசிவனையும் மயக்குகிறான். இதற்குக் காரணம் அம்பாளின் கடைக்கண் அருள்தான் என்று ஆதிசங்கரர் ஸௌந்தர்ய லஹரியில் கூறுகிறார்.

சிவபெருமானின் பெருமையும், அவருடைய அமரத்துவம் கூட அம்பாளின் ஸௌபாக்ய பலத்தினால்தான் ஏற்படுகிறது. தேவர்கள் அமிருதத்தை அருந்தியும் கூட பலவித கஷ்டங்களுக்கும் துன்பங்களுக்கும் ஆளாகின்றனர். ஆனால் மிகவும் கொடிய விஷமாகிய ஆலகால விஷத்தைப் பருகிய ஈஸ்வரனுக்கு அதனால் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. சிவபெருமான் உண்ட விஷத்தை அமுதமாக்கியவள் அபிராமி என்கிறார் அபிராமி பட்டர். அதனால்தான் ஈஸ்வரனுக்கு விஷத்தால் எந்த கெடுதலும் வராததுமட்டுமில்லாமல் அவருக்கு அமரத்துவம் கிடைத்ததாகக் கூறுகிறார் அவர்.

அம்பாள் இவ்வாறு தன் பதிக்குப் பல பெருமைகளைத் தந்திருந்தாலும் கூட அதற்கான அங்கீகாரம் தனக்கு வேண்டுமென்று என்றும் நினைத்ததில்லை. அந்த பெருமைகளை பரமேஸ்வரனுக்கே சூட்டினாலும் அதனால் பெருமைதான் படுகிறாளே அன்றி அதற்காக வருந்துவதில்லை. சதிபதி இப்படித்தான் இருக்கவேண்டுமென்பதற்கு உதாரணமாக விளங்குகிறாள். சிவபெருமானின் உடலில் சரிபாதியாக இருக்கும் அம்பிகை, தன் நெற்றிக்கண்ணால் சிவபெருமான் திரிபுர தகனம் செய்த போதும், மன்மதனை எரித்த போதும், திருக்குமரனை தோற்றுவித்தபோதும் இரண்டு பேருக்கும் பொதுவான நெற்றிக்கண்தானே உதவியது! சிவன் தான் மட்டுமே இதற்கெல்லாம் காரணம் என்பது எப்படி சரியாகும்? சிவபெருமான் தன் (அம்பிகைக்குரிய) இடது காலால் தானே உதைத்து யமனை வீழ்த்தினார்? அதில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்பிகைக்குத் தானே முழுபங்கும் உள்ளது. ஆனால் நாம் சிவபெருமானுக்கே எல்லா புகழையும் தருகிறோம். அதுமட்டுமல்ல. மன்மதனை சிவன் மாய்த்த பின்னர் அவருக்கு மீண்டும் உயிர் கொடுக்க வேண்டுமென்று சிவபெருமானிடம் எடுத்துச் சொல்லி மீண்டும் அவனுக்கு உயிர் கொடுக்க காரணமாக இருந்ததும் அம்பிகையே! அதேபோல் யமதர்மராஜன் இல்லாமல் மூவுலகங்களிலும் உயிர்கள் பெருகி, துன்பம் தர, தேவர்கள் எல்லோரும் அம்பிகையை வேண்ட, அந்த யமனுக்கு மீண்டும் உயிர் கிடைக்க காரணமானவளும் அந்த அபிராமியே!

கஷ்டகாலங்களில் ஜகன்மாதாவான அம்பாளை பிரார்த்தித்தால் தாய் போல அழைத்தவுடனே வந்து கருணை புரிவாள். நல்ல காலத்தில் நினைக்காமல் கஷ்டத்தில் மட்டும் அழைத்தால், மற்றோர் வஞ்சனையாக எண்ணி விடுவர். தாய் அவ்வாறு இல்லாமல் கருணை புரிவாள் என்கிறார் ஒரு பக்தர்:

ஆபத்ஸூமக்ன: ஸ்மரணம் த்வதீயம் கரோமி துர்கே கருணாணவேசி
நைதச்சடத்வம் மம பாவயேதா: க்ஷுதாத்ருஷார்த்தா: ஜனனீம் ஸ்மரந்தி

துன்பத்திலும், துயரத்திலும், போருக்கு நடுவிலும், காட்டின் மத்தியிலும், ஆபத்துகள் அச்சுறுத்தும் போதும் அம்பிகையை நினைத்தாலே போதும்; எத்தகைய துன்பமும் தூசியாகப் பறந்து விடும் - என்கிறது தேவிபாகவதம். மாறாத கவலைகளையும் மாற்றி சந்தோஷம் அளிக்க வல்லவள் அம்பிகையே - என்கிறது மார்க்கண்டேய புராணம்.

அம்பிகை! நாம் பார்க்கிற ரூபமெல்லாம் அவள் செய்தது தான். அவளே தான். விசேஷமாகச் சில ரூபங்களில் தியானித்தால் நம் மனது அவளிடம் லயிக்கின்றது. எல்லா ரூபத்துக்கும் இடம் தருகிற அகண்ட அரூப ஆகாசமாக இருக்கிறவளே பிராண சக்தியாக மூச்சுக் காற்றாக இருக்கின்றாள். அக்னி, ஜலம், பூமி எல்லாம் அவள் வடிவமே. இதையெல்லாம் அனுபவிக்கின்ற நம் மனதும் அவளே. சகல சப்தமாகவும், வாக்காகவும் இருப்பவளும் அம்பிகை தான். நம் போன்ற சாதாரண ஜனங்களுக்காக ஸ்தூலமாகவே லலிதா, துர்கா, புவனேஸ்வரி என்று பல ரூபங்களில் இருக்கின்றாள். இந்த ரூபங்கள் நம் கண்ணுக்குத் தெரிகிற மாதிரிப் புண்ணிய க்ஷேத்திரங்களில் பரமானுக்கிரஹம் செய்துவரும் விக்ரஹங்களாக உள்ளன.

அந்த அம்பிகையை அபிராமி பட்டர் கூறுவது போல் பைரவி, பஞ்சமி, அங்குச பாசம் கொண்டவள், பஞ்ச பாணி, சண்டி, காளி, கலா வல்லி, மண்டலினி, மாலினி, சூலி, வராகி என்று பல பெயர்களால் அழைக்கிறோம். கொண்டாடுகிறோம். அதில் அபிராமி என்ற பெயர் மிகவும் பெருமைக்குரியது. அந்த பெருமைக்குரிய அம்பிகை திருக்கோயில் கொண்ட இடம்தான் மிகவும் வளமான, மங்கலமான அனைத்து அமைப்புகளும் பொருந்திய திருக்கடவூர் என்றும் திருக்கடையூர் என்றும் அழைக்கப்படும் திருத்தலம். அந்த திருத்தலத்தில் பேரரசியாய் கொலுவீற்றிருக்கும் அம்பிகை புரிந்த, புரிகின்ற லீலைகள் ஏராளம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இல்லறம் நன்கு அமைய தனதான்ய சம்பத்து அவசியம். அபிராமியோ இவ்வுலகில் மதிப்புடனும் மரியாதையுடனும் வாழ பதினாறு செல்வங்களையும் தருபவள். அதுமட்டுமல்லாமல் நம்மடைய எல்லா ஆசைகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுபவள்.

பிரமாண்டமான கோயிலின், கருவறையில் கிழக்கு நோக்கியபடி, மொத்த உலகையும் கட்டியாள்கிறாள் தேவி. தனது வரத அபய ஹஸ்தத்தால் பக்தர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றி வைக்கிறாள். தன் கண்களாலேயே அருள்செய்யக் கூடியவள். அவளுடைய திருவடி தரிசனம் வாழ்வில் எல்லா நலன்களையும் சேர்க்கும். திருக்கடவூரின் ஒரு பெருமை என்னவென்றால், இயற்கைக்கு மாறாக பதினாறு வயதில் மரணமடையவிருந்த பாலகனின் மரணம் நடக்கவில்லை. அந்த அற்புதத்தை நிகழ்த்தியவர் அருள்மிகு அமிர்தகடேச பெருமான். அதே போல் இயற்கைக்கு மாறாக அமாவாசையன்று பௌர்ணமி நிலவை பொழியச் செய்தவள் அம்பாள் அபிராமி. அவர்களைச் சரணடைந்து விட்டால் ஏதொன்றாலும் எப்பொழுதும் பயமில்லை என்று இச் செயல்கள் மூலம் உலகிற்கு உணர்த்தினர் இறைவனும் இறைவியும். அதுமட்டுமல்லாமல் நீயே கதி என்று அவள் திருப்பாதங்களை கெட்டியாகப் பிடித்துக் கொண்டுவிட்டால் போதும்; மன அமைதியுடன் இனிமையாக வாழலாம் என்ற நம்பிக்கையை தன் பக்தர்களுக்கு ஊட்டியவர்கள். அந்த அளவிற்கு சிறப்பு வாய்ந்த ஒரு ஸ்தலம் திருக்கடவூர். அத்தகைய திருக்கோயிலில் அருள் புரியும் வேதஸ்வரூபிணியான அந்த அபிராமி அம்பிகையின் அருளமுதை எங்களால் இயன்ற அளவில் இந்நூலில் தொகுத்துத் தந்திருக்கிறோம். ஆதிபராசக்தியான ஸ்ரீ அபிராமி தேவியின் அருளாடல்கள் எல்லையில்லாதவை. மூவுலங்களுக்கும் தாயானவள் எங்களுக்கும் தாய்தானே. அந்த தாயின் பெருமைகளைப் பற்றிப் பேச பல ஜன்மங்கள் தேவைப்படும். எத்தனை ஜன்மங்கள் எடுத்தாலும் அவள்தான் நம் தாய்!

அந்த தாயின் பெருமைகளைப் பேச வந்த இந்த ஆக்கத்திற்கு ஆசி வழங்கி ஸ்ரீமுகம் தந்து அருளிய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அவர்களுக்கு எங்கள் நமஸ்காரங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்நூல் நல்லமுறையில் வெளிவர அருளாசி வழங்கி, ஆசியுரை தந்து, எங்கள் பணியைப் புனிதப்படுத்திய, திருவாவடுதுறை ஆதீனம் இருபத்து நான்காவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள், திருக்கயிலாயப் பரம்பரை தருமை ஆதீனம் இளைய சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த சுவாமிகள் அவர்களுக்கும் எங்கள் பணிவான நமஸ்காரத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் இந்நூலுக்கு முன்னுரை தந்து ஆசீர்வதித்தருளிய ஸ்ரீ கோடா வேங்கடேச சாஸ்திரிகள் அவர்களுக்கும் எங்கள் நமஸ்காரங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்நூல் எழுதத்தொடங்கியது முதல் பல தகவல்களைக் கொடுத்து இப்பணியில் எங்களுக்குப் பெரிதும் துணை நின்றவர் ஸ்ரீவித்யா உபாசகரான மடிப்பாக்கம் ஸ்ரீபரணிகுமார் மற்றும் சிவசுந்தரியின் ஆசிரியரான ஸ்ரீ ஆட்சிலிங்கம் அவர்கள். பல நண்பர்களும், உறவினர்களும் பல அரிய தகவல்களை எங்களுக்குக் கொடுத்துதவினர். அனைவருக்கும் எங்களின் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நூல் நல்ல முறையில் வெளிவர எங்களுக்கு அவ்வப்பொழுது ஆலோசனைகளும் ஆக்கம் ஊக்கம் தந்து வரும் ஸ்ரீ அம்பாஜி ராமமூர்த்தி அவர்களுக்கும் நண்பர்களுக்கும், இந்நூலை அழகுற தட்டச்சு செய்து, அச்சிட்டளித்த ஹரீஷ் பிரிண்டர்ஸ் நிறுவனத்திற்கும், எங்கள் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எங்கள் குலதெய்வமான ஸ்ரீ மஹா மாரியம்மனைத் தியானித்து, இந்நூலைப் படிப்பவர்கள் எல்லோருக்கும் அருள்மிகு அபிராமி அம்பிகை மற்றும் அருள்மிகு அமிர்தகடேஸ்வரரின் திருவருள் பரிபூர்ணமாகக் கிடைத்து வளமாக வாழ ப்ரார்த்தித்துக் கொண்டு, அவள் அருளால் அவள் திருவடித் தாமரைகளை நமஸ்கரித்து அருள்மிகு அபிராமி அம்பிகை திருச் சந்நிதியில் எங்கள் ஷஷ்டி அப்த பூர்த்தி நாளன்று (22.12.2017) இந்நூலை வெளியிடுகிறோம். இந்நூலைப் படிப்பவர்களுக்கும், படிப்பதைக் கேட்பவர்களுக்கும் அருள்மிகு அபிராமி அம்பிகை சமேத அருள்மிகு அமிர்தகடேஸ்வரரின் அருள் கிடைத்து, பேரின்பப் பெருவாழ்வு பெற அவர்களருள் நாடுவோம். வாருங்கள் நம் அன்னை அபிராமி அம்பிகையை தரிசிப்போம்.

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1. அன்பே அருளே அபிராமி

அன்பாய் அருள்பவள் அபிராமி. அன்பே வடிவாய் இருக்கும் அந்த பராசக்தியின் ஆவிர்பாவமே அற்புதமானது. பெண்கள் மிகவும் விரும்பும் ஒரு பொருள் உண்டென்றால் அது ஆபரணங்கள்தான். அந்த ஆபரணங்களிலிருந்து ஆவிர்பவித்தவள் அபிராமி என்று கூறுகிறது திருக்கடவூர் தலபுராணம். அழகழகான ஆபரணங்களிலிருந்து ஆவிர்பவித்ததாலோ என்னவோ அவள் தன் பெயருக் கேற்றால் போல் அழகின் வடிவாய் இருக்கிறாள். அபிராமி என்றாலே மிகுந்த அழகுடையவள் என்பதே பொருள். அந்த அழகான அபிராமியைத் துணைக் கொண்டால் இவ்வுலகில் எல்லா நலன்களும் அமையப்பெற்று இன்பமாய் வாழலாம் என்பதை அபிராமி பட்டர் தன் பதிகங்களில் குறிப்பிடுகிறார்.

ஆபரணங்கள் என்பது ஆசையின் சின்னம். அதிலிருந்து அபிராமி உதித்தாளென்றால், நம் அபிலாக்ஷைகளைப் பூர்த்தி செய்பவள் என்பது பொருள். அது மட்டுமல்ல, ஆசையை ஒழித்து, அமரத்துவம் பெற விரும்புவோருக்கு அதையும் அருள வல்லவள் அவள் என்பதையே அது குறிக்கிறது. பிணியும் அவளே! பிணிக்கு மருந்தும் அவளே என்கிறார் அபிராமி பட்டர்.

அன்னை அபிராமி தாயான தயை உள்ளம் பெற்றிருப்பவள். உலகமெல்லாம் நிறைந்த பரம்பொருள் அம்பிகை நீயே! அனைத்து உயிரும் நீ; செல்வங்களும் நீ; பசிக்கு உணவாவாய்; பருகும் நீர் ஆவாய்; பிணிக்கு மருந்தாவாய்; வாழ்வில் இருள் போக்கும் ஒளி நீயே; அன்பும், அறனும் உனது அற்புத படைப்புகள்; பிரபஞ்சமாகிய பராசக்தியே உன்னில் பிறந்து, உன்னில் வளரும் எங்களை உன்னதமாக்கிக் காப்பாய். பொதுவாக பெண் தெய்வங்களுக்குக் கருணை அதிகம். அதில் அபிராமி அன்னைக்குச் சிறப்பான இடம் உண்டு. அனைத்தும் அபிராமியே என்கிறார் அபிராமி பட்டர்

விஸ்வரூபா, வியாபிநீ என்ற திருநாமங்கள் உலகமே தனது உருவாகத் தேவி வியாபித்திருக்கின்றாள் என்பதனை விளக்குகின்றது. உலகமெங்கும் உள் நின்று இயக்குபவளும் தேவியே! அம்பிகை எல்லாவற்றுள்ளும் இருப்பவள்; எல்லாவற்றையும் கடந்தும் இருப்பவள். அபிராமி என்ற சொல்லிற்கு இவ்விரண்டும் பொருந்தும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அழகு தெய்வம் அபிராமி யின் திருக்கோலம்

அம்பிகையை பட்டர் எவ்வாறு வர்ணிக்கின்றார்? அவளே பேரழகியின் பெட்டகம். மகா திரிபுர சுந்தரி எல்லையில்லாத அழகின் பிறப்பிடம். சுகந்தம் வீசும் மலர்களின் நறுமணத்தை தோற்கடிக்கும் இயற்கை மணத்தை கொண்ட எழில்மிகு கூந்தலை உடையவள். தனது சிவந்த மேனியின் ஒளி வெள்ளத்தில் உலகை சிவக்க வைப்பவள். சந்திரனைப் போன்ற கவின்மிகு நெற்றியில் அழகான கஸ்தூரித்திலகம். மன்மதனின் வில் போன்ற புருவங்கள். மீன் போன்ற கண்கள். தாரகை மணிகளைப் பழித்திடும் மூக்குத்தியுடன் பொழியும் எழில்மிகு நாசி. சூரியனையும், சந்திரனையும் தோடுகளாக அணிந்த தோற்றம். அழகான முத்துப் பல் வரிசை. சுகந்த தாம்பூலம் மணக்கும் பவளச் செவ்வாய். கலைவாணியின் கைவிளங்கும் வீணையைக் கவர்ந்திடும் குரலோசை. காமேஸ்வரர் கட்டிய மங்கள நாண். இப்படிப் பேரழகின் பெட்டகமான அம்பிகையை வர்ணிக்க வார்த்தைகளேது! அழகின் இருப்பிடம். அம்பிகையின் வர்ணனை என்பது நம்மால் நினைத்துக்கூட பார்க்க முடியாத ஒன்று! அம்பிகை என்ற ஒரு வார்த்தையிலேயே எல்லாம் அடக்கம். அவளின் பாதாதி கேச வர்ணனையை நம்மால் இப்படி ஏட்டில் எழுதிட முடியுமா? நம் மனக்கண்ணால் அவளை எப்படி காண்கின்றோமோ அதுவே அவளது வடிவம். தெய்வத்தைக் கல்லாகப் பார்த்தால் அது வெறும் கல்லே! அம்பிகையே நம் கண்முன்னால் இருப்பதாக நினைத்தால் நிச்சயமாக எழுந்தருள்வாள். அபிராமி பட்டர் அம்பாளை சக்தியும், சிவம் இணைந்த மகாதிரிபுரசுந்தரியாக மனக்கண் முன் எழுந்தருளச் செய்து அவளை அடைந்தார்.

அபிராமி பட்டர், வேதாகம உபநிடதவாசியான தேவிக்கு உருவம் அமைத்து பெயரையும் சூட்டி நமக்கு அடையாளம் காட்டுகின்றார். எழிலரசியின் பெயர் சொல்லி வழிபட நாமம் தருகின்றார். அவளே திரிபுரசுந்தரி. அன்னை அமர்ந்த கோலம் கொண்டுள்ளாள். அவள் தனது நான்கு திருக்கரங்களிலே நான்கு வகைப் பொருளைத் தாங்கிக் கொண்டிருக்கின்றாள்.

வலது கீழ்க்கையினில் குளிர்த்தன்மை கொண்ட ஐந்து மலர் அம்புகளைத் (தாமரை, மா, அசோகம், முல்லை, நீலோத்பலம்) தாங்கி உள்ளாள். அவ் ஐந்து கணைகளும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, மணம் என்பதைச் சுட்டும். (இந்த அம்புகள் நம் பஞ்ச இத்திரியங்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி என்பனவற்றையும், ஸப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம் எனப்பெறும் பஞ்ச தன்மாத்திரைகளாகிய ஒலி, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் ஆகியவற்றையும் குறிப்பால் உணர்த்துகின்றன).

வில் பொதுவாக இரும்பாலானது என்றாலும் இங்கே அம்புகள் மலராக ஆனபடியால் இந்த வில் கரும்பாலானது. இடது கரத்தில் கரும்பு வில்லைத் தாங்குகின்றாள். இது மனமாகிய கரும்பு வில். அன்னை தாங்கியுள்ள பஞ்ச பாணங்களும், கரும்பு வில்லும் ஆற்றல் சின்னங்கள்.

மூன்றாவது மேல் இடக்கையில் பாசம். மேல் வலக்கையான நான்காவதில் அங்குசம்.

ஆசையின் வடிவமான பாசம், குரோதத்தின் வடிவமான தீமையைப் பொசுக்கும் ஞான சக்தியான அங்குசம் நல்லனவற்றில் ஆசையும், தீயனவற்றில் குரோதமாகிய வெறுப்பையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏற்படுத்தி அவர்களைக் காத்துக் கடைத்தேற்றும் கருவிகளாகத் துணை செய்கின்றாள். பாசம் - எனும் கயிறு இது நம்மைப் பிறரோடு, பிற பொருட்களோடு பிணைக்கும் ஆசையெனும் விருப்பத்தினைக் குறிக்கின்றது. அங்குசம் - நாம் புலன்கள் வழி செல்லும் பொழுது நம்மைத் தடுத்து நிறுத்தி இறை வழிக்குத் திருப்பும் ஆயுதம்.

இவையனைத்தும் நாம் நம் ஐம்புலன் வழி சென்று துன்புறாது, நம் விருப்பு, வெறுப்புகளுக்கு ஆட்படாது நம்மைக் காத்து கடையேற்ற அம்பிகை கைக்கொண்டுள்ள படைக்கலன்கள். அவளது ஆற்றலின் அடையாளச் சின்னங்கள்.

ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமத்திலும் அம்பிகையின் திருக்கரங்களில் தவழும் அடையாளச் சின்னங்கள் பின்வரும் நாமாக்களில் விளக்கப்பட்டுள்ளது.

1. ஓம் சதுர்பாஹு - ஸமன்விதாயை நம: ஓம் நான்கு திருக்கரங்களை உடையவளே போற்றி!
2. ஓம் பஞ்சதன் மாத்ர - ஸாயகாயை நம: ஓம் பஞ்ச தன் - மாத்திரைகளாகிய அம்புகளைக் கரங்களில் ஏந்தியவளே போற்றி!
3. ஓம் மனோரூபேக்ஷு - கோதண்டாயை நம: ஓம் மனமாகிய கரும்புவில்லை உடையவளே போற்றி!
4. ஓம் ராகஸ்வரூப - பாசாட்யாயை நம: ஓம் ஆசை வடிவான பாசமெனும் கயிற்றை உடையவளே போற்றி!
5. ஓம் க்ரோதாகாராங்குசோஜ்ஜவலாயை நம: - ஓம் கோபமெனும் அங்குசத்தை உடையவளே போற்றி!

பட்டரின் தியானத் திருமேனி அம்பிகையை அமர்ந்த திருக்கோலத்தில் நான்கு திருக்கரங்களில் பஞ்ச மலர்களும், கரும்பும், அங்குசம், பாசம் ஏந்தி வேதஸ்வரூபியாய் எழுந்தருளியிருக்கும் அன்னை திரிபுரசுந்தரியே என்கிறார். திருக்கடவூர் அருள்பாலிக்கும் அன்னை அபிராமி நின்ற திருக்கோலத்தில் அபய, வரத கரங்களுடனான திருமேனி கொண்டவள். அவள் மங்கலக் குங்குமத் திருமேனி உடையவள். பிறை சூடிய மாணிக்கக் கிரீடம் தரித்தவள். பரிவு பொங்கும் முக்கண்களை உடையவள். சிரித்த முகத்தினள். இரத்தினம் இழைத்த பீடத்தின் மேல் செவ்விய திருவடிகளை உடையவள். அம்பிகையின் பேரழகிற்கு இணையான அழகுடையவர் எவரும் இல்லை. தாயே! உனதழகிற்கு உவமை சொல்ல உலகத்தைப் படைக்கும் பிரம்மாவும், திறமை மிகு கவி வாணர்களும் எப்படி எப்படியோ காலங்காலமாக முயற்சித்தும் பலனில்லாது இருக்கின்றார்கள். அம்பிகையின் லாவண்யம் அல்லது வனப்பின் மகத்துவம் அளப்பரியது. ஒப்பில்லாதது.

அம்பிகை ஆயிரம் மின்னல்கள் ஒன்று திரண்டு திவ்யமங்கள வடிவெடுத்து வந்த ஒளிரும் திருமேனி உடையவள். ஒரு மின்னலின் பிரகாசமே நம் கண்களுக்கு கூசுகிறது என்றால் ஆயிரம் மின்னல்களின் சேர்க்கை என்றால்! ஆனால் புறக்கண்ணிற்குத்தான் அந்தப் பிரகாசம் கூசுமேயன்றி, அகக் கண்ணிற்கு அல்ல!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவள் மனோன்மணி. மனத்தின் சலனமற்ற நிலையை ஒளி வழி பக்தர்களுக்கு அளிப்பவள். அம்மையின் திருமேனி திவ்விய மங்கள சரீரம். அந்தப் புனிதச் சரீரம் வழிபாட்டிற்குரியது. மனோன்மணி என்றால் மனதை ஞானநிலைக்கு எழுப்புகின்றவள் எனப் பொருளாகும். மனோன்மணி என்ற சக்தியானது சகஸ்ராரம் என்ற ஆயிர இதழ்த் தாமரையில் ஒன்றியிருக்கின்றது. இந்த மனோன்மணி சக்தியே மகாதிரிபுர சுந்தரி, ஆறு ஆதாரங்களையும் (மூலாதாரம், மணிபூரகம், சுவாதிட்டானம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை) கடந்து மேலெழுந்து நின்றால் அங்கு ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரையின் சிவந்த பீடத்தில் நஞ்சுண்ட தன் கணவரோடு மகிழ்வுற்றிருக்கும் பராசக்தியின் அழகினைக் காணலாம்.

அபிராமியின் அழகு வடிவங்கள் ஆயிரம் ஆயிரம்! இவள் நிகரற்ற அழகு கொண்டவள். இவளே நீலி - நீல நிறம் உடையவள். மகிஷாஸுரனை வதம் செய்த போது நீல நிறம் கொண்டாள். மாயையினால் மறைத்தல் தொழிலை இவள் செய்வதால் இவள் நீலி எனப் பெயர் பெற்றாள். இவளே அழியாத கன்னிகை - அனைத்து உலகினையும் இந்த அழியாத கன்னிகை தனது கண்களைத் திறப்பதன் மூலம் படைக்கின்றாள். எனவே இவள் என்றென்றும் கன்னித் தன்மை நிறைந்தவளாக விளங்குகின்றாள். இவள் அழகு நிறைந்த தெய்வமாக இருப்பதனால் சுந்தரி. எவ்வித ஆதாரம் இல்லாமல் இயங்குவதனால் இவளே சுந்தரி. ஆன்மாவின் அந்தரங்கமாய் நிற்கக்கூடியவள். ஆகாயமாகிய அந்தரமெங்கும் நிறைந்திருக்கக் கூடியவள்.

உதிக்கும் செங்கதிர் உச்சித் திலகம் அணிந்தவள்

அம்பிகை ஏன் செவ்வண்ணம் கொண்டவள்? அபிராமி இயல்பாக பச்சை வண்ணம் வாய்ந்தவள் என்பது வழக்கு. ஆனால் அபிராமி பட்டர் அவள் செந்நிறத்தவளாகக் கொண்டு வழிபட்டார். உள்ளத்திற்கும், உயிருக்கும் துணையாக நிற்கும் அம்பிகை செந்நிறத்தவளாகத் தோன்றுவாள் என்றும், செம்மை என்பது நிறைவிற்கும், முழுமைக்கும், உயிர்த்தன்மைக்கும், நேர்மைக்கும், நன்மைக்கும், மங்களத்திற்கும் அடையாளமாகத் திகழும் என்கின்றனர் ஆன்றோர். அம்பிகையினுடைய சிவப்பு தேஜஸுடையது, ஒளி விடக்கூடியது மற்றும் கண்ணைக் குளிர்விக்கக் கூடியது. பராசக்திக்குச் சிவப்பு வண்ணமே விசேஷமாகக் கொண்டாடப்படுகிறதென்றும், பிரகாசமான சிவத்திலிருந்து சக்தி பிரிந்து விமர்சனமாகும் போது அது சிவப்பாகவே காணப்படும் என்பது மகான்கள் கண்ட முடிவென்றும், இவ்வண்ணமே அம்பாளை சிவப்பு நிறமாகத் தியானிப்பவர்கள் இகபராகதியை அடைகிறார்கள் என்றும் குறிப்பிட்டுச் சொல்வர். அம்பிகையின் திருவண்ணமானது தமது சிந்தையிலே பிணைந்து விட்டதால் அத்திருமேனியே நம் துணை என்கிறார் அபிராமிபட்டர். பொழுது புலரும் வேளையில் கீழ்த்திசையில் கதிரவனின் தோன்றுதல் அபிராமி பட்டரின் உள்ளத்தில் அம்பிகையின் திருமேனி வண்ணமாகத் தோன்றுகின்றது. வேதங்களில் அவ்வம்மையை பலவண்ணங்களில் வர்ணித்தாலும் அபிராமிபட்டர் அம்பிகையின் வண்ணத்தை உதிக்கின்ற செங்கதிரின் நிறமாகக் கொள்கின்றார். பக்தர் தம் வாழ்க்கை மலர அவள் உதிக்கின்ற செங்கதிரெனத் திகழ்கின்றாள். அவள் மெல்லிய மணம், குளிர் தன்மையும் கூடிய குங்குமச் சாந்தின் நிறத்தவள். மேலும் அவளது நெற்றியில் உள்ள திலகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செந்நிறமானது. உதிக்கின்ற செந்நிறக் கதிரே அவளது திலகமாக விளங்குகின்றது. உச்சித் திலகம் என்பதற்கு உச்சி வேளையில் மலரும் மஞ்சாடிப்பூ எனப் பொருள் கொண்டு அன்னை உச்சியில் மலரும் உயர் மஞ்சாடிப்பூ அணையவள் என்று குறிப்பிடுகின்றார், சேக்கிழார் அடிமை அபிராமி உபாசகர் திண்டுக்கல் பெ.கா. சண்கநாதன் அவர்கள். அவளது திருமேனி ஒளிவீசும் இரத்தினக் கற்களில் உள்ளத்து உணர்வு கொண்டு தேர்ந்து போற்றி எடுக்கின்ற தீதற்ற மாணிக்கக்கல் போன்ற வண்ணத்தவள். அன்னை (பகல் இரவு என்று பாராமல் எப்போதும் சிவப்பு வண்ணத்துடன் மிளிர்கின்றது) உணர்வு என்னும் அறிவுடையோர் மதித்துப் போற்றும் மாணிக்கத்தவள் அபிராமி. அவள் மாதுளம் பூ நிகர் கூடல் ஒளி பெற்றவள். மாதுளம் மலர் சிவப்பாக இயங்குவதைப் போலல்லவோ! அதன் காந்தியைப் போலல்லவோ அம்பிகையின் திருமேனியும் சிவப்பு! அதன் ஒளி வெள்ளத்தில் உலகைச் சிவக்க வைப்பவள்! பட்டர் தினம் தன் தியானத்தில் ஒளி வெள்ளத்துடன் கண்ட அன்னை திரிபுரசுந்தரியின் திருமேனியின் சிவப்பு வண்ணத்தினை நமக்குக் காட்டுகிறார். இந்த செம்மை நிறம் உயிர்த்தன்மை, நிறைவு, நேர்மை, அழகு, சோபை, மங்கலம் முதலியவற்றைக் குறிக்கும். அம்பிகையின் செவ்வண்ணத்தால் பெறப்படும் குறிப்பு - அவள் எங்கும் நிறைந்தவளாய் முழுமுதற் பொருளாய், உயிர்களுக்கு உயிராய், நேர்மையான அருளாசிகளைச் செலுத்துபவளாய், நலம் தரும் மாதாவாய் சர்வமங்களமாய் விளங்குகின்றாள் என்பதேயாகும். அம்பிகையின் இந்த சிவப்பு நிறம் வெறும் சிவப்பு மட்டுமன்று; தேஜஸுடைய சிவப்பு; ஒளி விடும் சிவப்பு; கண்களைக் குளிர்விக்கும் சிவப்பு; அஞ்ஞான இருள் நீக்கும் சிவப்பு. அஞ்ஞான இருள் நீக்கினால் தான் அவள் அருளாலே அவள் தாள் வணங்கி அவளை உணர முடியும். சூரியனையும் அவள் ஒளியினால் தான் காண முடியும். விஞ்ஞானம் பூமி, சூரியனிடமிருந்து வந்த பாகம் என்கிறது. உதய சூரியனாகத் தோன்றுவது சாட்க்ஷாத் அபிராமியே!

ஸ்ரீலலிதா சகஸ்ரநாமத்திலும் அன்னையின் சிவந்த திருமேனி வர்ணிக்கப்படும் விதம் அற்புதமானது-

பானுமண்டல மத்யஸ்த்தா (275) - சூரிய மண்டலத்தின் நடுவில் இருப்பவள்

உத்யத்பானு ஸாஹஸ்ராபா (6) - ஆயிரம் சூரியர்கள் உதித்தாற் போன்ற பிரகாசம் பொருந்தியவள்

தமோ பஹா (361) - அஞ்ஞான இருளைப் போக்குபவள்

பக்த - ஹார்த - தமோ - பேத பானுமத் பானுஸந்ததி (404) - பக்தர்களுடைய அக இருளை நீக்கும் சூரிய கிரணம் போன்றவள்.

அருணாம் கருணாதரங்கி தாக்ஷீம் - தியான ஸ்லோகம் - அன்னையின் திருமேனியை உதயகால சூரியனைப் போல சிவந்ததாக வர்ணிக்கின்றது.

ஆதிசங்கரர் ஸ்ரீஸௌந்தர்யலஹரியில் - தனுச்சாயாபிஸ்-தே தருண - தரணி - (18) அம்பாளை உதய சூரியன் போன்ற அழகிய திருமேனியுடையவளாகத் தியானிக்க வேண்டும் என்கிறார். மீனாக்ஷி பஞ்சரத்தினத்திலும் உத்யத் பானு என்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ச்ருதிஸீமந்த ஸிந்தூரி க்ருத பாதாப்ஜ தூளிகா (289)

வேதங்களாகிற ஸ்தீரிகள் தேவியின் பாதங்களை வணங்கும்போது அவற்றின் உச்சி (தலை) பாதசரணங்களில் படுவதனால் அந்த சரண கமலங்களிலுள்ள தூளியானது தலையில் படுகின்றது. அம்பாளின் பாதங்கள் செம்பஞ்சுக் குழம்பினால் அலங்கரிக்கப் பட்டிருப்பதால் பாத தூளிகள் சிவப்பு நிறமாய் உள்ளன.

ஸர்வாருணா (49) - சரீரம், வஸ்த்ரம், ஆபரணம், புஷ்பம், காந்தி எல்லாமே சிவப்பு. அம்பிகையின் விஷயத்தில் எல்லாமே சிவப்பு தான். கருணையின் நிறம் சிவப்பு தான் என்று திரிபுரஸுந்தரி அஷ்டகத்தில் ஆதிசங்கரர் அருள்கிறார்.

தூய உணர்வுகள் இல்லாதவர்களால் இறைவன் அல்லது இறைவியை உணர முடியாது. அம்பிகை செக்கச் செவேல் என்ற வண்ணம் உடையவள் என்றே மனதால் அபிராமி பட்டர் அம்பிகையை வர்ணிக்கின்றார்.

பத்மராஜஸுப்ரபரி - (248) தாமரையின் சிவப்பு நிறத்திற்குச் சமமான காந்தியுடன் விளங்குபவள்.

ஜபாபுஷ்பதிபாக்ருதி - (766) - செம்பருத்திப் பூவின் நிறத்தை ஒத்த ரூபமுள்ளவள்.

அன்னையின் திருமேனியை காஷ்மீரத்து குங்குமப்பூவிற்கு உவமையாகச் சொல்வது வழக்கம். குங்குமப்பூ தீர்த்தத்தில் அம்பிகையை நீராட்டுவார்கள். மென்மையான மணமுள்ள குங்குமப்பூ கரைத்த குழம்பு போல் அன்னையின் திருமேனி விளங்குகிறது. காளிதாசரும் குங்குமராகஸோனே என்பார்.

ஸ குங்கும விலேபகமாமளிகதம்பி கஸ்தூரிகாம்
ஸமந்த ஹஸிதே ஷணாம் ஸசரசாப பாசாங்குசாம்
அசேஷ ஜனமோகினிம் அருணமால்ய பூஷாம் பராம்
ஜபாகுஸும பாஸுராம் ஜபவிதௌ ஸ்மஃர தம்பிகாம்

ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம த்யான ஸ்லோகத்தில் அன்னையின் திருமேனியை குங்குமப் பூவினை அரைத்த விழுதைப் பூசியவளாக சொல்லப்படுகின்றது. அம்பிகையை பூஜித்துத் தன் கையாலேயே அபிஷேகம் செய்யும் தேவி உபாஸகர்கள் அறிவர் மங்கலத்தின் அடையாளமான செந்நிறம் அம்பாள் ஸ்ரீராஜராஜேஸ்வரியினுடையது என்று. அவள் உவமைக்கு ஒவ்வாத வல்லி. மனம் அமைதியாக, அகந்தையற்று நிற்கும்பொழுது அன்னையின் எழில்மிகு திருமேனியின் செவ்வண்ண அழகில் லயித்து நமக்கும் உணர்த்துகின்றார் அபிராமி பட்டர்.

எல்லாக் கடவுளர்களும், தேவர்களும் அன்னையையே அவள் திருவடியில் பணிந்து, அவளை அடைக்கலம் அடைகின்றனர். இந்த மண்ணில் பிறந்த அடியார்களும் முன் செய்த புண்ணியத்தினால் அன்னையிடம் சரணம் என்று அடைக்கலம் புகுகின்றனர். மக்களுக்கு உண்டாகும் பிறப்பு, இறப்பு என்னும் பிணியிலிருந்து விடுபட அன்னை அபிராமியின் அருளால் மட்டுமே முஜயும். பிறப்பு, இறப்பு, மூப்பு இவைகளால் கஷ்டப்பட்ட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜனங்களுக்கு இந்த துக்கங்களையும், ஓய்வுகளையும், தெளிவான ஆத்ம சுகத்தையும் தருகின்றவள். மறுபிறவியில்லாமல் முக்தி நிலை அடையவும், அதாவது நிரந்தரமான ஓய்வு பெறவும், மரணத்திற்குப் பின் அடுத்த பிறப்பு வரையில் உள்ள காலம் ஒருவித தற்காலிகமான ஓய்வு - இந்த இரண்டையும் தருபவள் அன்னை அபிராமி.

அன்னை அபிராமியின் அடியார்கள் மரணம், பிறவி இரண்டும் எய்தார். இந்த வையகத்தில் என்று அபிராமி பட்டர் சொல்வது அம்பிகையின் அடியார்கள் என்றும் முக்தி நிலையை அடைவார்கள் என்பதே. அன்னை அபிராமி தன் தலைசிறந்த பக்தரான அபிராமிபட்டர் வாயிலாக இம்மண்ணுலகில் வாழ்பவர்களுக்கு அருளிய அரிய பிரசாதம் அபிராமி அந்தாதியை எப்போதும், எங்கும், எந்நிலையிலும் சொல்பவர்களுக்கு மறுபிறவி இல்லை என்று சொல்லவும் வேண்டுமோ?

அம்பிகையின் ஆடை, ஆபரணங்கள்

அம்பிகை தன் மெல்லிய இடையில் அணிந்திருப்பது சிவந்த மென்மையான பட்டாடை. அம்பிகையின் சிவந்த திருமேனிக்கு ஏற்ற சிவப்பு வண்ணம்.

ஓம் அருணாருண கௌஸூம்ப வஸ்த்ர பாஸ்வத் கடிதடியை நிம:

சிவப்புப் பட்டாடையுடன் விளங்குகிற இடையை உடையவள்.

குழலில்: அம்பிகையின் கரிய குழலுக்கு மாற்று வண்ணங்களில் அமைந்த திரளான பிச்சிப்பூக்களும், ஒளிபரப்பும் வெண்மை நிறப் பிறைச் சந்திரனும் பொலிவு சேர்க்கின்றன.

திருக்காதுகளில்: காதுகளின் மேற்புறத்தில் ஒளிரும் வெண் முத்துக்களாலான சொப்புகளையும், கீழ்ப்புறத்தில் பளிச்சிடும் வைரத் தோடுகளையும் அணிந்திருக்கின்றாள். அம்பிகையின் ப்ரணவ சொரூபமான காதுகள் மேலும், கீழும் (தாடங்கம்) என்னும் தோடுகளலணிந்து அலங்கரிக்கப் பெற்றுள்ளன.

ஓம் தாடங்க யுகளீபுத தபனோடுப மண்டலா

திருமார்பில்: சந்தனக் குழம்பு (களபம்) பூசியுள்ளாள்.

சிவந்த திருமேனியில் செம்பட்டாடை. அதன் மேல் புரளும் வெண்முத்து மாலை.

இடுப்பில்: பன்மணிக்கோவை - இடுப்போடு ஒட்டிக்கொண்டிருக்கும் ஆபரணம். பெண்கள் இடுப்பில் அணியும் ஆபரணம் - மேகலை. இந்த மேகலை ஒன்றிலிருந்து முப்பத்தி இரண்டு வடங்கள் அல்லது சங்கிலிகளையுடையது. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரக மணிகளால் கோர்க்கப்பட்டிருக்கும். அதனால் பன்மணிக்கோவை.

திருவடியில்: திருவடிகளில் சிலம்பு. அம்பிகை வருகின்றாள் தன் அடியார்களுக்கு அருள்பாலிக்க! அவள் வருகைக்குக் கட்டியம் கூறுவது எது! திருவடிகளைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் சிலம்பாகிய வேதங்கள். சிலம்பிற்கும், வேதங்களுக்கும் உள்ள ஒற்றுமை சிலம்பு ஒலிப்பது போல வேதங்களும் மந்திரங்களை ஒலிக்கின்றன. சிலம்பினுள் பரல் மறைந்திருப்பது போல வேதத்தினுள் இறைவி மறைந்திருக்கின்றாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்பிகை தரித்திருக்கும் ஆபரணங்கள் பலப்பல. பட்டர் அவையனைத்தையும் தொகுத்து ஒரே சொற்றொடரில் அடக்கி விட்டார். நேரிழை என்றால் நுண்ணிய வேலைப்பாடுகள் கொண்ட ஆபரணங்கள். அவர் அம்பிகையை நேரிழையே! என்கின்றார். அம்பாள் கிரீடம், தாடங்கம், நாஸாபரண மென்னும் மூக்குத்தி, அட்டிகை, திருமாங்கல்யம், மாலைச் சரங்கள், காஞ்சி, மேகலை, பன்மணிக்கோவை, கேயூரம், அங்கதம், அங்குலீயம் (மோதிரம்), நூபுரம், சிலம்பு, பாதாங்குலீயம் (மெட்டி) என இத்துணை ஆபரணங்களையும் அணிந்துள்ளாள். மனதில் அம்பிகையை ஸர்வாபரண பூஷிதையாக உருவகப்படுத்துங்கள். நிச்சயம் கண் குளிரும் காட்சி. அம்பாளை பட்டர் வர்ணித்திருப்பது போல நாம் உருவகப்படுத்தி அவள் நாமத்தை ஸ்மரணம் செய்ய நிச்சயம் அவள் நம்முன் தோன்றுவாள். அம்பிகையின் அழகும், வடிவமும் என்றென்றும் நிலையானவை. மனத்திசையில் பதித்திடுவோம் அவளது அழகு வடிவத்தினை!

ஆயுதங்கள்: அம்பிகையின் திருமேனியில் அவள் பால் நம்மை ஈர்க்கும் ஆடை ஆபரணங்களுடன், நம்மைக் காக்கும் ஆயுதங்களையும் தம் நான்கு திருக்கரங்களில் தாங்கியுள்ளாள். நம் மனத்தினைக் கட்டுப்படுத்த கரும்பாகிய வில்லினையும் பஞ்ச இந்திரியங்களை நெறிப்படுத்த பஞ்ச மலர்கள் எனும் அம்புகளையும் தம் மேலிரண்டு கரங்களிலும், நம் ஆசைகளையும், அகங்காரத்தினையும் அடக்கி நீக்குவதற்குப் பாசமெனும் கயிற்றினையும் யானையை நெறிப்படுத்தும் அங்குசத்தினையும் கீழிரண்டு கைகளிலும் அம்பிகை தனது படைக்கலன்களாகக் கொண்டுள்ளாள்.

.... பனிமலர்ப்பூங் கணையும் கருப்புச் சிலையும்மென்
பாசாங்குசம் கையில் அணையும்..... அ. அந். 2
..... ஆரம், செங்கைச் சிலையும், அம்பும் ... அ. அந். 9
(இங்கே சிலை என்றால் வில்)
கைக்கே அணிவது கன்னலும் பூவும் .... அ. அந். 37
(கன்னல் - கரும்பு)
.... ஒற்றை நீள்சிலையும்
அஞ்சு அம்பும் இக்கு அலராக நின்றாய்!.... அ. அந். 59
(இக்கு என்றால் கரும்பு)
செங்கைக் கரும்பும் மலரும் எப்போதும் என் சிந்தையதே - அ. அந். 62
.... படைபஞ்சபாணம், தனுக்கரும்பு.... அ. அந். 73
பஞ்சபாண பயிரவியே..... அ. அந். 76
.... பாசாங்குசை, பஞ்சபாணி... அ. அந். 77

பார்க்கும் திசைதொறும் பாசாங்குசம் பனிச்சிறைவண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும்... அ. அந். 85
... கரும்பு வில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணம்.. அ. அந். 100
... அங்குச பாசாங்குசம் அங்கை சேர்த்தாளை - அ. அந். 101

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று அபிராமி பட்டர் அம்பிகையின் படைக்கலன்களை பல்வேறு பாடல்களில் வரையறுத்துக் காட்டுகின்றார்.

அம்பிகையை வழிபட, துதிக்க, ஸ்மரிக்க நாம் முற்பிறவியில் புண்ணியம் செய்திருக்க வேண்டும். யாவற்றிலும் உயர்ந்து விளங்குகின்ற அபிராமி மண்ணுலக உயிர்களும், விண்ணுலகத் தெய்வங்களும் தொழுகின்ற தெய்வம் தாயாய்த் திகழ்பவள். அம்பிகை எப்பொழுதும் எவ்விடத்தும் துணையாக விளங்குகின்றாள். ஆன்ம கோடிகள் உய்வதற்குத் துணை நிற்கும் தெய்வம். அம்பிகை நமக்கு விழுத்துணை என்கிறார் பட்டர். விண்ணவருக்கும், மண்ணவருக்கும், அனைவருக்கும் துணையிருப்பவள். அப்படியென்றால் சிவனுக்குமா? என்று கேட்டால் ஆமாம்! என்கின்றார் ஆதிசங்கரர்.

சர்வமங்களமுடைய சிவனார் சக்தியோடு கூடி இருப்பாரேயாகில் இப்பிரபஞ்சத்தை அவரால் நிர்மாணம் செய்ய இயலும். இல்லையேல் அவரால் கொஞ்சம் அசைவதற்குக் கூட இயலாதவராகி விடுவார். சிவபெருமானது ஆக்கல், அழித்தல், காத்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழிலையும் புரிய துணை நிற்பவளே அம்பிகை தானே! அதனால் தான் விஷ்ணு, பிரம்மா, ருத்ரன் முதலியவர்களும் உன்னை ஆராதிக்கின்றனர். பூர்வ புண்ணியம் செய்யாதவர்களால் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் உன்னை வழிபட இயலாது போனாலும் உன் திருநாமத்தைக் கூடச் சொல்லித் துதிக்க முடியாது. தேவி! பிரும்மா முதல் புழு வரை எல்லாவற்றையும் படைத்தவளே போற்றி! போற்றி!

அரிதினும், அரிதான அபிராமித் தெய்வம் நமக்குத் துணை ஆனதாலே அவளே நாம் தொழும் தெய்வம். அனைத்தையும் பெற்ற நம் அன்னையானவள். வேதங்கள் மற்றும் ஆகமங்களின் கிளைகளாகவும், வேதங்களின் கொழுந்துகளான உபநிடதங்களாகவும், வேதங்களைத் தாங்கி நிற்கும் வேரான ஓம் என்ற பிரணவ வடிவமாகவும் இயங்குகின்றாள். சாக்த சித்தாந்தத்தின் படி மூன்று என்று எவையெவை சிறப்பாகச் சொல்லப்படுகின்றதோ அத்திரயங்களுக்கெல்லாம் அவள் உரிமை பெற்ற தலைவி.

1) பிரணவமான அ, உ, ம
2) படைத்தல், காத்தல், அழித்தல்
3) நான்முகன், திருமால், சிவன்
4) இச்சா, கிரியா, ஞானம்
5) தூலம், கரணம், சூட்சுமம்
6) மனம், புத்தி, சித்தம்
7) இடைகலை, பிங்கலை, சுழுமுனை இவ்வாறெல்லாம் சொல்லப்படும் மும்மூன்றுக்கெல்லாம் தலைவி அவளே!

அபிராமி அன்னையின் சிவந்த திருவடிகளில் மண்ணுலக மாந்தர்கள், விண்ணுலகத் தேவர்கள், மாயா, முனிவர்கள் இம்மூவகையினரும் வந்து தலைகுனிந்து பணிந்து வணங்குகின்றனர். அபிராமி மாபெரும் தவத்தவர்களது வணக்கத்தையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏற்றுக்கொள்கிறாள். அவள் மார்க்கண்டேயரைத் துணை நின்று காத்தவள். அமிர்தகடேச்சுரரின் இடபாகம் பெற்ற இவளது இடப்பகுதித் திருவடியே மார்க்கண்டேய முனியை இயமன் பற்ற வந்த பொழுது அவனை உதைத்துத் தள்ளியது. அம்மையும், அப்பனும் ஒன்றி நின்று துன்பம் உற்றவரைக் காத்து துணை நிற்பர். இவ்விருவரும் இணைந்து ஒரு பக்தனின் உள்ளத்துள் நுழைந்து விட்டால் அவன் மாபெரும் பேறு பெற்றவனாகின்றான். விண்ணுலகில் வாழும் தேவர்களுக்கும், மண்ணுலக மாந்தர்க்கும் துணை நிற்கின்றாள்.

அபிராமிபட்டர் அம்பிகையை எவ்விதம் வழிபடுகின்றார்? இவ்வுலகத்தில் எல்லாம் வல்ல முழுதற் கடவுளைத் தாய்வடிவில் கொண்டாடும் மதம் இந்து மதம். பெயரும் உருவம் அற்ற நாம ரூப விவர்ஜிதாவான அகிலாண்ட கோடி பிரும்மாண்ட நாயகியான திரிபுரசுந்தரி தேவி பற்பல நாம ரூபத்தில் அருள்புரிகின்றாள். சிவனும், தேவியும் மூன்று விதமாகக் காட்சி அளிக்கின்றனர். 1) சிவனும் தேவியும் தனித்தனி உருவில் 2) இருவரும் ஒருடல் ஒருயிராக அர்த்தநாரீஸ்வரர் வடிவில் 3) ஒருவரில் மற்றொருவர் அடங்கியிருப்பவராக.

சிவனிடத்தில் சக்தி அடங்கிய வடிவம் தக்ஷிணாமூர்த்தி வடிவம். சக்தியிடத்தில் சிவன் அடங்கிய வடிவம் திரிபுரசுந்தரியான காமாட்சி வடிவம் ஆகும். அபிராமி பட்டர் தேவியை இந்த வடிவத்திலேயே போற்றி வணங்கி மகிழ்கின்றார். அபிராமி பட்டர் அன்னையைப் போற்றி எவ்விதம் காட்சி அருளப்பெற்றார் தெரியுமா? மூலாதரத்தில் தீக்கொழுந்தைப் போன்றும், இருதயத்தில் சூரிய ஒளி போன்றும், நெற்றியில் வானவில் போன்றும், சகஸ்ராரத்தில் பூர்ணிமை போன்றும் அம்பிகை யோகிகளுக்குக் காட்சி தருகின்றாள். ஸ்ரீலலிதா சகஸ்ரநாமத்தில் "சகஸ்ர அர அம்புஜ ஆரூடா" என்ற நாமத்தின் படி முழு மதியாய்க் காட்சி தருகின்றாள். தேவி! அப்பப்பா! சுப்பிரமண்யன் என்கின்ற அபிராமி பட்டர் பெற்ற பேறென்ன! சதா சர்வகாலம் அவளையே தொழுதால் எண்ணியதெல்லாம் கிட்டும் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

அபிராமி பட்டரைப் பொறுத்த வரையில் அபிராமித் தாய் தான் அவருக்கு எல்லாம். தாயே! அனைத்தும் உனக்கே அர்ப்பணம் என்ற உணர்வுடன், நான் பேசுவதெல்லாம் உனது மந்திர ஜபம் போலவும், என்னுடைய கர அசைவுகள் உனது பத்து முத்திரை வழிபாடு போலவும், எனது நடைகள் உனது பிரதட்சிணம் போலும், நான் புசிப்பதெல்லாம் உனக்குச் செய்யும் ஹோமம் போலவும், நான் படுப்பது உனக்கு நமஸ்காரம் போலவும் என்ற பாவனையில் வாழ்ந்து வந்தவர். அவர் நன்றே வருகினும், தீதே விளைகினும் நானறிவது ஒன்றேயும் இல்லை என்று அம்பிகையின் திருவருளை வேண்டி நின்றவர்.

உலகை விடப் பெரியது எது? மலையை விடப் பெரியது எது? கடலை விடப் பெரியது எது? பெரியதில் எல்லாம் பெரியது எது? கேள்விக்கணைகள் பல அடுக்கினாலும், கூறத்தக்க பதில் ஒன்றே. அகில அண்டங்களையும் படைத்து, காத்து அருள்புரியும் அகிலாண்டேஸ்வரியின் அன்பே எல்லாவற்றிற்கும் பெரியது. அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்து அவள் நம்மை ரட்சிக்கின்றாள். பராசக்தியின் எல்லையில்லாக் கருணையை அபிராமி பட்டர் விளக்குகின்றார். எப்படி?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே! பின் கரந்தவளே! கறை கண்டனுக்கு
மூத்தவளே! என்றம் மூவா முகுந்தற்கு இளையவளே!
மாத்தவளே! உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே.

--அபிராமி அந்தாதி

மன்னுயிர் புவனம் ஏனை மற்றுள உயிர்க்கெல்லாம்
அன்னையாய் உதவி நாளும் அவற்றினை வளர்த்து நிற்பாள்
என்று மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவளது எல்லையில்லாக் கருணையை விளக்குகின்றார்.

இறைவியின் அருளால் ஆணவ மலம் கழிந்து, மயக்கம் நீங்கி, அஞ்ஞான இருள் அகன்று அருளும் ஞானம் உள்ளத்தில் பதியட்டும்.

அபிராமி பட்டர், அன்னை அபிராமியின் அருட்செல்வர். இதை யாராலும் மறுத்துக் கூறடியாது என்பது உண்மை. அபிராமி பட்டர் அபிராமி பதிகத்தில் பதினாறு பேறுகளையும் சொல்லி அவை எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதனையும் மிகுந்த கவிநயத்துடன் வேண்டுகின்றார். அவர் அல்லும், பகலும் தன் மனத் தாமரையில் அன்னையை நிறுத்தி துதி செய்து தன்னையே மறந்து தாயுடன் ஒன்றியவர். இவர் அந்தணர் பரம்பரையில் உதித்தவர். உலக மக்களின் நலம் கருதி அன்னையிடம் வேண்டுவதையே செய்த மகான். மன்னன் சரபோஜி அளித்த (நிலத்தை) மான்யங்களை மறுத்தவர். மன்னனிடம், நிலம் புலத்தை அழிக்கும், பொருள் மருளை அழிக்கும் என்று உரைத்தவர். அன்பு, பக்தி, எளிமை, ஒழுக்கம், நேர்மை, சமூக அக்கறை, பிறர்நலம் பேணுதல், இரக்கம், கருணை போன்ற உயர் பண்புகள் கொண்டவர்.

அம்பிகை தன்னை நினைத்தவர்களுக்குச் சுகத்தை எப்பொழுதும் நல்குபவள். நன்மையையே செய்யும் திருக்கரங்களை உடையவள். அன்னையும், அப்பனும் ஒன்றானவர்கள். சிவம் இல்லையேல் சக்தி இல்லை. சக்தி இல்லையேல் சிவம் இல்லை. மலரும், மணம் போல, மணியும், ஒலியும் போல, உயிரும், உடலும் போல, கதிரும், ஒளியும் போல பிரிக்க முடியாத ஒன்றானவர்கள். ஈசன் அமுதமயமானவன். அமுதம் உண்ண உண்ண திகட்டாதது. உயிரை வளர்ப்பது. வாழ்வை மீட்டுத் தருவது. ஈஸ்வரனின் நாமாவைத் தொடர்ந்து நாம் உச்சரிக்கும் போது அது அமுதமயமாவதை உணரலாம். இறை இன்பம் என்பது பேரின்பம்.

அருளுக்கு ஒரு வடிவம் படைக்க வேண்டி, ஒரு சிற்பிக்குக் கட்டளை இட்டால் அவனுக்கு அன்னையை மட்டும் வடிப்பதை விட்டு, வேறு குழப்பம் வருமோ! அருள்வதில் அன்னைக்கு இணை இவ்வுலகில் எதுவும் கிடையாது. எனவே இறைவனையும் நம் அன்னையாகவே கருதிப் போற்றுகின்றோம். அபிராமி அம்மை பதிகத்தைப் பாட அனைத்தும் கிடைத்திடும். ஆயுள் மிகுந்து வரும். மனம் அமைதியுறும். மேன்மை அடையலாம். கீர்த்தி பெறலாம். உன்னத வீட்டின்பம் கிடைக்கும். உவகை பூத்துச் சொரியும். அவளே கிடைப்பாள் என்பதே உண்மை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்பிகையின் பதிகத்தின் சிறப்பு - பதினாறு செல்வங்களும் பெற வேண்டி கேட்கவும், இளையோரை வாழ்த்தவும் பயன்படும். ஓயாமல் அலைவீசிக் கொண்டிருக்கும் திருப்பாற்கடலில் அறிதுயில் கொண்டு இருக்கும் திருமாலின் தங்கையே! திருக்கடவூர் தலத்தில் வாழ்பவரின் வாழ்விற்கு ஆதாரமானவளே! அமிர்தகட ஈசனின் இடபாகத்தைப் பெற்று நீங்காது இருப்பவளே! எப்பொழுதும் நன்மையே செய்பவளே! அருள்புரிவாய்! அழகிய அபிராமி வல்லி!

அன்னையிடம் வேண்டுவதெல்லாம் - எப்பொழுதும் நினைவில் நிற்கக்கூடிய கல்வியையும், குறைவில்லாத ஆயுளையும், வஞ்சனை இல்லாத நண்பர்களையும், குறையாத வளர்ச்சியுடைய செல்வ வளத்தையும், மாறாத பொலிவுடன் திகழும் இளமையையும், நோய் நொடிகள் இல்லாத உடலையும், தளர்ச்சி இல்லாத மனதையும், என்றும் அன்பு குன்றாத மனைவியையும், நற்குணங்களையுடைய நல்ல குழந்தைகளையும், குறைபடாத புகழையும், சொன்ன சொல் மாறாத வாக்கு வன்மையும், குறையாத செல்வ வளத்தையும், எவ்விதத்திலும் துன்பமில்லாத வாழ்க்கையையும், தூய்மையான உனது திருவடிகளில் பக்தியையும், அதற்கான உதவியும் தந்து, பெருமை பொருந்திய அடியார் கூட்டத்தில் என்னையும் சேர்த்து வைப்பாயாக. அம்பிகே! அபிராமி! என்கின்றார் பட்டர் தனது பதிக முதல் பாடலில். கலையாத கல்வியும்...

தொல்வினை தொலைக்க வேண்டுகின்றார் அடுத்த பாடலில். மார்க்கண்டேயர் பதினாறு ஆண்டுகளே வாழ்வார் என்ற விதியினை என்றும் பதினாறு என மாற்றியது அன்னையின் இடப்பாதமே. பெரும் துன்பங்களிலிருந்து நம் அன்னை நம்மைக் காத்து வருகின்றாள். அவளை நம்பினால் உணரலாம்.

உலகில் என் செயல் எல்லாம் உன்விதியே! நீஃய

உள்நன்று செய்வித்தும், செய்கின்றாய் என்றும்;

நிலவுவதோர் செயல் எனக்கு இன்று; உன் செயலே என்றும்

நினைவார்க்கு வினைகள் எல்லாம் நீங்கும் தாஃன

என்று சிவஞான சித்தியாரில் அருணந்தி சிவம் இதே கருத்தை வலியுறுத்துகின்றார்.

அம்மா! எப்பொழுதும் அருள் புரிபவளே! அழகிய அபிராமியே! எப்பொழுதும் நீ என் முன் வந்து உன் புன்னகையால் என்னுடைய முன் ஜென்ம வினைகள் யாவற்றையும் நீக்கி அருள வேண்டும். விதியை அன்னை எப்படி மாற்றுகிறாள் என்பதை நாம் நிச்சயம் புரிந்து கொண்டால் வாழ்வின் பயனை அடையலாம். யான், எனது என்ற செருக்கை ஒழித்து "இறைவனின் திருஅருள் இல்லாமல் ஏதும் நடவாது" என்கிற உணர்வோடு நின்று, நமக்கு உள்ள பணிகளைச் செய்து வந்தால் நாம் திருந்திய நிலையை அடைந்து விடுவோம். திருந்திய ஜீவனை இறைவன் தண்டிப்பாரா?

தன்னை வழிபடுபவர்களுக்கு அதிவிரைவில் வந்து அருள்புரிபவள் அன்னை என்பதை சிப்ர ப்ரசாதினி என்றும் அளவற்ற மோக்ஷ சாம்ராஜ்ஜியத்தையும் அளிப்பவள் - கைவல்ய - பததாயினி என்றும் ஸ்ரீலலிதா சகஸ்ரநாமம் கூறுகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருணகிரிநாதரும் அம்பிகையின் அருளும் ஆற்றலை அடியிணை தொழும் மௌனிகள் ஏகாந்த சுகம் தரும் பாசாங்குச சுந்தரி என்றும், கருதும் அன்பர்க்குச் சித்தியளிக்கும் கௌரி என்றும் கூறுகின்றார்.

பதிகத்தின் இரண்டாவது பாடலில் (காரணகப் பந்தியும் பந்தியின் அலங்கலும்) அன்னையைக் கேசாதி பாதமாக வர்ணிக்கின்றார். அபிராமி பட்டர் முதலில் காண்பது அவளது கரிய கூந்தல் அழகை. எப்படி வர்ணிக்கின்றார்? கருமையான அடர்ந்த மேகம் போன்ற கூந்தல். அந்த மேகங்கள் வரிசை வரிசையாக அமைந்திருப்பதாகக் காட்டுகின்றார். முடியினூடே அம்பாள் மலர் மாலைகளையும் அணிந்திருப்பதாகக் காட்டுகின்றார். அவரது மனக்காட்சியில் வண்ண வண்ண மாலைகளும், கூந்தலின் வரிசையுடன் தெரிகின்றது.

அம்பிகை கரிய அழகிய வில் போன்ற புருவங்களை உடையவள். வதனஸ்மர மாங்கல்ய க்ருஹ தோரண சில்லிகா - மன்மதனின் வீட்டுவாசலில் கட்டி இருக்கும் தோரணங்கள் போல வசீகரமாக இருக்கின்றன என்கின்றது ஸ்ரீலலிதா சகஸ்ரநாமம். நெற்றியில் உள்ள புருவங்களின் வடிவைக் கண்ட பட்டரின் மனக்கண்ணில் உதித்தது அவளது காதில் அணிந்துள்ள அழகுமிகு குண்டலங்கள். அவருக்கும் இந்த குண்டலத்திற்கும் மிக மிக நெருக்கமான தொடர்பு உண்டு. சந்திர உதயத்திற்குக் காரணமான குண்டலங்கள்.

கடம்ப மலர்களையும் அம்பாள் தன் காதில் அணிந்திருப்பவள் - ஸ்ரீலலிதா சகஸ்ரநாமத்தில் உள்ளது போல கதம்ப மஞ்சரி க்லுப்த கர்ணபூர மனோகரா தாடங்க யுகளீ பூத தபணோடுப மண்டலா - சந்திர, சூரியர்களைத் தோடுகளாக அணிந்திருப்பவள் என்றும் வர்ணிக்கின்றது.

அம்பிகையின் அழகுத் திருமுகத்தை பூரண நிலவுடன் ஒப்பிடுகின்றார். அம்பாளின் அருள் திருகம் காண்பவரின் உள்ளத்தே குளிர்ச்சியைத் தரும். மலர்ந்த திருமுகமே இன்பம் தரும். ராகேந்து வதனா - பூரண நிலவைப் போன்ற முகமே என்கிறது ஸ்ரீலலிதா சகஸ்ரநாமம். பிறை நிலவு போன்ற நெற்றியில் நறுமணள்ள கஸ்தூரிப் பொட்டுடன் அம்பிகை காட்சி தருகின்றாள். புருவ மத்தியில் உள்ள பொட்டு வைக்கும் இடத்தில் அம்பிகையும், சிவனும் நெற்றிக்கண் உடையவர்களாகத் திகழ்கின்றனர்.

அம்பிகையின் கூர்மையான பார்வை பொருந்திய இரு விழிகளிலிருந்து கடைக்கண் பார்த்தாலே போதுமே நம் உயர்விற்கு! அம்மா! உயிர்களின் உய்விற்கு நீ நேரடியாகப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. உன் கடைக்கண்ணால் எங்களைப் பாரம்மா! தேவி! உன்னை இறைஞ்சிக் கேட்கின்றோம்! கடைக்கண் பார்வையால் ரட்சிப்பவள் அம்பிகை! என்கிறார் அபிராமி பட்டர். அம்பிகை வேல் விழியாள், திரியம்பகி என்றெல்லாம் சுட்டிக் காட்டுகின்றார் அருணகிரிநாதர். ஸ்ரீலலிதா சகஸ்ரநாமம் அம்பிகையின் கண்களைப் **பத்மநயனா** என்றும், **நயனக் கருணாம் புயம்** என்று அபிராமி அந்தாதியும், **கூர்பெற்ற கயல்விழியும்** என்று செங்கோட்டுப் புராணம் வர்ணிக்கின்றது.

அம்பிகையே நீயுன்
வலப்புற மலர்க்ணீண்ணில்
காலை இளம் பரிதியினையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நலமான இடப்புறக் கண்ணில்
இரவில் வரும் மதியினையும்
வாள்நுதல் தாமரைக் கண்ணில்
சந்தியா காலத் தீயினையும்
தோற்றுவித்து எங்களுக்குப்
பகலிரவு இடையிலுள்ள மாலை
என எக்காலத்திலும் பார்வை தந்து அருள்பாலிக்கின்றாய்

- ஸ்ரீ ஆதி சங்கரரின் ஸௌந்தர்யலஹரி - 48ன் தமிழாக்கத்தில் அம்பிகையின் திருக்கண்களின் வர்ணனை சொல்லப்பட்டுள்ளது. அம்பிகையின் ஏனைய உறுப்புகளுக்கும் அருளுண்டு என்றாலும் அருள் ஊற்றாகப் பொங்கி வழியும் உறுப்பு அன்னையின் விழிகள் தான்! விழிக்கே அருளுண்டு என்கிறார் அபிராமி பட்டர்.

அடுத்து அம்பிகையின் இதழ்களை பவளக் கொடியில் பதித்த செவ்வாய் - அவளது வாயும், உதடுகளும் சிவப்பாயிருக்கின்றன என்று வர்ணனை செய்கின்றார் பட்டர். நவவித்ரும பிம்பஸ்ரீ ந்யக்காரி ரதனச்சதா - ஸ்ரீலலிதா சகஸ்ர நாமம். பவளம் போன்ற சிவந்த காந்தியை உடைய அதரங்களை அம்பிகை பெற்றுள்ளாள் என்கிறது. நம் உள்ளக் கோயிலுக்கு நல் வார்த்தைகள் வாசலாய் அமையுமாயின், அனைவரையும் அணைத்துச் செல்லும் அற்புத வழிகளாய் அமைய வழிவகுக்கும் அதரங்கள் என்கிறது திருமூலரின் திருமந்திரம்.

இந்த அதரங்களிலிலிருந்து வரும் மொழியும் இன்பத்தைத் தரவல்லது. இதுவே அமுதமொழியாகும். அம்பிகை வீணையின் இனிய குரல் வளம் உடையவள். மென்மை, இனிமை, குழைவு, பணிவு, பரிவு இவையனைத்தும் ஒருங்கே இணைந்தது அம்பிகையில் குரல் வளமை. பட்டர் அம்பிகையின் குரலோடு ஒப்புமையாகத் தொடர்புபடுத்திக் கூறி இருப்பவை - பண், இன்சொல், நரம்பு, இசைவடிவு, வீணை, பால், பால்-தேன் பாகுக்கலவை, குயில் இவற்றோடு ஒப்பிட்டுப் பார்த்துள்ளார்.

அம்பிகையின் குரலினிமையை பட்டரது பாடல் வரிகள் எவ்வாறு உணர்த்துகின்றது ?

- பண்ணளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே - அ. அந். 15
- பரிபுரச்சீறடிப் பாசாங்குசை பஞ்சபாணியின் சொல் - அ. அந். 43
- நரம்பை அடுத்த இறை வடிவாய் நின்ற நாயகியே - அ. அந். 49
- பாலினும் சொல் இனியாய் - அ. அந். 60
- பண் களிக்கும் குரல் வீணையும் பயோதரம் - அ. அந்த. 70
- பாலையும், தேனையும், பாகையும் போலும் பணி மொழியே - அ. அந். 86
- குயிலாய் இருக்கும் கடம்பா அடவியிடை - அ. அந். 99

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடுத்து பட்டர் அம்பாளது நாசியினை குமிழனைய நாசி என்கின்றார். அம்பிகையின் நாசி குமிழம் பூ போன்று எடுப்பாக இருப்பதாக வர்ணிக்கின்றார்.

ஸ்ரீலலிதா சகஸ்ரநாமத்தின் 19ஆவது நாமம் அன்று அலர்ந்த சண்பகப்பூ போன்ற மூக்குத் தண்டால் ஆன அழகுடன் விளங்குபவள் அம்பிகை என்று வர்ணிக்கின்றது.

அம்பிகையின் பற்கள் ஈட்டி போன்ற கூர்மையும், வெண்மையான தந்தத்தை போன்று அமைந்துள்ளதாகக் காட்டுகின்றார் அபிராமி பட்டர். தேவியின் பற்கள் தூய்மையுடன் வெள்ளையாகத் தெரிவது அவளது சாந்த குணத்தைக் குறிப்பதாகும். முருத்தன மூரலும் - (அ. அந்.9.) மயிலிறகின் வெண்மையான அடிப்பகுதியைப் போல அம்பிகையின் பற்கள் விளங்குகின்றன என்கிறார் அபிராமி பட்டர்.

மேலும் சங்கு போன்ற கழுத்தை உடையவள் தேவி. சங்கு வெண்மைக்கும், அதில் எழும் நாதத்திற்கும் பெயர் பெற்றது. கழுத்து மங்களகரமான திருமாங்கல்யத்தைத் தாங்கி நிற்பது. ஆபரணங்கள், அணிகள், மாலைகளை ஏற்று சிறப்புப் பெறுவது.

மூங்கிலுடன் அழகுப் போர் புரிந்து வெற்றி கொண்ட நீண்ட தோள்களாம் அம்பிகையின் தோள்கள். தளிர் நிற மேனியும், முத்துப் பற்களும், இயற்கை மணம், வேலன்ன கண்ணும், மூங்கில் தோள்களும் உடையவள் அவள். சிவந்த தாமரையினை ஒத்த கை தான் அம்பிகையின் கைகள். அம்பிகையை ஒரு அழகு நிறை தாமரைக் குளமாகவே உருவகித்துப் பாடுகின்றார். அம்பிகையின் வெவ்வேறு அங்க அழகினைக் கூறிய பட்டர் கச்சு அணிந்து பெருமிதத்துடன் வனப்பு மிக்க தனங்கள் உடையவள் என்கின்றார்.

பென்னம் பெரிய முலையும் முத்தாரம் - அ. அந். 53.
செப்பும் கனக கலசம் போலும் திருலை மேல் - அ. அந். 78
புல்லிய மென்முலை பொன்னனையாள் - அ. அந். 91
பால் அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள் கூர்
திருத்தன பாரம் - அ. அந். 9

மின்னல், நுண்ணூல் அடுத்து அம்பிகையின் இடையழகு உடுக்கை, போல இருப்பதாக வர்ணிக்கின்றார்.

நடுவில் குறுகியும், இருபுறம் விரிந்தும் இருக்கும் தாள இசைக்கருவி உடுக்கை போன்றதாம் அவளது இடை. ஒரு மெல்லிய ஒளி பொருந்திய கீற்றாக வானத்தில் தோன்றி மறைவது மின்னல். அம்பிகையின் இடையும் அந்த மின்னல் கீற்று போல அளவால் மெல்லியதாகவும், தோற்றத்தால் மின்னல் தோன்றி மறைவது போல் அம்பிகையின் இடையும் உளதோ, இலவோ? என்ற நிலையில் இருக்கின்றதாம். அம்பிகையின் இடையின் நுண்ணிய தன்மையைக் குறிக்க பட்டர் அது மெல்லிய நூல் போல உள்ளது என்கின்றார்.

புணர்முலையால் வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி - அ. அந். 5

துவளப் பொருது துடியிரை சாய்க்கும் - அ. அந். 38

சின்னஞ்சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும் - அ. அந். 53

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை - அ. அந். 72

தயங்கு நுண்ணூல் இடையாளை - அ. அந். 84

திரிபுரையாள் திருமேனியும் சிற்றிடையும் - அ. அந். 85

மெல்லிய நுண்ணிடையாளை மின்னையாளை - அ. அந். 91

அம்பாளின் இடையின் தொடர்பான ஸ்ரீலலிதா சகஸ்ரநாமாக்கள்

- ஓம் ஸ்தனபார - தலன் - மத்ய - பட்ட - பந்த

-வலித்ரயாயை நம. - 36

தன பாரத்தினால் கிடைக்கும் ஊனம் ஏற்பட்டு விடாது காப்பதற்காக அணியப்பெற்ற முப்பட்டையோ என விளங்கும் மூன்று மடிப்புகளையுடைய இடையினை உடையவள்.

ஓம் தவோதரீயை நம: - மெல்லிய இடையை உடையவள் - 847

ஓம் தனுமத்யாயை நம: - குறுகிய இடையினை உடையவள் - 360

மெல்லிய இடையை உடையவள் என்பதற்கு ஸ்ரீ ஆதிசங்கரரின் ஸ்ரீஸௌந்தர்யலஹரியிலிருந்து - 79

உத்தமியே மலைமகளே உனதிடையும் மெலிந்து
உயர்நகிலின் பாரமதைத் தாங்காமல் வளைந்து
சத்தமின்றி மெல்ல மெல்ல ஒடிந்திடுமோ என்னச்
சந்தேகம் நான் அடையத் திகழ்கின்ற தம்மா!
வித்தகியே நதிக்கரையின் வீற்றிருக்கும் மரம்
வேர்பறிக்க வீழ்ந்துவிட தவிப்பதனைப் போலப்
பத்தினியே காண்கின்றேன் நின்றன் இடை தானும்
பன்னெடிய காலமெலாம் வாழட்டும் என்பேன்.

இந்த மெல்லிடையில் அணிந்துள்ள பல வடங்களை உடைய மேலாபரணம் என்ற ஒட்டியாணத்தைப் பற்றி கூறுகின்றார். மிகச்சிறந்த பட்டாடைகளால் பிரகாசிக்கின்ற இடுப்பு என்று ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம் கூறுகின்றது. அன்னையின் ஆடை அழகை தங்க அரைஞாணில் இரத்தினக் கற்கள் பரல்களாகி, கிணி கிணி என மணி ஒலியை எழுப்பும் ஆபரணத்தை அணிந்தவள். (ரத்ன சிங்கிணிகா - ரம்ய - ரசநா. தாம - பூஷிதா).

கேசாதி பாத வர்ணனையில் அன்னையின் திருப்பாதங்களில் அணிந்துள்ள இரத்தின பரல்கள் பதித்த சிலம்பை தன் பாதங்களில் அணிந்துள்ளாள் அன்னை. யாக குண்டலத்திலிருந்து அன்னை தேவர்கள் முன்னே நடந்து வரும்பொழுது சிலம்பொலியுடன் கூடிய தாமரை மலர் போன்ற தேவியின் திருவடிகள் தேவர்கள் மனதில் நம்பிக்கையையும், இன்பத்தினையும் தருகின்றன. அம்மா! தேவி! உன் பாத கமலங்களை நமஸ்கரிக்கும் எங்களுக்கும் அனைத்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நலன்களையும் அருள்வாயம்மா! நீயே கதியென்று இருக்கும் எங்களைப்போன்ற திக்கற்ற ஏழைகளுக்கு அருள்புரி தாயே! அம்பிகையின் சிவந்த திருவடிகள் - எப்படி சிவந்தன?

மக்களும், தேவர்களும், முனிவர்களும் அவள் திருவடிகளில் தங்கள் தலைகளை வைத்து, வைத்து வணங்கிக் கொண்டே இருப்பதால் அல்லவோ அவளது மென்மையான திருவடிகள் சிவந்து விடுகின்றன.

பட்டர் அம்பிகையின் பாத மென்மையை அவரது அந்தாதியில் பல பாடல்களில் கூறியுள்ளார்.

1. செறிந்தேன் உனது திருவடிக்கே - அ. அந். 3
2. மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னை குனிதரும் சேவடிக் கோமளமே - அ. அந். 4
3. திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என் செந்நியதே - அ. அந் 5
4. செந்நியது உன் பொன் திருவடித் தாமரை - அ. அந். 6
5. வணங்கி என்றும் துதியுறு சேவடியாய் - அ. அந். 7
6. சுந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே - அ. அந். 8
7. என்றும் வணங்குவது உன் மலர்த்தாள் - அ. அந். 10
8. மறை நான்கினுக்கும் தான் அந்தமான சரணாரவிந்தம் - அ. அந். 11
9. பத்தி பண்ணியது உன் இரு பாதாம் புயத்தில் - அ. அந். 12
10. அவ்வியம் தீர்த்து என்னை ஆண்ட பொற்பாதம் - அ. அந். 18
11. பணியேன் ஒருவரை நின் பத்மபாதம் பணிந்த பின்னே - அ. அந். 24
12. மணம் நாலும் நின் தாள் இணைக்கு என் - அ. அந். 26
13. பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே அடைத்தனை - அ. அந். 27
14. நின் புது மலர்த்தாள் ..... - அ. அந். 28
15. நின் பாதமென்னும் வாசக்கமலம் தலைமேல் வலிய வைத்து - அ. அந். 32
16. வந்தே சரணம் புகும் அடியாருக்கு ... - அ. அந். 34
17. திங்கள் பசுவின் மணம் நாறும் சீறடி சென்னிவைக்க - அ. அந். 35
18. ஆளுனக்கு உந்தன் அடித் தாமரைகள் உண்டு - அ. அந். 39
19. நம் சென்னியின் மேல் பத்மபாதம் பதித்திடவே - அ. அந். 41
20. பரிபுரச் சீறடிப் பாசாங்குசை பஞ்சபாணி இன்சொல் - அ. அந். 43
21. தொண்டு செய்யாது நின் பாதம் தொழாது - அ. அந். 45

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

22. ஆய கியாதி உடையாள் சரணம் அரண் நமக்கே - அ. அந். 50

23. ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு அன்பு - அ. அந். 52

24. செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே - அ. அந். 54

25. சரணாம் புயம் அல்லால் கண்டிலேன் ஒரு தஞ்சமே - அ. அந். 58

26. பாலினும் சொல் இனியாய் பனிமாமலர்பாதம் வைக்க - அ. அந். 60

27. ... நின் மலரடிச்செம் பல்லவம் அல்லது பற்றொன்றிலேன் - அ. அந். 66

28. சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே - அ. அந். 68

29. ... அருமறைகள் பழகிச் சிவந்த பதாம் புயத்தாள் - அ. அந். 71

30. தன் குறை தீர எம் கோன் சடைமேல் வைத்த தாமரையே - அ. அந். 72

31. அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப் - அ. அந். 74

32. விரவும் புதுமலர் இட்டு நின்பாத விரைக் கமலம் - அ. அந். 83

33. மால் அயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற காலையும் - அ. அந். 86

34. சிறக்கும் கமலத் திருவே நின் சேவடி சென்னிவைக்க - அ. அந். 89

35. பதத்தே உருகிநின் பாதத்திலே மனம் பற்றி - அ. அந். 92

36. தைவந்து நின் அடித்தாமரை சூடிய சங்கரற்கு - அ. அந். 98

இந்த பாடல் அடிகளில் அம்பிகையின் பாத வர்ணனையை நோக்கும் பொழுது நாம் நம் சிந்தையை நிறுத்த வேண்டிய இடம் அன்னையின் திருப்பாதக் கமலங்களே. அதையே இறுகப் பற்றி வழிபட்டால் போதும் என்ற உண்மை விளங்குகின்றது.

சீரடி - சீர் என்ற சொல்லுக்கு சிறப்பு, புகழ், அழகு, நேர்மை, பெருமை, நன்மை, சமம் முதலிய பொருள் உண்டாயின், இத்தனை குணங்களும் வாய்க்கப் பெற்றவை அம்பிகையின் பொற்பாதங்கள். அம்பிகையின் திருவடிகள் நமக்குப் புகலிடமாக இருப்பவை. பொன்போன்று மிளிரும் பொற்பாதம் சிவந்த தளிரினைப் போன்று மென்மையானது. மேலும், அம்பிகையின் திருவடிகள் நிறத்தால், நறுமணத்தால், மென்மையால், தாமரை மலரினை ஒத்திருக்கின்றன என்கிறார் அபிராமி பட்டர்.

அபிராமி பட்டர் தனக்கு அம்பிகையுடன் ஏற்பட்ட அநுபவத்தைக் கூறுகின்றார். அன்னை உபாசகர்கள் எப்போது வேண்டுமானாலும் அன்னையுடன் உறவாடுவர். உள்ளத்தே பூரிக்கும் அன்பில் திளைப்பர். பொதுவாக அம்பிகையின் பூஜையை முடித்து அவர் வணங்கும் சிலையே அவருக்கு புன்றுவலிட்டு பதிலளிக்கும். அப்பொழுது தமக்கு ஏதோ நல்லது ஏற்படப் போகின்றதென்று உணர்வர். அம்பிகை முன்கூட்டியே அறிவிப்பாள். அன்னை முன்னமே உணர்த்தி விடுவாள் தன் பக்தனுக்கு. அவள் அடியார்களின் உள்ளத்திலே, உணர்விலே கலந்து உறைபவள். உறவினர்களோடு உறவாடுவது போன்று நெருங்கி நிற்பவள். ஒன்றிய இவ்வுணர்வினால் அல்லவோ அம்பாள் தன் தாடங்கத்தை நிலவாக்கி அருளினாள்! அன்னை சிந்தும் புன்னகையின் ஆற்றல் அளவிடற்கரியது!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவியின் தாள்களில் உலகங்களும், மலைகளும், கடல்களும் உயிர்களும் அடங்கி ஒடுங்கும். அம்பிகே! தேவி என் தாள் பணிந்து தொல்வினை தொலைந்து இன்படன் வாழ ஆசி புரியம்மா!

தனது மூன்றாவது பதிகத்தில்அம்பிகையின் பதிகம் மகரவாழ் குழைமேல்... பாடலைப் பாடி பக்தி செய்ய அரசு பதவிகள் கிடைக்கும். அகில உலகினுக்கும் முதல்வியாக விளங்கும் இன்பமே வடிவான அன்னையே! அருள் புரி அமிர்தகடேசரின் இடப்பாகத்தில் அமர்ந்து நன்மை பல புரிபவளே! மீன்களைப் போன்ற உனது கண்கள் காதுவரை நீண்டு உள்ளதால் அவை நீ காதில் அணிந்திருக்கும் மகர மீன் வடிவான கர்ண குண்டலத்துடன் போரிட்டு வென்று குமிழப்பூ போன்ற உன் நாசியின் அருகே மறைபவை. கூர்மையான வாளையும் தோற்கடிக்கச் செய்பவை. அருமையான கயல் மீன்களை வென்றவை உன் கண்கள். செந்தாமரை போன்ற உனது கண்களால் பேரருள் பெற்றவர்கள் பெறும் பேறு மிகப் பெரிது. அவர்கள் இப்பிறவியில் தங்கள் கொற்றக் குடையின் கீழ் ஆட்சி புரிவர். அதுமட்டுமல்லாமல் அடுத்த பிறவியிலும் ஐராவதம் என்ற வெள்ளை யானையின் மீது அமர்ந்து ஆட்சி புரிவர்.

பதிகம் நான்கில், மனம் வாக்கு காயத்திற்கு எட்டாத கடவூர் அன்னையே! அறிவு நிரம்பப் பெற்று உயர்ந்தவர்களுக்கு எல்லாம் பேரின்பக் கடலாக விளங்குபவளே! இறைத் தன்மையை உணர நம்மிடம் அளவுகோல் இல்லை. நம் சிற்றறிவுக்கு எட்டாத அம்பிகையின் பேரியல்பை நாம் வியந்து நோக்கத்தான் முடியும். அமிர்த கட ஈசனின் இடப்பாகம் அமர்ந்து அவரை விட்டுப் பிரியாமல் என்றும் நல்லதையே செய்யும் அருட்கரங்களை உடையவள். அருள் புரிபவளே! அழகிய அபிராம வல்லியே! எப்பொழுதும் அலைவீசிக் கொண்டிருக்கும் பெரிய ஏழு கடல்களையும், பூமியின் எட்டுத் திசைகளையும், அதில் காவல் புரிந்து கொண்டு இருக்கும் யானைகளையும், மிகப் பெரிதான ஆதிசேடன் என்ற நாகத்தையும், மிகப்பெரியதுமான இமயமலையையும், இந்த உலகினைத் தாங்கக்கூடிய பெரிய ஆமையையும், ஈரேழு பதினான்கு உலகங்களையும், தேவர்கள் குழுவையும், செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் மகாலட்சுமியையும், சங்கு சக்கர தாரி திருமாலையும், புலித்தோல் அணிந்த ஈசனையும், அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தும் பழமையானவளாய் இருக்கும் உன்னைக் குமரி என்கிறார்களே! எப்படி ? என்ற ஆச்சர்யக் குறியிடுகின்றாள் அபிராமி பட்டர்.

பட்டருக்குக் கிடைத்தபேறுகள்

1. உடைத்தனை வஞ்சப் பிறவியை: பிறவி எனும் காட்டை அழிக்கும் கோடரி போன்றவள் அம்பாள். பிறவி நோயை நீக்குபவள். மாயப்பிறப்பறுக்கும் மகராசி பட்டரது பிறவி எனும் சங்கிலித் தொடரை உடைத்து அதாவது அறுத்து விட்டாளாம்.

2. உள்ளம் உருகும் அன்பு படைத்தனை: முருகிய பக்தியின் அடையாளம் இறையுடன் கலந்து அன்பாகிக் கசிந்து உள்ளுருகும் நிலை. இந்நிலையை அருளினாளாம் அன்புடன் பட்டருக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே அடைத்தனை: பணி ஒப்புவித்தல் அதாவது தெய்வக் கட்டளை. அம்பிகையின் இரு தாமரைத் திருவடி மலர்களைத் தன் தலையில் சூடிக்கொள்ளும் பணியினைப் பட்டருக்குப் பரிவோடு அளித்துள்ளாளாம் அம்பிகை.

4. நெஞ்சத்து அழுக்கையெல்லாம் நின் அருட்புனலால் துடைத்தனை

மனதிலுள்ள அழுக்குகள் அனைத்தையும் தன் அருள் வெள்ளத்தால் போக்கித் துடைத்துத் தூய்மை பெறச் செய்துள்ளாளாம் அம்பிகை. பட்டர் இதனை நமக்காகத்தான் கூறுகின்றார். மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை, மற்றும் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இவை எங்கேனும் பட்டருக்கு இருக்க முடியுமா? மனதார அம்பிகையை வழிபடுபவர்க்கு இந்த நெஞ்சத்து அழுக்கையெல்லாம் நிலை கொள்ளாமல் நீங்கச் செய்வாள்.

நம் உள்ளத்து அழுக்குகள் படலம், படலங்களாக பதிந்திருக்கின்றன. அவற்றை வெறும் நீரால் கழுவி நீக்க முடியுமா? அவளது அருள் தாங்கிய நீரால் அல்லவோ சாத்தியம்!

ஒன்றாயும், பலவாயும், இவ்வுலகமாகவும் விளங்குகின்ற அன்னை, என்னுடைய உள்ளத்திலும் நீங்காது விளங்குகின்றாள் என்கிறார் அபிராமி பட்டர். தன்னை முழுமனதாக வணங்கித் துதிக்கும் பக்தர்களின் இதயத்தில் நீங்காது நிலைத்திருக்கின்றாள் அபிராமி.

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து
இவ்வுலகு எங்குமாய் நின்றாள்;
அனைத்தும் நீங்கி நிற்பாள்; என்றன்
நெஞ்சினுள்ளே பொன்றாது நின்று புரிகின்றவா;
அன்று ஆல் இலையில் துயின்ற
பெம்மானும் என் ஐயனுமே - என்கின்றார்.

அன்னையை நம்புங்கள். அவள் என்றென்றும் நம்முடன் தான் இருக்கிறாள். நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் அவள் வழி நடத்திச் செல்வதே என்பதை உணருங்கள். எல்லாவற்றிற்கும் முன்னதாக உண்டானவள் தேவி ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய் நிற்பவள் நம் ஒவ்வொருவர் உள்ளிருந்தும் வழி நடத்துகின்றாள். அன்னை நம் உள்ளத்தில் உட்புகுவாள் என்பது திண்ணம்.

அன்னையின் ஆத்ம தரிசனம் ஒரு முறை கிடைத்தால் போதும். பின் எப்பொழுதும் அவளைப் பற்றியே பேசி, பாடி, ஆடி, நினைத்துப் போற்றத் தோன்றும். அவள் காட்சியே நம் கண்முன் தோன்றும். ஈடுபாடு, உருக்கம், மனத்தெளிவு, மனநெகிழ்வு ஆகியவற்றை தர வல்லது அபிராமியின் தோற்றம். அன்னை அருளும், அழகும், திருவும், உருவும் மிக்க வடிவம் உடையவள். அம்பிகை அடியார்கள் நினைத்ததை அள்ளி வழங்கும் கற்பத்தின் பூங்கொம்பு போன்றவள். காரணம் பாராமல் கருணை புரிபவள். இவளைத் தொழுபவர்களுக்கு கல்வி, தனம், தான்யம், அழகு, புகழ், வலிமை, பெருமை, இளமை, அறிவு, ஆயுள், வெற்றி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்தானம், நோயின்மை, துணிவு, போகம், நல்லூழ் ஆகிய தொகை தரும் பதினாறு பேறும் பெற்று வாழ அருள்புரிவாள்.

அன்னையை தியானிக்கும் பாடலான,

சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த் தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
சொல்லும் தவநெறியும், சிவலோகம் சித்திக்குமே

என்று சொல்லி அம்பிகையை மனதால் தியானித்து நற்பலன்களைப் பெறுவோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. சாக்தமே சமயங்களின் அடிப்படை

சாக்தம் என்பது என்ன? அன்னை பராசக்தியை முழுதற் பரம்பொருளாக எண்ணி வழிபடுதலே சாக்தம். நம் நாட்டில் தொன்று தொட்டு சக்தி வழிபாடு தனிச் சிறப்புடையதாக இருந்து வருகிறது. காணாபத்யம், கௌமாரம், சைவம், வைணவம், சௌரம், சாக்தம் ஆகியவை ஆறு சமயங்கள். அம்பாள் வழிபாடான சாக்தத்திற்கு அடிப்படைகள் அமைத்துக் கொடுத்து அதற்கு ஒரு தனியான ஞான வடிவம் தந்தவர் பாஸ்கரராயர். அவர்களுக்குப் பின்னர் பல அருளாளர்கள் தோன்றி சாக்தத்தை வளர்த்தனர். அவர்களுள் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்து அபிராமியின் புகழ்பாடியவர் அபிராமி பட்டர். இறை உணர்வை மக்களிடம் பரப்புவதற்காகவே மண்ணில் உதித்தவர் எனக் கூறலாம். பக்தியின் பெருமைகளை உணர்ந்த ஞானி. அபிராமி அம்மையின் முழுமையான அருளைப் பெற்ற யோக புருஷர் எனலாம். சாக்த சமயக் கருத்துகளின் திரட்சியோடு கூடிய இணையற்ற நூலே அவர் வழிவகுத்துத்தந்த அபிராமி அந்தாதி.

தாயே மிகவும் தயையுடையவள். பெருங்கருணை தெய்வமான பெருமைகளை விளக்குவதே சாக்தம். இந்து சமயக் கொள்கை, அதன் வழிபாட்டு அறங்கள் ஆறு பிரிவுகள் என வழிபாட்டு முறைகள் பின்பற்றி வந்தன. அதில் அம்பிகையின் வழிபாட்டினை விளக்கும் முறையே சாக்தமாகும். இந்து சமயம் ஏனையவற்றைக் காட்டிலும் மூத்ததான ஸநாதான தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது. பாரத மண்ணின் பகுதிகளில் இந்து ஆறு வகை சமய வழிபாடும் தென்படுகின்றது. காணாபத்யம் நெடுங்காலச் சமயமாக விளங்கி மகாராஷ்டிரத்தில் மகத்தான கணபதி வழிபாடு நடைபெற்று வருகின்றது. சிவன் மைந்தன் முருகன் முக்கியத் தமிழ்க் கடவுளாக வழிபடப்படுகின்றார். அவரை கார்த்திகேயன் என்கிற திருநாமத்துடன் நம் நாட்டின் வட புலத்தில் வழிபாடு செய்கின்றனர். சிவ வழிபாடு என்னும் சைவம் வடக்கே காஷ்மீரத்தில் கால் ஊன்றி, ஒரு நூலிழை போல வடக்கும், தெற்குமாகவும், மேற்கும், கிழக்குமாகவும் பரவி, தென்னாடுடைய சிவமாக கடைக்கால் ஊன்றியிருக்கின்றது. திருமால் வழிபாடு என்னும் வைணவம் கண்ணன் பாகவதத் திருவிளையாடல்கள் புரியத் தோன்றிய உத்திரப்பிரதேசம், பின்னர் குஜராத் பகுதிகளிலும், இராமன் அவதாரம் செய்த உத்திரப் பிரதேசம், அதனையொட்டி அவன் வனவாசம் செய்யப் புகுந்த மத்திய பிரதேசம் போன்ற பகுதிகளில் வேர்விட்டு வளர்ந்து இந்தியா முழுவதும் பரவியுள்ளதைக் காணலாம்.

சாக்தம் பாரதத்தின் பழைய வழிபாடு என்றாலும், கங்கைச் சமவெளியாகிய கௌட நாட்டிலும், வங்காளத்திலும், தமிழகத்தில் காமாட்சி, மீனாட்சி போன்ற தெய்வங்களுடன், கிராம தேவதை வழிபாடும், கேரளத்தில் பகவதி வழிபாடும் மிகச் சிறப்பாக நடைபெறுவதைக் காணலாம். சௌரம் என்னும் சூரிய வழிபாடு ஒரிஸ்ஸா பகுதியில் ஊன்றியுள்ள சமயமாயினும் அது கோள்களின் தலைமைக் கோள் என்பதால் சூரியனை முழுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுவதைக் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆறு சமயங்கள் இருந்தாலும் அதில் ஐந்து கடவுள் ஆண்களே. ஆனால் சாக்தம் என்ற பெயரில் ஒரே அம்பிகையின் வழிபாடு இருந்தாலும் எல்லா பெண் தெய்வங்களும் இந்த வழிபாட்டில் அடக்கம் என்பது இதன் சிறப்பு. அதுமட்டுமல்லாமல் மற்ற ஐந்து ஆண் கடவுள்களுக்கும் உரிய சக்தியை அளித்தவள், அளிப்பவள் சக்தியே என்பதால் சாக்த வழிபாடு உயர்ந்து நிற்கிறது என்றால் மிகையாகாது.

தாய் வழிபாடே சக்தி வழிபாடு. சக்தி வழிபாடே சாக்த வழிபாடு. கடவுளின் தன்மையையும், உண்மையையும் உணர்ந்த மனிதன் சக்தியைத் தாய் உருவில் கண்டு கொண்டதே சாக்தத்தின் அடிப்படை. தாய் வழிபாடு என்பது தொன்மையானது என்பது கிராம தேவதைகளைச் சக்தியாக வழிபட்டு வரும் பழக்கம் புலப்படுத்துகின்றது. இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரத்தில் தொன்றுதொட்டே தமிழகத்தில் சக்தி வழிபாடு உயர்வு கண்டிருப்பதை விளக்கியுள்ளார். திருமூலர் தனது திருமந்திரத்தில் சக்தியின் பெருமைகளையும், ஆற்றலையும் பல பாடல்களில் ஏற்றமுடன் பகர்ந்தருளியிருக்கின்றார். பரணி நூல்களில் காளி அன்னை பற்றியும், குமரகுருபரர் மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், மீனாட்சி குறம் முதலான படைப்புகளில் தேவியின் ஸ்தோத்திரங்களையும், திருவொற்றியூர் வடிவுடை அம்மனை வள்ளலாரும் வாயாரப் பாடியுள்ளனர்.

தென்னகத்தில் குமரிமுனை குடிகொண்ட கன்னியாகுமரி தேவியைப் பாலா திரிபுர சுந்தரியாகவும், மதுரை மீனாட்சி அன்னையை சியாமளாவாகவும், ஆனைக்காவில் அகிலாண்டேஸ்வரியைத் தண்டினியாகவும், காஞ்சி வாழ் காமாட்சியை மகா திரிபுரசுந்தரியாகவும் போற்றுகின்றனர்.. சிருங்ககிரியில் சாரதா எனவும், மைசூரில் சாண்டேஸ்வரியாகவும், கேரள மாநிலத்தில் பகவதி எனவும் தேவி ஆராதிக்கப்படுகின்றாள். சாக்தர்கள் அம்பாளை இருந்த வடிவிலும், சைவர்கள் அம்மையை நின்ற வடிவிலும் தியானித்து வழிபடுவர்.

சாக்தம் நாளடைவில் சில ஆகமங்களைக் கொண்டு உருவாகி எழுந்த பொழுது கௌல மார்க்கம், சமயாசாரம் எனும் இரு நெறிகளை; அதாவது கௌலம் என்பது சடங்குகளை உடையவதாகவும், சமயாசாரம் என்பது உள்முக வழிபாடாகவும் மாறியது. சாக்த உபாசனையாளர்கள் குறியீட்டு வழிபாடாகிய இயந்திர வழிபாட்டைக் கொண்டவர்கள். ஸ்ரீசக்கரத்தில் தேவியை ஆராதிப்பது பற்றி ஆதிசங்கரர் வெகுவாகக் குறிப்பிட்டுள்ளார். திருமூலரும் சக்கர அமைப்புகள் முதலிய விளக்கங்கள் தந்துள்ளார். அருட்கவி சிதானந்த சுப்பிரமணிய அய்யரும் பல விளக்க நூல்கள் எழுதியுள்ளார். சிவசக்தி ஐக்கியத்தை உணர்த்தும் ஸ்ரீசக்கரம் ஸ்ரீசக்கர ராஜம் எனப்படும். அம்பிகையின் வடிவமே ஸ்ரீசக்கரம். இதில் கீழ்நோக்கியுள்ள ஐந்து முக்கோணங்கள் சக்தி சக்கரங்கள் என்றும், மேல் நோக்கியுள்ள நான்கு முக்கோணங்கள் சிவ சக்கரங்கள் என்றும் சொல்வர். ஒன்பது கோணங்களாகப் பார்க்கின்ற பொழுது சிவ சக்திபேதம் எங்கே ?

வடநாட்டு வழிபாட்டு முறைகள் வெகுவாக வாமாசார பிரதானமாகவும், மூர்த்தி வடிவம் உக்கிரமாகவும், தென்னாட்டு முறைகள் தட்சிணாசாரம் பிரதானமாகவும் மூர்த்தி வடிவம் சௌம்யமாகவும் அமைந்துள்ளன. வடபுலத்தில் ஸ்ரீதுர்கையாகவும், ஸ்ரீகாளி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாதாவாகவும் ஆராதிக்கப்படுபவள், தென்புலத்தில் ஸ்ரீலலிதா மகா திரிபுர சுந்தரியாகவும் வழிபடப்படுகின்றாள். மந்திரம், யந்திரம், தந்திரம் ஆகிய மூன்றுமே ஸ்ரீவித்யா எனும் முக்கோணத்தின் மூன்று கோணங்களாகும். மந்திரத்தில் உள்ள கருத்தை உருவப்படுத்திக் காட்டுவது யந்திரம். அதில் சித்தத்தை நிறுவப் பயன்படுவது பாஹ்ய பூஜை, மானசீக பூஜை, நியாசங்கள், குண்டலினி யோகம் முதலான சாதனங்களாகும். இவை தந்திரத்தில் அடங்கும். ஸ்ரீவித்யையின் முக்கியமான மந்திரம் பஞ்ச தசாட்சரி. முக்கியமான யந்திரம் ஸ்ரீ சக்கரம். முக்கியமான தந்திரம் ஐக்கியானு சந்தானம். மந்திர சித்திக்கு யந்திரம், தந்திரம் துணைகளாகும். ஆராதனை முறைகள் அனைத்திலும் சிறந்தது ஆத்ம சமர்ப்பணமாகும். அபிராமிபட்டர் தம் அந்தாதிப் பாடல்களில் இதனை சொல்லி வலியுறுத்தியிருப்பதைக் காணலாம்.

ஸ்ரீவித்யா உபாசகன் பிற மதங்களையும், மார்க்கங்களையும் குறை கூறாமல் இருக்கவேண்டும். தன் குடும்பம் மட்டுமல்லாது, ஊரும், உலகம் உய்ந்து வளம் காண வழி காண வேண்டும். தனது இந்த்ரியங்களே அவனது பூஜை வேளைகளில் ஹோமக் கரண்டியாகப் பயன்பட வேண்டும். எப்பொழுதும் ஜபம் அவன் உள்ளத்தில் நிகழ்ந்து கொண்டிருக்க வேண்டும். பிறர் உதவியை நாடாமல் பயன் எதிர்பாராது, பற்றின்றி, பயமின்றிக் கடன் ஆற்ற வேண்டும். பிரம்ம வித்தையும், ஸ்ரீவித்தையும் ஒன்றே. பிரம்ம வித்தை எனப்படும் வேதாந்த உண்மைகளை அநுபவத்திற்குக் கொண்டுவர வழிகாட்டுவது ஸ்ரீவித்தையாகும். காணாபத்யம், கௌமாரம், சைவம், வைணவம், சௌரம் யாவும் சாக்தத்தில் சமரசப்பட்டு இணைகின்றன. அன்னையின் அருளை உள்ளன்புடன் ஒன்றி நின்று வழிபட்டால் அவளே எல்லாத் தேவதைகளையும் காட்டியருள்வாள். அவளே சர்வ தேவ ஸ்ரூபிணி என்பதுவே சாக்தமாகும். பரம்பொருளான ஸ்ரீவித்யை வேதங்களில் விளக்கப்பட்டுள்ளது. தேவார, திருவாசகத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாக்த வழிபாட்டாளர்களுக்கு அன்னையே எல்லாம் ஆவாள். அண்ட சராசங்கள் அனைத்தையும் அவளே தோற்றுவித்தவளாவாள். அவள் தனக்கென்று தனி உருவம் ஒன்றும் இல்லாதவள். அவள் உருவமற்ற நிர்க்குண சொரூபமானவள். பக்தர்கள் நெஞ்சங்களில் வைத்து வழிபட பல்வேறு திவ்விய மங்கள உருவங்களுடன் காட்சி தருகின்றாள். மனம் ஒன்றிச் செய்யும் எதுவாயினும் அது யோகமாகும். மனம் ஒன்றி யோகத்தால் வழிபடும் அடியவர்களுக்கு ஒரு நிலையில் மனம் அற்றுப் போகின்ற அநுபவம் கைகூடுகிறது. அதாவது சாக்த வழிபாட்டு நெறியிலேயே மூலாதாரக் குண்டலினி விழிப்புற்று சிவபதமாகிய மேலாதாரம் சென்றடையும்.

சக்திக்கும், சிவனுக்கும் பேதமில்லை. சாக்தர்கள் காமேஸ்வரனோடு கூடிய காமேஸ்வரியாகவே அம்பாளை வழிபடுகின்றனர். சாக்த வழிபாட்டு நூல்களில் சிறந்தவை அபிராமி பட்டரின் அபிராமி அந்தாதி, உலகம்மை கலித்துறை அந்தாதி என்பன. சிங்கை நமச்சிவாயப் புலவர் எழுதியதே உலகம்மை கலித்துறை அந்தாதி. திருப்போரூர் ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் இயற்றிய ஸ்ரீ மீனாட்சி கலிவெண்பாவும் சுவையுள்ள சாக்த வழிபாட்டு நூலாகும். அதில் மீனாட்சி அன்னையை 300 நாமாக்களில் சுவைபடப் பாடியுள்ளார்.

...ublic domain. Digitization Muthulakshmi Research Academy

ஆயிரம் ஆனாலும் மாயூரம் ஆகாது என்பது தற்போது மயிலாடுதுறை என்று வழங்கப்படும் மாயவரத்தைப் பற்றிய சொல் வழக்கு. இத்தலத்து சித்தராகப் போற்றப் பட்டவர் நல்லத்துக்குடி கிருஷ்ணஸ்வாமி ஐயர். இத்தலத்து அம்பாள் அபயாம்பிகையைப் போற்றி இவரால் பாடப்பட்டது 100 பாடல் தொகுப்புகளைக் கொண்ட அபயாம்பிகை சதகம். மிகச் சிறந்த சாக்த நூல். சிறுவயதில் பெற்றோரை இழந்த இவருக்குத் தாயகவும் தந்தையாகவும் இருந்து பல சமயங்களில் பாலூட்டி, உணவூட்டி, ஆதரித்தவள் அபயாம்பிகை. ஒரு முறை அவள் திருக்கோயிலுக்குச் சென்று இரவு திரும்பும்போது இருட்டில் தடுக்கிவிழ, அம்பிகையே கையில் விளக்கை ஏந்திக் கொண்டு வீடுவரை வழிகாட்டினாள் என்பது வரலாறு.

சாக்தத்தின் தத்துவம் சாற்றும் நூல்களில் குறிப்பிடத் தக்கவை ஸ்ரீஹிருதயம்; தந்திர ராஜ தந்திரம்; நித்யா ஷோடசி கார்ணவம்; ஸ்ரீவித்யா மகோ ததி; வரிவச்யா ரகசியம்; சௌபாக்கிய ரத்னாகரம் ஆகியவை.

சாக்தத்திற்குரிய ஸ்தோத்திர நூல்கள் ஸ்ரீதேவி மகாத்மியம், ஸ்ரீலலிதா சகஸ்ரநாமம், ஸ்ரீலலிதா திரிசதி, ஸ்ரீஸெந்தர்யலஹரி, ஸ்ரீமூகபஞ்ச சதி, ஸ்ரீசியாமளா தண்டகம் ஆகியவை. அபிராமி அந்தாதி எனும் நூல் தமிழில் சாக்த வழிபாட்டு நூல்.

சாக்தத்திற்குரிய சக்தி வழிபாடு நாமம் நவில்வது; கோயில் (உருவத்தை) தெய்வங்களை வழிபட்டு வணங்குதல்; ஸ்ரீசக்கரத்தில் தேவியை ஆவாஹனம் செய்து வழிபடுதல்; யோக நிலையில் சக்தியை ஆறு ஆதாரங்களில் நிலை நிறுத்தி வழிபடுதல். உமையொரு பாகனாகக் கொண்டு வழிபடுதல். ஒளி வழிபாட்டில் இணைந்து களிப்பது எனப் பல முறைகளில் தேவியை வணங்கி வழிபடலாம். உமையின் அருளைப் பரிபூரணமாகப் பெறலாம். பயிற்சியும், முயற்சியும் இருந்தால் எந்த வழிபாட்டில் தான் பலன் பெற முடியாது? மனதை ஒருநிலைப்படுத்தி அம்பாளைத் தியானித்தால் அவள் அருள் பெறலாம்.

அபிராமி பட்டர் அன்னையை சதா சர்வகாலம் உள்ளத்தில் நிறுத்தி அவள் கோல எழிலைக் கண்டு பேரானந்தம் பெற்றார். வழிபாடு செய்யும் முறையில் வேறுபாடு இருந்தாலும் அலைபாயும் மனதை ஒருநிலைப்படுத்தி வணங்கினால் அம்பிகை ஓடோடி வந்து காப்பாற்றுவாள் என்பது உறுதி!

அம்மா! தேவி! தாயும் நீயே; தந்தையும் நீயே; என்கிறார் சம்பந்தர். தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம் என்று பாடுகிறார் அருட்பிரகாச வள்ளலார். தாயை, சக்தியை, தேவியைப் போற்றாதவர் யார்? அனைத்தும் அன்னையே! அவளன்றி ஓரணுவும் அசையுமா? தாயின் பெருமையும், கருணையும் அளவிடற்கரியது. தாயே! திரிபுரசுந்தரி! உமா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மகேஸ்வரி! அடியவர்கள் வாழ்வில், வாக்கில், அருள் அன்னையின் திருவிளையாடல்கள் தான் எத்துணை! எத்துணை! தட்சணேஸ்வரத்தில் இராமகிருஷ்ண பரமஹம்சருக்காகத் தேவி தன் அற்புத லீலைகளைப் புரிந்திருப்பது அவரது வரலாற்றிலிருந்து நாம் காணலாம். அவர் இராமனும், கிருஷ்ணனுமாக உலவியது பண்டிதர்கள் பலரை விவாதத்தில் மிக எளிதாக வென்றது, உடைந்த விக்கிரகத்தை அழகுறச் செப்பனிட்டது, நரேந்திரன் என்பவரை சீடனாக மாற்றி பின்னர் சுவாமி விவேகாநந்தராக உருவாக்கியது; இவை போன்ற பல அற்புதங்கள் அம்பிகையின் கரையிலாக் கருணை அல்லவோ! அதனால் தான் தாயுமானவ சுவாமிகளும் உன் நாமமே உச்சரித்திடும் அடியார் நாமமே நான் உச்சரிக்க வசமோ! என்று அம்பிகை அடியார்கள் பெருமையைப் பாராட்டி உரைக்கின்றார்.

அம்பாள் அநுக்கிரகம் இல்லையேல் கம்புக் கொல்லையைக் காவல் காத்த சிறுவன் உலகம் போற்றும் கவிச்சக்கரவர்த்தி கம்பராக ஆகியிருக்க முடியுமா? கலைமகளின் கடாட்சம் அல்லவா அவருக்கு! தேவிக்கு அவரின் சரஸ்வதி அந்தாதி காணிக்கையாகியது. அவளது அற்புதங்களை விளக்கும் சரஸ்வதி துதி -

படிக நிறம் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரைப் பொற் கண்ணும் - துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதம் துதித்தால்
கல்லும் சொல்லாதோ கவி
ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தினுள்ளே
இருப்பள் இங்கு வாராது இடர்.

ஆம்! உள்ளத்தில் இருத்தி வழிபட்டால் வருமா இடர்? அபிராமி பட்டரும் அம்பிகையை தன் உள்ளத்தில் இருத்தி அவளை சதா சர்வகாலம் வழிபட்டு அமாவாசை நாளை பௌர்ணமி திருநாளாகச் செய்து அம்பிகையின் அருட்கருணையைப் பெற்றவர்.

அபிராமி அந்தாதியைப் பாராயணம் செய்பவர்கள் வாழ்வில் தேவியின் அருளால் அற்புதங்கள் நிகழ்ந்து வருவது கண் கூடு. இப்புத்தகத் தொகுப்பில் பல இடங்களில் அந்த அற்புத வர்ணனை மிளிர்கின்றது.

அபிராமி அந்தாதி பாராயணம் செய்யப்படுவதால் மட்டும்தான் அன்னையின் கருணை கிடைக்குமா? இல்லை! அம்மா! கிருபை தந்து ரக்ஷி அம்மா! லோக நாயகி! அம்மா! என்று மனதார வழிபட்டால் போதும்! அவள் ஓடோடி வந்து அருள்புரிவாள்.

பால பிரம்மச்சாரியாக பகவான் சங்கரர் பிக்ஷை ஏற்று வரும்பொழுது, வறுமை சூழ்ந்த ஒரு ஏழைத்தாயின் இல்லத்திலிருந்து சிரமப்பட்டு தேடி ஒரு நெல்லிக்கனியை சங்கரருக்கு அளித்தாள். அந்த தாயின் அன்பை உணர்ந்து சங்கரர் உருகி மகாலட்சுமியை நினைத்து கனகதாரா ஸ்தோத்திரம் பாடினார். அந்த இல்லத்தில் தங்க நெல்லிக்கனி மழையைப் பொழிய

... Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைத்தாள் அம்பாள் மகாலட்சுமி. பகவான் சங்கரர் வாழ்வில் அம்பிகை அருளால் நிகழ்ந்த அற்புதங்களில் இது குறிப்பிடத்தக்க சிறப்பாகும். இன்னும் கனகதாரா ஸ்தோத்திரத்தை முறையாகச் சொல்லி வருபவர்கள் செல்வ வளம் பெற்று வாழ்வதை அனுபவத்தில் உணரலாம்.

திருவருட் பிரகாச வள்ளலார் என்று மக்களால் அன்புடன் அழைக்கப் பெறும் இராமலிங்க அடிகள் வாழ்விலும் அம்பிகை அற்புதங்கள் பல புரிந்துள்ளாள். வள்ளலார் சென்னையில் தன் தமக்கை வீட்டில் தங்கியிருந்தபோது, ஒரு நாள் ஆலயத்திலிருந்து திரும்பும்போது அகாலமாகிவிட்டதால், தமக்கையை இரவில் எழுப்ப வேண்டாமென்று நினைத்து, திண்ணையில் பசியுடன் படுத்து உறங்க, திருவெற்றியூர் வடிவாம்பிகை அவருடைய தமக்கை உருவில் வந்து உணவு படைத்து சென்றாள் என்பது வரலாறு. என்னே அவர் செய்த பாக்கியம்! சென்னை ஏழு கிணறு பகுதியில் உள்ள துலுக்காணத்து ரேணுகா தேவியையும் வள்ளலார் பாடிப் பரவியுள்ளார். அவரது அற்புதப்பாட்டின் மகிமையால், அம்பிகையின் அருளால் அத்திருக்கோயில் முன்னிலும் சிறந்து விளங்குகின்றது. அருளாளர்கள், மகாகவிகள், ஞானியர் வாழ்வில் அம்பிகை கடைக்கண் பாவித்த அற்புதங்கள் எண்ணிலடங்கா! அம்பிகையைச் சரண் அடைந்தால் அதிகவரம் பெறலாம்! அம்பிகை தன் அடியவர்களுக்கு தரிசித்த மாத்திரத்திலேயே தண்ணருள் கிடைக்கத் திருவுளம் கொண்டு சக்தி பீடங்களிலும், திருத்தலங்களிலும் எழுந்தருளியிருக்கிறாள். ஊர் மாறி, பேர் மாறி, உருமாறி ஆனாலும் ஒன்றே ஓர் சக்தி என உறைபவள்.

ஆதிசங்கரருக்கும் கவி காளமேகத்திற்கும், குமரகுருபரருக்கும் அருள் புரிந்தவள் அம்பிகை. இவர்களைப்போல அறிவைத் தெளிவாக்கி, கவலைகளை நீக்கி, மகிழ்வைத் தரும் அம்பிகை அபிராமி சமயத்தில் வந்து தடுத்தாட்கொண்டு பட்டருக்கு அருள்புரிந்தவள். ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகம் எங்குமாய் நின்றாள், அனைத்தையும் நீங்கி நிற்பாள், என்தன் நெஞ்சினுள்ளே என்ற அந்தாதியில் அம்பிகையை போற்றுகின்றார் பட்டர். இவள் உலகத் தலைவி! கடவுளர் யாவரும் வணங்கும் கடவுள்! தெய்வங்களின் தெய்வம்! ஜாதி, மத, இன வேறுபாடின்றி யாவருக்கும் அன்னையாக இருந்து அபிராமி அருள் செய்கிறாள். கடவுளர் யாவருக்கும் மேலான கடவுள். கருணையே உருவான அபிராமி! விதியை மாற்றி கதி தருவாள் அபிராமவல்லி. அபிராமவல்லி வயிரக்குழையால் வானவெளியில் நிலவை உருவாக்கி அடியவனின் பொய்யை மெய்யாக்கினாள். விழிக்கே அருள் உண்டு என்றுணர்ந்த அபிராமிபட்டர் இந்த அதிசயத்தைக் கண்டு அசந்தார். அம்பிகையை வழிபட்டவர்களுக்கு மரணம், பிறவி இரண்டுமே இல்லை.

சரணம் சரணம் என நின்ற நாயகி தன் அடியார்

மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே

நன்றே வந்தாலும், தீயதே வந்தாலும் எல்லாம் உன் செயலாகவே ஏற்று எதிர்கொள்வேன்! உன்னைச் சரணடைந்தபின் எனக்கு வந்த யாவும் உன் செயலாகவே எண்ணி ஏற்றுக்கொள்வேன். சந்திப்பவருக்கு எளிதாகக் காட்சி தரும் அபிராமியே! நின்றாலும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருந்தாலும், கிடந்தாலும், நடந்தாலும் எப்போதுமே உன்னையே எண்ணி வழிபடுவேன் என்கிறார் அபிராமி பட்டர். அல்லும், பகலும் தொழுதால் என் நெஞ்சத்து அழுக்கையெல்லாம் உன் அருளால் போக்குவாய் அபிராமித் தாயே என்று மனருகுகின்றார். பட்டரின் கருத்து உண்மைச் சான்றிதழ் பெற்றது தானே!

தனக்காகப் பிரார்த்தனை செய்யும் உதடுகளைவிட பிறருக்காகத் தொண்டு செய்யும் கரங்களையே கடவுள் ஆசீர்வாதம் செய்வார். பக்தி செய்து பிறருக்காகத் தொண்டு செய்பவனைக் கடவுள் என்றென்றும் காப்பாற்றுவார். அன்னையின் பெயரைச் சொல்லிக்கொண்டே உழைக்கவும், பிறருக்குத் தொண்டு செய்யவும் வேண்டும். அதுபோல மனமுவந்து பிறருக்குக் கொடுப்பதும், கைவருந்தி பிறருக்காக உழைப்பதும் அபிராமியின் அருள் பெறும் வழிகள். ஆனால் இன்றுள்ள பக்தி? கேள்விக்குறி தான்! எல்லாவற்றையும் கேட்பதும், பெறுவதுமாக உள்ளது. அதற்கு மூல காரணம் ஆசை! ஆசை! ஆசையைத் துறந்தால் அம்பாளிடம் நெருங்கி விடலாம். ஆனால் அந்த சக்தியையும், புத்தியையும் அம்பாள் அல்லவா நமக்குத் தரவேண்டும்! எங்கெங்கும் ஒளிப்பிரகாசமாய் ஆனந்த நடம் புரியும் அம்பிகை ஓடும் நதியினில், ஆடும் மரக்கிளைகளில், பாடும் பறவையில், எரிதழலில், ஓடும் உதிரத்தில், சுவாசிக்கும் உயிர்காற்றில் என எதிலும் உயிர்மூச்சாய் நிறைந்து வாழ்வளிக்கின்றாள்.

எண்ணும் எண்ணம் யாவிலும் மற்றும் எடுத்த காரியம் யாவிலும் இருப்பவள் சக்தி! சக்தியே உயிர்! சக்தியே சகலம்! இத்தகைய சக்தியை எப்படிப் போற்றுவது?

தேடி உன்னைச் சரணடைகின்றேன் தேவி
என் சிந்தையில் என்றும் நீநிலைபெறுவாய்
இன்னிசையில் மனம் களிப்பவளே மிக - இனிமையுடன்
உனைப் பாடிப் பரவுகின்றேன்
கோடி மலர் தூவி உனைத் தொழுதிடும்
அடியார் குறை தீர்த்திடம்மா
வீடு நன்கு விளங்கிடவே எங்கள்
வினை முற்றும் அகற்றிடம்மா
அகிலாண்ட நாயகியே ஜோதியம்மா எம்
அகம் குளிர கருணையுடன் காத்திடம்மா
மங்களங்கள் நல்கிடும் தேவியம்மா - உனக்கு
எண்ணாயிரம் கோடிப் பெயரம்மா
என்னுயிரை இயக்குகின்ற அபிராமியே
இவ்வுலகம் உனதாணை அரசாட்சியே
எண்ணமெல்லாம் உன்னிடம் தானே தாயே
என்னை இன்னம் கண் திறந்து பாராதது ஏன் தாயே!

In Public domain: Digitization Muthulakshmi Research Academy

அபிராமியைச் சரண் புகுந்தால்....

அபிராமியைச் சரண் புகுந்தால் ஏழ்மையைத் தவிர்ப்பாள்; நலம், வளம் தருவாள்; அடியார் திருக்கூட்டத்தில் சேர்ப்பாள்! ஆசையை அகற்றுவாள்! ஆணவம் நீக்குவாள்; ஐம்புலக் கட்டுப்பாடு தருவாள்; நெஞ்சத்து அழுக்கை நீக்குவாள்; இம்மை, மறுமைப் பயன்கள் தருவாள்; முக்தி அளிப்பாள். அன்னையின் கருணை கேட்டுப் பெறுவதல்ல; அது தானே வருவது; அவளது திருப்பாதமே பரகதிக்கு உரிய வழி; அதில் சரணாகதி அடைவது தான் பக்தியின் நிறை நிலை. அவளது திருநாம உச்சரிப்பே இறைவியை அடைய எளிய ஒரு வழியாகும். அம்பிகை தனது சாதகர்களுக்கு போகம், மோக்ஷம் இரண்டினையும் தருபவள். இவள் தன் பக்தர்களுக்கு அறம், பொருள், இன்பம், வீடு அனைத்தையும் அருள்வாள்.

பரமேஸ்வரனுடன் ஒன்றாக இணைந்திருக்கும் சக்தி ஒன்றே. அவள் செயலாற்றும் பொழுது நான்கு திருமேனிகளை ஏற்று, போகத்தைத் தரும்பொழுது பவானியாய், ஆண் உருவம் தாங்கும் பொழுது விஷ்ணுவாய், கோபத்தில் காளியாய், போர் புரிகையில் துர்க்கையாய் உருவங்கள் கொள்கிறாள். இவளை வழிபட்டாலே அனைத்து தெய்வங்களின் வழிபாடும் அடங்கி விடுகின்றது. அம்பிகை நமக்கு அனைத்தையும் அருள்வாள்! எப்பொழுது? தனக்கு வேறு கதி எதுவும் இல்லை என இருக்கும் பொழுது! இறையையே தனக்குப் புகலிடமாகக் கொள்ளும் பொழுது! இறை தன்னைக் காக்கும் என்கிற அசையா நம்பிக்கை கொண்டிருக்கும் பொழுது! இறைபக்திக்கு ஏற்புடையனவற்றை மட்டும் செய்யும் பொழுது!

அம்பிகையை இடைவிடாது நினைத்தால் ஒரு பொழுதும் அவள் நம்மை கைவிட மாட்டாள்.

கண்ணாரக் கண்டும் என் கையாரக் கூப்பியும்
எண்ணார எண்ணத்தால் எண்ணியும் - விண்ணோன்
எரியாடி ஈன்றென்றும் இன்புறுவன் கொல்லோ
பெரியானைக் காணப் பெறின்.

இடைவிடாது அம்பிகையை வழிபடுவதால் பிறவா வரம் கிடைக்கும். எப்பொழுதும் நம் மனம் மனதார நினைத்திடும் பொழுது அவளது திருமேனி அழகில் லயித்திடும். அவளை என்றென்றும் கண்ணார, கையார, எண்ணார வழிபடுவதால் முக்தி கிடைப்பதில் ஐயம் ஏதுமில்லை.

இடையாளை எங்கள் பெம்மான் இடையாளை இங்கு என்னையினிப்
படையாளை உங்களையும் படையா வண்ணம் பார்த்திருமே

ஆம். பட்டர் அருள்கிறார். அம்பிகை இனி என்னை மீண்டும் இவ்வுலகில் பிறப்பிக்க மாட்டாள். அது போல உங்களையும் பிறப்பிக்கா வண்ணம் அவளை தியானித்துக் கொண்டிருங்கள் என்கிறார். நாம் சாக்த வழியில் நின்று அம்பிகையை இடையறாது தியானித்து அருள் பெறுவோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3.அபிராமி அந்தாதியின் பெருமைகள்

அபிராமிபட்டரின் கவிதையாற்றல் அருளுணர்வோடு இரண்டறக் கலந்து நின்று கற்போரின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் அற்புதத்தைச் செய்யும் ஆற்றல் பெற்றது. அபிராமி பட்டர் அபிராமி அம்மைப் பதிகம் என்று பதினோரு பாடல்களும், அபிராமி அம்மை உமைப்பதிகம் என பதினோரு பாடல்களும் எழுதி இரண்டு பதிக வகை இலக்கியங்களையும் படைத்துள்ளார். அபிராமி அந்தாதியை, பதிகத்தைப் பாடியது யார் என்றால் அம்பிகையே சுப்பிரமண்யம் என்ற பட்டரை ஒரு கருவியாக வைத்துக் கொண்டு ஒவ்வொரு சொல்லாக வெளிக்கொணர்ந்ததே இந்த சுவை மிக்க அருள் மிகுந்த பாடல்கள்.

அந்தாதியையும், பதிகத்தையும் கேட்போருக்கும், படிப்போருக்கும், பக்தியோடும், இசையோடும் பூஜிப்போருக்கும் நிறைய ஆற்றலும் அருளும் தரும் நல்நூல். வேண்டும் போதெல்லாம் அன்னையை நம் மனக்கண்முன் கொண்டு வருவதற்கு உதவும் இப்பதிகப் பாடல்கள். பக்தியை ஊட்டி மனதைத் தெளிவடையச் செய்யும் ஆற்றல் படைத்தவை அவரின் பாடல்கள். உயிருக்கு உணர்விற்கு, உற்ற துணையாய் நம்முடன் கூடவே வருவது போன்றது. மனதிற்குத் தெம்பையும், தெளிவையும் தரவல்லது. அபிராமி பட்டரின் பாடல்கள் கல்வி, வித்தை, மனைவி, மக்கள், செல்வம், முக்தி, சித்தி, யோகம் என எதை வேண்டுமானாலும் பெறத் துணை புரிபவை. நோய், பிறவி, பாசம், பயம், கடன், பேதமை, தீமை இவற்றை ஒழித்து விருத்திகளைத் தரும் ஆற்றல் படைத்தவை. மொத்தத்தில் தமிழ் மொழிக்குக் கிடைத்த ஒரு இரத்தின மாலை.

ஈடு இணை இல்லாத அழகுடைய, மனதிற்கும் பெரு மகிழ்ச்சி தரும் அம்பிகைக்கு ஏன் இந்த நாமம் தெரியுமா? உலகத்து வாழ் அனைத்து ஜீவராசிகள் மீதும் அம்பிகை கொண்ட அபரிமிதமான கருணையே அவளுக்கு அபிராமி என்ற திருநாமத்தைத் தந்திருக்கிறது எனலாம். ஆதியந்தம் இல்லாத அம்பிகையை அந்தாதியிலே பாடினார் அபிராமி பட்டர்.

இஷ்ட தெய்வத்தை இதயத்தில் இருத்துவதும் துதியிலும், தியானத்திலும் அதனுடனேயே கலந்திருப்பதும் முடிவுறாத தொடர்ச்சி அல்லவா! அந்தத் தொடர்ச்சியின் ஆனந்தத்தைத் தருவது அபிராமி அந்தாதி. வாழ்வின் அற்புத கணங்கள் எவை தெரியுமா? இவ்வுலகில் பிறவி எடுத்த நமக்கு அற்புதமான அபிராமி பட்டர் அருளிய அபிராமி அந்தாதி என்னும் கவிதைக் கரங்களைப் பற்றி கரகரவென சுற்றும் உயிருக்கு ஏற்படும் அபிராமி அனுபவம் தன்னை மறக்கவும், தன் வினைகளை, பிறவித் தொடர்களைக் கடக்கவும் செய்கின்றது. இதுவே அற்புத கணங்கள். அவள் இருக்கின்றாள் என்னும் பாதுகாப்புணர்வில் நம்மில் பெருகி நிற்கின்ற நிம்மதி என்ன அழகோ அந்த அழகே அபிராமி அம்பிகை. இந்த பாதுகாப்பு உணர்வை வர்ணிக்க இயலுமோ! முடியாது! முடியவே முடியாது! உணர்ந்தால் அல்லவோ அதன் நிம்மதியை அனுபவிக்க முடியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தன்னில் அவளை ஒளியாக உணர்ந்து அவளின் அருளமுதத்தில் முற்றாய் நனைந்து அந்த மௌனத்திலேயே அமிழ்ந்து சரியான தருணம் தாழ்திறக்க தனக்குள் தளும்பி வழியும் அந்த அநுபவம் தன்னையும் தாண்டி உடைப்பெடுப்பதையும், பெருக்கெடுப்பதையும் அபிராமி பட்டர் மௌன சாட்சியாகப் பார்த்துக் கொண்டிருக்க உருவான பனுவல்களே அபிராமி அந்தாதி.

அந்தாதியில் அவர் அம்பிகையை மாணிக்கம் என குறிப்பிடுகின்றார். தூய உணர்வுகள் இருந்தால் மட்டுமே இறைவன் அல்லது இறைவி என்ற மாணிக்கத்தை மதிக்க முடியும். ஜகமாயையில் உள்ள நம்மை க்திக்கு அழைத்துச் செல்கின்றாள் அபிராமி அம்மை. சூரியன், சந்திரன், அக்கினி ஆகியவை மூன்றும் அபிராமியின் மூன்று கண்களாகத் திகழ்கின்றன. அபிராமியின் மூன்றாவது கண் ஞானாக்கினியாக இருந்து பக்தர்களின் அக்ஞானத்தைச் சுட்டெரித்து விடுகிறது. தமிழில் தேவி பரமான நூல்களில் முதல் முக்கியத்துவம் அபிராமியந்தாதிக்குதான் உண்டு. தமிழில் 96 வகையான சிற்றிலக்கியங்களில் ஒன்றானதே அந்தாதி.

சொல் அழகு, பொருள் செறிவு, இனிமை, எளிமை, கனிவு ததும்பும் கவிதைச் சுவையுடன், அன்னையின் தெய்வீகம், அபிராமி பட்டரின் இறை அனுபவம் இணைந்து அற்புதப் படைப்பாக விளங்குவது அபிராமி அந்தாதி. அன்னையின் அருள் லீலைகளை உணர்த்தும் அபிராமி அந்தாதியை அநுபூதியாளர்களால் மட்டுமே உணர, எழுத முடியும். அந்தாதி என்பது ஒவ்வொரு பாடலிலும் இறுதியில் உள்ள எழுத்து அசை, சீர், அடி ஆகிய இவற்றுள் ஏதேனும் ஒன்று அதற்கு அடுத்த பாடலில் முதலாவதாக வரும்படி அமையும். அந்தாதி என்று சொன்னவுடன் அனைவரின் நினைவிற்கும் வருவது அபிராமி அந்தாதி தான். இதற்கு முன் பாடப்பட்டது காரைக்கால் அம்மையாரால் பாடப்பெற்ற அற்புத திருவந்தாதி.

அம்பிகையின் திருவடியையும், சிலம்பையும், சின்னஞ்சிறு இடையையும் அதில் அணிந்திருக்கும் கோவையையும், உத்தியையும், தனபாரங்களையும் பட்டர் வர்ணிக்கின்றார். மேலும் அவள் அணிந்திருக்கும் சண்பக மாலையையும், கடம்ப மலர்களையும், முத்துமாலைகள் பற்றியும், அவளது திருக்கரங்கள் நான்கினையும், சிந்தூரத் திலகம் ஒளிவிடும் வதனத்தையும், பவளக்கொடி இதழையும், புன்னகையையும், திருச்செவியையும், அதில் திகழும் வைரக்குழையையும், இயற்கை மணம் கமழும் குழலையும் பட்டர் தனது பாடல்களில் அம்பிகையை வர்ணனை செய்வது அம்மை நம் முன்னே அழியாத சித்திரமாக விளங்குவதை உணர முடியும். மெய்சிலிர்க்கும் அநுபவம்! சிந்தித்துப் பார்த்தால் நம் அனைவரையும் சிலிர்க்க வைக்கும்!

அபிராமி அந்தாதியின் பாடல்களுக்கு ஏன் இவ்வளவு பெருமை? அப்பாடல்கள் அபிராமி அம்பிகை பட்டரின் உள்ளத்தில் ஒளிவீசிக் கொண்டிருந்தபோது பாடப்பட்ட பாடல்கள். அதுமட்டுமல்ல. அப்பாடல்கள் நெருப்பின் மீதிருந்து பாடப்பட்ட பாடல்கள் என்பதை உணர்ந்து கொண்டால் அதன் பெருமை புரியும்.

அபிராமி அந்தாதியின் பெருமையே அபிராமி பட்டர் அம்பாளை சுமார் 250 திருநாமாக்களை ஆரமாக அணிவித்து அழகு பார்த்ததிலிருந்தே புரியும். (தமிழின் உயிர்மெய் எழுத்துக்கள் அனைத்திலிருந்தும் அம்பிகையின் திருநாமங்கள் அமைந்துள்ளது) இத்திருநாமங்கள் அமைந்த அந்தாதியைப் பாடிப் பணிவோர் வாழ்வில் இடர் வருமோ!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. திருக்கடையூர் சிறப்பு

திருக்கடையூர் என்று இன்று வழங்கும் திருக்கடவூர் கி.பி. 1033ல் ஜெயங்கொண்ட சோழ வளநாட்டு ஆக்கூர் நாட்டுக் கடவூர் என்றும், கி.பி. 1043ல் உய்யக் கொண்டான் வளநாட்டு அம்பர் நாட்டுக் கடவூர் என்றும், கி.பி. 1070ல் இராச நாராயண வளநாட்டு அம்பர் நாட்டுத் திருக்கடவூர் என்றும், கி.பி. 1086ல் செயங்கொண்ட வளநாட்டு ஆக்கூர் நாட்டுப் பிரிவான அம்பர் நாட்டுத் திருக்கடவூர் என்றும், இன்று மயிலாடுதுறைக்கும், பொறையாருக்கும் இடையில் இந்தத் திருத்தலம் அமைந்து திருக்கடவூர் என்று அழைக்கப்படுகின்றது. வளநாடும், நாடும் மாறி மாறி வந்தாலும் மக்கள் மன வளத்தையும், வழிபாட்டு வளத்தையும் மாறாமல் காத்து வரும் பெருமை இவ்வூருக்கு உண்டு. வேதகாலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது இத்திருக்கோயில். நால்வரால் பாடல் பெற்ற தலம். மிருகண்டு முனிவரின் மகனாம் மார்க்கண்டேயருக்காக சிவபெருமான் கூற்றுவனையே உதைத்து புதிய வரலாறு படைத்தது இந்த ஊர்.

சிவபெருமானின் அட்டவீரட்டத்தலங்களுள் ஒன்று. காலனை வென்ற காலகாலனின் திருத்தலம். இறைவன் காலனை வென்றவர். அம்பிகை காலத்தையும் வென்றவள். இத்திருத்தலத்து இறைவன், இறைவியை வழிபடுவோர் காலனையும், காலத்தையும் ஒருங்கே வென்று நீண்ட ஆயுளையும், அனுகூலமான காரியங்களையும் அடையப் பெறுவர் என்பது உறுதி. கள்ள வாரணப் பிள்ளையாரும், ஸ்ரீஅமிர்த கடேசரும், அன்னை அபிராமி அம்பிகையும், வள்ளி, தேவசேனாவுடன் கூடிய சிங்காரவேலரும் தன்னை நாடி வரும் பக்தர்களை அருள் கூர்ந்து காக்கின்றனர்.

திருத்தொண்டர் புராணத்துள் வரும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் குங்குலிக்கலயரும், காரிநாயனாரும், திருக்களிற்றுப்படியார் எனும் நூலைப்பாடி உய்ய வந்த தேவ நாயனாரும் தோன்றித் தொண்டாற்றிய ஸ்தலம் இதுவே. அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர் மற்றும் மார்க்கண்டேயர் அவர்களின் பாடல் பெற்ற திருத்தலமாகும்.

எல்லாவற்றிற்கும் மேல் ஞானசம்பந்தப் பெருமான் காலத்திற்குப்பின் அடியார் ஒருவரின் அவலம் தீர்க்க அகில லோக அம்பிகையாம் அபிராமி தன் தாடங்கம் ஆகிய காதணியைக் கழட்டி வானிலே எறிந்து அமாவாசை நாளை முழுநிலா நாளாக மாற்றிக் காட்டிய பெருமை இத்தலத்திற்கே உரியது. தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னன் திருக்கடவூர் அபிராமியின் பக்தன். அவர் காலத்தில் தோன்றியவரே அபிராமி பட்டர்.

சிலப்பதிகாரத்தின் நாயகியாக கண்ணகி விளங்கினாலும், அந்த சரித்திரம் தோன்றக் காரணமாக இருந்தவள் மாதவிதான். பூம்புகாரில் கோவலன் வாழ்ந்தான் என வரலாறு சொல்கிறது. அவனுடைய இரண்டாவது மனைவியாக வாழ்ந்தவள் மாதவி என்னும் ஆடலழகி. மாதவியின் வீடு திருக்கடையூரில் தேரோடும் வீதியில் உள்ள இவ்வீடு தற்போது பாழடைந்த நிலையில் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குங்கிலியக்கலய நாயனார்:-

திருக்கடையூர் திருத்தலத்தில் கலயனார் என்ற பெரியார் ஒருவர் இருந்தார். நல்ல வசதிபடைத்த அவர் சிவனடிபேணும் சிறந்த அன்புடையவர். நல்லொழுக்கத்திற் சிறந்தவர். அத்தலத்தில் காலனிடமிருந்து மார்கண்டேயரைக் காத்த அமிர்தகடேசருக்கு, தினம் குங்கிலியதூபம் இடும் திருப்பணியை பக்தியுடன் செய்து வந்தார். ஆதலால் அவரைக் குங்கிலயக்கலயர் என்று அழைத்தனர். இந்நிலையில் வேறு ஒன்றும் செய்யாமல் குங்குலிய தூபம் இடுவதையே செய்து வந்ததால் அவரை வறுமை பற்றியது. அதன் பின்னரும் அத்திருப்பணியை வழுவாது செய்து வந்தார். வறுமை மிகவே தமது நல்லநிலம், ஆபரணங்கள் முழுவதையும், விற்றும் அத் திருப்பணியை விடாமல் செய்து வந்தார்.

வறுமை மேலும் இறுக, மனைவி, மக்களும் சுற்றம் பொருள் ஒன்றும் இன்றி உணவின்றி வருந்தினார்கள். இதுகண்ட அவரது மனைவியார் தன் திருமாங்கல்யத்தைக் கொடுத்து அதை விற்று உணவுக்குப் பொருள் வாங்கிவரச் சொன்னாள்.

அவ்வாறு செல்கையில் எதிரில் ஒரு வணிகன் ஒப்பில்லாத குங்கிலயப் பொதிகொண்டு வந்தான். அதனை அறிந்த கலயனார் 'இறைவனுக்கேற்ற மணமுடைய குங்கிலியம் இதுவாயின் இன்று நல்ல பேறுபெற்றேன். பெறுதற்கரிய இப்பேறு கிட்ட வேறு கொள்ளத்தக்கது என்ன உள்ளது? என்று துணிந்து பொன் பெற்றுக்கொண்டு குங்கிலியப் பொதியினைத் தருமாறு வணிகனைக் கேட்டார். அவனும் மகிழ்ந்து அவர் தந்த தாலியைப் ஏற்றுக்கொண்டு குங்கிலியப் பொதியை கொடுத்துச் சென்றான்.

கலயனார் சிந்தை மகிழ்வுடன் திருக் கோயில் சென்று தன் தூபத் திருப்பணி செய்துகொண்டு சிவசிந்தையுடன் அங்கேயே தங்கினார். அன்று இரவு மனைவியாரும், மக்களும் பசியால் மிகவருந்தி அயர்ந்து தூங்கினர்.

அப்போது ஈசனின் திருவருளினாலே கலயனாரது மனை முழுவதும் பொற்குவியலும் நெற்குவியலும் அரிசி முதலிய பிற எல்லா வளங்களுமாக ஆகியது.

மறுநாள் காலையில் இதைக் கண்ட அவர் மனைவியார் பெரு மகிழ்வு கொண்டு இறைவனைத் துதித்து, நல்லது சமைக்கத் தொடங்கினார்.

திருக்கோயிலில் இருந்த கலயனாரின் கனவில் வந்த இறைவன் பசியாய் இருக்கும் நீ இல்லம் சென்று உணவு கொள்க என்று அறிவுறுத்த, அவரும் இல்லம் சென்றார்.

தன் மனை முழுவதும் செல்வம் பொங்கக் கண்டார். இறைவனின் திருவருளை எண்ணி வியந்து அவரைப் போற்றி, மேலும் தன் திருத்தொண்டினைத் தொடர்ந்து செய்து வரலாயினார்.

அச்சமயம் திருப்பனந்தாளில் வீற்றிருக்கும் சிவலிங்கத் திருமேனி, தாடகை என்ற அரச மாதுக்கு அருளும் பொருட்டு சாய்ந்தது சாய்ந்தவாறே இருந்தது. அதனை நிமிர்த்தி பழைய சிவலிங்கம் போல் செய்ய வேண்டுமென எண்ணிய சோழமன்னன், யானைகளையும், சேனைகளையும் பூட்டித் திருமேனியினை நிமிர செய்ய யன்றான். லிங்கத் திருமேனி நிமிரவில்லை. யானைகளும் இளைத்து வீழ்ந்தன. அரசன் மிகவும் கவலையோடிருந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதனைக் கேள்வியுற்ற கலநாயனார், லிங்கத் திருமேனியைத் தன்னால் நிமிர்த்த முடியும் என்று நினைந்து திருப்பனந்தாள் சென்று மன்னனின் அனுமதியுடன் லிங்கத் திருமேனியை நிமிர்த்தும் பணியில் ஈடுப்ட்டார்.

கோயிலை அடைந்தார். குங்கிலியத் திருப்பணி செய்தார். அதன்பின் அவர் வளைந்திருந்த லிங்கத்திடம் சென்றார். இறைவனை மனதாரத் தொழுதார். 'அன்பே சிவம் என்பது உண்மையானால் என் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டும்' என்று பிரார்த்தித்தார்.

நாரினால் கெட்டியாகக் கட்டப்பட்ட ஒரு மாலையை சிவனுக்கு அணிவித்து அதன் மற்றொரு பகுதியைத் தன் கழுத்தில் சுருக்குப் போல் போட்டுக் கொண்டு லிங்கத்தை நிமிர்த்த முயன்றார்.

பரமசிவனுக்குச் சங்கடத்தைக் கொடுத்து விட்டார் சிவனடியார். அரசனின் அதிகாரத்துக்கு நிமிராத சிவன், அடியவருக்கு நிமிராவிட்டால் குங்கிலியக்கலய நாயனாரின் கழுத்து இறுகி, உயிர் துறக்க நேரிடும். சிவன் அடியவருடைய அன்புக்கு அடிபணிந்தார். தன் அடியவருக்காக - அவர் அன்புக்காக - தன்னை நிமிர்த்திக் கொண்டார். கூடியிருந்த மக்கள் மகிழ்ச்சியில் ஆரவாரித்துப் பேருவகைக் கொண்டனர்.

சோழ மன்னன் கலயனாரது திருப்பாதங்களில் வீழ்ந்து வணங்கி அவரைப் பெருமைப் படுத்தி தன் நகர் ஏகினான். கலயனாரும் சிலநாள் அத்திருத்தலத்திலேயே தங்கி இறைவனை பிரிய ஆற்றாது அங்கு தங்கி வழிபட்டுப் பின் திருக்கடவூர் சேர்ந்தார்.

திருக்கடவூரில் குங்குலியத் தூபத்திருப்பணிசெய்து வரும்போது ஒருநாள் ஆளுடைய பிள்ளையாரும், ஆளுடைய அரசுகளும் அத்திருத்தலத்திற்கு எழுந்தருளினார்கள். மிக்கமகிழ்ச்சி பொங்கக் கலயனார் அவர்களை எதிர்கொண்டு அழைத்துவந்து, தமது திருமனையில் அவர்களது பெருமைக்கேற்றவாறு இன்னமுது அளித்து வழிபட்டார். அதனால் அவர்களது அருளே அன்றி இறைவரது அருளும் பெற்றார். இவ்வாறு கலயனார் அரசனுக்கும், அடியவர்களுக்கும் ஏற்றனவாய்த் தமக்கு நேர்ந்த பணிகள் பலவும் செய்து வாழ்ந்திருந்து சிவபெருமானது திருவடிகளைச் சேர்ந்தார்.

<u>காரி நாயனார்:-</u>

காரி நாயனார் தமிழில் தேர்ச்சி பெற்று, கவி புனைவதிலும் வல்லவராய் விளங்கியவர். 'காரிக் கோவை' எனும் பெயரில் சொல் விளங்கி பொருள் மறையுமாறு பாடல்கள் பலவற்றினைப் புனைவார். மூவேந்தரின் அரசவையில் அனைவரும் வியந்து போற்றுமாறு அப்பாடல்களின் பொருளினை அழகுற எடுத்து இயம்புவார்.

நாயனாரின் அற்புத புலமைக்கு வேந்தர்களிடம் இருந்தும், பெரிய தனவந்தர்களிடமிருந்தும் எண்ணற்ற பரிசுப் பொருட்களும் செல்வங்களும் வந்து குவிந்தன. அப்பொருள் அனைத்தையும் கொண்டு ஆலயங்கள் பல கட்டினார்; திருக்கோயில்களைச் செப்பனிட்டார்; திருக்குளங்கள் அமைத்தார்; கங்கை சூடும் பரம்பொருளின் அடியவர்க்கு அளவிலாத நிதியினை அளித்து அகமிக மகிழ்ந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எந்நேரம் கயிலை நாதனின் திருவடிகளில் உள்ளம் பொருந்தி இருப்பார். இங்ஙனம் இருந்து வரும் காலம், உமை மணாளனின் திருவருளும் கூடி வர, இப்புவியில் எடுத்த உடம்புடனயே திருக்கயிலை அடைந்து பிறவாப் பேரின்பம் பெற்று இன்புற்றார்.

<u>திருக்கடவூர் உய்யவந்த தேவர் :-</u>

திருக்கடவூர் உய்யவந்த தேவர் இயற்பெயர் அறியப்படவில்லை. இவர் ஆட்டு வணிகக் குலத்தில் தோன்றியவர் எனக் கூறப்படுகிறது. இவருடைய குருவால் உபதேசம் செய்யப்பட்டு ' உய்யவந்த தேவனார் ' எனப் பாராட்டப் பட்டார். இதனுடன் இவர் பிறந்த இடமான ' திருக்கடவூர் ' எனும் பெயரும் சேர்ந்து ' திருக்கடவூர் உய்யவந்த தேவர் ' எனப் பின் அழைக்கப்பட்டார்.

சைவ சமயச்சார்பான நூல்கள், சாஸ்திரம், ஸ்தோத்திரம் என இருவகைப்படும். அவற்றுள் சாஸ்த்திர நூல்களை 14 ஆக வகுத்து அவற்றை ' மெய்கண்ட சாத்திரம் ' எனப் பெயரிட்டு ஆன்றோர்கள் வழங்கி வருகின்றனர். அவற்றை அருளிச் செய்தவர்கள் அறுவராவர். இச்சாத்திர நூல்கள் சிவபரம்பொருளை வழிபடும் சமயத்திற்கு அதன் உண்மைகளை விளக்கும் பொருட்டாக அமைந்துள்ளன. சிவபெருமான் வேதத்தின் உட்பொருளையெல்லாம் திருநந்தி தேவருக்கு உபதேசித்தருளினார். நந்திதேவர் அதை சனக்குமாரர், திருமூலர் ஞானிகளுக்கெல்லாம் குருவாக இருந்து உபதேசித்தார். அவ்வாறு உபதேசம் பெற்றவர்கள் குரு பரம்பரையாகவும் திருக்கைலாய பரம்பரைச் சந்தானசாரியர்களாகவும் போற்றப்படுகின்றனர்.

உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் - வந்த அருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு

<u>உண்மை நெறி சங்கற்ப முற்று......</u>

எனும் பழைய வெண்பா ஒன்று மேற்கூறிய 14 நூல்களையும் புலப்படுத்தும். இவற்றுள் திருக்கடவூர் உய்யவந்த தேவரால் அருளிச் செய்யப்பெற்றது திருக்களிற்றுப்படியார் என்பதாகும்.

இவர் திருவியலூர் உய்யவந்த தேவனாரின் மாணவராவார். இவர் அருளிச் செய்த திருக்களிற்றுப்படியார், சிவபரம்பொருளின் அருள் தன்மைகளையும், அளப்பரும் பேராற்றலையும் விளங்கவைக்கும் சீரிய நூலாகும். இந்நூல் நூறு வெண்பாக்களால் ஆனது. சிவஞானபோதத்திற்கு முன்தோன்றியது.

திருக்களிற்றுப்படியார் எனும் இந்நூலின் பெயர் காரணப்பெயராகும். இந்நூலாசிரியர் தாழ்ந்த குலத்தைச் சார்ந்தவர் என்பதால் இவருடைய நூலும் கொள்ளற்பாலதன்று என்று சிலர் தடுக்க, எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு எனும் உண்மையை உணர்ந்த பெரியோர் சிலர், இந்நூலை தில்லை நடராஜப்பெருமான் திருவடியின் கீழ் உள்ள பஞ்சாக்கரப் படியினில் வைத்தனர். பஞ்சாக்கரப் படியின் இரு புறம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கல்யானை நிற்பதால், இப்படியினை திருக்களிற்றுப்படி என்பர். சான்றோர்கள் இந்நூலை திருக்களிற்றுப்படியின் வைத்ததும் அப்படியினில் இருந்த கல்யானைகளில் ஒன்று இந்நூலைத் தன் துதிக்கையால் எடுத்து பெருமானின் திருவடியின் கீழ் வைக்க, இந்நூலின் பெருமையுணர்ந்து அனைவரும் போற்றினர். இச்சம்பவத்தின் காரணமாகவே இந்நூல் திருக்களிற்றுப்படியார் எனப் பெயர் பெற்றது.

இந்நூல் திருவந்தியாருக்கு வழிநூலாக அமைந்த சிறப்பினைப் பெற்றது. திருவந்தியாரைப் போலவே இந்நூலும் முன்னும் பின்னும் அடைமொழி கொடுத்துச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. திருவந்தியாரில் அரிதாகவும் நுட்பமாகவும் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் வழி நூலான இந்நூலில் தெளிவாகவும், தக்க மேற்கோள்களுடனும் விளக்கப்பட்டுள்ளது. முன்னோர் மொழிப்பொருளை பொன்னேபோல் போற்றிச்சொல்லும் சிறப்புடையது. திருவுந்தியார் 1070 லும், திருக்களிற்றுப்படியார் 1100 லும் தோன்றின என்பது மரபாகக் கூறிவருவதாகும். எனவே இந்நூலின் காலம் 1100 என்பதற்கேற்ப கி. பி. 1178 ல் தோன்றியது எனலாம்.

<u>**மேலும் இத் தலத்தின் சிறப்புகளில் சில;**</u>

- ★ திருமால் முதலிய தேவர்கள் அமுதத்தைத் தூயதோர் இடத்தில் உண்ண வேண்டுமென்று அந்தக் கடத்தை இங்கு கொண்டுவந்து வைத்தமையால், 'கடபுரி 'அல்லது 'கடவூர் ' என்றாயிற்று. எம வாதனையைக் கடப்பதற்கு உதவும் ஊர் என்பதாலும் இப்பெயர் பெற்றது.
- ★ அட்ட வீரட்டத் தலங்களுள் இதுவும் ஒன்று. மார்க்கண்டேயருக்காக இறைவன் எமனை உதைத் தருளிய தலம்.
- ★ பிரமனுக்கு உபதேசம் செய்த இடம்.
- ★ மார்க்கண்டேயர் கங்கை நீருடன் பிஞ்சிலப் புஷ்பங்களையும் கொண்டு வந்து அர்ச்சித்ததாக வரலாறு. இதனால் இத்தலத்திற்கு 'பிஞ்சிலாரண்யம்' என்றும் பெயர். (தற்போது தலமரம் இதுவே. ஆதியில் தலவிருட்சம் வில்வம் என்பர்.)
- ★ திருக்கடவூர் வீரட்டம், கடபுரி, வில்வாரண்யம், பிரமரந்திரத்தலம், பாபவிமோசன புண்ணிய வர்த்தம் என்பன இத்தலத்தின் வேறு பெயர்கள்.
- ★ அப்பரும், சம்பந்தரும் ஒருசேர எழுந்தருளி, இறைவனைத் தொழுது, குங்குலிய கலய நாயனாரின் திருமடத்தில் தங்கியிருந்த பெருமை பெற்றப் பதி.
- ★ உள்ளருகப் பாராயாணம் செய்யப்படும் அபிராமி அந்தாதி (அபிராமி பட்டர் வாழ்ந்து - அம்பிகையின் அருளால்) பாடப்பட்ட அற்புதத் துதி.
- ★ அன்னை அபிராமியின் அருள் தலம்; யம பயம் போக்கவல்ல பதி.
- ★ இங்குள்ள காலசம்ஹாரமூர்த்தி - காலனை சம்ஹரித்த மூர்த்தி - மிகப்பெரிய மூர்த்தி - கம்பீரமான தோற்றம் - திருமேனியில் எமன் வீசிய பாசத்தின் தழும்பு உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

★ மார்க்கண்டேயர் இறையருள் பெற வழிபட்ட 108 தலங்களுள் இது 108-வது தலமாகும். (107-வது திருக்கடவூர் மயானம்)

★ சுவாமிக்கு நாடொறும் அபிஷேகத்திற்குரிய நீர் திருக்கடவூர் மயானத் தலத்தின் தல தீர்த்தமான காசி தீர்த்தத்திலிருந்து வண்டியில் கொண்டு வரப்படுகின்றன. மார்க்கண்டேயருக்காக, பங்குனி மாதம், அசுவினி நட்சத்திரத்தில் கங்கையானது, இத்தீர்த்தமாக வந்ததாக வரலாறு. ஆதலின் இத்தீர்த்தம் 'அசுவினி தீர்த்தம் ' எனவும் வழங்கப்படுகின்றன.

★ மிருகண்டு முனிவர் வாழ்ந்த தலம் அருகிலுள்ள மணல்மேடு ஆகும்.

★ பூமிதேவி அனுக்ரஹம் பெற்ற தலம்.

★ ம்ருத்யுஞ்சஹோமம், உக்ரக சாந்தி, பீமரதசாந்தி, சஷ்டியப்த பூர்த்தி(மணிவிழா), சதாபிஷேகம், ஆயுள்ஹோமம் முதலியவை செய்வதற்குரிய சிறப்புடைய தலம் இதுவாகும். (இச்சாந்திகள் வேறு தலத்தில் செய்ய நேர்ந்தாலும் இம்மூர்த்தியை நினைத்துத்தான் செய்கின்றனர்.

★ ஏழுநிலைகளுடன் கம்பீரமாக நிற்கும் ராஜகோபுரதில் உள்ள அரிய சிற்பங்களுள் பாற்கடலைக் கடைந்தது, கஜசம்ஹாரமூர்த்தி, சிவபாத இருதயரின் தோளில் சம்பந்தர், பந்தரின் சிவிகையை அப்பர் தாங்குவது முதலியன கண்டு மகிழத்தக்கன.

★ இங்கு தர்மராஜா (எமன்), உற்சவத் திருமேனி - சந்நிதி உள்ளது.

★ பூமிதேவி பிரார்த்திக்க, மகாவிஷ்ணுவும் பிரம்மாவும் வேண்ட இறைவன், எமனை (தர்மராஜா) எழுப்பித் தந்தருளினாராதலின், அநுக்ரஹம் பெற்ற (எழுப்பப்பெற்ற) தர்மராஜா - எமனின் திருவுருவம் இம்மூர்த்திக்கு (மரகதலிங்கத்திற்கு) நேர் எதிரில் உள்ளதைக் காணலாம்.

★ கன்றிய காலனைக் காலாற்கடிந்த காலசம்ஹார மூர்த்திக்கு ஆண்டில் 11 விசேஷ காலங்களில் (சித்திரை விஷேச, பெருவிழாவில் 5, 6-ஆம் நாள்கள், பிராயசித்த அபிஷேகம், தக்ஷபிணாயனபுண்ணிய காலம், ஆனி உத்திரம், புரட்டாசியில் கன்யாசதுர்த்தி, துலாவிஷு, ஆருத்ரா, உத்தராயண புண்ணிய காலம், மாசி மகம் கும்பசதுர்த்தி) அபிஷேகம் நடைபெறுகின்றன.

★ கார்த்திகை சோமவார 1008 சங்காபிஷேகம் சிறப்பாகக் கண்டு தரிசிக்கத் தக்கது.

★ இக்கோயிலில் சோழர், பாண்டியர், விஜய நகர மன்னர்களின் கல்வெட்டுக்கள் உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. அன்னை அபிராமியின் ஆவிர்பாவம்

அசுரர்களும், தேவர்களும் பிரஜாபதியின் குழந்தைகள். அவர்கள் இருவரும் சகோதரர்கள். அசுரர்கள் தேவர்களுக்கு மூத்தவர்கள். எண்ணிக்கையில் அசுரர்கள் தேவர்களை விட அதிகமானவர்கள். பலமிக்கவர்கள். அதனால் தேவர்களைத் தோற்கடித்து மூவுலகையும் ஆளத் தலைப்பட்டனர். இதனால் அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் அடிக்கடி யுத்தம் மூண்டது. தேவர்களின் குருவாக பிருகஸ்பதி விளங்கினார். அசுரர்களின் குருவாக சுக்ராச்சார்யார் விளங்கினார். தேவர்கள் தங்கள் குருவை மதிக்காததால் தோற்ற சம்பவங்கள் பல உண்டு. ஆனால் அசுரர்கள் தங்கள் குருவின் வார்த்தையை பெரும்பாலும் வேத வாக்காக ஏற்றனர்.

அசுர குருவான சுக்கிராச்சார்யார் சஞ்சீவினி மந்திரத்தை கற்றவர். அதனால் தேவ அசுர யுத்தத்தின் போது இறந்துபட்ட அசுரர்களை சஞ்சீவினி மந்திரத்தின் மூலம் உயிர்பித்தார். ஆனால் தேவ குருவுக்கு அது தெரியாததால் தேவர்கள் மிகுந்த பாதிப்புக்கு ஆளானார்கள்.

<u>தேவேந்திரன் அகந்தையின் விபரீதம்</u>

தேவர்கள் தாங்கள் இறவா நிலை எய்த தங்கள் குருவின் ஆலோசனையின்படி பிரும்மாவைச் சரணடைந்தனர். அவர் மஹாவிஷ்ணுவே இதற்குத் தகுந்த ஆலோசனை சொல்வார் என்று கூறி அவரும் தேவர்களுடன் மஹாவிஷ்ணுவைக் காணப் புறப்பட்டார்.

தன்னை வணங்கி நின்ற தேவர்களிடம், ''தேவர்களே உங்கள் பிரச்னையைத் தீர்க்க பாற்கடலைக் கடைந்து அமிர்தத்தை கொண்டு வருவதுதான் ஒரே வழி. அமிர்தத்தை உண்டு அமரத்துவம் அடையுங்கள். அதனை நீங்கள் மட்டும் தனியாகச் செய்ய முடியாது. அதற்குரிய ஆற்றல் உங்களிடம் இல்லை. அசுரர்களையும் சேர்த்துக் கொண்டுதான் இச்செயலில் ஈடுபட முடியும். அதனால் தற்போது அவர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டு காத்திருங்கள். அதற்குரிய நேரம் வரும்போது, பாற்கடலைக் கடையத் துவங்கலாம்'', என்று கூறினார்.

தேவர்களும் வேறுவழியின்றி அசுரர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டு அவர்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்து கொண்டு, அதே சமயத்தில் இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு தகுந்த நேரத்திற்காகக் காத்திருந்தனர்.

ஒரு சமயம் ஒரு கந்தர்வ பெண் வைகுந்தம் சென்று அங்கு வாசம் செய்யும் திருமகளை தன் யாழிசையால் மகிழ்வித்தாள். மிகுந்த சந்தோஷமடைந்த திருமகள், தான் சூடியிருந்த மணம் பொருந்திய, என்றும் வாடாத, பாரிஜாத மலர் மாலையை கந்தர்வ பெண்ணுக்கு அளித்தாள்.

மிகுந்த மன நிறைவுடன் அப்பூமாலையை தன் யாழ் மீது சாற்றி அலங்கரித்து கானகம் வழியாக வந்து கொண்டிருந்தாள். அரிய அந்த மாலையால் அந்த கானகமே மணம் கமழ்ந்தது. அவ்வாறு வந்து கொண்டிருக்கும் போது, முனிவர்களில் சிறந்தவராக விளங்கி வரும் துர்வாச

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முனிவரைக் கண்டதும், வணங்கினாள். முனிவரும் அவளை ஆசீர்வதிக்க, மனம் மகிழ்ந்த பெண், தன்னிடமிருந்த, திருமகள் தனக்களித்த, அருள் நிறைந்த மலர் மாலையை துர்வாச முனிவரிடம் அளித்தாள்.

மலர் மாலையைப் பெற்ற முனிவர், திருமகளை நேராகவே தரிசித்தாற்போல் இறும்பூதெய்தினார். பின்னர் வரும் வழியில் தேவர் தலைவனான இந்திரன், தன் பட்டத்து யானையான ஐராவதத்தின் மீது ஏறி மகிழ்ச்சியுடன் வந்து கொண்டிருப்பதைக் கண்டார்.

மகாலக்ஷ்மியின் அருள் நிறைந்த, பெருமைமிக்க மலர்மாலை தன்னிடம் இருப்பதை விட தேவர் தலைவனான இந்திரனிடம் இருந்தால் தேவர்கள் அனைவரும் பயன் பெறுவர் என்று கருதினார்.

உடனே விரைந்து சென்று தன்னிடம் உள்ள மலர் மாலையை அவனிடம் அளித்து ஆசீர்வதித்தார். ஆனால் இந்திரனோ அதன் பெருமையைச் சற்றும் உணராமல் செருக்கு மிகக் கொண்டு மலர் மாலையை வாங்கி, ஐராவதத்தின் தலை மீது எறிந்தான். கைலாஸத்தில் கங்கை போல அந்த மாலை ஐராவதத்தின் மேல் விளங்கியது. மலர் மாலையில் இருந்த வண்டுகள், யானையின் மதகத்தை கடிக்க, யானையோ தன் மீதிருந்த மலர் மாலையை தும்பிக்கையால் எடுத்து கீழே போட்டு மிதித்து துவைத்தது.

தேவர்களின் நலனுக்காக தேவராஜனுக்களித்த அம்பிகையின் மலர் மாலைக்கு ஏற்பட்ட இழிவைத் தன் கண்ணெதிரே கண்ட துர்வாசருக்கு கடும் கோபம் வந்தது. பெரும் கோபம் கொண்ட மஹரிஷி, 'இந்திரா! நீ மிகுந்த செல்வச்செருக்கிலிருக்கிறாய். மஹாலக்ஷ்மி வாஸம் செய்யும், கிடைத்தற்கரிய இந்த மாலை தேவர் தலைவனான உன்னிடமிருந்தால் தேவர்கள் அனைவரும் பயனடைவர் என்று கருதி உனக்கு நான் கொடுத்தேன். மிகுந்த ஸந்தோஷத்துடன் ஸாஷ்டாங்க நமஸ்கரித்து உன் சிரஸில் தரித்துக்கொள்ள வேண்டிய இந்த மாலையை நீ உன் செல்வச்செருக்கால் மதிக்கவில்லை. அதனால் உன் செல்வம் முழுவதும் அழியட்டும். மூவுலகும் லக்ஷ்மீகடாக்ஷமின்றி அழியும் என்று சபித்துவிட்டார். மேலும் ''சகல ஐஸ்வர்யத்தோடு காமதேனுவும், கற்பக விருக்ஷம், ஐராதவதம் உன்னிடம் இருப்பதால் தானே உனக்கு கர்வம். இனி இவையும் உன்னை விட்டு விலகட்டும்,'' என்று சாபமிட்டார். அவனுடைய பட்டத்து யானையான ஐராவதத்தையும் காட்டுயானையாகும்படி சபித்தார்.

தேவராஜன் இதைக்கேட்டு பெரிதும் துயரம், பயம் கொண்டு நடுக்கத்துடன் கீழேயிறங்கி ரிஷியின் பாதங்களில் விழுந்து மன்னிக்க வேண்டினான். ஆனால் துர்வாஸர் அவனை மன்னித்தாரில்லை. தன்னிடம் இரக்கத்தை எதிர்ப்பார்க்காதே என்று கூறி சென்று விட்டார்.

முனிவரின் சாபம் இந்திரனைத் தாக்க அவன் தேஜஸ் மறைந்தது. காமதேனு, கற்பக விருக்ஷம் பாற்கடலில் மறைந்தன. திருமகளும் தேவருலகைவிட்டு நீங்கி பாற்கடலில் மறைந்தாள். யாகம், தவம், ஸத்கர்மங்களும், தானங்களும், தைர்யமும் அழிந்தன. பாற்கடலில் மறைந்த மகாலக்ஷ்மி, அங்கு பாதாளத்தில் வசிக்கும் நாகர் குல அரசனுக்கு மகளாகப் பிறந்தார். அவளைத் திசை யானைகள் எட்டும் சீராட்டி, பாராட்டி வளர்த்து வந்தன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாபம் பெற்ற இந்திரன், சோகமாக தன்னுலகம் திரும்பினான். திருமகளின் மறைவினால், தேவலோகமே கலையிழந்தது. தேவர்கள் பலமிழந்தனர். அதனால் அரக்கர்கள் தேவலோகத்தை எளிதில் கைப்பற்றியிருந்தனர். பெரும்பாலான தேவர்கள், அரக்கர்களுக்குச் சேவை புரிந்து வருந்துவதைக் கண்ட இந்திரன் மறைந்து மறைந்து சென்று தங்கள் குருவான பிருகஸ்பதியைச் சந்தித்து தன் நிலையைக் கூறி அழுதான்.

தேவேந்திரன் அழுவதைக் காணச் சகிக்காத தேவகுரு அவனிடம் ஆறுதல் கூறினார்.

''தேவேந்திரா, தோல்வியும் வெற்றியும், சுகம், துக்கம், இன்பம், துன்பம், செல்வம் வறுமையும் நிலையாக இருப்பதில்லை. சுத்த வீரன் எதற்கும் கலங்கமாட்டான். உன்னிடம் இருக்கும் கர்வத்தை ஒழி. அது உடன் பிறந்தே கொல்லும் வியாதி. உன்னை இப்பெருந்துன்பத்திலிருந்து காக்க ஸ்ரீ மகாவிஷ்ணுவால்தான் முடியும். நாம் முதலில் பிரம்ம தேவரைச் சந்தித்து விட்டு, ஸ்ரீ மகாவிஷ்ணுவிடம் செல்வோம்,'' என்று கூறினார்.

எல்லோரும் பிரம்ம லோகம் சென்று பிரம்மாவை தரிசித்தனர். பிரம்ம தேவன் இந்திரனிடம் 'தேவர் தலைவா! மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்திருந்த நீ, ஒரு கணம் மதியிழந்து கர்வமுடன் நடந்து கொண்டதால் உனக்கு ஏற்பட்ட நிலையைப் பார்! இத்துன்பம் உனக்கு தாற்காலிகமாக ஏற்பட்டதே! செல்வத்தின் அதிபதியான திருமகள் தேவலோகத்தை விட்டு நீங்கியதால் ஏற்பட்ட இத்துன்பத்தைப் போக்க வல்லவர் ஸ்ரீமந் நாராயணன்! திருமகளின் நாதனான அவரைச் சரணடைவதைத் தவிர நமக்கு வேறு எந்த வழியுமில்லை'', என்று கூறி, எல்லா தேவர்களையும் அழைத்துக் கொண்டு ஸ்ரீமந் நாராயணன் வசிக்கும் வைகுந்தத்திற்குச் சென்றனர்.

வைகுந்தத்தில் ஸ்ரீமந் நாராயணன் முன் கண்ணீர் விட்டபடி தங்கள் விதியை நொந்து கொண்டு தேவர்கள் கைகூப்பி பெருமானை இறைஞ்சினர். தேவேந்திரன் தனக்கேற்பட்ட நிலையை வைகுந்த வாசனுக்கு சொல்லி அழுதான். அதன் பலனாய் தேவர் உலகமே துன்பத்தில் ஆழ்ந்ததையும், அரக்கர்கள் வலிவுற்றதையும் கூறி அழுத தேவர்களிடம், ஸ்ரீமன் நாராயணன் ஆறுதலளிக்கும் வண்ணம் பேசினார்.

'தேவர்களே!' பயத்தை விட்டொழியுங்கள். திருமகளின் மறைவால் உங்களுக்கு ஏற்பட்ட இழப்பை அவளுடைய வரவுதான் ஈடு செய்யும். துர்வாச முனிவர் ஈசனின் அம்சமானவர். என்னுடைய சிறந்த பக்தர். நான் பக்தர்களின் அன்புக்குக் கட்டுப்பட்டவன். அதனால் நேரிடையாக என்னால் எதுவும் செய்ய முடியாது. துர்வாச முனிவரின் சாபத்தினால் இந்திரனும் தேவருலகமும் வலிவிழந்து விட்டது. அசுரர்கள் மிகுந்த பலம் பெற்று உங்கள் உலகை அபகரித்து விட்டனர். அவர்களை வெற்றி கொள்ள திருமகளின் அருள் தேவை. அதனால் அசுரர்களுடன் சமாதானம் செய்து கொண்டு பாற்கடலைக் கடையுங்கள். அவ்வாறு கடையும் போது சிறந்த மூலிகைகளை அதில் இட்டு, மந்தார மலையை அச்சாக வைத்து, வாசுகியை கயிறாகக் கொண்டு கடையுங்கள். அவ்வாறு கடையும் போது அமிர்தத்துடன் திருமகளும் தோன்றுவாள். அமிர்தத்தை அசுரர்களுக்கு கிடைக்காமல் இருக்க வழிசெய்கிறேன். திருமகள் மீண்டும் தோன்றியதும் உங்கள் குறைகள் நீங்கி, வெற்றிபெற்று, முன்போல் எல்லா நலன்களையும் பெற்றுச் சிறப்பாக வாழ்வீர்களாக!,'' என்று தேவர்களை ஆசீர்வதித்து மறைந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாற்கடல் கடைதல்;

ஸ்ரீமன் நாராயணின் வார்த்தைகளால் பெருமகிழ்வெய்திய தேவேந்திரன் தன் தேவர்களுடன் சென்று அசுரர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டு பாற்கடலை கடைந்தனர். அவ்வாறே தேவர்களும், அசுரர்களை அழைத்தனர். அசுரர்களும் சாகாத்தன்மை பெற்ற அந்த அற்புத அமிர்தம் தேவர்களின் கைக்குக் கிடைத்து விடக்கூடாது என்ற நோக்கத்துடன், அமிர்தம் கிடைத்தவுடன் தாங்களே அதைத் தட்டிச் சென்றுவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் ஒப்புக் கொண்டனர். மந்தார மலையைத் தூக்க தங்களால் முடியாததால், தேவர்கள், அஸுரர்களுடன் கூடியிருக்கும் மஹாபலியிடம் சென்று வஞ்சக வார்த்தைகளால் அவனை இசையவைக்க, அவனும் உடனே மந்திரமலையை எடுத்து வர தன் ஆட்களோடும், தேவர்களோடும் சென்று, அம்மலையைப் பெயர்தெடுத்து வந்தான். வழியில் அதன் பாரம் தாங்காமல் அதைக் கீழே விட்டுவிட அதனடியில் பலரும் சிக்கிக் கொண்டனர். மஹா விஷ்ணு உடனே கருட வாஹனத்தில் எழுந்தருளி தேவர்களை மட்டும் உயிர்ப்பித்தார். மந்திரமலையை அனைவரும் புடைசூழ கருடனைக் கொண்டே எடுத்துவந்து பாற்கடலில் வைத்தார். இதன்பின் வாஸுகியென்ற ஸர்ப்பராஜனையும் வார்த்தைகளால் ஏமாற்றிக் கயிராகக் கொண்டு பாற்கடலைக் கடைய ஆரம்பித்தனர்.

வாஸுகியின் மூச்சுக் காற்றின் விஷத்தைத் தேவர்கள் தாங்க மாட்டார்கள் என்றுணர்ந்த மஹாவிஷ்ணு, ஒரு தந்திரம் செய்தார். அஸுரர்களின் சித்தத்தையும், மூர்க்கத்தனத்தையும் உணர்ந்து, 'தலைப்பக்கத்தை தேவர்களும், வால்பக்கத்தை அஸுரர்களும் பிடித்துக் கடையட்டும்' எனக் கூற, உடனே அஸுரர்கள் தங்கள் செருக்கினால், 'நாங்களும் தேவர்களைவிட எல்லாவற்றிலும் உயர்ந்தவர்களே. எனவே நாங்களே தலைப்பக்கத்தைப் பிடிப்போம், மட்டமான வால்பகுதியைப் பிடிக்க மாட்டோம்' என கூக்குரலிட்டனர். தன் எண்ணம் பலித்ததை கண்ட மஹாவிஷ்ணு, தேவர்களை வால் பக்கத்தைப் பிடிக்க கண் ஜாடை செய்ய அவர்களும் மனமில்லாதது போல் நடித்து வாசுகியின் வாலைப் பற்றினர். அமிர்தம் கிடைக்கும் மகிழ்ச்சியில் அசுரர்கள் பெரிதும் ஒத்துழைக்க ஒரு தசமித் திதியில், 'மந்திரகிரி'' மலையை மத்தாகவும், 'வாசுகி'' என்ற பாம்பை கயிறாகவும் கொண்டு பாற்கடலை அசுரர்களும், தேவர்களும் சேர்ந்து கடைய தொடங்கினார்கள்.

அப்போது தக்க ஆதாரம் இல்லாததால் மந்தார' மலை நிலை குலைந்து, பாற்கடலுக்கடியே மூழ்க ஆரம்பித்தது! உடனே திருமால் ஆமை வடிவம் எடுத்து, (கூர்ம அவதாரம்) மலையின் கீழே சென்று அதனைத் தன் முதுகில் தாங்கிக் கொண்டார்.

இதனால் மந்திரகிரிமலை கடைவதற்கு ஏற்ற நிலைக்குத் தயாரானது. மீண்டும் கடையத் துவங்கினர். இதனிடையில் தசமி திதி அன்று ஒருவேளை மட்டும் உண்டு, ஏகாதசி அன்று பூரண உபவாசம் இருந்து மறுநாள் துவாதசியன்று பாரணை செய்து முடிக்கும் ஏகாதசி விரதத்தையும் இவர்கள் கடைபிடிக்க தவறவில்லை. இவ்வாறு பல நாட்கள் சென்றன.

ஒரு தசமி தினத்தன்று ஒருவேளையுண்டு, மிக உற்சாகத்துடன் கடைந்தனர். மறுநாள் விரத தினம் ஏகாதசி என்பதால் எல்லோரும் உணவு எதுவும் உண்ணாமல் உபவாசம் இருந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கடைந்தார்கள். நேரம் ஆக, ஆக எல்லோருக்கும் பசியோடு, களைப்பும் சேர்ந்து கொண்டது. பல நாட்கள் கடைந்ததால் வாசுகி பாம்பானது வலி பொறுக்க முடியாமல், பெருமூச்சுவிட, அந்த மூச்சுக் காற்றின் உஷ்ணம் எங்கும் பரவி அதன் தலைப்பகுதியின் அருகில் இருந்த அசுரர்களைத் தாக்கியது. அவர்கள் மூச்சுவிட முடியாமல் தவித்தார்கள்.

<u>சோம சூத்ரபிரதக்ஷிணம்</u>

அச்சமயம் பார்த்து திடீரென்று கடல் கொந்தளிக்கத் தொடங்கியது. வெண்மையான பாற்கடலிலிருந்து கறுப்பு நிறத்துடன் கடலின் நடுவே புகையைக் கக்கியபடி பந்துபோல் எழுந்ததுஒரு விஷம். அதே சமயத்தில் வாசுகி பாம்பானது தன் பங்கிற்கு தன்னுள் இருந்த விஷத்தைக் கக்கியது! கடலில் தோன்றிய ஆலம், வாசுகி பாம்பு கக்கிய காலம் ஒன்று சேர்ந்து அது'ஆலாகால விஷம்'' என்ற பெயர் பெற்றது.

இந்தக் கொடிய விஷத்தின் கடுமையால், மூவுலகும் பாதிப்புக்குள்ளானது. மஹாவிஷ்ணு இந்த விஷத்தின் கடுமையால் நீலநிறம் ஆனார். இந்தக் கொடிய ஆலகால விஷம் எங்கும் பரவ அசுரர்களும், தேவர்களும் பாற்கடலை கடைவதை விட்டுவிட்டு, இந்த இக்கட்டான தருணத்தில் நம்மைக் காப்பாற்ற சிவபெருமானால் தான் முடியும் என்றுணர்ந்து ''பரமேஸ்வரா!, பரமசிவா!..'' என்று அழைத்துக் கொண்டே கைலாயத்தை நோக்கி ஓடினார்கள். இறுதியில் சிவபெருமானைக் கண்டனர்.

அவர்கள் சிவபெருமான் அமர்ந்திருந்த இடத்தை அடைய வலப்பக்கம் செல்லலாம் என்றால் அங்கேயும் கருப்பு விஷப்புகை சூழ்ந்து வந்தது. இதனால் அவர்கள் சிவபெருமானைத் தரிசிக்க இடப்பக்கமாக ஓடினார்கள். இடப்பக்கம் விஷப்புகை சூழ்ந்து வந்தது. இதனால் என்ன செய்வதென்று தெரியாமல் ஈசனைக் காண வலப்பக்கம், இடப்பக்கமாக மாறி மாறி ஓடினார்கள். கோமுகம் வழியாகவும் கண்டு தரிசிக்க முயற்சித்தும் பயனில்லை. இறைவன் சந்நிதானம் இருக்கும் நேர் எதிரிலும் சென்றும் ஈசனை தரிசிக்க முடியாததால் நந்தி தேவரைச் சரணடைய, நந்திதேவருடைய உதவியினால், சிவதரிசனம் கிடைக்கப் பெற்றனர். இதனால் தான் 'பிரதோஷ'' வழிபாட்டின் போது நந்திதேவருக்கு க்கியத்துவம் கொடுத்து, முதலில் நந்திதேவருக்குப் பூஜை செய்து முடித்த பிறகே, ஈஸ்வரனுக்கு பூஜை நடத்தப்படுகிறது.

<u>நீலகண்டர்</u>

ஆலகால விஷம் துரத்திய போது இவர்கள் ஈசனை வழிபட மேற்கொண்ட முயற்சியின் அடிப்படையில்தான் பிரதோஷ காலத்தில் செய்யப்படும், 'சோம சூத்ரபிரதட்சணம்'' கடைபிடிக்கப்படுகிறது! இதன்பின் ஈசனிடம் தஞ்சம் புகுந்த தேவர்கள், தங்களை 'ஆலகாலம்'' விஷத்தில் இருந்து காக்கும் படி பிரார்த்திக்க, ஈசனும் தம் அருகிலிருந்த சுந்தரரை அழைத்து, அந்த விஷத்தை எடுத்து வரும்படிப் பணித்தார்.

ஈசனின் வாக்கிற்கிணங்க, சுந்தரரும், யாரும் அணுக முடியாத கொடிய விஷத்தை நாவல் பழம் போலத் திரட்டி உருட்டிக் கொணர்ந்து சிவபெருமானிடம் தர, (அத்தகைய வல்லமையை சிவபெருமான் சுந்தரருக்குத் தந்திருக்கிறார்.), ஈஸ்வரனும் அந்தக் கொடிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விஷத்தை தேவர்களையும் அசுரர்களையும் காக்கும் பொருட்டு, அதனை தன் திருக்கரத்தில் வாங்கி உட்கொண்டார்.

அருகில் இருந்த உமா தேவி, அந்த விஷமானது உள்ளே செல்லாதபடி ஈசனின் கழுத்தை பிடித்து, இறைவனின் உள்ளிருக்கும் உயிர்கள் அழிந்து விடாமல் இருக்கவும், வெளியில் உமிழ்ந்தால், வெளியில் உள்ள உயிர்கள் அழிந்துவிடும் எனக் கருதியும் அவ்வாறு செய்ய, ஆலகாலவிஷமானது ஈசனுடைய தொண்டையிலேயே தங்கிவிட்டது. அம்பிகையின் திருக்கரத்தின் அருளால் அந்த விஷம் அமுதமாக மாறி விட்டது என்கிறார் அபிராமி பட்டர். ஆனாலும் விஷத்தின் கடுமையால் அவரது கண்டம் (தொண்டை) நீலமாக மாற, பரமேஸ்வரன் திருநீலகண்டராக அழைக்கப்பட்டார்.

<u>மகாலக்ஷ்மி ஆவிர்பாவம்</u>

ஆலகால விஷத்திலிருந்து விடுபட்ட அசுரர்கள் தேவர்களுடன் மீண்டும் பாற்கடலை கடையத் தொடங்கினர். முதலில் பாற்கடலிலிருந்து அழகுடன் காமதேனு தோன்றியது. யாகத்திற்கு உதவுமென்று அதனை ரிஷிகள் பெற்றுக் கொண்டனர். அதன்பின் வருணனைத் தேவதையாகக் கொண்ட வாருணீ எனப்படும் (மது) ஸுராதேவி தோன்றினாள். அவளழகைக் கண்டு சித்தர்களும் அதிசயித்தனர். விஷ்ணுவின் நியமனம் பெற்று அஸுரர்கள் அதைப் பெற்றுக் கொண்டனர். பின் உலகை மயக்கும் நறுமணத்துடன் பாரிஜாத மரம் தோன்றியது. அதை தேவஸ்த்ரீகள் பெற்றுக் கொண்டனர். அதன்பின் சந்திரன் தோன்றினான். பாற்கடலிலிருந்து தோன்றிய சந்திரனை பரமேச்வரன் தன் சிரஸில் தரித்துக் கொண்டார். பின்னர் உச்சை சிரவஸ் என்ற குதிரை வெளிவந்தது. பின்னர் ஐராவதம் பல்வேறு ரத்தினங்கள் பாரிஜாதம், வில்வம், காமதேனு, பாஞ்சஜன்யம், அப்ஸரஸ்கள், சிந்தாமணி, ஆகியோர் வெளிவந்தனர்.

பின்னர் திருபாற்கடலில் ஸ்ரீ மகாலக்ஷ்மி ஆயிரம் சூர்யகோடி ப்ரகாசத்துடன், ஆயிரம் இதழ் கொண்ட தாமரையின் மேல் சிவந்த திருமேனியுடன் பல்வேறு ரத்ன ஆபரணங்களுடனும் நவரத்ன கிரீடம் தரித்து புன்னகை தவழும் முகத்தோடும் கருணை பொங்கும் விழிகளுடனும் தோன்றினாள். தன் புன்முறுவல் கடாக்ஷத்தாலேயே திருமகள் தேவர்தலைவனின் அல்லல்களையும் போக்கினாள்.

பாற்கடலிலிருந்து ஸ்ரீ மகாலக்ஷ்மி தோன்றியதும், ரிஷிகள் ஸ்ரீஸுக்தத்தினால் தேவியைத் துதித்துப் போற்றினர். (இந்த ஸுக்தம் வேதங்களில் தன்மையான ரிக் வேதத்தில் உள்ளது. இதில் 15 ரிக்குகள் உள்ளன. ஒவ்வொரு ரிக்கும் ஒவ்வொரு பலனைக் கொடுப்பதாகும்). ஸ்ரீ மகாலக்ஷ்மியைக் கண்டவுடன் தேவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. தேவந்திரன் தன் கண்களில் ஆனந்த கண்ணீர் பெருக உள்ளன்போடு துதித்தான். மற்ற தேவர்களும் உள்ளத்தில் உவகை பொங்க தேவியை பல்வேறு நாமங்களால் துதித்தனர்.

விச்வாவஸு முதலான கந்தர்வர்கள் பாட, க்ருதாசீ முதலிய அப்ஸரஸ்ஸுகள் ஆட அனைவரும் மகிழ்ந்திருக்கும் போது, ஈஸ்வரன் அற்புதமான ஓராஸனத்தைப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



பிராட்டிக்களிக்க, அதில் அமர்ந்து கொண்ட ஸ்ரீதேவிக்கு கங்கை முதலான புண்ய நதிகள் அபிஷேக மழை பொழிந்தன. மேகங்கள் பலவித வாத்யங்களாக முழங்க, ப்ராஹ்மணர்கள் ஸூக்தங்களை ஜபிக்க, அஷ்ட திக்கஜங்கள் பொற்குடங்களில் புண்ய தீர்த்தம் கொண்டு மகாலக்ஷ்மியை நீராட்டின. இப்படி நீராடி, நல்லாடையுடுத்தி, மலர்மாலை சூடி, அணிகள் பல பூண்டு நின்ற திருமகளை பலரும் திருமணம் செய்து கொள்ள விழைகின்றனர்.

ஆனால் அம்பிகை மிகவும் நிதானமாக யோசிக்கிறாள். தனக்கு உகந்தவரைத் தானே தேர்ந்தெடுக்க விழைகிறாள். எதிரில் இருக்கும் ஒவ்வொருவரையும் பற்றி தீர யோசிக்கிறாள். துர்வாஸர் மிகுந்த முன்கோபி. ப்ருஹஸ்பதி, சுக்ராச்சார்யார் ஆகியோர் ஞானிகளென்றாலும் பற்று நீங்காதவர்கள். ப்ரஹ்மா, சந்திரன் முதலியவர்கள் காமம் உள்ளவர்கள். இந்திரனோ தன்னை காக்கவே பிறரை நாடுபவன். அதனால் அவனை ஆற்றலுடையவனாகவோ, ப்ரபுவாகவோ கொள்ள முடியாது. ஈஸ்வரன் காட்டில் வஸிப்பதால் மங்களத் தன்மையில்லாதவன் என்றெல்லாம் ஒவ்வொருவரின் குற்றங்களையும் குணங்களையும் ஆராய்ந்து எவ்விதக் குற்றமுமின்றி கல்யாண குணங்களால் நிறைந்து நிற்கும் மகாவிஷ்ணுவையே தன் மணாளனாகக் கொள்ள நினைத்து, அனைத்து தேவர்களும் முனிவர்களும், யக்ஷர்களும் கின்னரர்களும் மற்ற எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்க திருமாலின் திருமார்பில் திருமண மாலையை அணிவித்து, அவன் திருமார்பில் நீங்கா இடம் பெற்றாள். ஸ்ரீ மகாலக்ஷ்மியின் பார்வை கிடைக்கப் பெற்ற தேவர்கள் தாங்கள் இழந்த எல்லா செல்வங்களையும் தேஜஸ், செல்வம், வீர்யம் எல்லாவற்றையும் மீண்டும் பெற்றனர். கைவிட்டுப் போன பதவிகள் மீண்டும் கிடைத்தன.

இதன் பின் தன்வந்த்ரி பகவான் வெள்ளாடையுடன் கையில் மூப்பு, வியாதி, மரணம் ஆகியவற்றை நீக்கி அமரவாழ்வு தரும் அம்ருத கலசத்துடன் பாற்கடலில் தோன்றினார். முயற்சி பலித்த நிம்மதியுடன் தேவாஸுரர்களும் மகிழ்ந்தனர்.

<u>கள்ளவாரணப் பிள்ளையார்;</u>

அந்த மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்கவில்லை. அமிர்தகலசத்தை அபகரிக்க தேவர்களும் அசுரர்களும் போட்டி போட்டனர். இந்நிலையில் திடீரென அமிர்த கலசத்தைக் காணவில்லை. பாடுபட்டுத் தேடி அடைந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமிர்தம் காணாமல் போனதால் தேவர்களும் அசுரர்களும் மிகுந்த வருத்தமடைந்து எல்லா இடங்களிலும் தேடியும் கிடைக்காமல் இறுதியில் மஹாவிஷ்ணுவைச் சரணடைந்து, அமிர்த கலசம் காணாமல் போனதைத் தெரிவித்து, அமிர்த கலசம் தங்களுக்கு மீண்டும் கிடைக்க அருள்புரியக் கோரினர். என்ன நடந்ததென்பதை உணர்ந்து கொண்ட மஹாவிஷ்ணு, தேவ கணங்களின் அதிபதியும் விக்னங்களின் அரசனுமான விநாயகப் பெருமானை வணங்காமல் போனதால் அவரே அந்த அமிர்த கலசத்தை மறைத்து வைத்திருக்கிறாரென்றும் தன்னைத் தஞ்சமடைந்தவருக்கு எளிதில் அருள்புரியும் அந்த கருணாமூர்த்தியை வணங்கி வேண்டினால் அவரே மீண்டும் அமிர்தகலசத்தை அவர்களிடம் தந்துவிடுவாரென்றும் கூற, எல்லா தேவர்களும் அசுரர்களும் மஹாகணபதியை நெஞ்சாரத் துதித்து வணங்கினர். மஹா கணபதியும் அவர்களின் தவறை மன்னித்து அமிர்த கலசத்தை அவர்களிடமே திருப்பித் தந்துவிட்டார். (அமிர்தத்தை மறைத்து வைத்த இந்த கணபதியே கள்ள வாரண கணபதியாக திருக்கடவூர் திருத்தலத்தில் அமர்ந்திருக்கிறார். இந்த விநாயகர் மிகவும் சக்தி வாய்ந்தவராக கருதப்படுகிறார். இவரை மனம் உருகி வழிபட்டால் இழந்த, தொலைந்த செல்வங்கள் அனைத்தும் திரும்ப கிடைக்கும். சமஸ்கிருதத்தில் இவரை சோர கணபதி என்று அழைக்கிறார்கள். அபிராமிபட்டர் அந்தாதி பாடத் தொடங்கிய போது இந்த கள்ள விநாயகரை தலில் துதித்துவிட்டே அந்தாதி பாடி மன்னரின் தண்டனையிலிருந்து தப்பியது மட்டுமின்றி, அம்பிகையின் பேரருளையும் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. உறவினர்கள் மற்றும் பகைவர்களிடம் நீங்கள் எதையாவது இழந்து தவித்தால் இந்த விநாயகரை வழிபட இழந்ததைப் திரும்பப் பெறுவதுடன் எடுத்த எல்லா செயல்களும் சுபமாக முஜயும்.)

மோகினி அவதாரம்

அமிர்த கலசத்தைத் திரும்ப பெற்ற போது, அசுரர்கள் அதனை அபகரித்துக் கொண்டு ஓடினர். இதைக் கண்டு செய்வதறியாத தேவர்கள் மகாவிஷ்ணுவிடம் வேண்டினர். உடனே அவர் ஒரு அழகிய பெண்ணுருக்கொண்டு, நீண்ட கூந்தலில் மல்லிகைச் செண்டுடன், இடையிலாடும் தங்க ஒட்டியாணத்துடன், கால்களில் தண்டையுடன், நாணம், சிரிப்பு, நெளிந்து தவழும் புருவ வளைப்புகளுடன் கண்டோர் மயங்கும் மோகினியாகத் தோன்றினாள். அவளிடம் மயங்கிய அஸுரர்கள் கலசத்தை அவளிடமே கொடுத்து, தங்களுக்கு அவளையே பகிர்ந்து கொடுக்கச் சொன்னார்கள். அதை வாங்கிக் கொண்ட மோஹினி தேவாஸுரர்களை நீராடி, நித்ய கர்மாக்கள், ஹோமங்கள், தானங்களைச் செய்து விட்டு முறையாக, வந்து அமரும் படி கூறினாள். தேவர்களும் அசுரர்களும் அவ்வாறே நீராடச் சென்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமிர்த கடேஸ்வரர்

நீராடி வந்தவர்களுக்கு ஒரு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. அவர்கள் வைத்துச் சென்ற அமிர்த கலசத்தை அவர்களால் பூமியிலிருந்த மீண்டும் எடுக்க டியவில்லை. அமிர்த கலசம் ஒரு லிங்கமாகவும் அதன் வேர் பாதாளம் வரையும் சென்றிருந்தது. மீண்டும் அமிர்த கலசத்தை பறிகொடுத்த தேவர்களும் அசுரர்களும் மீண்டும் மஹா விஷ்ணுவைச் சரணடைய, அவரோஅமிர்தம் லிங்கமாக மாறிய அமிர்த கடேஸ்வரரையே சரணடைந்து, அவரை வேண்டித் துதிக்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்திவிட்டு, தானும் அவர்களுடன் சேர்ந்து பரமேஸ்வரனைத் துதித்தார். அப்போது லிங்க பாணத்தின் மீதிருந்து அமிர்தம் வழியத் தொடங்கியது. மஹா விஷ்ணு அந்த அமிர்தத்தை ஒரு கலசத்தில் சேகரித்தார். அமிர்தத்தினால் உருவான லிங்க ஸ்வரூபமே அமிர்த கடேஸ்வரராக இன்றும் திருக்கடவூர் திருத்தலத்தில் அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

(மஹாவிஷ்ணுவின் பிரார்த்தனைக்குச் செவிமடுத்த சிவபெருமான், திருக்குளத்தில் அமிர்தம் கிடைக்குமெனக் கூறி மறைந்ததாகவும் அதன்படியே எல்லோரும் திருக்குளத்திற்குச் சென்று பரமேஸ்வரனைத் துதித்துக் கொண்டிருக்க, அந்த குளத்தின் நடுவில் அமிர்தம் ஒரு கலசத்தில் தோன்ற அதனை மஹாவிஷ்ணு எடுத்துக் கொடுத்ததாகவும் ஒரு வரலாறு உண்டு. அந்த குளம் அதனாலேயே அமிர்த புஷ்கரணி என்று அழைக் கப்படுவதாகவும் கூறப்படுகிறது. திருக்கடவூர் திருக்கோயிலில் அந்த குளம் இன்றும் உள்ளது.)

அன்னை அபிராமி அவதாரம்

அமிர்தகடேஸ்வரரால் அருளப்பட்ட அமுதத்தை மகாவிஷ்ணு தேவர்களுக்கு பரிமாறும் முன், அமிர்தத்தை மீண்டும் அளித்து காத்தருளிய அமிர்தகடேஸ்வரருக்கு அபிஷேக, ஆராதனை பூஜை செய்ய எண்ணினார். சிவபூஜையின்போது அம்பிகையையும் பூஜிக்க வேண்டும் என்பது நியதி. எனவே மஹாவிஷ்ணு அம்பிகையை அந்த இடத்தில் எழுந்தருளப் பிரார்த்தித்தார். பின்னர் பூஜைக்குரிய நியமமான உடைகளைத் தரிப்பதற்காக, தான் அணிந்து கொண்டிருந்த இரத்தின ஹாரங்களையும் பொன்னாபரணங்களையும், வைடூர்ய கிரீடத்தையும் கீழே ஓர் பட்டுப் பீதாம்பரத்தை விரித்து அதில் கழற்றி வைத்து விட்டு, பூஜைக்குரிய உடைகளைத் தரிக்கத் துவங்கினார்.

அச்சமயத்தில் திடீரென குளிர்ந்த மென்மையான காற்று வீசத் துவங்கியது. புள்ளினங்கள் ஆர்பரிக்கத் தொடங்கின. மயில்கள் தோகை விரித்து ஆடத் துவங்கின. குயில்கள் ஆனந்தமாக கூவின. பச்சைக் கிளிகள் ஏராளமாக அந்த இடத்தைச் சுற்றி வந்து கீச் கீச்சென்று ஒலியெழுப்பின. எங்கிருந்தோ இனிய கீதம் காற்றில் மிதந்து வந்தது. காற்றின் வேகத்தில் அருகில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருந்த மரம், செடி கொடிகளிலிலிருந்த அழகிய மலர்களெல்லாம் அடித்து வரப்பட்டு மஹாவிஷ்ணுவின் ஆபரணக் குவியலின் மீது விழுந்து வண்ண வண்ண மலர் குவியலாக மாறியது. அந்த மலர் குவியலிலிருந்து மனதிற்கு இதமான சுகந்தம் வீசியது. அந்த சமயத்தில் பிரமிப்பூட்டும் மின்னல் ஒளி அந்த ஆபரணத்திலிருந்து தோன்றி, அதிலிருந்து கண்களைக் கூசச்செய்யும் ஒரு பிரகாசம் வெளிப்பட்டது. அந்த பிரகாசத்தின் நடுவில் கண்கண்ட தெய்வம், அழகுக்கொருவரும் ஒவ்வாத செல்வி, எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் ஈன்று காத்தருளும் வள்ளல் நாயகியான அபிராமி அம்பிகை அதி ரூபசுந்தரவதியாக பல்வேறு பொன் ரத்தின ஆபரணங்களை அணிந்து கொண்டு வாசம்மிக்க மலர் மாலைகளைச் சூடிக் கொண்டு பேரழகுடன் தோன்றினாள். தன் கீழ் இரு கரங்களில் அபய வரத முத்திரைகளை காட்டியும், மேலிரு கரங்களில் ஜெபமாலையும், செந்தாமரை மலரையும் ஏந்திக் கொண்டு, நீண்டு வளைந்த புருவங்களுடன் நீண்ட கருங்கூந்தல் அழகு செய்ய, கருணை பொழியும் கண்களால் தன் பக்தர்களுக்கு பேரருள் பொழியும் நினைவுடன், செவ்விதழில் புன்முறுவல் பூக்க, சின்னஞ்சிறு பெண் போலே சிற்றாடை இடை உடுத்தி, பின்னல் சடை போட்டு பிச்சிப்பூ சூடிக் கொண்டு, பேரழகுடன் தோன்றிய அம்பிகையைக் காண பிரும்மா, விஷ்ணு, சிவன், இந்திராதி தேவர்கள், உட்பட எல்லோரும் ஓடி வந்தனர். கண்களில் ஆனந்தக் கண்ணீருடன் கைகூப்பித் தொழுதனர். மகிழ்ச்சியில் ஆடிப் பாடி மகிழ்ந்தனர். வேத கோஷங்கள் விண்ணை முட்டின. இதைக் கண்ட யக்ஷர்கள், கிம்புருடர்கள், னிவர்கள் எல்லோரும் அம்பிகையைக் காண விரைந்தனர். வேத கோஷங்கள் விண்ணை ட்டின. எங்கும் மகிழ்ச்சி வெள்ளம். தங்களைக் காக்க தேவியே வந்துவிட்டாள் என்று தேவர்கள் புளகாங்கிதமடைந்தனர். மகாவிஷ்ணு அம்பிகைக்கு 64 உபசாரங்களுடன் பூஜை செய்து, நிவேதனங்கள் பலவும் படைத்து, அவளைப் பலவாறு துதித்தார்.

'உலகில் உள்ள ஸர்வ வித்யைகளும் நீயே. மோக்ஷத்தைத் தருபவள் நீ. மூவுலகிற்கும் நீயே அன்னையாக விளங்குகிறாய். எங்கள் எல்லோரையும் நீயே படைத்து காத்து ரக்ஷிக்கிறாய். உன்னால் ஆட்கொள்ளப்பட்டவர்களிடம் வாய்மை, தூய்மை, எல்லாம் தானாவே குடிகொள்ளும். உன் கடாக்ஷத்தாலேயே எல்லோரும் நல்லொழுக்கத்தையும், ஐச்வர்யத்தையும் பெறுகின்றனர். குணக்கேடான ஒருவனும் உன் கடாக்ஷம் பெற்று விட்டால் மேம்பட்டவனாகி விடுகிறான். ஆயிரம் தலை கொண்ட ஆதி சேஷன் மட்டுமின்றி, நான்கனின் நான்கு நாக்குகளுமே உன் பெருமையே பேசி முடிக்க முடியாது. நான் எப்படிப் பேசுவது? அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி! அபிராமி! அருமறைகள் பணிந்து சிவந்த திருப்பாதங்களைக் கொண்டவளே! முக்ணீண்ணியே! உன் பரிபூரண கிருபா கடாக்ஷத்தினால் தேவர்கள் மீண்டும் அவர்களுடைய பெருமையையும், பதவிகளையும் அடைய வேண்டும்', என்று பிரார்த்திக்க, அம்பிகையும் ''அப்படியே ஆகுக'' என அனுக்ரஹித்தாள். மஹாவிஷ்ணுவின் ஆபரணத்தில் இருந்து தோன்றியதால், அம்பிகைக்கு அண்ணனான மஹாவிஷ்ணு, அம்பிகை அபிராமிக்கு அன்னையுமான திருத்தலம் இது!

பின்னர் மஹாவிஷ்ணு அபிராமியையும் அமிர்தகடேஸ்வரரையும் ஷோடச உபசாரங்களால் பூஜித்து, அவர்களின் திருவருளுடன், மீண்டும் மோஹினி அவதராம் எடுத்துக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொண்டு, அசுரர்களைத் தன் பேரழகால் மயக்கி, அந்த மயக்கம் தெளியுமுன், தேவர்களுக்கு மட்டும் அதம் பரிமாறினார். அந்த அமுதம் உண்ட தேவர்கள் மிக்க வலிமை பெற்றதுடன் இறப்பில்லா நிலையையும் எய்தினர்.

இச்சரித்திரத்தை மீண்டும் மீண்டும் படித்தும், கேட்டும் மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்லி, அவர்களுடன் அம்பிகையின் திருப் பாதங்களில் நீங்காத பக்தி கொண்டிருக்கும் பக்தர்களின் க்ருஹத்தில் என்றென்றும் அம்பிகை நித்யவாஸம் செய்வாள். அவர்கள் கிருகத்தில் எல்லா செல்வ வளங்களும் நிறைந்திருக்கும். மகிழ்ச்சியான வாழ்வும், ஆரோக்யமான தேகம் பெற்று நீண்ட நாள் வாழ்ந்து தேவியின் லோகத்தை அடைவர். இந்த வரலாறு திருக்கடையூர் தல வரலாற்றில் காணப்படுகிறது.

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. ஸ்ரீமார்கண்டேயர்

காசி மாநகரில் கடகம் என்னும் நகரில் குச்சகர் என்னும் அந்தணர் வாழ்ந்து வந்தார். அவரது புதல்வர் கௌச்சிகர்(மிருககண்டுயர்). வேத சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்த கௌசிகன் பிறவிப் பெருங்கடலைக் கடக்க விழைந்தான். ஊண், உறக்கம் ஒழித்து பெருந் தவம் செய்தான். தவத்தை மெச்சி அவன் முன் தோன்றினார் திருமால். அவனுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்து ஆசீர்வதித்தார்.

இறையருளைப் பெற்று வீடு திரும்பிய கௌசிகனிடம் அவன் தந்தை கன்னிகையை திருமணம் புரிந்து இல்லறத்தில் ஈடுபட வேண்டினார். ஆனால் கௌசிகன் தன் தந்தையிடம் ''பிறவித் தளையையை அறுக்க வேண்டும்; மீண்டும் பிறவித் தளையில் அகப்பட மாட்டேன்! திருமணம் புரிந்து இல்லறத்தில் ஈடுபட்டால் அதிலிருந்து மீள்வது அரிது. துன்பங்களை உண்டாக்கும் பெண்ணாசை! அதுவே பின்னாளில் கொண்டு தள்ளும் நரகத்தில். காம வசப்பட்ட தேவர்களும் முனிவர்களும் அதில் விழுந்து மீளமுடியாமல் தவித்தது தெரியாதா? பிறவித் துன்பத்தை தொலைப்பதை விட்டு பிறவிக் கடலில் மீண்டும் விழ விரும்பவில்லை'' என்றான்.

தவப் புதல்வன் தவத்தின் மீது கொண்ட பற்றினை உணர்ந்தார் குச்சகன், ''இல்லறம் புகுந்து மக்கட்பேறை அடைந்து துறவறம் புகுவதே மனிதனுக்கு நல்லறமாகும். முன்னோர்கள் உய்ந்திட பிள்ளைப் பேறு அவசியம். அதுபற்றியே அருந்ததி தேவியை வசிட்டர் மணந்தார். எல்லா முனிவர்களும் திருமணம் செய்து கொண்டே வீடுபேறு எய்தினர். இல்லறம் புகாமல் துறவறம் பூண்டால் காம விகாரம் கர்மமாய் வந்து சேரும். நாம் செய்கின்ற நல்லதும், தீயதும், நமது ஊழ்வலியின் வினைப்பயனே! இல்லறம் புகுந்து வாழ்ந்த பின்னர், துறவறத்தை ஏற்பாய்''என்று கூற, மகனும், தாய், தந்தை, குருவின் சொற்களைத் தவறாமல் நிறைவேற்றுவது கடமை. அதனால் கற்புடைய மாதை மணந்து உங்கள் சொற்படி நடப்பேன்'' என்று கூறி அவ்வாறே மருத்துவதி என்ற மாதை மணம் புரிந்தான். அவர்களுக்கு வெகுநாட்களாக மக்கட்பேறில்லை.

காசியை யடைந்து மணிகர்ணிகை என்னும் திருக் கோயிற்குச் சென்று சிவபெருமானை வழிபட்டுத் தவம் செய்து வந்தனர். அவர்களுடைய வழிபாட்டில் மகிழ்வுற்று மிருகண்டு மகரிஷி முன் தோன்றிய சிவபெருமான், 'முனிவரே, உங்கள் வழிபாட்டால் நான் மனம் குளிர்ந்தேன். உனக்கு குழந்தை செல்வம் கிடைக்கும். ஆனால், குறைந்த அறிவுடைய நீண்ட காலம் வாழப்போகும், குழந்தை வேண்டுமா அல்லது பதினாறு வருடங்களே வாழப்போகும் மிக்க அறிவுள்ள ஒரு குழந்தை வேண்டுமா?' என கேட்டார்.

அதற்கு மகரிஷி 'ஈஸ்வரா! எனக்கு அறிவுள்ள மகனே போதும்', எனக் கூற உடனடியாக சிவபெருமானும் 'நல்லது! அப்படியே ஆகட்டும்!' எனக் கூறி மறைந்தார். விரைவிலேயே மகரிஷி தம்பதிகளுக்கு மகன் பிறந்தான். அவனுக்கு மார்கண்டேயன் என பெயரிட்டு வளர்த்து வந்தனர். அந்த சிறுவனும் புத்திசாலியாகவும் அழகானவனாகவும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வளர்ந்தான். வேத சாஸ்திரங்களை விரைவில் கற்றுத் தேர்ந்தான். இதனால் அவனை எல்லோரும் விரும்பினர்.

மார்கண்டேயனுக்கு 16 வயதை நெருங்கி கொண்டிருந்த போது, மிருகண்டு மகரிஷியின் கவலை அதிகரித்துக் கொண்டே போனது. இதனைக் கண்ட மார்கண்டேயன் ஒரு நாள் தன் தந்தையை பார்த்து அவருடைய சோகத்திற்கு காரணம் கேட்க அவரும் சிவபெருமான் கூறியதைக் கூறி நீ 16 வயதை நெருங்குவதால் எங்கள் கவலை அதிகரிக்கிறது என்று கூறினார்.

அதற்கு மார்கண்டேயர் 'அப்பா! இதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டாம். எம்பெருமான் எத்தனையோ பேரை காப்பாற்றியதை நீங்களே கூறியிருக்கிறீர்களே! அவர் என்னையும் காப்பார். அதற்காக இன்றிலிருந்து இடைவிடாது நான் பரமேஸ்வரனை ஆராதிக்கத் துவங்குகிறேன். கண்டிப்பாக அவர் என்னையும் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.' என கூறினான். தன் மகனின் வார்த்தைகளை கேட்ட மிருகண்டு மகரிஷி சந்தோஷம் அடைந்து, அவனை ஆசீர்வதித்தார். காலை, மாலை, இரவு என எந்நேரம் ஆனாலும் சிவபெருமானின் வழிபாட்டிலேயே சிந்தையைச் செலுத்தினான்.

மிருகண்டு முனிவரும் தன் மகனுக்கு நீண்ட ஆயுள் கிடைக்க மகனையும், மனைவியையும் அழைத்துக் கொண்டு பல ஸ்தலங்களைத் தரிசித்து வந்தார். அவ்வாறு வரும்போது மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள கதிராமங்கலம் திருத்தலத்தில் அன்னை துர்காதேவி மோனத் தவம் புரியும் காட்சியைக் கண்டார். உலக நலனுக்கு தவம் புரியும் அன்னையிடமே தம் மகனின் நலனுக்கு அருள் வேண்டுவோம் என்று தெளிந்து அம்மையிடம் அபயம் கேட்டு உபாசித்தார். அன்னை துர்காவும் மனம் கனிந்து, முனிவரே! உன் புதல்வன் சிரஞ்சீவியாக இருப்பான், அந்தப் பெருமையை அவன் ஈசனால் மட்டுமே பெற வேண்டும் என்பது விதி. எனவே நீ உன் மகனை திருக்கடவூர் அழைத்துச் சென்று தேவர்களுக்கு அமிர்தம் கிடைக்கச்செய்து அவர்களை சிரஞ்சீவிகளாக மாற்றிய ஸ்ரீ அபிராமி அம்பிகை சமேத ஸ்ரீஅமிர்தகடேஸ்வரரை பூஜித்து, அவரையே பற்றிக் கொள்ளச் செய்க. அவர் அருளால் உன் மகனைக் காலன் கவர மாட்டான். சிரஞ்சீவியாக இருப்பான். செல்லும் போது மயூரத்தில் கோயில் கொண்டிருக்கும் மயூர நாதருடன் அபயாம்பிகையையும் வணங்கி செல்க. தன்னிடம் அபயம் என்று வந்த எல்லோருக்கும் அபயமளித்துக் காக்கும் பராசக்தி உன் மகனையும் காப்பாள் எனக்கூறி அருள்பாலித்தாள். உடனே முனிவர் தன் மனைவியிடம் மார்கண்டேயரிடம் அம்பிகை கூறியதைக் கூற, எல்லோரும் மகிழ்ச்சியுற்றனர். தாங்கள் தவமிருந்து பெற்ற பிள்ளை என்றும் தங்களுடன் இருப்பானென்றால் எந்த பெற்றோருக்குத்தான் மகிழ்ச்சி இருக்காது? எல்லோரும் ஸ்ரீ துர்கா பரமேஸ்வரி கூறியபடி மயூரம் வந்து அங்கு மயூரநாதரையும் அபயாம்பிகையையும் துதித்தனர். தன்னைத் துதித்து வழிபட்ட மார்கண்டேயருக்கு அபயமளித்த அம்பிகை அருகிலுள்ள ஆக்கூர் சென்று அங்கு கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ தான் தோன்றீஸ்வரரை வணங்குமாறு கூறி அருள்பாலித்தாள்.

பின்னர் அவர்கள் எல்லோரும் ஆக்கூர் சென்று அபயாம்பிகை சொன்னபடி ஸ்ரீ தான் தோன்றீஸ்வரரை வணங்கும் முன் வழியில் காளஹஸ்தினாபுரம், மாத்தூர் சென்று அவ்விடங்களில் கோயில் கொண்ட அம்பிகையையும் பரமேஸ்வரரையும் வணங்கிவிட்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பின்னர் ஆக்கூர் சென்று ஸ்ரீ தான் தோன்றீஸ்வரரையும் வணங்கி அவர்கள் அருளுடன் திருக்கடவூர் வந்தனர்.

திருக்கடவூருக்கருகில் உள்ள மணல்மேடு கிராமத்தில் ஒரு சிறு குடிலை அமைத்துக் கொண்டு தினம் திருக்கடவூர் சென்று அமிர்த கடேஸ்வரரை ஆராதித்து வந்தார் மார்கண்டேயர். (அவர் ஏன் திருக்கடவூரில் தங்காமல் மணல்மேட்டில் தங்கினார் என்ற கேள்வி எழலாம். அந்த நாட்களில் ஒரு பழக்கம் இருந்தது. ஒரு சில க்ஷேத்திரங்கள், அந்த க்ஷேத்திரங்களே தெய்வாம்சமாகத் திகழ்வதாக புராணங்கள் கூறுகின்றன. அத்தகைய க்ஷேத்திரங்களில் ஒன்று தான் திருக்கடவூர். திருமலையும் கயிலாயமும் அப்படிப்பட்டதே. திருமலையே பெருமாளாக வணங்குவோர் இன்றும் உள்ளனர். கயிலாய மலையையே பரமேஸ்வரனாக வரித்து இன்றும் கயிலாய யாத்திரை மேற் கொள்கின்றனர் அல்லவா? அவ்வாறு தெய்வாம்சமாகக் கருதப்படும் க்ஷேத்திரங்களில் யாரும் இயற்கை உபாதைகளுக்காக ஒதுங்க மாட்டார்கள். அதனை தெய்வ அபசாரமாகக் கருதுவர். திருக்கடவூரையே பரமேஸ்வரனாகப் பார்த்த மார்கண்டேயர் திருக்கடவூரில் தங்காமல் மணல்மேட்டில் இருந்து கொண்டு திருக்கடவூர் சென்று தினம் அமிர்தகடேஸ்வரரை ஆராதித்து வந்தார். இன்றும் மணல்மேட்டில் மார்கண்டேயர் வாழ்ந்த இடத்தில் ஒரு பெரிய சிவாலயம் அமைந்துள்ளது).

மார்கண்டேயர் அம்பிகை கூறியபடி திருக்கடவூர் ஸ்தலத்தில் எழுந்தருளியுள்ள அமிர்தகடேஸ்வரரை தினம் தொடர்ந்து வழிபட்டு வரும் நாளில், அவருக்குக் குறிப்பிட்ட அந்த நாளும் வந்தது. மார்கண்டேயர் அமிர்தகடேஸ்வரரைப் பூஜித்துக் கொண்டிருக்கும்போது எமதர்மன் தன் வாகனமேறி பாசக் கயிற்றுடன் அவன் உயிரைக் கவர வந்தார். தன் தவ பலத்தால் யமதர்மன் வந்ததைக் கவனித்து விட்டான். உடனே மார்கண்டேயர் தான் பூஜை செய்து வந்த அமிர்த கடேஸ்வரரை ஆலிங்கனம் செய்து கொண்டார். தான் வருவதை மார்கண்டேயர் உணர்ந்து கொண்டார் என்றதுமே அவரின் தவ வலிமையை தர்மராஜன் உணர்ந்து கொண்டான். ஆனாலும் தர்மராஜன் தன் கடமையிலிருந்து தவற விரும்பவில்லை. மார்கண்டேயனிடம் 'உன் பூஜையை முடித்துக்கொள்! உன் பூவுலக வாழ்வு முடிந்து விட்டது. உன் ஆயுட்காலம் முடிந்து விட்டது' என கூற, அதைக் கேட்ட மார்கண்டேயன் பயப்படவில்லை. மஹா மிருஞ்ஜய மந்திரத்தை ஓதிக் கொண்டே தாயை குட்டி எப்படி பற்றிக்கொள்ளுமோ அதே போல் அவன் சிவலிங்கத்தை மேலும் இறுக்கி கட்டிப்பிடித்துக் கொண்டுவிட்டான்.



தன் கடமை தவறாத எமதர்மன் வேறு வழியின்றி, சிறுவனின் உயிரைக் கவர, அவன் கழுத்தில் விழுமாறு பாசக்கயிற்றை வீசினார். மார்கண்டேயன் சிவலிங்கத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறுக்கமாகக் கட்டிக் கொண்டிருந்ததால், சிவலிங்கத்தின் மீதும் அப்பாசக் கயிறு விழுவது தவிர்க்கமுடியததாகிவிட்டது. சிறுவனுடன் சேர்த்து சிவலிங்கம் பாசக் கயிற்றால் இழுக்கப்பட்டது. தன்னை பாசக் கயிறு இழுப்பதால் வெகுண்டெழுந்த சிவபெருமான் தோன்றி எமன் நெஞ்சில் எட்டி உடைத்து, மார்கண்டேயன் என் பக்தன். அவனைத் தொடாதே! இவன் சிரஞ்சீவியாக வாழ்வான்' என கூறினார். எமன் மூர்ச்சித்து மரக்கட்டையானான். பகவான் ஆள் காட்டி விரலை உயர்த்தி யமனை எச்சரிக்கை செய்யும் படங்கள் இன்றும் கோவிலில் சித்தரிக்கின்றன. யமன் வீசிய பாசகயிற்றின் அடையாளம் இன்றும் லிங்கத்தில் தெரியும்.

சிவபெருமான் மார்கண்டேயரிடம் அவன் இப்போது உள்ளதுபோல் எப்பொழுதும் 16 வயதுடன் சிரஞ்சீவியாய் இருப்பானென ஆசீர்வதித்து மறைந்தார். சிவபெருமானிடம் வரம் பெற்ற மார்கண்டேயன் புத்திர சோகம் தீர்ந்த பெற்றோரின் கால்களில் விழுந்து வணங்கினான். அவனைக் கட்டித்தழுவி ஆனந்தத்தில் கண்ணீர் விட்டனர் அவன் பெற்றோர். பின்னாளில் மிகப்பெரிய ரிஷியாக மாறிய அவர், பல புராணங்களையும் ஸ்தோத்திரங்களையும் இயற்றியுள்ளார்.

இந்நிகழ்ச்சியை தன் அந்தாதியில் குறிப்பிட்டுள்ளார் அபிராமி பட்டர்.

மனிதரும் தேவரும் மாயா னிவரும் வந்து, சென்னிக்
குனிதரும் சேவடிக் கோமளமே, கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என் புந்தி என்னாளும் பொருந்துகவே.

(அபிராமி அந்தாதி - பாடல் 4)

மனிதர்களும், தேவர்களும் என்றும் அழியா அமரத்தன்மை படைத்த முனிவர்களும் வந்து தலை வணங்கும் சிவந்த பாதத் தாமரைகள் படைத்த அபிராமியே! தன்னுடைய நீண்ட ஜடாமுடியில் கொன்றை மலரையும், பனி போன்ற குளிர்ச்சி பொருந்திய நிலவினையும் பாம்பினையும் பகீரதி எனப்படும் கங்கையையும் கொண்டிருக்கும் சிவ பெருமானும் நீயும் என் மனதில் என்றும் இருந்து அருள வேண்டும் என்று வேண்டுகிறார் பட்டர்.

இப்பாடலில் 'மனிதர்களும், தேவர்களும், மாயா னிவரும்' என்று குறிப்பிடுகையில் மனிதர்கள் மற்றும் தேவர்களைப் பன்மையில் குறிப்படுகிறார். ஆனால் மாயா முனிவர் என்று ஒருமையிலேயே விளிக்கிறார். அந்த ஒரே மாயா முனிவர் யார்? அவர்தான் திருக்கடையூரில் அமிர்தகடேசரால் மாயா வரம் பெற்ற மார்கண்டேயர். அமிர்தகடேசர்தானே மாயா வரம் கொடுத்தார்! அவர் ஏன் அபிராமியை பணியவேண்டும்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமானின் இடபாகத்தில் அம்பிகைதானே இடம் கொண்டுள்ளாள்!. சிவபெருமான் தர்மராஜனை உதைத்த போது இடது காலால்தானே உதைத்தார். அந்த கால் அம்பிகையின் கால் அல்லவா? சிவம் ஒரு கருவியே தவிர அதை இயக்குபவள் அம்பிகையே அல்லவா! ஈரேழ் உலகங்களிலும் மிகுந்த சக்தி வாய்ந்தது எது என்றால் அது தான் 'காலம்'. அதன் சக்தி மிகப்பெரியது. அதைப் படைத்த சக்தியைத் தவிர வேறு யாராலும் மாற்றி அமைக்க டியாது. அவ்வாறு மாற்றி அமைக்கவும் அசாதாரணமான காரணம் வேண்டும். அதனால்தான் அபிராமியும் அமாவாசையன்று பௌர்ணமியை வரவழைக்க தன் தாடங்கத்தைத் தான் பயன் படுத்தினாளே தவிர, உண்மையான நிலவை கொண்டுவரவில்லை. இயற்கையைப் படைத்து அதற்குரிய எல்லைகளை வகுத்து அதை உரியவர்களிடம் கொடுத்து அதன்படி நடத்தி வருபவளல்லவா அபிராமி! தான் வகுத்த வரைறைகளை தானே மாற்ற எப்படி அவள் முன் வருவாள்? மிகவும் அவசியம் என்றால் மட்டுமல்லாது அவ்வாறு மாற்றினால் அது ஒரு மோசமான முன்னுதாரணமாகிவிடுமல்லவா! அதனால் அதைச் செய்யவில்லை. ஆனால் இங்கு ஒரு உண்மையான சிவபக்தன். சிவன் தன்னைக் காப்பாற்றுவாரென்று மிகுந்த நம்பிக்கையோடிருக்கிறான். அதுமட்டுமா!

மார்கண்டேயனுக்கு 16வது வயதில் மரணம் சம்பவிக்கும் என்றும் அவனுக்கு ஆயுள் குறைவு என்பதும் அவன் தந்தையான மிருகண்டு மகரிஷிக்கு தெரியுமல்லவா? ஆகையால் மகனை எப்படியாவது காக்க விரும்பிய மிருகண்டு முனிவர், அவனுக்கு உபநயனம் செய்வித்த போது, ''பெரியோர்கள் யாரை கண்டாலும் தயங்காது அவர்கள் பாதங்களை நமஸ்கரித்து அவர்களது ஆசிகளை பெற்று வருவாயாக'' என்று பணித்தார். மார்கண்டேயனும் அதே போல தான் பார்க்கும் பெரியவர்களைப் பணிந்து அவர்களது நல்ஆசிகள் பெற்று வந்தான்.

சப்த ரிஷிகள் ஒருமுறை மிருகண்டு முனிவரின் ஆஸ்ரமத்திற்கு வந்தபோது, மார்கண்டேயன் இவ்வாறு அவர்களின் திருப்பாதங்களைப் பணிந்தபோது, அவர்களும், ''தீர்க்காயுஷ்மான் பவ'' என்று வாழ்த்திவிட்டார்கள். பிறகு தான் அவர்களுக்குத் தெரிகிறது மார்கண்டேயனுக்கு 16வது வயதில் மரணம் சம்பவிக்கும் என்று. சத்தியத்தையே பேசும் சப்தரிஷிகளின் வாக்கு பொய்க்கக் கூடாதல்லவா? அதனால் இதைப் பற்றி விவாதிப்பதற்காக மார்கண்டேயனுடன் பிரம்மாவிடம் செல்கிறார்கள். பிரும்மாவைக் கண்டதும் மற்றவர்கள் பிரச்சனையைக் கூறுமுன் தன் தந்தை சொல்படி உடனே அவர் திருப்பாதங்களைப் பணிகிறான் மார்கண்டேயன். அவரும் ''தீர்க்காயுஷ்மான் பவ'' என்று ஆசி வழங்கிவிடுகிறார். படைத்து தலை எழுத்தை எழுதும் பிரம்மனே ஆசி வழங்கிவிட்டார். இப்படி பார்க்கும் பெரியவர்கள் எல்லாம் அவனுக்கு ஆசி வழங்கவே அவர்கள் ஆசி அனைத்தும் சேர்ந்து அவனது தலையெழுத்தையே மாற்றிவிடுகிறது.

பெரியவர்களின் ஆசியை நிறைவேற்றுவது பரம்பொருளின் கடமையல்லவா? ஆகவே தான் சிவபெருமான் தோன்றி மார்கண்டேயனை காத்ததோடு மட்டுமல்லாமல் அவன் என்றும் பதினாறு வயதுடையவனாக, அதாவது சிரஞ்சீவியாக இருப்பான் என்று வரம் தருகிறார். அவர் இன்றும் பதினாறு வயது இளைஞன் தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(பெரியோர்களை விழுந்து வணங்குவது என்பது நமது சனாதன தர்ம பாரம்பரியங்களில் ஒன்று. பகவான் கிருஷ்ணர் தம்மினும் பெரியோர்களை கண்டால் தவறாது அவர்களின் திருப்பாதங்களில் விழுந்து வணங்குவார். எனவே வயதிலும் தகுதியிலும் சிறந்து விளங்கும் பெரியோர்களை கண்டால் அவர்களை விழுந்து வணங்கி அவர்களது ஆசியை பெறவேண்டும். அது உங்களை காக்கும் அரண் மட்டுமல்ல உங்களது தலையெழுத்தையே மாற்றவல்லது. அதே சமயம் ஆதாயத்துக்காக தகுதியற்றவர்களின் கால்களில் விழுந்தால் அவர்களின் பாபங்களையும் நீங்கள் சேர்த்து சுமக்க வேண்டியிருக்கும்).

இப்படி அவன் இளமையாக இருந்த போது அவனை சிரஞ்சீவியாக இருக்க சப்த ரிஷிகளும் பிரும்மாவும் வாழ்த்தியிருக்கும் போது அவர்கள் வார்த்தை பொய்க்கலாமா! அதே சமயம் காலனை விரட்ட சக்தியை விட்டால் வேறு வழியில்லை. மிகுந்த சக்தி வாய்ந்த காலனிடமிருந்து மார்கண்டேயரைக் காப்பாற்ற அதைப் படைத்த சக்தியினால் மட்டுமே முடியும். அதனால் தான் சிவபெருமான் மிகுந்த சக்தி வாய்ந்த, சக்தியம்சமான, தன் இடது காலால் யமனை உதைத்தார். யமன் சக்தி அனைத்தும் இழந்து மூர்ச்சித்து விழுந்தவர்தான். பிரக்ஞையின்றி வெகு காலம் அப்படியே கிடந்தார். அதுமட்டுமல்ல. அம்பிகையின் திருப்பாதம் எவரையும் மன்னிக்கவல்லது. அதனால் தான் பின்னர் எல்லா தேவர்களும் வந்து அம்பிகையை துதித்து ''அம்மா!.. யமதர்மராஜன் இல்லாமல் உலகில் ஜனன மரண வளையம் உடைபட்டு விட்டது. உயிரினங்கள் பெருத்து வயோதிகத்தாலும் நோய் நொடிகளாலும் மிகவும் துன்பத்தால் வருந்துகின்றன. மரணம் ஒன்றே அவர்களைத் துன்பத்திலிருந்து காக்க முடியும். இனி பூவுலகில் வசிப்பதற்கு இடமேயில்லை என்ற நிலையும் ஏற்பட்டு விடும். நீங்கள் மனது வைத்தால் தான் மூர்ச்சித்து விழுந்துகிடக்கும் யமதர்மராஜனை மீட்டெடுக்க முடியும். கருணை கூர்ந்து யமதர்மராஜனுக்கு உயிர் கொடுத்து, உலக நியதியை நிலைநிறுத்துங்கள்'', என்று மனருகி வேண்டினர்.

அம்பிகையும் தேவர்களின் வேண்டுகோளை ஏற்று யமன் செயலற்று இருப்பதால் பூமியில் ஜனன மரண சுழற்சி பாதிக்கப்பட்டிருப்பதால், அந்த பூமி அதன் இயல்பான வழியில் சஞ்சரிக்க வேண்டும் என அமிர்தகடேஸ்வரரைப் பிரார்த்திக்க, காலசம்ஹாரமூர்த்தியாய் எழுந்தருளிய ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் யமனை மீண்டும் உயிர்ப்பித்தார். சிவபெருமான் தன் வலது காலை பயன்படுத்தி இருந்தால் யமன் முற்றிலும் உயிரிழந்து மூவுலகங்களும் மீளாத் துயரில் ஆழ்ந்திருப்பர்.

யமன் உயிர்பிக்கப்பட்டாரே தவிர அவருக்கு மீண்டும் அவர் பதவியை உடனே கொடுக்கவில்லை. யமன் உயிரிழந்தபோது அவரிமிருந்து எடுத்துக் கொண்ட தண்டத்தையும் ஈசன் திருப்பித் தரவில்லை. அதனால் தர்மராஜன் பல ஊர்களுக்கும் சென்று தன் பதவியை பெறுவதற்காக, ஈசனை வணங்கி வந்தான். அவ்வாறு வருகையில் சென்னை அருகே உள்ள வேளச்சேரியில் உள்ள தண்டீஸ்வரர் திருக்கோயிலுக்கு வந்து, அந்த இடத்தில் ஒரு தீர்த்தத்தை ஏற்படுத்தி, அதிலிருந்து தினம் ஈசனுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து வந்தான். அவருடைய பக்தியை மெச்சிய சிவபெருமான் அவருக்குக் காட்சி தந்து, அவருடைய தண்டத்தை திருப்பிக்கொடுத்து, அவரது பதவியையும் திருப்பிக் கொடுத்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதனால் இங்குள்ள குளம் எமதீர்த்தகுளம் என்ற பெயரை பெற்றதாகவும் புராணங்கள் கூறுகிறது. இதன் காரணமாக திருக்கடையூருக்கு அடுத்து 60ம் கல்யாணம் செய்ய பலர் இங்கு வருவதும், இங்கு வந்தால் எமபயம் நீங்கும் என்பதும் பக்தர்களின் நம்பிக்கை ஆகும்.

காலனிடமிருந்து தப்பிய மார்கண்டேயர் பெரிய ஞானியானார். சிவ பக்தராக மட்டுமல்லாமல் சிறந்த விஷ்ணு பக்தராகவும் விளங்கினார். (அந்நாட்களில் சிவ, விஷ்ணு பேதங்கள் கிடையாது. எல்லா முனிவர்களும் தங்களுக்கு இஷ்டமான ஒரு தெய்வத்தை கொண்டிருந்தாலும் எல்லா தெய்வங்களையும் ஆராதிப்பார்கள். அவர்களிடமிருந்து வரங்களையும் பெற்றிருக்கிறார்கள். சிவனும் விஷ்ணுவுமே உறவுமுறையில் இணைந்திருக்கும்போது, நாம் தான், நம் அறியாமையால் பேதம் கற்பித்துக் கொண்டிருக்கிறோம்).

ஒருமுறை அவருக்கு லட்சுமி தேவியை தனது மகளாகவும், நாராயணரை மருமகனாகவும் அடைய வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. இதற்காக அவர் இங்கு துளசி செடி நிரம்பிய வனத்தில் அமர்ந்து கடும் தவம் இருந்தார். அவரது தவத்தை கண்டு மனம் மகிழ்ந்த மகாவிஷ்ணு, தன்னருகில் அமர்ந்துள்ள இலட்சுமியை நோக்கி, 'தேவி! நீ சென்று மார்க்கண்டேயருக்கு மகளாக இரு. தக்க நேரத்தில் நான் வந்து உன் கரம் பிடிப்பேன்' என்று கூறவும், லட்சுமி தேவியும் சிறந்த பக்திமானான மார்கண்டேயருக்கு மகளாக இருக்க மிகுந்த விருப்பத்துடன் சம்மதித்து, சிறு குழந்தையாக அவதரித்து துளசி வனத்தை அடைந்து, ஒரு துளசி செடியின் கீழ் கிடந்தாள். தவம் செய்து கொண்டிருந்த மார்கண்டேயருக்கு ஒரு சிறு குழந்தை அழும் குரல் கேட்டது. சுற்றிலும் பார்த்த போது, துளசி செடியின் கீழ் ஒரு பெண் குழந்தை கிடப்பதைக் கண்டார். உடனே ஓடிச் சென்று குழந்தையை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டு தன் இருப்பிடம் திரும்பினார். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த குழந்தை பருவ வயதை அடைந்தது.

அவளுக்கு திருமணம் செய்து வைக்க தக்க மணமகனைத் தேடிக் கொண்டிருக்கையில் ஒருநாள், ஒரு வயோதிக பிராமணர் கந்தலான ஆடையை உடுத்திக்கொண்டு முனிவரின் ஆசிரமத்துக்கு வந்தார். அவரை வணங்கி வரவேற்ற முனிவர், 'தாங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?' எனக் கேட்க, அதற்கு முதியவர், 'நான் உயர்ந்த குடியில் பிறந்தவன். வயதான காரணத்தால் தள்ளாமையால் வருந்துகிறேன். மனைவி இல்லாதவனுக்கு இல்லறமில்லை. தங்கள் மகளை எனக்குத் திருமணம் செய்து தர வேண்டும்' என்றார்.

இதைக் கேட்டு திடுக்கிட்ட முனிவர் 'அவள் மிகச் சிறியவள். தங்களுக்கு அவள் இணையாக மாட்டாள். அதனால் வேறு என்ன வேண்டுமோ கேளுங்கள். தருகிறேன்'', என்றார்.

ஆனால் முதியவரோ தனக்கு அவள் மகள்தான் வேண்டும். அவளைத் திருமணம் செய்து தராவிட்டால் அவர் எதிரிலேயே உயிரை விடுவேன் என்று பயறுத்தினார்.

செய்வதறியாது திகைத்த முனிவர் தனது மகளிடம் சென்று நடந்ததை விளக்கினார். அதற்கு அவள், வயோதிகரை மணக்க சம்மதிக்கமாட்டேன். வற்புறுத்தினால் அவளும் உயிரை விட்டு விடுவதாகக் கூறிவிட்டாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மன கலக்கமடைந்த மார்க்கண்டேயர், பகவானை சரண் அடைந்தார். பகவான் தனது நாடகத்தை முடித்து அவர் முன்பு மகாவிஷ்ணுவாக காட்சி அளித்தார். 'முனிவரே! உமது ஆசையை நிறைவேற்றவே இங்கு வந்தேன். உமது மகள் பூமாதேவியை எனக்கு திருமணம் செய்து தரவேண்டும்'', என்றார். அதற்கு முனிவர், அவருக்குப் பெண் கொடுப்பதில் சம்மதமென்றும், ஆனால் அவள் குழந்தையாக இருப்பதால் சரியானபடி உப்பு போட்டுக்கூட சமைக்கத் தெரியாதே என்று கேட்க, இனி தானும் உப்பில்லாமலேயே உண்பதாகவும், உப்பில்லாமல் தனக்கு நைவேத்தியம் படைப்பவரும், உப்பற்ற பண்டங்களை உண்பவரும் எனது அருளை பரி பூரணமாக பெறுவர். உமது மகளை எனக்கு மணம் செய்து தருவீராக' என்றார்.

இதைகேட்டு மகிழ்ந்த முனிவர், 'தயாநிதே! எனது புதல்வியைத் தங்கள் மனைவியாக ஏற்றுக் கொண்டு, என்றும் இத்திருத்தலத்திலேயே எனது புதல்வியுடன் இருக்க வேண்டும். இந்த தலம் தங்களது பெயரால் அழைக்கப்பட வேண்டும்'' என்ற வரங்களை கேட்டார். பெருமானும் அவர் கேட்ட வரங்களை வழங்கி அருளினார்.

பின்னர் கல்யாண ஏற்பாடுகள் தடபுடலாக நடந்தன. திருமால் பூமாதேவியை பிரம்மன் முன்னிலையில் தேவர்கள் அனைவரும் கூடி நிற்க, துளசி வனத்தில் ஐப்பசி மாதம் திருவோண நட்சத்திரத்தன்று திருமணம் செய்து கொண்டார். அந்த தலமே உப்பிலியப்பன் கோயில் என்று வழங்கி வருகிறது. இத்தலத்திற்கு வந்து ஸ்ரீனிவாசப் பெருமானைச் சரணடைந்தோர் அவரது அருளை பரிபூரணமாய் பெறுவது திண்ணம். திருமணமாகாதவர்கள் இங்கு வந்து ஸ்ரீ பூதேவி, ஸ்ரீ மார்கண்டேயர் சமேத ஸ்ரீ ஒப்பிலாத பெருமாளை வழிபட்டால், அவர்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறும் என்பது திண்ணம்.

இத் திருமணம் முந்ததும், மணமக்களை மனம் குளிர ஆசீர்வதித்துவிட்டு, பல திருத்தலங்களுக்கும் யாத்திரையைத் தொடங்கினார். பலத் திருக்கோயில்களில் மார்கண்டேய தீர்த்தம் என்ற தீர்த்தம் இருக்கும். அங்கெல்லாம் வந்து திருக் குளங்களை உருவாக்கி, அதன் மூலம் அத்தல இறைவனுக்கு அபிஷேகம் செய்து வணங்கி அந்த தெய்வத்தின் பேரருள் பெற்றிருக்கிறார்.

பிற்காலத்தில் அவருக்கு பல சீடர்கள் இருந்தனர். அவர் நீண்ட காலம் பெருமையுடன் வாழ்ந்தார். மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்பவர்களை 'சிரஞ்சீவி' என்பர். அஸ்வத்தாமன், மகாபலி, வியாசர், அனுமன், விபீஷணன், கிருபாச்சாரியார், பரசுராமன், மார்கண்டேயர் ஆகியோர் சப்த சிரஞ்சீவிகள் எனப்படுவர். மரணமில்லாப் பெருவாழ்வு எய்தியிருக்கும் இவர்கள் பூதவுடலுடன் இல்லையென்றாலும் இன்னும் தங்கள் ஆன்மாவுடன் இங்கு உலவிக்கொண்டு தானிருக்கிறார்கள். ஸ்ரீ மார்கண்டேய மகரிஷி இன்னமும் சிரஞ்சீவியாக இருந்து தன்னை வணங்குவோரை காத்து ரக்ஷிக்கிறார். இவருக்கு பாரதத்தில் பல இடங்களில் க்ஷேத்திரங்கள் உள்ளன.

ஹிமாசல பிரதேசத்தில் பிலாஸ்பூர் மாவட்டத்தில் பிலாஸ்பூரிலிருந்து 20 கி.மீ. தொலைவில் காகஸ் - பெர்ஹாம்பூர் நெடுஞ்சாலையில் மார்கண்டேய என்ற க்ஷேத்திரம் உள்ளது. இது ஒரு அழகிய சிறிய கிராமம். இங்குள்ள தலபுராணத்தின்படி, மார்கண்டேயர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இங்கு பிறந்ததாகவும் இங்குள்ள சிவபெருமானை வணங்கி வரும் வேளையில் அவருடைய 12 வயதில் யமன் அவர் உயிரைக் கவர வரும்பொழுது, சிவபெருமான் யமனைக் கொன்று மார்கண்டேயரின் உயிரைக் காத்து, அவரை சிரஞ்சீவியாக ஆசீர்வதித்ததாகவும் கூறுகிறது. இது ஒரு வைகாசி மாதத்தில் நடைபெற்றதால் அதைக் குறிக்கும் வகையில் ஒவ்வொரு வருடம் வைகாசி மாதத்தில் இங்கு திருவிழா நடைபெறுகிறது. இத் திருவிழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்கிறார்கள். இவ்விடத்தில் ஒரு அருவி ஓடுகிறது. ஒவ்வொரு வருடமும் நடைபெறும் சார்தாம் யாத்திரையின் போது இந்த அருவியில் நீராடுவதும் ஒரு அங்கமாகும். அது இல்லாமல் சார்தாம் யாத்திரை நிறைவடைவதில்லை. இந்த அருவியில் ஸ்நானம் செய்தால் குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்யம் கிடைக்கு மென்றும், குழந்தைகளின் நோய்கள் குணமாகும் என்றும் நம்புகின்றனர். இத் தலத்திலிருந்து ஒரு குகை வியாசரின் குகைக்குச் செல்வதாக கூறப்படுகிறது. இந்த குகைகள் மூலமாக முனிவர்கள் மற்றவர்களின் கண்ணில் படாமல் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது. குழந்தை பாக்யம் கிடைக்க, இங்குள்ள மார்கண்டேயரின் ஒரு கண்ணில் கண்மையை இட்டுவிட்டு, குழந்தை பிறந்ததும் அடுத்த கண்ணிற்கும் மை இடுவதாகவும் வேண்டிக் கொள்கின்றனர். அவர்கள் பிரார்த்தனை உடனே பலிப்பதாக பக்தர்கள் கூறுகிறார்கள். குழந்தையின் நீண்ட ஆயுளுக்கும் இங்கு வந்து வேண்டிக் கொள்கிறார்கள்.

இதே வரலாற்றை மையமாக வைத்து ஹரியானாவில் குருக்ஷேத்திர மாவட்டத்தில் ஷகாபாத் மார்கண்டா என்ற இடத்தில் மார்கண்டா ஆற்றின் கரையில் மார்கண்டேஷ்வர் மகாதேவ் திருக்கோயில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஜூலை-ஆகஸ்டு மாதத்தில் (சிரவண மாதம்) நிறைய பக்தர்கள் இங்கு வருகிறார்கள். இங்குள்ள ஆற்றில் தண்ணீர் வற்றாமல் ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த ஆற்றில் பித்ருக்களுக்கு தர்பணம், பிண்டம் போடுதல் ஆகியவை நடைபெறுகின்றன.

தினம் மார்கண்டேய மகரிஷியை நினைத்துத் துதித்து வழிபட்டால் வளமான ஆரோக்யமான வாழ்வைப் பெறலாம்.

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7.பட்டரைக் காத்த பராசக்தி

பொன்னி நதி பாய்ந்து எல்லாவகை வளம் பெற்று விளங்குவதோடு பல்வகைக் கலைகளும் இயல்பாக வளர்ந்து திருத்தலங்கள் நிறையப்பெற்ற புகழ் கொண்ட நாடு சோழ நாடு. அத் திருநாட்டில் கல்வி கேள்விகளில் மட்டுமல்லாமல் ஆன்மீகத்திலும் சிறந்து விளங்கிய பல மெய்யன்பர்கள் தோன்றியுள்ளனர். அவ்வாறு பக்திப் பயிர் வளர்க்கும் பொன்னான சோழவள நாட்டின் காவிரிக்கரையில் உள்ள சிவாலயங்களில் ஒன்று திருக்கடையூர் அருள்மிகு அபிராமிவல்லி சமேத அமிர்த கடேஸ்வரர் ஆலயம்.

கிட்டத்தட்ட ந்நூறு ஆண்டுகளுக்கு ன்னர் அந்த ஆலயத்தின் அத்யான பட்டர் என்னும் தலைமை பட்டராக ஆன்ற ஒழுக்கம் நிறைந்த கல்வியும் பரந்த அறிவும் சிறந்த ஆற்றலும் கனிந்த பக்தியும் பொருந்தி விளங்கிய அமிர்தலிங்க ஐயர் என்பவருக்கு தோன்றியவர் சுப்பிரமணியன். தந்தையிடமிருந்து சங்கீதப் பயிற்சியையும், தேவி உபாசனையும் கற்றுக் கொண்ட அவர், அதன் மூலம் இளமை முதலே ஸ்ரீ அபிராமி அம்மையின் பால் தனிப்பற்றும், பக்தியும் பூண்டு வழிபட்டு வந்தார். அவருக்கு எல்லாமே அன்னை அபிராமிதான். எப்பொழுதும் அவர் அபிராமி சன்னதியிலேயே இருந்து அன்னையின் பேரன்பிலேயே திளைத்து வந்தார். தமிழ் தவிர வடமொழியிலும், சங்கீதத்திலும் தேர்ச்சி பெற்றிருந்த அவர், தம் உள்ளத்தே அன்னையின் பால் தோன்றும் அன்பின் விளைவாக பல துதிகளைத் தாமே இயற்றிப் பாடி வந்தார். தகுந்த காலத்தில் அவருக்குத் திருமணம் செய்வித்தார் அமிர்த லிங்கய்யர்.

அச்சமயத்தில் மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள திருவிடை மருதூரில் பாஸ்கர ராயர் என்னும் ஸ்ரீ வித்யா உபாசகர் வசித்து வந்தார். அவரின் பெருமையைக் கேள்விபட்டு அவரை தஞ்சைக்குத் தருவித்து பின்னர் இவ்வூரில் குடியமர்த்தினார் தஞ்சை மன்னர். தேவி லலிதா பரமேஸ்வரியின் பரிபூரண அருள் பெற்ற அவர், லலிதா சகஸ்ரநாமத்திற்கு உரை எழுதிய அருளாளர். அவர் ஒரு முறை கடன் பட்டு கலங்கிய போது அம்பிகையே வந்து பாஸ்கரராயரின் கடனை அடைத்தாள் என்பது வரலாறு.

ஒருமுறை வித்வத் சபையில் பாஸ்கரராயரின் பெருமையைச் சீர்குலைக்கும் கத்தான் ஒரு அம்பாள் உபாசகர், லலிதா சகஸ்ரநாமத்தில் வரும் நாமமான சதுஷ் ஷஷ்டி கோடி யோகிநீ கண சேவிதா (அறுபத்துநான்கு கோடி யோகிநிகளால் பணிவிடை செய்யப்படுபவள்.) என்பதில் உள்ள 64 கோடி யோகினிகளின் பெயரும் தெரியுமா என்று கேட்க, உடனே மடை திறந்த வெள்ளம் போல் அனைவரின் பெயரையும், அவர்களின் தோற்றத்தையும் கூறத்தொடங்கினார் பாஸ்கரராயர். அம்பிகையே கிளி ரூபத்தில் வந்து அவருடைய காதில் சொல்லச் சொல்ல தான் சொன்னதாக பின்னர் அவர் தெரிவித்தார். மற்றொரு முறை ஒரு சந்நியாசி தன்னை பாஸ்கரராயர் நமஸ்கரித்து வணங்காமல் உதாசீனம் செய்து விட்டதாக அவரிடமே கூற, உடனே பாஸ்கரயார் அந்த சந்நியாசியின் தண்டத்தை கீழே வைக்குமாறு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூற, அவரும் அதை கீழே வைத்தார். உடனே பாஸ்கரராயர் அந்த தண்டத்திற்கு தண்டனிட்டு வணங்க, உடனே அந்த தண்டம் தீப்பிடித்தெரிந்து சாம்பலானது.

உடனே அந்த சந்யாசி தனக்கு இந்த கதி நேரக்கூடாதென்றுதான் பெரியவர் தன்னை வணங்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டு, அவர் பெருமையை மட்டுமல்லாமல், ஒரு அம்பாள் பக்தரின் பெருமையையும் உணர்ந்து கொண்டு, உடனே அவர் காலில் இவர் வீழ்ந்து வணங்கினார். அம்பாளின் பக்தரான சுப்ரமணியம் அதனால் சாக்த நெறியில் சக்ரவர்த்தியாக விளங்கிய பாஸ்கரராயரை அடிக்கடி சந்தித்து தன் ஞானத்தை விரிவாக்கி வந்தார். இத்தகைய பெரும் பக்தரான பாஸ்கரராயருடன் நட்பு பூண்டு தன் மகன் சுப்ரமணியன் அடிக்கடி திருவிடை மருதூர் சென்று அவரைச் சந்தித்து உரையாடி வருவதைப் பெருமையாகக் கருதினார் அமிர்த லிங்கய்யர்.

சாக்த முறையை அதிதீவிரமாகக் கடைபிடிக்கறவர்களை சாக்தர்கள் என்பர். இவர்களுக்கு வசீகர சக்தி பெருகும். மாத்ரு பாவம் இவர்களிடம் அதிகமாக இருக்கும். எல்லா பொருள்களும் இவர்களுக்கு அம்பாளாகவே தெரியும். அவர்களுக்கு கிடைக்கும் எல்லா ஐஸ்வர்யம் அம்பாள் போட்ட பிச்சையாகவே தோன்றும்! உண்ணும் உணவு, உடுக்கும் உடை, பருகும் நீர், மெல்லும் வெற்றிலை எல்லாம் அவள் இட்ட பிச்சை என்று பெருமையாகச் சொல்லிக் கொள்வர். சுப்ரமண்யமோ, ஒருபடி மேலே போய், கோயிலுக்கு வரும் அனைத்து பெண்களையுமே அபிராமியின் அம்சமாகவே எண்ணி வழிபடுவார். அர்ச்சனைக்காக கைகளில் கொண்டுவரும் மலர்களை அந்தப் பெண்கள் மேல் தூவி மகிழ்வார். அவர்களின் பாதங்களில் விழுந்து வணங்குவார்.

அவரது ஞானக் கண்களுக்கு அந்தப் பெண்கள் அபிராமி அம்சமாகவே தோன்றியதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் உலகத்தவருக்கு அவருடைய ஆனந்த நிலையும், அதன் காரணம் புரியாமல் போகவே இவர் ஏதோ துர்தேவதையை ஆராதித்து வந்த காரணத்தால் இப்படிப் பைத்தியமாய் ஆகி, ஆசாரங்களை எல்லாம் கைவிட்டுக் கெட்டுப் போய்விட்டார் என்று சொல்லித் தூற்ற ஆரம்பித்தனர். சுப்ரமணிய ஐயரோ அதைக் காதில் வாங்காமலும், சற்றும் லக்ஷியம் செய்யாமலுமே அபிராமியைத் துதிப்பதும், அவள் பால் துதிகள் இயற்றிப் பாடுவதுமாய் இருந்தார். தினம் கோயிலில் அன்றைய திதிகளைக் கூறி அதற்கேற்றவாறு வழிபாட்டு நியமங்களை ஏற்பாடு செய்வதும் அவரது நித்ய கடமைகளில் ஒன்றாகும்.

சதா சர்வ காலம் அபிராமி சன்னதியிலேயே இருந்து, அபிராமி அம்மன் திருநாமத்தையே உச்சரித்து வந்த அவர் மற்றவர்க்கு இதனால் பைத்தியம் போல் தோற்றம் அளித்தார்.

ந ஜானாமி தானம் த சத்யான யோகம்
ந ஜானாமி தந்த்ரம் ந சஸ்தோத்ரமந்த்ரம்
ந ஜானாமி பூஜாம் ந ச ந்யாஸயோகம்
கதிஸ்த்வம் கதிஸ்த்வம் த்வமேகா பவானீ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த துதியின் பொருள் என்ன தெரியுமா? ஹே பவானி! எனக்கு தானம் பண்ணவும் தெரியாது, யோகம் பண்ணவும் தெரியாது, மந்த்ரம் ஸ்தோத்ரம்னு எதுவுமே தெரியாது. ஒரு பூஜையைக் கூட ஒழுங்காகச் செய்யத் தெரியாதம்மா! எனக்குத் தெரிந்ததெல்லாம் நீயே, நீ மட்டும்தான். நீயே எனக்கு கதி தாயே!.

அவ்வாறுதான் சுப்ரமணியம் இருந்தார். அவருக்கு அபிராமிதான் எல்லாம். எல்லோருமே அவருக்கு அபிராமிதான். யோக முறையில் அம்பிகையைத் துதித்து வந்த அவர் சரியை, கிரியை என்பவற்றைக் கடந்து யோகநிலையின் ஆதார பீடங்களில் யாமளை திருக்கோலத்தைக் கண்ணாரக் கண்டு இன்புற்று இடைப்பட்ட கிரந்திகளை எல்லாம் தாண்டிச் சென்று ஸஹஸ்ராரத்தில் ஒளிரும் ஒளிமயமான லலிதையின் திருவருளைப் பரிபூரணமாய் உணர்ந்து அந்த ஆனந்தத்தில் திளைத்து இன்புற்று இருந்தார். ஆனால் உலகத்தவருக்கு அவருடைய ஆனந்த நிலையும், அதன் காரணம் புரியாமல் போகவே இவர் ஏதோ துர்தேவதையை ஆராதித்து வந்த காரணத்தால் இப்படிப் பைத்தியமாய் ஆகி, ஆசாரங்களை எல்லாம் கைவிட்டுக் கெட்டுப் போய்விட்டார் என்று சொல்லித் தூற்ற ஆரம்பித்தனர்.

சத்தியமான நித்தியத்தில் நிலைத்த மனமுடையார் மற்றவர் ஏச்சையும் பேச்சையும் ஒரு பொருட்டாகக் கருதுவரோ? ஆகையால் சுப்ரமணியம் உண்மை இன்னதென்று உணராத மக்களைப் பற்றி கவலை கொள்ளாமல், தன்னை அம்பிகையே வழிநடத்துகிறாள் என்று உளமார நம்பி, அதன் வழியே செயல்பட்டு வந்தார். ஆனால் இவருடைய செயல்கள் பலர் மனதில் வெறுப்பையும் கோபத்தையும் ஏற்படுத்த, உண்மையை உணராமல், அவர்கள் சுப்ரமணியன் மீது வேண்டா வெறுப்பை வளர்த்துக் கொண்டு அவர் மீது பல பழிச்சொற்களைக் கூறி திரிந்து வந்தனர்.

இந்தப் பித்தனின் புகழை ஊரறிய, உலகறியச் செய்ய திருவுள்ளம் கொண்டாள் அன்னை அபிராமி! அதற்கான நாளும் நெருங்கியது.

ஒரு தை அமாவாசையன்று தஞ்சையை ஆண்டுவந்த சரபோஜி மன்னர் காவிரிபூம்பட்டினம் சென்று கடலில் நீராடி பித்ரு கடன்களை டித்துவிட்டு தஞ்சைக்குத் திரும்பு முன் அன்னை அபிராமியைத் தரிசனம் செய்ய எண்ணம் கொண்டார். அதே போல் முதலில் காவிரிப்பூம் பட்டினம் சென்று முன்னோர் வழிபாடு நடத்தி பசு, பூமி, எள், பொன், நெய், ஆடை, வெல்லம், நெல், வெள்ளி, உப்பு என்ற பத்துவிதமான தானங்கள் செய்தார். பின்னர் திருக்கடவூர் வந்தார். அவரை பக்தர்கள் எல்லோரும் பூர்ண கும்ப மரியாதை கொடுத்து வரவேற்றனர். பின்னர் அவர் அமிர்த கடேஸ்வரரையும், கால சம்ஹாரரையும் கண் குளிர தரிசித்து, பின்னர் அம்பிகையின் சந்நிதிக்கு வந்தார். இதுபற்றி ஏதும் அறியாத சுப்ரமணியன் அம்பிகையின் திருச்சன்னதியில் தன்னை மறந்த நிலையில் அம்பிகையின் தியானத்தில் ஈடுபட்டிருந்தார்.

சாக்தர்களுக்குப் பௌர்ணமி வழிபாடு மிகவும் முக்ணுயமானது. சாக்த வழிபாட்டில் ஆழ்நிலை செல்லும்போது புருவமத்தியில் ஓர் ஒளிப்பிழம்பு பூரணச் சந்திரமண்டலமாக தோன்றும். 'சந்த்ரமண்டலமத்யஸ்தா, சாருரூபா, சாருஹாஸா, சாருசந்த்ரகலாதரா, சராசரஜகந்நாதா' என்ற லலிதா சகஸ்ரநாம மந்திரங்களுக்கு ஏற்றவாறு இவ்வழிபாடு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமையும். அந்த சந்திரபிம்பத்தில் அம்பிகையை மானசீகமாக ஆவாஹனம் செய்து மானஸ பூஜையை நிகழ்த்துவது மரபு. அவ்வாறே அபிராமி பட்டரும் தன் தியானத்தில் சந்திரமண்டலத்தில் ஜொலித்துக் கொண்டிருந்த அம்பிகையை மனம் குளிர கண்ணீர் மல்க, புறவுலக நினைவின்றி, தரிசித்துக் கொண்டிருந்தார்.

அம்பாளின் திருச் சந்நிதியில் நுழைந்த சரபோஜி மன்னர், காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க இறைவியின் முன்னே நின்றார். தேவியை தரிசித்து பின் சற்று திரும்பினார். அங்கு தான் வந்ததைக் கூட கவனியாமல் கண்களை மூடி அமர்ந்திருந்த மனிதரைக் கண்டார். தான் வந்ததைக் கூட கவனியாமல் அமர்ந்திருந்த அவரைப் பற்றி கூட வந்தவர்களிடம் கேட்க அவர்களில் சிலர் அவர் அந்த கோயில் குருக்களான அமிர்தலிங்கய்யரின் மகனென்றும் பஞ்சாங்கம் படிப்பதை தற்போது செய்து வருவதாகவும் கூறினர். மற்றும் சிலர் தங்களின் ஆற்றாமையைத் தீர்த்துக் கொள்ள, அவர் எந்நேரம் இப்படித்தான் இருப்பார். இவர் ஒரு பித்தன், என்று பட்டரைப் பற்றி புகார் கூறினார். சுப்ரமண்யனின் முகப்பொலிவைக் கண்டார். அம்பிகையை வணங்குவோரின் முகப்பொலிவைப் பற்றி நன்கு அறிந்ததனால், அவருடைய தோற்றம் மன்னரை வசீகரித்தது. அதனால், சரபோஜி மன்னர் அவர்கள் சொன்னதை நம்பவில்லை.

அருகிலிருந்த பக்தர்கள் அம்பிகையின் நினைவில் தன்னிலையிழந்திருந்த சுப்ரமணியரை எழுப்பத் தலைப்பட்டனர். ஆனால் அவர்களுக்கோ, மன்னருக்கோ சுப்ரமணியனின் அப்போதய நிலையைப் பற்றி ஏதும் தெரியவில்லை. என்ன எழுப்பியும் சுப்ரமணியனால் உடனே சகஜ நிலைக்கு வரமுடியவில்லை. தியானம் சற்று கலைந்து அரைகுறை தியான நிலைக்கு வர, மன்னரே அவரிடம் சென்று, இது எவ்வளவு தூரம் உண்மையாக இருக்கக் கூடும் என நினைத்த வண்ணம் அதைச் சோதிக்க எண்ணியவர் போல், புறநினைவு சற்றுமின்றி, தன்னுள்ளே அன்னையைக் கண்டு பரவச நிலையில் அமர்ந்திருந்த சுப்பிரமணியன் பட்டரிடம் நெருங்கி அவரைப் பற்றி வினவினார்.

அதற்கு அவர், தியானம் கலையாத நிலையில், இன்னம் தன் மனத்திலிருந்து நீங்காத அம்பிகையின் பிரகாசமான க வதனத்தை தரிசித்துக் கொண்டே, தனது பெயரை கூறி, தான் அந்த கோவிலில் பஞ்சாங்கம் பார்ப்பவன் என்றும் கூறினார். அவர் வாயிலிருந்து வந்த சொற்கள் அரைகுறை மயக்கத்தில் சொல்பவனின் சொற்களாகவே மன்னனுக்கும் மற்றவர்களுக்கும் தோன்றின. ஆனால் மன்னனுக்கோ மற்றவர்கள் சுப்பிரமணியனைப் பற்றி கூறிய செய்திகளே மனதில் இருக்க, அதை மீண்டும் உறுதி செய்ய வேண்டி, அவரிடம் மன்னர், ''அப்படியென்றால், இன்று என்ன திதி?'' என்று கேட்க, தியானம் கலையாத நிலையில் அன்னை அபிராமி அம்மனின் பேரொளி முகத்தையே இன்னம் மானசீகமாக தரிசனம் செய்து கொண்டிருந்தவர் முகத்தில் புன்னகை அரும்ப அவர் வாயிலிருந்து மீண்டும் வார்த்தைகள் வெளிவந்தன.

''ஆஹா! இன்று நிறைந்த பௌர்ணமி'' - சுப்ரமணியன்

''அப்படியென்றால் இன்று இரவு பூர்ண சந்திரன் தோன்றுமா'' - மன்னர்

''பூர்ண சந்திரன் பூரிக்கும்'' - சுப்மணியன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த வார்த்தைகளைக் கூறிவிட்டு மீண்டும் ஆழ்நிலை தியானத்தில் ஆழ்ந்து விட்டார்.

நல்ல அமாவாசையன்று பௌர்ணமி என்று கூறுகிறானே இப்படிபட்டவரை, சரியாக திதி, நட்சத்திரம் கூடச் சொல்லத் தெரியாத ஒருவரை எப்படி திருக்கோயிலில் வைத்திருக்க முடியும்? என்று எண்ணினார் மன்னர். அவரைப் பற்றி நன்கு அறியாத அரசனும் பிறர் தனக்குக் கொடுக்கும் மரியாதையை இவர் கொடுக்கவில்லையென்பதாலும், கேட்ட கேள்விக்கு சரியாக பதிலளிக்காததாலும் மற்றவர்கள் அவரைப் பற்றிச் சொன்ன சொல்லை நம்பிவிட்டார்.

தஞ்சை ஆண்ட மராட்டிய மன்னர்கள் ஆன்மீக ஒழுக்கத்தில் சிறந்து விளங்கியவர்கள். சரபோஜி மன்னரும் அவ்வாறே பல ஆன்மீக தொண்டர்களையும், திருக்கோயில்களையும் ஆதரித்து வந்தவர். அதனால் உடனே அவருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அதே சமயம் சுப்ரமணியன் மீது ஒரு பரிதாபம் ஏற்பட்டிருந்தது. அது தான் ஏன் என்று அவருக்கும் புரியவில்லை. சுப்ரமணியன் இருந்த நிலை; ஒரு மன்னர் வந்தார் என்பதையே மறந்து தன்னிடம் பேசியது; பேசும்போதும் முழு கண்களும் திறக்காமல் ஏதோ ஒரு ஆழ்ந்த நிலையில் இருப்பது போல் தோன்றியது; அதேசமயம் மற்றவர்கள் அவரைப் பற்றிக் கூறிய சொற்கள்; இவற்றையெல்லாம் நினைக்க, நினைக்க அவை அவரை குழப்பத்தில் ஆழ்த்தியிருந்ததால் ஒரு முடிவுக்கு வர டியவில்லை அவரால். இருந்தாலும் அவர் மன்னரல்லவா? அவரால் இதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதனால் ''சுப்ரமணியனைக் கண்காணித்து வாருங்கள்'' என்று கூறிவிட்டு தரிசனத்தை முடித்துக் கொண்டு தன் ஊருக்குத் திரும்பினார் சரபோஜி. தன் திருவிளையடலுக்கு நேரம் வந்துவிட்டதை கண்ட சர்வலோக தயாபரியாகிய அபிராமவல்லி புன்னகைத்தாள். ''தானும் வேறல்ல ... தன் பக்தனும் வேறல்ல...'' என்பதை ஊருக்கும் உலகுக்கும் உணர்த்த அம்பிகை திருவுள்ளம் கொண்டாள்.

(தவறான பதிலைக் கேட்ட மன்னனின் கோபம் அதிகரிக்க, ''இன்று இரவு பௌர்ணமி நிலவு தோன்றாவிட்டால் நீர் அக்னி குண்டத்தில் ஏற்றப்படுவீர்'' என்று எச்சரித்துவிட்டு தன் அரண்மனை திரும்பியதாகவும் கூறுவதுண்டு. ஆனால் ஆன்மீக ஒழுக்கத்தில் சிறந்து விளங்கிய மன்னர் அவ்வாறு ஒரு கொடுமையான தண்டனையை கொடுத்திருக்க மாட்டார் என்று கருதுகிறோம்.)

மன்னர் குழப்பத்துடனும் கோபத்துடன் வெளியேறியதைக் கண்ட சில நல்லவர்கள் சுப்ரமணியனை விரைந்து எழுப்பினர். அவர் கொஞ்சம் கொஞ்சமாகத் தியானத்திலிருந்து விடுபட்டார். நடந்த நிகழ்ச்சிகளை மற்றவர் சொல்லக் கேட்டார். நிலைமையைப் புரிந்து கொண்டார். அப்பொழுதுதான் அவருக்கு அன்றைய தினம் அமாவாசை என்பது தெரிந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாடாளும் மன்னருக்குரிய மரியாதையைக் கொடுக்காதது மட்டுமல்லாமல் தவறான தகவலை வேறு தந்துவிட்டோமே என்று மனம் நொந்தார். அன்னை அபிராமவல்லியின் அழகு பொங்கும் பொன் முகத்தையே தியானித்துக் கொண்டிருந்த வேளையில் மதி மயக்கத்தில் தவறாக கூறி விட்டோமே! அரசனிடம் பொய் சொல்வது குற்றமில்லையா என்றொல்லாம் அரற்றிக்கொண்டே அபிராமியின் திருவடிகளைத் தஞ்சமடைந்தார்.

பின்னர் மற்றவர்கள் ஆறுதல் கூற, சற்று தெளிந்த சுப்ரமணியன், 'நாம் நாமாக ஏதும் சொல்லவில்லை. ஆக்ஞா சக்கரத்தில் அம்பிகை எழுந்தருளியிருக்கும் போது வந்த சொற்கள் அவை. நானும் அறியேன்; அவளும் பொய் சொல்லாள். அவளுடைய லீலையை யார் அறிவார்? நிச்சயம் ஏதோ காரணத்துக்காகத்தான் இந்த நாடகத்தை அவள் நடத்துகிறாள். எல்லாம் அவள் செயல்'., என்று தனக்குத் தானே ஆறுதல் கூறிக் கொண்டவர், தன்னை எப்படி மன்னர் முன் நிரூபிப்பது? என்று எண்ணத் தலைப்பட்டார்.

இன்று மன்னர் தன்னை ஒன்றும் சொல்லவில்லை. அருகில் முகாமில் தான் தங்கியிருக்கிறார். மீண்டும் நாளை வரும்போது என்ன சொல்வாரோ? என்ன செய்வாரோ? என்ன தண்டனை தருவாரோ? சிறையிலிட்டுவிட்டால்? அரச குற்றத்திற்கு ஆளானால் என்ன தண்டனை வேண்டுமானாலும் தரலாமே? சிறிய குற்றமா செய்திருக்கிறோம்? தேடி வந்த மன்னனை கையெடுத்து கும்பிடவில்லையே? எழுந்திருக்கக் கூடவில்லையே? எவ்வளவு பெரிய அவமானம்? இப்படி அவமானப்படுத்தியதற்கு என்னைச் சிரச்சேதம் கூட செய்யலாமே? என்றெல்லாம் அவர் மனம் எண்ணியது. பெரிய மனத்துடன் தன்னை எதுவும் சொல்லாமல் மன்னர் சென்றுவிட்டாலும் அவரால் அமைதியாக இருக்க முடியவில்லை. தான் செய்த குற்றத்திற்கு தன்னைத் தானே தண்டித்துக் கொள்ள முடிவுசெய்தார். எப்படித் தன்னைத் தானே தண்டித்துக் கொள்வது? அம்பிகையின் திருமுன் அமர்ந்து சிந்தித்தார். அபிராமி அவள் மனதில் சர்வாலங்கார பூஷிதையாகத் தோன்றினாள். கலகலவென நகைத்தாள். அப்பொழுதுதான் அந்த எண்ணம் தோன்றியது.

''யமகண்டம் பாடுவேன். என் அன்னை அபிராமி நேரில் வருவாள். அமாவாசையைப் பௌர்ணமியாக்குவாள். என் அபிராமி, என் தாய் என்னைக் கைவிட மாட்டாள்'' - கூவினார் சுப்ரமணியன். சுற்றியிருந்தவர்கள் கவலை கொண்டனர். யமகண்டம் பாடுவதென்றால் சும்மாவா?

பெரிய நெருப்பு குண்டத்தின் மேலே கயிறுகளால் பிணைக்கப்பட்ட உறியில் அமர்ந்து பாட வேண்டும். தீயின் வெப்பத்தால் கயிறுகள் இற்று விழும். இறுதியில் எல்லா கயிறுகளும் இற்று விழும்போது அதில் அமர்ந்திருந்தவர் கீழே உள்ள அக்னி குண்டத்தில் விழுந்து தன்னுயிரை மாய்த்துக் கொள்வார்.

(யமகண்டம் என்பது ஒரு சத்தியத்தைக் காப்பாற்ற பிரதிக்ஞை செய்து அதைக் காப்பாற்ற முடியாவிட்டால் உயிரை மாய்த்துக் கொள்வது என்பதாகும். அதற்கு அந்நாளில் பல வழிகளைக் கடைபிடித்தனர். அதில் அக்னி குண்டத்தில் விழுந்து உயிரை விடுவதும் ஒன்றாகும். சிலர் யமகண்டத்தினை அரிகண்டம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். அபிராமி அந்தாதி பாடிய அபிராமி பட்டர் யமகண்டத்தில் நின்று பாடியுள்ளதை சிலர் அதனை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அரிகண்டம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். தனது தலையை ஒரே முயற்சியில் தானே அரிந்து பலியிடுவதற்க்கு அரிகண்டம் என்று பெயர். கண்டம் என்ற கழுத்தை கத்தியால் அல்லது வாளால் அரிதல் என்பது இதன் பொருள். இதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒருவன் மிகப் பெரிய அவமானத்தை பெற்றபின் அதற்கு மேல் வாழ விரும்பாமல் சாக விரும்புகிறான். ஆனால் கோழை மாதிரி சாக விரும்பாமல், வீரச் சாவை விரும்பி நவகண்டம் கொடுத்துக் கொள்வது.)

சுப்ரமணியனுக்கு ஏற்கனவே இருந்த பித்தம் அதிகமாகி பைத்தியமாகி விட்டதாக எல்லோரும் நம்பினர். தான் செய்த குற்றத்தை மன்னரை அடிபணிந்து வணங்கி, மன்னிப்பு கேட்பதை விட்டு விட்டு யமகண்டம் பாடுவேன் என்கிறானே?. இவன் யார் சொல்வதையும் வேறு கேட்க மாட்டானே! என்ன செய்வது என்று என்று எல்லோரும் கையைப் பிசைந்து நிற்க சுப்ரமணியனை சிலர் நெருங்கி அவரிடம் யமகண்டம் பாடுவதை விட்டு விட்டு மன்னரிடம் மன்னிப்புக்கேட்குமாறு அறிவுரை கூறினர். ஆனால் அம்பிகையிடம் முழுநம்பிக்கை கொண்டிருந்த அவர் மனம் தளரவில்லை.

அரசரிடம் போய் என்ன சொல்ல வேண்டும்?.. எதற்காக சொல்ல வேண்டும்?.. அபிராமி இதையெல்லாம் காணாமல் கண்களை மூடிக் கொண்டிருக்கின்றாள் என்று அல்லவா அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்! காக்க வேண்டிய தருணத்தில் அவள் வந்து என்னை நிச்சயம் காத்தருள்வாள்! அப்பர் பெருமான் அருளியவாறு அது அவளுடைய கடமை அல்லவா!.. ஆகையால் தான் எந்த காரணத்தைக் கொண்டும் அரசரிடம் சென்று மன்னிப்பு கேட்கவேண்டியதில்லை மீண்டும் முடிவு செய்த அவர் அன்னை அபிராமவல்லியைச் சிந்தித்தார்.

காலசம்ஹாரனாகிய ஐயனின் இடப்பாகமாகி, காலனைக் காலால் உதைத்த கற்பகவல்லி அவள் அல்லவா! அதீசர் ஒருபாகம் அகலாதவளாகிய அபிராமவல்லி தனது தவத்தினால் யோக சித்தியினை எய்தி, சர்வ சதா காலம் தன்னையே தியானித்திருக்கும் தன் பக்தனுக்கு ஊறு நேரும்படிக்கு விடுவாளா! தன்னையும் அவள் தகுந்த நேரத்தில் காப்பாள் என்று முழுமையாக நம்பினார். அதனால் சுப்ரமணியன் தன் வாக்கில் விடாப்பிடியாக, உறுதியாக இருந்தார்.

மாலை மங்கியது. இரவு நெருங்கியது. சுப்ரமணியன் தன் வீடு திரும்பினார். பெற்றோரிடம் மனைவியிடம் நடந்ததைச் சொல்லி தான் செய்யப் போவதையும் அறிவித்து மீண்டும் திருக்கோயில் திரும்பினார். அவருடைய மனைவி திருக் கோயிலுக்கு ஓடி வந்து தன் தாலி பாக்யத்தைக் காக்க வேண்டி அபிராமி திருச் சந்நதியில் மனமுருக வேண்டினாள். அவள் கண்களிலிலிருந்து ஆறாய் பெருகியது கண்ணீர்.

சுப்ரமணியனின் ஆணைப்படி, பெரிய அக்னி குண்டம் அமைக்கப்பட்டு, அதன் மேல் 100 கயிறு பிரிகளைக் கொண்ட உறி அமைக்கப்பட்டது. இரவு துவங்கியதும் சுப்ரமணியன் அம்பிகையின் திருச்சன்னதிக்குச் சென்று தொழுதார். பின்னர் எதற்கும் கலங்காத சிந்தையராக, சர்வ சாதாரணமாக, தானே அக்னிக்குண்டத்தின் மீது அமைக்கப்பட்ட தட்டில் ஏறி அமர்ந்தார். கிழே குண்டத்தில் நெருப்பு பற்றவைக்கப்பட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'எல்லாம் நீயே என்று உன்னையே கதியென்றிருந்த எனக்கு நீ வைத்துள்ள இந்த சோதனையிலும் வெற்றி பெறுவேன்! இதற்கெல்லாம் கலங்கமாட்டேன். என்றும் நீயே என் அன்னை என்பது உண்மையானால் நீ வருவாய்! என்னைக் காப்பாய்! நீ கூறிய வார்த்தைகளை நிரூபிப்பாய்' என்று, அன்னை அபிராமவல்லியை உளமாரத் துதித்த சுப்ரமணியன், அபிராமியின் பெருமைகளை எடுத்துரைக்கும் அந்தாதியைப் பாட திருவுளம் கொண்டார். தலில் அம்பிகையின் செல்லக் குழந்தையான கணநாதனை வேண்டினார்.

தாரமர் கொன்றையும் சண்பகமாலையும் சாத்தும் தில்லை
ஊரார் தம் பாகத்து உமைமைந்தனே! உலகு ஏழும் பெற்ற
சீர் அபிராமி அந்தாதி எப்போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே! நிற்க கட்டுரையே.

தன் செயல் வெற்றி பெறத் துதித்தார். எங்கோ கேட்ட யானையின் பிளிறல் ஒலி அவர் காதுகளில் விழ, கணநாதனின் அருள் கிடைத்த மகிழ்ச்சியில் அம்பிகையை மனத்தில் தியானிக்க துவங்கினார். அம்பிகை அவர் மனத்தில் உதய சூரியனைப் போல் மெல்ல எழுந்தாள். அவர் வாக்கினின்று புறப்பட்டது தல் பாடல்.

உதிக்கின்ற செங்கதிர், உச்சித் திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம்போது, மலர்க்ணீமலை
துதிக்கின்ற மின் கொடி, மென் கடிக் குங்கும தோயம்-என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி, எந்தன் விழுத் துணையே:

அபிராமியைத் தன் விழுத்துணையாக வரித்தபின் அவருக்கேது வீழ்ச்சி! தொடர்ந்து அவரிடமிருந்து வெளிப்பட்டது அரிய பாடல்கள்.

பொருந்திய ப்புரை, செப்பு உரைசெய்யும் புணர் முலையாள்,
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி, வார் சடையோன்
அருந்திய நஞ்சு அது ஆக்கிய அம்பிகை, அம்புயமேல்
திருந்திய சுந்தரி, அந்தரி பாதம் என் சென்னியதே.

அரும் பெரும் பெருமைகள் கொண்ட அம்பிகையின் திருப்பாதத்தைத் துதித்து தன் சிரசில் வைத்துக் கொண்டார்.

கண்ணியது உன் புகழ், கற்பது உன் நாமம், கசிந்து பக்தி
பண்ணியது உன் இரு பாதாம்புயத்தில், பகல் இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து-நான் செய்த
புண்ணியம் ஏது? என் அம்மே. புவி ஏழையும் பூத்தவளே.

என்ன பூர்வ புண்ணியம் செய்தேனோ? அபிராமியின் மீது தான் கொண்ட பக்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்றும் நிலைத்திருக்க வேண்டுமென்று வேண்டுகிறார். என்னதான் தான் அம்பிகையின் மீது பக்தி கொண்டாலும் பிறந்தவர்கள் ஒருநாள் இறக்கத்தான் வேண்டுமல்லவா? அவ்வாறு இறக்கும்போது அரனும் அம்பிகையும் சேர்ந்திருக்கும் திருக்கோலம், அவர்களின் திருமணக்கோலம் தன் மனதில் நீங்காதிருக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறார்.

வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும், உங்கள் திருமணக் கோலம், சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்து என்னை ஆண்டபொற் பாதம் ஆணுவந்து-
வெவ்விய காலன் என்மேல் வரும்போது வெளி நிற்கவே.

மேலும் காலன் தன்னை நெருங்கும் போது தன்னுடைய பயத்தைப் போக்கி, தன்னை எமன் கொண்டுபோகாமல் நீயே உன் திருமணக் கோலம் காட்டி, என்னை அழைத்துச் செல்ல வேண்டுமென்று வேண்டுகிறார்.

இழைக்கும் வினைவழியே அடும் காலன், எனை நடுங்க
அழைக்கும் பொழுது வந்து, அஞ்சல் என்பாய். அத்தர் சித்தம் எல்லாம்
குழைக்கும் களபக் குவிலை யாமளைக் கோமளமே.
உழைக்கும் பொழுது, உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே

நாயகி, நான்கி, நாராயணி, சாம்பவி, சங்கரி, மாலினி, வாராகி, சூலினி, மாதங்கி பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்ச பாணி சண்டி, காளி வயிரவி, மண்டலி, மாலினி, சூலி, வராகி என்றெல்லாம் பல தோற்றங்களில் நீயே அருள் புரியும் நீயே கதி என்று அம்பிகையை சரணடைகிறார்.

பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்ச பாணி, வஞ்சர்
உயிர் அவி உண்ணும் உயர் சண்டி, காளி, ஒளிரும் கலா
வயிரவி, மண்டலி, மாலினி, சூலி, வராகி--என்றே
செயிர் அவி நான்மறை சேர் திருநாமங்கள் செப்புவரே.

சுப்ரமணியரின் பாடல்கள் மடை திறந்த வெள்ளம் போல் வெளிவந்து கொண்டிருந்தன. தீக் குண்டத்திலிருந்து எழுந்த தீயின் வெம்மையினால் உறியிலிருந்த கயிறுகள் ஒவ்வொன்றாக அறுபட்டுக் கொண்டே வந்தன. சுற்றியிருந்த மக்களெல்லாம் என்ன நடக்கப் போகிறதோ என்ற கவலையில் ஆழ்ந்திருந்தனர். சுப்ரமணியன் மீது அபவாதம் கூறியவர்களின் மனம் கூட நெகிழ்ந்து விட்டது. அவர்களும் சுப்ரமணியனைக் காக்க அவர் நம்பும் அபிராமி அம்பிகையையே மனதுக்குள் வேண்டிக் கொண்டு நடப்பதை பார்த்துக் கொண்டிருந்தனர். சுப்ரமணியனுக்கு சுற்றி நடப்பது எதுவும் தெரியவில்லை. எத்தனை கயிறுகள் அறுந்தன என்பது கூட புரியவில்லை. அவரின் மனக்கண்ணில் தான் அம்பிகை ஒளி வெள்ளமாக காட்சியளித்துக் கொண்டிருக்கிறாளே!.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''விழிக்கே அருளுண்டு அபிராமவல்லிக்கு; வேதம் சொன்ன

வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு; அவ்வழி கிடக்க பழிக்கே சுழன்று, வெம்பாவங்களே செய்து, பாழ்நரகக்

குழிக்கே அழுந்தும் கயவர்தம்மோடு என்ன கூட்டு இனியே?''

அபிராமி அன்னையின் திருவிழிகளே அருள் செய்யும். அந்தப் பேரருளைப் பெறுவதற்காக, வேதங்கள் வகுத்துத் தந்த நன்னெறிகளின்படியே அவளை வழிபட்டுத் தியானம் செய்யும் பக்குவள்ள மனம் எமக்கிருக்கிறது. இவ்வாறிருக்க, பழிச்செயல்களிலும், கொடிய பாபங்களிலும் ஈடுபட்டுத் திரிந்து பாழான நரகக் குழியில் அழுந்தும் கயவர்களுடன் இனி எதற்காக கூட்டு வேண்டும்.

78 பாடல்கள் முடிந்து 79வது பாடல் தொடங்கியது.

அதுவரை சுப்ரமணியனின் அழகிய பாவில் மூழ்கியிருந்த அம்பிகை, தன் திருவிழிகளின் பெருமையைப் பாடுவதைக் கேட்டதும் தானாகத் திறந்து கொண்டன. அவளின் அருட்பார்வை சுப்ரமணியனின் மீது பட்டது. பெரு நெருப்பு கீழே இருக்க தன் மீது கொண்ட உறுதியான பக்தியால் தன் குழந்தை சுப்ரமணியன் செய்த சபதத்தை நினைத்தாள். தன் குழந்தையைக் காப்பது அன்னையின் கடமையல்லவா? பக்தனைக் காக்க திருவுளம் கொண்டாள். எப்படிக் காப்பது? இன்று அமாவாசை. தான் இட்ட நியதிப்படித்தானே நவகிரகங்களும் இயங்குகின்றன. இயற்கையை மீறி, தான் வகுத்துக் கொடுத்த நியதியை தானே மீறி, சந்திரனை எப்படி வரச் செய்ய டியும்? கன்னத்தில் கைவைத்தாள் அம்பிகை! அம்பிகை தன் காதில் அணிந்திருந்த, ஸ்ரீ சக்ர வடிவான தோடு கையில் பட்டது. சற்று முகத்தைத் திருப்பினாள் அம்பிகை. அந்த தோட்டிலிருந்து கிளம்பிய ஒளிக் கீற்றில் ஒன்று அவள் கடைக்கண்ணைத் தொட்டது. அவ்வளவுதான்! பக்தனைக் காக்க வழி பிறந்தது. தான் வகுத்த நியதியை, இயற்கையை மாற்ற வேண்டாம். ஆனால் பக்தனையும் காக்க வேண்டும். கண்ணிமைக்கும் நேரத்தில் அவளின் திருக்கரம் காதருகில் சென்றது. காதில் அணிந்திருந்த ஸ்ரீசக்ர ரூபமாகிய 'தாடங்கம்' என்னும் திருத்தோட்டினை எடுத்து விண்ணில் வீசியது. காக்கும் கரம் வீசிய அந்த தாடங்கம் விண்ணில் தகதகத்தது. கூடியிருந்த மக்களெல்லாம் பார்த்திருக்க அந்த தாடங்கத்திலிருந்து வீசியது போரொளி. அப்பேரொளி முழுநிலவையும் தோற்கடிக்கும் வண்ணம் விண்ணில் பிரகாசிக்க, இந்திராதி தேவர்கள் இந்த அதிசயத்தைக் காண விண்ணில் கூடினர். அங்கே சந்திரனும் வந்தான். அவனுக்கே சந்தேகமாகி விட்டது. தான் தான் தன் கடமையை மறந்து நினைவில்லாமல் தோன்றிவிட்டோமா என்று.

திடீரென்று சுப்ரமணியனின் மனக் கண்ணில் ஒளிவெள்ளமாக காட்சியளித்துக் கொண்டிருந்த அம்பிகை திடீரென மறைந்தாள். ஒளி வெள்ளம் காணாமல் போனது. இந்நிகழ்ச்சியால் திடுக்கிட்டு கண்விழித்தார் சுப்ரமணியன். எங்கும் ஒரே ஒளி வெள்ளம். தான் மனதில் கண்டு கொண்டிருந்த ஒளி வெள்ளம் இப்போது விண்ணிலிருந்து வீசுவதைக் கண்டார். விண்ணிலே ஒரு பெரிய நிலவு. அதிலிருந்து பேரொளி. அந்த பேரொளியின் நடுவில் அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத அபிராமவல்லியின் கலகலவென்ற நகைப்பு! நிலவே வரமுடியாத அந்த அமாவாசையில் திருக்கடவூரில் எழுந்தருளியுள்ள அபிராமி அம்பாளின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பேரருளால் சுப்ரமணியன் என்ற பக்தரின் துன்ப துயரம் நீங்குமாறும் அவரது பக்தியின் சிறப்பு உலகத்திற்கு தெரியுமாறும் வான வெளியில் எழுந்த அந்த நிலவு பிரகாசித்தது. அது, பௌர்ணமி நிலவை விட அதிக ஒளியை கொட்டியது.

கூடியிருந்த மக்களுக்கும் மன்னனுக்கும் பரவசத்தில் பேச நா எழவில்லை. அமாவாசை இரவு பௌர்ணமியாய் ஜொலிப்பதைப் பார்த்து மெய் சிலிர்த்தனர். தனக்காக அமாவாசையை பௌர்ணமியாக்கிய அன்னை அபிராமவல்லியை கைகூப்பி வணங்கியது. இதுவரை அவர் வாயிலிருந்த வந்த பாடல்கள் நின்றுவிட்டன. அவருக்கு பேச நா எழவில்லை. ஆனந்த கண்ணீர் வடித்தார் சுப்ரமணியன். தான் தன் நினைவின்றி சொன்ன ஒரு சொல்லைக் காப்பாற்றுவதற்காக, இயற்கையையே மாற்றிக் காட்டிய அபிராமியின் திருச்சன்னதிக்கு ஓடோடிச் சென்றார் சுப்ரமணியன். அவள் பாதங்களில் விழுந்தெழுந்தார்.

அரசனிடம் அடாததை சொல்லியோர் அதிசயங்கண்டு திகைத்தனர். மெய் நடுங்கி, நா குழறினர். தகாததைச் சொல்லி தரம் தாழ்ந்தமைக்குத் தலை கவிழ்ந்தனர். அன்னையைப் போற்றி அந்தாதி பாடிய அருட்செல்வரின் அடித்தாமரைகளில் விழுந்து வணங்கினர். அன்பரின் பொருட்டு பெய்த அருள் மழையில் அனைவரும் நனைந்தனர்.

இதற்குள் சுப்ரமணியன் தானே யமகண்டம் பாடுவதைக் கேள்விப்பட்ட மன்னர், அதிசயித்தார். தானே அவனுக்கு எந்த தண்டனையும் கொடுக்காமலிருந்தும் தானே தன்னை தண்டித்துக் கொள்ள முடிவுசெய்திருப்பதால் அவன் உண்மையானவனாய் இருக்க வேண்டுமென்று முடிவுகட்டினார். என்ன தோன்றியதோ தெரியவில்லை. உடனே மீண்டும் அபிராமி கோயிலுக்கு செல்ல முடிவுசெய்து தன் மெய்காவலர்களுடன் புறப்பட்டார். ஏறக்குறைய கோயில் அருகில் வரும்போதே விண்ணில் நிலவைக் கண்டார். அவர் உடல் புளகாங்கிதமடைந்தது.

எப்பேர்பட்ட தபஸ்வி சுப்ரமணியன். அமாவாசையன்று நிலவை வரவழைத்து விட்டானே. தான் சொன்ன சொல்லை இப்படியும் காக்க முடியுமா! இயற்கையும் அத்ற்கு ஒப்புக் கொண்டதென்றால் அவன் பெருமை தான் என்னே! புரவியை விரட்டினார். விரைந்து வந்த மன்னர் அம்பிகையின் சந்நிதியில் பேச்சற்று வீழ்ந்து கிடந்த சுப்ரமணியனைக் கண்டார்.

''சுப்ரமண்யா! '' - மன்னர் குரல் கொடுத்தார். இப்போதும் சுப்ரமணியன் செவிகளில் அவரது அழைப்பு விழவில்லை. ஆனால் இப்போது அதை மன்னர் பெரிதாகக் கருதவில்லை. பலரும் அவரை எழுப்ப விரைந்தனர். ஆனால் மன்னர் அதைத் தடுத்து விட்டார். அவர் மெதுவாக எழுந்திருக்கும் வரைக் காத்திருப்போம் என்றார்.

சுப்ரமணியம் அங்கு ஏற்பட்ட சலசலப்பில் விரைவில் எழுந்துவிட்டார். மன்னன் அவரைப் பணிந்து மன்னிப்பு வேண்டினான். மன்னனை எதற்காக மன்னிக்க வேண்டும்? அவர் எந்த தவறும் செய்யவில்லையே! தான் தவறாக மன்னனிடம் சொன்ன சொல்லுக்காக தன்னைத் தானே தண்டித்துக் கொண்டேனேயன்றி மன்னரின் தவறு ஏதுமில்லையே? என்று நினைத்தவராய் ''மன்னா யார் யாரை மன்னிப்பது? எல்லாம் அந்த அம்பிகையின் திருவிளையாடலல்லவா! என் சொல்லும் செயலும் அவளல்லவா! அவள்தானே இன்று பௌர்ணமி என்றாள். அதை அவளே நிரூபித்துவிட்டாள்! பக்தனின் வாக்கு சத்தியம் என்பதை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உலகுக்கு காட்டிவிட்டாள். அவளுடைய திருப்பாதங்களை பணிந்தவர்களுக்கு எந்த குறையுமில்லை என்பதை சொல்லாமல் சொல்லிவிட்டாள் மன்னா!'' என்று கூற, அதைக் கேட்ட மன்னன், ''இங்கு உள்ளோர் உங்களைப் பற்றிக் தவறாகக் கூறியதை நன்கு ஆராயாமல் நம்பிவிட்டேன். அதற்காகவாவது என்னை மன்னிக்க வேண்டுமென்று கூற, ''மன்னா! நடப்பதெல்லாம் அவள் செயலல்லவா! அவர்கள் புறங்கூறியதும், அதை நீங்கள் நம்பியதும் எல்லாம் அவள் சித்தம். அவள் மனதை யாரறிவார் மன்னா? ஆனால் தன்னை நம்பியவர்களை என்றும் கைவிடமாட்டாள் என் அன்னை'' என்று கூறி, கருவறையில் காட்சி தந்துகொண்டிருக்கின்ற அன்னையை நோக்கினார் சுப்ரமணியன்.

''அந்தாதியை தொடர்ந்து பாடு சுப்ரமண்யா! உன் அழகிய தமிழமுதை இன்னும் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் போல் இருக்கிறது'', என்று மானசீகமாக அன்புக்கட்டளையிட்டாள் அபிராமி. அடுத்த நிமிடம் அவர் நாவிலிருந்து தொடர்ந்தது அந்தாதி.

கூட்டியவா என்னைத் தன் அடியாரில், கொடிய வினை
ஓட்டியவா, என்கண் ஓடியவா, தன்னை உள்ளவண்ணம்
காட்டியவா, கண்ட கண்ணும் மனம் களிக்கின்றவா,
ஆட்டியவா நடம் ஆடகத் தாமரை ஆரணங்கே.

பொற்றாமரையில் வீற்றிருந்தருளும் அழகே வடிவானவளே! எளியவனான என்னை உன் அடியவர்களின் கூட்டத்துள் ஒருவனாய்ச் சேர்த்துக் கொண்டது மட்டுமின்றி, என் கொடிய வினைகளையெல்லாம் போக்கியருளி, எனக்கு அருள் புரிவதற்காக ஓடோடி வந்து, உன் பேரழகுத் திருக்கோலத்தை எனக்குக் காட்டியருளி, அந்த ஆனந்த தரிசனத்தைக் கண்டு என் கண்களும், மனம் ஆனந்தப் பெருக்கால் துள்ளி மகிழச்செய்த உன் திருவருள் நாடகத்தை என் மூலம் நடத்திக் காட்டியதேனோ! என்று அம்பிகை தனக்குச் செய்த பேருதவியை எண்ணிக் கண் கலங்குகிறார்.

அதன் பின்னர் அந்தாதியைத் தொடர்ந்து பாடி,

குழையைத் தழுவிய கொன்றையந்தார் கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந்தோளும் கரும்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம்பாணம் வெண்ணகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே!.

என நூறு பாடல்களாக நிறைவு செய்தருளினார் பட்டர். 'உதிக்கின்ற செங்கதிர்..' எனத் தொடங்கிய, அந்தாதி, 'நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே' - என நிறைவடைந்தது. அம்பிகையே அந்த அபிராமியே தன் மனதில் என்றும் நிலைபெற்றிருக்கிறாள் என்பதனை இதன் மூலம் எல்லோருக்கும் தெரிவித்தார் சுப்ரமணியன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆத்தாளை, எங்கள் அபிராம வல்லியை, அண்டம் எல்லாம்

பூத்தாளை, மாதுளம் பூ நிறத்தாளை, புவி அடங்கக்

காத்தாளை, ஐங்கணைப் பாசங்குசம் கருப்புவில்லும்

சேர்த்தாளை, க்கண்ணியைத், தொழுவார்க்கு ஒரு தீங்கு இல்லையே.

என்று இந்த அந்தாதியைப் பாராயணம் செய்து அபிராமியை என்றும் சிந்தித்திருப்போர்க்கு ஒரு தீங்கும் வராது என்று உறுதிபட கூறினார். அவருடைய வாழ்வே அதற்கு ஒரு உதாரணமல்லவா!

மொத்தம் 102 பாடல்களை பாடி முடித்தார். மக்களெல்லாம் அவர் திருத்தாள் வணங்கினர்.

சரபோஜி மகாராஜாவுக்கு சுப்ரமணியன் சாதாரண மனிதராகத் தெரியவில்லை. அவருடைய சொல்லுக்காக அம்பிகை அமாவாசையில் நிலவை வரவழைத்தாள் என்றால் அவர் சாமானியமானவரா! எப்போர்பட்ட பக்தர் அவர். அம்பிகையின் அருள் நிரம்ப பெற்ற சுப்ரமணியனுக்கு ''அபிராமி பட்டர்'' என்ற சிறப்புத் திருநாமம் சூட்டி பெருமையாக அழைத்தான். பல பரிசில்கள் வழங்கி கௌரவித்தான். மேலும் அவருக்கு குறைவில்லாமல் வாழ என்னென்ன வேண்டுமோ அனைத்தையும் தருவதாகக் கூறினார் மன்னர். ஆனால் அபிராமி பட்டரின் மனம் அம்பிகையின் திருப்பாதங்களையன்றி வேறெதிலும் செல்லவில்லை. அதனால் தனக்கு எதுவும் வேண்டாமென்று கூறிவிட்டார்

ஆனாலும் அரசன் விடவில்லை. அபிராமியின் அருள் பெற்ற பட்டருக்கு ஏதாவது செய்தே ஆகவேண்டுமென்று தீர்மானித்து விட்டான் அவன். அவருக்கு வேண்டாமென்றாலும் அவருடைய சந்ததியாருக்காவது உதவும் என்பதனால் அவருக்கு 'வேலிக்குக் குறுணி களமான்யம்' கொடுத்து அதற்கான உரிமைச் செப்புப் பட்டயம் ஒன்றும் செய்து கொடுத்தான். அதன்படி, திருக்கடையூர் வட்டம், ஆக்கூர் வட்டம், திருவிடைக்கழி வட்டம், நல்லாடை வட்டம், செம்பொன் பள்ளி வட்டம் ஆகிய இடங்களில் நெல் பெறும் உரிமை கொடுத்து, நிலங்களும் தானமாக சாசனம் செய்தான்.

இச் சம்பவம் வேறு விதமாகவும் சொல்லப்படுகிறது.

சுப்ரமணியன் தவறாகக் கூறிய பதிலைக் கேட்டவுடன், மன்னர் சுற்றிலும் இருந்தவர்கள் கூறியது உண்மையாகவே இருக்கலாம் என்ற எண்ணத்துடன் சென்று விட்டார். அவ்வாறு சென்றாலும் மன்னனுக்கு அவருடைய கள்ளங்கபடமற்ற தோற்றமே மீண்டும் மீண்டும் கண்ணெதிரே வந்தது மட்டுமல்லாமல், அன்று பௌர்ணமி கூறிய வார்த்தைகளும் காதிலே ஒலித்த வண்ணம் இருந்தன. பித்தராக இருந்தால் அத்தனை ஆரவாரத்திற்கிடையில் தன்னினைவின்றி அத்தனை நேரம் தியானத்தில் இருக்க முடியுமா என்றெல்லாம் எண்ணிய அவர், அந்த நினைவுடனேயே தன்னை அறியாமல் கண்ணயர, திருக்கடவூரின் தேவி அவர் மனக்கண்ணில் தோன்றினாள். கலகலவென்று நகைத்துக் கொண்டே தன் காதுத் தோட்டைக் கழற்றி விண்ணில் வீச, அது அங்கே பூர்ண சந்திரனாகச் சுடர்விட்டுப் பிரகாசித்தது. ''ஆஹா, இன்று பூரண நிலவு சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றது பாருங்கள்,'' என சுப்ரமணிய ஐயரின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குரலும் மன்னருக்குக் கேட்டது. திடுக்கிட்டெழுந்தான் மன்னன். கனவிலே அம்பிகை காட்டிவிட்டாள். சுப்ரமணியனின் பக்திக்கு ஈடு இணையில்லை என்று நினைத்தது மனம். மன்னர் உடல் சிலிர்த்தார். தான் பெருந்தவறு செய்துவிட்டோம் என்பதை உணர்ந்தார். சுப்ரமணியன் சாதாரண மனிதரல்ல. அவர் பெரும் ஞானி என்பது புலப்பட்டது. ஞானிகள் பலரும் பித்தனாக அலைவதை அவர் கேள்விப்பட்டதை இப்பொழுது நிதர்சனமாக கண்டார். உடனே தன் மெய்காப்பாளனுடன் அபிராமி சந்நிதியை நோக்கி விரைந்தார்.

இவ்வாறிருக்க, ஆலயத்தில் சுப்ரமணியன், மன்னரிடம் தவறாக சொல்லிவிட்டோமே என்று மனம் கலங்கினார். அவர்செய்தது பெருந்தவறு என்று புரிந்தது. ஊரும், உலகம் தனக்கு பைத்தியக்கார பட்டம் சூட்டி எள்ளி நகையாடுவதை மெய்ப்பிப்பது போலவே நடந்த இந்த நிகழ்ச்சியால் மனம் வருந்திய அவர், அம்பிகையின் திருச் சந்நிதிக்கு ஓடினார். அம்பிகையைக் கண்டு கண்ணீர் பெருக்கினார். அன்னையின் அருளால் மனம் தெளிவுற்று, இதுவும் ஒரு நன்மைக்கே எனத் தன்னை ஆற்றுப் படுத்திக் கொண்டு. எல்லாம் அவள் செயல் என்றுணர்ந்து அங்கேயே அமர்ந்து அன்னையைத் துதித்துப் பாடத் தொடங்கினார். அந்தாதி முறையில் அவர் நாவினின்றும் வெளிவந்த இந்த பாடல்கள், கணபதி துதியுடன் தொடங்கி, அன்னை அபிராமியின் சிறப்பைப் புகழ்ந்தும், அவள் அருளை வியந்தும், தன்னை உலகோர் இகழ்ந்தும் பழித்தும் கூறியும், அன்னையின் அருளால் அவர் பெற்று வரும் அநுபவச் சிறப்பையும் வர்ணிக்கும் விதத்தில் பாடல்கள் அருவி போலப் பொழியலாயிற்று. 78 பாடல்கள் முடிந்த போது சந்நிதியில் ஆரவாரம் கேட்க கண் திறந்தார் சுப்ரமணியன். அங்கே எதிரே கைகூப்பி நின்று கொண்டிருந்தார் மன்னர். மன்னரின் கண்களில் ஆனந்தகண்ணீர். அதுவரை சுப்ரமணியனின் பாடல்களை அவரைத் தொந்திரவு செய்யாமல் கேட்டுக் கொண்டிருந்த மன்னர், சுப்ரமணியன் கண் விழித்ததும் அவர் கைகளைப் பிடித்துக் கொண்டு உங்களை உணர்ந்து விட்டேன் என்று கூறி, அவரை வணங்கித் தாம் கண்ட கனவைக் கூறி அவருடைய மன்னிப்பையும் கோரினார்.

நிகழ்வுகள் எப்படி இருந்தாலும், பட்டரின் பக்தியும், பெருமையும் சற்றும் குறைந்தது அல்ல. அதே போல் மன்னன் எவ்வாறோ அன்னையின் அருளைப் பூரணமாய் உணர்ந்திருந்தான் என்பதும் உண்மையே. அபிராமி அந்தாதியும் ஏதோ ஒரு சம்பவத்தில் பாடப்பட்டதாகவே நினைக்க இடமிருக்கிறது. இது போன்ற பல தெய்வீக சம்பவங்கள் எழுதப்படாமல் செவி வழியாகவே வந்திருப்பதால் அவற்றைப் புறம் தள்ள முடியாது. இன்றும் அன்னையின் அருளாடல்கள் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கின்றன. சமீபத்தில் அவள் நிகழ்த்திய, பதிவு செய்யப்பட்ட சில அருளாடல்களை இப்புத்தகத்தின் பிற பக்கங்களில் காணலாம்.

1914ம் ஆண்டு மார்ச் மாதம் 26ம் நாள், தஞ்சை அரண்மனையிலிருந்து வந்த ஓர் உத்தரவில், நல்லாடை கிராம கர்ணம் இரண்டரை கலம் நெல் கொடுக்கும்படி உள்ளது.

சரபோஜி மன்னன் அபிராமி பட்டருக்குக் களமான்யமாக நெல் கொடுத்ததை அறிவிக்கும் செப்புப் பட்டயத்தின் பாடல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சீர்பெறு ஸகாப்தம் ஓர் ஆயிரத் தறுநூறு
சேரு(ம்)ப் பான் ஒன்றின் மேல்
திகழ்தரு விரோதிவரு ஷத்தினிற் சித்திரைத்
திங்கள்பதி னேழ்திகதி யில்

பார்புகழ் வியாழன்நாள் துதியைஅநு ஷம்பூர்வ
பக்ஷநல் சுபதிநத் தில்
பஞ்சலட் சணவர்அபி மாமிபமட் டர்க்கரசர்
பட்டோலை இட்ட விபரம்

கார்பரவு கடலைநாற் பதுகலம் பதினாறு
கணித(ம்)மூ வைந்தொர் ஆக்கூர்
கவின்நாற் பதின்கலம்ஓர் நல்லாடை திருவிடைக்
கழிகலம் பதிய்னைந்து மாம்

ஏர்பெருகு செம்பொன்செ பள்ளிஇரு பான்கலம்
எனப்போஜ மஹாராஜர் போனம்
எங்கள்ஸர போஜிமனன் மகமையுடன் விபரமாய்
எந்நாளும் அருளும் வகையே

(ஆதாரம் ''திருக்கடவூர்ப் பிரபந்தத் திரட்டு'')

மன்னர் மனமுவந்து கொடுத்தாலும் பட்டரின் மனம் அதில் எல்லாம் செல்லவில்லை. அன்னை அபிராமியைவிட்டு எதையும் நினைத்துப் பார்க்கக் கூட அவர் பிரியப்படவில்லை. என்னே அவர் செய்த பாக்யம்!.

அம்பிகை இவருடன் பல திருவிளையாடல்கள் நிகழ்த்தி உள்ளார். அவற்றை இந்நூலின் பிற பகுதிகளில் காணலாம். இவரே பிற்காலத்தில் சேஷாத்ரி சுவாமிகளாக அவதரித்ததாக ஸ்ரீ குழந்தையானந்த சுவாமிகள் கூறியிருக்கிறார்.

வானில் தாடங்கத்தினை - நிலவெனத் தவழ விட்டு, தன் பக்தனின் மொழியை மெய்ப்பித்து - பக்தனையும் ''அபிராமி பட்டர்'' என்ற பெருமைக்கு ஆளாக்கிய அன்னை - அன்று முதல் இன்று வரை, அபிராமி அந்தாதியினை நாளும் பாராயணம் செய்து பணிந்து வணங்கும் பக்தர்களின் வாய்மொழியினையும் மெய்ப்பித்து அருளுகின்றாள்.

பட்டரின் மனத்தினில் ஒளிவெள்ளமாக ஒளிர்ந்த அம்பிகையை மன்னரும் மற்றவரும் எல்லோரும் உணரும் வண்ணம் நீல வானில் நிறைமதியாய் நிறைந்து எத்தர்களையும் பக்தர்களாய் மாற்றிய அந்த ஆனந்தவல்லி, அபிராமசுந்தரவல்லி, நமக்கும் - ஒளி காட்டுவாள்!... நலமாய் வாழ நல்லதொரு வழியும் காட்டுவாள்!...

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

Public domain. Digitization Muthulakshmi Research Academy

8. மகளானாள் மகாசக்தி

ஒரு நாள் இனிய மாலை வேளை. சூரியன் மேற்கில் மறைந்து கொண்டிருக்கிறான். மழைக் காலம் வேறு. மழைக் காலத்தில் மாலைக்குரிய கூடுதல் பெருமை வானவில். விண்ணில் வர்ணஜாலம் செய்கிறது. தென்றல் மேனியில் தவழ்ந்து செல்கிறது. உள்ளம் பூரிக்கிறது. சின்னதாய் சாரல். சாய்ந்தாடும் மரங்கள். கூவும் குயில்கள். மழை நேரத்தில் வண்ணத் தோகை விரித்து ஆடிடும் அழகிய மயில்கள். கிளிகளின் கிள்ளை பேச்சு.

மாலை நேரத்தில் சூரியன் மறைவது தெரிந்தவுடன் குளத்தில் உள்ள தாமரை பூக்கள் இதழ் குவிகின்றன. அதேநேரத்தில் ஆம்பல் மலர் மொட்டுக்கள் இதழ் விரித்து சிரிக்கின்றன.

வானமானது சிவந்து செவ்வானமாக பரந்து விரிகின்றது. எங்கிருந்தோ வீணையின் இனிய நாதம் கேட்கிறது. இயற்கையின் அழகில் கடவுளின் கருணையும் அமைதியும் இன்பம் கொண்டதாக எண்ணுகிறார் அபிராமி பட்டர். வீட்டுக் கூடத்தில் அமர்ந்து கொண்டு, ஒரு தூணில் சாய்ந்து கொண்டு, சற்றே கண்ணை மூடி இந்த இனிய இயற்கையைப் படைத்த அந்த அழகிய அம்பிகையின் மீது கவனத்தைச் செலுத்துகிறார்.

மகளின் குரல் கேட்கிறது. உள்ளே ஓடி வருகிறாள் மகள். அவள் பெயரும் அபிராமிதான். தன் உளம் கவர்ந்த அம்பிகையின் பெயரையே தன் மகளுக்கும் சூட்டியிருக்கிறார் பட்டர். க்ஷண நேரம் கூட அம்பிகையை மறக்காத பட்டர், தன் மகளுக்கும் அவளின் திருப்பெயரையே சூட்டி அதிலும் ஒரு ஆனந்தத்தை அனுபவிக்கிறார் அவர்.

'அப்பா! வளையல்காரர் வந்திருக்கிறாரப்பா. வளைந்தும் நெளிந்தும் வண்ணமயமாக அழகழகான வளையல்களெல்லாம் வைத்திருக்கிறாரப்பா!' அதற்குமேல் அவள் எதுவும் சொல்லவில்லை.

எப்படி கேட்கிறாள் இந்த குழந்தை! வளையல் காரன் வந்திருப்பதையும் அவனிடம் அழகழகான வளையல்கள் இருப்பதையும் கூறியவள், தனக்கு வேண்டுமென்று கேட்காமல் கேட்கிறாள். கேட்டு தான் வாங்கிக்கொடுக்க மறுத்துவிட்டால்.

பிறந்த குழந்தைகளில் இருந்து பாட்டிகள் வரை, வளையல் என்பது பெண்களுக்கு ஆபரணம் என்பதற்கு மேலாக, உணர்வுடன் கலந்த விஷயம் அல்லவா! வளையல்கள் பெரும்பாலும் பச்சை, சிவப்பு மற்றும் மஞ்சள் நிறங்களிலேயே முன்னர் அதிகம் செய்யப்பட்டு வந்தன. பச்சை நிற வளையல், தேவியின் தத்துவம். இதை அணிவதன் மூலமாக பெண்ணின் உடலில் சந்தோஷம் பரவுகிறது. மேலும் பச்சை நிறம், பெண்ணின் உடலுக்கு ஒரு கவசமாக இருந்து பாதுகாக்கிறது. சிவப்பு நிறம், கெட்டதை அழிக்கும் சக்தியையும் நல்லனவற்றை அதிகம் கிரகிக்கக்கூடிய சக்தியும் கொண்டது. தீய சக்திகள் உடலில் ஊடுறுவா வண்ணம் பாதுகாக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''அப்பா''

மகளின் குரல் மீண்டும் கேட்கிறது. கண் திறக்கிறார் பட்டர். எதிரில் தன் பதிலை எதிர்பார்த்து காத்திருக்கும் மகள். மகள் பிடித்திருக்கிறதென்றால் அதை என்றாவது மறுத்திருக்கிறாரா பட்டர். இல்லவே இல்லை. இப்பொழுதும் அப்படித்தான்.

'உனக்கு வேண்டிய வளையல்களை வாங்கிக் கொள்ளம்மா. கை நிறைய போட்டுக் கொள்.''

வாசலை நோக்கித் துள்ளி ஓடுகிறாள் குழந்தை அபிராமி. தனக்கு வேண்டிய வளையல்களை கை முழுவதும் போட்டுக் கொண்டு தன் தோழியருக்குக் காட்ட சென்றுவிட்டாள்.

சிறிது நேரத்தில் வளையல் காரனின் குரல் கேட்கிறது. அவனுக்கு காசு வேண்டுமல்லவா?

''ஐயா உங்களுடைய இரண்டு மகள்களுக்கும் கை நிறைய வளையல் போட்டுவிட்டேன். தாங்கள் பணம் கொடுத்தால் சென்றுவிடுகிறேன். பொழுது வேறு சாய்ந்து விட்டது.''

''என்ன சொன்னாய்?''

''உங்களுடைய இரண்டு மகள்களுக்கும் வளையல் போட்டாகி விட்டது. அதற்கான பணம் கொடுத்தால் சென்றுவிடுகிறேன்'', என்று கூறினேன் ஐயா.

''எனக்கு ஒரு மகள் தானே. இருவரில்லையே''

''இரண்டாவது பெண்ணும் தங்கள் மகள்தான் என்று சொன்னாளே. உங்களிடம் பணம் இல்லாவிட்டால் பரவாயில்லை. இருக்கும் மட்டும் கொடுங்கள். மீதியை பின்னர் வாங்கிக் கொள்கிறேன். அதற்காக பெற்ற குழந்தையை தன் மகள் இல்லையென்று சொல்லாதீர்கள்.''

''இல்லையப்பா. எனக்கு ஒரு மகள்தான். எனக்கு வேறு மகள் இல்லை''.

'பரவாயில்லை. பக்கத்து வீட்டுக் குழந்தையா இருக்கும். குழந்தைகளுக்கு வளையல் என்றால் பிரியமல்லவா. அவர்கள் வீட்டில் வசதியில்லாமல் இருக்கலாம். அதனால் உங்கள் மகள் என்று சொல்லி வளையலைப் போட்டுக் கொண்டிருக்கும். அதனால் என்ன? பாவம் அந்த குழந்தை. உங்கள் குழந்தைக்கு மட்டும் பணம் கொடுங்கள் போதும்.''

''இங்குள்ள எந்த குழந்தையும் பொய் சொல்வதில்லையப்பா! எல்லாம் வல்ல அன்னை அபிராமியின் அருளால் இங்குள்ள எல்லோரும் வளமாகவே இருக்கிறோம்.''

''அப்படியென்றால் ஒன்று செய்யுங்கள். நான் இரண்டாவது பெண்ணும் தங்கள் மகள் என்று சொன்னதாலேயே வளையல்களைப் போட்டுவிட்டேன்.''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''அப்படியானால் அவள் எங்கு சென்றாள் என்று சொல். நான் அவளைக் கண்டிக்கிறேன். குழந்தையிலேயே பொய் சொன்னால் பெரியவளானால் எப்படி நன்றாக இருக்க முடியும்''.

''ஐயா! வாருங்கள். அந்த குழந்தை இப்படித்தான் சென்றாள்.''

பட்டர், வளையல்காரனைப் பின்பற்றி நடக்க, அவனோ அபிராமி கோயிலினுள் சென்றான். நேராக அபிராமி சன்னதிக்குச் சென்றான்.

''பொய்யும் சொல்லிவிட்டு அபிராமி சன்னதிக்கு சென்று மன்னிக்க வேண்டிக் கொள்கிறானா அவன்?''

இருவரும் அம்பிகையின் சன்னதிக்குச் சென்றனர். சன்னதியில் குழந்தையைக் காணவில்லை.

''இங்குதான் ஐயா ஓடி வந்தாள்'' - வளையல்காரன்.

பட்டரின் பார்வை எதேச்சையாக அம்பிகையிடம் செல்கிறது. அவளின் இருத்திருக்கரங்களிலும் கண்ணாடி வளையல்கள் விளக்கின் சுடரொளியில் வண்ணங்களை வாரி இறைக்கின்றன. அபிராமியின் நகைக்பொலி பட்டரின் உள்ளத்தில் கேட்கிறது.

தன்னை அழைத்துவந்த வளையல்காரரைக் காணவில்லை.

பட்டரின் கண்களில் ஆனந்த கண்ணீர்.

''அம்மா''

அதற்குமேல் அவரால் பேசடியவில்லை.

''எனக்கு ஏது தந்தை ஆசையுடன் வளையல்கள் வாங்கித்தர?..அதான் ......'' அம்பிகையின் மன ஓட்டம் பட்டரின் மனதில் பதிகிறது.

இதுவரையில் மாதாவாக மட்டுமே நினைத்து பக்தி செலுத்தியவருக்கு, மகளாகவே மாறிவிட்டாள் அபிராமி. என்னே அவர் பாக்யம்!

மற்றொரு முறையும் அம்பிகை பட்டரின் மகளாக அவருடைய பாரத்தைச் சுமந்தது மட்டுமல்லாமல் அவருக்கு வழித்துணையாகவும் வந்திருக்கிறாள். அந்த சம்பவம் இதோ;

ஒரு முறை பட்டருக்கு ராமேஸ்வரம் சென்று ஸ்ரீ பர்வத வர்த்தினி அம்பிகையையும், ஸ்ரீ ராமநாத ஸ்வாமியையும் தரிசித்து வர விரும்பினார். வழியில் பல திருத்தலங்களையும் தரிசித்து வரலாம் என்று நினைத்திருந்தார். தன் விருப்பத்தை மனைவியிடம் தெரிவித்தார். உடனே அவள் மகள் அபிராமி, தானும் வருவதாக அடம் பிடித்தாள். அவளுக்கு அப்பாவை விட்டு நீண்ட நாட்கள் பிரிந்திருக்க மனமில்லை. ஆனால் நெடுந் தொலைவு சென்று வர வேண்டியிருப்பதாலும், அதற்குப் பல நாட்கள் ஆகுமென்பதாலும், அவள் பெண்ணாக இருப்பதாலும், வழியில் சரியாக உணவு கிடைப்பது கடினமென்பதாலும் தனது மகளை அழைத்து செல்ல விரும்பவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பின்னர் ஒரு நாள் தன் மனைவியிடம் கூறிவிட்டு, மகளையும் ஒருவாறு சமாதானப்படுத்தி விட்டு தனது பயண மூட்டை முடிச்சுகளை தூக்கிக் கொண்டு ராமேஸ்வரம் கிளம்பினார். அடுத்த தெருதான் திரும்பியிருப்பார். அப்போது அப்பா என்றழைத்துக் கொண்டு அவள் மகள் அபிராமி வேகமாக ஓடி வந்தாள். தான் அப்பாவை விட்டு பிரிந்திருக்க முடியாதென்று கூறியது மட்டுமில்லாமல் அம்மாவிடம் கூறி அவள் சம்மதத்தையும் வாங்கிவிட்டதாகவும் சொல்லித் தன்னையும் அழைத்துத்தான் செல்ல வேண்டு மென்று அடம் பிடித்தாள். சரி அம்பிகை விட்ட வழி என்று தன் மகளையும் அழைத்துக் கொண்டு மீண்டும் பயணத்தைத் துவக்கினார்.

மகள் அவரிடமிருந்த மூட்டை முடிச்சுகளின் பெரும்பகுதியை தானே வாங்கிக் கொண்டு அப்பாவோடு நடந்து சென்றாள். வழியில் சிலர் அவருடன் நடந்து வரும் சின்ன பெண்ணைப் பார்த்து தங்கள் வண்டியில் ஏற்றிக் கொண்டு தாங்கள் செல்லும் வழியில் இறக்கிவிட்டனர். இவ்வாறு வண்டியும் நடையுமாக வழியில் பல ஊர்களுக்கும் சென்று அந்த ஊரில் உள்ள திருக்கோயில்களில் வீற்றிருக்கும் தெய்வங்களை வணங்கி சென்றனர். போகும் வழி நெடுக பட்டர் தன் மகளுக்கு அந்தந்த திருக்கோயில்களின் பெருமைகளையும், தல வரலாறுகளையும் அம்பிகையின் பெருமைகளை யும் கூறிக் கொண்டே சென்றார். மகளும் அவர் கதை சொல்லும்போது பல கேள்விகளைக் கேட்டாள். அவற்றிற்கெல்லாம் தகுந்த பதிலைக் கூறி அவளுடைய சந்தேகங்களைப் போக்கிக் கொண்டே வந்தார்.

அவரது பெருமையை உணர்ந்த பலரும் தங்கள் இடங்களில் இரவு நேரங்களில் அவர்களுக்குத் தங்க இடம் உணவும் கொடுத்தனர். பல சமயங்களில் வெகு தொலைவு நடந்து வந்ததால் அபிராமி பட்டருக்கு கால் வலிக்கும். சுமைகளைத் தூக்கி வந்ததால் கை வலிக்கும். அச்சமயங்களில் அவள் மகள் அபிராமி அவர் கை கால்களைப் பிடித்து விடுவாள். தன் மகள் கைபட்டதுமே அவர் வலி காணாமல் போய் விடுவதை உணர்வார். மகள் கை கால் பிடித்து விடும்போது மகளுக்கு பல புராணங்களைக் கூறுவார். மகளும் மிகுந்த ஆசையுடன் கேட்பாள். பல இடங்களில் தன் சந்தேகத்தை எழுப்புவாள். பட்டரும் அவள் சந்தேகத்தைப் போக்க தகுந்த காரணத்தைச் சொல்லுவார். அப்படியே உறங்கிவிடுவார். தினம் காலையில் அவள் மகள் தான் சீக்கிரமே எழுந்து அவரை எழுப்பி விடுவாள். இன்னும் நீண்ட தொலைவு போக வேண்டுமல்லவா?. திரும்பி வரும்போதும் இப்படித்தான்.

இறுதியில் ராமேஸ்வரம் அடைந்தனர்.

ராமேஸ்வரம் கடலில் நீராடி, மூதாதையர் கடன்களை முடித்தார். பின்னர் திருக் கோயிலுக்குச் சென்று பர்வதவர்த்தினி அம்பிகையையும் ராமாநாதஸ்வாமியையும் நன்கு கண்குளிர தரிசித்தார். அம்பிகையின் சந்நிதியில் அமர்ந்து நன்கு தியானம் செய்தார். அன்னை அபிராமியை எப்படி தியானத்தில் எப்படி பரவெளியில் பூர்ண சந்திரனாக தரிசித்தாரோ, அதேபோல் பர்வதவரத்தினியும் அவருக்கு காட்சி கொடுத்தாள். அவர் விழிகளில் ஆனந்த கண்ணீர். மட்டற்ற மகிழ்ச்சியுடன் கண்திறந்து பார்க்க எதிரே புன்னகைத் தவழ தன்னையே கவனித்துக் கொண்டிருந்த தன் மகளைக் கண்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''என்னம்மா .. என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறாய்?. அம்பாளைப் பார்த்தாயா? அடே.. அடே .. என்ன அழகு! அவள் அருள் பொங்கும் முகத்தில் தான் என்ன ஒரு பரவசம்! அவளைக் காணக் கண் கோடி வேண்டுமம்மா! அவளை நன்றாக தரிசித்துக் கொள்''

''ஆமாம் அப்பா. இன்று ரொம்ப பரவசம்தான். அப்பா.. உங்களைப் பார்த்துவிட்டுத்தான் அத்தனை பரவசமாக இருக்கிறாள் போல இருக்கிறது.?''

''ஏனம்மா அப்படி சொல்கிறாய்?''

''உன்னைத் தேடி வெகு தூரத்தில் இருந்து ஒருவர் வந்தால் உனக்கும் அப்படித் தானே இருக்கும்.''

''நிச்சியமாய் இருக்கும். ஆனால் நாம் எல்லாம் மனிதர்கள். நமக்கு ஆசா பாசம் உண்டு. அம்பிகைக்கு எல்லோரும் ஒன்றுதான் இல்லையா?''

''அம்பிகைக்கும் எல்லா பக்தர்களையும் பிடிக்கும். எல்லோரும் ஒன்றுதான். ஆனால் அம்பிகையே எல்லாம் என்றிருக்கும் நீங்கள் வந்ததால் மிகுந்த மகிழ்ச்சி உற்றிருப்பாள்''

மகளின் வார்த்தைகள் அவர் செவியில் விழுந்து கொண்டிருக்கும் போதே அவர் தியான நிலைக்குச் சென்றுவிட்டார்.

வெகு நேரம் தியானத்தில் இருந்தபின் மெள்ள மெள்ள தன் நிலை அடைந்தார். அவர் முகத்தில் ஆனந்தம் சாந்தம் குடி கொண்டிருந்ததை மகள் பார்த்தாள். அப்பா மனத்திரையில் அம்பிகை தோன்றியிருக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்டாள்.

அப்பா... அம்பாள் காட்சி கொடுத்தாளா? உங்கள் முகத்தில் மிகுந்த மகிழ்ச்சி தாண்டவமாடுகிறதே! ஆனந்த கண்ணீர் வேறு . .

ஆமாம் அம்மா... பர்வதவர்த்தினி... அபிராமி... மாறி மாறி காட்சி கொடுத்தாளம்மா... நான் வேறு அபிராமி வேறல்ல என்பதைச் சொல்லாமல் சொன்னாலம்மா ... என்ன பாக்யம்... என்ன பாக்யம்...

உங்களுக்கு எல்லாமே அந்த அபிராமிதானே .. அதனால்தானே எனக்கும் அதே பெயரை வைத்து விட்டு எப்ப பார்த்தாலும் என்னைக் கூப்பிட்டுக் கொண்டே இருக்கே

ஆமாம் அம்மா .. நான் மட்டுமில்லையம்மா. நம் முன்னோர் எப்போதும் அவர்களுக்குப் பிடித்த தெய்வத்தின் பெயரை உச்சரித்துக் கொண்டே இருக்கவேண்டுமென்றுதான் தன் குழந்தைகளுக்கும் அந்த பெயரையே சூட்டினர். அதே போல் தான் நானும். அந்த அபிராமி எனக்கு தாய் மட்டுமல்லம்மா. எனக்கு எல்லாமே அவள்தான். நீதான் சிறியவளாக இருந்த போது பார்த்தாயே. நான் யார்? ஒரு ஏழை பிராமணன். என் தந்தை என்னை உலகம் தெரியாமல் வளர்த்து விட்டார். என் தந்தையின் வழியில் நானும் அந்த அபிராமியையே எனக்கு உலகமாக எண்ணிக் கொண்டிருந்தேன். அவளை விட்டால் எனக்கு எதுவும் தெரியாது. ஒழுங்காக எனக்கு அந்த அம்பிகைக்கு பூஜை கூட செய்யத் தெரியாது. அப்பாவுக்கு முடியாத காலங்களில் பூஜை செய்யச் செல்கிறேன் என்று சொல்லி சென்றுவிட்டு அம்பிகையின் சந்நிதியில் தியானத்தில் அமர்ந்துவிடுவேன். யார் வந்தார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யார் சென்றார்கள் என்று கூட தெரியாது. அதனால் என்னை எல்லோரும் பைத்தியம் என்றார்கள். இந்த பைத்தியம் தெரியாமல் தன் நினைவிழந்திருந்த நேரத்தில் தவறாகச் சொன்ன வார்த்தையைக் காப்பாற்ற வேண்டுமென்று அந்த அபிராமி தன் தாடங்கத்தையே வீசி என்னைக் காப்பாற்றினாளல்லவா? அது மட்டுமா! அன்று முதல் இந்த ஏழை பைத்தியம் பணக்கார பைத்தியமாகி விட்டது. நம் மன்னர் கொடுத்த மான்யம் அவர் செய்து கொடுத்த வசதிகளும் தான் இன்று நம்மைக் காப்பாற்றுகிறது. இன்று நல்லபடியாக வந்து நான் இந்த அம்பிகையை தரிசனம் செய்திருக்கிறேனென்றால் அதற்கு காரணம் அந்த அபிராமிதானே! நான் அவளோடு இருக்கிறேனா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவள் என்னுடனேயே இருக்கிறாள் என்பதைச் சொல்லாமல் சொன்னவளல்லவா... எந்த பிறவியில் என்ன புண்ணியம் செய்தோனோ தெரியவில்லை. அபிராமியே எனக்கு தாயாகவும் இருக்கிறாள், மகளாகவும் இருக்கிறாள்.

அப்பா நீங்கள் சொன்னதெல்லாம் சரிதான். அந்த அபிராமி என்றும் உங்களோடுதான் இருக்கிறாளப்பா. ஆனால் நீங்கள் சொன்னீர்களே அவள் மகளாகவும் இருக்கிறாள் என்று, எப்போதப்பா அவள் உங்கள் மகளானாள்!

அம்மா நீ தான் அந்த மகள். உன்னைப் பார்க்கும் போதெல்லாம் நான் அபிராமியைத்தான் பார்க்கிறேன். அந்த அருள் முகத்தை உன் முகத்திலே பார்க்கிறேன்.

என்னப்பா இதெல்லாம். அபிராமி எவ்வளவு பெரியவள்! அவள் தெய்வமில்லையா! என்னைப் போய் அபிராமி அம்மாவுடன் ஒப்பிடுகிறீர்களே!

இதில் ஒப்பீடு என்னம்மா இருக்கிறது? இந்த காலத்தில் தெய்வம் நேரே வந்து காட்சி கொடுக்காதம்மா.. ஆதி சங்கரர் தெரியுமில்லையா? அவருடைய கதையைக் கூட உனக்குச் சொல்லியிருக்கிறேனே..

ஆமாம்.

அவர் யார்? சாட்சாத் பரமேஸ்வரனின் அவதாரமில்லையா? மனிதனாகப் பிறந்ததால் அதற்குரிய சில விதிமுறைகளைக் கடைபிடித்தார். அவ்வளவுதான்.

ஆமாம் அப்பா.. நீங்கள் முன்னரே சொல்லியிருக்கிறீர்கள்

ஆமாம் அம்மா .. ராமரும் கிருஷ்ணரும் கூட அப்படித்தான் அல்லவா? உனக்குத் தான் தெரியுமே



தெரியும் அப்பா.. இப்போது உங்களுக்கு எப்படியப்பா இருக்கு? தியானத்திலிருந்து தெளிந்து விட்டீர்களா?

ஆமாம் அம்மா .. வா மறுபடியும் பர்வதவர்த்தினியையும் ராமநாத சுவாமியையும் பார்த்துவிட்டு போகலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ராமேஸ்வரம் பயணத்தை முடித்துக் கொண்டு மீண்டும் வரும்போது காணடியாத திருத்தலங்களை எல்லாம் தரிசித்துக் கொண்டு மகளுடன் ஊர் திரும்பினர். பட்டருக்கு ஒரே அலைச்சல் களைப்பு. ஊர் வந்துவிட்டதைக் கண்டவுடன் அம்மாவைப் பார்க்க வேண்டுமென்று சொல்லிவிட்டு, அம்மாவைக் காண ஓடினாள் மகள். அம்மாவைப் பிரிந்து வெகு நாட்கள் ஆகிவிட்டதல்லவா! என்னதான் அப்பாவானாலும் பெண்ணிற்கு அம்மாதான் அருந்துணையல்லவா என்று நினைத்துக் கொண்டார் அவர்.

வீடு இருக்கும் தெருவில் அவர் நுழையும்போதே எதிரே தன் மகள் மீண்டும் தன்னை நோக்கி ஓடி வருவதைக் கண்டார். அவளுடன் அவர் மனைவியும் வேகமாக வந்தாள்.

ஓடி வந்த மகள் அப்பா.. அப்பா.. என ஆசையோடு அப்பாவைக் கட்டிக் கொண்டாள்.

என்னப்பா வழிப் பயணம் சௌகர்யமா இருந்துதா .. ஆகாரமெல்லாம் கிடைச்சுதா .. ராமேஸ்வரம் தரிசனம் நல்லா இருந்ததா..

மகள் கேட்டுக் கொண்டே இருந்தாள். அவருக்கோ ஒரே திகைப்பு! என்னுடனேயே வந்தவளுக்கு என்னவாயிற்று ? ஏதோ புதிதாக கேட்கிறாளே ?

என்னோட தானே வந்தே .. என்ன இப்படியெல்லாம் கேக்கறே..

நான் உங்களோடு வந்தேனா! என்னப்பா சொல்ற .. என்னைத்தான் வரவேண்டாம் என்று சொல்லி என்னை விட்டுவிட்டு சென்றுவிட்டீர்களே .. குழந்தையின் கண்களில் கண்ணீர் துளிகள். வெகு நாட்களாக பிரிந்த ஏக்கம் அவள் கண்களில் தெரிந்தது.

என்ன ஆயிற்று உங்களுக்கு ?. இவள் எப்போது உங்களுடன் வந்தாள்? இவள் தான் எனக்கு எவ்வளவு துணையாக இருந்தாள் தெரியுமா ? - மனைவி.

அப்போ என்னோட வந்தது யார்! என் மகளாக என்னுடன் துணைக்கு வந்ததுமில்லாமல் என் சுமைகளையும் தூக்கிக் கொண்டு நான் சொன்ன கதைகளையும் கேட்டுக் கொண்டு என் சிரமம் நீங்க சிருஷை செய்து என் மகளாகவே என்னுடன் வந்தது யார்!

அவருக்குப் புரிந்து விட்டது. பட்டரின் கரங்கள் அபிராமியன்னை சந்நிதியை நோக்கி கூப்பின.

என்ன ஆயிற்று .. ஏன் அழுகிறீர்கள் .. மனைவி

இல்லையம்மா .. நான் அழவில்லை .. இது ஆனந்த கண்ணீர் என்று சொல்லிவிட்டு சிறிது தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு மனைவியிடம் தன்னுடன் மகளாக வந்த அன்னை அபிராமியின் பெருமையை ஆனந்தக் கண்ணீருடன் கூறினார்.

அந்த அபிராமியைத் தொழ உடனே எல்லோரும் அபிராமி சந்நிதிக்குச் சென்றனர். அங்கே அவள் இதழ்களில் புன்னகை. அந்த அபிராமி அன்று சிறிய பெண்ணாகவே அவருக்குக் காட்சியளித்தாள்.

அம்மா.. உனக்குத்தான் என் மீது எவ்வளவு கருணை! ஏழை சொன்ன சொல் அம்பலம் ஏறாது என்பார்கள்.. ஆனால் நீ .. நான் என்னை மறந்து சொன்ன ஒரு சொல்லுக்காக, அந்த சொல் காப்பாற்றப்பட வேண்டுமென்பதற்காக இயற்கையின் நிலையையே மாற்றிக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காட்டினாய்!. எனக்கு எந்த துன்பம் வந்தாலும், அது வருவதற்கு முன் நீ வந்து என்னை காப்பாற்றுகிறாய். என் மகளாய் ஊரரிய சொல்லி, கையில் வளையல் போட்டுக் கொண்டாய். தாயாய் வந்து என் பசி தீர்த்தாய். இந்த வயதானவன் பாரம் சுமக்கக் கூடாதென்று மீண்டும் என் மகளாய் என்னுடனேயே வந்து, வந்தது மட்டுமில்லாமல் உன்னைப் பற்றிய வரலாறுகளை என்னைச் சொல்ல வைத்து அதை நீ கேட்டு புளகாங்கிதமடைந்தாய்.. என் சிரமம் தீர எனக்கு சிக்ஷுருஷை செய்தாயே... அப்படி ஒரு பாக்யம் எனக்கு கிடைக்க, உனக்கு நான் என்னம்மா செய்து விட்டேன்?... ஏனம்மா என்னிடம் இப்படி வாஞ்சையோடு இருக்கிறாய்... எந்த ஜென்மத்தில் என்ன பாக்யம் செய்தேனோ தெரியவில்லையே... உனக்குத் தான் எவ்வளவு ஆசை! அன்று உன் புகழை வசின்யாதியரின் மூலம் சொல்லச் செய்து, அதைக் காது குளிரக் கேட்டு ஆனந்தமடைந்தாய்.. அதைக் கேட்டு நீண்ட நாளாயிற்றென்று நினைத்து இப்போது என் மகளாய் வந்து உன் திருவிளையாடல்களை என் மூலம் மீண்டும் கேட்டு இன்புற்றாயா அம்மா?... நீ என்னோடு இருக்கும் வரை எனக்கு குறை ஏதம்மா!

அன்னையின் திருமுன் அமர்ந்து கதறினார். அவர் கண்களிலிருந்து ஆனந்த கண்ணீர் அருவியாய் ஓடியது.

அவர் அபிராமியைத் தன் தாயாக வணங்கினார். ஆனால் அவளோ அவருக்கு மகளாகவே மாறிவிட்டாள். அம்மா.. என்று ஒரு முறை அன்புடன் அழைத்தால் போதும். ஓடோடி வந்து நம்மை தூக்கித் தன் மடியில் வைத்து கொஞ்சும் தாயவள். அவள் பெருமையை உணர்ந்தவர்க்கு இதன் உண்மை புரியும். அபிராமி பட்டருக்குப் புரிந்து விட்டது! நமக்கு... புரியும்!

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

Public domain. Digitization Muthulakshmi Research Academy

9.பக்தனுக்காக பாரம் சுமந்த பராசக்தி

(சக்தி விகடனில் வெளிவந்த ஸ்ரீ ரமணி அண்ணா அவர்களின் அனுபவம்)

பல வருடங்களுக்கு முன் (சொந்த ஊரான) மருத்துவக்குடி சென்றிருந்தேன். அங்கு செல்லும்போதெல்லாம் அருகில் உள்ள இலந்துறை கிராமத்துக்குச் சென்று, அங்கு கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீஅபிராமி அம்பிகா சமேத ஸ்ரீசுந்தரேஸ்வர ஸ்வாமியை தரிசிப்பது வழக்கம். ஸ்ரீஅபிராமியிடம் எனக்கு ஓர் ஈடுபாடு உண்டு. அந்த க்ஷேத்திரத்துக்கு தட்சிண பத்ரிகாஸ்ரமம் என்ற பெயரும் உண்டு.

மருத்துவக்குடிக்குத் தெற்கே உள்ள விட்டலூரைத் தாண்டி, வயல்களின் வழியே நடந்து சென்றால், இரண்டரை கி.மீ. தூரத்தில் இலந்துறை. சாலை மார்க்கமாகச் சென்றால், 5 கி.மீ. தொலைவு. நான் பெரும்பாலும் விட்டலூர் வழியில் செல்வதே வழக்கம்.

மாலை நான்கு மணிக்கு நானும் மனைவியும் இலந்துறைக்குப் புறப்பட்டோம். அம்பாளுக்கு சகஸ்ரநாம அர்ச்சனை செய்யச் சொல்லி, தரிசிக்க வேண்டும் என்பது சங்கல்பம். நாங்கள் இலந்துறையை அடைந்தபோது சந்தியா காலம் ஆகியிருந்தது. கோயில் வாசலில் சிவப் பழமாக நின்றிருந்தார் அர்ச்சகர் தட்சிணாமூர்த்தி சிவாச்சார்யர். எங்களைப் பார்த்ததும், ''வரணும் வரணும். ஒங்களுக்கு அனுக்கிரகம் பண்ண, அம்பாள் அபிராமி உள்ளே தயாரா காத்துண்டுருக்கா. புஷ்கரணில கால் அலம்பிண்டு உள்ளே வாங்கோ'' என்று கூறிவிட்டு சந்நிதிக்குள் சென்றார்.நாங்கள், ஆலய புஷ்கரணியில் கால்களைச் சுத்தம் செய்து கொண்டு கோயிலுக்குள் நுழைந்தோம். எல்லாச் சந்நிதிகளையும் தரிசித்து விட்டு அம்பாள் சந்நிதிக்கு வந்தோம். நான் தயங்கியபடி, ''குருக்களே முன்னேற்பாடு இல்லாம திடீர்னு சொல்றேனேனு நெனச்சுக்கப்டாது. நேக்கு ஓர் ஆசை. நீங்க சகஸ்ரநாமம் சொல்லி அம்பாளுக்கு அர்ச்சனை பண்றதை தரிசிச்சு ரொம்ப நாளாறது. இன்னிக்கு அந்த பாக்கியம் கிடைக்கணும்!'' என்றேன்.

தட்சிணாமூர்த்தி சிவாச்சார்யர், லலிதா சகஸ்ர நாமத்தை ஒரு நாமாவளி கூட விட்டு விடாமல், காதுக்கு இனிமையாக உச்சரித்து அர்ச்சிப்பார். சில நாமாவளிகளைச் சொல்லும்போது அவர் கண் கலங்கி விடுவார். அப்படியடி ஒரு பக்தி சிரத்தை! (இப்போது அவர் இல்லை. சிவசாயுஜ்ய பதவி அடைந்து சில வருடங்களாகிறது.)

உடனே சிவாச்சார்யர், ''அவசியம் பண்ணிடுவோம்! ஆனா ஒண்ணு. சகஸ்ரநாமார்ச்சனை பண்ணணும்னா நிவேதனத்துக்கு சர்க்கரைப் பொங்கலும், உளுத்தம் வடையும் அவசியம் வேணும். அதுக்கு வேண் டிய பொருட்கள் இருக்கானு மொதல்ல கேட்டுக்கறேன்'' என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்.

திரும்பி வந்தவர், ''ஒங்க அதிர்ஷ் டம் பாருங்கோ! சர்க்கரைப் பொங்கல், கொஞ்சம் வடை, புளியஞ்சாதம் பண்றதுக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாத்திரம்தான் பொருட்கள் கைவசம் இருக்கு! சரி, நிவேதனம் தயாராகிற வரைக்கும் சித்த இப்படி ஒக்காந்து பேசுவோமே'' என்றார்.

உட்கார்ந்தோம். அப்போது என் மனசிலிருந்த ஒரு சந்தேகத்தை அவரிடம் கேட்டேன்: ''குருக்களே இவ்வளவு பக்தி சிரத்தையா, ஆசாரம் குறையாம நித்ய பூஜை பண்ணிண்டு வரேளே! இதையெல்லாம் உங்களுக்கு குரு ஸ்தானமா இருந்து சொல்லி வெச்சது யாரு?''

''பேஷா'' என்ற சிவாச்சார்யர் சொல்ல ஆரம்பித்தார்.

''இதுக்கெல்லாம் காரணம் என் அத்திம்பேர் (அக்கா புருஷன்) காலஞ்சென்ற கங்கா ஜடேச சிவாச்சார்யர்தான். அவர் பொண்ணையே நேக்கு கல்யாணம் பண்ணி வெச்சார். அவர் ஸ்ரீவித்யா உபாசகர். அவர் காலமாறதுக்கு சில நாட்கள் முன்னால, ஒரு வெள்ளிக்கிழமை. மிக மதுரமாக லலிதா சகஸ்ர நாமாவளியை அவர் சொல்ல, என்னை அம்பாளுக்குக் குங்குமார்ச்சனை பண்ணச் சொன்னார். அர்ச்சனை முடிந்ததும் அருகில் அழைத்து என் இரண்டு கைகளையும் புடிச்சுண்டு, 'தட்சிணாமூர்த்தி! இந்த அம்மா அபிராமிய ஒங்கிட்ட ஒப்படைக்கிறேன். பேசற தெய்வம்டா இவ மடி, ஆசாரம், பக்தியோட காலந்தவறாம பூஜை பண்ணிண்டு வா. நோக்கு நெறய 'தன'த்த (பணம்) கொடுக்கிறாளோ இல்லையோ நல்ல ஞானத்தைக் கட்டாயம் குடுப்பா'னு சொல்லிட்டு, அம்பாளின் இரண்டு திருவடிகளையும் தொட்டு, கண்களில் ஒற்றிக் கொள்ளச் சொன்னார். அப்படியே செய்தேன். அந்த நேரத்துல என்னால் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியல. அத்திம்பேரோட இரண்டு கால்களையும் புடிச்சுண்டு அழ ஆரம்பிச்சுட்டேன். அவர் சமாதானம் பண்ணினார்.

அவர் எத்தனையோ நல்ல விஷயங்கள எனக்குச் சொல்லிக் கொடுத்துட்டுப் போயிருக்கார். அதுல ஒண்ணு கர்ப்பக்கிரகத்துக்கு உள்ளேர்ந்து பூஜை முடிச்சுண்டு வெளில வரச்சே ஸ்வாமி- அம்பாளுக்கு நம்ம பின்புறத்த காமிச்சுண்டு வரப்படாதுங்கறது. அம்பாள பாத்துண்டே பின்புறமா நடந்து வரணும்பார். அதை இன்னி வரைக்கும் கடைப் புடிச்சுண்டு வரேன்!'' என்று சொல்லி முடித்த சிவாச்சார்யரின் கண்கள் பனித்தன.

நிவேதனங்கள் தயாராகி விட்டன. அர்ச்சனைக்கு எழுந்தார் சிவாச்சார்யர். சகஸ்ரநாமார்ச்சனை முடிய ஒரு மணி நேரமாயிற்று. தீபாராதனை முடிந்து பிரசாதம் பெற்றுக் கொண்டோம். இரவு பத்து மணி. 'இரவு தங்கிவிட்டுக் காலையில் ஊர் திரும்பலாமே' என்றார் சிவாச்சார்யர். நான் மறுத்து விட்டேன்.

வயல் வரப்பு வழியாக ஊருக்கு நடையைக் கட்டினோம். நல்ல நிலா வெளிச்சம்! திடீரென நிலவைப் பெரிய மேகம் ஒன்று மறைக்க வெளிச்சம் குறைந்தது. தட்டுத் தடுமாறி நடந்தோம். நெடு நேரம் ஆகியும் விட்டலூர் கிராமம் வந்த பாடில்லை. பிறகுதான், திசை மாறி வந்து விட்டது தெரிந்தது. மனைவி அழுதே விட்டாள். வேறு வழியின்றி அங்கேயே அமர்ந்தோம். நான் துக்கத்தை அடக்கியபடி, 'அபிராமி ஒன்ன தரிசனம் பண்ணிட்டு வர்றப்ப, எங்களை இப்படித் தவிக்க விடலாமா? சரியான பாதையைக் காட்டும்மா!' என்று பிரார்த்தித்தேன். அபிராமி மனமிரங்கினாள் போலும்!

திடீரென பெருங்காற்று. மேகக் கூட்டம் வேக வேகமாக விலக நிலவு வெளிப் பட்டது. எங்களுக்கு நேர் எதிர் திக்கில், தெரு விளக்கின் ஒளி. ஆம், அது விட்டலூர் கிராமம்தான்!

...n Public domain. Digitization Muthulakshmi Research Academy

உடனே அந்த திசை நோக்கிப் பயணித்து, மருத்துவக்குடிக்கும் வந்து சேர்ந்தோம். மறு நாள் காலை மீண்டும் இலந்துறை சென்று அம்பாளுக்கு சகஸ்ரநாமார்ச்சனை நடத்தி வர வேண்டும் என்ற சங்கல்பத்துடன் இரவு கண்ணயர்ந்தோம்!

மறு நாள். நாங்கள் இலந் துறையை அடைந்தபோது காலை 9:30 மணி. கோயில் வாசலில் சிவாச்சார்யர் கவலை தோய்ந்த முகத்துடன் நின்றிருந்தார். அவரிடம் முதல் நாள் இரவு நிகழ்ந்த சம்பவங்களை விவரித்தேன். பிறகு, ''குருக்களே ஏன் ஒரு மாதிரி இருக்கேள்?'' என்று தயக்கத்துடன் கேட்டேன்.

அவர் சற்று துக்கம் தோய்ந்த குரலில், ''மனசு சரியால்லே! நேத்திக்கு இந்த ஊர்ப் பையன் ஒருத் தன்கிட்ட ரூவாயக் கொடுத்து மளிகை சாமான் வாங்கிண்டு வரச் சொல்லிருந்தேன். நேத்திக்குப் போனவன் இன்னும் வந்து சேரலை. இப்போ ஸ்வாமி நிவேதனத்துக்கு ஒரு மணி பச்சரிசிகூட இல்லே!'' என்று கண் கலங்கினார். அவரைச் சமாதானப் படுத்தி ஆலயத்துக்குள் அழைத்துச் சென்றோம். அப்போது நடுத்தர வயதுடைய ஒருவர், சாக்கு மூட்டை ஒன்றைத் தூக்க டியாமல் தூக்கியபடி உள்ளே வந்தார். அம்பாள் சந்நிதிக்கு முன் அந்த மூட்டையை இறக்கி வைத்தார். நாங்கள் முகத்தில் கேள்விக்குறியோடு அவரைப் பார்த்தோம். அவர் பேச ஆரம்பித்தார்: ''எனக்கு கும்பகோணம். ஹரிஹரன்னு பேரு. எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் மூலம் இந்தக் கோயில் மகிமையைப் பற்றிக் கேள்விப்பட்டேன். அதான் இன்னிக்குக் காத்தால கிளம்பினேன். விட்டலூர் வழியா வந்துண் முடிருந்தேன். வழியில் அம்பது வயசு மதிக்கத் தக்க பெண் ஒருவர் இந்த மூட்டைய தூக்க மாட்டாம தூக்கிண்டு வந்தார். அவர் என்னிடம், 'ஐயா ஒங்களப் பாத்தா எலந்துற கோயிலுக்குப் போறாப்ல தெரியுது. நானும் அங்கதான் வாரேன். இந்த மூட்டைக்காக குருக்களய்யா கோயில்ல காத்துட்டிருப்பாரு! இவ்ளோ தூரம் தூக்கியாந்துட்டேன். தல கனக்குது. எனக்காக இதக் கொஞ்சம் கோயில் வரைக்கும் சொமந்துகிட்டு வர முடியுமா'னு கேட்டாள். என்னால தட்ட முடியல. அந்தம்மா மாநிறம். நெத்தியில ஒரு முழு ரூவா அளவு குங்குமப் பொட்டு. அடர்ந்த கூந்தல்ல மல்லிப் பூவும், தாழம்பூவும் வெச்சுண்டிருந்தா. மூட்டையை என் தலைல ஏத்தி விட்டுட்டு, 'நீங்க முன்னால போய்ட்டேருங்க நா பின்னாலயே வர்றேன்'னு சொன்னா!'' என்றார் ஹரிஹரன்.

மூட்டையைப் பிரிக்கச் சொன்னார் குருக்கள். அதில் பொன்னி பச்சரிசியுடன் நிறைய வெல்லம், உளுந்து, பயறு, முந்திரி, திராட்சை, மிளகு, கடுகு, சீரகம், நல்லெண்ணெய், சுத்தமான நெய் ஆகியவை தனித் தனி பாக்கெட்டுகளில் இருந்தன. உடனே ஸ்வாமி-அம்பாளுக்கு நிவேதனம் தயார் பண்ண திருமடப்பள்ளிக்கு விரைந்தார் சிவாச்சார்யர்.

இதற்குள், முன் தினம் சிவாச்சார்யரிடம் பணம் வாங்கிச் சென்ற நபரும் மளிகைச் சாமான்களோடு வந்து சேர்ந்தார்! நாங்கள், மூட்டையைக் கொடுத்தனுப்பிய அந்தப் பெண்ணின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தோம். கடைசி வரை அவள் வரவேயில்லை. பிறகு வெயில் தாழ நாங்கள் கிளம்பினோம். புறப்படும் போது அந்தப் பெண்மணி கொடுத்தனுப்பிய கோணிப்பை என் கண்ணில் பட்டது. அதில், 'அபிராமி அரிசி மண்டி' என்று கொட்டை எழுத்துகளில் பொறிக்கப்பட்டிருந்தது!

--- நன்றி சக்தி விகடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

10.பிணிக்கு மருந்தாவாள்!

தருமபுர ஆதீனத்தின் அருளாட்சியின் கீழ் திருக்கடவூர் திருத்தலம் பொலிவுடன் விளங்கியது. அத்துடன் அம்பிகையின் அருளுக்குப் பாத்திரமான பலரும் அரசர்கள் உட்பட ஆலயத்தின் பூசை நியமங்களுக்கென்று நிலங்களையும் பொருட்களையும் கொடுத்தனர். சிலர் அறக்கட்டளைகளை ஏற்படுத்தினர். அவ்வாறு உருவான ஒரு பெரிய அறக்கட்டளை பிச்சைப் பிள்ளை அறக்கட்டளை.

அபிராமிபட்டரின் காலத்தில் வாழ்ந்த பிச்சைப்பிள்ளை என்பவர் ஸ்ரீ அபிராமி அம்பாள் சமேத ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் ஆலயத்துக்கு ஆயிரத்து எழுநூறு ஏக்கர்கள் நிலத்தை எழுதி வைத்தார். அதன் அடிப்படையில் உருவானது பிச்சை அறக் கட்டளை.

பின்னாளில் அதன் தலைவராக இருந்தவர் கனகசபைப்பிள்ளை. இவரை அன்புடன் கே.கே. பிள்ளை என்றே அழைத்தனர். அன்னை அபிராமியிடம் மிகுந்த ஈடுபாட்டுடன் விளங்கியவர் அவர். அவர் அபிராமி திருக்கோவிலின் பரம்பரை அறங்காவலராகவும் இருந்தார். ஒரு பெரும் அறக்கட்டளையின் தலைவராக இருந்தாலும், பெரிய செல்வந்தாராக இருந்தாலும் அம்பிகையின் பணிகளுக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். அறக்கட்டளை மூலம் அத்திருக்கோயிலின் பக்தர்களின் பசியாற்றுவதையே பெருமையாகக் கருதினார்.

கிருபானந்த வாரியார் சுவாமிகள் கீழத்தஞ்சையில் எங்கே உபந்நியாசம் நடந்தாலும் சுவாமிகள் தங்குவது திருக்கடவூரில் கே.கே.பிள்ளை இல்லத்தில்தான்.

அபிராமி கோயில் மட்டுமின்றி, கீழத்தஞ்சை மாவட்டம் உட்பட ஏறத்தாழ 27 திருக்கோவில்களின் தர்மகர்த்தாவாகவும் அவர் செயலாற்றினார். இருந்தாலும் அன்னை அபிராமியின் மீது மிகுந்த பற்றுடன் விளங்கினார். எல்லா இடங்களிலும் அவருடைய முழு கவனம் அடியார்களின் பசியாற்றுவதிலேயே இருந்தது. அது மட்டுமல்லாமல் அவரை உதவி கேட்டு வருபவர்கள் வெறுங்கையோடு திரும்பியது கிடையாது. திருக்கடவூர், திருவெண்காடு, கிள்ளியூர், சாலிமநல்லூர் ஆகிய ஊர்களில் பள்ளிக்கூடங்களையும் நிறுவி நிர்வகித்து வந்தார்.

அபிராமியின் தீவிர பக்தராக விளங்கிய அவர் அந்தாதியை அவர் அடிக்கடி சொல்லிக் கொண்டே இருப்பார். குறிப்பாக

''பார்க்குந் திசைதொறும் பாசாங்குசம் பனிச்சிறை வண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும் என் அல்லலெல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும் சிற்றிடையும்
வார்க்குங்கும லையும் லைமேல் த்து மாலையுமே!''

ஒரு பாடலை அவர் அடிக்கடி சொல்வதுண்டு. அந்த பாட்டில் ''என் அல்லலெல்லாம் தீர்க்கும் திரிபுரையாள்'' என்ற வரியை மட்டும் பலமுறை சொல்லிப் பரவசம் கொள்வார்.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

அபிராமிக்கு தங்கக் கவசம் வெள்ளி நிலைப்படியும் வெள்ளித் திருக்கதவுகளும் வெள்ளி வாகனம் செய்து சாற்றி மகிழ்ந்தார். அவருக்கும் சோதனை வைத்தாள் அபிராமி. அந்த சோதனை அவருக்காக இருந்தாலும், அதன் படிப்பினை நம் எல்லோருக்கும்தான். அசையாத பக்திக்கு ஆகாததில்லை என்பதை உணர்த்திய சம்பவம் அது.

ஒருநாள் காலையில் அவரை முகப்பக்கவாதம் தாக்கியது. வாய் கோணிக் கொண்டது. அவரால் பேச முடியவில்லை. அருகில் உள்ளவர்கள பதறினார்கள். உடனே அவரை அழைத்துக் கொண்டு மருத்துவ மனைக்குச் செல்ல ஏற்பாடுகள் செய்தனர். இதைப் பார்த்துக் கொண்டிருந்த கனகசபைப்பிள்ளை மருத்துவமனை செல்ல மறுத்து, பேச முடியாததால் ''அபிராமி சந்நிதிக்கு அழைத்துச் சொல்லுங்கள்.'' என்று காகிதத்தில் எழுதிக் காட்டினார். வேற வழியில்லாமல் அவரை அபிராமியின் சந்நிதிக்கு அழைத்துச் சென்றனர். அபிராமியை தரிசித்தார். அவளுடைய குங்குமத்தை நெற்றி நிறைய இட்டுக் கொண்டு, அங்கிருந்த ஓதுவாரை அழைத்து அபிராமி அந்தாதியை ஓதுமாறு எழுதிக் காட்டினார். அவ்வாறே ஓதுவாரும் மனருக அபிராமி அந்தாதியை ஓதினார். ஒவ்வொரு பாடல் முடிந்ததும் அம்பிகைக்கு தீபாராதனை காட்டப்பட்டது. அபிராமியையே பார்த்துக் கொண்டு அவளுடைய திருநாமத்தை மனதில் ஜெபித்துக் கொண்டு ஓதுவார் ஓதும் அபிராமி அந்தாதியை மனம் குளிரக் கேட்டுக் கொண்டு அமர்ந்திருந்தார் கனகசபைப்பிள்ளை.

அவரது நம்பிக்கை வீண் போகவில்லை. அபிராமி அந்தாதி ஓதி முடிந்தபோது அவரது முகப்பக்கவாதம் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிட்டது. அம்பிகையிடம் கொண்டிருந்த அப்பழுக்கில்லாத தூய பக்தி அவரை குணப்படுத்தி விட்டது.

ஒருமுறை அவர் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கையில் கனவில் ஒரு சிறுமி பட்டுப்பாவாடை உடுத்தி சோர்ந்த கண்களுடன் வந்து நின்று தனக்கு சாப்பாட்டுக்கு கல்லையும் மண்ணையும் தருவதை நீ பார்த்துக்கிட்டே இருக்கியே என்று கேட்டவுடன் அவளிடம் அவள் எங்கிருந்து வருகிறாள் என்று கேட்க, அவளும் தான் கிள்ளியூரிலிருந்து வருவதாகச் சொல்லி மறைந்து விடுகிறாள். விழித்தெழுந்த பிள்ளைக்கு என்ன நடக்கிறதென்பதை ஒருவாறு உணர்ந்து கொண்டு தன் காரியஸ்தர்கள் சிலரை கிள்ளியூர் மாரியம்மன் கோவிலுக்குச் சென்று பார்த்து வரச் சொன்னார். கே.கே.பிள்ளையுடைய நிர்வாகத்தில் இருந்த கோவில்தான் அது. அங்கு நிவேதனத்தின் போது உணவுக்குப் பதிலாக சுட்ட செங்கல்லை படைக்கும் விதத்தைக் கண்டனர். பின்னர் என்ன நடந்திருக்கும் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

11. மனநலம்காத்த மகேஸ்வரி

(காஞ்சி ஸ்ரீ மகா பெரியவா சந்நிதியில் நடந்த ஒரு சம்பவம்)

காஞ்சி மஹா ஸ்வாமிகளுக்கு எல்லாமே காமாக்ஷிதான். காமாக்ஷியாகவே பக்தர்கள் வணங்கி போற்றிய தெய்வம் அவர்.

அவர் ஒருமுறை தன் பக்தர் ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது, அபிராமி அம்பிகையைப் பற்றிப் பேச்சு எழுந்தது. அப்போது அவர் ''அபிராமிபட்டர் அநேகமாக முழுக்க, காமாக்ஷியைப் பற்றி, அவருடைய அந்தாதியில் பாடியிருக்கிறார் தெரியுமா?'', என்று கூற, அந்த பக்தர் உடனே'' இல்லையே! அபிராமி பற்றித்தான் பாடியிருக்கிறார் '' என்றார்.

ஸ்ரீ பெரியவர்கள், ''அபிராமி அவருக்கு அபிமான தேவதை. ஆனால் காமாக்ஷியைப் பற்றித்தான் பெரும்பாலும் பாடியிருக்கிறார் என்று ஊகித்துப் பார்த்தால் சில பாடல்களிலிருந்து தெரியும். எப்படின்னு தெரியுமா?'' என்று சொல்லியபின், அபிராமி அந்தாதியிலிருந்து ஒரு பாட்டை சொன்னார்கள் .

துணையும், தொழும் தெய்வம் பெற்ற தாயும், சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும்-பனி மலர்ப்பூங்கணையும்,
கருப்புச் சிலையும், மென் பாசாங்குசம், கையில்
அணையும் திரிபுர சுந்தரி-ஆவது அறிந்தனமே.

இந்தப் பாட்டில் சொல்லியிருக்கும் ஆயுதங்கள் எல்லாம் திருக்கடையூர் அபிராமி அம்பாளின் கையில் இல்லை . இந்த ஆயுதங்கள் கூடிய திரிபுர சுந்தரியின் கருஞ்சிலா மூர்த்தி காஞ்சியில் உள்ள காமாக்ஷியைத் தவிர வேறு எங்குமில்லை'' என்றார். அந்த காமாக்ஷிதான் அன்னை அபிராமியாக திருக்கடவூரில் திருக்கோயில் கொண்டுள்ளாள் என்று சொல்லாமல் சொன்னார்.

ஒரு சாதுர்மாஸ்யத்தின் போது அந்த கருணாமூர்த்தியான ஸ்ரீ மகா பெரியவா காஞ்சியில் இருந்தார். அப்பொழுது பெண்மணி தன் இளைய பெண்ணை அழைத்துக்கொண்டு பெரியவாளை தரிசனம் செய்ய வந்தாள். அவளுடைய மூத்த பெண் நல்லபடியாக திருமணமாகி வாழ்க்கை நடத்தி வருகிறாள். அங்கு வந்த இளையவள் படித்துவிட்டு ஒரு நிறுவனத்தில் வேலை செய்து வந்தாள். அவளுக்கு திருமணம் செய்ய வரன் பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில் திடீரென்று ஒருநாள் அந்தப்பெண் மனநிலை தவறி, சம்பந்தாசம்பந்தம் இல்லாமல் பேச ஆரம்பிக்க, அக்கம் பக்கம் இருப்பவர்கள், பயந்த

...n Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோளாறு, காத்து கருப்பு வேலை, மூளைக் கோளாறு என்று பலரும் தங்களுக்குத் தெரிந்ததையெல்லாம் சொல்லி பல உபாயங்கள் செய்து, அவளை சரிசெய்ய நினைத்தனர். எதுவும் முடியாமல் போக இறுதியாக டாக்டரிடம் அழைத்துச் சென்றனர். பல டாக்டர்கள் பார்த்தும் நிலைமை சரியாக வில்லை. இறுதியில் ஒருசிலர் வேலூர் மருத்துவனைக்குச் சென்று அறுவை சிகிச்சை செய்தால் மூளை சரியாகிவிடுமென்று கூறினர்.

பெண்ணைப் பெற்ற அம்மாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கல்யாணம் செய்ய ஏற்பாடுகள் செய்யும் சமயத்தில் இப்படி ஆகிவிட்டதே என்று பெருங்கவலை சூழ்ந்து கொண்டது.

திடீரென்று அந்த அம்மாள் ஒரு தீர்மானத்திற்கு வந்தாள். பெண்ணைக் கூட்டிக் கொண்டு நேரே காஞ்சீபுரம் வந்து பெரியவாளை தரிசனம் செய்யச் சென்றாள். ஆனால், வந்த அன்று மலை பெரியவாளை தரிசிக்க முடியாததால் அன்று இரவு மூவதும் அந்தப் பெண்ணை வைத்துக் கொண்டு ''ஜய ஜய சங்கர, ஹர ஹர சங்கர'' என்று ஜபித்த வண்ணம் இருந்தாள் அந்த அம்மா. அந்தப் பெண்ணோ, கத்திக் கத்தி மயக்கம் அடைந்து விட்டாள்.

மறுநாள் காலையில் மடத்துக்கு சென்று பெரியவாளிடம் கதறி விட்டாள் அந்த அம்மா. "பெரியவாதான் காப்பாத்தணும்! பெண்ணுக்கு திடீர்னு புத்தி பேதலிச்ச மாதிரி ஆயிடுத்து. நல்ல குழந்தை, கல்யாணத்துக்கு பாத்துண்டு இருக்கறச்சே, இப்படி ஆயிடுத்து .காப்பாத்துங்கோ!

அவள் மகளோ பெரியவா அடங்கி ஒடுங்கி நின்று கொண்டிருந்தாள். பெரியவா அந்த பெண்ணைப் பார்த்தார். அவருடைய அருட்கடாக்ஷம் அவள் மேல் விழுந்தது. தொடர்ந்து மூன்று நாட்கள் மடத்துக்கு வந்து பெரியவாளை தரிசனம் பண்ணினார்கள் அம்மாவும் மகளும். மூன்றாவது நாள், பெரியவா அந்தப் பெண்ணை உற்றுப் பார்த்துக் கொண்டே, ''அபிராமி அந்தாதியாச் சொல்ல ஆரம்பி!'' என்று கூற, பெரியவாளுடைய கமலத் திருவடிகளை பார்த்துக் கொண்டே அந்த பெண்ணும்,

''தாரமர்க் கொன்றையும் சண்பக மாலையும் சாற்றும்,

தில்லை ஊரர்தம் பாகத்து உமை மைந்தனே!..''

என்று கணீரென்று சொல்ல ஆரம்பித்து பாடிக் கொண்டே இருந்தாள்! அபிராமியம்பிகையை முற்றிலும் தன் மனத்தில் இருத்தி, தன்னை மறந்த நிலையில் அபிராமி பட்டரால் பாடப்பட்டதல்லவா அந்த பாடல்கள்! அந்த பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தபோதுதான் அந்த அதிசயம் நடந்தது!

வரிசையாக பாடிக் கொண்டிருக்கும்போதே நடுவில் திடீரென்று மயங்கி விழ, மற்றவர்கள் அவளுக்கு உதவ வர, பெரியவாளோ, ''அவளை அப்படியே விட்டு விடுங்கள். அப்படியே இருக்கட்டும்'' என்று சொல்லிவிட்டார். சற்று நேரத்தில் மயக்கம் தெளிந்து எழுந்த அந்த பெண் முற்றிலும் பூரணமாக குணமடைந்திருந்தாள்! அம்மாவும், மகளும் பெரியவாளின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, தங்கள் கண்ணீரைக் காணிக்கையாகினார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மஹான்களின் கருணாகடாக்ஷம் ஒரு றை நம் மேல் விழுந்தாலே போதும்! கோடி கோடி ஜன்ம வினைகளை பொசுக்கிவிடும்! அது நமக்கு ப்ரத்யக்ஷத்தில் தெரியக்கூட தெரியாது. நல்லதோ, கெட்டதோ எது நடந்தாலும் ''அவர் இஷ்டம்'' என்று இருந்துவிட்டால், தாயின் கர்ப்பத்தில் இருக்கும் சிசுவைப் போல், நாம் நிஸ்சிந்தையாக இருக்க, அவர் தாயுமான ஸ்வாமியாக இருந்து நம்மை ரக்ஷிப்பார்! இது சத்யம்!

--(காஞ்சி காமகோடி ஸ்ரீ மஹா பெரியவாளின் அற்புதங்களிலிலிருந்து)

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12.அம்பிகையின் அருள்பெற்ற தொழிலாளி

அருள் - இதற்கு ஈடு இணை ஏது? அம்பிகையின் அருளால் பதினான்கு உலகங்களையும் படைத்தும், காத்தும், அழிப்பவர்கள் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகள். இந்த மூவரும் போற்றி வணங்குவது மணம் கமழும் கடம்ப மாலையை அணிந்த கூந்தலையுடைய எழிலான தெய்வமாகிய அபிராமி அன்னையேயாகும். இவளை வணங்கி வழிபட்டாலே மும்மூர்த்திகளையும் பூஜித்ததைப் போன்றது.

கருணையுள்ளம் படைத்த சிவசக்தியே சதாசிவமாக நின்று படைப்புப் போன்ற ஐந்தொழில்களைச் செய்கின்றாள். மங்கலப் பொருளாக விளங்குகின்றாள். அவளே பிரணவ ஸ்வரூபிணி; வேதத்தின் முழுப்பொருள். உயிர்களை நடத்திச் செல்பவள். ஞானத்திற்கு இருப்பிடமாக விளங்குபவள். இவளுடைய திருவருளே உலகெங்கும் பரவி உயிருக்குயிராக நின்று, உயிருக்கு அறிவையும், ஆற்றலையும் அளித்து படிப்படியாகப் பக்குவமடையச் செய்து வீடு பேறினையும் வழங்கும். அருளுக்கு இருப்பிடமான சக்தி மனதிற்கும், வாக்கிற்கும், பொறிகளுக்கும், புலன்களுக்கும் அப்பாற்பட்டவைதான். தன்னை விரும்பி, வேண்டி நிற்பவர் மனதில் நிரம்பி தனது அருள்மழையைப் பொழிவதற்காகக் காத்துக் கொண்டிருக்கின்றாள். அன்பர்களின் உள்ளங்களில் பல வடிவங்களுடன் காட்சி தருகின்றாள். அவளை உபாசிப்பவன் விரும்பிய பலனை அடைவது திண்ணம்.

அந்தம், ஆதியுமற்ற அம்பிகை அருள் புரிந்த ஒரு தொழிலாளியின் வாழ்க்கையில் நடந்த சம்பவம் - அபிராமி அந்தாதியின் ஒரு பாடல் புரிந்த அதிசயம் இதோ - திருநெல்வேலி என்றாலே காந்திமதி அம்மைதான் நம் நினைவில் நிழலாடும்.

அம்பிகே சரணம்!

அன்னையின் அருட்சக்தி பெருகிச் சிறந்திடும் திருத்தலங்கள் பலவற்றுள் நெல்லை காந்திமதி அம்மனின் திருக்கோயிலும் ஒன்று. பொருனை நதிக்கரையில் நெல்லையம்பதி அமைந்துள்ளது. நெல்லையின் சிறப்பே காந்திமதி அம்மனின் திருக்கோயில்தான். நெல்லையப்பர் திருக்கோயிலும், அம்மனின் திருக்கோயிலும் ஒரு மண்டபத்தின் வாயிலாக இணைக்கப்பட்டுள்ளது. பஞ்சசபைகளில் இது தாமிர சபையாகும். திருஞான சம்பந்தர் தென்றல் வந்துலாவிய திருநெல்வேலி எனவும், தேனில் வண்டமர் பொழில் திருநெல்வேலி எனவும், செறிபொழில் தழுவிய திருநெல்வேலி எனவும் போற்றி திருநெல்வேலி பதிகம் பாடியுள்ளார். இத்தகைய சிறப்புமிக்க நெல்வேலியில்...

திருநெல்வேலியை அரசர்கள் ஆண்டு வந்த காலம். அரசரிடம் தலைமை அமைச்சராக இருந்தவர் வல்லவர்; ஆனால் நல்லவர் இல்லை. அக்கிரமங்களும், அட்டூழியங்களும் அவருக்கு உடன் பிறந்தவை. தற்காலத்தில் உள்ளது போலவே இது ஒரு தொடர்கதை போலும்.

நெல்லையப்பர் கோயிலில் விளக்கேற்றும் தொழிலை ஒருவர் செய்து வந்தார். சிவன் கோயிலில் விளக்கேற்றும் பெரும் பாக்கியம் அந்த அன்பருக்கு. தினம் விளக்குகளை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏற்றுவதும், இரவு கோயில் நடை சார்த்தும் பொழுது ஒரு சில விளக்குகளைத் தவிர மற்றவைகளை அணைப்பதுமான தொழிலில் ஈடுபட்டிருந்தார். வேலை நேரம் போக மற்ற நேரமெல்லாம் அவர் அம்பிகையின் சந்நதியிலேயே அமர்ந்திருப்பார். அம்பாளின் அநுக்கிரகம் அவருக்கு கிடைக்கப் பிராப்தம் செய்தார் போலும் - ஒரு நாள் அம்பாள் உபாசகர் ஒருவர் அத்திருக்கோயிலுக்கு வந்தார். மிகவும் அநுபவசாலி. ஸ்வாமியையும், அம்பாளையும் தரிசித்த அவரது பார்வை அந்த ஏழைத் தொழிலாளியின் மேல் பதிந்தது. அத்தொழிலாளியை அழைத்தார். அப்பா! நான் ஒரு பாடலை உனக்கு சொல்லித் தருகின்றேன். அதை நீ தினந்தோறும் சொல்! நேரம் கிடைக்கும் போதெல்லாம் சொல் என்று பாடலை உபதேசித்தார். அம்பாள் உபாசகர் மூலம் அத்தொழிலாளி பலன் பெற அம்பிகை நினைத்திருந்தாள் என்றே கூறலாம். அவர் உபதேசித்த பாடல் - அபிராமி அந்தாதியிலிருந்து-

அம்பிகையின் திருவடிகளை வணங்குக, வணங்கிடுக, வணங்கியவர் என்ன பயன்பெறுவர். அதற்கு என்ன சான்று என்பதனை விளக்கும் 52வது பாடலே அது.

வையம் துரகம் மதகரி மா மகுடம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித் தாமரைக்கு அன்பு முன்பு
செய்யும் தவம் உடையார்க்கு உளவாகிய சின்னங்களே

அம்பிகையின் அடியார்களுக்கு உண்டான ஐஸ்வர்ய அடையாளங்களைச் சொல்லி அவர்கள் ராஜ வாழ்க்கை வாழ்வார்கள் என்பதே இப்பாடலின் கருத்து. பிறைச் சந்திரனைத் தலையில் சூடிய பரமசிவனின் துணைவியாகிய அபிராமி என்ற திருமனையானது திருவடித் தாமரைகளுக்கு முற்பிறவியில் அன்பு செய்து தவம் புரிந்தார்க்கு இப்பிறவியில் கிடைத்த தவப்பயனான சின்னங்கள் இவை. 1) வையம் - நிலம் 2) துரகம் - குதிரை; 3) மதகரி - யானை; 4) மாமகுடம் - அரசுப்பேறு; 5) சிவிகை - பல்லக்கு போன்ற நல்ல வாகன வசதி, எடுபிடி ஆட்கள் 6) பெய்யும் கனகம் - பொழியும் பொன் 7) பெருவிலை ஆரம் - விலையுயர்ந்த ஆபரணங்கள் - இந்தச் சின்னங்களை இப்பிறவியில் பெற்றிருப்பவர்கள் முற்பிறவியில் அம்பிகையின் திருவடிகளை மனத்தில் இருத்தியபடி தவம் செய்தவர்கள் என்பது கருத்து.

தலைமை அமைச்சரின் அக்கிரமங்கள் அனைத்தும் அரசவையில் அரசருக்கு முன் நிரூபணம் ஆயிற்று. கவலை கொண்ட அரசர் மிகவும் மன வருத்தத்துடன் நெல்லையப்பரை

...n Public domain. Digitization Muthulakshmi Research Academy

தரிசிக்கச் சென்றார். உடன் அந்த அக்கிரமக்கார அமைச்சரும் சென்றிருந்தார். அரசரைக் கண்டதும் கோயிலில் இருந்த சிறு சிறு சலசலப்பு சத்தங்கள் கூட நின்று மிகவும் அமைதியாக இருந்தது. அரசர் அம்பாளை தரிசிக்கச் சென்றபோது, கற்பூர ஜோதியின் காற்றில் அசையும் சத்தம் தான் கேட்டது அத்துணை நிசப்தம். ஆனால் எதோ ஒரு மந்திர ஒலி வருவது போன்ற ஓசை கேட்டு அத்திசை நோக்கி நடந்தார் மன்னர். அவருடன் வந்த அனைவரும் சென்று அந்த சத்தம் கேட்ட இடத்தில் நின்று பார்த்தால், அந்த விளக்கேற்றும் தொழிலாளி உபதேசமான அபிராமி அந்தாதியை முணுமுணுத்துக் கொண்டிருந்தார். காவலாளிகள் அவரை இழுத்து வந்து மன்னர் முன்னே நிறுத்தினர். என்ன தோன்றியதோ மன்னருக்கு. அந்த விளக்கேற்றும் தொழிலாளியிடம் நீ என்ன மந்திரம் உச்சரிக்கின்றாய்? என்று வினவினார். அவரும் கோயிலில் தனக்கு முன்னொரு நாள் ஏற்பட்ட சுகந்த அநுபவத்தை விளக்கினார். அதுமுதல் அப்பாடலைச் சொல்லி வருவதாகவும் கூறினார். அப்படியா! மிகவும் சந்தோஷம் என்று ஆச்சர்யப்பட்ட மன்னர் அக்கிரமக்கார அமைச்சரின் அதிகார முத்திரையைப் பறித்து அதை அந்த விளக்கேற்றும் தொழிலாளியிடம் கொடுத்து, இனி நீ தான் என் அரசவை தலைமை அமைச்சர்! என்று அறிவித்தார். என்னே அம்பிகையின் திருவிளையாடல். தொழிலாளி ஏதேனும் நினைத்திருப்பாரா இவ்வாறெல்லாம் நடக்குமென்று! சற்று நேரத்தில் ஒரு தந்தப் பல்லக்கு கோயில் வாசலில் வந்தது. தலைமை அமைச்சரான விளக்கேற்றும் தொழிலாளியை அதில் அமர வைத்துக்கொண்டு அரண்மனை நோக்கிச் சென்றது. அந்தாதியில் இப்பாடலில் சொல்லப்பட்ட அனைத்து ஐஸ்வர்யங்களும் அவரை வந்தடைந்தன.

அந்தாதியின் ஒரு பாடலுக்கே இத்துணை மகிமை என்றால்! அனைத்துப் பாடல்களையும் பாராயணம் செய்பவர்களுக்கு அம்பிகை புரியும் கருணை சொல்லிலோ, எழுத்திலோ அடங்கிடுமோ!!

ஆனந்தம் அடைய விரும்புவோர் அம்மையின் அருளைப் பெற வேண்டும். இன்ப துன்ப அநுபவங்கள் நிறைந்தது உலக வாழ்க்கை. இந்த வாழ்க்கை ஆனந்தமயமாக வேண்டுமானால் இறைவியின் திருவருளைத் துணை கொள்ள வேண்டும். கசப்பான மருந்துகளுக்கு இனிப்பான தேனை அநுபானமாகக் கொண்டு உண்பது போல, முற்பிறவியிற் செய்த வினைகளின் பயனாக இப்போது நுகரும் துன்பங்கள் இறைவியின் அருளைத் துணையாகக் கொண்டால் வருத்தத்தை உண்டாக்காமல் உரம் இழந்து நிற்கும்.

ஆனந்தமாக நிற்கும் தேவி மனிதர்களுடைய மனத்தில் அறிவாக நின்று தெளியச் செய்கின்றாள். ஆன்மாக்களை உய்யச் செய்கிறாள். ஞானமே உருவாகிய அன்னை பிற பொருளை அறிவதற்குக் கருவியாகிய அறிவாக நிற்கின்றாள். தன்னை அறிவதற்குரிய வாலறிவாக நிற்பவளும் அவளே.

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

13. நம்பினார் கெடுவதில்லை

சென்னையில் உள்ள வண்ணாரப்பேட்டையில் சேணி செட்டியார் என்பவர் இருந்தார். அவர் பெரும் தனவந்தர். அவருக்கும் சொத்து சம்பந்தமான சில சிக்கல்கள் இருந்தன. அதன் காரணமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருந்தது. அவருக்கு கோதண்டராமன் என்பவர் தான் வழக்குரைஞராக இருந்தார். அவருக்கு உதவியாக திருவேங்கடன் என்பவர் குமாஸ்தாவாக பணியாற்றி வந்தார். அந்நாட்களில் வக்கீலைப் போலவே வக்கீல் குமாஸ்தாக்களுக்கு நல்ல மதிப்பும் மரியாதையும் உண்டு. வழக்காடுபவர்களுடன் வக்கீல்களை விட வக்கீல் குமாஸ்தாக்களுக்கே அதிக நெருக்கம் உண்டு. செட்டியாரின் வழக்கை கோதண்டராமன் கவனித்து வந்ததால் அவரது குமாஸ்தா திருவேங்கடம் செட்டியாரும் நல்ல நண்பர்களாக ஆனார்கள். திருக்கடவூரில் எழுந்தருளியுள்ள அன்னை அபிராமியின் மீது அதீத பக்தி கொண்டவர் திருவேங்கடம். அவரது வாய் என்றென்றும் அபிராமியின் திருநாமத்தையே உச்சரித்துக் கொண்டிருக்கும்.

திருவேங்கடத்திற்கு அறுபது வயது பூர்த்தியாகும் நாள் வந்தது. தன் மணி விழாவை (ஷஷ்டி அப்த பூர்த்தி) தன் அன்னை அபிராமியின் திருமுன்னரே கொண்டாட விரும்பினார். அதுசமயம் செட்டியாரையும் அந்த விழாவிற்கு அழைத்திருந்தார். அவரும் திருவேங்கடத்தின் மணிவிழாவைக் காண திருக்கடவூர் சென்றார். வைபவத்தில் கலந்து கொண்டார். மணிவிழா இனிதாக நிறைவேறியது. ஆனால் செட்டியாரால் அங்கு பரிமாறப்பட்ட உணவை சரியாக உண்ணமுடியவில்லை.

செட்டியாருக்கு நீண்டகாலமாக வயிற்று வலி இருந்து வந்தது. சிறிது உணவு உண்டாலே பயங்கரமாக வயிற்று வலி வந்துவிடும். காரம் பக்கத்திலேயே வரக்கூடாது. அதனால் அவர் குறிப்பிட்ட சில உணவுகளையே, அதையும் அவருக்கு ஏற்றாற்போல் பக்குவம் செய்தே சாப்பிடுவார். அதுவும் பல சமயங்களில் ஒத்துக் கொள்ளாது. இட்லி கூட ஒன்றுக்கு மேல் சாப்பிட முடியாது. நிறைய சொத்து இருந்தும் சரியாக உணவு உண்ணமுடியாததால் எதையும் அனுபவிக்க முடியவில்லை. பல வைத்தியங்கள் செய்தும் குணமாகவில்லை. பெரிய பெரிய டாக்டர்களிடமெல்லாம் காட்டி மருந்துகள் உட்கொண்டும் உடம்பு குணமாகவில்லை. டாக்டர்களுக்கே என்ன நோய் என்று பிடிபடவில்லை.

விழா முடிந்ததும் தன் விழாவிற்கு வந்த செட்டியாரைக் காணவந்தார் திருவேங்கடம். மிகவும் சோர்வாக அமர்ந்திருந்த செட்டியாரிடம் காரணம் கேட்க, சிறிது உணவு உண்டதுமே வயிற்றில் வலி ஏற்பட்டதால் சரியாக உண்ண முடியாததால் களைப்பாக இருப்பதாகக் கூறினார். அவரைப் பற்றி முன்னரே நன்கு தெரிந்திருந்த திருவேங்கடம், அவருக்கு அந்த சமயத்தில் என்ன தோன்றியதோ தெரியவில்லை. உடனே அவர் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு அபிராமியின் சந்நிதிக்குச் சென்றார். அவருக்காக, அவர் வயிற்றுவலி தீர அன்னையிடம் உளமுருக பிரார்த்தித்தார்.

in Public domain. Digitization Muthulakshmi Research Academy

மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணிபுனைந்த

அணியே! அணியும் அணிக் கழகே! அணுகாதவர்க்கு

பிணியே! பிணிக்குமருந்தே! அமரர் பெருவிருந்தே!

பணியே னொருவரைநின் பத்மபாதம் பணிந்தபின்னே!

அபிராமிபட்டர் நமக்கு உரைத்த அபிராமி அந்தாதி பாடல் இது.

''கண்ணின் கண்ணாய் கண்மணியாய் காப்பவளே, ஏதோ காரணத்தால் உன்னை வணங்காதவர்கள் உன்னை அணுகாததற்காக பின்னர் வருந்துவதும், அவ்வாறு வருந்தியவர்களின் பிறவியாகிய பிணிதீர மருந்தாகவும் இருப்பவளே! அமரர்கள் என்றும் வணங்கி ஏத்தி மகிழும்படி அமைந்தவளே! உன் திருமலர்ப் பாதங்களைப் பணிந்த பின் வேறெந்த உலக இன்பத்தையும் வேண்டி யாருடைய பாதங்களையும் பணியேன். என் நண்பருக்கு ஏற்பட்டிருக்கும் பிணியை நீக்கி அருள்புரி தாயே'' என்று வேண்டி கண்மூடி தியானித்தார். கண்ணில் கண்ணீர் வழிந்தோடியது.

சட்டென்று அவருக்குத் தோன்றியது! அம்பிகையின் பிரசாதம் அருமருந்தல்லவா! உடனே மடப்பள்ளிக்கு ஓடினார். அம்பாளுக்கு நிவேதிக்கப்பட்ட புளியோதரையை வாங்கி கொண்டுவந்து செட்டியாருக்கு உண்ணக் கொடுத்தார். ஆனால் செட்டியாரோ அதைக் கண்டதும் விஷத்தைக் கண்டதைப்போல அலறினார். காரத்தையே கண்ணால் கூட பார்க்க முடியாதவருக்கு புளியோதரை விஷம்தானே!. அபிராமியை உளருக வேண்டிக் கொண்டு சாப்பிடுங்கள். மற்றதை அவள் பார்த்துக் கொள்வாள் என்று திருவேங்கடம் தைரியம் கூறியும் அவருக்கு தைரியம் ஏற்படவில்லை. இருந்தாலும் அபிராமியின் தீவிர பக்தனான தன் நண்பனுக்காக, அம்பிகையைத் தியானித்துவிட்டு, முதலில் சிறிது எடுத்து வாயில் போட்டுக் கொண்டார். வயிற்றில் எந்த தொந்தரவும் ஏற்படவில்லை. பின்னர் இன்னும் சிறிது, இன்னும் சிறிது என்று போட்டுக் கொள்ள, வயிற்றில் எந்த தொந்திரவும் ஏற்படாததால் ஏற்பட்ட சந்தோஷத்தில் பின்னர் வயிற்றைப் பற்றி கவனிக்கவேயில்லை. ஒரு பட்டை புளியோதரையும் சாப்பிட்டு தீர்ந்த பின்னர்தான் தனக்கு வயிற்று வலி ஏற்படாததையே கவனித்தார். அன்று முதல் வயிற்று வலி அவரை விட்டு ஓடியே போய்விட்டது.

தன் வயிற்று வலி தீர்த்து தன் வாழ்வில் வசந்தம் வீசச் செய்த அன்னை அபிராமிக்கு தன் சொத்துக்களிலிருந்து ஒரு அறக்கட்டளையை ஏற்படுத்தினார். அதைக் கவனித்துக் கொள்ள, அவருக்கு ஆண் வாரிசு இல்லாததால், தன் மருமகனான சந்திரசேகர செட்டியாரைஅதற்கு அறங்காவலராக நியமித்தார். அந்த அறக்கட்டளை அபிராமி திருக்கோயிலில் பல தர்மங்களைச் செய்து வருகிறது. தற்போது சந்திரசேகர செட்டியாரின் மகன்கள் அதனைச் செய்து வருகின்றனர். இத்திருக்கோயிலில் இருதினங்கள் ஆடிப்பூர விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

விரவும் புது மலர் இட்டு, நின் பாத விரைக்கமலம்

இரவும் பகலும் இறைஞ்ச வல்லார், இமையோர் எவரும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரவும் பதம் அயிராவதம், பகீரதியும்,

உரவும் குலிசம், கற்பகக் காவும் உடையவரே.

அன்னையே! நறுமணம் கமழும் உன் திருவடித் தாமரைகளில், தேன் சிந்தும் புத்தம் புதிய மலர்களை இட்டு, இரவும் பகலும் உன்னை வழிபடுபவர்கள், அடுத்த பிறவியில் வானவர் தொழும் இந்திரப் பதவியையும், வெள்ளை யானையையும், ஆகாச கங்கையையும், வஜ்ஜிராயுதத்தையும், கற்பகச் சோலையையும் பெற்றிடும் பெரும் பேறு அடைவார்கள் என்று அபிராமி பட்டர் அம்பிகையை மலர்த்தூவி வழிபடுவதால் ஏற்படும் பலன்களைத் தெரிவிக்கிறார்.

அதற்கேற்ப ஆடிப்பூர விழாவில் ஆடிப்பூரத்தன்று புஷ்பாஞ்சலி விசேஷ இடம் பெறுகிறது.

ஆடி மாதத்தில், பூர்வ பல்குனி எனும் பூரம் நக்ஷத்திரம் இணையும் நாள் ஆடிப் பூரம். இந்த ஆடிப் பூர தினத்தில் தான் அம்பிகைக்கு வளைகாப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது. அம்பிகை வளையல் அலங்காரத்தின் மனம் மகிழ்ந்து, நெஞ்சம் நிறைந்து, தன் மக்கள் அனைவருக்கும் அருள் பாலிக்கிறாள். அம்பிகைக்கு வளையல்கள் சார்த்துவதும், வளையல் காப்பு அலங்காரத்தை தரிசனம் செய்வதும், அற்புதமான பலன்களை வாரி வழங்கக் கூடியது, ஆனந்தத்தை வழங்கக்கூடியது, வளமான வாழ்க்கையை தரக் கூடியது.

ஆடிப்பூரத்திற்காக ஆலயம் பல்வேறு நறுமண மலர்களாலும் மின் விளக்குகளாலும் வெகுவாக அலங்கரிக்கப்படும். சரவிளக்குகள் சந்நிதியை ஒளிமயமாக்கும். இருதினங்களும் அபிஷேகங்களும் ஆராதனைகளும் இருவேளை அன்ன விநியோகம் இடம் பெறும். அபிராமி லக்ஷக்கணக்கான வளையல்களால் அலங்கரிக்கப்படுவாள். புஷ்பாஞ்சலி பெரிய அளவில் நடைபெறும். அதன் பின் நடக்கும் நவசக்தி தீபாரதனையைக் காண கண் கோடி வேண்டும்.

இதனைக் காண பல ஊர்களிலிலிருந்தும் ஆயிரக் கணக்கான மக்கள் வருகின்றனர். இவ்விழாவில் இந்த அறக்கட்டளை சார்பில் 75 வருடங்களுக்கும் மேலாக புஷ்பாஞ்சலியும் வந்த மக்களுக்கு எல்லா நாட்களிலும் பிரசாத விநியோகம் குறைவில்லாமல் இன்றும் நடந்து வருகிறது.

அன்னையின் அருளாட்சி இன்றும் தொடர்கிறது அதில் பங்கு கொள்ள நமக்கும் அவள் அருள் புரியட்டும்.

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

14. அற்புதமே அபிராமி!

அன்னை அபிராமி தன்னை சரணடைந்தவர்களை என்றும் கைவிட்டதேயில்லை. நாம் இந்த உலகில் பிறந்தபின் நம் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் உண்டென்றால் அது நமக்கு குழந்தை பாக்யம் உண்டான பின்னர்தான். அந்த குழந்தையும் அறிவில் சிறந்த நல்ல பிள்ளைகளாக இருந்துவிட்டால் இல்வாழ்க்கையில் சிறந்த பேறு வேறு எதுவுமில்லை. இதைத் திருவள்ளுவரே சொல்கிறார்.

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற. (குறள் 61)

அதுமட்டுமல்ல. தன்னுடைய பொருள் என்பது என்ன? அவை கடையில் விற்கும் பொருள்களல்ல. நம் பொருள் என்பது தம்மக்களையேயாம் என்கிறார் அவர். மேலும் அவ்வாறு பெற்றெடுக்கும் குழந்தைகள் பழிபடராத பண்புடையவர்களாக இருப்பின், ஏழேழு தலைமுறை எனும் அளவுக்குக் காலமெல்லாம் எந்தத் தீமையும் தீண்டாது. அந்த குழந்தைகள் தங்களின் பிஞ்சுகரத்தால் அளவளாவப்பட்ட கூழ், தேவர்கள் உண்ட அமிர்தத்தைவிட சுவையாக இருக்கும் என்கிறார் திருவள்ளுவர். அந்த குழந்தைகளைத் தழுவி மகிழ்வது உடலுக்கு இன்பத்தையும், அந்தக் குழந்தைகளின் மழலை மொழி கேட்பது செவிக்கு இன்பத்தையும் வழங்கும். அந்த மழலை மொழிக்கு ஈடு ஈரேழ் உலகங்களிலும் இல்லை. தங்கள் குழந்தைகளின் மழலைச் சொல்லைக் கேட்காதவர்கள் தான் குழலோசை, யாழோசை போன்றவை இனிமையானவை என்று கூறுவார்கள். அத்தகைய குழந்தைகளைப் பெற்ற பெற்றோர் தன் மக்களுக்குச் செய்யவேண்டிய பேருதவி என்னவென்றால் அவர்களை அறிஞர்கள் அவையில் புகழுடன் விளங்குமாறு ஆக்குதலே ஆகும். அதாவது அவர்களைக் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கச் செய்ய வேண்டும். அவ்வாறு அவர்களை கல்வி கேள்விகளில் விளங்கச் செய்யும்போது தங்களை விட அவர்கள் சிறந்து விளங்கினால், அது பெற்றோருக்கு மட்டுமேயன்றி உலகில் வாழும் அனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சி தருவதாகும். அத்தகைய நல்ல மகனைப் பெற்றெடுத்தவள் என்று ஊரார் பாராட்டும் பொழுது அவனைப் பெற்றபொழுது அடைந்த மகிழ்ச்சியைவிட அதிக மகிழ்ச்சியை அவனுடைய அந்தத் தாய் அடைவாள். அந்த மகன் என்ன செய்ய வேண்டும்? ஆகா! இவனைப் பிள்ளையாகப் பெற்றது இவன் தந்தை பெற்ற பெறும்பேறு'', என்று மற்றவர்கள் அவனைப் புகழ்வதைக் கேட்பதுதான், அவன் தன்னுடைய தந்தைக்குச் செய்யக்கூடிய கைம்மாறு எனப்படும்.

இந்து மதத்தில் பிள்ளைகள் இல்லாதவர்களுக்கு முக்தி கிடைக்காதென்று புராணங்கள் கூறுகின்றன. அதற்காகவாவது ஒரு குழந்தை வேண்டுமென்பதில் இந்துக்கள் உறுதியாய் இருக்கின்றனர்.

இக்காலத்தில் உண்ணும் உணவு, வாழ்க்கை முறை போன்ற வெவ்வேறு காரணங்களால் பலருக்கும் குழந்தை செல்வம் இருப்பதில்லை. அன்னை அபிராமியிடம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டிக் கொண்டால் இல்லாத்தென்று ஏதேனும் உண்டோ?

மக்கட்பேறு மருத்துவத்தில் சென்னையில் தலைசிறந்து விளங்கும் திருமதி கமலா செல்வராஜ் அவர்கள் கூறுகிறார்.

தன்னைச் சரணடையும் ஒவ்வொருவருக்கும் தினம் தினம் அற்புதங்கள் நிகழ்த்திக் கொண்டிருக்கிறாள் அன்னை அபிராமி!

எனது வாழ்விலும் மருத்துவத் தொழிலிலும் அம்பாள் ஆயிரம் அற்புதங்களை நிகழ்த்தியிருக்கிறாள். அவற்றை தொகுத்தால் ஒரு புத்தகமாக வெளியிடலாம்! அவற்றில் ஒன்றை மட்டும் உங்களோடு பகிர்ந்துகொள்கிறேன்.

ஒருமுறை, பத்து வருடங்களாக குழந்தை இல்லாத ஒரு தம்பதி எனது மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக வந்தார்கள். அவர்களுக்கு சோதனைக்குழாய் வாயிலாக கருத்தரிக்க வாய்ப்பு உள்ளதா எனப் பரிசீலித்தோம். ஆனால், அந்தப் பெண் உடலளவில் பலவீனமாகக் காணப்பட்டார். அவர்களை அடுத்த மாதம் வரச்சொல்லி அனுப்பிவைத்தோம்.

ஒரு மாதம் கழித்து, சொன்ன தேதிக்கு அவர்கள் மருத்துவமனைக்கு வந்தார்கள். இந்த முறை அந்தப் பெண்மணி சற்று திடமாகக் காணப்பட்டார். நாங்களும் சிகிச்சையைத் தொடர்ந்தோம். விரைவிலேயே சோதனைக்குழாய் மூலம் அவள் கருத்தரித்து, இரட்டைக் குழந்தைகளை பெற்றெடுத்தாள்.

எங்கள் எல்லோருக்குமே இன்ப அதிர்ச்சியாக இருந்தது. டிஸ்சார்ஜ் ஆகி செல்லும்போது அவள் சொன்னாள்:

என் குழந்தைங்க திருக்கடையூர் அபிராமி அம்மன் அளித்த அற்புதங்கள். மாதா மாதம் கோயிலுக்குச் சென்று அம்பாளை வழிபட்டதாலேயே, என்னால் ஆரோக்கியமாக இந்தக் குழந்தைகளை பெற்றெடுக்க முடிந்தது'"

நா தழுதழுக்க, கண்களில் நீர் மல்க, திருக்கடையூர் அபிராமியம்மைக்கு நெஞ்சார நன்றிகூறிச் சென்றாள்.

நன்றி; சக்தி விகடன்

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

15.தேவியின் திருவடித் தியானம்

(தெய்வத்தின் குரல் - ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவர்)

படைப்பு, காத்தல், அழித்தல் என்ற மூன்று கிருத்தியங்களைச் செய்வதற்காக ஒரே பரமாத்மாதான் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் என்று மூன்று ரூபம் கொள்கிறது. கிருத்யங்களுக்கு ஏற்றபடி அந்தந்த மூர்த்திக்கு குணம், வர்ணம், ரூபம் எல்லாம் இருக்கின்றன. இந்த மூன்று என்ற வட்டத்தைத் தாண்டும்போது இம்மூன்றுக்கும் காரணமான ஒரே பராசக்தி எஞ்சி நிற்கிறது. அந்த பராசக்தியான துரீய (நான்காம்) நிலையில் நம் மனத்தை முழுக்கினால் சம்ஸாரத் துயரிலிருந்து விடுபடுவோம்.

இப்போது இருக்கும்படியான லோக வழியில் இதைப் பற்றி யோசிக்கச் சாவகாசம் இல்லை; மந்திரத் தியானமோ, ரூபத் தியானமோ பண்ணுவதற்கான பக்குவம் இல்லை. ஏதாவது ஒரு மந்திரத்தை ஜபிப்பது, ஒரு உருவத்தைத் தியானிப்பது என்ற பழக்கம் மனசுக்கு வருவது கொஞ்சம் சிரமம்தான். ஆனாலும் முதலடி எடுத்து வைக்கத்தான் வேண்டும். நம் மனசுக்கு ஹிதமாக, ரஞ்சகமாக இருந்தால்தான் முதலடியே வைப்போம். அப்படி அத்யாத்ம மார்க்கத்தில் ஹிதமான ஒரு முதலடி இருக்கிறது. அதுவே அம்பிகையின் திருவடி. எவ்வித சிரமின்றி எவரும் தேவியினுடைய சரண கமலத்தைத் தியானிக்கத் தொடங்கலாம். அந்தச் சரணார விந்தத்தின் அழகையும் குளிர்ச்சியையும் நினைத்து விட்டால் அதில் தானாக மனசு நிலைத்து நிற்கப் பழகும். இப்படி எப்போதும் உபாஸித்தால் அவளுடைய கடாக்ஷத்தால் ஜனன நிவிருத்தி ஏற்படும். அல்லது முதலில் அவளது மகிமையைச் சொல்லும் துதிகளைப் படிக்கலாம். முதல்படி பாராயணம்; அதற்கப்புறம் ஜபம்; பின்பு தியானம் பண்ணுவது. அப்படி தியானம் பண்ணும் போது, 'பராசக்தி! இந்த உடம்பிலிருந்து உயிர் போகும் தருணத்தில் நான் உன்னையே தியானம் பண்ணிக்கொண்டு உன்னிடமே மீண்டும் சேர்ந்து விடும்படியாக அநுக்கிரகம் செய்ய வேண்டும்' என்று பிரார்த்தித்துக்கொள்ளவேண்டும். இப்படி ஒவ்வொரு நாளும் அவளுடைய சரணாரவிந்தத்தைப் பிரார்த்தித்து வேண்டிக்கொண்டால், உயிர் போகும் தருணத்திலும் அவனுடைய கடாக்ஷத்தினால் அவளுடைய தியானம் வரும். இந்த உடல் போனபின் இன்னோர் உடல் வராமல் அவளிடம் இரண்டறக் கலந்து சம்ஸாரத்திலிருந்து விடுபட்டுப் பேரானந்த மயமாகி விடலாம்.

தேவியும் குருவும் ஒன்றே. எனவே இருவரது திருவடியும் ஒன்றே. குரு பாதுகையும் தேவி பாதுகையும் ஒன்றே. குரு பாதுகையை சந்திர மண்டலத்தில் தியானம் செய்ய வேண்டும் என்பது சாஸ்திரம். அமிருதம் சந்திரனிலிருந்தே பொழிவதாக சாஸ்திரம்.

சூரியன் சுயமான பிரகாசத்தை உடையவனாக இருக்கலாம். நமக்கு அவன் ஒளி கொடுக்கிறான். என்றாலும், அவனால் தாபம் உண்டாகிறது. வேர்க்கிறது; தாகம் எடுக்கிறது. அம்பாளுடைய பிரகாசம் நமக்கு ஒளியும் கொடுக்கிறது. தாபத்தையும் நீக்குகிறது. எனவே அது சந்திரிகையின் ஒளி போல் இருக்கிறது. தாபசாந்தி பண்ணுவது அமிருதம்; அமிருதமாக நமக்குத் தாபத்தை நீக்கி சாந்தியைக் கொடுத்துக் கொண்டு பிரகாசிக்கிறது அம்பிகையின் கடாக்ஷம் சரணார விந்தம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உஷ்ணப் பிராந்தியத்தில் (Tropics) உள்ள நமது தேசத்தில் இருக்கிறவர்களுக்கு குளிர்ச்சியில் ஒரு பிரீதி. 'அவன் குளுமையாக இருக்கிறான். குளுமையாகப் பேசினான், இப்போதுதான் என் வயிறு குளிர்ந்தது' என்று சந்தோஷ விஷயங்களுக்குச் சொல்வோம். மேல் நாட்டவர்களுக்கு இது நேர் மாறாக இருக்கிறது. அவர்களுடைய பிரதேசம் ஒரே குளிர்ச்சியானதால் அவர்களுக்கு உஷ்ணம்தான் (Warmth) இன்பம் அளிக்கும். அவர்களுக்கு கோல்டு (Cold) என்றால் நம்டைய எண்ணத்திற்கு நேர் விபரீதமான அர்த்தம். சரியாக வரவேற்காவிட்டால் cold reception என்பார்கள். நிர்த்தாக்ஷண்யமானவனை cold & hearted என்பார்கள்.

நமக்குச் சந்திர கிரணம் மாதிரி தாபத்தை நீக்கிக் குளுமையைக் கொடுத்து ஆனந்தத்தை அளிப்பவள் அம்பிகை. அம்பிகை சந்திர மண்டலத்தில் வாஸம் செய்வதாகப் பல இடங்களில் சொல்லியிருக்கிறது. நமக்கு இன்பம் கொடுக்கிற பெருநிதி அவள்தான். அந்த சாக்ஷாத் பரதேவதையின் சரணத்தைத் தியானம் பண்ணிப் பண்ணி சுத்தமாகி நித்திய க்ஷேமத்தை, ஆனந்தத்தை அடைவோமாக.

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

16.திருக்கடவூர் அபிராமியின் திருக்கோயில்

எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை திருக்கோயில்களில் பிரதிஷ்டை செய்து, அங்கு சென்று வணங்குகிறோம். இறைவன் தான் எங்கும் இருக்கிறாரே! நினைத்த இடத்தில் வணங்கலாமே என்றால் நிச்சயம் வணங்கலாம். ஆனால் இறை வணக்கத்தின் போது, நம் மனம் இறைத் தன்மையோடு ஒன்றிணைய வேண்டும். நாம் நினைத்த இடங்களில் எல்லாம் மனத்தை இறைவன்பால் ஒன்றுபடுத்துவது கடினம். அதற்காகத்தான் திருக்கோயில்கள்.

திருக்கோயிலின் உள்ளே நுழைந்தவுடனேயே நம்முடைய துன்பங்கள் நீங்கிவிடுமென்ற நம்பிக்கை பிறக்கிறது. கோரிக்கைகள் நிறைவேறிவிடுமென்ற எண்ணம் வலுப்பெறுகிறது. இதனால் நம் மனச்சுமை குறைகிறது. அது மட்டுமல்லாமல், நம் மனத்தில் எத்தனையோ எண்ணங்கள், கவலைகள், பிரச்சனைகள். ஆனால் எல்லாவற்றையும் பிறரிடம் சொல்ல முடியாத சூழ்நிலை. அதனாலேயே மன இறுக்கம் அதிகமாகி உடல்நிலை பாதிக்கப்பட்டவர்கள் ஏராளம். மனிதனின் உடல்நிலை பாதிப்புக்கு அதிக காரணம் அவனது மனமே என்கிறது வைத்திய சாஸ்த்ரம். மேலும் மனதை சரி செய்துவிட்டால் 80 சதவீத உடல் பாதிப்புக்களைக் குணப்படுத்தி விடலாம் என்றும் சொல்கிறது.

மனச் சுமையைக் குறைக்க உடனடி தீர்வு அதை நமக்கு கெடுதல் நினைக்காத மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது தான். இவ்வுலகில் யாரை உண்மையென நம்புவது? இறைவன் ஒருவனைத் தவிர! திருக்கோயில்களுக்கு நாம் சென்று நம்முடைய குறைகளை, கஷ்டங்களை, எதிர்பார்ப்புகளை, கோரிக்கைகளை இறைவனிடம் முறையிடுகிறோம்.

பிரபஞ்சம் முழுவதும் நிறைந்திருக்கும் இறைவன், நம் முன் இருப்பதாக நினைத்து நம் கஷ்டங்களை அவன் (மானசீகமாக) அழுது, புலம்பி, கண்ணீர் விடுகிறோம். திருக்கோயிலிலிருந்து வெளிவரும் போது எல்லாவற்றையும் இனி இறைவன் பார்த்துக் கொள்வான் என்ற நினைவில் மனம் லேசாகி வெளியே வருகிறோம்.

திருக்கோயில்களில் செய்யப்படும் பல்வேறு ஆராதனைகளும் திருவிழாக்களும் இதன் அடிப்படையிலேயே நிகழ்த்தப்படுகின்றன.

தமிழகத்தில் எண்ணிறந்த திருக்கோயில்கள் இருக்கின்றன. எல்லா தெய்வங்களுக்கும் தமிழகத்தில் திருக்கோயில்கள் உண்டு. ஒவ்வொருத் திருக்கோயிலுக்கும் ஒரு பின்னணி அல்லது வரலாறு உண்டு. சில வரலாறுகள் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. அந்த வரலாறுகள் புராணங்களோ இதிகாசங்களோ அல்ல. நாம் வாழும் இந்த சில நூற்றாண்டுகளில், சில சமீபத்தில் என்று நிகழ்ந்தவை. அத்தகையச் சிறப்பு பெற்ற திருக்கோயில்களில் ஒன்றுதான் திருக்கடவூர் அருள்மிகு அபிராமி அம்பாள் சமேத அருள்தரு அமிர்த கடேஸ்வரர் திருக்கோயில்.

தன்மீது நீங்காத பக்தி கொண்ட பாலகனான மார்க்கண்டேயனின் அன்புக்கும் பக்திக்கும் கட்டுப்பட்டு, காலனையே காலால் உதைத்து காலசம்ஹார மூர்த்தியாகச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமான் எழுந்தருளியுள்ளதும், தன் பக்தனின் சொல்லைக் காப்பதற்காக இயற்கையையும் மாற்றி, அமாவாசை நள்ளிரவில் பூர்ண சந்திரனை வரவழைத்த அன்னை அபிராமி அருள் மழை பொழியும் திருத்தலமான திருக்கடவூர் (திருக்கடையூர்), மயிலாடுதுறை (பழைய பெயர் மாயூரம்)யிலிருந்து 20 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. சீர்காழி - தரங்கம்பாடி சாலையில் பயணம் செய்தால் நேரடியாக திருக்கடவூரை அடையலாம்.

சிவ பெருமானின் பெருமையைப் பறைசாற்றும் எட்டு தலங்கள் உள்ளன. அவைஅட்டவீரட்டானத் தலங்கள் என்று பெயர்பெறும். இத்தகைய எட்டு தலங்களை கீழ்காணும் பாடல் தெரிவிக்கிறது. அவை

''பூமன் சிரங்கண்டி, அந்தகன் கோவல், புரம் அதிகை,

மாமன் பறியல், சலந்தரன் விற்குடி, மாவழுவூர்,

காமன் குறுக்கை யமன் கடவூர் இந்தக் காசினியில்

தேமன்னு கொன்றையும் திங்களுஞ் சூடிதன் சேவகமே.

என்னும் பாடலால் அறியத்தக்கன.

திருக்கண்டியூர் - பிரமன் தலைகளில் ஒன்றை நீக்கியது. திருக்கோவலூர் - அந்தகாசுரனை மாய்த்தது. திருவதிகை - திரிபுரத்தை எரித்தது. திருப்பறியலூர் - தக்கன் தலையைக் கொய்தது. திருவிற்குடி - ஜலந்தராசுரனைக் கொன்றது. வழுவூர் - யானையை உரித்தது. திருக்குறுக்கை - காமனை எரித்தது. திருக்கடவூர் - இயமனை உதைத்தருளியது. திருக்கடையூர் மார்க்கண்டரைக் காக்கும் பொருட்டுக் கூற்றுவனை உதைத்தருளிய வீரம் நிகழ்ந்த தலமாதல் பற்றி அட்ட வீரட்டானத் தலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இச்செய்தியைக் கரிதரு காலனைச் சாடினானும், மார்க்கண்டர்க்காக அன்று காலனை உதைப்பர்போலும் கடவூர் வீரட்டனாரே, கொன்றாய் காலன் உயிர் கொடுத்தாய் மறையோனுக்குசூசூ என முறையே காணப்பெறும், சம்பந்தர், அப்பர், சுந்தரர் இவர்களின் தேவார பாடல் வரிகளால் அறியலாம். அதற்கு ஏற்பக் கால சம்ஹாரமூர்த்தி தனியே எழுந்தருளியிருக்கின்றார். அவர் சந்நிதிக்கு எதிரில் அருள் பெற்ற இயமனது உருவம் இருக்கின்றது.

''பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்திலும் (அருச்சனைப்படலம்.),

கறுவிவீழ் காலன் மார்பிற் சேவடிக் கமலம் சாத்திச்

சிறுவனுக் காயு ளீந்த சேவகப் பெருமான் மேய

அறைபுனற் பழனமன்ன மூதூர்

எனக் கூறப்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

''மற்றும் ஏழுகன்னிகள், துர்க்கை முதலானோர் வழிபட்டுப் பேறு பெற்றதலம். இப்பதியில் அவதரித்த குங்கிலியக்கலயநாயனார் வறுமையுற்ற காலத்தும், தம் மனைவியாரின் தாலியை விற்றுக் குங்கிலியத் தொண்டைச் செய்தும், காரி நாயனார்

in Public domain. Digitization Muthulakshmi Research Academy



அவதரித்து அரசனிடம் சென்று பொருள் பெற்றுப் பல திருப்பணிகள் புரிந்தும் வீடுபேறு அடைந்த பதி இதுவே. சைவப்பெருமக்களாகிய அப்பரும், சம்பந்தரும் இவ்வூர்க்கு ஒருசேர எழுந்தருளி, கூற்று அடர்த்த பொன்னடிகளைத் தொழுதேத்திக் குங்கிலியக் கலைய நாயனார் திருமடத்தில் தங்கியிருந்த பெருமையும் இப்பதிக்குரிய பெருஞ்சிறப்பாகும். இத்தலத்திற்குச் சம்பந்தர் பதிகம் ஒன்று, அப்பர் பதிகங்கள் மூன்று, சுந்தரர் பதிகம் ஒன்று ஆக ஐந்து பதிகங்கள் இருக்கின்றன.

இனி திருக்கோயிலுக்குள் செல்வோமா? ஸ்ரீ அபிராமி உடனாய அமிர்தகடேஸ்வரரின் திருக்கோயில் அஷ்ட வீரட்டத் தலங்களுள் ஒன்றாக விளங்கும் திருக்கடவூரின் ராஜ கோபுரம் வானளாவ நின்று நம்மை வரவேற்கிறது. ஏழு நிலைகளைக் கொண்ட மேற்கு ராஜ கோபுரத்தின் சிற்பங்கள் மிக அழகாக காட்சி தருகின்றன. ராஜகோபுரத்தில் ரிஷப வாகனராக பரமேஸ்வரியுடனாய பரமேஸ்வரர் மையத்தில் காட்சி தர, பாற்கடல் கடைதல், கஜசம்ஹார மூர்த்தி, சம்பந்தர் திருத்தல விஜயம், சம்பந்தரின் பல்லக்கைத் தூக்கும் அப்பர், சிவபாத இருதயரின் தோளில் சம்பந்தர் என்று ஏராளமான அழகான வரலாற்றுச் சிற்பங்கள் நம் உள்ளத்தைக் கவருகின்றன.

கோபுரத்தைத் தாண்டி உள்ளே நுழைந்தால், வெளிப் பிராகாரம். வெளிப் பிராகாரத்தில் உள்ள நூற்றுக்கால் மண்டபத்தையும் தொடர்ந்து வெளிப் பிராகார வடக்குச் சுற்றில், நந்தவனத்தையும் காணலாம்.

கிழக்கு கோபுரத்துக்கு முனீஸ்வரர் கோபுரம் என்றொரு பெயர் உண்டு. இந்த கோபுரத்தில் முனீஸ்வரர் தங்கியிருப்பதால், இக்கோபுரம் முனீஸ்வரன் கோபுரம் என அழைக்கப்படுகிறது. வெளிப் பிராகாரத்தில், கிழக்கு கோபுரத்துக்கு அருகில் அமிர்த புஷ்கரணி தீர்த்தம் உள்ளது. பாற்கடலிருந்து கிடைத்த அமிர்தத்தின் ஒரு பகுதி இங்கு தீர்த்தமானதாக ஐதீகம். இந்த தீர்த்தத்தில் நீராடி, ஐயன் அமிர்தகடேஸ்வரரையும் அம்பிகை அபிராமியையும் உளருக வழிபட்டால், பதினாறு செல்வங்களும் கிடைப்பது மட்டுமின்றி, பிறவிப் பிணியிலிருந்து விடுதலையும் கிடைக்கும் என்பது ஐதீகம். வெளிப் பிராகாரத்தின் தென்மேற்கு மூலையில் அபிராமி அம்பிகையின் ஆலயத்தை அடையலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிழக்கு நோக்கிய அம்பிகையின் சந்நிதி, கொடிமரத்துடன் தனிக் கோயிலாகவே உள்ளது. கொடிமரத்தைச் சுற்றிக் கொண்டு உள்ளே நுழைந்தால் கருவறையில் திரிபுரசுந்தரி,அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகி, ஆதிபரமேஸ்வரி, ஆதிக்கடவூரின் அரசி, அன்னை அபிராமியாக புன்றுவல் பூத்த முகத்துடன் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் திருக்காட்சி தருகிறாள். நீண்டு வளைந்த புருவங்களும், கருணை வழியும் கண்களும், ஆறுதல் மொழி கூறும் இதழ்களும், அபயகரங்களுடனும் அருள்புரிகின்றாள் மலைமகள் அபிராமி. அவளுடன் ஆத்மார்த்தமாக பேசிப் பாருங்களேன்! என்றென்றும் நம்முடன் துணையிருப்பேன் என்ற அமுதமொழி பகர்வாள். கருணா சத்திரமவள். உற்சவ காலங்களில் தங்கக் கவசத்தில் மிளிர்வாள். தன் நான்கு திருக்கரங்களில் வலது கீழ்க்கரத்தில் அபயமுத்திரையும், இடக் கீழ்க் கரத்தில் வரஹஸ்த முத்திரையும், இடது மேல்கரத்தில் தாமரை மலரையும் வலது மேல்கரத்தில் ஜபமாலையும் தாங்கி சர்வாலங்கார பூஷிதையாக அருள் மாரி பொழிகிறாள். அம்பிகையின் செவியிரண்டிலும் ஒளிரும் ஸ்ரீசக்கரத் தாடங்கங்கள் (தோடுகள்) நம் கவனத்தை ஈர்க்கின்றன.

தன்னுடைய இந்த தாடங்கத்தைக் கழற்றி விண்ணில் வீசி, தன் பக்தனின் வாக்கைக் காப்பாற்ற அமாவாசையன்று பூரண நிலவை வரவழைத்தவளல்லவா இந்த அன்னை! 'தவ ஜனனி தாடங்க மஹிமா' என்று ஆதிசங்கரர் பாடியது நம் நினைவுக்கு வருகிறது. அம்பாளுக்கு வலப் புறத்தில் உற்சவத் திருமேனியைக் காணலாம்.

உதிக்கிற செங்கதிரை உச்சித் திலகமெனத் தாங்கி, மாதுளம்போது நிகர்த்தவளாக, மேலமலர்ந்தேவியாம் மகா லட்சுமி துதிக்கும் மின்கொடியாக, குங்குமத்தோய திருமேனி பூண்டவளாக அருள் காட்சி வழங்கும் அன்னை அபிராமியைக் காணக் கண் கோடி வேண்டும்! வாணுதல் கண்ணியை, விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப் பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியைப் பேதைநெஞ்சில் காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்புபூணுதற்கு முன்செய் புண்ணியமில்லாமல் முடியாதே என்று அவள் பெருமையை நெஞ்சம் நிறைய அபிராமி பட்டர் பாடுவதே நம் செவிகளில் ரீங்கரிக்கிறது. மூவுலகும் போற்றும் முக்கண்ணியைத் கண்ணார தரிசித்து, மனதார தொழுது, தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா மனம் தரும் அபிராமி அந்தாதியை முணுமுணுத்துக் கொண்டே அவள் திருச்சன்னிதியை வலம் வருகிறோம்.

திருக்கடவூர், பிரம்மன் வழி பட்ட தலம். எனவே, பிரம்ம மகிஷியான சரஸ்வதிதேவியும் அம்பாளை வழிபட்டு வணங்கிய இடம். கல்விக்கு அதிபதியாம் சரஸ்வதிக்கே அருளும் அம்பிகை, கையில் (அவள் நினைவாக!) ஜபமாலை தாங்கி அருள் பொழிகிறாள்.

அம்பாள் சந்நிதியை வலம் வந்த பின்னர் எல்லையற்ற அருள் தரும் அன்னை அபிராமியை மீண்டும் வணங்கி, திருக்கோயிலுக்குள் நுழைந்ததும் மூன்றாம் பிராகாரத்தில் உள் கோபுரம் வணங்கி உள் நுழைகிறோம். ஐந்து நிலைகளைக் கொண்ட உள்கோபுரத்தைத் தாண்டினால், இரண்டாம் பிராகாரம். அதன் இடப் பக்கத்தில் அலங்கார மண்டபம் அதைத் தாண்டினால் யாகசாலையும் வலப் பக்கத்தில் தேவஸ்தான அலுவலகம், தானியக் களஞ்சியம், வாகன மண்டபம் ஆகியவையும் உள்ளன.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

பின்னர் உள் வாயிலைக் கடந்து தல் பிராகாரத்தை வலம் வந்தால் பிராகாரத்தில் திருமாளிகைப் பத்தி மண்டபங்கள் அழகு செய்கின்றன. மேற்குச் சுற்றில் வரிசையாக, நாகநாதேஸ்வரர், முருகன் (சுப்ரமணியர்), கஜலட்சுமி, சோமா ஸ்கந்தர் சந்நிதிகள். வடக்குச் சுற்றில் நடராஜர் சபை. அதை அடுத்து பிட்சாடனர் மற்றும் வில்வ வனேஸ்வரர்.

அருணகிரிநாதர் இத்தலத்து முருகனின் பெருமையைப் போற்றி இரு பாடல்களைப் பாடியுள்ளார். அவருடைய திருப்புகழில் உள்ள அந்த முதல் பாடல்;

ஏட்டின் விதிப்படி யேகொடு மாபுர
வீட்டி லடைத்திசை வேகசை மூணதி
லேற்றி யடித்திட வேகட லோடம ...... தெனவேகி

ஏற்கு மெனப்பொரு ளாசைபெ ணாசைகொ
ளாத்து வெனத்திரி யாபரி யாதவ
மேற்றி யிருப்பிட மேயறி யாமலு ...... முடல்பேணிப்

பூட்டு சரப்பளி யேமத னாமென
ஆட்டி யசைத்திய லேதிரி நாளையில்
பூத்த மலக்குகை யோபொதி சோறென ...... கழுகாகம்

போற்றி நமக்கிரை யாமென வேகொள
நாட்டி லொடுக்கென வேவிழு போதினில்
பூட்டு பணிப்பத மாமயி லாவருள் ...... புரிவாயே

வீட்டி லடைத்தெரி யேயிடு பாதக
னாட்டை விடுத்திட வேபல சூதினில்
வீழ்த்த விதிப்படி யேகுரு காவலர் ...... வனமேபோய்

வேற்றுமை யுற்றுரு வோடியல் நாளது
பார்த்து முடித்திட வேயொரு பாரத
மேற்புனை வித்தம காவிர மாயவன் ...... மருகோனே

கோட்டை யழித்தசு ரார்பதி கோவென
மூட்டி யெரித்தப ராபர சேகர
கோத்த மணிக்கதி ரேநிக ராகிய ...... வடிவேலா

கூற்று மரித்திட வேயுதை பார்வதி
யார்க்கு மினித்தபெ ணாகிய மான்மகள்
கோட்டு முலைக்கதி பாகட வூருறை ...... பெருமாளே

(கருத்துரை; பிரமனின் விதிப்படி உயிரை உடலில் அடைத்து, மூன்று நாடிகளை அதில் பொருத்தி, பல காலம் கழித்து, பொன், பெண் ஆசைகளால் வருந்தி, பலர் இகழ அந்த உடலைப் பேணி, மன்மதன் போல் ஆடம்பர வாழ்வில் ஈடுபட்டு, இறந்த பின், கழுகுகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வுடல் மலை குகையா, பொதி சோறா என்று எண்ணி, விரும்பி உண்ணுவதற்கு முன், பாம்பு சுற்றிய காலை உடைய மயில் மீது வந்து எனக்கு அருள் புரிவாயாக. அரக்கு மாளிகையில் பாண்டவர்களை அடைத்து, நெருப்பை இட்ட துரியோதனனை நாட்டை விட்டும் போகும்படி பல சூதாட்டங்களில் ஏற்பட்ட விதிப்படி அவர்கள் காட்டுக்குப் போய், அஞ்ஞாத வாசம் செய்யும்போது, முடிவு நாள் வந்தவுடன் பாரதப் போரை மேலே நடக்கச் செய்த திருமாலின் மருகனே! சூரனின் கோட்டையை அழித்தவனே! யமனை உதைத்த பார்வதிக்கு இனிமை தரும் வள்ளிக்குக் கணவனே! எனக்கு அருள் புரிவாயாக)

இரண்டாவது பாடல்;

சூலமென வோடு சர்ப்ப வாயுவைவி டாத டக்கி
தூயவொளி காண த்தி ...... விதமாகச்

சூழுமிருள் பாவ கத்தை வீழ அழ லூடெ ரித்து
சோதிமணி பீட மிட்ட ...... மடமேவி

மேலைவெளி யாயி ரத்து நாலிருப ராப ரத்தின்
மேவியரு ணாச லத்தி ...... னுடன்மூழ்கி

வேலுமயில் வாக னப்ர காசமதி லேத ரித்து
வீடுமது வேசி றக்க ...... அருள்தாராய்

ஓலசுர ராழி யெட்டு வாளகிரி மாய வெற்பு
மூடுருவ வேல்தொ டுத்த ...... மயில்வீரா

ஓதுகுற மான்வ னத்தில் மேவியவள் கால்பி டித்து
ளோமெனுப தேச வித்தொ ...... டணைவோனே

காலனொடு மேதி மட்க வூழிபுவி மேல்கி டத்து
காலனிட மேவு சத்தி ...... யருள்பாலா

காலமுதல் வாழ்பு விக்க தாரநகர் கோபு ரத்துள்
கானமயில் மேல்த ரித்த ...... பெருமாளே.

(கருத்துரை; சூலம் போல மூன்று கிளைகளாக★ ஓடுகின்ற பாம்பு போன்ற பிராணவாயுவை வெளியேறாது அடக்கி, பரிசுத்தமான பர ஒளியைக் காணவும், முத்தி நிலை கை கூடவும், சூழ்ந்துள்ள ஆணவ இருளாகிய உருவத்தை அழிபடும்படியாக யோக நெருப்பில் அதை எரித்து, ஜோதி ரத்னபீடம் அமைந்துள்ள நிர்மலமான வீட்டை அடைந்து, அந்த மேலைப் பெரு வெளியிலே, ஆயிரத்தெட்டு இதழோடு கூடிய மேலான குரு கமலத்தில் (ஸஹஸ்ராரத்தில்)★★ சேர்ந்து, சிவ ஞான இன்ப ஒளியைப் பிரதிபலிக்கும் புனலில் மூழ்கி, வேல், மயில் இவைகளின் தரிசன ஒளியை அந்த நிலையில் கிடைக்கப் பெற்று, முக்தி நிலையைச் சிறப்புடன் பெறும் அருளைத் தந்தருளுக. ஓலமிட்டு அழும் அசுரர்களும், எட்டுத் திசைகளில் உள்ள கடல்களும், சக்ரவாளகிரியும் அழிபடவும், கிரௌஞ்ச மலையும் தொளை படும்படியாகவும் வேலைச் செலுத்திய மயில் வீரனே! சிறப்பான குற மானாகிய வள்ளியின்

Public domain. Digitization Muthulakshmi Research Academy

தினைப்புனக் காட்டுக்குச் சென்று, அவளுடைய காலை வருடி, அவளுடைய மனத்துள் பதியும்படி ஓம் என்னும் பிரணவ உபதேசமாகிய மூலப் பொருளோடு அவளை அணைந்தவனே! யமனுடன் (அவன் வாகனம்) எருமையும் அழிய, விதிப்படியே பூமியின் மேல் விழும்படி உதைத்துக் கிடத்தின காலகாலனாகிய சிவபிரானின் இடப் பாகத்தில் உள்ள பராசக்தி பார்வதி அருளிய பாலகனே! ஊழிக் காலம் தலாக வாழ்ந்து வரும் இந்தப் பூமிக்கு ஆதார நகராயுள்ள திருக்கடவூரில் இருக்கும் கோபுரத்தில் காட்டு மயில் போன்ற வாகனத்தின் மீது வீற்றிருக்கும் பெருமாளே! எனக்கு அருள் புரிவாயாக.)

இத்தலத்தில் முருகப்பெருமான் ஒரு திருமுகத்துடனும் நான்கு திருக்கரங்களுடனும் தனது தேவியர் இருவருடன் எழுந்தருளியுள்ளார். இங்கு முருகப்பெருமான் சிறு பாலகன் வடிவில் பார்வதியின் வலப்பக்கம் தாயைத் தழுவியவாறு காட்சி தருவது காண வேண்டிய ஒரு காட்சியாகும்.

உள் பிராகார வலத்தில் கவனிக்கப்பட வேண்டியவை சில உண்டு. வடக்குத் திருச் சுற்றில் புண்ணியவர்த்தனர். மார்க்கண்டேயரைக் காண்பதற்காக வந்த புலஸ்திய ரிஷி, அமிர்தகடேஸ்வரரை எண்ணி தியானித்து, சிவலிங்கத் திருமேனி ஒன்றைப் பிரதிஷ்டை செய்து வணங்கினார். அந்தத் திருமேனியே புண்ணிய வர்த்தனர். பூஜித்தவர்களுக்குப் புண்ணியத்தைத் தரக் கூடியவர். கிழக்குத் திருச்சுற்றில், தெற்கு நோக்கியவராகத் தனி மண்டபத்தில் அமர்ந்திருக்கிறார் சண்டேசர்.

மூலவர் சந்நிதி கோஷ்ட மூர்த்தங்களாக பிரம்மா; துர்க்கை; லிங்கோத்பவர்; தட்சிணாமூர்த்தி; விநாயகர். வழக்கமாக சண்டேசர் இருக்கும் இடத்தில் இல்லாமல், மூலவருக்குப் பின்புறமாக, லிங்கோத்பவருக்கு அருகிலிருப்பது கண்டு களிப்பதற்குரியது. பிராகாரத்தை வலம் வரும்போது, அறுபத்துமூவர் சிந்தையைக் கவர்கின்றனர்.

வெளிப் பிராகாரத்தில் இருக்கும் அமிர்தபுஷ்கரணிதான், ஞானவாவி. அதன் மேற்குக் கரையில், அமிர்த விநாயகர் என்னும் திருநாமத்துடன் பிள்ளையார் எழுந்தருளியுள்ளார்.

திருக்கடவூருடன் தொடர்பு கொண்ட இன்னும் இரண்டு தீர்த்தங்கள் உண்டு. கால தீர்த்தம் என்று பெயர் இருந்தாலும் தற்காலத்தில், ஆனைக் குளம் என்றழைக்கப்படும் தீர்த்தம், ஊரின் நடுவில் உள்ளது. எமன் தோற்றுவித்தது. இதில் நீராடி இறைவனைப் பூஜித்துத் தனது பலமெல்லாம் மீண்டும் பெற்றார் எமதர்மராஜா. மற்றொன்று மார்க்கண்டேய தீர்த்தம். திருக்கடவூர் மயானத்தில் உள்ளது. கோயிலுக்கு அருகில் காவிரி தீர்த்தம் அம்மன் ஆறு என்னும் தீர்த்தங்களும் உண்டு.

வில்வ வனேஸ்வரர் சந்நிதி அமைதியான முன் மண்டபத்துடன் கூடிய சிறிய மேற்கு நோக்கிய சந்நிதி. இவரைத்தான் இத்திருத்தலத்தின் ஆதி மூர்த்தி என்பார்கள். பிரும்மனால் வழிபடப்பட்ட மூர்த்தி இவர். பிரும்மா எதற்காக இங்கு வந்தார்? தெரிந்து கொள்வோமா?

பிரம்மா, ஞான உபதேசம் பெற வேண்டி, ஞானமே உருவான பரமேஸ்வரனை துதித்தார். பரமேஸ்வரன் அதற்கு ஒரு வழி காட்டினார். பிரும்மாவின் கையில் சில வில்வ விதைகளைக் கொடுத்து, விதைத்த ஒரு கூர்த்தத்துக்குள்ளாக எங்கே இவை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முளைக்கின்றனவோ, அங்கே தன்னை வழிபட்டால் ஞானம் கிட்டும் என்று அருளினார். பிரும்மாவும் தான் போகும் இடங்களில் எல்லாம் வில்வ விதைகளை ஆங்காங்கே தூவிக் கொண்டே வந்தார். இத்திருத்தலத்தில் விதைகளை விதைக்க, பரமேஸ்வரன் கூறியது போல் ஒரு முகூர்த்தத்துக்குள் அவை முளைவிட்டன. மகிழ்ச்சி அடைந்த பிரும்மா அவ்வாறு உருவான வில்வ வனத்தில் தங்கி, சிவபரம்பொருளை வழிபட்டு ஞானம் பெற்றார். அவ்வாறு பிரம்மாவால் வழிபடப்பட்ட ஆதிமூர்த்தியே, வில்வ வனநாதராக லிங்க ரூபமாக உள்பிராகாரத்தின் ஈசான்ய பகுதியில், மேற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். தினம் சாயரட்சை பூஜையின்போது மட்டும் ஆதிவில்வவன நாதருக்கே முதல்பூஜை செய்யப்படுகிறது. இவரது சன்னதிக்குள் மார்க்கண்டேயர், அமிர்தகடேஸ்வரருக்கு அபிஷேகத்திற்காக கங்கா தீர்த்தம் எடுக்கச்சென்ற பாதாள குகை இருக்கிறது. திருக்கடையூர் கோயிலில் முதலில் வழிபட வேண்டிய மூர்த்திகள், அகத்தியர் வழிபட்ட பாபகரேஸ்வரர் மற்றும் புலத்தியர் வணங்கிய புண்ணியகரேஸ்வரர் ஆவர். இவர்களை வணங்கியபின்பே, மற்ற சுவாமிகளை வழிபட வேண்டும் என்பது ஐதீகம். இவ்விருவரையும் வணங்கும்போது பாவங்கள் நீங்கி, புண்ணியம் உண்டாவதாக நம்பிக்கை. புண்ணியகரேஸ்வரருக்கு தனிச்சன்னதி இருக்கிறது. இச்சன்னதி எதிரேயுள்ள சுவரில் உள்ள துளை வழியாக அகத்தியர் பூஜித்த பாவகரேஸ்வரரை வணங்கி விட்டு பின், புண்ணியகரேஸ்வரரை வணங்க வேண்டும். வில்வ வனநாதர் சந்நிதியின் முன்மண்டபம், தியான மண்டபமாகத் திகழ்கிறது. இங்கு அமர்ந்து தியானம் செய்தால், ஞானம் பெறலாம் என்பது நம்பிக்கை..

அள்ள அள்ளக் குறையாத அமிர்தப் பாத்திரமாக வந்து கொண்டிருக்கும் திருக்கடவூர் மகிமைகளை எண்ணிக் கொண்டே, கோயிலுக்குள் வலம் வருகிறோம். கிழக்குச் சுற்றில் பஞ்சலிங்கங்கள், குங்கிலிய கலயர், சந்தான ஆசார்யர்கள், சூரியன் ஆகியோர் காட்சி தருகின்றனர். உள்பிராகாரத்தின் தெற்குச் சுற்றில் அகஸ்தியர், சந்திரபூஷணராஜா, அவரின் அமைச்சர், குங்கிலிய வணிகர், சப்த மாதர்கள், வீரபத்திரர், பிராமி ஆகியோரையும் சிறிய சந்நிதியில் அஸ்வினி தேவர்களையும் தரிசிக்கலாம்.

இந்தப் பிராகாரத்திலேயே, ஒரு பக்கத்தில் தலமரமான பிஞ்சிலம். சாதிமல்லிகைக் கொடியான பிஞ்சிலம்தான், இங்கு தலமரம். எனவே, இந்த ஊருக்கேகூட பிஞ்சிலவனம் என்று பெயருண்டு. மார்க்கண்டேயர், இறைவனை வழிபட கங்கை நீரைக் கொண்டு வந்தபோது, அதனுடன் சேர்த்து பிஞ்சிலக் கொடியும் வந்ததாக ஐதீகம். மார்க்கண்டேயர் அக்கங்கை தீர்த்தத்தால் அனுதினம் அமிர்தேஸ்வரப் பெருமானை ஆத்ம திருப்தியுடன் பூஜித்தார். அதோடு, ஜாதி மல்லிகைக் கொடியையும் வளர்த்து, அப்பூக்களை ஈசனுக்கு சமர்ப்பித்தார். இந்தக் கொடியின் மலர், இன்றும் இறைவனுக்கு மட்டுமே

Public domain. Digitization Muthulakshmi Research Academy

அர்ப்பணிக்கப்படுகிறது. ஆண்டு முழுவதும் பூக்கிறது.

பிராகார வலத்தைத் தொடர்ந்து வலம் வரும்போது தெற்கு பிரகாரத்தில் எமதர்மராஜாவை தரிசிக்கலாம். மார்க்கண்டேயரைப் பிடிக்கப் போய், இறைவனால் சம்ஹாரிக்கப்பட்டவர் பின்னர் எப்படி இங்கே வந்தார்? தல புராணம் என்ன சொல்கிறது?

யமதர்மனின் மரணத்தினால் பூமியில் உயிரினங்கள் வயதாகியும் மரணமடையாமல் வயோதிகத்தால் பல துன்பங்களுக்கு ஆளாயின. மேலும் உயிரினங்களின் பெருக்கத்தால் பூமாதேவி பாரம் தாங்காமல் துன்புற்றாள். இதனால் யமனை மீண்டும் உயிர்ப்பிக்க தேவர்களும் பூமிதேவியும் வேண்ட, எமனை மீண்டும் உயிர்ப்பித்தார் அமிர்தகடேஸ்வரர். வடக்கு முகமாக யமனார் (உற்சவமூர்த்தி) எருமையுடன் ஆண்டவன் அருளை நாடிய வண்ணமாக ஆட்சித்திருக்கோலத்தில் காணப்படுகின்றார். இங்கிருந்து பார்த்தால், எதிரே, யமதர்மராஜனைப்போல் நாம் சந்நிதிக்கு உள்ளிருக்கும் காலசம்ஹார மூர்த்தியை தரிசிக்கலாம். தொடர்ந்து வந்தால் 63 நாயன்மார்களையும் தரிசிக்கலாம். தென்மேற்கு மூலையில் பள்ளியறையைக் காணலாம்.

பிராகாரங்களை வலம் வந்து முடித்துவிட்டு இப்போது மூலவரை தரிசிப்போமா? பிராகாரத்திலிருந்து சில படிகள் ஏறினால் முதலில் காண்பது பெரிய மண்டபம். இதற்குச் சங்கு மண்டபம் என்று பெயர். அதையடுத்து மகா மண்டபம். மகா மண்டபத்தில் கள்ளவாரணப் பிள்ளையார் ஒருபுறம் அருள்பாலிக்கிறார்.

முருகனைப் போல் பிள்ளையாருக்கும் அறுபடை வீடுகள் உள்ளன. பிள்ளையாரின் அறுபடை வீடுகள் முருகப்பெருமானின் அறுபடை வீடுகள் போல சிறப்பு வாய்ந்த வழிபாட்டிடங்கள் ஆகும். எங்கும் எளிதில் எழுந்தருள்பவரும், முதல் கடவுளும் ஆகிய பிள்ளையாரை இவ்விடங்களில் வணங்குவது சிறப்பாகக் கருதப்படுகிறது.

விநாயகரின் அறுபடை வீடுகள்; 1. திருவண்ணாமலையிலுள்ள அல்லல் போக்கும் விநாயகர் 2. திருமுதுக்குன்றத்திலுள்ள ஆழத்து விநாயகர் 3. திருக்கடவூரிலுள்ள கள்ள வாரண விநாயகர் 4. மதுரையிலுள்ள காரிய சித்தி விநாயகர் 5. பிள்ளையார்பட்டியிலுள்ள கற்பக விநாயகர் 6. திருநரையூரிலுள்ள பொள்ளாப்பிள்ளையார் ஆகியோராவர்.

மஹாமண்டபத்தின் இன்னொருபுறம், வடக்கில் சிற்ப வேலைப்பாட்டுடன் கூடிய அழகிய சபையில் பஞ்சலோக விக்கிரகமாக விளங்கும் காலசம்ஹார மூர்த்தி யமனை நிக்கிரகானுக்கிரகம் பண்ணின நிலையில் தெற்குமுகமாக எழுந்தருளியுள்ளார். வழக்கமாக, இது நடராஜரின் நிலை. தாண்டவ நடராஜர், காலசம்ஹார தாண்டவம் ஆடியதாக நம்பப்படுகிறது. எனவேதான், அருகில் பாலாம்பாள் நின்று நோக்க, இடப் பாதம் தூக்கிக் காலனை உதைத்த கோலத்தில் காட்சி தருகிறார் காலசம்ஹார மூர்த்தி. பக்கத்திலேயே, வெள்ளிப் பேழையில் மரகத லிங்கம்.

காலசம்ஹார மூர்த்திக்கு தீபாராதனை நடைபெறும்போது, அர்ச்சகர், ஸ்வாமியின் பீடத்தை மூடினாற் போலவுள்ள வெள்ளித் தகட்டை நகர்த்துவார். உதைபெற்ற எமன், உயிரிழந்து தலைசாய்த்துக் கிடக்கிறான். அங்கு

காலகண்டம் காலமூர்த்திம் கலாக்னிம் காலநாசனம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நமாமி ஸிரஸா தேவம் கின்னோ ம்ருத்யு கரிஷ்யதி

வாமதேவம் மஹாதேவம் லோகனாதம் ஜகத்குரும்

நமாமி ஸிரஸா தேவம் கின்னோ ம்ருத்யு கரிஷ்யதி

என்று மார்க்கண்டேயர் துதித்த மிருத்யுஞ்சய தோத்திரத்தைக் கூறி வணங்குவோமா? எமனை எட்டி உதைத்த நிலையில் வலது திருக்கரங்களில் சூலம் மழுவும் தாங்கியுள்ளார். இடது திருவடியால் உதையுண்ட எமன் தலைகீழாக வீழ்ந்து கிடக்கிறார். இடது பக்கத்தில் பாலாம்பிகை திருமகள் கலைமகளாகிய சேடியருடன் விளங்குகிறார். இக் காலசம்ஹார மூர்த்திக்கு ஆண்டில் பன்னிரண்டுமுறை அபிஷேகம் நடைபெறுகிறது. இவர் சித்திரைப் பெருவிழாவில் ஆறாந்திருநாளன்று தான் வீதியுலாவிற்கு எழுந்தருளுவார். வீழ்த்து கிடக்கும் யமனை ஒரு சிவபூதம் கயிறுகட்டி இழுத்து அப்புறப்படுத்தும் காட்சி காணற்கரியது. இறைவனாரின் வலது பாகத்தில் ஸ்ரீமார்க்கண்டேயர் அருளுருவாய்க் காட்சியளிக்கிறார்.

காலசம்ஹார மூர்த்தியின் காலடியில் பாம்பு. ஆனால், மூர்த்திக்கு நாகாபரணம் கிடையாது. காலசம்ஹாரரின் பின்பக்கமாக மிருத்யுஞ்சய யந்த்ரம் உள்ளது. இதே சந்நிதியில் அகஸ்தியரால் வழிபடப்பட்ட அகஸ்திய லிங்கம் உண்டு. அருள்மிகு பாபவிமோசனர் என்று திருநாமம். பக்தர்களின் பாவத்துக்கு விமோசனம் தருபவர் என்று பொருள்.

அடுத்து அர்த்த மண்டபத்துடன் கூடிய கருவறையில் தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது பாற்கடலிலிருந்து எழுந்த அமிர்தத்தினால் ஆன அமிர்தகடேஸ்வரரின் திருச்சந்நிதி. எமன் லிங்கத்தின் மீது பாசக்கயிறை வீசியதால் ஏற்பட்ட வடு இன்னும் சிவலிங்கத்திருமேனியில் உள்ளது. அமுதகடேஸ்வரருக்கு பாலாபிஷேகம் நடக்கும் போது இந்த பாசக்கயிறின் தழும்பினைப் பளிச்சென காணலாம். அமிர்தகடேசருக்கு தினம் பக்கத்திலுள்ள ஊரான திருக்கடவூர் மயான ஆலயத்தின் அருகிலுள்ள காசித் தீர்த்தம் என்னும் கிணற்றிலிருந்து தண்ணீர் வண்டியில் தண்ணீர் எடுத்து வந்து ஸ்வாமிக்கு அபிஷேகம் நடைபெறுகின்றது. இந்த தீர்த்தத்தில் நீராட பொதுமக்களுக்கு அனுமதி கிடையாது. ஆண்டிற்கு ஒரு நாள் மட்டும் பங்குனி சுக்கிலபக்ஷ அசுவனியில் சுவாமி தீர்த்தம் கொடுத்து அருளும் பொழுது இந்தக் கிணற்று நீரில் நீராட பொதுமக்கள் அனுமதிக்கப்படுகின்றார்கள்.

அமுதகடேஸ்வரருக்கு நேர் எதிரில் இருக்கும் கொடிமரத்தில் அருள்மிகு பிள்ளையார் எழில்மிகு கோலத்துடன் காட்சி தருகிறார்.

அமிர்தலிங்கேஸ்வரர், அமுதகடோற்பவர், அமுதகடேசர், அமிர்தேஸ்வரர் என்றெல்லாம் திருப்பெயர்கள் கொண்டு விளங்கும் அமிர்த கடேஸ்வரருக்கு ஏன் அப்பெயர்? தலபுராணத்தைப் பார்ப்போமா?

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக கடைய பாற்கடலிலிருந்து பலவும் வெளிவர, இறுதியில் எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்த அமுதம் வந்தது. அந்த அமுதத்தைப் பருகுமுன் அதை ஓரிடத்தில் வைத்துவிட்டு எல்லோரும் நீராடச் சென்றனர். நீராடிவிட்டு திரும்பிவந்தால் அந்த குடத்தை எடுக்க முடியவில்லை. அது பாதாளம் வரை ஊடுருவி சுயம்பு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லிங்கமாகக் காட்சி தர, அந்த லிங்கேஸ்வரரே அமிர்தகடேஸ்வரர் என்று திருநாமம் பெற்றார்.

பல சித்தர்கள் வழிபாடு செய்த தலம். அதில் முக்கியமானவர் பாம்பாட்டி சித்தர் ஆவார். மார்க்கண்டேயருக்காக எமனைக் கொன்றது, பூமாதேவிக்காக எமனை உயிர்ப்பித்தது, மார்க்கண்டேயரை என்றும் சிரஞ்சீவி ஆக்கியது ஆக ஆக்கல், அழித்தல், காத்தல் மூன்றும் நடந்தமையால் இத்திருத்தலத்தில் நவக்கிரகம் கிடையாது. கால மூர்த்தியான காலனே இங்கு சிவபெருமானால் சம்ஹாரம் செய்யப்பட்டதால், நவகிரக சாந்தி செய்வோர் அந்த காலனை சம்ஹரித்த, கால சம்கார மூர்த்திக்கே பூஜை செய்து பலன் பெறுகிறார்கள்.

ராகு கேது தோஷங்கள் இங்கு கிடையாது.. 63 நாயன்மார்களில் காரி நாயனாரும், குங்கிலியக்கலய நாயனாரும் இந்த திருத்தலத்தில் அவதரித்து வாழ்ந்து தொண்டு செய்து முக்தியடைந்தார்கள்.

சித்திரை மாதம் - 18 நாட்கள் மகம் நட்சத்திரத்தன்று எம சம்ஹார திருவிழா சிறப்பாக இத்தலத்தில் நடக்கும்.தினம் சுவாமி புறப்பாடு நடைபெறும். 6 ம் நாள் அன்று கால சம்கார மூர்த்தி ஒரே ஒரு முறை வெளியே வருவார். கார்த்திகை - சோம வாரம் 1008 சங்காபிசேகம் இத்தலத்தில் மிக சிறப்பாக நடைபெறும் என்பது குறிப்படத்தக்கது.

புரட்டாசி நவராத்திரி, மார்கழி மாதம் விதிபாதம் அன்று ஏக தின உற்சவம் இங்கு சிறப்பாக நடக்கும். ஆடிப்பூரம், நவராத்திரி, பௌர்ணமி பூஜை ஆகியவை இத்தலத்தில் வெகு விமரிசையாக நடக்கும், கந்தர் சஷ்டி, மகாசிவராத்திரி, பங்குனி உத்திரம் ஆகியவை தலத்தின் சிறப்பான விசேஷ நாட்கள் ஆகும். பங்குனி மாதத்தில் காசியிலிருந்து கங்கையை வரவழைத்து இறைவனுக்கு அபிஷேகம் செய்த வரலாற்றை ஒட்டி மார்க்கண்டேயர் திருமெய்ஞ்ஞானத்திற்கு எழுந்தருளித் தீர்த்தம் கொடுத்தருளும் விழா நடைபெறும்.

தை அமாவாசை அன்று அந்தாதி பாராயணம் பாடி நிலவு காட்டி வழிபடுதல் இங்கு விசேஷம்.

மாதாந்திர பிரதோஷ நாட்களின் போது பக்தர்கள் கூட்டம் கோயிலில் பெருமளவில் இருக்கும். வருடத்தின் சிறப்பு நாட்களான தீபாவளி, பொங்கல், தமிழ் ஆங்கில புத்தாண்டு தினங்களின்போதும் கோயிலில் சிறப்பு அபிஷேக ஆராதனைகளும் நடக்கும்.

கோவிலின் சுற்று மதில்களிலும், கருவறையிலும் ஐம்பத்து நான்கு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவை 1906 மற்றும் 1925-ம் ஆண்டுகளில் கல்வெட்டுத் துறையினரால் படியெடுக்கப்பட்டுள்ளன. முதலாம் ராஜராஜன் முதல் மூன்றாம் ராஜராஜன் வரையில் உள்ள ஒன்பது சோழ மன்னர்களுடைய வரலாற்று குறிப்புகளையும், கொடைத் தன்மையையும் இக்கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

பாண்டிய மன்னர்களான சுந்தரபாண்டியன், வீரபாண்டியன் மற்றும் குலசேகர பாண்டியன் ஆகிய மூவரின் கொடைத்தன்மையை இங்குள்ள கல்வெட்டுகள் மூலம் அறியலாம். விஜயநகர மன்னர்களுள் கிருஷ்ண தேவராயரும், மூக்கண்ண உடையார் பரம்பரையில் விருப்பண்ண உடையாரும் இக்கோயிலுடன் தொடர்புடையவர்களாக இருந்ததை இக்கல்வெட்டுகள் வாயிலாக தெரிந்து கொள்ள முடிகிறது.

இத்தல மூர்த்தியான காலசம்ஹார மூர்த்தியை வழிபட்டால் ஆயுள் பலம் அதிகரிக்கும். உடல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
பலம் பெறும். நோய் நொடி விலகும், எமபயம் அண்டாது. மிகச் சிறந்த பரிகாரத்தலமாகத் திகழும் இத்தலத்தில் வீற்றிருக்கும் மூலவர் அமிர்தகடேசுவரரை வணங்குவோர்க்கு துயரம் நீங்கி மனஅமைதி கிடைக்கும். மேலும் வேலை வாய்ப்பு, தொழில் அபிவிருத்தி, உத்தியோக உயர்வு, ஆகியவற்றுக்காகவும் இங்கு பக்தர்கள் பிரார்த்தனை செய்து தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்கின்றனர்.

இத்திருத்தலத்தில் முக்கியமாக இருவிழாக்கள் இத்தலத்தின் பெருமையைப் பறைசாற்றும் விதமாக நடைபெறுகின்றன. அவற்றைக் காண்போம்;

அபிராமி பட்டர் விழா

ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் திருவாபரணங்களில் இருந்து தோன்றிய ஸ்ரீ அபிராமி தன்னையே சரணடைந்து வணங்கி சதாசர்வகாலம் தன் திருமுக தரிசனம் ஒன்றே வாழ்க்கையின் பயனாகக் கருதிய சுப்ரமணியன் என்ற பக்தருக்காக, அமாவாசை அன்று முழு நிலவு தரிசனம் அருளிய அதிசயம் நிகழ்த்திய திருக்கடவூரில் அந்த அதிசயத்தை நினைவுகூறும் வகையில் அபிராமி பட்டர் விழா என்று ஆண்டு தோறும் கொண்டாடுகிறார்கள்.

குறிப்பிட்ட நாள் காலையில் அருள்மிகு அமிர்தகடேஸ்வரருக்கும் அபிராமி அம்மைக்கும் அபிஷேக அலங்காரங்கள் நடைபெறும். திருக்கோயிலில் ஆங்கங்கே மங்கல இசையுடன் வேத மந்திரங்களும் ஒலித்துக் கொண்டிருக்கும்.

மாலை 5 மணி அளவில் 1008 பால்குடங்கள் பக்தர்களால் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, அன்னை அபிராமிக்குப் பாலபிஷேகம் நடைபெறும். அதன்பிறகு, அபிராமிக்குச் சிறப்பான முறையில் அலங்காரங்கள் செய்யப்பட்டு, தீபாராதனை நடைபெறும். இதில் தருமபுர ஆதீனம் குருமகா சந்நிதானம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பார். அவர் வந்ததும், அபிராமி பட்டருக்கு சந்திர தரிசனம் அருளிய வைபவம் நடைபெறத் தொடங்கும்.

இரவு 8 மணி அளவில் இந்த வைபவம் தொடங்கும். கோயில் அர்ச்சகர்கள் அபிராமி அந்தாதி பாடல்களைப் பாடத் தொடங்குவர். ஒவ்வொரு பாடல் முடிந்ததும், அபிராமி அம்பிகைக்கு தீபாராதனை நடைபெறும். அங்கே கூடியிருந்த பக்தர்கள் அத்தனை பேரிடம், எப்போது 79வது பாடல் வரும் என்ற எதிர்பார்ப்பும் பரபரப்பும் காணப்படும்.

'விழிக்கே அருளுண்டு' என்று தொடங்கும் 79வது பாடலும் பாடி முடிக்கப்பட, கோயிலில் இருந்த விளக்குகள் எல்லாம் ஒளி குறையும் படிச் செய்யப்பட்டு, அந்த இடத்தை செயற்கை இருள் கவ்விக் கொள்ளும். அப்போது கொடி மரத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு திரையில், அம்பிகையின் சந்நிதியில் இருந்து வந்த ஒளிக்கதிர்கள் விழுந்து, முழுநிலவாகக் காட்சி தரும். அந்த முழு நிலவை அம்பிகையாகவே காணும் பக்தர்களின் பக்திப் பரவசத்துடன்கூடிய ஆரவாரம் அடங்க சிறிது நேரம் ஆகும். பின்னர், தொடர்ந்து மற்ற பாடல்களும் பாடி முடிந்ததும், அம்பிகை அபிராமிக்கு தீபாராதனை காட்டப்பட்டு, அத்துடன் அந்த வைபவம் நிறைவு பெறும்.

இந்த வைபவம் ஸ்ரீ அபிராமி சுந்தரராஜன் அவர்களின் முழுமுயற்சியாலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பக்தர்களின் ஒத்துழைப்பாலும், தருமபுரம் ஆதீனகர்த்தர் அவர்களின் ஆதரவுடன் சிறப்புற நடைபெறுகிறது. ஸ்ரீ அபிராமி சுந்தரராஜன் அபிராமி அந்தாதியின் பெருமையை உணர்ந்து 1984 ஆம் ஆண்டு தை அமாவாசை முதல் இத்திருத்தலத்தில் இவ்விழாவில் பெரும் பங்காற்றுகிறார். ஸ்ரீ அபிராமி அம்பிகையையே காப்பாளராகக் கொண்டு, தருமபுரம் ஆதீனகர்த்தர் அவர்களின் ஆசியுடன் ஸ்ரீ அபிராமி அம்மை அறக்கட்டளை என்ற ஒரு சங்கத்தைத் தோற்றுவித்து, அது முதல் இடைவிடாமல், ஒவ்வொரு அமாவாசையிலும் ஒவ்வொரு திருக்கோயிலில் அபிராமி அந்தாதி விழாவை அவர் நடத்திவருவதும் குறிப்பிடத்தக்கது. இவ்வருடம் புரட்டாசி அமாவாசையன்று காசியில் இவ்விழாவை நடத்தினார். இது அவரது 396 வது விழாவாகுமென்பது குறிப்பிடத்தக்கது. தனது தள்ளாத வயதிலும் அபிராமியின் மீதுள்ள பற்றினாலும் பக்தியினாலும் இத்திருப்பணியைத் தொய்வின்றி நடத்தி வருகிறார். இவரது பெரு முயற்சியாலும், பக்தர்களின் உதவியாலும் அபிராமி அம்மன் திருச் சந்நிதியின் பிரகாரத்தில் அபிராமி பட்டருக்கென தனிச் சன்னதி நிறுவப்பட்டது குறிப்பிடத்தக்கது. திருக்கடவூர் மேல்வளாகத் தெருவில் மூன்றாவது வீடு தான் அபிராமி பட்டர் வீடு. இருபது அடி அகலம் கூட இல்லாத ஓட்டு வீடு. உள் சுவரில் கறுப்புக்கல் பதிக்கப்பட்டு, அருளாளர் ஸ்ரீ அபிராமி பட்டர் அவதார இல்லம், தோற்றம் 18ஆம் நூற்றாண்டு, புதுப்பிக்கப்பட்ட தேதி 16.08.1978 என்று பொறிக்கப்பட்டுள்ளது.

கார்த்திகை சோம வார 1008 சங்காபிஷேகம்

எல்லா சிவாலயங்களிலும் கார்த்திகை சோமவரத்தன்று சங்காபிஷேகம் நடைபெற்றாலும் சிவசக்தித்தலமான, அமிர்தகடேஸ்வரராய் லிங்க ரூபத்திலும், மார்க்கண்டனுக்காக காலனையே தன் காலால் உதைத்து சம்ஹரித்து அருளிய கால சம்ஹார மூர்த்தியாய், அமிர்த மிருத்யுஞ்ஜய மூர்த்தியாய் உருவ ரூபத்திலும், அபிராமி அம்பிகை நிறைந்த அமாவாசையன்று பூரண சந்திரனைக் காட்டிய திருத்தலமான திருக்கடவூரிலே மிகவும் விமர்சையாக கொண்டாடப்படுகின்றது.

அப்படி சங்காபிஷேக்திற்கென்ன விசேஷம்? சிவ பெருமான் அபிஷேகப்பிரியரல்லவா?. அவரே நெருப்பு. அதனால்தான் அவர் சிரசின் மீது கங்கையையே கொண்டிருக்கிறார். கார்த்திகை மாதம் நெருப்புக்குரிய மாதம். அதனால் அவரை மேலும் குளிர்விக்க சங்காபிஷேகம் செய்கின்றோம் என்பதும் ஒரு ஐதீகம்.

வலம்புரி சங்கை காதில் வைத்துக் கேட்டால் அதில் ஓம் என்ற ஒலி எழுவதைக் கேட்கலாம். அதனால் ஓம்காரப் பொருளான எம்பெருமானுக்கு ஓம்காரம் என்றும் ஒலித்துக் கொண்டிருக்கும் வலம்புரி சங்கால் அபிஷேகம் செய்கிறோம்.

திருக்கோயிலை வலம் வந்து சுந்தரி, அந்தரி, சிந்தூர வண்ணப் பெண்ணே, அழியாத கன்னிகையே, கலா வயிரளி, மண்டலி, சண்டி, சாம்பவி, சாமறை, சூலினி, பஞ்சபாணி, பஞ்சமி, பயிரவி, பராசக்தி, பாசாங்குசை, பிங்களை, பூரணசலங்கலை, மனோன்மணி என்றெல்லாம் தேவியைத் துதித்த பட்டரைப் போல நாம் பக்தி சிரத்தையுடன் அன்னையைத் துதித்து, ஈஸ்வரனை வணங்கி வழிபட்டு அருள் பெறுவோம்.

சுகுந்தன் என்ற சோழ மன்னன் ஒரு சமயம் திருக்கடவூர் வந்தபோது இறைவனுக்கே உரிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீர்த்தத்தில் நீராடியதால் அவன் உடலை ஒரு கொடிய பிணி பற்ற, அவ்வாறு செய்த தவறுக்கு பிராயச்சித்தமாக 1008 சங்குகள் கொண்டு சிறந்த மூலிகைகள் இடப்பட்ட புனித நீரால் இறைவனுக்கு அபிஷேகம் செய்து, தன் வினை நீங்கி, உடல் நலம் பெற்றான். அதன் நினைவாக பல்லாண்டுகளாக ஆண்டுதோறும் கார்த்திகை மாத சோமவாரம் ஒன்றொன்றிலும் திருக்கடவூரில் 1008 சங்காபிஷேகம் நடைபெற்று வருகிறது. மார்க்கண்டேயரும் தன் ஆயுளை நீட்டிக்க அமிர்தகடேஸ்வரரை வேண்டிக் கொண்டு அவருக்கு சங்காபிஷேகம் செய்துள்ளார் என்று தலபுராணம் தெரிவிக்கிறது.



பாலாம்பிகை சமேத அமிர்த ம்ருத்யுஞ்ஜய மூர்த்தி

சங்காபிஷேக நாளன்று, மாலை அமிர்த கடேஸ்வரரின் சன்னதிக்கு எதிரே உள்ள சங்கு மண்டபத்தில் பிரதான வலம்புரி சங்கும் மற்றும் 1008 சங்குகளும் நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டு , எட்டு வகை மலர்கள், எட்டு வகை பத்திரங்கள், எழு வகை மருந்து பொருட்கள், ஐந்து வகை உலோகங்கள், ஒன்பது மணிகள், பத்து காய்கனிகள், ஏழுவகை நறுமண பொருட்கள், ஒன்பது வகை பாடாணங்கள், ஏழு நதி தீர்த்தங்கள், தானியங்கள், மூலங்கள், மலை படு பொருட்கள், கடல்படு பொருட்கள் தலியவை கலந்து சங்கு தீர்த்தத்தில் கலக்கப்படுகின்றன. பின் இந்த நீரால் சங்குகள் நிரப்பப்பட்டு மந்திரங்களின் மூலம் உருவேற்றப்பட்டு பின் தருமபுரம் ஆதீனம் அவர்கள் முன்னிலையில் தேவார இன்னிசையுடன் முதலில் அமிர்த கடேஸ்வரருக்கு வலம்புரி சங்கின் நன்னீரால் மற்றும் ஆவுடையின் எட்டு திக்குகளுக்கும் எட்டு சங்கங்களின் நன்னீர் அபிஷேகம் செய்யப்படுகின்றது. பின் மற்ற 1000 சங்குகளின் புனித நீரால் அபிஷேகம் முடித்து தீபாரதனை நடைபெறுகின்றது.

பின் அலங்காரம் முடித்து நான்கு திக்குகளிலும் இருந்து மஹாதீபாராதனை நடைபெறுகின்றது, தீபாரதனையின் போது எம்பெருமானின் திருமேனியில் உள்ள காலனின் பாசக்கயிற்றின் வடுவை காணலாம். பின் ஷோடச உபசாரங்கள் முடித்து மந்திர புஷ்பம் முடித்து கற்பூர தீபாரதனையுடன் அமிர்த கடேஸ்வரருக்கு பூஜை முடிவடைகின்றது.

சிவலிங்க வடிவில் 1008 சங்கங்கள் அலங்கரிக்கப்பட்டிருக்கும் அழகு

பின் அமிர்த மிருத்யுஞ்ஜய மூர்த்தி

Public domain. Digitization Muthulakshmi Research Academy

சன்னிதியில் சிரஞ்சீவி மார்க்கண்டேயர் அருளிய மிருத்யுஞ்ஜய ஸ்தோத்திரம் ஓதப்பட்டு, தீபாராதனை நடைபெற்று, சங்காபிஷேக தீர்த்தம் பிரசாதம் வழங்கப்படுகின்றது. பின் நடராஜர், முருகர் சன்னிதிகளில் தீபாராதனை முடித்து அபிராமி அம்மையின் சன்னிதியில் திரிபுர சுந்தரியாய் கொண்டை முடி இடப்பக்கம் முடித்து, தங்கப்பாவாடையில், கையில் அங்குச பாசாங்குசம், கரும்பு வில்லும் ஏந்திய எம் அம்மைக்கு அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகிக்கு, புவனம் பதினான்கையும் பூத்தவளுக்கு, மாதுளம் பூ நிறத்தவளுக்கு. அலையாழி அரி துயிலும் மாயனது தங்கைக்கு சிறப்பு ஆராதனைகளும் ஷோடச உபசாரங்களும், அபிராமி அந்தாதியும், பதிகம், அபிராமி ஸ்தோத்திரம் முழங்க சிறப்பாக நடை பெறுகின்றது.

பின் அலங்கார மண்டபத்தில், வெள்ளி மூஞ்சூறு வாகனத்தில் வினாயகப் பெருமானும், எம்பெருமான் சோமாஸ்கந்தராக வெள்ளி ரிஷப வாகனத்திலும், அபிராமி அம்மை வெள்ளி ரிஷப வாகனத்திலும், வள்ளி தேவசேனா சமேத முருகர் வெள்ளி மயில் வாகனத்திலும், சிறிய ரிஷப வாகனத்தில் சண்டிகேஸ்வரரும் அருமையான மலர் அலங்காரத்துடன் எழுந்தருளியிருக்க, பஞ்ச மூர்த்திகளுக்கு சிறப்பு தீபாரதனை நடை பெறுகின்றது. ஐந்து மூர்த்திகளுக்கும் அலங்கார தீபம் ஒரே சமயத்தில் நடைபெறும் அந்த அழகைக் காணப் பெற்றவர்கள் பெரும் பேறு பெற்றோர் என்பதில் ஐயம் இல்லை. தீபாரதனை முடித்து பஞ்ச மூர்த்திகளுக்கு ஷோடச உபசாரம் நடை பெற்று கற்பூர தீபாரதனை முடித்து பஞ்ச மூர்த்திகளும் நாதஸ்வர இசை முழங்க புறப்பாடு கண்டருளுகின்றனர். புறப்பாடு கோவிலை சுற்றி வந்து முடியும் போது நள்ளிரவுக்கு மேல் ஆகிவிடும். இவ்வாறே மிகவும் சிறப்பாக 1008 சங்காபிஷேகம், பஞ்ச மூர்த்திகளின் புறப்பாடும் இத்திருத்தலத்தில் அனைத்து சோமவார தினங்களிலும் சிறப்பாக நடைபெறுகின்றது.

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

17.தினந்தோறும் வைபவம் காணும் திருக்கடவூர்

'அரிது அரிது மானிடராய் பிறப்பதரிது' கிடைத்தற்கரிய மானிட பிறவியானது தெய்வதன்மை அடைவதற்கு உரியது. மனிதனுக்கு அறுபது வயதில் அபமிருத்யு ஏற்படும் காலம் (விபத்து) என்பதால் 59 வயது பூர்த்தி ஆகும் போது அறுபது வயது துவக்கத்தில் உக்கிரத சாந்தியும் அறுபது பூர்த்தி ஷஷ்டியப்த பூர்த்தியும் எழுபது வயதில் பீமரத சாந்தியும் செய்து கொள்கிறோம். எண்பதாவது வயதில் ஆயிரம் பிறை கண்டதால் தெய்வத்தன்மை உடையவராய் ஆகிவிடுகிறார்கள். அப்பொழுது சதாபிஷேகம் சாந்தி செய்கிறோம். எண்பது வயதிற்குமேல் கொள்ளுபேரன் (மகனின் மகனின் மகன்) கைகளினால் அபிஷேகம் வாங்கும் பேரு கிடைப்பதால் அது பொற்காசு அபிஷேகம் என்று பெயராகி கனகாபிஷேகம் ஆகிறது அவர்களுடைய மனைவிக்கு நவரத்தின கற்களினால் ஆன மாங்கல்யம் அணியும் பேறுகிடைக்கிறது.

மனிதனுக்கு மனைவியுடன் இணைந்து சதாபிஷேகம் கிடைத்தால் அதுவே பூர்ணாபிஷேகம். தன் பேரனுக்கு ஆண் குழந்தை பிறந்து அவன் கையால் அபிஷேகம் கிடைத்தால் கனகாபிஷேகம். செயற்கரிய செயல்களை செய்து வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் செய்து கொள்வதும் கனகாபிஷேகம் தான்.

பெரியோர் வர்ழ்த்தும்போது தனம் தான்யம் நிறைந்த புதல்வர் நூறாண்டு வாழ்வு ஆகியன பெறுமாறு கூறி ஆசிர்வதிப்பதை காணலாம். இவற்றுள் பூரணமான ஆயுள் என்பது மிகமுக்கியமான ஒன்று. எல்லாம் இருந்தும் நீண்ட வாழ்வு இல்லையெனில் ஏனைய நன்மைகள் நாம் எவ்வாறு நுகரமுடியும்?. அதற்கு தெய்வானுக்கிரகம் வேண்டும். அதனால் இச்சாந்திகளை பலரும் திருத்தலங்களில் செய்து கொள்கிறார்கள். அச்சாந்திகளை செய்து கொள்ள மிகவும் உன்னதமான தலம் திருக்கடவூர். மார்கண்டேயர் இந்த திருத்தலத்தை வழிப்பட்டே மிருத்யு பயம் போக்கிக் கொண்டார் என்பது நாமறிந்தே.

திருக்கடவூர் திருக்கோயில் ஒரு நித்திய கல்யாண திருக்கோயில். இத்திருத் தலத்தில் தினந்தோறும் ஹோமங்களும் ஜபங்களும் சிறப்பாக நடந்து வருகின்றன. இத்திருக்கோயிலில் எந்நேரமும் வேத மந்திரங்கள் ஒலித்துக் கொண்டே இருக்கும். திருக் கோயிலை நாடி வரும் பக்தர்கள் இறைவனையும் இறைவியையும் வழிபட்டு எல்லா நலன்களும் பெற்று நலமுடன் வாழ்கிறார்கள்.

மனித இனத்தின் ஆயுள் 120 ஆண்டுகள் என்று புராணங்கள் கூறுகின்றன. அதனால் தான் தசாபுக்திகளின் மொத்த வருடம் 120 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது. ஒருவன் 120 வயது

Public domain. Digitization Muthulakshmi Research Academy

வரை வாழ்ந்தால் தன் ஆயுள் காலத்தில் எல்லா தசா புக்திகளையும் பார்த்துவிடுவான். அதாவது 120 ஆண்டுகளில் நவகிரகங்களின் எல்லா தசைகளும் அவன் வாழ்வில் ஆதிக்கம் செலுத்தியிருக்கும். வைணவ ஆச்சார்யரான ஸ்ரீ ராமானுஜர் 120 ஆண்டுகள் வாழ்ந்ததாக அவரது சரித்திரம் கூறுகிறது.

பிறந்த எல்லோரும் ஒருநாள் இறக்கத்தான் வேண்டுமென்றாலும் அந்த நாளை இறைவன் நமக்குத் தெரியாமல் செய்து ஒரு நன்மையச் செய்திருக்கிறான். அந்த நாள் மட்டும் தெரிந்துவிட்டால் உலக இயக்கமே நின்றுவிடும். 100 வருடங்குக்குப் பின்தான் இறப்பு என்று தெரிந்தாலும் அதை எண்ணி எண்ணியே மனிதன் சீக்கிரம் மாய்ந்துவிடுவான். தான் இருக்கும் வரையில் எதையுமே செய்யாமல் சோம்பித்திரிவான். உலக இயக்கம் நடந்து கொண்டே இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் மனிதன் தான் இறக்கும் தேதியை அறிந்து கொள்ள முடியததுதான். இறைவன் அனுகிரகத்தால் இறவாமை அடைந்தவர்கள் மார்கண்டேயர், அசுவத்தாமன், மாவலி, வியாசர், ஹனுமான், விபீஷணன், கிருபர், பரசுராமர் ஆகிய எண்மர் ஆவார்கள். இவர்கள் கல்ப காலம் வரையில் பூவுலகில் இருப்பார்களென புராணங்கள் கூறுகின்றன.

பூமியில் மனிதன் இருக்கும் வரையில் ஆரோக்யமாகவும், ஆனந்தமாகவும் வாழவே ஆசைப்படுவான். அதற்கு பொன்னும் பொருளும் மட்டுமின்றி, இறைவனின் அருளும் வேண்டும். இறைவனின் அருளைப் பெற மனிதன் பல தலங்களுக்கும் சென்று ஹோமங்கள் மற்றும் பிரார்த்தனைகள் செய்கிறான். ஆண்டவனின் திருச் சந்நிதியில் திருமணம் புரிந்து கொண்டால் வாழ்வு இனிக்குமென்று நினைக்கிறா . அதே போல் அவன் வாழ்வில் ஒவ்வொரு காலகட்டத்திலும் நிகழும் விழாக்களை இறைவனின் திருச் சந்நிதியிலேயே நிகழ்த்தினால் அவர்களின் அருளுடன் பூவுலகில் இருக்கும் வரை நலமாக வாழலாமென எண்ணுகிறான். அப்படி பலரும் தங்களின் 1. ஆயுஷ் ஹோமம் 2. திருமண வைபவம், 3. உக்ரரத சாந்தி 4. ஷ்டியப்தபூர்த்தி (மணிவிழா) 5.. பீமரதசாந்தி 6. சதாபிஷேகம் மற்றும் கனகாபிஷேகம் போன்ற பல நிகழ்வுகளை இத்திருத்தலத்தில் நிகழ்த்த ஆசைப்படுகின்றனர். இத்திருத்தலத்தில் இத்தகைய நிகழ்வுகளை தினந்தோறும் காணலாம். பாமரர் முதல் பணக்காரர்கள் வரை பலரும் இத்திருத்தலத்தில் தங்களின் மேற்படி விழாக்களைக் கொண்டாடுகின்றனர். இத்தகைய விழாக்களை இத்திருத்தலத்தில் கொண்டாடுவதற்கு முக்கிய காரணம் மார்கண்டேயர் சிரஞ்சீவத்துவம் பெற்றதும், தன் பக்தன் தவறிச் சொன்ன சொல்லுக்காக இயற்கையையே மாற்றிக் காட்டிய அன்னை அபிராமி, தங்களையும் காப்பாள் என்ற பக்தியுடன் கூடிய நம்பிக்கையுமேயாகும்.

ஆயுளை வளர்க்கும் அனைத்து சாந்தி ஹோமங்களுக்கும் அனைத்து இடங்களிலும் பாலாம்பிகை உடனாகிய மிருத்யுஞ்சயரே பிரதான தெய்மாவார். திருக்கடவூரில் மட்டும் இன்றி எந்த ஊர்களிலும் இந்த சாந்தி ஹோமம் செய்து கொண்டாலும் இந்த தெய்வங்களைத் தான் ஆவாகனம் செய்வார்கள்.

ஆயுஷ் ஹோமம் என்பது ஒவ்வொரு மனிதனின் பிறந்த நாள் பிறந்த வருடம் பிறந்த நக்ஷத்திரம் அன்று செய்து கொள்ள வேண்டிய கர்மாவாகும். இந்த ஆயுஷ் ஹோமத்திற்கு பிரதான தெய்வம் மிருத்துஜயர், பாலாம்பிகை, மார்கண்டேயர் ஆவர். அவர்களுடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மகாகணபதி, வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர், ஆயுள் தேவதை தன்வந்திரி பகவான், நவரகிரகங்கள் ஆகியோரையும் வணங்குவர்.

59 வயது பூர்த்தியாகி 60 வயது ஆரம்பத்தன்று செய்து கொள்வது உக்ரரத சாந்தியாகும். ஒரு மனிதன் 60 வயதிற்கு முன்பு ஒரு தாயின் வயிற்றில் கருவாக இருப்பான். அவன் கருவில் உற்பத்தியான அன்று உள்ள கிரக நிலைகள் அநேக மாக 60 வயது ஆரம்பத்தில் தோன்றுவதற்கு வாய்ப்பு உள்ளது. அச்சமயத்தில் ஏற்படும் கஷ்டங்களை நீக்க இறைவனை வேண்டுவதே உக்ர ரத சாந்தியாகும்.

தமிழ் ஆண்டுகள் அறுபது. அதை முழுமையாக ஒரு தடவை வாழ்க்கையில் பூர்த்தி செய்வதே நிறைவு என்று கொண்டாடுகிறோம். கணவனும் மனைவியும் மங்கள அபிஷேகம் செய்து கொண்டு மாலை மாற்றிக் கொண்டு மனைவி கணவன் கையால் மாங்கல்யதாரணம் செய்து கொள்கிறாள். அவர்களுடைய புத்திரர்களும் புத்திரிகளும் சேர்ந்து செய்ய வேண்டிய மங்கள வைபவம் இது. அவர்கள் தமது பெற்றோரின் கல்யாணத்தைப் பார்க்க இயலாது. அதனால் தான் இந்த நிகழ்ச்சியை இப்போது செய்து பார்த்து மகிழ்கிறார்கள்.

மேலும் ஷஷ்யப்த பூர்த்தியன்று மனிதன் இப்பூவுலகில் பிறந்த நேரம் திதி கிழமை அனைத்தும் திரும்பவும் சேரும் காலமாகும். அதாவது மனிதன் மறுபடியும் உலகில் பிறப்பது போன்ற ஒரு சூழ்நிலை காலம் ஆகும். அதற்கு இறைவனுக்கு நன்றி கடனாக வாழையடி வாழையாக குடும்பம் தழைத்தோங்க வம்சம் விருத்தியாகி குலம் தழைத்து இருக்க வேண்டி செய்வதே ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தியாகும். மனிதனின் முழு ஆயுட் காலமான 120 ஆண்டுகளில் சரிபாதியான 60 ஆண்டில் இந்த சாந்தியைச் செய்து கொள்வது சிறப்பானதாகும்.

70 வயது ஆரம்பம் தல் 75க்குள் செய்து கொள்வது பீமரதசாந்தி. இந்த வயதில் எல்லா மனிதர்களுக்கும் உடல் தளரக்கூடிய வயதாகும். இது இயற்கையின் வழி. உடல் தளர்ந்தாலும் உள்ளம் தளராமல் இருக்க வேண்டும் என்று இறைவனை நோக்கி செய்யக்கூடியது பீமரதசாந்தி இதற்கு சாட்சி மஹாபாரதத்தில் வரகூடிய பஞ்சபாண்டவர்கள். பஞ்சபாண்டவர்களில் பீமன் செய்த சிவபூஜை எல்லோருக்கும் தெரிந்த விஷயம். பீமன் செய்த சிவபூஜைக்காக சிவன் மகிழ்ந்து தன்னுடைய எட்டு நாமாவளியில் ஒரு நாமாவளியை விட்டு கொடுத்தார். அது பின்வருமாறு :

1. பவன் 2. சர்வன் 3. ஈசானன் 4. பசுபதி 5. உக்ரன் 6. ருத்ரன் 7. பீமன் 8. மஹாதேவன் இதுவே எட்டு நாமாவளிகள்.

ஆதலால் பீமன்போல் மனதளவிலும் உடல் அளவிலும் வலு இருக்க வேண்டும் என்று இறைவனை நோக்கி பராத்திப்பதே பீமரத சாந்தி.

கணவனும் மனைவியும் ஒற்றுமையாக வாழ்ந்து மக்களின் அடுத்தத் தலைமுறையாக பேரன் பேத்திகளும் வளர்ந்து வாழ்க்கையில் நிலைக்கும் போது கணவனுக்கு எண்பது வயது பூர்த்தியானால் சதாபிஷேகம் என்று கொண்டாடுகிறோம். 'ஆயிரம் பிறைகண்டவர்' என்று கூறி ஒருவர் நீண்ட காலம் வாழ்ந்ததைப் பெருமையுடன் கொண்டாடுகிறோம். ஆயிரம் பிறை

Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூர்ணமான சந்திரனை தரிசிப்பது பெரும் பாக்கியம். ஆனால் அப்படி முழுமையாக தரிசிக்க எண்பது மூன்று வயது வாழவேண்டும். ஆனால் எண்பது வயது நிறைந்தவுடன் சதாபிஷேகம் செய்து கொண்டாடுகிறோம். இதைப் பேரன் பேத்தி பேத்திமார் தங்களின் தாத்தா பாட்டிக்கு நிறைவுடன் செய்வதே சிறப்பானது. அவர்களும் தாத்தா பாட்டியின் திருமண நிகழ்ச்சிகளை மீண்டும் பார்த்து மகிழலாம்.

ஒருவனின் பூரண ஆயுள் 120 வருடங்களாக இருந்தாலும் 100 வருடங்கள் வாழ்வதே ஒரு சாதனைதான். அதனாலேயே 'சதமானம் பவதிசதாயுஸூ' என்று அழைக்கிறோம். சதம் எண்பது நூறு என்றாலும் அந்தப் பலன் எண்பது வயது நிறையும் போது பூரண அளவில் கிடைத்து விடுகிறது என்று பெரியோர்கள் கூறி ஆசீர்வதிப்பதே இதன் பெருமை ஆகும். நூறு வயது வாழ்ந்து வாழ்க்கையின் முழுப் பலனை முடிந்த வரையில் பெறும்படி செய்யும் ஆசீர்வாதம் இது.

சதாபிஷேகத்தில் பரமேஸ்வரன், பிரும்மா, விஷ்ணு, நவக்கிரஹங்கள், சிரஞ்சீவிகளான பக்த மார்கண்டேயர், ஹனுமன், அஹ்வத்தாமா, மஹாபலி, வேதவியாசர், விபீஷணர், கிருபாச்சாரியார், பரசுராமர், சப்தரிஷிகள், இந்திராதி, தேவர்கள், அஷ்டதிக்பாலகர்கள், ஆயுர் தேவதை, நக்ஷத்திர தேவதை, இவர்களை ஆராதனை செய்து ஜபித்த புனித தீர்த்தத்தை தம்பதிகளுக்கு அபிஷேகம் செய்வார்கள்.

சதாபிஷேகம் செய்து கொள்பவர்கள் பாக்கியசாலிகள். அவர்கள் பரம்பொருளின் பூரண அனுக்கிரத்தைப் பெற்றவர்கள். அவர்களை தனக்கு மிகவும் பிடித்த 'சகஸ்ரஜீவிகள்' என்று கிருஷ்ண பரமாத்மா கூறுகிறார். அவர்கள் உமா மகேசுவரர் ஆகவே மதிக்கப்படுகிறார்கள். அந்த வைபவத்தில் அவர்களை நமஸ்காரம் செய்து ஆசிகளைப் பெறுவது மிகவும் விசேஷமானது. அதனால் அப்படிப்பட்ட தம்பதியரை எல்லோரும் நாடிப் போய் அன்றைய தினம் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து அவர்களுடைய ஆசிகளைப் பெறவேண்டும்.

இத்தலப் பெருமையை உணர்ந்து கொண்ட பக்தர்கள் மேற்படி வைபவங்களை திருக்கடவூரில் செய்து கொண்டு இறைவனின் அனுகிரகத்தை பெற்று எல்லா வளமும் கிடைத்து இனிதுடன் வாழ்கிறார்கள்.

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

18. அனைத்தும் அருள்வாள் அபிராமி

அருள்இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள்இலார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு (அதிகாரம்:அருளுடைமை குறள் எண்:247)

பொருட் செல்வம் இல்லாமல் இவ்வுலகில் வாழ முடியாதென்பது இன்று நேற்றல்ல; புராண காலந்தொட்டே இருந்திருக்கிறது. அதனால் தான் திருவள்ளுவர் பொருட்செல்வம் இல்லாதவர்கள் இவ்வுலகத்து இன்பத்தை அனுபவிக்க முடியாததுபோல் இறைவனின் அருட்செல்வம் இல்லாதவர்களுக்கு சொர்க்கலோக இன்பம் இல்லை என்று உறுதிபட கூறுகிறார்.

பொருட் செல்வம் என்றால் என்ன? பொன், பொருள், மாடு, மனை, உணவு, உடை மட்டுமே பொருட் செல்வமல்ல; ஐம்புலன்களாலும் அனுபவிக்க முடிந்தவை எல்லாமே பொருட் செல்வங்கள் தான்.

வீட்டில் நடைபெறும் பண்டிகைகள் மற்றும் விழாக்களின்போது அங்கு வந்திருக்கும் பெரியோர்களை நமஸ்கரித்து அவர்களிடம் ஆசீர்வாதம் வாங்குவது நமது பண்பாடு. அவ்வமயம் பெரியவர்கள் நம்மை வாழ்த்தும் போது பதினாறும் பெற்று பெறுவாழ்வு வாழ்க என்று வாழ்த்துகின்றனர். திருமண நிகழ்வின் போது தங்களிடம் ஆசிகள் பெறும் தம்பதிகளை வாழ்த்தும் பொழுது, 'ஆல் போல் தழைத்து, அருகு போல் வேரூன்றி, மூங்கில் போல் சுற்றம் முழுமையாய் சூழ, பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழ்க' என வாழ்த்துவர். பெரியோர்களின் உள்ளத்திலிருந்த வரும்உணர்வு பூர்வமான இந்த வாழ்த்துக்கள் வலிமை மிக்கவை. அதனாலேயே இன்றும் பெரியோர்களைக் கண்டால் வணங்கும் வழக்கம் இன்றும் இருக்கிறது.

இந்த வாழ்த்தில் வரும் பதினாறு பேறுகள் என்ன என்பதைச் சிந்திப்போமா?

அம்பிகையின் அருள் பெற்ற காளமேகப் புலவரின் ஒரு பாடலில் அவர் பதினாறு செல்வங்களை வரிசைப் படுத்துகிறார். காளமேகப் புலவரின் அந்த பாடல்;

துதிவாணி வீரம் விசயம் சந்தானம் துணிவு தனம்
மதுதானியம் சௌபாக்கியம் போகம் அறிவழகு
புதிதாம் பெருமை யறங்குல நோயகல் பூண்வயது
பதினாறு பேறுந் தருவாய் மதுரைப் பராபரனே

என்று பாடுகிறார் காளமேகப் புலவர்.

இதன் பொருள்: மதுரையில் எழுந்தருளிய இறைவா! புகழ் , கல்வி, வீரம், வெற்றி, மக்கட் பேறு, துணிவு, செல்வம், மிகுந்த நெல் முதலிய தானியங்கள், வளமை, போகம்,

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

அறிவு, அழகு, பெருமை, தர்ம சிந்தனையுடைய நல்ல குடிப்பிறப்பு, நோயில்லாத வாழ்வு, நீண்ட வயது ஆகிய பதினாறு பெரும் பேறுகளையும் எனக்குத் தந்தருள்வாயாக என்பதாகும்.

பிரபோத சந்திரோதய நூலில் உள்ள ஒரு பாடல் அடக்கத்தின் மேன்மையைத் தெரிவிக்கையில் அடக்கம் இல்லாமல் 'தான்' என்ற அகந்தையுடன் இருப்பவர்களிடத்தில் உள்ள பதினாறு செல்வங்களும் அழிந்து விடும் என்று தெரிவிக்கிறது. அந்த செல்வங்கள் என்னென்ன?

ஒருவருக்கு தான் கற்ற கல்வியால் வந்த அறிவு, தான் பிறந்த குலத்தால் வந்த உயர்வு, இயற்கையாகவே உள்ள கருணை உள்ளம், உலகெலாம் போற்றும் புகழ், அளவிடமுடியாத செல்வம், கைம்மாறு கருதாமல் தன்னிடம் உள்ளதை அள்ளி வழங்கும் கொடைத்தன்மை, நற்பண்பு, நல்லொழுக்கம், அரிய தவத்தால் வந்த ஆத்மசுத்தம், நெருங்கிய நட்பு, ஒப்பிட முடியாத வலிமை, எப்போதும் உண்மை பேசுதல், மிகவும் தூய்மையாக இருத்தல், நல்ல குணம், பேரழகு ஆகிய பதினைந்து நலன்களும் இருப்பினும் அவரிடம் அடக்கம் என்ற பதினாறாவது செல்வம் இல்லாமல் இறுமாப்பு இருக்குமானால் அந்த நற்பண்புகள் யாவும் அழிந்து போகும் என்கிறது பிரபோத சந்திரோதயப் பாடல்.

''கற்றறிவு குலமேன்மை கருணைபெரும் புகழ்செல்வம் கைமா றெண்ணாது
உற்றதுதவும் கொடைசீர்மை ஒழுக்கம்அருந் தவநியமம் உறவின் கேண்மை
மற்றெதிரிலாத் திண்மை வாய்மைமிகுந் தூய்மைகுணம் வனப்பு யாவும்
பெற்றிடினும் அடக்கமிலாப் பெருமிதத்தால் அத்தனைக்கும் பிழையுண்டாமால்'

- (பிரபோத சந்திரோதயம்: 33)

நாம் இறைவனிடம் எவ்வளவோ வேண்டுகோள்களை விண்ணப்பங்களை வைக்கிறோம். ஆனால் சைவத்தில் குரு மரபிற்கெல்லாம் குருவாக விளங்கும் நந்தியெம் பெருமான், திருவையாறு திருத்தலத்தில் பரம்பொருளாக விளங்கும் சிவபெருமானிடம், பதினாறு பேறுகளைத் தர வேண்டி விண்ணப்பம் செய்கிறார். திருவையாறு திருத்தல வரலாற்றில் காணப்படும் அப் பாடல்;

திருச்சிற்றம்பலத்துள் உறையும் சிவக்கொழுந்தே !
நின் பொன்னார் திருவடிக்கு ஒன்று உண்டு விண்ணப்பம்-அது தான்
மறைகள் நிந்தனை சைவ நிந்தனை பொறா மனம்
தறுகண் ஐம்புலன்களுக்கு ஏவல் செய்யுறாச் சதுரும்
பிறவி தீதெனப் பேதையர் தம்மொடு பிணக்கும்
உறுதி நல்லறம் செய்பவர் தங்களோடு உறவும்
யாதும் நல்லன்பர் கேட்கினும் உதவுறும் இயல்பும்
மாதவத்தினர் ஒறுப்பினும் வணங்கிடும் மகிழ்வும்
ஓதும் நல்லுபதேச மெய்யுறுதியும் அன்பர்
தீது செய்யினும் சிவச்செயலெனக் கொளும் தெளிவும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனம் வாக்கும் நின் அன்பர்பால் ஒருப்படு செயலும்
கனவிலும் உனதன்பருக்கு அடிமையாம் கருத்தும்
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்
புனித நின்புகழ் நாள்தொறும் உரைத்திடும் பொலிவும்
தீமையாம் புறச்சமயங்கள் ஒழித்திடும் திறனும்
வாய்மையாகவே பிறர்பொருள் விழைவுறா வளனும்
ஏறும் பரதாரம் நச்சிடாத நன்னோன்பும்
தூய்மை நெஞ்சில் யான் எனது எனும் செருக்குறாத்துறவும்
துறக்க மீதுறையினும் நரகில் தோய்கினும்
இறக்கினும் பிறக்கினும் இன்பம் துய்க்கினும்
பிறைக் கொழுந்தணி சடைப்பெரும ! இவ்வரம்
மறுத்திடாது எமக்கு நீ வழங்கல் வேண்டுமால்

பதினாறின் பெருமையை ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகள் கூறுவதைக் கேட்போமா;

'பதினாறு உத்க்ருஷ்டமான மிக்க உயர்வு பொருந்திய நம்பர். ''ஷோடச கலா பூர்ணம்'' என்பது. ஷோடசம் × பதினாறு. அமாவாஸ்யையில் ஆரம்பித்து பௌர்ணமி வரை பதினாறு கலைகள். பதினாறாவது கலையை அடைகிறபோதே சந்திரன் பூர்ண சந்திரனாவாது. ஒரளவுக்கு விரிவாக நாம் பண்ணுகிற பூஜை ஷோடசோபசாரம் என்கிற பதினாறு வித உபசாரங்களைக் கொண்டதாக இருக்கிறது. ஸப்த மாத்ருகா என்று ஏழு தேவிகளைச் சொல்கிற மாதிரி ஷோடச மாத்ருகா என்று பதினாறு தேவதைகள் உண்டு. அம்பாள் ராஜராஜேச்வரி மந்த்ரங்களிலே ஷோடசாக்ஷரீதான் உச்சி. அதனால் அம்பாளுக்கு ஷோடசீ என்று ஒரு பெயர்.

அம்மாவுக்கு ஷோடச அக்ஷரம், பிள்ளைக்கு -- பிள்ளையாருக்கு -- ஷோடச நாமாக்கள்.

'பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழணும்' என்று ஆசீர்வாதம் பண்ணுவது தமிழ் தேச வழக்கு. வேதத்தில் ஒரு ஸுமங்கலிக்கு என்ன ஆசீர்வாதம் சொல்லியிருக்கிறதென்றால், ''பகவானே! இவள் பத்துக் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டு அப்புறம் பதியையும் பதினோராவது குழந்தையாக 'ட்ரீட்'பண்ண வை!'' என்று உள்ளே ரொம்ப அர்த்தம் வைத்து அழகாகச் சொல்லியிருக்கிறது1. தமிழ் வழக்கில் ''பதினாறும் பெற்று'' என்று இருக்கிறது. 'ஃபாமிலி ப்ளானிங்' யுகம்! சொன்னாலே உள்ளே தள்ளிவிடுவார்களோ?' என்று பயமாயிருக்கிறது!

ஆனால் 'பதினாறும் பெற்று' என்பது குழந்தை பெற்றுக் கொள்வதை குறிக்கவில்லை என்றும், வாழ்க்கை நல்லவிதமாக இருப்பதற்கு வேண்டிய பதினாறு விஷயங்களையே குறிக்கின்றனவென்றும் சொல்கிறார்கள். 'பெரும் பேறு பெறுவது' என்று ஒரு phrase சொற்றொடர் இருக்கிறது. 'பெறப்படுவது' தான் 'பேறு'. பிரஸவ காலத்தைப் பேற்றுக்காலம் என்பது அதனால்தான். 'பெரும் பேறு' என்கிறபோது ரொம்ப பாக்யவசமான ஒன்று,

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதிருஷ்டவசமான ஒன்று என்ற அர்த்தத்தில் சொல்கிறோம். நாமாக ஒன்றும் பாடுபடாமல் ஈச்வராநுக்ரஹத்தால் 'பெற்றுக் கொள்வதை'யே இங்கே 'பேறு' என்பது. 'எடினூணுனுஞ்' என்று இதே அர்த்தத்தில் அவர்களும் மேல்நாட்டினரும் சொல்கிறார்கள். இம்மாதிரியான பதினாறு பேறுகளைப் பெறுவதில்தான் 'பதினாறும் பெற்று' என்பது. ஈச்வரன் அருளில் தன்னியல்பாகக் கிடைப்பவை மட்டுமின்றி நாமாக முயற்சி பண்ணி, உழைத்துப் பெறக் கூடியனவும் இவற்றில் உண்டு. யோசித்துப் பார்த்தால், நாம் ஒன்றும் செய்யாமல், பிறக்கும்போதே அவன் கொடையாகக் கிடைப்பதுங்கூட, பூர்வ ஜென்மாவில் நாம் இருந்ததையும் பண்ணினதையும் வைத்து அவன் கொடுத்ததுதான் என்று தெரியும். நம் கர்மாவுக்காக கிடைக்க வேண்டிய நல்லதுகளையே அவன் கருணையால் கொஞ்சம் 'கூடப் போட்டு'க் கொடுத்திருக்கலாம். அப்படிப் பேறு பெற்றவனை அத்ருஷ்டக்காரன் என்கிறோம். நம் அறிவால் காணமுடியாமல் அ-த்ருஷ்டமாக (அ-த்ருஷ்டம் என்றால் 'காண டியாதது' என்றே நேர் அர்த்தம்) உள்ள பூர்வ ஸுக்ருத பலனைத்தான் சாஸ்த்ரம் அத்ருஷ்ட பலன் என்பதே!

எந்த ஒரு வழிபாடும் ஆரம்பிக்கும்போது 'இதற்காக இந்தப் பூஜை பண்ணுகிறேன்' என்று 'ஸங்கல்பம்' செய்து கொள்ள வேண்டும். 'எதற்காக' என்றால், ஸஹகுடும்பம் தன் குடும்பம் முழுதுவம் க்ஷேமம்-ஸ்தைர்யம் (ஸ்திரத் தன்மை, Stability என்பது) வீர்யம் -- விஜயம் -- ஆயுஸ் -- ஆரோக்யம் --ஐச்வர்யம் ஆகிய எல்லாவற்றிலும் அபிவிருத்தி காண்பதற்காக என்று, ஏழு சமாச்சாரங்களைச் சொல்லி, அப்புறம் தர்ம --அர்த்த -- காம -- மோக்ஷம் என்ற நாலு புருஷார்த்தங்கள் ஸித்திப்பதற்காகவும் -- ஏழும் நாலும் பதினொன்றாச்சு -- அப்புறம், 'இஷ்ட காம்யார்த்த ஸித்த்யர்த்தம்' என்பதாக 'மனோரதங்களின் பூர்த்தியை வேண்டி' என்று ஒன்று -- இதோடு பன்னிரண்டாச்சு -- ஸமஸ்த மங்களங்களும் கிடைப்பதற்காக, ஸமஸ்த துரிதங்களும் (அதாவது பாபங்களும்) ஒடுங்கிப் போவதற்காக என்று மேலும் இரண்டைக் கூட்டி, இதோடு பதிநான்கு விஷயங்களாச்சு -- அப்புறம் புத்ர பௌத்ரர்கள் அபிவிருத்தியாவதற்காக என்று பதினைந்தாவது; கடைசியாக எந்த ஸ்வாமிக்குப் பூஜையோ அவருக்கு ப்ரீதி ஏற்பட்டு அவர் ப்ரஸாதத்தால் நம் அபீஷ்டம் எல்லாம் நிறைவேறணும் என்று பதினாறு விஷயங்களைப் ப்ரார்த்தித்து ஸங்கல்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். இதில் லௌகிகம் ஜாஸ்தி இருக்கிறதென்று நினைப்பவர்கள் முடிவாக, இன்னும் இரண்டு சேர்த்துக் கொள்வார்கள். ஞானம், வைராக்யம் என்ற இரண்டு ஸித்திப்பதற்காக ('ஞான வைராக்ய ஸித்த்யர்த்தம்') என்று சேர்த்துக் கொள்வார்கள்.

''பதினாறும் பெற்று'' என்று தமிழ் வழக்கில் சொல்லும் பதினாறில் ஏறக்குறைய இப்போது நான் சொன்ன பதினாறு ஸமாச்சாரங்களும் வந்துவிடுவதாக ஞாபகம். சரியாக நினைக்கவில்லை. 'வீர்ய, விஜய' என்று இதில் வருவது போலவே 'வீறு, விசயம்' என்று அதில் அடுத்தடுத்து வரும் என்று மட்டும் ஞாபகமிருக்கிறது.

பேறுகள் பதினாறு! பிள்ளையாருக்குப் பேர்கள் பதினாறு! ஸுகர், ஏகதந்தர், கபிலர், கஜகர்ணகர், லம்போதரர், விகடர், விக்நராஜர், விநாயகர், தூமகேது, கணாத்யக்ஷர், பாலசந்த்ரர், கஜானனர், வக்ரதுண்டர், சூர்ப்பகர்ணர், ஹேரம்பர், ஸ்கந்தபூர்வஜர் என்று பதினாறு பேர்.''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று பதினாறின் பெருமையை ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகள் எடுத்துரைக்கிறார்.

பதினாறு பேறுகளையும் தரும் அம்பிகை, 16 திருவடிவங்களில் பிரகாசிப்பதாக மகா ஸ்கந்த புராணத்தில் கூறப்பட்டுள்ளது. அந்த ஷோடச கௌரி வடிவங்களை வழிபாடு செய்தால், சகல ஐஸ்வரியங்களும் பெருகும். 1. ஸ்ரீஞான கௌரி 2. ஸ்ரீஅமிர்த கௌரி 3. ஸ்ரீசுமித்ரா கௌரி 4. ஸ்ரீசம்பத் கௌரி 5. ஸ்ரீயோக கௌரி 6. ஸ்ரீவஜ்ர ச்ருங்கல கௌரி 7. த்ரைலோக்ய மோஹன கௌரி 8. ஸ்ரீசுயம்வர கௌரி 9. ஸ்ரீகஜ கௌரி 10. கீர்த்தி கௌரி (எ) விஜய கௌரி 11. ஸ்ரீசத்யவீர கௌரி 12. ஸ்ரீவரதான கௌரி 13. ஸ்ரீசுவர்ண கௌரி 14. சாம்ராஜ்ய மஹாகௌரி மீனாட்சி 15. ஸ்ரீஅசோக கௌரி 16. ஸ்ரீவிஸ்வபுஜா மகாகௌரி ஆகியோரே அந்த வடிவங்கள். அன்னை அபிராமியை எந்த வடிவில் துதித்தாலும் அவளுடைய பேரருளைப் பெறுவதற்கு உண்மையான பக்தியும், திடமான நம்பிக்கையுமே முக்கியம்.

பதினேழாம் நூற்றாண்டில் சரபோஜி மன்னர் காலத்தில் வாழ்ந்த அபிராமி பட்டர் இயற்றிய அபிராமிப் பதிகத்தில் பதினாறு பேறுகளையும் அதீசர் ஒரு பாகம் அகலாத அபிராமி அம்பிகை தந்தருள்வாள் மிக அழகாகக் கூறுகிறார்.

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
　　கபடு வாராத நட்பும்
　　கன்றாத வளமையுங் குன்றாத இளமையும்
கழுபிணியிலாத உடலும்
　　சலியாத மனம் அன்பு அகலாத மனைவியும்
　　தவறாத சந்தானம்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
　　தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியம் கோணாத கோலும் ஒரு
　　துன்பமில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவி பெரிய
　　தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே
　　ஆதிகட வூரின் வாழ்வே
அதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
　　அருள்வாமி! அபிராமியே!

இப் பாடல் குறிப்படும் அந்த பதினாறு பேறுகள் என்னென்ன என்பதைக் காண்போம்.

1. கலையாத கல்வி (வாழ்க்கைக்கு வழிகாட்டக் கூடிய கல்வி)
2. குறையாத வயது (நீண்ட ஆயுள்)
3. கபடு வராத நட்பு (நம்பிக்கையான நல்ல நண்பர்கள்)
4. குன்றாத வளமை (வளமான வாழ்க்கைக்குத் தேவையான பொருள்)
5. குன்றாத இளமை (தளர்வில்லா உடல் வலிமை)
6. கழுபிணி இல்லா உடல் (நோய் நொடிகளற்ற வாழ்க்கை)
7. சலியாத மனம் (எதற்கும் கலங்காத வலிமையான மனம்)
8. அன்பகலாத மனைவி (என்றும் அன்போடிருக்கும் மனைவி)
9. தவறாத சந்தானம் (நற்பண்புகள் உடைய நல்ல குழந்தைகள்)
10. தாழாத கீர்த்தி (மங்கா புகழ்)

Public domain. Digitization Muthulakshmi Research Academy

11. மாறாத வார்த்தை (வாய்மை)
12. தடைகள் வராத கொடை (உதவி கேட்டு வருபவர்களுக்கு இல்லையென்று சொல்லாமல் உதவும் நிலை)
13. தொலையாத நிதியம் (சிக்கனம், சேமிப்பு பழக்கம்)
14. கோணாத கோல் (நேர்மையும் திறமையும் கொண்ட குடும்ப நிர்வாகம்)
15. உதவி பெரிய தொண்டரோடு கூட்டு (அம்பிகையின் அடியார்களுடன் தொடர்பு)
16. துய்ய நின்பாதத்தில் அன்பு (என்றும் அம்பிகையையே நினைத்து அவள் திருப்பாதங்களில் மனமொன்றியிருத்தல்) ஆகியவையே அவை.

இந்தப் பதிகத்தில் ஒரு மனிதனுக்கு மட்டுமல்லாது ஒரு நாடு நலமாக இருக்க வேண்டியதற்கு தேவையானவை அனைத்தையும் அன்னை அபிராமியிடம் கேட்கின்றார். இதில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி, நோயற்ற வாழ்வு முதலியன ஒரு மனிதனுக்குரியது. தவறாத சந்தானம், அன்பகலாத மனைவியும் குடும்ப ஆரோக்யத்தைக் குறிப்பது. கபடு வாராத நட்பும், தடைகள் வராத கொடையும் அவனைச் சுற்றியுள்ள சமூகத்திலிருந்து வருவது. தொலையாத நிதியும், கோணாத கோலும் நல்ல அரசாங்கத்திடமிருந்து மட்டுமே கிடைக்கும். தன்னலம் மட்டுமே கருதாது, எல்லோரும் நலமாய் இருக்க அம்பிகையை வேண்டுகிறார் அபிராமி பட்டர்.

அது மட்டுமல்லாமல் ஒரு முறை அரசரின் தண்டனையிலிருந்து வெளிவர அபிராமியின் மீது அந்தாதி பாடினார் என்பதைப் பார்த்தோமல்லவா? அதில் உள்ள 69வது பாடலில் அன்னை அபிராமியைச் சரண்டைந்தால் என்னென்ன கிடைக்குமென்பதை கூறுகிறார்.

தனம் தரும், கல்வி தரும், ஒரு நாளும் தளர்வு அறியா
மனம் தரும், தெய்வ வடிவும் தரும், நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும், நல்லன எல்லாம் தரும், அன்பர் என்பவர்க்கே-
கனம் தரும் பூங்குழலாள், அபிராமி, கடைக்கண்களே

மேற்கண்ட இந்த பாடலைத் தெரியாத அம்பிகை பக்தர்கள் இருக்க முடியாது. அபிராமியைப் பற்றி அறியாதவர்கள் கூட இந்த பாடலைப் பாடுவர். அந்த அளவுக்குப் பிரபலமான சக்தி வாய்ந்த பாடல் இது. அபிராமி அந்தாதியின் 80 வது பாடலுக்கு முன் உள்ள ஒவ்வொரு பாடலும் அபிராமி பட்டர் தீக்கங்குகளின் மீது உள்ள உறியில் அம்பிகையை மனதில் இருத்தியபடி பாடிய பாடல்களாகும். அதற்குப் பின்னர் பாடிய பாடல்கள் தன்னை ஆட்கொண்ட நாயகியின் அருளதைப் பருகி ஆனந்தத்தில் பாடியவையாகும். தன்னுயிர் நீங்கினும் அம்பிகையின் பெயருக்கு எந்த களங்கம் வந்துவிடக் கூடாதேயென்று நினைத்து அந்த அம்பிகையே கதியென்று அவள் திருத்தாள்களைச் சரண்டைந்து பாடிய அந்தாதிப் பாடல்கள் சக்தி அளவிட முடியாதது. ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு பலன் உண்டென்றாலும், எந்த ஒருப் பாடலையும் நம்பிக்கையுடன் மனமுருகப் பாடினாலும் அம்பிகையின் அருள் நிச்சயம் உண்டு என்பதை பல்வேறு சம்பவங்கள் எடுத்துக் கூறுகின்றன.

எங்கும் நிறைந்து எல்லாமாகவும் காட்சி தரும் அன்னை அபிராமியைப் பணிந்து ஏத்தும் பக்தர்களுக்கு தன் கடைக்கண் பார்வையாலேயே சகல செல்வங்களையும் தருவாள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்கிறார் ஸ்ரீ அபிராமி பட்டர். அவை என்னென்ன என்பதைத்தான் மேற்கண்ட 'தனந்தரும்' என்று தொடங்கும் பாடல் விளக்குகிறது.

அன்னை அபிராமியைப் பணிந்தேத்துவோருக்கு தனம் தரும் - லஷ்மி கடாக்ஷம் கிடைக்கும். கல்வி தரும் - லஷ்மி கடாக்ஷம் மட்டும் அல்லாது, அந்த சரஸ்வதியின் அருளும் கிடைக்கும். சோர்வில்லா மன உறுதி வாய்க்கும் - அதாவது வெற்றிக்கும் வீரத்திற்கும் துணைநிற்கும் துர்காபரமேஸ்வரியின் அருளும் கிடைக்கும். அவர்கள் மேனியில் தெய்வீகத்தன்மை ஒளிரும். நல்ல நட்பும், சத் சங்கம் வாய்க்கும். வேறு என்னென்ன நன்மைகள் இந்த உலகில் இருக்கின்றனவோ, அவை எல்லாம் அவர்களுக்கு கிடைக்கும். பதினாறென்ன! அதற்கு மேலும் - என்னென்னவெல்லாம் மேலே சொல்ல விடுபட்டுள்ளதோ - அனைத்தும் கிடைக்கும் என்கிறார். எப்படி? அம்பிகை தன் ஒரு கடைக்கண்ணால் பார்த்தாலே போதும். அந்த பார்வையாலேயே இத்தனையும் கிடைக்கும். அந்த கடைக் கண் பார்வைக்காகத்தான் அன்னையின் பக்தர்களான நாம் ஏங்குகிறோம்.

(எல்லோரும் அம்பிகையின் கடைக் கண் பார்வையென்றே கூறுகிறார்களே! கடைக்கண் பார்வைக்கே இத்தனை நன்மைகள் கிடைக்குமென்றால் ஏன் முழுப் பார்வையும் தன் மீது படவேண்டுமென்று நினைக்கவில்லை என்று கேட்கத் தோன்றலாம்! அந்த முழுப் பார்வையின் சக்தியைத் தாங்கிக் கொள்ளும் சக்தி நமக்கில்லை என்பதாலேயே எல்லோரும் கடைக் கண் பார்வையாவது கிடைக்காதா என்று ஏங்குகிறார்களெனத் தோன்றுகிறது).

மேலே குறிப்பிடப்பட்ட பதினாறு பேறுகள் எல்லாமே கிட்டத்தட்ட ஒன்றே என்பதைக் கணலாம். இந்த பதினாறு பேறுகளையும் மனதில் கொண்டே ஒருவரை வாழ்த்தும் போது, பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க என பெரியோர் வாழ்த்துவர். வாழ்க்கைக்குத் தேவையான இச் செல்வங்கள் இருந்தால்தான் அந்த வாழ்க்கை நிம்மதியாகவும் இனிமையாகவும் அமையும். பொருட் செல்வம், கல்வி, ஆரோக்யம், தைரியம், மகிழ்ச்சி போன்ற 16 செல்வங்களில் ஒன்று குறைந்தாலும் வாழ்வில் அமைதி இருப்பதில்லை. நிறைய பணம் இருந்தும் கூடவே நோயும் இருந்தால் எப்படி வாழ்க்கையை அனுபவிக்க முடியும்? உடல் நல்ல ஆரோக்கியமாக இருந்து கூடவே வறுமை இருந்தால் மகிழ்ச்சியான வாழ்கை அமையுமா? ஆகவே தான் இந்த பதினாறு பேறுகளும் இன்றியமையாதென உணர்ந்த பெரியோர் வாழ்த்தும் போது, பதினாறும் பெற்று பெறு வாழ்வு வாழ வாழ்த்துகின்றனர்.

இப் பாடலை படிப்பவர்களும் கேட்பவர்களும் எல்லோரும் பதினாறுக்கும் மேலும் செல்வங்களைப் பெற்று அன்னை அபிராமியின் திருவருளுடன் பெறுவாழ்வு வாழ வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

Public domain. Digitization Muthulakshmi Research Academy

19.சத்யமேவ ஜயதே

----- ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகள்



சத்யமேவ ஜயதே' இது நம் பாரத சின்னதில் பொறிக்கப்படிருக்கும் வாக்கியம். சத்தியமே என்றும் எங்கும் எப்போதும் வெல்லும் என்பதே இதன் பொருள். சத்தியம் என்ற இந்த வட மொழிச் சொல்லுக்கு இணையான வார்த்தை எந்த மொழியிலும் இருப்பதாகத் தெரியவில்லை. உண்மை வாய்மை என்ற தமிழ் சொற்களும் கூட அதற்கு இணையில்லை. சத்தியம் என்பது வாயினால் உண்மை பேசுவது மட்டுமல்ல. ஐம்புலன்களாலும், சொல்லாலும் செயலாலும் எவர் ஒருவருக்கும் துன்பம் கொடுக்காமலிருப்பதே சத்தியம் எனலாம். இந்த விளக்கம் ஓரளவுக்கே சத்தியத்தின் உண்மை நிலையை எடுத்துரைக்கும். இந்த சத்தியத்தைப் பற்றி பேசும் போது, ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகள், அபிராமி பட்டர் சத்தியத்தைக் கடைபிடித்ததாலேயே அவர் வாயிலிருந்து தவறான விளக்கம் வெளியானபோதிலும், அவர் துதித்துவந்த அம்பிகை, அவரைக் காப்பதற்காகவும் அவருடைய உண்மையான பக்தியை உலகிற்கு உணர்த்தவும், அந்த தவறான விளக்கத்தை உண்மையாக்க முனைந்தாள் என்று அருமையாகக் கூறுவதைப் பார்ப்போம்.

'சகல மக்களும் அநுசரிக்க வேண்டிய சாமானிய தர்மங்களில் முதலாவது அன்பு (அஹிம்ஸை). அடுத்தது உண்மை (சத்தியம்).

சத்தியம் என்றால் வாக்கும் மனசும் ஒன்றாக இருப்பதுதான்; மனசில் ஒன்றும் வாக்கில் வேறொன்றுமாக இருந்தால் அதுவே அசத்தியம் என்று பெரியவர்கள் லட்சணம் சொல்லியிருக்கிறார்கள்.

வாங்மனஸயோ: ஐக ரூப்யம் ஸத்யம்

மனத்தில் உள்ளதை வெளியிட்டுச் சொல்வதற்கென்றே பகவான் மனிதனுக்குப் பேசும் சக்தியைத் தந்திருக்கிறார். மனத்தில் ஒன்றும் வாக்கில் வேறொன்றுமாக நாம் நடந்து கொண்டோமானால் அடுத்த ஜன்மத்தில் நமக்குக் கொடுத்த பேச்சுத் சக்தியைப் பறித்துக் கொண்டு விடுவார் - அதாவது மிருக ஜன்மத்தையே நமக்குத் தருவார்.

பூரண அஹிம்சைக்கு நமது சாஸ்திரத்திலேயே சில விலக்குகள் இருக்கின்றன. தர்மத்துக்காக யுத்தம் செய்யும் போதும், யாகயக்ஞங்களில் பலி தருகிற போதும் அஹிம்ஸைக்கு விலக்குத் தரப்பட்டிருக்கிறது. சத்தியத்துக்கு இவ்விதமாக விலக்கே இருக்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முடியாது என்று நினைப்பீர்கள். ஆனால் சத்தியத்துக்கும் வேறொரு விதத்தில் விலக்கு இருக்கிறது. அதைக் கொஞ்சம் விளக்குகிறேன்.

ஊரிலே பலவிதமான அயோக்கியர்கள் இருக்கிறார்கள். அதைப் பார்த்து வாஸ்தவமாகவே ஒருவருடைய மனசு கொதிக்கிறது. அவன் இந்தத் தப்பையெல்லாம் ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கிறான். 'அவன் அந்த அயோக்கியத்தைச் செய்தான். இவன் இந்த அயோக்கியத்தனத்தைச் செய்தான்' என்று சொல்லிக் கொண்டே இருக்கிறான். இவனுக்கு வாக்கும் மனசும் ஒன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், இவன் அப்படிச் சொல்வதால் இவனுக்கும் பிரயோஜனமில்லை. ஜனங்களுக்கும் பிரயோஜனமில்லை. தப்புச் செய்கிறவர்களுக்கும் பிரயோஜனமில்லை. இப்படி வியர்த்தமாக வாக்கும் மனசும் ஒன்றுபட்டிருப்பதை சத்தியம் என்று சொல்வதற்கில்லை.

ஒருவன் மனசில் கெட்ட எண்ணங்கள் எழுகின்றன. அதை அவன் அப்படியே வாக்கிலே வெளியிடுகிறான். அது சாத்தியமாகிவிடுமா? ஆகாது.

ஆகவே சத்தியம் என்றால் வாக்கும் மனசும் ஒன்றுபடுவது மட்டுமில்ல. நல்ல மனசிலே தோன்றுகின்ற நல்ல எண்ணங்களை வாக்கில் சொல்வதே சத்தியம். நல்ல விளைவுகளை உண்டாக்குவதே சத்தியம்.

மக்களுக்கு நன்மை பயப்பதாகவும் பிரியமாகவும் எது இருக்கிறதோ அதுவே சத்தியம் என்பதாக சத்தியத்துக்கு ஒரு லட்சணத்தை வகுத்திருக்கிறார்கள்.

<u>ஸத்யம் பூதஹிதம் ப்ரியம்</u>

பேச்சினாலும் காரியத்தினாலும் எண்ணத்தினாலும் பிராணிகளுக்கு நன்மையை உண்டாக்குவதே சத்தியம். கெடுதல் செய்வதெல்லாம் அசத்தியமே.

ஒருவனுக்கு நல்லதைச் சொன்னால் மட்டும் போதாது. அதை அவன் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் சொல்ல வேண்டும். நல்லதைக் கூட கடுமையாகச் சொன்னால் அதை யாரும் ஏற்கமாட்டார்கள். இவ்வாறு நிஷ்பலனாகப்போகிற நல்ல வாக்கு சத்தியமாகாது. நல்லதாகவும் இருக்க வேண்டும். அது யாரை உத்தேசித்துச் சொல்லப்படுகிறதோ அவனுக்கு இன்பம் தரும் விதத்தில் ஹிதமாகவும் சொல்லப்பட வேண்டும். இதுவே சத்தியம்.

'சத்தியத்தைச் சொல், பிரியமானதைச் சொல். சத்தியத்தைப் பிரியமாக சொல்ல முடியவில்லை என்றால், அப்போது அப்படிப்பட்ட சத்தியத்தையும் சொல்லாதே. கேட்கப் பிரியமானாலும், அசத்தியத்தைச் சொல்லாதே,' என்பது பெரியோர் வாக்கு.

ஸ்த்யம் ப்ரூயாத் ப்ரியம் ப்ரூயாத்

ந ப்ரூயாத் ஸத்யம் அப்ரியம்

ப்ரியம் ச ந அந்ருதம் ப்ரூயாத்

காமம் குரோதம் உள்ள மனசிலிருந்து இப்படிப்பட்ட பிரியமான, நன்மையான வாக்கு வராது.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

க்ஷேமத்தையே உண்டாக்கும் சத்திய வாக்கு வரவேண்டுமானால், அதற்கு அடிப்படையாக காம, குரோதங்களற்ற நல்ல மனம் வேண்டும்.

ஆக சத்தியத்தின் லட்சணம், மனம் வாக்கும் ஒன்று பட்டிருப்பது. மனம் சுத்தமாக இருப்பது. வாக்கு சாந்தமாக, ஹிதமாக இருப்பது. மொத்தத்தில் தனக்குச் சித்த சுத்தியையும் பிறருக்கு க்ஷேமத்தையும் உண்டு பண்ணுவது.

சத்தியத்திலேயே ஒருவன் நிலைத்து நின்று விட்டால் அதற்கு ஓர் அவாந்தரப் பிரயோஜனம் உண்டு - அதாவது அந்த சத்தியசந்தன் உத்தேசிக்காமலே ஒரு பிரயோசனம் சித்திக்கும். அது என்னவெனில், ஒருவன் சத்தியமே பேசிப் பேசி பழகிவிட்டால் கடைசியில் அவன் எது சொன்னாலும் அது சத்தியமாகிவிடும். இப்படிப்பட்டவன் மனமறிந்து பொய் சொல்லவே மாட்டான். ஆனால், அறியாமையாலோ தவறிப்போயோ அவன் ஒரு விஷயத்தைத் தப்பாகச் சொல்லி விட்டாலும், அந்தத் தப்பே யதார்த்தத்தில் சத்தியமாக நடந்துவிடும். இதற்குத் திருஷ்டாந்தமாக ஒரு கதை சொல்கிறேன்.

திருக்கடவூரில் அபிராமி பட்டர் என்று அம்பாளின் பரம பக்தர் இருந்தார். அவர் அம்பாளையே நினைத்து பரவசமாகும்போது உன்மத்தரைப் போலப் பிதற்றுவார். இதைப் பற்றி சரபோஜி ராஜாவிடம் யாரோ துஷ்பிரசாரம் செய்தார்கள். 'அபிராமிபட்டர் ஒரு குடிகாரர், பக்தர் என்று வேஷம் போடுகிறார்' என்று ராஜாவிடம் கோள் சொல்லிவிட்டார்கள். சரபோஜிக்கு இதைப் பரிசோதித்துப் பார்க்கத் தோன்றியது. ஒரு நாள் சரபோஜி திருக்கடவூரில் அம்பாளை தரிசிக்க வரும்போது, அங்கே தன்வசமிழந்திருந்த பட்டரிடம், 'இன்றைக்கு என்ன திதி?', என்று கேட்டான். அன்றைக்கு அமாவாஸை. பட்டரோ அம்பாளின் பூரண சந்திர கத்தையே தியானம் செய்து பரவசமாக இருந்தார். எனவே, அரசரிடம், இன்று பௌர்ணமி என்று சொல்லிவிட்டார். அரசன் தன்னிடம் மற்றவர்கள் பட்டரைப் பற்றிச் சொன்னது உண்மை என்றே நினைத்தான். பட்டரிடம் கேலியாக, ''அப்படியா! சந்திரன் உதயமாகிவிட்டானா என்று ஆகாயத்தைப் பார்ப்போம்'' என்று தலையைத் தூக்கினான்.

அப்போது வாஸ்தவமாகவே ஆகாயத்தில் பூரண சந்திரன் வந்து நின்றது, அபிராமி பட்டர் சத்தியத்திலேயே ஊறியிருந்ததால், தவறிப்போய் அவர் அசத்தியத்தைச் சொன்னபோது, அம்பாளே தன் தாடங்கத்தைக் கழற்றி ஆகாயத்தில் வீசி, பூரண சந்திரனாக ஜொலிக்கச் செய்தாள்.

மகான்கள் செய்கிற ஆசீர்வாதம் அவர்கள் கொடுக்கிற சாபம் எல்லாம் அப்படியே பலித்து விடுவதற்குக் காரணம் அவர்களுடைய சத்தியத்தின் சக்திதான். அவர்கள் எது சொன்னாலும் நடந்துவிடும். இது சத்தியமாக இருப்பதின் அவாந்தரப் பிரயோஜனம். ஆனால், தான் சொல்வதெல்லாம் நடக்க வேண்டும் என்று ஆசை கொண்டு அதன் பொருட்டாக ஒருவரும் சத்தியத்தை அநுஷ்டிக்கக்கூடாது. உத்தேசமில்லாவிட்டால்தான் இந்தச் சக்தி தானாக வருமே ஒழிய உத்தேசித்துவிட்டால் அப்புறம் அது 'அவாந்தர'மே இல்லை.

கர்ப்பமாக நாம் தாயாரிடம் வைக்கப்படுவதிலிருந்து, கடைசீயில் தகனமாகிற வரையில் நம்மை சுத்தப்படுத்த சாஸ்திரங்களில் நாற்பது ஸம்ஸ்காரங்கள் சொல்லியிருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவற்றோடு, அஹிம்ஸை, சத்தியம், அஸ்தேயம், சௌசம், இந்திரிய நிக்ரஹம் இவையும் நம்மால் அநுஷ்டிக்கப்பட்டால், நம் அழுக்குகள் எல்லாம் போய், 'நாம் உண்மையில் யார்? ஸ்வாமி என்பவர் யார்? பரம சத்தியம் என்பது என்ன? என்பதை எல்லாம் அறிகிற பக்குவம் உண்டாகும். பிறர் பொருள் மீது ஆசைப்படாமலிருப்பதே அஸ்தேயம். 'சௌசம்' என்பது 'சுசி' என்பதிலிருந்து வந்தது. 'சுசி' என்றால் சுத்தம். வெளியே சுத்தமாக, தூய்மையாக, ஆசாரமாக இருந்தால் அதுவே உள்தூய்மைக்கு உபகாரம் செய்யும். நீராடுவது, மற்ற மடி ஆசாரங்கள் சௌசத்தின் கீழ் வரும். இந்திரிய நிக்ரஹம் என்பது ரொம்பவும் க்கியம். சரீர சந்தோஷத்துக்காக எதை வேண்டுமானாலும் செய்வது, எதை வேண்டுமானாலும் பார்ப்பது, எதை வேண்டுமானாலும் கேட்பது, எதை வேண்டுமானாலும் தின்னுவது, எதை வேண்டுமானாலும் பேசுவது என்றில்லாமல், இவற்றையெல்லாம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது இந்திரிய நிக்ரஹம்-புலனடக்கம்-அதாவது யாராக இருந்தாலும் ஆசையைக் குறைத்துக் கொள்ள வேண்டும். ஆசை போகாமல் எந்த ஆத்ம சம்பத்தும் உண்டாகாது.

இங்கே சொன்னதெல்லாம் சகல ஜனங்களுக்குமான சாமானிய தர்மங்கள்.

-----ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகள்

சத்தியத்தின் பெருமையை உணர்த்த எம்பெருமான் ஆடிய மற்றொரு திருவிளையாடல் இதோ;

ஓர் ஊரில், கலைமகளின் திருவருளை பெற்ற இருவர், இருந்தனர். அவர்களில் ஒருவர், முடவர்; மற்றொருவர், பார்வையற்றவர். பார்வையற்றவர், முடவரை தோளில் சுமந்து போக, தோளில் இருப்பவர், வார்த்தைகளால் வழிகாட்ட, அவர்களின் வாழ்க்கைப் பயணம் தொடர்ந்தது. அவர்கள் என்றும் பொய் பேசார்.

எங்கு சென்றாலும் இறைவனின் புகழ்பாடி, மக்களுக்கு நல்வழிகாட்டி, தங்கள் ஜீவனத்தை நடத்தி வந்தனர். தங்களுக்கு அங்கஹீனம் இருப்பதை உணராத அளவிற்கு, எப்போதும் தெய்வ சிந்தனையில் மூழ்கி சத்திய வாழ்க்கை வாழ்ந்தனர். அவ்வாறிருக்கையில் ஒரு சமயம், திருவாமாத்தூரில் கோயில் கொண்டுள்ள சிவபெருமான் இருவரின் கனவில் தோன்றி கூறியதன் பேரில் மிகுந்த மகிழ்ச்சியுடன், ஈசன் பேரில், 'கலம்பகம்' பாடினர். தகவலறிந்த அரசர், அந்நூலின் பெருமையை வியந்து அதனை அரங்கேற்றம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்தார். இறைவன் பால் நீங்க பற்று கொண்ட இந்த இரட்டை புலவர்களின் திறமையைப் போற்றிய அறிஞர்களும், புலவர் பெருமக்களும் கூட, அரங்கேற்றம் துவங்கியது; அரங்கேற்றத்தின் போது புலவர்கள் இருவரும், மாதைநாதர் வலங்கொள்பம்பை, மேற்கரையில் கோவில்கொண்டார், புரம் சீறிய வெங்கணைக்கே எனப் பாடினர். கோவில், ஆற்றின் கீழ்க்கரையில் இருந்தது. ஆனால், இரட்டைப் புலவர்களோ, ஆற்றின் மேல்கரையில், கோவில் இருப்பதாக இப் பாடலைப் பாடினர். இதைக் கேட்டதும், கூடியிருந்தவர்கள் சிரித்தனர். மேலும் பொய்யானவற்றைக் கூறும் 'இவர்களா தெய்வ புலவர்கள்' என, கேலி பேசி, ஏளனம் செய்தனர்.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆனால் அந்த இரு புலவர்களும், 'யாம் அறியோம்; அவன் பொய் சொல்லான். இது, தெய்வத்தின் கட்டளைப்படி எழுதப்பட்டதும்' என்றனர். அங்கு கூடியிருந்த அறிஞர்களும் புலவர்பெருமக்களும் அதை ஏற்காமல் அரசரிடம் கூறி, அரங்கேற்றத்தை நிறுத்தி விட்டனர். 'கலம்பகம்' பாடிய அந்த கவிஞர்கள் இருவரும், இறைவனின் திருக்கோயிலுக்குச் சென்று முறையிட்டு, தங்களின் தவறான செயலுக்காக வருந்தினர். ஆனாலும் எல்லாம் அவன் செயலென ஆறுதலுற்றனர்.

அன்றிரவே, கன மழை பெய்து, கரையை உடைத்துக் கொண்டு ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. காலையில் மழை சற்று ஓய்ந்த போது, ஆற்றைச் சென்று பார்த்தால் எல்லோருக்கும் ஒரே வியப்பு! நேற்று கோவிலுக்கு இடப்புறமாக ஓடிய நதி, இன்று பாதையை மாற்றி, கோவிலுக்கு வலப்புறமாக ஓடிக் கொண்டிருக்கிறது. அதனால் ஆற்றின் கீழ்க்கரையில் இருந்த கோவில், ஆற்றின் மேல்பக்கமாக அமைந்து விட்டது. அதாவது, இறைவன் எழுந்தருளிய திருக்கோவில், ஆற்றின் மேல்பகுதியில் அமைந்துள்ளது என, அந்த தெய்வப்புலவர்கள் பாடியது, உண்மையாகி விட்டது.

மக்கள் வியந்தனர். நேற்று அவரை ஏளனம் பேசிய புலவர்களும் அறிஞர்களும் அவர்களின் தெய்வீக தன்மையை போற்றினர். ஆனால் அந்தப்புலவர்கள் 'இது, சிவபெருமானின் சித்தம்' என்று, பரம்பபொருளின் அருளை எண்ணி, நினைந்து, ஆனந்த கண்ணீர் வடித்தனர். அவர்கள் அந்த திருத்தலத்திலேயே இறுதிவரை வாழ்ந்து முக்தியுற்றனர். தன் பக்தன் சுப்ரமணியனுக்காக அமாவாசையை பௌர்ணமியாக மாற்றினாள் அம்பிகை. அதுபோல, சிவபெருமான், தன் அடியார்களின் வாக்கை மெய்யாக்க ஆற்றின் போக்கையே மாற்றி, அவர்களின் பெருமையை பறை சாற்றிய ஞான பூமி இது!

இரட்டைப் புலவர்கள் பாடிய, அத்தகைய பெருமை பெற்ற அக்கலம்பக நூல் இன்றுள்ளது. படித்து, பரம்பொருளின் கருணையை அடையலாம்.

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

20.பூரண வளம் தரும் பௌர்ணமியில் அம்பிகை பூஜை

திதிகள் எனப்படும் சந்திர நாட்களுள் பௌர்ணமியும் ஒன்று. இந்துக்களால் பௌர்ணமி சிறந்த தினமாகக் கொள்ளப்படுகிறது. சந்திரன் பூரண கலைகளுடன் விளங்கும் பௌர்ணமி தினங்களில் அம்பிகை வழிபாடு மிகவும் சிறப்பானது என்று சித்தர் பெருமக்கள் தங்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். ஸ்ரீசக்ர நாயகியான அம்பிகை பதினாறாவது நித்தியையாக, மகா திரிபுரசுந்தரியாக, பூரண பிரகாசத்துடன் பௌர்ணமியன்று காட்சி தருவதாக புராணங்களும் சாஸ்திரங்களும் கூறுகின்றன. அன்று தேவியைப் பூஜித்து வழிபட்டால் குடும்பத்தில் ஒளி உண்டாகும். துன்பங்களாகிய இருள் நீங்கி இன்பம் பெருகும். பௌர்ணமி அன்று உபவாசம் இருந்து வழிபடுவது மிகவும் சிறப்பு.

அது மட்டுமில்லாமல் அம்பிகையின் இருப்பிடமாக பூர்ண சந்திரனை குறிப்பிடுகிறது ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம். அதனால் அம்பிகையை பௌர்ணமி சந்திரனில் இருப்பதாகப் பாவித்து பூஜித்தால் அதிக பலன்கள் கிடைக்கும். இதையே ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகள் 'தெய்வத்தின் குரல்' நூலில் குறிப்பிடுகிறார்.

''பராசக்தி இல்லாத இடம் ஏதுமில்லை. ஆனால் மனசுக்குப் பிடிப்பு உண்டாவதற்காக அவளுக்குப் பல வாஸஸ்தானங்களைச் சொல்லியிருக்கிறது. முக்கியமாக ஸ்ரீ வித்யா என்கிற தேவி உபாஸனா மார்க்கத்தில் சொல்கிறபோது, அவள் அமிருத சாகரத்தின் மத்தியில், மணித்வீபம் என்கிற மணிமயமான தீவில் இருப்பதாகச் சொல்கிறோம். மணித்தீவில் பல கோட்டைகள் உத்தியான வனங்களுக்குள், சிந்தாமணிகளை இழைத்துச் செய்த கிருகத்துக்குள் இருக்கிறாள். பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேசுவரன், ஸதாசிவன் இவர்கள் நாலு கால்களாகவும், உட்காருமிடமாகவும் அமைந்து உருவான மஞ்சத்தின்மேல், பிரம்ம ஸ்வரூபமான காமேசுவரனின் இடது பக்கத்தில் அமர்ந்திருக்கிறாள் என்று சொல்லியிருக்கிறது. அவள் இருக்கும் இடத்தை ஸ்ரீபுரம் என்று கூறியிருக்கிறது. அமிருத ஸாகரத்தில் இருப்பதாகச் சொல்கிற மாதிரியே ஸ்வர்ணமயமான மேருசிகரத்தில் இந்த ஸ்ரீபுரம் இருப்பதாகவும் சொல்வதுண்டு.

தியானம் செய்வதற்குப் பரம சௌக்கியமாக இன்னொரு வாஸஸ்தானம் சொல்லியிருக்கிறது. 'லலிதா ஸஹஸ்ரநாமத்'தின் பலச்ருதியில் சொல்லியிருக்கிற இந்த முறையில் பல மகான்கள் அவளுடைய இருப்பிடத்தைத் தியானம் செய்து பரமானந்தத்தை அநுபவிக்கிறார்கள். அது என்ன என்றால், பூரண சந்திர மண்டலத்திற்குள் அம்பாள் அமர்ந்திருப்பதாகத் தியானம் செய்வதாகும். ஸஹஸ்ர நாமத்திலேயே 'சந்திர மண்டல மத்யகா' என்று ஒரு நாமம் வருகிறது.

பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத அழகுள்ளது சந்திரன். நிலாச் சாப்பாடு, நிலாவில் பாட்டுக் கச்சேரி எல்லாம் வைத்துக் கொண்டு சந்தோஷப்படுகிறோம். இருந்தாலும் எலெக்ட்ரிக் ஜோடனை அதிகமாகிவிட்ட இக்காலத்தவர்களுக்குச் சந்திரன் அருமை

Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெரிந்திருக்க நியாயமில்லை. சீதளமான அதன் பிரகாசம் அலாதியானது. கண்ணை உறுத்தாத ஒளி வாய்ந்தது சந்திரன். அதிலும் பௌர்ணமி சந்திரனின் அழகு விசேஷம். இந்த அழகு விசேஷமாகத் தெரிய வேண்டும் என்பதற்கே ஈசுவரநியதியில் முப்பது நாட்களுக்கு ஒரு முறைதான் பூர்ணிமை வருகிறது. தினம் பௌர்ணமி இருந்தால் பூரண சந்திரனில் நாம் இத்தனை சந்தோஷம் அடைய முடியாது. இந்தப் பூரண சந்திரமண்டலத்தை முதலில் தியானித்து, அதில் அம்பாளைத் தியானிக்க வேண்டும்.

பூரண சந்திரனைத் தியானிக்கிற போதே மனசும் அது போல் குளிர்ந்து போகிறது. அங்கே துக்கத்துக்கும் துவேஷத்துக்கும் இடமில்லாமல் சாந்தமாகிறது. வெளிப் பிரபஞ்சமெல்லாம் ஜீவனுக்குள்ளே இருக்கிறது. அண்டத்திலுள்ளதெல்லாம் பிண்டத்திலும் உண்டு என்பார்கள். சகல ஜீவராசிகளுக்கும் அந்தராத்மாவாக இருக்கிற பராசக்தியின் மனஸே சந்திரனாக ஆகியிருக்கிறது. 'புருஷ ஸூக்த'த்தில் இப்படித்தான் சொல்லியிருக்கிறது. இதனால் ஜீவராசிகளின் மனத்துக்கும் சந்திரனுக்கும் சம்பந்தம் இருக்கிறது. இங்கிலீஷில் சித்தப் பிரமை பிடித்தவர்களை டூதணச்ஞுடிஞ் என்கிறார்கள். ஃதணச்ஞூ என்றாலே சந்திரனைப் பற்றியது என்றுதான் அர்த்தம். இது சித்தத்தின் விபரீத நிலையைச் சந்திரனோடு சேர்த்துச் சொல்கிறது. சித்த சுத்திக்கு அதே சந்திர மண்டலத்தில் அம்பாள் தியானத்தை நம் சாஸ்திரங்கள் சொல்கின்றன.

சந்திரனில் அம்பாள் அமர்ந்திருப்பதாகச் தியானிக்க வேண்டும். தியானம் செய்கிறவனுக்கோ புலித்தோலை ஆசனமாக விதித்திருக்கிறது. சந்திரனுக்கு நேர் எதிராக புலி என்றால் உக்கிரமாக இருக்கிறது. புலி எப்படி தன் லக்ஷியமான இரையை ஒரே பாய்ச்சலில் பிடித்து விடுகிறதோ அப்படி நம் தியான லக்ஷியத்தை மனசு விடாப் பிடியாகப் பிடித்துக்கொள்வதற்கே வியாக்ராஸனம் விதித்திருக்கிறது. அதில் அமர்ந்து அம்பாளை சந்திர மண்டல வாஸினியாக தியானித்தால், நம் மனம் அவள் மனத்திலிருந்து வந்த சந்திரனைப்போல் குளிர்ச்சி அடையும். சந்திரன் தாபத்தைப் போக்குவதுபோல் நம் தாபம் சமனமாகும். சந்திரிகையில் இருட்டு விலகுகிற மாதிரி அஞ்ஞானம் விலகும்.

சூரியனை ஞான ஸ்வரூபமாகச் சொல்லியிருக்கிறது. ஆனால் சூரியப் பிரகாசம் தாபம் உண்டாக்குகிறது. அதுவே சந்திரனில் பிரதிபலித்து பரம சீதளமாகிறது. சந்திரனுக்கு ஸ்வபாவமாக ஒளி கிடையாது. அம்பாள் சூரியனைப்போல் ஸ்வயம் பிரகாசமாகவும், சந்திரனைப்போல் சீதளமாகவும் இருக்கிறாள். தாபத்தைப் போக்கும்போதே ஞானப் பிரகாசம் தருகிறாள். ஞானம் தருகிற குருமூர்த்தி அவளேதான். காளிதாஸர் 'தேசிக ரூபேண தர்சிதாப்புதயாம்', 'குரு வடிவத்தில் வந்து தன் மகிமையைக் காட்டுகிறவள்' என்று அம்பிகையை வர்ணிக்கிறார். எனவே சந்திரமண்டலத்தில் குரு பாதத்தையும் தியானிக்கலாம். நம் தாபங்கள் விலகவும், ஞானப்பிரகாசம் உண்டாகவும், நாம் எல்லோரிடம் குளிர்ந்து இருக்கவும் இம்மாதிரி சந்திர மண்டலத்தில் அம்பாளையோ, குரு பாதுகையையோ தியானிக்க வேண்டும். அம்பாளையோ குருவாகத் தியானிக்க வேண்டும்.

பௌர்ணமி பூஜை பொதுவாக எல்லோருக்கும் நன்மை செய்யக்கூடியதென்றாலும் பெண்களுக்கு சிறப்பான பலன்களை அளிக்கக் கூடியது. திருமணமாகாத பெண்களுக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விரைவில் திருமணப் பேறு கிட்டவும், திருமணமான பெண்களுக்கு மழலைச் செல்வம் கிட்டவும், மாங்கல்ய பாக்கியம் நிலைக்கவும், பௌர்ணமி பூஜை சிறப்பு வாய்ந்ததாகும்.

ஒளிமயமான அன்னை தேவி பராசக்தியை, இந்த ஒளிமயமான பௌர்ணமி தினத்தில் பூஜைகள் செய்து வழிபாடு செய்யும் போது அன்னையின் பரிபூரண அருள் கிடைக்கப்பெற்று விசேஷமான பலன்கள் நமக்கு கிடைக்கிறது. பௌர்ணமியில் தேவி 'ஸ்ரீசந்திரிகா' என்ற பெயர் கொண்டு அருள்பாலிக்கிறார். துர்க்கா தேவியை பௌர்ணமியில் முறைப்படி வழிபட்டு வந்தால் நாம் விரும்பியதெல்லாம் நிறைவேறும். துர்க்கையென்றால் துக்கங்களை அழிப்பவள் ஆகும்.

ஒவ்வொரு மாதம் ஒவ்வொரு கிழமைகளில் பௌர்ணமி வருகிறது. எந்தெந்த கிழமைகளில் பௌர்ணமி வந்தால் அம்பிகையை எப்படி வழிபடலாம் என்பதனைக் காணலாம். ஞாயிற்றுக்கிழமைகளில் வரும் பௌர்ணமியன்று அம்பிகைக்கு சிகப்பு ஆடை அணிவித்து, செந்தாமரை மலர்கள் சூட்டி, செந்தாமரை மலர்களால் அர்ச்சனை செய்து செவ்வாழைப்பழம், சர்க்கரைப் பொங்கல் நிவேதனமாக படைத்து வழிபட தீராத நோய்கள் எல்லாம் தீரும். எந்த நோயும் அணுகாது.

திங்கட்கிழமைகளில் வரும் பௌர்ணமியன்று அம்பிகைக்கு வெண்ணிற ஆடையணிவித்து, மந்தாரை, மல்லிகை மலர்கள் சாற்றி, அந்த மலர்களாலேயே பூஜித்து வழிபட சகல ஐஸ்வர்யங்களும் கிட்டும். செய்யும் தொழிலில் உயர்வு, மேன்மையும் கிட்டும்.

செவ்வாய்க்கிழமைகளில் வரும் பௌர்ணமி நாட்களில் அம்பிகைக்கு செவ்வாடை அணிவித்து, செவ்வரளி பூ மற்றும் சிகப்பு நிற பூக்களினால் பூஜை செய்து, சித்திரான்னம், தேன், பழங்கள், கற்கண்டு போன்றவற்றை நிவேதனம் செய்து வழிபட வறுமை, கடன்கள் தீரும். கிரக தோஷங்கள், பில்லி, சூனியம் போன்ற தீய சக்திகள் அணுகாது.

புதன்கிழமைகளில் வரும் பௌர்ணமி தினங்களில் பச்சை ஆடை அணிவித்து, முல்லை, மற்றும் நறுமணமுள்ள மலர்களால் அலங்கரித்து, அதே மலர்களால் பூஜை செய்து, பால்பாயாசம், பழரசங்கள், பஞ்சாமிர்தம் நிவேதனமாக படைத்து வழிபட அறிவு வளரும், ஞானம் கிட்டும். ஞாபக சக்தி அதிகரிக்கும். சந்தான விருத்தி ஏற்படும்.

வியாழக்கிழமைகளில் வரும் பௌர்ணமி தினத்தில் அம்பிகைக்கு மஞ்சள் நிற ஆடை அணிவித்து, மஞ்சள் நிறமான (பொன் நொச்சி, பொன்னரளி) மலர்களால் அலங்கரித்து, பூஜை செய்து சுண்டல், தயிர்ச்சாதம், பழங்கள் நிவேதனமாக படைத்து வழிபட, திருமணத் தடைகள் உட்பட எல்லா தடைகளும் நீங்கும். தேர்வில் வெற்றியும், வேலையில்லாதவர்களுக்கு வேலையும் கிடைக்கும். வெள்ளிக்கிழமைகளில் வரும் பௌர்ணமி நாட்களில் அம்பிகைக்கு பொன்னிற அல்லது வெண்ணிற ஆடை அணிவித்து, மல்லிகை மலர்கள் சூட்டி, மல்லிகை மலர்களால் பூஜை செய்து, முக்கனிகள், கல்கண்டு, சர்க்கரைப் பொங்கல் நிவேதனம் செய்து வழிபட திருமணத் தடைகள் யாவும் நீங்கும். தம்பதிகள் ஒற்றுமையும், குடும்ப ஒற்றுமையும் ஏற்படும். செல்வம் சேரும். கடன் தொல்லை நீங்கும்.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

சனிக்கிழமைகளில் வரும் பௌர்ணமி தினத்தன்று அம்பாளிற்கு நீலநிற ஆடை அணிவித்து, மருக்கொழுந்து, நீலநிற பூக்களால் (நீலோத்பவ மலர் முதலியவை) அலங்கரித்து, பூஜை செய்து எள் அன்னம், பால், தேன் தயிர், நெய், கற்கண்டு போன்றவற்றை நிவேதனம் செய்து வழிபட, நவக்கிரகங்களால் ஏற்படும் பாதிப்புகள் நீங்கும். எலும்பு உபாதைகள் நீங்கும்.

இதே போல் ஒவ்வொரு மாதம் வரும் பௌர்ணமியன்று அம்பிகையை பூஜித்து அவள் அருள் பெறலாம்.

சித்திரை சித்திரை நட்சத்திரத்துடன் கூடிய சித்ரா பௌர்ணமியன்று விளக்கேற்றி வைத்து, அம்பிகைக்குப் பூப்போட்ட வஸ்திரம் அணிவித்து, பத்மராகம் பதித்த ஆபரணம் அணிவித்து, பூஜைகள் செய்து, மஞ்சள் கலந்த சாதம், பானகம், மற்றும் ஏலம், கிராம்பு, பச்சைக் கற்பூரம் சேர்ந்த தாம்பூலம் நைவேத்தியம் செய்ய குழந்தை பாக்கியம் கிட்டும். மரண பயம் நீங்கும். சித்ர குப்தனின் பிறந்த நாளான இன்றை தினத்தில் செய்யப்படும் பௌர்ணமி பூஜையினால் சித்ர குப்தனின் அருளும் கிட்டும். அறியாமையால் மனிதர்கள் செய்யும் தவறுகள் சித்திரா பௌர்ணமி விரதத்தினால் நீங்குகின்றன என்பது நம்பிக்கை. தாயை இழந்தவர்கள் இத்தினத்தில் விரதமிருந்து தான தருமம் செய்வது முக்கியமானதாக விளங்குகின்றது.

வைகாசி மாதத்தில் பௌர்ணமி பொதுவாக விசாக நட்சத்திரத்தில் வருகிறது. இது முருகப் பெருமானின் பிறந்த தினமாகவும், புத்தர் பிறந்த தினமாகவும் கொண்டாடப்படுகின்றன. வைகாசி பௌர்ணமியில் விளக்கு ஏற்றி வழிபட அறிவு மேம்படும். முருகனின் அருளால் ஞானம் கிடைக்கும்.வைகாசி வைசாகப் பௌர்ணமியில் அம்மனுக்கு சந்தனாபிஷேகம் செய்து, நீலநிற ஆடையும், தங்க ஆபரணம் அணிவித்து, எலுமிச்சை சாதம், ஜீரகம், சர்க்கரையும் கலந்த சாதம், விளாம்பழம் இவற்றை படைத்து வழிபட மறுஜென்மம் எடுக்காத புண்ணிய கதி கிடைக்கும்.

ஆனியில் பௌர்ணமி பொதுவாக மூல நட்சத்திரத்தில் வருகிறது. ஆனி பௌர்ணமி அன்று இறைவனுக்கு முக்கனிகள் படைக்கப்படுகின்றன. இன்று கண்ணனை நினைத்து விரதமிருக்க திருமணம் கைகூடும். அம்பிகைக்கு விளக்கேற்றி, கருப்பு வஸ்திரம், நல்முத்தாலான அணிகலன்களும் அணிவித்து, வெள்ளெருக்கம்பூ, செண்பகப்பூ புஷ்பங்களால் பூஜை செய்து க்கனிகளையும், உளுத்தம் பருப்பு சாதத்தையும் நிவேதித்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வழிபட்டால், எடுத்த காரியம் யாவிலும் வெற்றி கிட்டும். மாங்கல்ய பலம் கிட்டும். வேண்டுதல்கள் நிறைவேறும்.

ஆடியில் பௌர்ணமி பொதுவாக உத்திராட நட்சத்திரத்தில் வருகிறது. ஆடி பௌர்ணமி அன்று திருமாலை வழிபாடு செய்வது சிறப்பாகும். இன்று அம்பிகைக்கு விளக்கேற்றி பாலாபிஷேகம் செய்து, சிவந்த மற்றும் மஞ்சளும் கலந்த ஆடை அணிவித்து, சிவப்புக்கல் ஆபரணம் அணிவித்து, பூக்களால் அர்ச்சனை செய்து, வாழைப்பழம் கலந்த சாதத்தை நைவேத்தியம் செய்தால், புண்ணிய லோகம் கிட்டும். பதவி கிடைக்கும். குடும்பத்தில் வளர்ச்சியும், அமைதியும் கிடைக்கும்.

ஆவணி மாத பௌர்ணமியானது பொதுவாக அவிட்ட நட்சத்திரத்தில் வருகிறது. ஆவணி பௌர்ணமி அன்று ஓணம், ரக்ஷாபந்தனும் கொண்டாடப்படுகின்றன. இன்றைய தினத்தில் அம்பிகைக்கு விளக்கேற்றி நாட்டுச் சர்க்கரையால் அபிஷேகம் செய்து, நான்கு வண்ணங்கள் கொண்ட ஆடை அணிவித்து, வைடூரிய ஆபரணம் சாற்றி, . நெய் சாதம் நைவேத்தியம் செய்ய வேண்டும். வழிபட கடன் தொல்லை தீரும். சகோதர வாழ்வு மேம்படும்.

புரட்டாசி பௌர்ணமி பொதுவாக உத்திரட்டாதியில் வருகிறது. அன்று உமாமகேஸ்வர வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது. இன்றைய தினத்தில் அம்மை அப்பர் வழிபாடு, கடன் தொல்லையை நீக்கும். காரியத் தடங்கல் விலகும். சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும். நல்ல திருமணப்பேற்றினை நல்கும்.

பௌர்ணமி தினத்தில் அம்பிகைக்கு நான்கு வண்ண ஆடை அணிவித்து, பிரவாள ரத்தினக்கல் ஆபரணம் சாற்றி, மல்லிகைப் பூவால் பூஜித்து, இளநீரை நிவேதனம் செய்தால் சகல சௌபாக்கியங்களும் கிட்டும்.

ஐப்பசி பௌர்ணமி பொதுவாக அசுவனியில் வரும். ஐப்பசி பௌர்ணமி அன்று சிவபெருமானுக்கு அன்னாபிஷேகம் நடத்தப் பெறுகிறது. இன்று அம்பிகைக்கு விளக்கேற்றி அன்னாபிஷேகம் செய்து பட்டாடைகளால் அலங்கரித்து, இந்திர நீல நிறக்கல் ஆபரணம் சாற்றி, மகிழம்பூ, வில்வம், பாதிரிப் பூக்களால் பூஜை செய்து, மிளகு சாதம், கரும்புச்சாறு இவற்றை நைவேத்தியம் செய்ய, தன தான்ய அபிவிருத்தி ஏற்படும். எடுத்த காரியம் எல்லாவற்றிலும் வெற்றி கிட்டும். விருப்பங்கள் நிறைவேறும். வரங்கள் அதிகம் கிடைக்கும்.

கார்த்திகை மாதத்தில் பௌர்ணமி கார்த்திகை நட்சத்திரத்தில் வரும். அன்றைய தினத்தில்தான் இறைவன் ஜோதிப்பிழம்பாக காட்சியளித்தார். ஆலயங்கள், வீடுகள் என எல்லா இடங்களிலும் தீபம் ஏற்றப்படுகிறது. இன்று அம்பிகைக்கு பாலபிஷேகம் செய்து, பூப்போட்ட ஆடையும், ருத்திராட்ச மாலையும் சாற்றி, நெய்தீபம் ஏற்றி பூஜித்து, வெண் பொங்கல், நெய் பொங்கல் ஆகியவற்றை நைவேத்தியம் செய்ய வாழ்வு வளம் பெறும். சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் கிடைக்கும். மனக்கவலைகள் நீங்கும். கண்நோய் தீரும்.

மார்கழியில் பௌர்ணமி பொதுவாக திருவாதிரையில் வரும். இன்றைய தினத்தில் சிவபெருமான் ஆனந்த நடனமாடி நடராஜராக காட்சியருளிய நாள். அதனால் மார்கழி

Public domain. Digitization Muthulakshmi Research Academy

பௌர்ணமி அன்று நடராஜருக்கு சிறப்பு வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. திருவாதிரையுடன் இணைந்து வரும் பௌர்ணமி நாளில் விளக்கேற்றி அம்பிகைக்கு பஞ்சாமிர்த அபிஷேகம் செய்து, வெண்ணிற ஆடை சாற்றி, ஒற்றைப்படை எண்ணிக்கையில் நவரத்தினக்கல் பதித்த ஆபரணம் அணிவித்து, தாமரைப்பூவால் பூஜித்து, வெல்லத்தில் செய்த களியை நைவேத்தியம் செய்ய அம்பிகையின் பரிபூரண அருளைப் பெறலாம். நோய்கள் குணமாகும். காரிய வெற்றி கிடைக்கும். கஷ்டங்கள் நீங்கும்.

தை மாதத்தில் பௌர்ணமி பொதுவாக பூசத்தில் வருகிறது. தை பூசம் மிகவும் விசேஷமானது. இன்றைய தினத்தில் சிவன் மற்றும் முருகனுக்கு சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

இன்றைய தினத்தில்அம்மனுக்கு தேன் அபிஷேகம் செய்து, மஞ்சளும், சிவப்பும் கலந்த ஆடை அணிவித்து, வில்வம், வெள்ளை தாமரைப்பூ, நந்தியாவட்டை பூக்களால் பூஜித்து, அர்ச்சனை பால் பாயசம் நிவேதனம் செய்ய, நீண்ட ஆயுள் கிடைக்கும். பிறவிப் பயன் நீத்து முக்தி கிடைக்கும்.

மாசி மாதத்தில் பௌர்ணமியானது பொதுவாக மகத்தில் வருகிறது. இன்றைய தினத்தில் நீர்நிலைகளில் நீராடுவது சிறப்பானது. கும்பமேளா, மாசி மகம் போன்ற விழாக்கள் மாசி பௌர்ணமியில் கொண்டாடப்படுகின்றன. இன்றைய தினத்தில் விளக்கேற்றி அம்பிகைக்கு, பால் அபிஷேகம் செய்து, வெள்ளை நிறம் கலந்த 5 வண்ணங்கள் கொண்ட ஆடை அணிவித்து, ஸ்படிக மணி மாலை சாற்றி, சர்க்கரைப் பொங்கல் நிவேதனம் செய்தால், சிவதீட்சை பெற்ற பலனைப் பெறலாம். நற்கதி கிடைக்கும்.

பங்குனியில் பௌர்ணமியானது உத்திரத்தில் வருகிறது. அன்றைய தினத்தில்தான் பார்வதி-பரமேஸ்வரர், முருகன்-தெய்வயானை, ராமன்-சீதை உள்ளிட்ட தெய்வங்களின் திருமணங்கள் நடைபெற்றன. எனவே பங்குனி பௌர்ணமி வழிபாடு நற்திருமணப்பேற்றினை அருளும். இன்றைய தினத்தில் அம்பிகைக்கு விளக்கேற்றி பௌர்ணமியன்று தயிர் அபிஷேகம் செய்து, மஞ்சள் நிற வஸ்திரம் சார்த்தி, கோமேதகம் பதித்த ஆபரணம் அணிவித்து, தாமரைப்பூவால் அர்ச்சனை செய்து, பருப்பு மற்றும் நெய் சேர்த்த சாதம் நைவேத்தியம் செய்தால், மோக்ஷம் கிடைக்கும். துன்பங்கள் துயரங்கள் நீங்கி நற்கதி கிடைக்கும்.

.இப்படி, ஒவ்வொரு மாத பௌர்ணமியன்று அம்பிகையை பூஜித்து நல்வாழ்வு பெறலாம்.

ஒன்பது கோள்களில் சந்திரன் மிகவும் முக்கியமானது. மனித உயிர் பிறக்கும்போது, சந்திரன் இருக்கும் வீட்டை கொண்டே, கிரகங்களின் தொடர்புக்கான கோச்சாரம் என்கிற பலன் சொல்கின்றனர். மேலும் நம் ஆழ்மனதை இயக்குபவர் சந்திரனே. நம் ஜாதகத்தில் சந்திரனின் இருப்பிடம் சரியில்லை என்றால் அந்த ஜாதகரின் மன நிலையும் சரியாக இருக்காதென்று ஜாதக அலங்காரம் குறிப்பிடுகிறது. அவ்வாறு மன நிலை சரியில்லாதவர்கள், அந்த சந்திரனையே இருப்பிடமாகக் கொண்ட அம்பிகையை வணங்கினால் மன நிலை சரியாகி நல் வாழ்வு வாழலாம். மன வலிமை உள்ளவர்கள் எதனையும் சாதிப்பர் என்பது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வரலாறு. அதனால் தான் நம் முன்னோர்கள் 'விதியை மதியால் வெல்லலாம்' என்று குறிப்பிட்டார்கள். அது எதை குறிப்பிடுகிறது என்றால், விதி என்கிற சனி பகவான், சரியில்லை என்றாலும், மதி என்கிற சந்திரன் தன் கட்டுப்பாட்டில் இயக்குகின்ற ஆழ்மனதினை கொண்டு வாழ்க்கையில் எல்லாவித வெற்றிகளையும் பெறலாம்.

பௌர்ணமி தினத்தில் பூரண பக்தியுடன் அம்பிகையை முறைப்படி பூஜை செய்து வழிபாடு செய்பவர்கள் கிரக தோஷங்களில் இருந்து விடுபட்டு நிம்மதியான, ஆரோக்கியமான வாழ்வு வாழலாம். விதியென்ற நமது வாழ்க்கை அமைப்பை மதி என்ற சந்திரனின் துணை கொண்டு நாம் மாற்றலாம். பௌர்ணமி அன்று இல்லத்தில் பூஜை செய்த பின்பு ஆலய தரிசனம் செய்வது உத்தமமாகும். அதிலும் ஆலயங்களில் குங்கும அர்ச்சனை செய்து ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் பாராயணம் செய்து அம்பாளை வழிபடுபவர்களுக்கு சகல சித்திகளும் கிட்டும். காரியம் கைகூடும். இறைவன் திருவருள் சக்தி வழிபாட்டில் மேலும் சிறக்கும். அன்றைக்கு கட்டாயமாக சைவ உணவு மட்டுமே உட்கொள்ள வேண்டும். உபவாசம் மேற்கொள்ள இயலும் என்றால் இன்னும் சிறப்பு.

அனைவரும் பௌர்ணமி பூஜையை மேற்கொள்வோம். அம்பிகையின் திருவருள் பெறுவோம்.

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

Public domain. Digitization Muthulakshmi Research Academy

21. அபிராமி அம்பிகை திருத்தலங்கள்

திண்டுக்கல் அருள்மிகு காளஹஸ்தீஸ்வரர் திருக்கோயில்

மிகப்பழமையான இந்த சிவ ஸ்தலம் சேர மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டு சோழர், பாண்டியர் விஜய நகரப் பேரரசர்கள் மதுரை நாயக்க மன்னர்கள் யாவரும் பணிந்து போற்றித் திருப்பணி செய்யப் பெற்ற பெருமையுடையது. இத்தலவிநாயகர் வன்னி விநாயகர் என்ற திருநாமத்துடன் அருள்பாலிக்கிறார்.

பிரம்மா தனக்கு ஏற்பட்ட தோஷ நிவர்த்திக்காக இங்கு சிவனை வேண்டி தவமிருந்தார். சிவன் அவருக்கு ஒரு பத்ம (தாமரை) தடாகத்தின் மத்தியில் எழுந்தருளினார். இதனால் இவர் ''பத்மகிரீஸ்வரர்' என்று பெயர் பெற்றார்.

திண்டீச்சுரம் என்னும் இந்நகரை ஆண்டு வந்த திண்டிமாசூரன் தேவர்கள் மீது படையெடுத்து சென்றான்.இதனால் தேவர்கள் பத்மகிரி சிவபெருமானை நாடினர். இறைவனும் சூலப்படை தாங்கி பைரவர் உருவெடுத்து அசுரனை அழித்தார். தங்களை காத்த பத்மகிரீஸ்வரனுக்கு நன்றி செலுத்தும் விதமாக தர்ம பாலன் எனும் சிவபக்தி நிறைந்த அரசனிடம் திண்டிமா புரி அரசாட்சியை ஒப்படைத்துவிட்டு தேவர்கள் விண்ணுலகம் சென்றனர். தர்மபாலனும் பத்மகிரியின் சிகரத்தில் பத்மகிரீசருக்கு ஆலயம் கட்டி அபிராமி அம்பிகையையும் பிரதிஷ்டை செய்தான். மொகலாய ஆதிக்கத்தின்போது மலை மீதுள்ள இறைவனும், இறைவியும் உற்சவ மூர்த்திகளாக நகருக்குள் இப்போதிருக்கும் காளகத்தீஸ்வர ஆலய இடத்தில் வைத்து வழிபட்டனர். பின்பு காளஹஸ்தீஸ்வரரையும், ஞானாம்பிகையையும் பிரதிஷ்டை செய்து அவர்களுக்கும் அதே பூஜை பெருமைகளையும் தந்து வழிபட்டனர். திண்டீஸ்வரம் என்ற பெயர் திண்டுக்கல் என மருவியது.

திண்டிமாசுரனை அழிக்க பைரவராக வந்த சிவன், பிரகாரத்தில் இருக்கிறார். இங்குள்ள ஒரு தூணில் பால துர்க்கை காட்சி தருகிறாள். மற்றோர் தூணில் கருடாழ்வார் காட்சி தருகிறார். முன் மண்டபத்தில் சந்தானக்குரவர்களான மெய்கண்டதேவர், மறைஞான சம்பந்தர், அருள்நந்தி சிவாச்சாரியார், உமாபதி சிவாச்சாரியார் ஆகியோர் இருக்கின்றனர்.

எந்த கோயிலிலும் இல்லாமல் இங்கு 2 மூலவர்கள் சன்னதி உள்ளன. திருக்கல்யாணம், தேரோட்டம் ஆகியவை இங்கு காலையில் நடக்காமல் மாலை வேளைகளில் நடைபெறுகிறது. பத்மகிரி நாதர் பேரில் பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் பாடிய தென்றல் விடு தூது இக்கோயிலின் இலக்கியப் பெருமையைப் பறை சாற்றுகிறது. பலபட்டடைச் சொக்கநாத புலவர் இயற்றிய பத்மகிரி நாதர் தென்றல் விடுதூது என்ற அரிய நூலைப் பதிப்பித்த டாக்டர் உ.வெ.சாமிநாத அய்யர் அந்நூலின் முன்னுரையில் பத்மகிரியென்பது திண்டுக்கல்லின் திருநாமம் இதற்கு திண்டீச்சுரம் என்ற திருநாமம் உண்டு. இது தேவார வைப்புத் தலங்களில் ஒன்று என்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆரம்பத்தில் இங்குள்ள மலையில் ஸ்ரீ அபிராமி அம்பிகை சமேத பத்மகிரீஸ்வரர் கோயில் இருந்தது. விழாக்காலங்களில் அடிவாரத்திற்கு சுவாமியும் அம்பிகையும் வருவர். இதற்காக தற்போதைய அபிராமியம்மன் கோயில் இருக்குமிடத்தில், ஒரு மண்டபம் அமைக்கப்பட்டது. இப்பகுதியை ஆண்ட அச்சுத தேவராயர், காளஹஸ்தியில் அருளும் காளஹஸ்தீஸ்வரர் மீது அதீத பக்தி கொண்டிருந்தார். அவரை தன் இருப்பிடத்தில் வழிபட எண்ணிய அவர், 1538ல் இம்மண்டபத்தில் காளஹஸ்தீஸ்வரரையும், ஞானாம்பிகையையும் பிரதிஷ்டை செய்தார். 1788ல் அன்னியர்கள் இப்பகுதியில் இருந்தபோது, மலை மீதிருந்த சிவன், அம்பிகையை இம்மண்டபத்தில் பிரதிஷ்டை செய்தனர். பிற்காலத்தில் இந்த மண்டபமே கோயிலாகக் கட்டப்பட்டது. தற்போதும் இங்கு இரண்டு சிவன், இரண்டு அம்பிகையர் தனித்தனி சன்னதிகளில் காட்சி தருகின்றனர். ஆடி, தை வெள்ளிகளில் அம்பிகையர் இருவரும் சந்தனக்காப்பு அலங்காரத்தில் காட்சி தருவர். தை அமாவாசையன்று இவளுக்கு விசேஷ பூஜைகள் நடக்கும்.

ஆரம்பத்தில் இங்கு அம்பிகைக்கு சன்னதி கிடையாது. அனலன் என்னும் அசுரனை அழிக்க காளி வடிவில் வந்த அம்பிகை இங்கு தங்கினாள். உக்கிரமாக இருந்த அவளை சிவன் சாந்தப்படுத்தி, மணந்து கொண்டார். அவ்வேளையில் அம்பிகை மிகுந்த பொலிவுடன் அழகாக இருந்ததால், ''அபிராமா அம்பிகை' எனப் பெயர் பெற்றாள். அபிராமம் என்றால் அழகு என்று பொருள். சித்திரையில் அம்பிகை, அசுரனை அழித்த வைபவம், திருக்கல்யாணம் நடக்கும்.

சிவத்தலம் என்றாலும் இங்கு அம்பிகையே பிரதானம் பெற்றிருக்கிறாள். இப்பகுதியில் ''அபிராமி கோயில்' என்றால்தான் தெரியும். இவளது உண்மையான பெயரான, ''அபிராமா அம்பிகை' காலப்போக்கில் அபிராமி என மருவியது. ''அபிராமா' என்ற பெயர் மந்திர அட்சரத்துடன் அமைந்ததாகும். இப்பெயரைச் சொல்லி அம்பிகையை வழிபடும்போது, அம்பாளுக்குரிய அத்தனை மந்திரங்களையும் சொல்லி வழிபட்ட பலன் கிடைக்கும். தை அமாவாசையன்று இவளுக்கு விசேஷ பூஜை நடக்கும்.

முற்காலத்தில் இங்கு திருக்கார்த்திகை விழா மிக விசேஷமாக நடந்துள்ளது. பாஹு, சுபாஹு என்னும் இரு சிவபக்தர்கள் கார்த்திகையன்று தவறாது சிவனைத் தரிசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஒருசமயம் அவர்கள் இங்கு வந்தபோது, சிவன் புலியின் வடிவில் சென்று, அவர்களைக் கொல்லப்போவது போல் நடித்தார். சிவ தரிசனத்திற்கு பிறகு, தங்களை உண்ணும்படி புலியிடம் அவர்கள் கேட்டுக் கொண்டனர். புலியும் சம்மதிக்கவே, சிவனை வணங்கிவிட்டு புலியிடம் சென்றனர். சிவன் சுயரூபம் காட்டி, வாக்குத்தவறாத அவர்களுக்கு முக்தி கொடுத்தருளினார். கார்த்திகையன்று, சிவன் புலியாக வந்த வைபவத்தை இங்கு பாவனையாகச் செய்வர்.

இந்திரனின் சாபத்தால் பதவியிழந்த வருணன், இங்கு சிவனை வேண்டி பதவியை திரும்பப்பெற்றதன் அடிப்படையில், இழந்த வேலை திரும்பக் கிடைக்கவும் பதவி உயர்வுக்காகவும் அவர்களுக்குரிய நட்சத்திர நாள் அல்லது பௌர்ணமியன்று பக்தர்கள் சிவனுக்கு சம்பா சாதம் நிவேதனம் செய்து ருத்ராபிஷேகம் செய்து வேண்டுகிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விஸ்வாமித்திரர் தான் நடத்திய யாகத்தில் கலந்து கொண்ட சுமேதன் என்ற அந்தணருக்கு சன்மானமாக பெரும் பொருள் கொடுத்தும் திருப்தி அடையாத அவரை மானாக மாறும்படி சபித்துவிட்டார். பின்னர் அந்த அந்தணர் விஸ்வாமித்திரரை சரணடைய, திண்டீஸ்வரம் இறைவனை வழிபட்டு சாப விமோசனம் பெறச் சொன்னார். அதன்படி, அந்த அந்தணர் பத்மகிரீஸ்வரரை வணங்கி சுயரூபம் பெற்றார். இதன் அடிப்படையில் சித்திரை பிரம்மோற்ஸவத்தின்போது, கோயில் எதிரில் அந்தணரான மானுக்கு சிவன் அருளும் நிகழ்ச்சி நடக்கும்.

பொதிகைக்குச் செல்லும் வழியில் அகத்தியர் இங்கு சிவனையும் விநாயகரையும் வழிபட்டுச் சென்றார். இவர் வழிபட்ட ''அகத்திய விநாயகர்' கிரிவலப்பாதையில் இருக்கிறார். கந்தசஷ்டியின்போது முருகன், வள்ளி இருவரும் இங்கு எழுந்தருளுவர். அப்போது வள்ளியை, விநாயகர் யானை வடிவில் வந்து மிரட்டுவது போல பாவனை செய்வர். பின்பு முருகன், வள்ளி திருமணம் நடக்கும். இவ்வேளையில் தினை மாவு நைவேத்யம் படைக்கப்படும்.

பௌர்ணமிதோறும் கிரிவலம் நடக்கிறது. மார்கழி தேய்பிறை அஷ்டமியில் சிவன், படியளக்கும் வைபவம் நடக்கும். அன்று பஞ்சமூர்த்திகளும் அஷ்டமி சப்பரத்தில் எழுந்தருளுவர். சிவன் சன்னதி கோஷ்டத்திலுள்ள தட்சிணாமூர்த்தி, இரண்டு சீடர்களுடன் காட்சி தருகிறார். வழக்கமாக சீடர்கள் அமர்ந்து உபதேசம் கேட்கும் நிலையில்தான் இருப்பர். ஆனால், இவர்களிருவரும் நின்றபடி இருக்கின்றனர். குருவிற்கு மரியாதை தரும் விதமாக இவ்வாறு இருப்பதாகச் சொல்கிறார்கள். காளஹஸ்தீஸ்வரர் சன்னதிக்கு பின்புறம் லிங்கோத்பவர் இருக்க வேண்டிய இடத்தில், முருகப் பெருமான் தண்டபாணியாக காட்சி தருகிறார்.

பிரகாரத்தில் வடக்கு நோக்கி இருக்கும் வரதராஜப்பெருமாள், செல்வவளத்தைப் பக்தர்களுக்கு அருளுகிறார். சுவாமியின் அருகிலேயே காட்சி தருகிறார் ஆஞ்சநேயர். மற்ற தலங்களைப்போல, இங்கு தனியே சொர்க்கவாசல் கிடையாது. வரதராஜர் வைகுண்ட ஏகாதசியன்று, கருட வாகனத்தில் அபிராமிக்கான பிரதான வாசலையே, சொர்க்கவாசலாகக் கருதி செல்வார். அபிராமி அவருடைய செல்ல தங்கையல்லவா!

சித்திரை மாதத்தில் இங்கு நடக்கும் பிரும்மோத்ஸவம் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த கோவிலின் நவராத்திரி திருவிழாவின் போது பக்தர்கள் கூட்டம் அலை மோதும். அப்போது பிரபலமான கொலு கோவிலில் வைக்கப்படுகிறது. அப்போது அம்பிகைக்கு லட்சார்ச்சனை செய்வார்கள். ஒவ்வொரு ஆடி வெள்ளிக்கிழமையின்போதும் அபிராமி அம்மன் பூப்பல்லக்கில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள் தருவார்.

14ம்நூற்றாண்டில் அச்சுத தேவராயரால் கட்டப்பட்ட இத் திருக்கோயில் தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுபாட்டில் செயல்பட்டு வருகிறது. ரூ.20கோடி மதிப்பீட்டில் புணரமைக்கபட்ட இக்கோயிலின் குடமுழுக்கு நன்னீராட்டு விழா ஜன.20, 2016ல் நடைபெற்றது.

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்னை சேலையூர் அபிராமி அம்பிகை சமேத அமிர்தகடேஸ்வரர் திருக்கோயில்

சென்னையின் திருக்கடவூர் என்றே அறியப்படும் அன்னை அபிராமியின் திருக்கோயில் சென்னை தாம்பரம் ரயில் நிலையத்திலிருந்து இரண்டரை கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சேலையூர் கேம்ப் ரோடில் ஈஸ்வரன் தெருவில் அமைந்துள்ளது. மிகவும் புராதனமான இத் திருக்கோயில் முன்பு மணல் மேடாக இருந்தது. 1970-ல் காஞ்சி மகா பெரியவர் சென்னை விஜயம் செய்தபோது, இந்த இடத்தைப் பார்த்து இங்கு பழங்காலச் சிலைகள் புதைந்துள்ளன. அவற்றைக் கண்டுபிடித்துக் கோயில் கட்டுங்கள் என்று அருளாசி வழங்க, மண்மேட்டை அகற்றும்போது அமிர்தகடேஸ்வரர் மூல விக்கிரகம் கிடைத்தது. அருகில் இருக்கும் முத்தாலம்மன் கோயில் அருகிலும் அச்சமயம் பல சிலைகள் கிடைத்தன. அதில் அன்னை அபிராமியின் விக்கிரகம் கிடைத்தது. சிலைகள் பல கிடைத்தமையால் சிலையூர் என வழங்கப்பட்டுவந்த இந்த ஊர் நாளடைவில் சேலையூராக மாறிவிட்டது. இக்கோயிலின் அருகிலேயே முத்தாலம்மன் திருக்கோயிலும் அமைந்துள்ளது.

பழங்காலத் தமிழ் மன்னர்களான பல்லவர் காலத்தில், திருக்கடையூர் அபிராமி அமிர்தகடேஸ்வரர் திருக்கோயிலைப் போலவே பெரிய அளவில் கட்டப்பட்ட இந்தக் கோயில் அதன்பின்னர் ஏற்பட்ட சண்டைகளினாலும் இவ்வூரிலிருந்து பக்தர்கள் பெருமளவில் வெளியேறியதாலும் கவனிப்பாரின்றி மண்மேடாக மாறியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இவ்வாறு தமிழகத்தின் பல இடங்களில் பல கோயில்கள் கண்டுபிடிக்கப்பட்டு தற்போது புணருத்தாரணம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வூரில் இருக்கும் ஆதி கேசவப் பெருமாள் கோயில் போன்ற சுற்றுப்புறக் கோயில்களின் கூரைச் சுவரில் மீன் சின்னம் வில் சின்னம் வடிக்கப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது, பாண்டிய, பல்லவ மன்னர்களின் காலத்தில் கோயிலாக இருந்து மண்மேடாகி, பின் அந்த மண்மேடை அகற்றி இக்கோயில் சிலைகள் கிடைத்திருப்பதையும் வைத்துப் பார்க்கும்போது கிட்டத்தட்ட ஆயிரம் வருடத்திற்கும் மேல் பழைமை வாய்ந்த கோயிலாக இதைக் கொள்ளலாம் என்கின்றனர். இந்தக் கோயிலின் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாகப் புதுப்பிக்கப்பட்டு கடந்த ஐம்பது வருடங்களாக ஆராதனைகள் சிறப்பாக நடந்து வருகின்றன. ஸ்தல விருக்ஷமாக அரச மரம் ஸ்தல தீர்த்தமாக அமிர்த புஷ்கரணியும் விளங்குகிறது.

1972-ஆம் ஆண்டு கிராமப் பெரியோர்களால் முதலில் அபிராமி அம்மன் சன்னதியும், அமிர்தகடேஸ்வரர் சன்னதியும் புதுப்பிக்கப்பட்டது. 19.1.1975 ஞாயிறன்று உஜ்ஜயினி ஓம்காளி ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீராமநாதஸ்வாமிகளால் விநாயகர், முருகன், ஸ்வாமி, அம்பாள் விக்ரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு, காஞ்சி மஹாப்பெரியவர் நல்லாசியுடன் அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் இனிதே நடைபெற்றது. இதற்கு தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தம்பிரான் அவர்களும் ஸ்ரீ காசி வாசி ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தம்பிரான் அவர்களும் அஷ்டபந்தன மருந்து வழங்கினார்கள். 1994 தல் பிரதோஷ பூஜை ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. 19.6.1994 ஞாயிறன்று கோயில் புதுப்பிக்கப்பட்டு ஜீரணோத்தாரண அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1996-ல் பதினாறு கால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மண்டபம் எனப்படும் ஷோடச மஹாலக்ஷ்மி மஹா மண்டபத்தில் ஷோடச லக்ஷ்மிகளுடன் அந்தந்த லக்ஷ்மியின் யந்திரங்கள் பதிப்பிக்கப்பட்டு, மண்டபம் கட்டப்பட்டது. 1998-99ல் நடராஜர் சிலை அமைக்கப்பட்டு வருடத்தில் ஆறுறை அவருக்கு அபிஷேகம் நடக்கிறது. அபிராமி அம்பிகை, அமிர்தகடேஸ்வரருக்கு ஐம்பொன் உற்சவ மூர்த்திகள் உள்ளன. அபிராமி அந்தாதி பாடியவாறே பொற்குழம்பை ஊற்றி அபிராமி ஐம்பொன் சிலையையும் அதேபோன்று தேவாரம் பாடியவாறே அமிர்தகடேஸ்வரர் சிலையையும் உருவாக்கிய பெருமை பெற்றது. வருடந்தோறும் பங்குனி உத்திரத்தன்று அபிராமி அமிர்தகடேஸ்வரரின் திருக்கல்யாண வைபவம் சிறப்பாக நடைபெறுகிறது. திருக்கல்யாண வைபவத்துக்குப்பின் அபிராமி அமிர்தகடேஸ்வரர் திருவீதி உலா வருவார்கள். நடராஜர் ஆருத்ரா தரிசனத்தன்று திருவீதி உலா வருகிறார்.

கோயில் அருகில் அபிராமி அமிர்த புஷ்கரிணியை (திருக்குளம்) அமைக்க முடிவு செய்யப்பட்டு மக்களின் நன்கொடையால் திருக்குளப் பணிகள் 2004 ஆண்டு இனிதே முடிவுபெற்றது. திருக்குளத்தைச் சுற்றிவர நடைபாதை அமைத்து, சுற்றுச்சுவர்களில் வடக்கே கங்கை முதல் தெற்கே காவிரி வரை 18 நதிகளின் பெயர்களுடன் சிலைகளை அமைத்து, அந்த நதிச் சிலைகளிலிருந்து நீர் கொட்டுவது போல அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. வருடந்தோறும் மாசி மகத்தன்று சிறப்பாக இந்த நதிகளுக்கு விழாவும் கொண்டாடப்படுகிறது.

மாசி மகத்தன்று 18 நதிகளின் புனித நீர் கொணரப்பட்டு, ஹோமங்கள் வளர்த்து, 18 குடங்களில் உள்ள தீர்த்தத்தால், 18 நதி தேவதைகளுக்கும் தனித்தனியாக பூஜை செய்து, பின்னர் இந்த 18 நதி தீர்த்த நீர் திருக்குளத்தில் கலக்கப்படுகிறது. இதன்பின்னர் பக்தர்கள் 18 நதிகளிலும் தனித்தனியாக கொட்டும் தீர்த்தத்தில் வரிசையாக குளத்தைச் சுற்றி நீராடுகிறார்கள். நிறைவாக 18 நதி நீரும் கலந்துள்ள இந்த அபிராமி அமிர்த புஷ்கரணியில் (திருக்குளத்தில்) நீராடுகிறார்கள். பின்னர் சிவனையும் அம்பாளையும் வணங்கி அர்ச்சனை செய்கிறார்கள். இந்தியாவின் பல இடங்களிலும் அமைந்துள்ள புனித நதிகளில் நீராட முடியாதவர்கள் இதில் நீராடிப் புனிதமடைகிறார்கள். ஸ்நானம் செய்ய இயலாத பக்தர்கள் தலையில் இந்த நதி நீரை ப்ரோக்ஷித்தும் கொள்ளலாம்.

2006-ல் ராஜ கோபுரம் கட்ட ஆரம்பித்து, 2009-ல் கட்டி முடித்து கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதன்பிறகு சுற்றுப்புற மதில் சுவர் எழுப்பப்பட்டது. திருக்கடையூர் போல் இங்கும் சஷ்டியப்த பூர்த்தி, பீமரத சாந்தி, சதாபிஷேகம் முதலியவைகள் நடைபெறுகின்றன. சஷ்டியப்த பூர்த்தியை செய்ய வசதியில்லாதவர்களுக்கும் எளிமையாக நடத்திக் கொடுக்கப்படுகிறது. இதற்காக தனியாக ஒரு மண்டபம் திருக்கோயில் வளாகத்திலேயே கட்டப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேற்கு பார்த்த வாயிலுடன் திகழும் இத்திருக்கோயிலின் உள்ளே நுழைந்ததும் இடது புறத்தில் கிழக்கு நோக்கியவாறு விநாயகர் அருள்பாலிக்கிறார். அவருக்கருகில் சமயக் குரவர் நால்வரும் இடம் பெற்றிருக்கின்றனர். அதற்கடுத்தாற் போல் கிழக்கு நோக்கியவாறு ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் லிங்க ரூபமாக வீற்றிருக்க எதிரில் நந்திகேஸ்வரர் காக்ஷி தருகிறார். அடுத்த சன்னதியில் அன்பே வடிவாக சர்வாலங்கார பூஷிதையாக, அபிராமி அன்னை வடக்கு நோக்கி காக்ஷிதர, அம்பிகை எதிரிலும் நந்திகேஸ்வரரே காக்ஷி தருகிறார். முண்டகக்கண்ணியான அம்பிகையின் மூன்றாவது கண்ணை பாலாபிஷேகத்தின் போது ஆனந்தமாகத் தரிசிக்கலாம். வற்றாத அன்பால் தன் பக்தர்களைக் காக்கும் அம்பிகையின் திருப்பாதங்களில் எப்பொழுதும் வற்றாமல் நீர் கசிவு இருந்து கொண்டேயிருப்பது குறிப்பிடத்தக்கது. சிவன் சன்னிதி கோஷ்டத்தில் தக்ஷிணாமூர்த்தி, திருமால், பிரும்மா, சண்டிகேஸ்வரர், துர்கை ஆகியோர் அருள் பாலிக்கின்றனர். பிரகாரத்தில் வள்ளி, தேவயானியுடன் சுப்மண்யர், அலர்மேலு மங்காதாயாருடன் வெங்கடாஜலபதி, கருடன், நவகிரகங்கள், காலபைரவர், சந்திரன், சூரியன், ஆஞ்சனேயர், ஐயப்பன், ஆகியோர் தனிச் சன்னதி கொண்டுள்ளனர். ஸ்தல விருக்ஷமான அரசமரத்தடியில் நாகர்கள் இடம் பெற்றுள்ளனர்.

இத்திருக்கோயிலில் ஆண்டு முழுவதும் பல்வேறு உற்சவங்கள் கொண்டாடப்படுகின்றன. சித்திரை மாதம் பௌர்ணமியன்று திருவிளக்கு பூஜை நடைபெறுகிறது. வைகாசி மாதம் விசாகத்தன்று முருகனுக்கு பால்குட அபிஷேகம், பிரகாரத்தில் திருத்தேர் உலாவும் நடைபெறுகிறது. ஆனியில் நடராஜப் பெருமானுக்கு திருமஞ்சனம் அதைத் தொடர்ந்து அவருடைய தேர் உலாவும் நடைபெறுகிறது. ஆடியில் பூரத்தன்று அம்பிகைக்கு விசேஷ அபிஷேகம் அலங்காரங்களும், வளைகாப்பும் நடைபெறுகிறது. அன்று சந்தான பிராப்திக்காக மடிகட்டும் பிரார்த்தனை இவ்வாலயத்தில் விசேஷமாக நடைபெறுகிறது. ஆவணியில் விநாயகர் சதுர்த்தி விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது. புரட்டாசி நவராத்திரியில் அம்பிகைக்கு விசேஷ அபிஷக, அலங்கார பூஜைகள் நடைபெறும். ஒன்பது நாளும் அம்பிகை வெவ்வேறு அலங்காரத்தில் காக்ஷி தருவாள். ஐப்பசியில் கந்தஷஷ்டியும், சிவபெருமானுக்கு அன்னாபிஷேகம் சிறப்பாக நடைபெறும். கார்த்திகையில் ஒவ்வொரு சோமவாரம் விசேஷம்தான். கடைசி சோமவாரத்தன்று சங்காபிஷேகம் நடைபெறும். மார்கழியில் ஆருத்ரா தரிசனத்தன்று நடராஜபெருமானுக்கு விசேஷ அபிஷேக அலங்காரங்கள் நடைபெறும். பின்னர் நடராஜபெருமான் வீதியுலா வருவார். தை அமாவாசயன்று அம்பிகைக்கு விசேஷ அபிஷேகங்கள் நடைபெறும். அன்று மாலை அபிராமி அந்தாதி வைபவம் நடைபெறும். இந்நிகழ்ச்சி திருக்கடையூர் தலத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படுவதைப் போலவே இத்தலத்திலும் கொண்டாடப்படுகிறது. தை அமாவாசையன்று அம்பிகையின் திருச்சன்னதி புஷ்ப பந்தலாலும், மின் விளக்குகளாலும் அலங்கரிக்கப்படும். காலையில் எல்லா மூர்த்திகளுக்கும் விரிவாக அபிஷேகம் நடைபறும். அன்று மாலை 5 மணி அளவில் அபிராமி அந்தாதி பாட ஆரம்பிப்பார்கள். ஒவ்வொரு பாடலின் முடிவிலும் ஒரு கூடை புஷ்பம் அம்பாளுக்கு அபிஷேகமாகச் சமர்ப்பிக்கப்பட்டு தீபாராதனை நடைபெறும். 79வது படலான 'விழிக்கே அருளுண்டு..' என்ற பாடல் பாடப்படும் வைபவம் சிறப்பாக நடைபெறும். அப்பாடல் முடிந்ததும் அனைத்து மின் விளக்குகளும் அணைக்கப்பட்டு, அம்பிகைக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெரிய தீபாராதனை காண்பிக்கப்படும். இதைக் காணும் பக்தர்கள் தாங்களும் அபிராமி பட்டருடன் இருந்த நாளில் இருப்பதாகக் கருதி பக்தி வெள்ளத்தில் மூழ்குவர். இவ்விதம் புஷ்பாஞ்சலியுடன் நடைபெறும் அபிராமி அந்தாதி பாராயணம் டிய இரவு 8.30 அல்லது 9 மணியாகிவிடும். அபிராமி அந்தாதி பாராயண நிறைவில் அம்மனுக்கு 9 வகையான பிரசாதங்கள் நைவேத்யம் செய்விக்கப்பட்டு, பக்தர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. மெய்யன்பர்கள் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு நடக்காததையும் நடத்திக் காட்டும் அருள்மிகு அபிராமி அன்னையின் திருவருள் பெறலாம். மாசி மகத்தன்று மேலே குறிப்பிட்டுள்ளபடி புனித நீராடல் நடைபெறுகிறது. பங்குனி உத்திரத்தன்று ஸ்ரீ அமிர்தகடேஸ் வரருக்கும் ஸ்ரீ அபிராம வல்லிக்கும் திருக்கல்யாண வைபவம் சிறப்பாக நடைபெறும்.

ஒவ்வோர் பௌர்ணமியன்றும் காலை அஷ்டாதச திரவிய அபிஷகம் நடைபெறுகிறது. இதில் ஒவ்வோர் திரவிய அபிஷேகம் முடிந்தவுடனும் தீபம் நிவேதனம் செய்யப்படும். எல்லா அபிஷேகங்களும் முடிந்தபின் விசேஷ புஷ்பாலங்காரம் செய்யப்படும். அன்று திருமணம் நடக்க வேண்டியும், புத்திரபேறு வேண்டியும், கிரஹபிராப்தி வேண்டியும் பலரும் ஒன்பது பௌர்ணமி தினங்களில் ஒன்பது முறை சன்னதியைச் சுற்றி வந்து தங்கள் கோரிக்கை நிறைவேறப்பெறுகிறார்கள் என்பது இத்தலத்தின் விசேஷம். இவை தவிர சங்கடஹர சதுர்த்தி (விநாயகர்), கிருத்திகை (முருகன்), தேய்பிறை அஷ்டமி (காலபைரவர்) அபிஷேக அலங்காரங்களும் சிறப்பாக நடைபெறுகின்றன.

ஆலயம் தூய்மையாக பராமரிக்கப்படுகிறது. நகர முக்கிய சாலையிலிருந்து ஊரின் உள்ளே தள்ளி உள்ளதால் ஆரவாரமற்று, நிசப்தமாக இருப்பது தியானம் செய்பவர்களுக்கு மிகவும் வசதியாக உள்ளது. தினம் காலை 7 மணி முதல் 10 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் 8 மணிவரையும் தரிசனத்திற்காகத் திறந்திருக்கிறது. அபிராமி பட்டரைப்போல் நம்பிக்கையோடு நாம் அன்னையை ஆராதிப்போம். அவள் அருள் பெறுவோம்!!

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

திருவாரூர் மாவட்டம், கொடவாசல் வட்டம், திருவிடைவாசல் கிராமம் ஸ்ரீஅபிராமி அம்பாள் சமேத ஸ்ரீபுண்ணியகோடீஸ்வரர் ஆலயம்

நமது மனதில் உள்ள அத்தனை குழப்பங்களுக்கும் விடையாக இருக்கும் அருமையான திருக்கோவில் ஸ்ரீஅபிராமி அம்பாள் சமேத ஸ்ரீபுண்ணியகோடீஸ்வரர் திருக் கோயில். விடைவாயில் என்று புராணப் பெயரைப் பெற்ற திருவிடைவாசல் என்பதனை அறுதியிட்டுக் கூறியுள்ளார் ஞானசம்பந்தர் தனது தேவாரப் பாசுரத்தில்.

இத்திருத்தலம் செல்ல தஞ்சாவூர்- நாகப்பட்டினம் தேசிய நெடுஞ்சாலையில் கொரடாச்சேரி பேருந்து நிறுத்தத்தில் இறங்கிச் செல்லவேண்டும்.

இத் திருறைத்தலம் மணல் மேடு ஒன்றினை அகற்றும் போது கண்டறியப்பட்டதாகும். மேலும் அந்த இடத்தை அகழ்ந்து ஆராயும் போது, கோயிலுக்குள் அத்தலத்தைப் பற்றி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞானசம்பந்தப்பெருமானின் தேவாரப் பதிகம் கல்வெட்டில் பொறித்திருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டு 1917 ஆம் ஆண்டு உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டு தற்போது 275 ஆவது தேவாரத் திருத்தலமாக திகழ்கின்றது. அவர் தனது பாடல்களின் இறுதியில் 'விடைவாயே' என குறிப்பிட்டு முடித்திருப்பதிலிருந்து இதன் பழமையை அறிந்து கொள்ளலாம். மேலும் இத்தலத்தைப்பற்றி ஐயடிகள் காடவர்கோன் தம்முடைய சேத்திரக் கோவையில் 'தென் இடைவாய்' என்று குறிப்பிட்டுள்ளார். உமையொருபாகனின் திருப்பாதங்களை நாம் அடையும் வாயிலாக இத்திருத்தலம் விளங்குவதால் விடைவாயில் என அழைக்கப்படுகின்றது.

காவிரியின் துணை நதிகளான வெண்ணாறு, பாண்டவையாறு (பஞ்ச பாண்டவர்களின் தாகம் தீர்க்க குந்திதேவியாரால் உருவாக்கப்பட்டது), வெள்ளையாறு என மூன்று நதிகளுக்கு நடுவே இத்தலம் அமைந்திருப்பதாலும், சிவனின் வாகனமாகவும், கொடியாகவும் விளங்கும் விடை எனப்படுகிற ரிஷபம் இத்தலத்தில் விசேஷமாக விளங்குவதாலும், திருவிடையன் என்ற சூரிய குலத்து அரசன், கோயில் கட்டி வழிபட்டத் தலமானதாலும் திருவிடைவாசல் என்ற பெயர் வரக்காரணமாக இருந்ததாக பலவித கருத்துக்கள் நிலவுகின்றன. இக்கோயில் முதலாம் குலோத்துங்க சோழனால் கட்டப்பட்டிருக்கிறது. திருஞானசம்பந்தர் காலத்து முன்பிருந்தே இத்தலம் திருவிடைவாசல் என அழைக்கப்பட்டிருக்கிறது என்பதை சம்பந்தர் தனது பாடலில் ''விடைவாயே'' என குறிப்பிட்டு பாடியிருக்கிறார்.

இத்தலத்தில் சாஸ்தா குழந்தை வடிவில் பாலசாஸ்தாவாக அருளுகிறார். இத்தலத்தின் இறைவன் சுயம்பு மூர்த்தியாக விளங்குகிறார். தரிசித்த மாத்திரத்திலேயே முக்தியை அளிக்கிறார்.

திருவிடைவாயப்பர், இடைவாய்நாதர், புண்ணியகோடீஸ்வரர் என்று பல திருநாமங்களை உடையவர் அவர். தன்னை தரிசிப்பவருக்கு கோடி புண்ணியத்தை அருளுபவர். இவர் மீது வைகாசி, மார்கழி மாதங்களில் சூரிய ஒளிபடுவது சிறப்பு.

கிழக்கு பார்த்த இத்திருக்கோவில் பிராகாரத்தில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, நர்த்தன விநாயகர், லிங்கோத்பவர், பிரம்மா, துர்க்கை, சண்டிகேஸ்வரர், நந்தி, கஜலட்சுமி, வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர், நவக்கிரகம், பைரவர், நால்வர், நாகராஜர், அய்யனார், மற்றும் சூரியன் சந்திரன் வாகனத்துடன் உள்ளனர். இத்தல தட்சிணாமூர்த்தி சிம்மாசன மண்டபத்தில் வீற்றிருக்கிறார் என்பது மிக மிக சிறப்பாகும்.

அம்பிகை அபிராமி உமையாள் என்ற திருநாமத்துடன் விளங்குகின்றாள். தன்னை தஞ்சமென்று அடைந்தவர்களுக்கு மட்டுமின்றி தன்னை நினைந்தாலே அருளும் மகா கருணை மிக்கவள. காஞ்சி மகா சுவாமிகள் இத்தல இறைவனை அனைவரும் தரிசிக்க வேண்டும் என்று வற்புறுத்தியத் திருத்தலம். திருமணத்தில் தடை உள்ளவர்கள், மழலைப்பேறு வேண்டுபவர்கள் அது நிறைவேற இவ்வாலய பஞ்சமூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்து பிரார்த்தனை செய்து கொள்ளுகிறார்கள். தல விருட்சமாக மகிழ மரம், கஸ்தூரி அரளியும் உள்ளது. இத்தலத்து புண்ணிய கோடிதீர்த்தம் புறத்தூய்மையுடன், அகத்தூய்மையையும் அளிக்கின்றது. சப்தநதிகளும் இறைவனை வழிபட வந்ததற்கு சாட்சியாக இன்றும் ஏழு கிணற்றுடன் காட்சியளிக்கும் அற்புதத்தலம். இவ்வளவு சிறப்பு

Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாய்ந்த இந்த ஆலயத்தின் திருப்பணிகள் முடிக்கப்பட்டு, நூதன ராஜகோபுரம், கொடிமரம் அமைக்கப்பட்டு மஹாகும்பாபிஷேகம் துர்முகி வருடம் கார்த்திகை மாதம் 20ம் தேதி (5-12-2016) திங்கட்கிழமை வெகுசிறப்பாக நடைபெற்றது.

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

ஸ்ரீ அபிராமி அம்பிகை சமேத ஸ்ரீ அகத்தீஸ்வரர் திருக்கோவில், குழையூர், மயிலாடுதுறை வட்டம், நாகப்பட்டிணம் மாவட்டம்

மயிலாடுதுறையிலிருந்து கோமல் செல்லும் பேருந்தில் பெரட்டக்குடி நிறுத்தத்தில் இறங்கி இத்தலத்தை அடையலாம் அல்லது கும்பகோணம் - பொறையாறு சாலையில் (வழி - கோமல்) பெரட்டக்குடி வந்தும் வரலாம். தேரழுந்தூரிலிருந்து தென்கிழக்கே 3 கி.மீ. தொலைவில் வீரசோழன் ஆற்றின் வடகரையில் இத்தலம் உள்ளது.

ஸ்ரீ அகத்தீஸ்வரர் திருக்கோவில் மதிற்சுவருடன் கூடிய ஒரு கப்பு வாயிலுடனும், ஒரு பிராகாரத்துடனும் அமைந்துள்ளது. ஆலயத்திற்கு இராஜகோபுரமில்லை. கப்பு வாயில் கடந்து உள்ளே நுழைந்தவுடன் நேரே முன் மண்டபம் உள்ளது. ன் மண்டபத்தினுள் தெற்கு நோக்கி அம்பாள் அபிராமி சந்நிதி அமைந்துள்ளது. நேரே மூலவர் சந்நிதி உள்ளது. மூலவர் அகத்தீஸ்வரர் சுயம்புலிங்கமாக கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். மூலவர் சந்நிதிக்கு முன் நந்தி, பலிபீடம் காணப்படுகிறது. மேற்குப் பிராகாரத்தில் இரட்டை விநாயகருடன் கூழையர் (அகத்தியர்) உள்ளார். அதையடுத்து வள்ளி, தெய்வானை சமேத முருகர் சந்நிதியும், காசி விஸ்வநாதர், விசாலாட்சி சந்நிதியும் உள்ளது. பைரவரும் தனி சந்நிதியில் எழுந்தருளியுள்ளார். இந்தக் கோயில் வளாகத்தினுள் அமைந்துள்ள ஸ்ரீதேவி, பூதேவி சமேத வரதராஜ பெருமாள் தனிக்கோவில் இறைவன் கோவிலுக்கு வலதுபுறம் அமைந்துள்ளது.

கைலாயத்தில் சிவபெருமானுக்கு திருமணம் நடந்தபோது அநேகம் பேர் அங்கு கூடியிருந்தபடியால், பூமியின் வடபகுதி தாழ்ந்தும் தென் பகுதி உயர்ந்தும் போய்விட்டது. அதனை சரிசெய்ய அகத்திய முனிவரை தென் பகுதிக்கு செல்லும்படி சிவபெருமான் கேட்டுக்கொள்ள, அகத்தியரும் தென் பகுதிக்கு வந்து உலகம் சமநிலை அடையச் செய்தார் என்பது புராணம். அப்படி அகத்தியர் தென் பகுதியை சீர்படுத்துவதற்காக இமய மலையிலிருந்து தென் பொதிகை நோக்கி சென்ற போது வழியில் இருந்த இந்தக் கோயிலில் தங்கி இறைவனை வழிபட்டதாக வரலாறு. அகத்தியர் வில்வலன் வாதாபியின் சூழ்ச்சியால் புலால் உண்ட பாவந்தீர தேரழுந்தூர் வேதபுரீசுவரை வழிபட வந்தபோது இத்தலத்தில் தங்கிப் பூசித்த தலம் என்றும் கூறப்படுகிறது. கூழையர் என்றால் அகத்தியரைக் குறிக்கும். கூழையர் (அகத்தியர்) வழிபட்டதால் இத்தலம் கூழையூர் என்று பெயர் பெற்றது.

அருள்மிகு சுந்தரேஸ்வரர் திருக்கோயில், கொரநாட்டுக் கருப்பூர், தஞ்சாவூர் மாவட்டம்.

கொரநாட்டுக் கருப்பூர், கும்பகோணம்-சென்னை பாதையில் கும்பகோணத்தில் இருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. கும்பகோணத்தில் இருந்து திருப்பனந்தாள் செல்லும் அனைத்து நகரப் பேருந்துகலும் இதன் வழியாகச் செல்லும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரம்ம தீர்த்தத்தையும், பாதிரி மர தல விருட்சத்தையும் உடைய இத்திருக்கோயில் சுமார் 500 வருடங்களுக்கு ற்பட்டது. இத்திருக் கோயிலில் பிரதோஷம், சிவராத்திரி, ஆடி வெள்ளி, ஆடி செவ்வாய், ஆடி அமாவாசை. போன்ற தினங்கள் விமரிசாயாகக் கொண்டாடப்படுகின்றன.

ஞானோபதேசம் பெற விரும்பிய பிரம்மன், எமலிங்கத்தை நிறுவி ஈசனை வழிபட்டு உபதேசம் பெற்ற இடமே திருப்பாடலவனம் எனப்படும் கொரநாட்டுக் கருப்பூர். கண்வர் போன்ற மகரிஷிகளும், குபேரன் மற்றும் இந்திரன் ஆகிய தேவர்களும் வழிபட்ட தலம்.

இறைவன் சுந்தரேஸ்வரர் என்ற திருப்பெயருடனும், இறைவி அன்னை அபிராமி என்னும் திருப்பெயருடனும் அருள்மாறி பொழிகின்றனர். கிழக்கு நோக்கிய ஐந்து நிலை கொண்ட அழகிய ராஜகோபுரம். அன்னை அபிராமி தெற்கு நோக்கிய சன்னதியில், வலது மேற்கரத்தில் அட்சமாலையும், இடது மேற்கரத்தில் தாமரை மலரும் ஏந்தி அபய வரத முத்திரையுடன் கருணை பொங்கக் காட்சி தருகிறாள்.

சோழர்களால் கட்டப்பட்ட இக் கோயிலில் காளியின் இடுப்புக்கு மேலுள்ள உருவத்தை மட்டுமே தரிசிக்க முடியும். விநாயகர், தட்சிணாமூர்த்தி, சப்த மாதர்கள், முருகப்பெருமான், லட்சுமி, துர்கை, பைரவர் மற்றும் நவக்கிரக சன்னதிகள் அமைந்துள்ளது. இங்குள்ள பெட்டிக் காளி (எப்போதும் பெட்டகத்தினுள்ளேயே இருப்பதால்) மிகவும் சக்தி வாய்ந்தவள். எட்டுக் கரங்களுடன் சிறிய கோரைப் பற்களும், அனல் தெறிக்கும் விழிகளுடனும் அன்னை காட்சி தருகிறாள். எனினும், கருணையே வடிவானவள். வலக்கரங்களில் சூலம், உடுக்கை, கிளி மற்றும் அருவாளுடனும், இடக்கரங்களில் பாசம், மணி, கபாலம் மற்றும் கேடயம் தாங்கி நிற்கிறாள். நெற்றியில் புனுகு சவ்வாதும் விபூதியும் சாற்றப்படுகிறது. வெள்ளிக்கிழமை ராகு காலங்களில் பெட்டிக்காளிக்குப் பள்ளய நைவேத்தியம் செய்த பின்னரே விசேஷ பூஜைகள் நடைபெறுகின்றன. அம்மனுக்குச் சேர்ப்பிக்கப்படும் பூ, பழம், குங்குமம், எலுமிச்சம்பழம் ஆகியன பிறருக்கு வழங்கப்படுவதில்லை. சர்க்கரைப் பொங்கல், சுத்தான்னம் போன்றவை பள்ளயமாக நிவேதிக்கப்பட்ட பின்னரே பெட்டி திறக்கப்படுகிறது. காளி காட்சி தருகிறாள்.

ஆண்டுக்கு ஒருமுறை உத்தராயண காலத்தில் மட்டும் அன்னை மாகாளி வீதியுலா வருகிறாள். பெட்டியில் இருந்தபடியே பல்லக்கில் ஏறி திருமஞ்சன வீதியில் புறப்பாடு. அன்று உக்கிர மாகாளியின் ஆவேசம் வெளிப்படும். வீதியுலா புறப்படும் பல்லக்கு ஆடிக்கொண்டே எங்கும் நிற்காமல் ஒரே ஓட்டமாகச் சென்று திரும்பவும் சன்னதியை வந்தடைந்த பின்னரே நிற்கும்.

இந்த காளி இவ்வூருக்கு வந்த விதமே அலாதியானது. ஒருசமயம் ஊர்மக்கள் அனைவரும் காவிரிக்கரையில் கூடியிருந்தபோது, வெள்ளப் பெருக்கில், ஒரு பெட்டி அசைந்து வந்ததைப் பார்த்து, அந்தப் பெட்டியை எடுத்து வந்து பார்க்கும் போது, காளியின் மார்பளவு மரச்சிலை அதில் இ ருந்தது. அப்போது ஒரு சிறுமி ஆவேசம் வந்தது போல் அந்தக் காளியைப் பற்றிக் கூறினாள். அது விக்கிரமாதித்த மன்னன் ஆராதித்து வந்த மாகாளி என்றும், அந்த மன்னனே இந்தச் சிலையை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதியை ஆற்றில் விட, பல ஆண்டுகள் கழிந்து கடைசியில் வந்ததென்றும் அந்தக் காளியை எப்படி பூஜிக்க வேண்டும்

... Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்ற விவரங்களையும் தெரிவித்தாள். அதன்படி அங்குள்ள மக்கள் ஊரின் தெற்குப் பகுதியில் ஓர் ஓலைக்கொட்டகை அமைத்து, அந்தக் காளியை மரப்பெட்டியுடன் எழுந்தருளச் செய்து வழிபடத் தொடங்கினார்கள். வெள்ளிதோறும் அன்னப் பிரசாதங்களைப் பள்ளயம் போட்ட பின், பெட்டியைத் திறந்து அம்பிகையை ஆராதிக்கத் தொடங்கினர். ஒரு நாள் நள்ளிரவில், திடீரென ஓலைக்கொட்டகை தீப்பிடித்து எரிய, காளி இருந்த பெட்டி அதிலிருந்து தப்பித்தது. பின்னர் அப்போது பட்டத்திலிருந்த காஞ்சி காமகோடி பீடாதிபதியை அணுகி கேட்க, அவர் அந்த அம்பிகை சிலையை சிவன் கோயிலில்தான் வைத்து வழிபட வேண்டும். உங்கள் ஊரிலுள்ள சுந்தரேசுவரர் கோயிலில் மாகாளிக்குத் தனி இடம் உள்ளது. போய்ப் பாருங்கள். அங்கேயே பெட்டியோடு அவளை பிரதிஷ்டை செய்து, சுந்தர மாகாளி என்ற பெயரில் ஆராதியுங்கள். சுபிட்சம் உண்டாகும். பழைய பள்ளய பூஜை முறையை மாற்ற வேண்டாம் என ஆசியருளினார். அன்று திருப்பாடலவனம் என அழைக்கப்பட்ட ஊர்தான், காளியின் ஊர் காளியூராகி, கருப்பூராகி, இன்று கொரநாட்டு கருப்பூர் என்று இன்று அழைக்கப்படுகிறது.

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்।

அருள்மிகு கடைடிநாதர் திருக்கோயில், கீழையூர், நாகை மாவட்டம்

மயிலாடுதுறையில் இருந்து 12 கி.மீ., தூரத்தில் இவ்வூர் உள்ளது. பஸ் ஸ்டாப்பில் இருந்து 1 கி.மீ., தூரம் சென்றால் ஸ்ரீ அபிராமி அம்பிகை சமேத ஸ்ரீ கடைடிநாதர் திருக்கோயிலை அடையலாம்.

ஆணவம் கொண்டதால் சிவனிடம் சாபம் பெற்ற பிரம்மா, பூலோகத்தில் பல இடங்களில் சிவபூஜை செய்து வழிபட்டார். அவர் இத்தலத்திலும் சிவனை மனதில் நினைத்து வழிபட்டார். சிவன், அவருக்கு ஒரு கிளுவை மரத்தின் அடியில் காட்சி தந்தார். பிரம்மா தனக்கு மன்னிப்பு கேட்டபோது, தகுந்த காலத்தில் விமோசனம் கிடைக்கப்பெறும் என்று ஆறுதல் கூறினார். பின் பிரம்மாவின் வேண்டுதல்படியே அவர் இத்தலத்தில் சுயம்புலிங்கமாக எழுந்தருளினார். பிற்காலத்தில் கண்ணுவ மகரிஷியும் இத்தலத்தில் சிவனை வழிபட்டு முக்தி பெற்றார்.

கருணாதீர்த்தத்தையும், கிளுவையை தல விருட்சமாகவும், உடைய இத்திருக்கோயில் சுமார் 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. திருஞான சம்பந்தரால் தேவாரப்பாடல் பெற்ற காவிரி வடகரைத்தலங்களில் உள்ள 18வது தலம். மகாசிவராத்திரி, திருக்கார்த்திகை, ஐப்பசியில் அன்னாபிஷேகம் போன்றவை விசேஷமாகக் கொண்டாடப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேற்கு பார்த்து அமைந்த சிவதலம் இது. இத்தலத்தில் காவிரி நதி இத்தலத்தில் மேற்கு நோக்கி ஓடுவது விசேஷம். உலகம் அழியும் இறுதிக்காலத்திலும் காப்பாற்றுபவராக இங்கு சிவபெருமான் அருளுகிறாராம். எனவே இவருக்கு 'கடைடிநாதர்' என்று பெயர் வந்ததாக சொல்கின்றனர். இவர் பதினாறு பட்டைகளுடன் அமைந்து 'சோடஷ லிங்க' அமைப்பில் சிவன் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார். இவரிடம் வேண்டிக்கொண்டால் பதினாறு பேறுகளையும் பெறலாம் என்பர். அம்பிகை அபிராமி வரப்பிரசாதியாக விளங்குகிறாள். தெற்கு நோக்கியிருக்கும் இவளது சன்னதி எதிரேயும் ஒரு வாசல் இருக்கிறது. திருமணத்தடை உள்ளவர்கள் இவளுக்கு வித்தியாசமான பிரார்த்தனை செய்கின்றனர். திருமணமாகாத பெண்கள் இவளுக்கு தாலி கட்டி வேண்டிக் கொள்கின்றனர். வரன் அமைந்த பிறகு மீண்டும் அம்பாள் கழுத்திலிருக்கும் தாலியை தங்களது கழுத்தில் கட்டி அம்பாளை வணங்கிவிட்டு, மீண்டும் அதனை அம்பாளுக்கே கட்டிவிடுகின்றனர். இவ்வாறு செய்வதால் பெண்கள் சுமங்கலிகளாக இருப்பர் என்பது நம்பிக்கை.

இத்திருக்கோயிலின் ஆதி மூர்த்தியான கிளுவைநாதர், பிரகாரத்தில் உள்ள கிளுவை மரத்தின் கீழ் இருக்கிறார். இவருக்கு எதிரே நந்தியும் இருக்கிறது. சுப்பிரமணியர், வள்ளி, தெய்வானையுடன் தனிச்சன்னதியில் இருக்கிறார். இத்தலவிநாயகர் கடைடிவிநாயகர் என்ற திருநாமத்துடன் அருள்பாலிக்கிறார். திருமணத்தடை விலகவும், செய்த பாவங்கள் தீரவும் மன்னிப்பு வேண்டி இத்திருத்தலத்திற்கு வருகிறார்கள்.

பிரகாரத்தில் உள்ள நவக்கிரகம் வலது புறம் திரும்பிய ஆவுடையார் மீது அமைந்திருக்கின்றன. எண்கோண வடிவில் உள்ள ஆவுடையாரில் கிரகங்கள் ஒவ்வொன்றும் நேர்வரிசையில் இல்லாமல், முன்னும் பின்னுமாகவும் அமைந்திருப்பது சிறப்பான அமைப்பு.

இங்கு கோஷ்டத்தில் உள்ள தெட்சிணாமூர்த்தி இடது காதில் வளையம் அணிந்தும், வலது காதில் வளையம் இல்லாமலும் காட்சி தருகிறார். இவரைப்போலவே பைரவரும் வலது காதில் வளையம் இல்லாமல் இருப்பது வித்தியாசமான அமைப்பாகும். இங்கு அம்பாள் வரப்பிரசாதியாக இருக்கிறாள்.

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

இலந்துறை ஸ்ரீ அபிராம சுந்தரி அம்பிகை சமேத சுந்தரேசுவரஸ்வாமி திருக்கோயில், திருவிடைமருதூர் வட்டம், தஞ்சை மாவட்டம்.

திருநீலக்குடிக்குத் தெற்கில் 2 கிமீ தொலைவில் உள்ளது இத்திருக்கோயில். 2015ல் கும்பாபிஷேகம் கண்ட இத்திருக்கோயிலின் தலவிருட்சமாக இலந்தை உள்ளது. திருநீலக்குடி சப்தஸ்தானத்தில் திருநீலக்குடி, இலந்துறை, ஏனாதிமங்கலம், திருநாகேஸ்வரம், திருபுவனம், திருவிடைமருதூர் மற்றும் மருத்துவக்குடி ஆகிய ஏழூர்த் தலங்கள் அடங்கும்.

காசியப்பர், அகத்தியர், பிருகு, கபிலர், கந்தர், வியாசர், சூரியன், நளன் போன்றவர்கள் இத்தலத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சுந்தரேஸ்வரரையும் ஸ்ரீ அபிராம சுந்தரி அம்பிகையையும் வணங்கி அருள் பெற்றுள்ளனர். கார்த்திகை முதல் செவ்வாயில் இங்கு வியாசரால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்டாக்கப்பட்ட வியாச குளத்தில் நீராடுவோர் மைந்தனைப் பெற்றும், இரண்டாம் செவ்வாயில் நீராடுவோர் செல்வத்தையும், மூன்றாம் செவ்வாயில் நீராடுவோர் ஞானத்தையும், நான்காம் செவ்வாயில் நீராடுவோர் நினைத்தவாறு அடைதலும், ஐந்தாவது செவ்வாய் உண்டு எனில் அன்று நீராடினால் போக மோட்சங்களையும் அளிக்க வல்லதாகும் என்பதும் ஐதீகம். செவ்வாய் தோஷ நிவாரண தலமாக இத்தலம் போற்றப்படுகிறது. இவ்வூரில் துசூரியர், இளஞ்சூரியர் என்ற இரட்டையர்கள் வாழ்ந்து வந்தனர். இவ்விருவருள் ஒருவர் முடவர் என்றும் மற்றவர் குருடர் என்றும் கூறப்படுகிறது. முடவரைக் குருடர் சுமந்து செல்வார். முடவர் வழி காட்டுவார். இவர்களால் பாடப்பெற்ற நூல் 'தில்லைக் கலம்பகம்'. ஒரு பாட்டின் முதல் இரு அடியை ஒருவரும், பின் இரு அடியை மற்றவரும் பாடுவர். திருவாமாத்தூர்க் கலம்பகம் இவர்களால் இயற்றப்பட்டது. காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் மீது 'ஏகாம்பரநாதர் உலா'என்ற நூலை இவர்கள் பாடினர். இவர்களின் பிறிதொரு நூல் கச்சிக்கலம்பகம் என்பது. இவர்கள் பாடியனவாகச் சில தனிப்பாடல்களும் உள்ளன. பல்வேறு சிறப்பு பெற்ற இந்த கோவிலில் ஆண்டுதோறும் கார்த்திகை கடைசி செவ்வாய்க்கிழமை அன்று தீர்த்தவாரி விழா சிறப்பாக நடைபெறுவது வழக்கம்.

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

அபிராமபுரம், ஸ்ரீப்ரம்மபுரீஸ்வரஸ்வாமி ஆலயம்

திருப்பனந்தாள்-பந்தநல்லூர் பேருந்து தடத்தில் பந்தநல்லூருக்கு கிழக்கே 3 கி.மீ. தொலைவில் உள்ளது அபிராமபுரம் என்ற இந்த தலம்.

இங்குள்ள ஸ்ரீப்ரம்மபுரீஸ்வரஸ்வாமி ஆலயம், இறைவன் பெயராலேயே வழங்கப்படுகிறது. இறைவி, அபிராமி அம்பிகை. அபிராமபுரம் ஒரு சிறிய கிராமம். ஆலயம் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. முகப்பில் மொட்டை கோபுரம். அதைக் கடந்ததும் விசாலமான பிராகாரம். அடுத்துள்ள மகா மண்டப நுழைவாயிலில் இடதுபுறம் விநாயகரும், வலதுபுறம் முருகனும் அருள்பாலிக்கின்றனர். மகா மண்டபத்தில் நந்தியும், பலிபீடம் இருக்க வலதுபுறம் அன்னை அபிராமியின் சந்நதி உள்ளது.

அன்னைக்கு நான்கு கரங்கள். மேல் இரு கரங்களில் பத்மம், அட்ச மாலையும் காட்சி தர கீழே உள்ள ஒரு கரம் அபய முத்திரையை பிரதிபலிக்க, இன்னொரு கரம் ஊரு ஹஸ்த நிலையில் அமைந்திருக்க, அன்னை புன்னகை தவழ அருட்பாலிக்கிறாள். எதிரே உள்ள அர்த்த மண்டபத்தை அடுத்து உள்ள கருவறையில் இறைவன் ப்ரம்மபுரீஸ்வரர் லிங்கத் திருமேனியில் கீழ்திசை நோக்கிப் பேரருள் புரிகிறார். இறைவனின் தேவக் கோட்டத்தின் மேல் திசையில் லிங்கோத்பவர், வடக்கில் பிரம்மா, துர்க்கை திருமேனிகள் தரிசனம் நல்குகின்றன.

பிராகாரத்தில் மேற்கில் வினைதீர்த்த விநாயகர், நால்வர், சரஸ்வதி, லட்சுமி, வடக்கில் சண்டீஸ்வரர் என தனித்தனி சந்நதிகளில் கொலு வீற்றிருக்கின்றனர். வடகிழக்கில் நவகிரக நாயகர்கள் சந்நதியும், கிழக்கில் சூரியன், பைரவர் சந்நதிகளும் உள்ளன. சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமையான ஆலயம் இது. ஆலயத்தின் தல விருட்சம் வில்வம். இந்த ஊரில் ஒரு கர்ப்பிணி பெண்ணுக்குத் திடீரென வயிற்றுவலி ஏற்பட்டு, மருத்துவரிடம் சென்றபோது, அவர் குழந்தையின் நிலை சிக்கலாக உள்ளதாகவும், அறுவை சிகிச்சை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
செய்தாலும் குழந்தை பிழைப்பதற்கு வழி இல்லை என்று கூற, அவர்கள் ஓடோடி வந்தது இந்த ஆலயத்திற்குத் தான். அப்பெண் அன்னை அபிராமியிடம் மனமுருக முறையிட்டு கண்ணீர் விட்டு அழுதாள். அன்று இரவு அவள் கனவில் வந்த அன்னை அபிராமி, ஒரு சிறுமியை அவள் வீட்டு வாசலில் விட்டுச் செல்வதைப் போல் கனவு கண்டாள். முன்னர் டாக்டர் சொன்னதற்கு மாறாக அவளுக்கு சுகப்பிரசவமாகி, ஒரு அழகானப் பெண் குழந்தை பிறந்தது. அன்னை அபிராமியால் தன் கனவில் அழைத்து வரப்பட்ட சிறுமியே தனக்கு குழந்தையாகப் பிறந்துள்ளாள் என்று நம்பியவள், அக்குழந்தைக்கு அபிராமி என்றே பெயர் சூட்டி மகிழ்ந்தாள். அன்னை அபிராமிக்கு மனமகிழ்வுடன் சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் செய்தாள்.

இச்சம்பவத்தை இன்றும் நினைவு கூறும் அந்த ஊர் பக்தர்கள், இன்றும் அன்னை அபிராமி கர்ப்பிணி பெண்களின் காவல் தாயாக இருந்து அவர்களை அரவணைத்து காப்பாற்றுகிறாள் என நம்பிக்கையோடிருக்கின்றனர்.

நாயகன்பேட்டை அருள்மிகு அருள்மிகு அபிராமி உடனுறை அருள்திரு அமிர்தகடேஸ்வரர் திருக்கோயில்

நாயகன்பேட்டையில் முன்பு ஒரு காலத்தில் குடிநீருக்காக குளம் தோண்ட, நீர் பெருக்கெடுத்தது. அதன் நடுவே சிவன் சுயம்பு மூர்த்தியாக எழுந்தருளினார். நீரில் அமிர்தம் போல் வெளிப்பட்டதால், அமிர்தகடேஸ்வரர் என பெயரிட்டு வழிபட தொடங்கினர் மக்கள். மகாவிஷ்ணுவின் தியானத்தில் உண்டான சக்தியான அபிராமி அன்னை இத்திருத்தலத்தின் நாயகியாகத் திகழ்கிறாள்.

மார்க்கண்டேயரை, எமனிடம் இருந்து காக்கும் பொருட்டு, எமனையே வதம் செய்ததால், சிவபெருமானுக்கு, காலசஹார மூர்த்தி என பெயர் ஏற்பட்டது. அத்தகைய சிறப்பு அபிராமி அம்பிகையும் அமிர்தகடேஸ்வரரும் எழுந்தருளியிருக்கும் இத்தலத்திற்கும் உண்டு. அதனால், 59 வயது முடிந்து 60 வயது உக்ரரத சாந்திக்கும், 60 வயது முடிந்து 61 வயது சஷ்டியப்த சாந்திக்கும், 69 வயது முடிந்து 70 வயது பீமரத சாந்திக்கும், 80 வயது ஆரம்பம் 85 வயது முடிய சதாபிஷேகம் மற்றும் ஆயுஷ்ய ஹோமங்களும் இங்கும் செய்யப்படுகின்றன. திருக்கடையூர் செல்ல முடியாதவர்கள் இத்திருக்கோயிலில் செய்து கொள்கின்றனர். கோயில் நிர்வாகமே அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தருகிறது. நாயகன்பேட்டை, வேகவதி ஆற்றின் வட கரையில் அமைந்து இருப்பதால், இவ்வூர், வட திருக்கடையூர் என்றும் கூறுவர்.

சென்னையில் இருந்து தாம்பரம் வழியாக காஞ்சிபுரம் செல்லும்போது வாலாஜாபாத்துக்கு அடுத்து ஏகனாம்பேட்டையில் இடதுபுறம் செல்ல வேண்டும். செங்கல்பட்டில் இருந்து காஞ்சிபுரம் செல்லும்போது வாலாஜாபாத்துக்கு அடுத்து ஏகனாம்பேட்டையில் இடதுபுறம் செல்ல வேண்டும்.

திப்பிராஜபுரம் அபிராமி சமேத சோளேஸ்வரர் திருக்கோயில்

கோவில் நகரமான குடந்தைக்குத் தெற்கே ஏழு கி.மீ தொலைவில் காவிரியின் கிளை நதியான திருமலைராஜன் ஆற்றின் கரையில் உள்ளது திப்பிராஜபுரம். தஞ்சையை ஆண்ட நாயக்கர்களின் ஆட்சிக்காலத்தில் மந்திரியாக இருந்த திப்பையா, இங்கிருக்கும் அந்தணர்களின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூதாதையர்களுக்கு தானமாகக் கொடுத்ததால் இக்கிராமம் திப்பையாராஜபுரம் என அழைக்கப்பட்டது என்று காஞ்சி ஸ்ரீபரமாசார்யாள் கூறி உள்ளார்கள். திப்பையாராஜபுரம் என்ற பெயர் காலப்போக்கில் மருவி திப்பிராஜபுரம் ஆனது. சதுர வடிவில் நான்கு தெருக்கள் அழகாக உள்ளன. அருள்மிகு அபிராமி சமேத அருள்தரு சோளேஸ்வரரின் திருக்கோவில் அக்ரஹாரத்தின் வடகிழக்கு மூலையிலும் பெருமாள் கோவில் தென்மேற்கு மூலையிலும் அமைந்து அக்ரஹாரத்தின் லட்சணத்தோடு உள்ளது. ஸ்ரீஅபிராமி அம்பிகை சமேத விக்ரம சோளேஸ்வரர் கோவில் விக்ரம சோழனால் ப்ரம்மஹத்தி தோஷத்திலிருந்து விடுபடுவதற்காகக் கட்டப்பட்டது. பூமி, நீளா சமேத வரதராஜ பெருமாள் கோவிலின் தீபாராதனையை தெற்கு வீதி தொடங்கும் இடத்திலிருந்து எங்கு நின்றாலும் பார்க்கலாம். அக்ரஹாரங்களின் சிறப்பே அதுதான். வருடாவருடம் சங்காபிஷேகம், தேவசேனா கல்யாணம், ராதாகல்யாணம், நவராத்திரி, கந்த சஷ்டி போன்ற உத்ஸவங்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

மதுராந்தகம், கடப்பேரி மாரியம்மன் திருக்கோயில்

மதுராந்தகம், கடப்பேரி பகுதியில் உள்ள மாரியம்மன் கோவில் முக்கிய கோயிலாகத் திகழ்கிறது. இத்திருக்கோயில் வளாகத்தில், அபிராமி அந்தாதி மணிமண்டபம் அமைந்துள்ளது. இம் மணி மண்டபத்தில் அபிராமி அம்பிகை கொலுவீற்றிருக்கிறாள். இந்த மணி மண்டபத்தில் ஒவ்வொரு ஆண்டும் தை அமாவாசை நாளன்று அம்பாளுக்கு அபிஷேகம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெறும். அச்சமயம் அபிராமி அம்பாளுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு அபிராமி அந்தாதி முற்றோதல் நடக்கும். இதில் அந்தாதியின் 79வது பாடலில் குறிப்பிட்டுள்ளபடி, பக்தர்களுக்கு நிலவு காட்டும் நிகழ்ச்சி வெகு விமர்சையாக நடக்கும். பக்தர்கள் அம்மனுக்கு புஷ்பாஞ்சலி செய்து வழிபடுவர்.

சென்னை மத்திய கைலாக்ஷ் திருக்கோயில்

மத்திய கைலாசம் (மத்திய கைலாஷ்) எனும் கோவிலானது தென்சென்னையில் சர்தார் வல்லபாய் படேல் சாலை, அடையாறு சாலை, இராஜீவ் காந்தி சாலை ஆகிய முச்சாலைகள் கூடும் இடத்தில் அமைந்துள்ளது. இது நடுவண் தோல் ஆய்வு நிறுவனம் எதிரிலும் சென்னை இந்தியத் தொழில்நுட்பக் கழகத்திற்கு அருகிலும் அமைந்துள்ளது.

இக்கோவிலின் மூலவர் வெங்கட ஆனந்த பிள்ளையார் (விநாயகர்). கருவறையைச் சுற்றி சிவன், திருமால், சூரியன் ஆகியோரும் காட்சி தருகின்றனர். இத்திருக்கோயிலில் அன்னை அபிராமி தனிச் சந்நிதி கொண்டு அருளாட்சி செய்கிறாள். மேலும் அனுமன், சுவர்ணபைரவர், நவகிரகங்கள் ஆகியோரும் தரிசனம் தருகின்றனர்.

பிள்ளையார் சதுர்த்தி நாளில் சூரியனின் கதிர்கள் இப்பிள்ளையாரின் மேல் விழுவது இக்கோவிலின் சிறப்பு. பிள்ளையார் 'ஓம்' எனும் மந்திரத்திற்குரியவர் என்பதாலும் இசையின் ஏழு சுரங்களையும் குறிக்கும் வகையில் இங்கு எட்டு மணிகள் நிறுவப்பட்டுள்ளன. (ச, ரி, க, ம, ப, த, நி, ச என்று முடிவதால் எட்டு என்று கொள்ளப்பட்டது.) இக்கோவிலிலுள்ள அத்யந்த பிரபு எனும் அனுமனும் பிள்ளையாரும் சேர்ந்த கடவுள் உருவம் புகழ் பெற்றது. இத்திருக்கோயில் புணருத்தாரணம் செய்யப்பட்டு சென்ற 05-07-2017 அன்று விமர்சையாக கும்பாபிஷேகம் நடைபெற்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

22. திருக்கடவூர் தலபுராணத்தை ஒட்டிய திருத்தலங்கள்

அருள்மிகு அமிர்தநாராயணப் பெருமாள் திருக்கோயில், திருக்கடவூர்

தேவர்களுக்கு அமிர்தம் கிடைக்க வழி செய்த அருள்மிகு அமிர்தநாராயணப் பெருமாளின் திருக்கோயில் இது. தல விருட்சம்- மனோரஞ்சிதம். 500 வருடங்களுக்கு முற்பட்ட இத்திருக்கோயில் மிகவும் பாழடைந்த நிலையில் இருந்தது. திரு கேசவன் என்ற பக்தர் தன் நண்பர்களுடன் இணைந்து இத்திருக்கோயிலைப் புணருத்தாரணம் செய்வதற்காக முயற்சி எடுத்துக் கொண்டார். இன்று அறநிலையத்துறையே அதற்கான வேலைகளைச் செய்து வருகிறது. பெருமாளின் சந்நிதியும், மதில் சுவர் வேலைகளும் முடிந்துள்ளது. அம்பிகையின் திருச்சந்நிதி வேலைகள் நடந்து வருகின்றன.

தேவர்களின் தலைவனான இந்திரன், அதிகார மமதையின் காரணமாக ஒரு முறை துர்வாச முனிவர் தந்த மகாலக்ஷ்மியின் மாலையை அவமதிக்க அதன் காரணமாக துர்வாசர் முனிவர் சாபமிட, அதன் காரணமாக மஹாலக்ஷ்மி இந்திர லோகத்தை விட்டு நீங்கி, பாற்கடலில் மறைந்துவிட, இந்திர லோகம் சோபை இழந்ததும், பின்னர் மஹாவிஷ்ணுவின் ஆலோசனையின் பேரில் மீண்டும் மகாலக்ஷ்மியை அழைப்பதற்காக பாற்கடலைக் கடைந்ததும், மகாலக்ஷ்மி வெளிப்பட்டதும், அமிர்தம் கிடைத்ததும் அதை தேவர்கள் உண்டு இறவா நிலை எய்தியதும் பற்றி முன்னரே கண்டோமல்லவா? அச்சிறப்புக்குரிய பெருமாள் தான் இங்கு சேவை சாதிக்கிறார்.

இவ்வரலாறு நடந்த இடம்தான் திருக்கடவூர் என்னும் திருக்கடையூர். மயிலாடுதுறை-தரங்கம்பாடி பேருந்துத் தடத்தில் மயிலாடுதுறையில் இருந்து சுமார் 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கடத்தில் இருந்த அமிர்தம் சிவலிங்கம் ஆனதால், ஊர் திருக்கடவூர் ஆனது. இறைவன் அமிர்த கடேஸ்வரர் ஆனார். ஊரில் பிரதானமாக இருக்கிறது சிவ ஸ்தலம். இதே சிவ ஸ்தலத்தில் இருந்து சுமார் ஐந்தே நிமிட நடை தூரத்தில் தென்புறமாக இருக்கிறது, அமிர்தநாராயண பெருமாள் ஆலயம். இந்த ஆலயத்துக்கு நேர் எதிரே சுமார் 5 கி.மீ. தொலைவில், அமிர்தம் கடைந்த திருப்பாற்கடல் (வங்கக் கடல்) க்ஷேத்திரம் உள்ளது.

ஆலயத்துக்கு அருகே வைஷ்ணவ அக்ரஹாரம் ஒரு காலத்தில் இருந்ததாகவும் எல்லா உற்சவங்களும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டதாகவும் பக்தர்கள் தெரிவிக்கின்றனர். சுமார் ஒரு ஏக்கர் பரப்பளவில் அமிர்தநாராயண பெருமாள் திருக்கோயில் அமைந்துள்ளது. மயிலாடுதுறை- தரங்கம்பாடி ரயில்வே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லைவில் அமைந்துள்ள திருக்கடையூர் ரயில்வே ஸ்டேஷனுக்காக சுமார் 16 ஏக்கர் இடம், அமிர்தநாராயண பெருமாள் ஆலயத்தால் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. விஸ்தாரமான பிராகாரங்கள், கோபுரங்கள், மண்டபங்கள், மடப் பள்ளி ஆகியவைகளைக் கொண்ட ஒரு பெருங்கோயிலாக இத்திருக்கோயில் விளங்கியிருக்கிறது.

பெருமாள் சுமார் ஆறடி உயரத்தில் அழகு ததும்பும் அற்புத வடிவத்துடன் அமர்ந்த நிலையில் சங்கு சக்கரதாரியாய் வரும் பக்தர்களுக்கு ஆசி வழங்கும் கோலத்தில் காணப்படுகிறார். அருகே ஸ்ரீதேவி மற்றும் பூதேவித் தாயார்கள். இந்த மூவரின் முகத்திலும் காணப்படும் புன்றுவல், கொள்ளை அழகு. அணிகலன்களும் ஆபரணங்களும் துலங்கும் வகையில் இந்த விக்கிரகங்கள் அற்புதமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீஆஞ்சநேயர், சேனை தலியார், ராமானுஜர், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகியோரின் சிலா விக்கிரகங்களும் இங்குண்டு. பெருமாள் சந்நிதிக்கு எதிரே கருடாழ்வார். ராகு, கேது ஆகியோர் இங்கு அவதரித்ததால் அந்த தோஷம் உள்ளவர்கள் இங்கு வந்து பரிகாரம் செய்து கொண்டு, அமிர்த நாராயண பெருமாளை வணங்குவது விசேஷம் என்கிறார்கள்.

பெருமாளுக்கு வலப் பக்கம் அருள்மிகு அமிர்தவல்லித் தாயார் சந்நிதி. இப்போது இச் சந்நிதி இன்னும் கட்டி முடிக்கப்படவில்லை. பின்னிரு கரங்களில் தாமரை மலர்கள். முன்னிரு கரங்கள் அபய- வரத முத்திரைகள் தாங்கிய வண்ணம் தாயார் காட்சி தருகிறார். தாயாரின் புன்னகையும், புடவை மடிப்புகளும் பக்தர்களை பரவசம் கொள்ள வைக்கும். ஆலயத்துக்கான பஞ்ச லோக விக்கிரகங்கள் பாதுகாப்பு கருதி, திருவிடைக்கழி முருகன் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. மார்க்கண்டேயனின் ஆயுள் (பதினாறு வயதுடன்) முடிவடைந்த காரணத்தால், அவனது உயிரைப் பறிக்க பாசக் கயிறுடன் எமதர்மன் விரைந்து வந்தான். இதை அறிந்த மார்க்கண்டேயன் அமிர்தகடேஸ்வரர் ஆலயத்துக்குள் ஓடிச் சென்று லிங்கத் திருமேனியை ஆரத் தழுவிக் கொண்டான். தன் பணியில் முனைப்பாக இருந்த எமன், மார்க்கண்டேயனை நோக்கி பாசக் கயிறை வீச... அது சிவலிங்கத்தின் மேலும் விழுந்தது. ஆத்திரமடைந்த ஈசன் தன் காலால் எமனை எட்டி உதைத்தார்.

அப்போது 'காலனை என் காலால் உதைத்ததற்கு நீயே சாட்சி' என்று அமிர்தநாராயண பெருமாளை நோக்கித் தன் கையை நீட்டினார் என்று ஸ்தல புராணம் சொல்கிறது. இதற்கு சான்றாக, அமிர்தகடேஸ்வரர் ஆலயத்தில் தனிச் சந்நிதி கொண்டுள்ள கால சம்ஹாரமூர்த்தி, அமிர்தநாராயண பெருமாளை நோக்கித் தன் கையை நீட்டிக் கொண்டிருக்கும் கோலத்தை இன்றும் தரிசிக்கலாம்.

திருக்கடையூரில் அமிர்தம் பொழிந்து, தேவர்களை எல்லாம் வாழ்வாங்கு வாழ வைத்த அந்த அமிர்த நாராயணர், கலியுகத்தில் நம்மையும் வாழ வைக்கவே இங்கு குடி கொண்டுள்ளார். அவரது திருப்பணியில் நாம் பங்குபெற்று அவரருளைப் பெறுவோமா?

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்கடவூர் மயானம் - திருக்கடவூர் திருமெஞ்ஞானம்

நாகை மாவட்டம் தரங்கம்பாடி வட்டத்தில் மயிலாடுதுறை - தரங்கம்பாடி வழித்தடத்தில் திருக்கடவூர் பின்புறம் கிழக்கே 2 கி.மீ. தொலைவில் திருக்கடவூர் திருமெஞ்ஞானம் திருத்தலம் அமைந்திருக்கின்றது.

திருக்கடவூர் மயானம் என்பது கங்கை, தீர்த்தமாகத் தோன்றிய சிவத்தலம் என்ற பெருமை பெற்றது. இது திருக்கடவூர் திருமெஞ்ஞானம் என்ற பெயர் பெற்றது. திருக்கடவூருக்கு கிழக்கே ஒரு கி.மீ. தொலைவில் உள்ளது இத்திருத்தலம். திருக்கடவூர் வீரட்டானத்திற்கு மிகவும் தொடர்புடைய, தேவாரப் பாடல் பெற்ற திருத்தலம். எமவாதனையைக் கடத்தற்குரிய தலம் ஆனதால் கடவூர் மயானம். காசி மயானம், கச்சி மயானம், காழி மயானம், நாலூர் மயானம், கடவூர் மயானம் என்று சைவ சமயத்தில் ஐந்து விதமான மயானங்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. காசி மயானம் காஞ்சிபுரத்திலும், காழி மயானம் சீர்காழியிலும், கச்சி மயானம் திருவீழிமிழலையிலும், நாலூர் மயானம் குடவாசல் அருகிலும், இவற்றுள் ஐந்தாவதாக விளங்கும் கடவூர் மயானம் திருக்கடவூரிலும் அமைந்துள்ளன. இங்கே மயானம் என்ற சொல் திருக்கோயிலையே குறிக்கிறது. மயானம் என்பது சிவன் குடியிருக்கும் இடமாகவே சைவ சமயத்தில் கருதப்படுகிறது. இந்த ஐந்து தலங்களும் மயானத் தலங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

சிவபெருமான் ஒரு கல்பத்தில் பிரம்மதேவரை எரித்து நீராக்கிவிட்டார். படைப்பு நிகழ்ச்சி அற்றுவிட்டதால் தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர். அவர் மீண்டும் படைப்புத் தொழிலை அருளினார். பிரம்மனை அழித்து நீராக்கியதனால் கடவூர் மயானம் என்றும், மீண்டும் உயிர்பித்து அவருக்கு ஞானத்தை அருளிப் படைப்புத் தொழிலை வழங்கியதனால் கடவூர் திருமெஞ்ஞானம் எனவும் இத்திருத்தலம் வழங்கப்படுகின்றது. காவிரித் தென்கரைத் தலங்களுள் நாற்பத்தியெட்டாவது இத்திருத்தலம்.

சைவத் திருத்தலங்களில் பாடல் பெற்றத் தலங்கள் 274. அவ்வாறாக பாடல் பெற்ற ஸ்தலங்களுள் ஒன்று இந்த மயானக் கடவூர். அதிலும் மூவர் பாடல் பெற்ற ஸ்தலங்கள் 44. அவற்றுள் ஒன்றாக இருப்பது இத்தலத்தின் சிறப்பு. மேலும் இத்தலம் காவிரி தென்கரை திருத்தலம். பாடல் பெற்ற ஸ்தலங்களுள் 48வது திருத்தலம். திருமெய்ஞானம் என்றும், திருமயானம் என்றும் இக்கோயில் அழைக்கப்படுகிறது. பிரம்மன், மார்க்கண்டேயர் வழிபட்ட தலம். தில்லை சிவபிரான், சிவாலய முனிவருக்குக் கூறியபடி அகத்திய முனிவரால் தொகுத்து வழங்கப்பட்ட 25 திருத்தலங்களுள் ஒன்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறைவன் - பிரம்மபுரீஸ்வரர்

இறைவி - அமல குஜ நாயகி என்னும் மலர்க்குழல் மின்னம்மை. வாடா முலையாள்.

தீர்த்தம் - காசி தீர்த்தம்

ஸ்தல விருட்சம் - வில்வம், கொன்றை

ஆலயத்தை ஒட்டியுள்ள பெரிய திருக்குளம் பிரம்ம தீர்த்தம் என வழங்கப்படுகின்றது. இது மட்டுமின்றி ஆலயத்திலிருந்து சுமார் 1/2 கி.மீ. தொலைவில் கிணறு வடிவில் காசித் தீர்த்தம் அமைந்துள்ளது. மார்கண்டேயர் நாள்தோறும் சிவபூஜை செய்வதற்காக, காசியில் உள்ள கங்கா தீர்தத்தை திருக்கடவூர் மயானத்து பெரிய பெருமான் திருமயானத்தில் பங்குனி மாதம் அசுவிணி நட்ச்த்திரத்தன்றுவரவழைத்துக் கொடுத்து அருளினார். மார்க்கண்டேயருக்காக பங்குனி மாதம், அசுவினி நட்சத்திரத்தன்று கங்கையே தீர்த்தமாகத் தோன்றினார் என்கின்றது தலபுராணம். இதுவே கடவூர் தீர்த்தக்கிணறு என்றும், காசி தீர்த்தம் என்றும், அசுவினித் தீர்த்தம் என்றும் வழங்கப்படுகின்றது. இந்த ஐதீகத்தினை உறுதிப்படுத்தும் விதத்தில் பங்குனி மாதம் அசுவினி நட்சத்திரத்தன்று பஞ்சமூர்த்திகள் வழிபாடு நடைபெறுகின்றது. இந்த தீர்த்தத்தைக் கொண்டே திருக்கடவூர் ஸ்ரீஅபிராமி, ஸ்ரீ அமிர்தகடேஸ்வரருக்கு நாள்தோறும் அபிஷேகம் நடைபெறுகின்றது. மற்ற தீர்த்தங்களினால் அபிஷேகம் கிடையாது.பங்குனி மாத அசுவினி நட்சத்திரத்தன்று மட்டும் தான் பொதுமக்கள் நீராட அனுமதிக்கப்படுகின்றனர். இப்புனித நீராடும் விழா பெரும் திருவிழாவாக ஆண்டு தோறும் நடைபெற்று வருகிறது. மன்னன் பாகுலேயன், இத்தல காசி தீர்த்தத்தை பிற தெய்வங்களுக்கு அபிஷேகம் செய்தால் என்ன என்று எண்ணி , ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரருக்கு அபிஷேகம் செய்வித்தார். அதன் காரணமாக, சிவலிங்கத்தின் மீது ஒரு வெடிப்பு ஏற்பட்டது. அந்தத் தழும்பு இக்கோயில் சிவலிங்கத்தின் மேல் இப்போதும் காணப்படுகிறது. மார்க்கண்டேயருக்காக கங்கையே தீர்த்தமாக வந்தது என்பதை நினைக்கும் மாத்திரத்திலேயே மெய்சிலிர்க்கின்றதல்லவா?

மேற்கு பார்த்த சிவத்தலங்கள் 40ல் ஒன்றாக விளங்குகிறது. இத்திருத்தல முருகன் வரப்பிரசாதி. சுவாமி சன்னதியின் வடபுரத்தில் ஸ்ரீ முருக பெருமான் சிங்கார வேலன் என்ற திருநாமத்துடன் வீற்றிருக்கிறார். கையில் வில்லும், வேலும் வைத்துக் கொண்டு பாதகுறடு அணிந்து ஸ்ரீ வள்ளி, தெய்வானை சமேதராக காட்சி தருகிறார். மௌரியர்களின் ஆட்சி காலத்தில் அந்த வம்சத்தில் வந்த பாகுலேயன் என்ற மன்னன் ஒரு றை எதிரிகளுடன் மோதிய போது பலமிழந்து இத்தலத்து முருகப்பெருமானைச் சரணடைய, போர்களத்தில் முருகப் பெருமானே படைத் தலைமை ஏற்று போர் புரிந்து எதிரிகளை விரட்டியடித்து விட்டு, மன்னனிடம் 'நீ இழந்த நாடு, நகரம், மக்களை மீட்டுத் தந்தோம். மீட்கப்பட்ட நாட்டை இனி எந்த பயம் இல்லாமல் மீண்டும் அரசாள்வாயாக' என்று அசரீரியாகக் கூற, அதைக் கேட்ட மன்னன் மிக்க மகிழ்வுற்று, சிங்கார வேலனைப் போற்றி, அவருக்குக் காணிக்கையாக 53 ஏக்கர் பரப்புடைய நஞ்சை நிலத்தை வழங்கினார். இன்றும் அந்த நிலம் 'சிங்காரவேலி' என்ற பெயருடன் விளங்கிவருகிறது. சிங்கார வேலருக்கு கந்தர் சஷ்டி விழா வெகு சிறப்பாக நடைபெறுகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அரியும் சிவனும் ஒன்று என்ற தத்துவத்தை உணர்த்தும் விதமாக ஆலயத்தின் மேற்குப் பிரகாரத்தின் தென்புறத்தில் சங்கு சக்கரத்துடன் நின்ற திருக்கோலத்தில் கிழக்கு முகமாக ஸ்ரீ பிள்ளைபெருமாள் விளங்குகிறார். இக்கோயிலில் சிவனுக்கு முன்னால் மட்டுமல்லாது அம்மனுக்கு முன்பும் நந்தி பகவான் வீற்றிருக்கிறார். இத்திருக்கோயிலின் பரப்பளவு ஆறு ஏக்கர்கள். ராஜகோபுரம் கிடையாது. கொடிமரம் இல்லை. பலிபீடம் இருக்கின்றது. உள்கோபுரம் இரண்டு நிலைகளைக் கொண்டது. உள்ளே வலம் வரும் பொழுது நடராஜ சபையும், மறுபுறம் பைரவ சன்னிதிகளும் அமைந்துள்ளன. சுவாமியின் மகாமண்டபத்தில் உற்சவத் திருமேனிகள் அழகுற அணிவகுக்கின்றன.

சதுர வடிவ ஆவுடையாரில் வீற்றிருந்தபடி மேற்கு முகமாய் அருள் பாலிக்கும் இறைவன் மார்க்கண்டேயர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் முதலானவர்களுக்கு காட்சி தந்தருளி இருக்கிறார். இப் பெருமானை ஆசை தீரக் கொடுப்பார் என திருஞான சம்பந்தரும், பின்னை என்னார் பெருமான் என திருநாவுக்கரசரும், இல்லையெனாது அருள் செய்வார், பீடை தீர அடியார்க்கருளும் பெருமான் என்று சுந்தரரும் தமது தேவாரப் பதிகங்களில் போற்றியுள்ளனர்.

சுப்பிரமண்ய சுவாமிக்கு இடப்புறம் கிழக்கு முகமாக ஸ்ரீகஜலெட்சுமி வீற்றிருக்கின்றாள். இத்திருக்கோயில் பிரகாரத்தில் 63 நாயன்மார்களின் வடிவங்களும், சுவரிலே அந்தக்கால வண்ண ஓவியங்களும் இருக்கின்றன. சுதைச் சிற்பங்கள் யாவும் தீர்க்கமானவை. ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியின் இரு பக்கங்களிலும் முனிவர்கள் அவரிடம் உபதேசம் பெறுவதாகக் காட்சி அளிப்பது அதி அற்புதமானது. இந்த ஆலயத்தின் உள் பிராகாரத்தின் உட்புறத்தில் வடக்கு முகமாக ஸ்ரீதுர்கா பரமேஸ்வரி அருள்புரிகின்றார். சண்டிகேஸ்வரரும் அருள்கின்றார்.

ஆலயத்தின் மேற்கு பிராகாரத்தின் தென்பக்கம் சங்கு சக்கரத்துடன் அருள்மிகு பிள்ளை பெருமாள் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகின்றார்.

அம்பாள் மலர்க்குழல் மின்னம்மை, சுவாமி சந்நிதிக்கு எதிர்ப்புறம் தனிக்கோயிலில் கிழக்கு நோக்கி அருள்பாலிக்கின்றாள். அம்பாளின் கோயில் மூன்று நிலைகளை உடையது. அன்னையின் சந்நிதி மகாமண்டபம், அர்த்த மண்டபம், கருவறை கொண்டு விளங்குகின்றது. துவாரபாலகிகள் காவல்நிற்க அம்பிகை நின்ற திருக்கோலத்தில் அபய வரத முத்திரையுடன் நான்கு கரங்களுடன் அருள்புரிகின்றாள். இந்த அம்பிகையின் பெயரை அமலக் குஜநாயகி என்றும், வாடாமுலையாள் தன்னோடு மகிழ்ந்து என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் குறிப்பிடுகின்றார். அம்பிகை தன் திருக்கரங்களில் தாமரை மலரை கொண்டுள்ளதால் சரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி ஆகிய மூவரின் ஒருமித்த வடிவாக இந்த அம்பிகை விளங்குகிறாள்.

திருக்கோயில் மிகப்பழமையானது. வைகாசி விசாகம், நவராத்திரி, கந்தர் சஷ்டி, கார்த்திகை தீபம், தைப்பூசம், பங்குனி மாதத்தில் மார்க்கண்டேயர் எழுந்தருளி தீர்த்தம் கொடுத்தல் எல்லாம் வெகு விமரிசையாக நடைபெறும் திருவிழாக்கள்.

எமவாதனை நீக்கும் பிரம்மபுரீஸ்வரரை நாம் அனைவரும் வழிபடுவோம்! வளம் பெறுவோம்!!

Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருள்மிகு மனோக்ஞ நாதசுவாமி திருக்கோயில், திருநீலக்குடி - அஞ்சல் - (வழி) கும்பகோணம், திருவிடைமருதூர் வட்டம் - தஞ்சை மாவட்டம்

மக்கள் 'தென்னலக்குடி' என்று வழங்குகின்றனர். கும்பகோணம் காரைக்கால் சாலையில், கும்பகோணத்தை அடுத்துள்ளது. ஆடுதுறையிலிருந்தும் தென்னலகுடிக்கு வரலாம். சாலையோரத்தில் கோயில் உள்ளது. பாற்கடலில் அதுகடைந்த காலத்தில் தோன்றிய நஞ்சையுண்டு இறைவன் நீலகண்டராக எழுந்தருளி விளங்கும் தலமாதலின் திருநீலக்குடி என்றாயிற்று. மேலும் இத்தலம் தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் காவிரி தென்கரையில் அமைந்துள்ள 32ஆவது சிவத்தலமாகும்.

பஞ்சவில்வாரண்யக்ஷேத்திரம். வசிட்டர், காமதேனு, தேவமாதர் மார்க்கண்டேயர் வழிபட்ட சிறப்புடையது. திருவாவடுதுறை ஆதீனத்துக் திருக்கோயில். அப்பர் வாக்கில் 'நெல்லுநீள் வயல் நீலக்குடி' என்று வருவதற்கேற்ப சுற்றிலும் வயல்கள் உள்ளன.

மிருகண்டு தம்பதியருக்கு இறைவன் அருளால் பிறந்த மார்க்கண்டேயர் தனக்கு பதினாறு வயதுதான் என்பதை உணர்ந்து திருக்கடையூர் அமிர்த கடேஸ்வரரை வழிபட்டு வரும் வேளையில், அவருடைய ஆயுள் முடியும் போது காலன் வர, மார்கண்டேயர் சிவனை ஆலிங்கன் செய்து கொள்ள, காலனின் பாசக்கயிறு சிவன் மீதும் விழ, வெகுண்ட பெருமான் காலனை சம்ஹரித்து மார்கண்டேயனைக் காத்தார் அல்லவா? அவ்வாறு தான் மரணதேவனிடமிருந்து காக்கப்பட்டாலும் தொடர்ந்து சிவபெருமானை வழிபட்டு வந்தார் மார்கண்டேயர். அவ்வாறு அவர் பல திருத்தலங்களுக்குச் சென்றார். ஒவ்வொரு சிவஸ்தலமாக தரிசித்து வரும் போது திருநீலக்குடி தலத்திற்கும் வந்து ஈசனை வழிபட்டார். இங்கு வந்து நாளும் பொழுதும் சிவபெருமானை எண்ணி தியானிக்கிறார். முடிவில் இறைவன் அவர் முன் தோன்றி அவரின் பக்திக்கு மெச்சி, மார்க்கண்டேயருக்கு இத்தலத்தில் சிரஞ்சீவியாக இருக்க வரம் அளித்தார். அத்தகைய சிறப்பு பெற்ற தலம் திருநீலக்குடி.

இறைவன் - மனோக்ஞ நாதசுவாமி, வில்வாரண்யேசுவரர் பிரமநாயகர், நீலகண்டேஸ்வரர், தைலாப்பியங்கேசர், காமதேனுபுரீஸ்வரர் என்ற பெயர்களால் அழைக்கப்படுகிறார். அம்பிகைக்கு அநூபமஸ்தனி (திருமணக்கோலம்) பக்தாபீஷ்டதாயினி (தவக்கோலம்) ஆகிய திருப்பெயர்கள் உள்ளன. இத் திருக்கோயிலின் தலமரம் பஞ்சவில்வமாகும்.

தீர்த்தம் - 1) தேவி தீர்த்தம் (எதிரில் உள்ள குளம்) 2) பாரத்வாஜதீர்த்தம் (வெளியில் உள்ள குளம்.) 3) மார்க்கண்டேய தீர்த்தம் (உட்கிணறு) 4) பிரம தீர்த்தம் (கிணறு) 5) க்ஷீரகுண்டம் (காவிரிக் கரையோரம்)

அப்பர் சுவாமிகளால் பாடல் பெற்ற தலம் இது. சாலையோரத்தில் கோவிலுள்ளது. ராஜகோபுரத்தைக் கடந்து உள்ளே செல்லும்போது கொடி மரம், பலிபீடம், நந்தி மண்டபம் உள்ளது. மூலவர் சன்னதியின் இடப்புறத்தில் இரு அம்மன் சன்னதிகள் உள்ளன. முதல் சன்னதியில் தவக்கோலம்மையும், இரண்டாவது சன்னதியில் அழகாம்பிகையும் உள்ளனர். இருவர் சன்னதியின் முன்பாகவும் பலிபீடம், நந்தியும் உள்ளன. திருச்சுற்றில் சண்டிகேஸ்வரி சன்னதி உள்ளது. கோயிலின் எதிரே கோயில் குளம் உள்ளது. முன் மண்டபத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மார்க்கண்டேயர், நால்வர், சூரியன், பைரவர் உள்ளனர். மண்டபத்தின் வலப்புறம் பிரம்மலிங்கத்தைக் கொண்ட முக்தி மண்டபம், இடப்புறம் நடராஜர் சன்னதியும் நவக்கிரக சன்னதியும் உள்ளன. மூலவர் கருவறைக்கு முன்பாக நந்தி, பலிபீடம் காணப்படுகிறது. வெளியே வலப்புறம் நர்த்தன விநாயகரும் இடப்புறம் முருகனும் உள்ளனர். கருவறை கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தி மட்டும் உள்ளார். உள் திருச்சுற்றில் வலப்புறம் வாகனங்கள் உள்ளன. அடுத்து கன்னிமூலை கணபதி மற்றும் மார்க்கண்டேயர் சன்னதி, பாலசுப்ரமணியர் சன்னதி, வள்ளி தெய்வானையுடன் கூடிய சுப்பிரமணியர் சன்னதி, காசி விசுவநாதர் விசாலாட்சி சன்னதி, சரஸ்வதி சன்னதி, மகாலட்சுமி சன்னதி ஆகிய சன்னதிகள் உள்ளன. வெளிச்சுற்றில் துர்க்கையம்மன் சன்னதி உள்ளது.சூரியனை மையமாக வைத்து அனைத்து கோள்களின் இயக்கம் நடைபெறுவதால் வான சாத்திர அடிப்படையில் இக்கோயிலின் நவக்கிரக அமைப்பு உள்ளதாம்.

இங்கு மூலவருக்குத் தைலாபிஷேகம் (எண்ணெய் அபிஷேகம்) விசேஷம். எவ்வளவு எண்ணெய் வார்த்துத் தேய்த்தாலும் அவ்வளவும் பாணத்திற்குள்ளேயே சுவறிப்போகும், வெளியே வழியாது. தவமிருக்கும் அம்பாளே, சுவாமிக்குத் தைலாபிஷேகம் செய்வதாக ஐதீகம். ஆகவே அம்பாள் முன் எண்ணெய் வைத்துப் பின்பு எடுத்துச்சென்று சுவாமிக்குத் தேய்ப்பர். சித்திரை, மாசி, கார்த்திகையில் இந்த அபிஷேகம் செய்வது சிறப்பாகச் சொல்லப்படுகிறது.

இங்குள்ள பலாமரம் தெய்விகமானது. காய்க்குங் காலத்தில் நித்யபடியாக பலாச்சுளை நிவேதனண்டு. நிவேதித்த பலாச்சுளையைச் சாப்பிடுவது நல்லது. ஆனால் நிவேதிக்காமல் பலாப்பழத்தையே வெளியில் எடுத்துக் கொண்டு போனால் நிச்சயமாக அப்பலாப்பழத்தில் வண்டுகள் உண்டாகிப் பழம் கெட்டுப் போவது இன்றும் கண்கூடானதொன்றாகும். என்று சொல்லப்படுகிறது. மேலும் இத்தலம் சிறந்த பிரார்த்தனையிடமாகும். மரணபயம், எமபயம் உடையோர் இத்தலத்திற்கு வந்து பெருமானைத் தொழுது எருமையோடு, நீலப்பட்டுத் துணி எள் முதலியவற்றைத் தானம் செய்தால் அப்பயம் நீங்கும். 'அவ்வாறே ராகு தோஷமிருந்தால் உளுந்து, நீலவஸ்திரம் வெள்ளி நாகர், வெள்ளிப் பாத்திரம் முதலியவைகளை இத்தலத்தில் தானம் செய்தால் அத்தோஷம் நிவர்த்தியாகும் இத்தலத்திற் நடைபெறும் சித்திரைப் பெருவிழா சிறப்புடையது. இவ்விழாவில் பன்னிரண்டாம் நாளில் சுவாமி பல்லக்கில் புறப்பட்டு ஏழூர் சென்று வருவது அற்புதமான காட்சியாகும். (ஏழூர்களாவன -இலந்துறை, ஏனாதிமங்கலம், திருநாகேச்சுரம், திருபுவனம், திருவிடைமருதூர், மருத்துவக்குடி, திருநீலக்குடி). இத்தலத்தில் பெருமான் மார்க்கண்டேயருக்கு அருள்புரிந்திருப்பதால் திருவிழாக்காலத்தில் சுவாமிக்கு முன்னால் எதிர்முகமாக மார்க்கண்டேயர் செல்கின்றார். (மார்க்கண்டேயர் உற்சவமூர்த்தி உள்ளார்) .

நாடொறும் நான்கு கால வழிபாடுகள் நடைபெறுகிறது.

திருநீலக்குடி சப்தஸ்தானத்தில் திருநீலக்குடி, இலந்துறை, ஏனாதிமங்கலம், திருநாகேஸ்வரம், திருபுவனம், திருவிடைமருதூர் மற்றும் மருத்துவக்குடி ஆகிய ஏழூர்த் தலங்கள் அடங்கும் சமீபத்தில் இத்திருக்கோயிலின் யாக மண்டப தூணில் சித்திரை திருவிழா குறித்த கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. திருவிடைமருதூர் திருநீலக்குடி

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

மானோக்கியநாதர் கோயிலின் உள்பிரகாரத்தின் வடதிசையில் அமைந்துள்ள யாகசாலை மண்டபத்தில் 4 தூண்கள் காணப்படுகின்றன. அவற்றில் தெற்கே உள்ள ஒரு தூணில் மட்டுமே சோழர்கால எழுத்தமைதியில் உள்ள கல்வெட்டில் மன்னர் பெயர், ஆட்சி புரிந்த ஆண்டு ஆகியவை இல்லாமல் காணப்படுகிறது. அதில் உள்ள வாசகத்தில் இவ்வூர் ஸ்ரீ ராஜராஜேஸ்வரடையார் கோயில் எழுந்தருளி நின்ற ஆடவல்லார் ஸ்ரீராஜராஜவிடங்கருக்கு சித்திரை திருநாளில் திருவிழா கொண்டாடியதை குறிக்கிறது. இத்திருவிழா சித்திரை மிருகசீரிட நட்சத்திரத்தில் துவங்குகிறது. மேலும் வேதம் ஓதுவதற்கு வெளியூரிலிருந்து வந்தவர்களுக்கும் பிரபாகரம் எனப்படும் தத்துவத்தை எடுத்துரைப்பவருக்கும் நிலம் கொடையாக கொடுத்ததும், அதன் எல்லைகளும் குறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் காலம் கி.பி.10-11ம் நூற்றாண்டை சேர்ந்தவையாகும். மேலும் இக்கோயிலின் மகாமண்டபத்தின் வடக்கு சுவற்றில் காணப்படும் வடமொழி (கிரந்தம்) கல்வெட்டுகளில் இக்கோயிலை சார்ந்த சப்தஸ்தான கோயில்களான இளந்துறை, ஏனாதிமங்கலம், மருத்துவக்குடி, திரிபுவனம், திருவிடைமருதூர், திருநாகேஸ்வரம், தாராசுரம் ஆகியவை குறிக்கப்படுகிறது. மனோக்கியநாதர் கோயில் தேவி தீர்த்தத்தில் நீராடினால் திருவிடைமருதூர், காளகத்தி, திருவாரூர் ஆகிய கோயில்களில் வழிபட்ட பலன்களை அடையலாம் என்று குறிப்பிட்டுள்ளது.

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

ஸ்ரீ மார்கண்டேயர் கோயில், மணல்மேடு.

மணல்மேடு ஸ்ரீ மார்கண்டேயர் கோயில் திருக்கடையூர் அருகே உள்ளது. இது முற்றிலும் ஒரு சைவ திருத்தலம் ஆகும். இந்தக் கோவில் திருமணல்மேடு என அழைக்கப்படும் ஒரு சிறிய கிராமத்தில் திருகடையூரிலிருந்து 1 கிமீ தென்மேற்கில் அமைந்துள்ளது. இந்த தலத்தில் தங்கிக் கொண்டு தான் ஸ்ரீ மார்கண்டேயர் திருக்கடையூர் சென்று ஸ்ரீ அமிர்த கடேஸ்வரரை பூஜித்து வந்தார். இந்த கோவிலில், மூலவராய் உள்ள ஸ்ரீ மார்கண்டேயர் ஆத்ம லிங்கத்தின் சிவ பூஜை செய்த பாவனையில் அமர்ந்து பக்தர்களுக்கு நீண்ட வளமான வாழ்க்கை அமைய ஆசீர்வதிக்கிறார்.

ஸ்ரீ மார்கண்டேயரை ஒரு உண்மையான பக்தன் என்று சிவபெருமான் குறிப்பிட்டார். இதனால் இந்த கோயில் தனி முக்கியத்துவத்தை கொண்டுள்ளது. திருக்கடையூர் வந்து இறைவன் ஸ்ரீ அமிர்தகடேஸ்வர் மற்றும் ஸ்ரீ அபிராமியை வளமான வாழ்க்கை பெற பிரார்த்தனை செய்யும் பக்தர்கள், ஸ்ரீ மார்கண்டேயர் கோவிலுக்கும் வந்து தரிசித்து வழிபட வேண்டும்.

இங்கு ஒவ்வொரு ஆண்டும் கோவில் ஆச்சாரியர்கள் பங்குனியில் அசுவதி நக்ஷத்திர நாளில் ஒரு முக்னுயமான பூஜை செய்வார்கள். அன்று தான் சிவபெருமான் தனது பக்தன் ஸ்ரீ மார்கண்டேயரை புனிதபடுத்த கங்கையை வரவழைத்ததாக தல புராணம் கூறுகிறது. இங்கு பகவானுக்கு பூஜைகள் செய்ய விரும்பும் பக்தர்கள் ஸ்வாமி அம்பாளுக்கு திருக்கல்யாணம் செய்வித்து சிறப்பு ஹோமம் செய்து வழிபட்டால் கடவுளின் ஆசீர்வாதம் கிடைக்கும் என நம்பப்படுகிறது. திருமணமாகாதவர்களுக்காக ஸ்வாமி அம்பாளுக்கு திருக்கல்யாணம் செய்வித்து சிறப்பு ஹோமம் செய்து வழிபட்டாலும் அவர்களுக்கு விரைவில் திருமணம் கை கூடும் எனவும் நம்பப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஞ்சாக்ஷர ஹோமம் என்று ஒரு சிறப்பு ஹோமம், சங்காபிஷேகம் இத்திருத்தலத்தில் செய்து வழிபட்டால் நோயற்ற வாழ்வு கிடைக்கும் என்பது ஐதீகம்.

இத்திருத்தலத்தில் ஸ்ரீ மார்கண்டேயர் மூலவராய் அருள்பாலிக்கிறார். அவரின் தந்தையான ஸ்ரீ மிருகண்டேஷ்வரர் மற்றும் அவரது தாயான மருத்துவதி ஆகியோர் தனிச் சந்நிதி கொண்டு விளங்குகின்றனர். ஸ்ரீ மார்கண்டேயரின் வரலாற்றை விளக்கும் சித்திரங்கள் ஆலயத்தை அலங்கரிக்கின்றன.

மிருத்யுஞ்ஜய ஹோமம், சுவாமி அம்பாள் திருக்கல்யாணம், 108 சங்காபிஷேகம் இங்கே செய்யப்படுகிறது. குழந்தைப் பேறு வேண்டுவோர்க்கு 'புத்ர-காமேஷ்டியாகம்' என மிகவும் சக்திவாய்ந்த பிரசித்தி பெற்ற யாகம் இங்கே செய்யப்படுகிறது.

பக்தர்களின் குடும்பம் வளமாக இருக்கவும் தொழில் முன்னேற்றத்திற்கும் இங்கு 'ஸ்ரீலலிதா சஹஸ்ரநாம பாராயணம்' செய்யப்படுகிறது. மேலும் சஷ்டியப்தபூர்த்தி, பீமரத சாந்தி, கனகாபிஷேகம் போன்றவையும் பக்தர்கள் இத்தலத்தில் செய்து கொள்கின்றனர்.

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

அருள்மிகு சத்தியவாசகர் திருக்கோயில், மாத்தூர், நாகப்பட்டினம்.

அருள்மிகு சௌந்தர்ய நாயகி உடனாய அருள்தரு சத்தியவாசகர் திருக்கோயில் சுமார் 1000 வருட பழமை வாய்ந்தது. நாகை மாவட்டத்தில் உள்ளது மாத்தூர். மயிலாடுதுறையில் இருந்து காரைக்கால் செல்லும் வழியில், மயிலாடுதுறையில் இருந்து சுமார் 17 கி.மீ தொலைவிலும், காரைக்காலில் இருந்து சுமார் 26 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது மாத்தூர். திருக்கடையூரில் இருந்து சுமார் 14 கி.மீ தொலைவில் உள்ள மாத்தூர், வைப்புத் தலம் எனப் போற்றப்படுகிறது. இங்குள்ள தீர்த்தம் மகாலட்சுமி தீர்த்தம் என்றழைக்கப்படுகிறது.

கன்வ மகரிஷி வில்வ இலைகளால் இறைவனை அருச்சித்து வழிபட்ட அந்தத் தலம் மாட்டூர் எனப்படும் மாத்தூர். கண்வ மகரிஷி ஆகியோருக்கு தனி சன்னதி அமைந்துள்ளது. திக்குத் திசை தெரியாமல் மார்க்கண்டேயன் வந்தபோது, திருக்கடையூருக்கு வழிகாட்டி சிவனார் அருளிய அற்புதமான இடம் இது. அசரீரி போல். சத்தியவாக்கு போல் மார்க்கண்டேயனுக்கு அருளிய இந்தத் தலத்து இறைவனுக்கு சத்தியவாசகர் எனத் திருநாமம் சூட்டி வழிபட்டனர் மக்கள். இங்கே அம்பாளின் திருநாமம் சவுந்தர்ய நாயகி. அழகே உருவெனக் கொண்டு ஜொலித்த முகத்துடன் அமைந்துள்ளது.

இங்கு விநாயகர், முருகப்பெருமான், பைரவர், தட்சிணாமூர்த்தி, கண்வ மகரிஷி ஆகியோருக்கு தனி சன்னதி அமைந்துள்ளது. தோல் வியாதி குணமடையவும், நீண்ட ஆயுள் வேண்டியும் இங்கு பிரார்த்தனை செய்கிறார்கள். சுவாமிக்கும் அம்பாளுக்கும் அபிஷேகம் செய்து புது வஸ்திரம் சார்த்தி ,ங்கள் நேர்த்திக்கடனை செலுத்துகிறார்கள்.

அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

23. வல்வினையை மாற்றும் அபிராமவல்லி!

தன் குழந்தையின் பசியறிந்து அமுதம் ஊட்டுபவள் தாய். 'அன்னையுடன் அறுசுவை போம்' என்பது ஔவையார் வாக்கு. மானுட அன்னைக்கு அவள் குழந்தை மட்டும் தான். அகில உலக தாயான அம்பிகையின் பெருமையை, யாரால் அளவிட முடியும்?

தெய்வம் எந்த ஒரு உயிரைப் படைத்தாலும், அந்த உயிருக்கு வேண்டிய உணவைப் படைத்துவிட்டு, அதன் பிறகே அந்த உயிரைப் படைக்கும். குழந்தை பிறக்கும் முன்பே தாயிடம் பால் சுரக்க வைக்கிறாள். மனிதர்கள் மட்டுமல்ல; மாடு, ஆடு, போன்ற எல்லாவற்றிற்கும் இது பொருந்தும். முட்டையில் உள்ள கருவுக்குள்ளும் அதற்குரிய உணவுண்டு. விதைக்குள்ளும் அது முளைத்து வெளிவரும் வரையில் தேவையான உணவு இருக்கும். இந்த இறைத் தன்மையை 'முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருள்' என மாணிக்கவாசகர் தனது திருவெம்பாவையில் குறிப்பிடுகிறார்.

அது மட்டுமா!. அம்பிகையின் அருட்பார்வை பட்டு உய்ந்த தேவர்கள் ஏராளம். இன்று உலகில் உயிர்கள் இருப்பதன் முக்கிய காரணமான மன்மதன், சிவபெருமானின் நெற்றிக் கண்ணால் அழிந்துபட, அவள் மனைவி ரதிதேவி அம்பிகையைச் சரண்டைந்து மீண்டும் மன்மதனை எழுப்பித் தர வேண்ட, அம்பிகை அவள்பால் இரக்கம் கொண்டு மன்மதனை மீண்டும் எழுப்பித் தந்து, அதே சமயம் அவனை அரூபமாக இருக்கச் செய்தாள்.

தன்னிடம் பொய் சொன்னதற்காக, தாழம்பூவைச் சூடாமல் அதனை சிவபெருமான் தண்டித்தாலும், அந்த பூ தன்னைச் சரணடைந்தபோது, அப்பூவைத் தன் தலையில் சூடி பெருமைப் படுத்தியவள்.

சிவபெருமானின் முன் தான் செய்த சத்தியத்தை மீறியபோது சுந்தரர் தன் இரு கண்களையும் இழந்து தவித்தார். அப்போது அவரது இடது கண்ணைக் கொடுத்து ஆதரித்தவள் அம்பிகை. 'சந்திரவதனி' எனத் துதிக்கப்படும் அம்பிகை சந்திரனைப் போன்ற அழகு நிறைந்தவள் மட்டுல்ல, சந்திரனைப் போன்றே குளுமையும் நிறைந்தவள். அப்படியான சந்திரவதனி, நம் தாபத்தை யும், துக்கத்தையும் தணித்து, நமக்கு சர்வ மங்கலங்களையும், நல்லன எல்லாவற்றையும் வழங்கிடுவாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனிதராகப் பிறந்த எல்லோரும் ஏதோ ஒரு விதத்தில் துன்பப் படுகிறார்கள். அநேகமாக அந்த துன்பங்கள் அவர்களைத் துரத்துகின்றன. எல்லாம் துறந்த சந்நியாசிகளைத் தவிர, துன்பங்களற்ற ஒருவரையும் காணடியாது. சந்நியாசிகள் கூட சில சமயங்களில் துன்பங்களை அனுபவிக்கிறார்கள். அவர்களையும் துன்பங்கள் துரத்தினலும் அவர்கள் நம்மைப்போல் அதை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. அதனால் அதிக பாதிப்புக்குள்ளாவதில்லை.

துன்பங்களை நாம் ஏன் அனுபவிக்கிறோம் என்பதற்கு பல காரணங்களைப் பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். முக்கியமாக நல்லவர்கள் பலரும் பல துன்பங்களுக்கு ஆளாகின்றனர். அவர்களுக்கே ஒரு சமயத்தில் வாழ்வில் ஒரு வெறுப்பு வந்துவிடுகிறது. நல்லவர்களுக்குத் தாங்க முடியாத துன்பங்கள் வந்தால் ஆண்டவன் அவர்களை சோதிக்கிறான் என்பர். அந்த சோதனையைத் தாங்கி வெற்றி கொள்பவர்களை இறைவன் ஆட்கொள்கிறான். நாயன்மார்கள், ஆழ்வார்கள் உட்பட பல அருளாளர்களின் வாழ்விலிருந்து இதனைத் தெரிந்து கொள்ளலாம். அப்படிபட்ட அருளாளர்களில் சிறந்தவரான, அம்பிகையின் அருளுக்குப் பாத்திரமான அபிராமி பட்டர் என்னென்ன துன்பங்கள் நம்மைத் துரத்துகின்றன என்பதைப் பட்டியலிடுகிறார்.

செய்த பாவங்கள் துன்பங்களாய் துரத்துகிறது. நோய் நொடிகள் வாட்டுகிறது. துன்பங்களைத் தாங்க முடியாமல் கோபம் எல்லை மீறுகிறது. வேற்றுமைகள், வறுமை, வயதான காலத்தில் வரும் மூப்பு, அதனால் வரும் தளர்ச்சி, இவை கொடுக்கும் மிக்க வேதனைகள், நம்மைச் சூழும் பகை, வேண்டாதவர்களின் சூழ்ச்சி, இதற்கிடையில் வரும் பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை, தெரிந்தோ தெரியாமலோ செய்கின்ற பாவங்கள், பல்வேறு பொருட்களின் மீது மோகம், மும்மலங்கள், முற்பிலிருந்து தொடரும் ஊழ்வினை, சமூகத்தில் ஏற்படும் மான அவமானங்கள் வெட்கம் இவையெல்லாம் அடியேனை துரத்துகின்றன. இவைகள் நினைக்கும் போது நாக்கு வறள்கிறது. இத் துன்பங்களைக் கண்டு ஓடியோடிக் கால்களும் தளர்ந்து போயின. இந்நிலையில் இறுதியாக எமனும் வந்து எனை துரத்துவானோ? அவ்வாறு துரத்தினால் அம்மா! தாயே நீயே கதி! அனைத்து உலகங்களில் உள்ள உயிர்களுக்கும் ஆதாரமான, கடவூரில் திருக்கோயில் கொண்டுள்ளவளே! அதீசர் இடப்பாகத்தை ஒரு போதும் பிரியாதவளே! கிளியை தனது இடக்கரத்தில் ஏந்தியிருப்பவளே! அனைத்து உயிர்களுக்கும் அருள் புரிபவளே! அபிராமித் தாயே! என்று உலக மக்கள் படும் துன்பங்களை பட்டியலிட்டு இந்த துன்பங்களிலிருந்து தன்னைக் காப்பாற்ற வேண்டுகிறார் அபிராமி பட்டர்.

அவர் பட்ட துன்பங்களில் ஏறக்குறைய எல்லாமே நமக்கும் பொருந்துமல்லவா? எல்லா துன்பங்களுக்கும் தலையாத் துன்பமாக அவர் குறிப்பிடுவது காலன் துரத்துவதைத்தான்.

நம் எல்லோருக்கும் ஒரு பயம் எப்போதும் உண்டு. அது தான் மரண பயம். பிறந்த எந்த உயிரும் இறக்க வேண்டுமென்பது நியதி. இது எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆனாலும் தான் என்றும் சாஸ்வதம் என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் உண்டு. இறக்கும் தறுவாயில் இருப்பவனும் கூட, நாம் எப்படியாவது பிழைத்து விடுவோம் என்றே நம்புகிறான். ஏனெனில் மரணத்தை எதிர் கொள்ள போதிய தைர்யமில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிறப்பு, இறப்பு - இந்த இரு விஷயங்களுக்கும் நம்முடைய சிறு அறிவைக்கொண்டு ஆதாரப்பூர்வமான பதில் தேட முடியாது என்று நம் அனைவருக்குமே தெரியும். ஆகவே வேதத்தின் சாரமான, பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர் என்ன கூறுகிறார் என்று பார்ப்போம். பிறப்பு என்றால் என்ன? இறப்பு என்றால் என்ன? பதில் இதோ...

தேஹினோ' ஸ்மின் யதா தேஹே கௌமாரம் யௌவனம் ஜரா

ததா தேஹாந்தரப் ப்ராப்திர் தீரஸ் தத்ர ந ஹ்யதி

பகவத் கீதை 2.13

பொருள்; 'உடல்பெற்ற ஆத்மா, சிறுவயதிலிருந்து இளமைக்கும், இளமையிலிருந்து முதுமைக்கும் மாறுவதுபோலவே மரணத்தின் போது வேறு உடலுக்கு மாறுகின்றது. தன்னை உணர்ந்த ஆத்மா, இது போன்ற மாற்றத்தால் திகைப்பதில்லைசு

என்னதான் இருந்தாலும் பலருக்கு தங்கள் மரணம் குறித்து கவலை இல்லாமல் இருந்தாலும், தங்களுடைய நண்பர்கள், பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினரின் மரணத்தைப் பார்க்கும் போது, நமக்கும் உடனே வந்துவிடுமோ என்ற பயம் ஏற்படுகிறது. ஆக மரணம் என்பது நாம் விரும்பாத ஒரு சொல். இதை யாரும் மறுக்கவே முடியாது.

நாம் ஏன் மரணத்தைப் பற்றி பயப்பட வேண்டும்? ஏனெனில் மரணத்திற்குப் பின் நாம் எப்படி இருப்போம் என்று நமக்குத் தெரியவில்லை. நாம் படித்த புராணங்களும் இதிகாசங்களும் நரகத்தைப் பற்றி அதிகம் சொல்லி பயறுத்தி இருக்கின்றன. அவற்றில் எவை எல்லாம் பாவம் என்று சொல்லப் பட்டதோ அவற்றில் சிலவற்றையாவது நாம் செய்திருப்போம். இன்றைய வாழ்க்கை றையில் அவ்வாறு பாவம் செய்யாமல் யாராலும் இருக்க முடியாது. அந்த பாவத்திற்குரிய தண்டனை மிகப் பெரிதாக அவற்றில் சொல்லப்பட்டிருக்கும். மரணத்தைப் பற்றிய கவலைக்கு முக்கிய காரணம் இதுவேயாகும். ஒரு காலத்தில் பாவம் என்று சொல்லப்பட்ட தெல்லாம் இன்று தவிர்க்க முடியததாகிவிட்டது. கல்வியை விற்பது பாவம். அன்னத்தை விற்பது பாவம். குழந்தைக்குத் தானே பசும் பால் எவ்வளவு தேவையோ எடுத்துக் கொள்ளுங்கள். நான் பசும்பாலை விற்க மாட்டேன் என்று சொன்னவர்களை நான் சிறுவயதில் பார்த்திருக்கிறேன். அது பாவம் என்றெல்லாம் ஒரு காலத்தில் எண்ணியிருந்தனர். இன்றைக்கு அவைதான் பலருக்கு சோறு போடுகின்றன. இப்பொழுது அவற்றை எப்படி பாவம் என்று எடுத்துக் கொள்ள முடியும்? தர்மங்கள் யுகந்தோறும் மாறுகின்றன. அப்பொழுது பாவ புண்ணியங்கள் என்னவாகும்? யுகங்கள் மாறும் போது எந்த பாவம் புண்ணியமாகிறது? எல்லாம் ஒரே குழப்பம்! மரணமோ ஒரே மர்மம்!! விளைவு பயம்!!!

சில சமயங்களில் மரணத்தைக் கண்டு அதிகமாகவே பயப்படுகிறோம். ஆனாலும் சில சமயங்களில் பலருக்கும் மரணம் ஒரு வரப்பிரசாதம்! எப்படீ?

நோயினால் படு அவஸ்தை. அதிலிருந்து மீள முடியாத நிலை. இறுதி காலம் வரை அத்துடன் தான் போராட வேண்டுமென்ற நிலை. நோயாளிக்கு மட்டும் சிரமம் என்பதில்லை. அவரைச் சுற்றி இருப்பவர்களுக்கு அதைவிட அதிக சிரமம் பல சமயங்களில் - மரணம் அதற்கு ஒரு வடிகால்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெரிய செல்வாக்குள்ள மனிதர். திடீரென வாழ்வில் ஒரு பெரிய சறுக்கல். அதிலிருந்து மீள எந்த வழியும் புலப்பட வில்லை. உதவ எவருமில்லை. மானம் மரியாதை எல்லாம் போகும் நிலை - மரணம் அதற்கு ஒரு வடிகால்.

குடும்ப சூழ்நிலை மிகவும் மோசம். அடி மேல் அடி விழுகிறது. தாங்க முடியாத நிலை. மனநிலை பாதிப்பு. உள்ளும் புறம் எதிரிகள் - - மரணம் அதற்கு ஒரு வடிகால்.

வயோதிகத்தினால் மற்றவர் உதவியின்று ஏதும் செய்ய முடியாத நிலை. ஆனால் உதவிக்கு யாருமில்லை - மரணம் அதற்கு ஒரு வடிகால்.

சில மரணங்கள் நேரடியாக இல்லாமல் மறைகமாக பேருதவி புரிகின்றன. உதாரணத்திற்கு ஒரு நாட்டில் ஒரு கட்சியின் ஆட்சி நடைபெறுகிறது என்று வைத்துக் கொள்வோம். அந்த கட்சியே பன்னெடுங்காலமாக ஆட்சியில் இருந்து, அதன் தலைவரே தொடர்ந்து ஆட்சி பொறுப்பில் இருந்தால், அந்த தலைவரின் கொள்கைகள் நல்லதாக இருக்கும் வரை நாடும் சுபிட்சமாக இருக்கும். அந்த தலைவர் மறையும் வரை, அவரை விட நல்ல பலர் அந்த கட்சிக்குள்ளேயே இருந்தாலும் அவர்களால் பதவிக்கு வந்து சிறப்பாகப் பணியாற்ற டியாது. அந்த தலைரின் மரணம் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.

எப்படி இருந்தாலும் மரணம் என்பதை எவரும் வரவேற்பதில்லை. மரண பயம் நீங்க பலரும் புனித தலங்களுக்குச் சென்று இறைவனை வணங்குகின்றனர். எமபயம் நீக்கும் தலங்களாகத் திருக்கடையூர், திருவீழிமிழலை, திருவையாறு, திருவெண்காடு, திருவைகாவூர் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. இவற்றுள் திருக்கடையூர் மிகவும் பிரசித்தி பெற்ற தலம். எமனையே சம்ஹரித்த மூர்த்தி எழுந்தருளியுள்ள தலம் என்பதால் இத்துணை சிறப்பு.

இத்தலத்து அம்பிகையையே தன் தாயாகப் பாவித்துக் கொண்டாடிய அபிராமி பட்டர் எமபயம் நீங்க அம்பிகையின் திருவடிகளே துணை என்கிறார் தனது பாடல்களில்.

வவ்விய பாகத்து இறைவரும், நீயும் மகிழ்ந்திருக்கும்

செவ்வியும், உங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ளே

அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற்பாதமும் ஆணுவந்து

வெவ்விய காலன் என்மேல்வரும் போது வெளிநிற்கவே.

---அபிராமி அந்தாதி 18

அம்பிகையின் பக்தர்களைக் காலன் அண்டுவதில்லை. அவர்களின் வாழ்நாள் முடிந்ததும் அம்பிகை அவர்களை தன்னுடைய ஸ்ரீபுரத்திற்கு அழைத்துக் கொள்கிறாள் என்பது நம்பிக்கை. எனினும் சில சமயங்களி காலன் தவறுதலாக வருவதுண்டு. சதா சர்வ காலம் ஈசனையே எண்ணியிருந்த மார்கண்டேயரை தவறுதலாக காலன் கவர வர, ஈசனின் காலால் உதை பட்ட சம்பவத்தை பட்டரும் அறிந்திருந்ததால், அப்படித் தவறி காலன் வந்தால் தன்னை காக்க வரவேண்டுமென்று கோருகிறார். அதுவும் இறைவனும் இறைவியும் மணம் புரிந்த கோலத்தில் வரவேண்டுமென்பதையும் அறுதியிட்டுக் கூறுகிறார். ஏன் அப்படி?

இறைவன் சம்ஹாரம் செய்த போதெல்லாம் தனியாகவே சென்றிருக்கிறார். ஆனால் உமையோடு சேர்ந்திருக்கும் காலங்களில் அவர் அருளூற்றாகவே இருக்கிறார். அதனாலேயே

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

பட்டர் அவ்வாறு காலன் வரும்போது இருவரும் சேர்ந்து வந்தால் தன்னைக் காலனிடம் ஒப்படைக்காமல் தன்னை இறைவனும் இறைவியும் தங்கள் உலகிற்கு அழைத்துச் சென்று விடுவார்கள் என்பது அவர் எண்ணம். அவர் எண்ணம் சரிதானே!

காலன் வந்தாலும் வருவான் என்ற பட்டரின் சந்தேகத்திற்கும் ஒரு காரணம் உண்டு. அவர் தன் அபிராமிப் பதிகத்தில் அதற்கு விடை கூறுகிறார்;

கைப் போது கொண்டு, உன் பதப் போது தன்னில் கணப் போதும் அர்ச்சிக்கிலேன்;

கண் போதினால், உன் முகப் போது தன்னை, யான் கண்டு தரிசனை புரிகிலேன்;

முப் போதில் ஒரு போதும், என் மனப் போதிலே ன்னி, உன் ஆலயத்தின்

முன் போதுவார் தமது பின் போத நினைகிலேன்; மோசமே போய் உழன்றேன்;

மைப் போதகத்திற்கு நிகர் எனப் போது எரு- மைக் கடா மீது ஏறியே,

மா கோர காலன் வரும்போது, தமியேன் மனம் கலங்கித் தியங்கும்

அப் போது, வந்து உன் அருட்போது தந்து அருள்; ஆதி கடவூரின் வாழ்வே!

அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி! அருள் வாமி! அபிராமியே!

தான் கை நிறைய மலர் கொண்டு அம்பிகையின் மலர் பாதங்களை

ஒரு பொழுதும் அர்ச்சனை செய்யவில்லை. (என்) விழி மலர்களால் மலராகிய உன் முகத்தினை தான் தரிசனம் செய்யவில்லை. காலை, மாலை, இரவு என்ற மூன்று பொழுதுகளில் ஒரு பொழுது கூட (உன்னை) என் இருதயக் கமலத்தில் நிறுத்தி வைத்து உன்னைப் பூஜிக்கவில்லை. (அவரே இப்படி சொல்கிறாரென்றால் நாமெல்லாம் எம்மாத்திரம்?) உன் திருக்கோயிலுக்கு சென்று உன் அடியார்களை பின்பற்ற விரும்பாமல் வஞ்சிக்கப்பட்டு துன்பப்படுகிறேன். அதனால் கரிய எருமை கடாவின் மேல் ஏறிபயங்கர உருவத்தினனான யம ராஜன் வரும் சமயம் திக்கற்றவனாகிய நான் மனம் சஞ்சலப்பட்டு என் அறிவுத் திறன் மங்கி இருக்கும். அந்த தருணத்தில் வந்து என்னைக் காத்தருள்வாய்அம்மா! என்கிறார்.

அது மட்டுமல்ல. காலன் வருவதற்கு முன்னரே வந்து தன்னைக் காக்கும்படி வேண்டுகிறார் இந்த பதிகத்தில்

தீத ரிக்கும் தமியேன் என் ஆருயிர் சிந்த அந்தகன் வந்திடு முந்தியே

நீத ரிக்கும் சிலையொடு வந்து முன் நிற்பதே அன்றிச் சற்பனை செய்வையோ!

ஓத ரிக்கும் விதிக்கும் எட்டாப் பதம் உதவி மைந்தன் மதி மயங்காமலும்

ஆத ரிக்கும் கடவூர் இறைவரை ஆளும் செல்வி! அபிராம வல்லியே!

மேலும் அவர் சொல்லும்போது, தன் மரணகாலத்தில் உன்னை அம்மா என்றழைப்பேன். உடனே ஓடி வந்துவிட வேண்டுமென்கிறார். குழந்தையின் அழைப்புக்கு வராத தாய் உண்டோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இழைக்கும் வினைவழியே ஆடும் காலன் எனைநடுங்க

அழைக்கும் பொழுதுவந்து அஞ்சல் என்பாய்; அத்தர் சித்தமெல்லாம்

குழைக்கும் களபக் குவிமுலை யாமலைக் கோமளையே!

உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே.

ஈசனின் சித்தத்தையெல்லாம் குழையச் செய்கின்ற சந்தனம் பூசிய அழகிய தன பாரங்களை உடைய இளமையான கோமளச் செல்வியே!! நான் இந்த பிறவியில் செய்த வினைகளின் விளைவாய் காலன் என்னை அழைக்க வருவான், அப்போது நான் நடுநடுங்கி மரண வேதனையிலும் பயத்திலும் உன்னை அன்னையே என்றழைப்பேன், அப்போது நீ உன் பிள்ளைக்காக உருகி ஓடோடி வந்து அஞ்சேல் என்று அபயமளிப்பாய் அன்னையே.

என்னதான் இருந்தாலும் ஒருநாள் பிறந்தவர்கள் மரித்தே ஆக வேண்டுமல்லவா? அந்த நேரம் வரும்போது நீ அருகில் இருக்க வேண்டுமென்று வேண்டுகிறார். அப்போதுதான் தனக்கு மரணபயம் இல்லாமலிருக்கும் என்கிறார். அந்த காலம் வரும்போது, தன்னால் அம்பிகையைக் கூப்பிட முடியுமோ முடியாதோ தெரியாதல்லவா. அதனால் இப்போதே அம்பிகையிடம் சொல்லிவிட்டார். தன் இறுதிக் காலத்தில் தேவ மகளிர் சூழ வந்திருந்து தன் பயத்தைப் போக்க வேண்டுகிறார்.

குரம்பை அடுத்து குடிபுக்க ஆவி வெங்கூற்றுக்கு இட்ட

வரம்பை அடுத்து மறுகும் அப்போது வளைக்கை அமைத்து

அரம்பை அடுத்த அரிவையர் சூழ வந்து அஞ்சல் என்பாய்

நரம்பை அடுத்து இசை வடிவாய் நின்ற நாயகியே

யாழ் மீட்டுகையில் தோன்றும் இனிய இசை வடிவமாய் நின்ற நாயகியே!! என் ஆயுள் முடியும்போது உடலில் உள்ள உயிரானது காலன் கொண்டு செல்ல வரும்போது மிகவும் அச்சப்படும். அச்சமயத்தில் அரம்பைரும், தேவ மகளிரும் சூழ வந்து உன் வளைக்கரத்தால் அஞ்சாதே என்று அபயமளிப்பாய் அன்னையே! என்கிறார்.

இறக்கும் தறுவாயில் தான் எப்படி இருப்போம் என்பது தெரியாதல்லவா? அச்சமயத்தில் தன்னால் அம்பிகையைப் பார்க்க முடியுமோ முடியாதோ தெரியாது. அம்பிகை வந்திருப்பதற்கு அடையாளமாக அம்பிகையின் வளையலின் இனிய நாதமே தனக்கு அம்பிகை அருகில் இருப்பதை உணர்த்தும். அதனால் என் மனம் பயப்படாதிருக்கும் என்கிறார். உண்மை தானே! அம்பிகை நம்மிடம் இருக்கும்போது நமக்கேது பயம்?

ஆனால் இவை எல்லாவற்றிற்கும் காரணம் என்ன? நாம் தெரிந்தோ தெரியாமலோ செய்த வினைகள் தானே. அந்த வினைகளை நீக்கிவிட்டால் பின்னர் இப்படியெல்லம் பயப்பட வேண்டாமல்லவா? அந்த வினைகளை நீக்கும் போதும் அம்பிகை எப்படி வரவேண்டுமென்று ஒரு பெரிய பட்டியலே தருகிறார். குட்டுபட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்படவேண்டுமென்பது பழமொழியல்லவா!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கார் அளக பந்தியும், பந்தியின் அலங்கலும், கரிய புருவச் சிலைகளும்,
கர்ண குண்டலம், மதி முக மண்டலம், நுதல் கத்தூரிப் பொட்டும் இட்டுக்,
கூர் அணிந்திடு விழியும், அமுத மொழியும், சிறிய கொவ்வையின் கனி அதரம்,
குமிழ் அனைய நாசியும், குந்த நிகர் தந்தம் கோடு சோடான களம்,
வார் அணிந்து இறுமாந்த வனமுலையும், மேகலையும், மணி நூபுரப் பாதம்,
வந்து எனது முன் நின்று, மந்தகாசமுமாக வல் வினையை மாற்றுவாயே;
ஆர மணி வானில் உறை தாரகைகள் போல நிறை ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி! அருள் வாமி! அபிராமியே! (2)

அலை போன்று சுருண்டு நீண்ட ஒளிபொருந்திய அழகான கருங்கூந்தலும் வானவில் போன்ற வடிவுடைய கரிய புருவம் காதுகளில் அணிந்துள்ள தாடங்கம், சந்திரனையொத்த முகப்பிரகாசம்நெற்றியில் இட்ட கஸ்தூரி திலகம் கூர்மையான அழகான இரு விழிகளும், இனிய வாக்கும், கொவ்வைப் பழம் போன்ற உதடு(களு)ம் சிறிய சிமிழ் போன்ற மூக்கும் அளவான பல் வரிசையும் சங்கு போன்ற கழுத்தும் கச்சம் அணிந்த மேலான மார்பகம் ஒட்டியாணம் மணிகளாலான சிலம்பு அணிந்த பாதங்களுமாக என் முன்னே தோன்றி ஒரு சிறு புன்றுவலால் என்னைத் தொடர்ந்து வரும் கொடிய வினைகளை போக்கிடுவாயே! நட்சத்திரக் கூட்டங்கள் அழகாக வானில் அணிவகுத்து விளங்குகின்ற ஆதிகடவூர் என்ற திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீஅம்ருதகடேஸ்வரரின் இடது பக்கத்தில் என்றும் இணைபிரியாமல் நிலைத்திருப்பவளே! அபயம் கொடுப்பவளே! எனக்கு அருள் பாலிப்பாயாக!

அபிராமியை அடைக்கலம் கொண்டால் நம் தலைவிதியையே நல்லபடியாக மாற்றி விடுவாள் என்பதற்கு பல வரலாறுகளை இந்நூலில் கண்டிருப்பீர்கள். தினம் தினம் அவள் திருச்சந்நிதியில் நடக்கும் அற்புதங்கள் ஏராளம். அவளின் திருப்பாதங்களை கெட்டியாகப் பிடித்துக் கொள்வோம். எந்த பயம் நம்மை எதுவும் செய்யாது.

அருள்மிகு அன்னை அபிராமவல்லியின் அருளடிகளே அடைக்கலம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

24. மீண்டும் சந்திப்போம்...

மன்னன் ஒருவனுக்கு ஒரு சந்தேகம். கடவுள் எங்கே, எவ்வளவு தூரத்தில் இருக்கிறார் என்று! எல்லோரும் வைகுண்டத்தில் இருக்கிறார், கைலாயத்தில் இருக்கிறார் என்கிறார்களே? அவைகள் எல்லாம் வெகு தொலைவில் அல்லவா இருக்கின்றன என்ற சிந்தனை மன்னுக்கு.

ஞானி சொன்னார் ''மன்னா! ஆதி மூலமே என்று கூப்பிட்டபோது உடனே கடவுள் வந்து யானையைக் காப்பாற்ற வில்லையா? திரௌபதி கௌரவர் சபையில் கண்ணா.. என்று கையற்ற நிலையில் கடவுளை அழைத்ததும் உடனே வந்து அவள் மானத்தைக் காப்பாற்றவில்லையா? ஏன், சிறு குழந்தை அழுதபோது ஓடோடி வந்து அம்பிகை பால் கொடுக்க வில்லையா? அப்படி என்றால் கடவுள் மிக அருகில் இருப்பதாகத்தானே பொருள்! வைகுண்டமோ, கைலாயமோ வேறெங்கும் இல்லை. உன் மனம்தான் வைகுண்டம். அது தான் கைலாயம். அதனால் தான் மனதில் மாசில்லாமல் இருக்க வேண்டுமென்று பெரியவர்கள் சொல்கிறார்கள். மாசில்லாத மனதில் தான் இறைவன் உறைகிறார். உள்ளன்போடு அழைத்தால் இறைவன் ஓடோடி வருவான். உள்ளுவார் உள்ளத்துள் உளன் என்பது தேவார வாக்கு என்றார் அந்த ஞானி. அவர் சொல்வது சரிதானே!

அந்த இறைவனை மனதில் வரிப்பது எப்படி? அவரை அடைவது எப்படி?

ஆதிசங்கர பகவத் பாதர் இறைவனை அடையும் மார்கம் பற்றி பஜகோவிந்தத்தில் பேசும் பொழுது,

' சத்சங்கத்வே, நிஸ்ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வே, நிர்மோகத்வம்
நிர்மோகத்வே நிச்சல தத்வம்
நிச்சல தத்வே ஜீவன் முக்திஹி'

என்கிறார். ஜீவன் முக்தி பெறும் வழியின் முதல் படி, 'சத்சங்கமே' , 'அன்பர் கூட்டம் கலத்தலே' என்று சொல்லுகிறார்.

சத் சங்கம் என்றால் என்ன? இறைவுணர்வு உள்ளவர்களின் குழு என்று பொருள் கொள்ளலாம். சாஸ்திர சம்பிரதாயங்கள் அனுசரித்து, ஆன்றோர்கள் காட்டிய வழியில் நடப்பவர்களே இச் சத்சங்கத்தில் இருப்பார்கள்.

' அறிந்தேன் எவரும் அறியா மறையை, அறிந்து கொண்டு
செறிந்தேன் நினது திருவடிக்கே, திருவே, வெருவிப்
பிறிந்தேன் நின் அன்பர் பெருமை எண்ணாத கரும நெஞ்சால்,
மறிந்தே விழும் நரகுக்குறவாய மனிதரையே'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'நினது பெருமையை, யாரும் அறிய முடியாத நினது பெருமையை அறிந்தேன். உனது திருவடியிலேயே கலந்து விட்டேன். நினது அன்பர்கள் பெருமையை எண்ணாத, தீவினை மிக்க, நரகத்தில் வீழ்ந்து படும் மனிதரை விட்டு விலகி விட்டேன்' என்று பாடுகிறார் பட்டர்.

இங்கே, அன்பர் கூட்டத்தின் பெருமை பேசப்படுகிறது.

'அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டு விட்டால்,

இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே' என்று பேசுகிறார் தாயுமானவர்.

'அங்கமெல்லாம் குறைந்தழுகும் தொழுனோயராயினும், அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே' என்று, சிவன் அடியார்கள் பற்றி பேசுவார் அப்பர் பெருமான்.

அன்பர் கூட்டத்திற்கு அப்படி என்ன பெருமை? அது ஏன் அவ்வளவு முக்கியமானதாகப் பேசப்படுகிறது?

இறைவனுக்கு, தனது அடி சேரும் அடியார்களை விட, தன் அன்பர்களின் அடி சேரும் அடியார்க்கும் அடியாரே மிகவும் ப்ரியமானவர்களாம். தன்னைப் பழித்தவர்களைக் கூட அவன் மன்னித்து விடுவான். ஆனல், தன் அடியார்களைப் பழித்தவர்களை அவன் ஒருபோதும் மன்னிப்பதே இல்லை.

மஹாவிஷ்ணுவின் அடியவரான அம்பரீஷனை அழிக்க ஒரு பூதத்தை ஏவி விட்ட, துர்வாசருக்கு அனைவருக்கும் அபயம் அளிக்கும் அந்த மஹாவிஷ்ணு, அபயம் கொடுக்கவில்லை. துர்வாசரை, அந்த அம்பரீஷனிடமே திருப்பி அனுப்பி வைத்தான்.

பகவானை விட உயர்ந்தது, அவனது கமலப் பாதங்கள். அந்தப் பாதங்களையே பற்றி இருக்கும் அடியார்கள் அல்லவோ மிகவும் உயர்ந்தவர்கள். அப்படி மிகவும் சிறந்தவர்களாக இருப்பதனால்தான் அந்த அன்பர் கூட்டம் கலந்து இருத்தலே அந்த இறைவனுக்கும் உகந்ததாக இருக்கிறது.

'அன்பர் கூட்டத்தோடு சேராமலும், அந்தப் பரமனை விடவும் உயர்ந்ததான பாகவதர்களைப் பற்றி நினையாமலும் இருக்கும் பாவம் செய்த மனிதர்களின் கூட்டிலிருந்து, அன்னையே, நான் பிரிந்து, கிளம்பி வந்துவிட்டேன்' என்று சொல்லுகிறார் பட்டர்.

விபீஷணன், பாவியாகிய ராவணனை விட்டுப் பிரிந்து, இராமனின் திருவடிகளைச் சேர்ந்தது போல் இங்கே, பட்டரும், இப்படிப்பட்ட அற்பர்களை விட்டுப் பிரிந்தேன் என்கிறார்!

'கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்

நற்றாஆள் தொழார் எனின்' --திருவள்ளுவர்

படிப்பதனால், கற்பதனால், என்ன பயன்? அனைத்தையும் அறிந்த அந்த இறைவனின் தாள் தொழுவது அல்லவோ கற்பதன் பயன்?

இங்கோ, பட்டர், 'எவரும் அறிய மாட்டா அந்த மறையை' அல்லவா அறிந்து கொண்டிருக்கிறார்! அந்த அறிவின், பயன், அந்த அறிவைக் கொடுத்தவளின் தாளிணைகளை அடைவதே அல்லவா!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த தாளினை அடைந்துவிட்டால் அன்றைக்கு அபிராமி பட்டருக்காக அமாவாசையையே பௌர்ணமியாக மாற்றிக்காட்டிய அம்பிகை, இன்றைக்கும் தன்னை வழிபடும் அன்பர்களது வாழ்வில் இருள்நீக்கி ஒளியேற்றி, அவர்கள் வேண்டியதை எல்லாம் அருள்புரியவே செய்கிறாள். இதோ... அம்மையின் அருளுக்கு அத்தாட்சியாய், அபிராமி அந்தாதியைப் பாராயணம் செய்ததால் தமது வாழ்வில் ஏற்பட்ட உன்னத அற்புதத்தை விவரிக்கிறார் தருமபுர ஆதீனம் முனைவர் ஸ்ரீமத் மௌன குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள்.

சுமார் 35 வருஷத்துக்கும் மேலாக அபிராமி அந்தாதி பாராயணம் செய்து வந்திருப்பவர் அவர்.

அபிராமி அந்தாதியில் ஒரு பாடல்..

வையம் துரகம் மதகரி மாமகுடம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் - பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கே அன்பு முன்பு
செய்யும் தவமுடையார்க்கு உளவாகிய சின்னங்களே

அபிராமி அந்தாதி பாராயணம் செய்த புண்ணியப் பலனாக பாராயணம் செய்த ஒரே வருடத்தில் அவர் சிவதீட்சை வாங்கிக் கொண்டு துறவறத்துக்கு வந்துவிட்டார். சந்நியாச தீட்சை வாங்கும் ஒருவரின் முன் ஏழு தலைமுறையினரும் பின் ஏழு தலைமுறையினரும் புண்ணியம் பெற்றவர்களாக, பிறவாப் பேரின்ப நிலையை அடைவார்கள் என்பது சாஸ்திரம். அபிராமி அந்தாதி பாராயணம் செய்த அவருக்கு இதைவிட வேறு பெரிய பேறு என்ன இருக்கிறது? எல்லாம் அபிராமி அம்பிகையின் அற்புதம்தான் என்கிறார் அவர்.

பொருந்திய ப்புரை, செப்புரை செய்யும் புணர்முலையாள்,
வருந்திய வஞ்சி, மருங்குல் மனோண்மணி, வார்சடையோன்,
அருந்திய நஞ்சு, அமுதாக்கிய அம்பிகை, அம்புயமேல்,
திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என் சென்னியதே

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது, ஆலகால விஷம் தோன்றியது. அதனைக் கண்டு அஞ்சி அனைவரும் ஓடியபோது, அந்தப் பரமேஸ்வரன், தானே முன்வந்து, அதனை அருந்திவிட்டான்! ஆனாலும், அந்த சிவனின் வயிற்றிக்குள் அண்டங்கள் அனைத்தும் இருக்கின்றன அல்லவா? அதனால், அம்பிகை, ஓடிவந்து சிவனாரின் கழுத்திலே கையை வைத்து, விஷம் அதற்குக் கீழே பரவாமல் தடுத்துவிட்டாள்! அப்படித் தடுத்ததன் மூலம், அண்டங்களைக் காத்தது மட்டுமின்றி, அந்த சிவனின் உயிரையும் காத்துவிட்டாள் என்று கூறுகிறார் பட்டர்!!

அவள், சிவபெருமான் அருந்திய நஞ்சு பரவாமல் மட்டும் செய்துவிடவில்லை; அவன் உயிரைக் காப்பதை மட்டும் செய்துவிடவில்லை - என்ன செய்தாள்? அவன் அருந்திய

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

நஞ்சானது அமுதாக மாறிவிடும்படி செய்துவிட்டாள்! ''அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை''!! நஞ்சை அருந்தியவன் இறவாமல் தடுத்தது மட்டுமல்ல; என்றுமே இறவாமல் இருக்கும்படியும் செய்து விட்டாள் அவள்!!

நீண்ட சடைமுடி கொண்ட ஈசன் அருந்திய நஞ்சினையும் அமுதாக்கி ஈசனையே வாழவைத்த சக்தி அந்த அபிராமி அன்னை ! நீலகண்டன் என பெயர் பெற்ற அந்த ஈசன் அந்த ஆலகாலவிஷத்தை உண்டும் கூட ஒன்றும் ஆகாமல் இருந்ததுஅபிராமி அன்னை அருள்கூர்ந்து அந்த விஷத்தையேஅமுதமாக ஆக்கியதால் அல்லவா !

இந்த விஷயத்தை சௌந்தர்ய லஹரி மிக அழகாகச் சொல்லுகிறது :

சுதா மப்யாச்வத்ய ப்ரதிபய-ஜராம்ருத்யு-ஹரிணீம்
விபத்யந்தே விச்வே விதி-சதமகாத்யா திவிஷத: ஐ
கராலம் யத் ஷ்வேலம் கபலிதவத: காலகலனா
ந சம்போஸ் தன் மூலம் தவ ஜனனி தாடங்க-மஹிமா

இதனை மிக அழகாக நம் காஞ்சி மஹா பெரியவா விளக்கும்போது சொல்லுகிறார்:

''அம்பாளைவிட மங்கள வஸ்து இல்லை. ஸர்வ மங்கள மாங்கல்யேஎன்பார்கள். அவளுடன் சேர்ந்திருப்பதாலே பரமேசுவரனும் மங்கள ஸ்வரூபியாகிறார். மங்களமே வடிவான அம்பிகை மகா சுமங்கலி.அவளுடைய சௌமாங்கலியத்துக்கு எப்படி பங்கம் உண்டாகமுடியும்? இதனால்தான் ஆலஹால விஷம் சாப்பிட்டுக்கூடப்பரமேசுவரன் சௌக்கியமாகவே இருக்கிறார் என்று ஆச்சாரியாள்ஸௌந்தரிய லஹரியில் கூறுகிறார். காதில் தோடு, நெற்றியில் குங்குமம், கழுத்தில் கருகுமணி இத்யாதி மங்களசின்னங்களெல்லாம் சுமங்கலி லக்ஷணம். அம்பாளும் காதில்தாடங்கம் அணிந்திருக்கிறாள். சாதாரண பனை ஓலையைத்தான்தாடங்கமாகப் போட்டுக் கொண்டிருக்கிறாள். தாலீபலாச தாடங்கம்என்று இதை ஸ்தோத்திரங்கள் சொல்கின்றன.

பழைய காலத்தில்எல்லோருமே படாடோபம் இல்லாமல் எளிமையிலேயே சுபிக்ஷமாக இருந்தார்கள் என்பதற்கு இது ஒரு திருஷ்டாந்தமாகத் தோன்றுகிறது. அம்பாளைப் போலவே எல்லா ஸ்திரீகளும் பனை ஓலையைத்தான்போட்டுக் கொண்டிருக்க வேண்டும். இதனால்தான் பிற்காலத்தில்வைரத்தோடு போட்டுக் கொள்கிற டாம்பீகம் வந்தபின் கூட, அதை வைர ஓலை என்றே சொல்கிற வழக்கம் உண்டாகியிருக்கிறது.

அம்பாளுடைய தாடங்கத்துக்கு வருவோம். மங்களச் சின்னமானதாடங்கம் அவள் காதிலிருந்து இறங்கக்கூடாது. அப்படியானால்பரமேசுவரன் எக்காலத்திலும் ஜீவிக்கத்தான் வேண்டும். இதனால்தான் அவள் ஆலஹால விஷம் உண்டும்கூட அது அவரைப்பாதிக்கவில்லை. இது உன் தாடங்க மகிமையம்மா! என்கிறார் ஆசாரியாள். திருவானைக்காவில் அகிலாண்டேசுவரியின் தாடங்கத்திலேயே ஸ்ரீ சக்ர, சிவ சக்ரப் பிரதிஷ்டை செய்து, அவளைஸௌம்ய மூர்த்தியாக்கின ஆசாரியாள், இப்படி இங்கே தவ ஜனனிதாடங்க மஹிமா என்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விஷத்தைச் சாப்பிட்டும் பரமேசுவரன் சொஸ்தமாக இருப்பதற்குக்காரணம், எந்த விஷத்தையும் முறிக்கிற மருந்தாக, அமிருத்தமாக, அம்பிகை அவரோடு சேர்ந்து இருப்பதுதான். வேத வாக்கியமான ஸ்ரீருத்திரத்தில் இப்படித்தான் சொல்லியிருக்கிறது. ருத்திரனாக கோரமாக இருக்கிற உனக்கு சிவா என்று ஒரு மங்கள சரீரம்இருக்கிறது. இந்த சிவாதான் லோகம் முழுவதற்கும் மருந்து. (சிவாவிச்வா ஹபேஷஜீ) லோகத்துக்கு மட்டும்தான் அது மருந்தா? இல்லை. ருத்திரனாக உனக்கும்கூட சிவாதான் மருந்து. (சிவாருத்ரஸ்ய பேஷஜீ) என்று வேதம் சொல்கிறது. கோரஸ்வரூபியையும் தன் பதிவிரத்யத்தால் மங்களமாக்கி, அவரைஎன்றென்றும் ஜீவிக்கும்படி செய்கிறவளை ஸ்திரீகள் ஆராதித்தால் பதிபக்தியும், தீர்க்க ஸௌமாங்கல்யம் ஸித்திக்கும்.''

இப்படி ஆலகால விஷமே அன்னை அருளினால் அமுதமாகமாறும் என்றால், எந்த கொடிய வினைப்பயன்தான் நம்மைஅழித்துவிட முஐயும்? அந்த அம்பிகை அனைத்து வினைகளையும் மாற்றி அருள்பவள் அல்லவா! நம்வினைகளையும் கூட அவள் மாற்றி அருள் புரிவாள்.

அபிராமி அம்மனைத் தரிசிப்போம். அனைத்து நலன்களையும் நாம் பெறுவோம். மீண்டும் சந்திப்போம்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பக்தி பாடல்கள் / தோத்திரங்கள்

அபிராமி அந்தாதி

கணபதி காப்பு

தாரமர் கொன்றையும் சண்பகமாலையும் சாத்தும் தில்லை
ஊரார் தம் பாகத்து உமைமைந்தனே! உலகு ஏழும் பெற்ற
சீர் அபிராமி அந்தாதி எப்போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே! நிற்க கட்டுரையே.

1. ஞானமும் நல்வித்தையும் பெற

உதிக்கின்ற செங்கதிர், உச்சித்திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக்குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்தன் விழித்துணையே.

2. பிரிந்தவர் ஒன்று சேர

துணையும் தொழும் தெய்வமும், பெற்றதாயும் சுருதிகளின்
பணையும், கொழுந்தும் பதி கொண்டவேரும் பனிமலர்பூங்
கணையும், கருப்புச்சிலையும், மென்பாசாங்குசமும், கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனமே.

3. குடும்பக் கவலையிலிருந்து விடுபட

அறிந்தேன் எவரும் அறியா மறையை, அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே, திருவே! வெருவிப்
பிறந்தேன் நின்அன்பர் பெருமைஎண்ணாதகரும நெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே.

4. உயர் பதவிகளை அடைய

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே!
கொன்றைவார்சடைமேல்
பனிதரும் திங்களும், பாம்பும், பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என்புந்தி எந்நாளும் பொருந்துகவே.

5. மனக்கவலை தீர

பொருந்திய முப்புரை! செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி! வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை! அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே.

6. மந்திர சித்தி பெற

சென்னியது உன்பொன் திருவடித்தாமரை; சிந்தையுள்ளே
மன்னியது உன் திருமந்திரம்; சிந்துர வண்ணப்பெண்ணே!
முன்னிய நின் அடி யாருடன் கூடி முறை முறையே
பன்னியது என்றும் உன் தன் பரமாகம பத்ததியே.

7. மலையென வரும் துன்பம் பனியென நீங்க

ததியுறு மத்திற் சுழலும் என்ஆவி தளர்விலதோர்
கதியுறும் வண்ணம் கருது கண்டாய்; கமலாலயனும்,
மதியுறு வேணி மகிழ்நனும், மாலும் வணங்கிஎன்றும்
துதியுறு சேவடியாய்! சிந்துரானன சுந்தரியே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8. பற்றுகள் நீங்கி பக்தி பெருகிட

சுந்தரி! எந்தை துணைவி! என் பாசத் தொடரைஎல்லாம்
வந்தரி; சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி; நீலி; அழியாத கன்னிகை; ஆரணத்தோன்
சுந்தரி; கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே.

9. அனைத்தும் வசமாக

கருத்தன, எந்தை தன் கண்ணன், வண்ணக் கனகவெற்பில்
பெருத்தன, பால்அழும் பிள்ளைக்கு நல்கின, பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும், செங்கைச் சிலையும், அம்பும்
முருத்தனமூரலும், நீயும், அம்மே! வந்துஎன்முன் நிற்கவே.

10. மோட்ச சாதனம் பெற

நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் நினைப்பது உன்னை;
என்றும் வணங்குவது உன்மலர்த்தாள்; எழுதாமறையின்
ஒன்றும் அரும் பொருளே! அருளே! உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே! அழியா முத்தி ஆனந்தமே!

11. இல்வாழ்க்கையில் இன்பம் பெற

ஆனந்தமாய் என் அறிவாய், நிறைந்த அமுதமுமாய்,
வான் அந்தமான வடிவுடையாள், மறை நான்கினுக்கும்
தான் அந்தமான சரணார விந்தம் தவளநிறக்
கானம் தம் ஆடரங்கம் எம்பிரான் முடிக்கண்ணியதே.

12. தியானத்தில் நிலைபெற

கண்ணியது உன்புகழ் கற்பது உன்; நாமம் கசிந்து பத்தி
பண்ணியது உன் இருபாதாம் புயத்தில்; பகல் இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து; நான் முன்செய்த
புண்ணியம் ஏது என் அம்மே புவி ஏழையும் பூத்தவளே.

13. வைராக்கிய நிலை எய்த

பூத்தவளே புவனம் பதினான்கையும்; பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே! கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே!
மாத்தவளே உன்னை அன்றிமற்றோர் தெய்வம் வந்திப்பதே!

14. தலைமை பெற

வந்திப்பவர் உன்னை வானவர், தானவர், ஆனவர்கள்;
சிந்திப்பவர் நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே;
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர்; பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண் ஒளியே.

15. பெருஞ்செல்வமும் பேரின்பமும் பெற

தண்ணளிக்கு என்றுமுன்னே பலகோடிதவங்கள் செய்வார்
மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார்? மதிவானவர் தம்
விண்ணளிக்கும் செல்வமும் அழியா முத்தி வீடுமன்றோ?
பண்ணளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே.

16. முக்காலமும் உணரும் திறன் உண்டாக

கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்து, கிளர்ந்து, ஒளிரும்
ஒளியே! ஒளிரும் ஒளிக்கிடமே எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே! வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்மே!
அளியேன் அறிவளவிற்கு அளவானது அதிசயமே.

17. கன்னிகைகளுக்கு நல்ல வரன் அமைய

அதிசயமான வடிவுடையாள், அரவிந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தரவல்லி, துணைஇரதி
பதிசயமானது அபசயம் ஆக முன் பார்த்தவர் தம்
மதிசயமாக அன்றோ வாமபாகத்தை வவ்வியதே.

18. மரண பயம் நீங்க

வவ்விய பாகத்து இறைவரும், நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும், உங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ளே

23. எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்க

கொள்ளேன் மனத்தில் நின்கோலம் அல்லாது; என்பர் கூட்டம் தன்னை
விள்ளேன்; பரசமயம் விரும்பேன்; வியன் மூவுலகுக்கு

கண்ணியது உன்புகழ் கற்பது உன்; நாமம் கசிந்து பத்தி
பண்ணியது உன் இருபாதாம் புயத்தில்; பகல் இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து; நான் முன்செய்த
புண்ணியம் ஏது என் அம்மே புவி ஏழையும் பூத்தவளே.

அதிசயமான வடிவுடையாள், அரவிந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தரவல்லி, துணைஇரதி
பதிசயமானது அபசயம் ஆக முன் பார்த்தவர் தம்
மதிசயமாக அன்றோ வாமபாகத்தை வவ்வியதே.

18. மரண பயம் நீங்க

வவ்விய பாகத்து இறைவரும், நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும், உங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன் என்மேல்வரும் போது வெளிநிற்கவே.

19. பேரின்ப நிலையடைய

வெளிநின்ற நின் திருமேனியைப்பார்த்தேன் விழியும் நெஞ்சும்,
களிநின்ற வெள்ளம் கரை கண்டதில்லை; கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றது என்ன திருவுளமோ?
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே.

20. வீடு வாசல் முதலிய செல்வங்கள் உண்டாக

உறைகின்ற நின் திருக்கோயிலில் நின்கேள்வர் ஒருபக்கமோ?
அறைகின்ற நான்மறையின் அடியோ? முடியோ? அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ? கஞ்சமோ? எந்தன் நெஞ்சமோ?
மறைகின்ற வாரிதியோ? பூரணாசல மங்கலையே.

21. அம்பிகையை வழிபடாமல் இருந்த பாவம் தொலைய

மங்கலை! செங்கலசம் முலையாள்! மலையாள்! வருணச்
சங்கலை செங்கை! சகலகலாமயில்! தாவுகங்கை
பொங்கு அலைதங்கும் புரிசடையோன் புடையாள்! உடையாள்!
பிங்கலை! நீலி! செய்யாள்! வெளியாள்! பசும் பொற்கொடியே.

22. இனிப் பிறவா நெறி அடைய

கொடியே! இளவஞ்சிக் கொம்பே எனக்கு வம்பே பழுத்த
படியே! மறையின் பரிமளமே! பனிமால் இமயப்
பிடியே! பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே!
அடியேன் இறந்து இங்கு இனிப்பிறவாமல் வந்தாண்டு கொள்ளே.

23. எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்க

கொள்ளேன் மனத்தில் நின்கோலம் அல்லாது; என்பர் கூட்டம் தன்னை
விள்ளேன்; பரசமயம் விரும்பேன்; வியன் மூவுலகுக்கு
உள்ளே, அனைத்தினுக்கும் புறம்பே உள்ளத்தே விளைந்த
கள்ளே! களிக்கும் களியே அளிய என் கண்மணியே.

24. நோய்கள் விலக

மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணிபுனைந்த
அணியே! அணியும் அணிக்கு அழகே! அணுகாதவர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே!
பணியேன் ஒருவரை நின் பத்மபாதம் பணிந்தபின்னே.

25. நினைத்த காரியம் நிறைவேற

பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன்; முதல் மூவருக்கும்
அன்னே! உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே!
என்னே! இனி உன்னையான் மறவாமல் நின்று ஏத்துவனே.

26. சொல்வாக்கும் செல்வாக்கும் பெருக

ஏத்தும் அடியவர் ஈரேழுலகினையும் படைத்தும்,
காத்தும், அழித்தும் திரிபவராம்; கமழ் பூங்கடம்பு
சாத்தும்குழல் அணங்கே! மணம் நாறும் நின்தாள் இணைக்கு என்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடத்தே.

27. மனநோய் அகல

உடைத்தனை வஞ்சப் பிறவியை; உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை; பத்மபதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை; நெஞ்சத்து அழுக்கை எல்லாம் நின் அருள்புனலால்
துடைத்தனை; சுந்தரி! நின்னருள் ஏதென்று சொல்லுவதே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

28. இம்மை மறுமை இன்பங்கள் அடைய

சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே.

29. எல்லா சித்திகளும் அடைய

சித்தியும், சித்திதரும் தெய்வமுமாகத் திகழும்
பராசத்தியும், சக்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார்
முத்தியும், முத்திக்கு வித்தும் ,வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும், புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே.

30. அடுத்தடுத்து வரும் துன்பங்கள் நீங்க

அன்றே தடுத்து! என்னை ஆண்டுகொண்டாய்; கொண்டதல்ல என்கை
நன்றே உனக்கு இனி நான் என்செயினும், நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற்றுகை நின் திருவுளமே;
ஒன்றே! பல உருவே! அருவே! என் உமையவளே!

31. மறுமையில் இன்பம் உண்டாக

உமையும், உமையொரு பாகனும் ஏக உருவில் வந்திங்கு
ஏமையும் தமக்கு அன்பு செய்ய வைத்தார்; இனி எண்ணுதற்குச்
சமையங்களும் இல்லை; ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை;
அமையும் அமையுறு தோளியர் மேல் வைத்த ஆசையுமே.

32. துர்மரணம் வராமலிருக்க

ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன் கைப்
பாசத்தில் அல்லல்பட இருந்தேனை, நின் பாதம் என்னும்
வாசக்கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டு கொண்ட
நேசத்தை என் சொல்லுவேன்? ஈசர்பாகத்து நேரிழையே!

33. இறக்கும் நிலையிலும் அம்பிகை நினைவோடு இருக்க

இழைக்கும் வினைவழியே ஆடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்து அஞ்சல் என்பாய்; அத்தர் சித்தமெல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமலைக் கோமளையே!
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே.

34. சிறந்த நன்செய் நிலங்கள் கிடைக்க

வந்தே சரணம் புகும் அடியாருக்கு வான்உலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும் பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே.

35. திருமணம் நிறைவேற

திங்கள் பசுவின் மணம் நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்கு ஒருதவம் எய்தியவா! எண்ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம் எய்துமோ? தரங்கக் கடலுள்
வெங்கண் பணியணைமேல் துயில்கூரும் விழுப்பொருளே.

36. பழைய வினைகள் வலிமை பெற

பொருளே! பொருள் முடிக்கும் போகமே! அரும்போகம் செய்யும்
மருளே! மருளில் வரும் தெருளே என் மனத்து வஞ்சத்து
இருளேதும் இன்றி ஒளிவெளியாகி இருக்கும் உன்தன்
அருளேது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே!

37. நவமணிகளைப் பெற

கைக்கே அணிவது கன்னலும் பூவும்; கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை; விட அரவின்
பைக்கே அணிவது பண்மணிக்கோவையும் பட்டும், எட்டுத்
திக்கே அணியும் திருவுடையான் இடம் சேர்பவளே!

38. வேண்டியதை வேண்டியவாறு அடைய

பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும், பனிமுறுவல்

43. தீமைகள் ஒழிய

பரிபுரச் சீறடி! பாசாங் குசை! பஞ்ச பாணி! இன்சொல்

ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன் கைப்
பாசத்தில் அல்லல்பட இருந்தேனை, நின் பாதம் என்னும்
வாசக்கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டு கொண்ட
நேசத்தை என் சொல்லுவேன்? ஈசர்பாகத்து நேரிழையே!

கைக்கே அணிவது கன்னலும் பூவும்; கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை; விட அரவின்
பைக்கே அணிவது பண்மணிக்கோவையும் பட்டும், எட்டுத்
திக்கே அணியும் திருவுடையான் இடம் சேர்பவளே!

38. வேண்டியதை வேண்டியவாறு அடைய

பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும், பனிமுறுவல்
தவளத் திருநகையும் துணையா எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணை முலையாள்
அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே.

39. கருவிகளைக் கையாளும் வலிமை பெற

ஆளுகைக்கு உன் தன் அடித்தாமரைகள் உண்டு; அந்தகன்பால்
மீளுகைக்கு உன் தன் விழியின் கடைஉண்டு; மேல் இவற்றின்
மூளுகைக்கு என்குறை; நின்குறையே அன்று; முப்புரங்கள்
மாளுகைக்கு அம்பு தொடுத்த வில்லான் பங்கில் வாள்நுதலே!

40. பூர்வ புண்ணியம் பலன்தர

வாணுதல் கண்ணியை, விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே.

41. நல்லடியார் நட்புப் பெற

புண்ணியம் செய்தனமே மனமே! புதுப் பூங்குவளைக்
கண்ணியும், செய்ய கணவரும் கூடி நம் காரணத்தால்
நண்ணி இங்கே வந்து தம் அடியார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேல் பத்மபாதம் பதித்திடவே.

42. உலகினை வசப்படுத்த

இடம் கொண்டு விம்மி, இணைகொண்டு இறுகி, இளகி, முத்து
வடம்கொண்ட கொங்கை மலை கொண்டு, இறைவர் வலிய நெஞ்சை
நடம்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப்பரிபுரையே.

43. தீமைகள் ஒழிய

பரிபுரச் சீறடி! பாசாங் குசை! பஞ்ச பாணி! இன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
பரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப்புச் சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே.

44. பிரிவுணர்ச்சி அகல

தவளே! இவள் எங்கள் சங்கரனார் மனை மங்கலமாம்
அவளே, அவர் தமக்கு அன்னையும் ஆயினள்; ஆகையினால்
இவளே, கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்
துவளேன், இனியொரு தெய்வம் உண்டாக மெய்த்தொண்டு செய்தே.

45. உலகோர் பழியிலிருந்து விடுபட

தொண்டு செய்யாது நின் பாதம் தொழாது, துணிந்து இச்சையே
பண்டு செய்தார் உளரோ? இலரோ? அப்பரிசு அடியேன்
கண்டு செய்தால் அது கைதவமோ? அன்றிச் செய்தவமோ?
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே; பின் வெறுக்கை அன்றே.

46. நல்நடத்தையோடு வாழ

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம் அடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே; புது நஞ்சைஉண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்துபொன்னே!
மறுக்கும் தகைமைகள் செய்யினும், யான் உன்னை வாழ்த்துவேனே!

47. யோகநிலை அடைய

வாழும்படி ஒன்று கண்டு கொண்டேன்; மனத்தே ஒருவர்
வீழும்படி அன்று, விள்ளும் படி அன்று, வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

48. உடல் பற்று நீங்க

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதிந்து நெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப்போது இருப்பார் பின்னும் எய்துவரோ;
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே.

49. மரணத் துன்பம் இல்லாதிருக்க

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி வெங்கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது வளைக்கை அமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சல்என்பாய்;
நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே.

50. அம்பிகையை நேரில் காண

நாயகி; நான்முகி; நாராயணி; கை நளின பஞ்ச
சாயகி; சாம்பவி; சங்கரி; சாமளை; சாதிநச்சு
வாயகி; மாலினி; வாராகி; சூலினி; மாதங்கி என்று
ஆயகி ஆதி உடையாள் சரணம் அரண் நமக்கே.

51. மோகம் நீங்க

அரணம் பொருள் என்றருள் ஒன்றிலாத அசுரர் தங்கள்
முரண்அன்றழிய முனிந்த பெம்மானும், முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன் அடியார்
மரணம், பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே.

52. பெருஞ்செல்வம் அடைய

வையம், துரகம், மதகரி, மாமகுடம், சிவிகை
பெய்யும் கனகம், பெருவிலை ஆரம், பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு, அன்பு முன்பு
செய்யும் தவம் உடையார்க்கு உளவாகிய சின்னங்களே.

53. பொய்யுணர்வு நீங்க

சின்னஞ்சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்,
பென்னம் பெரிய முலையும், முத்தாரமும் பிச்சிமொய்த்து
கன்னங்கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில் வைத்துத்
தன்னந்தனி இருப்பார்க்கு இது போலும் தவமில்லையே.

54. கடன் தீர

இல்லாமை சொல்லி ஒருவர் தம்பால்சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல், நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம்பால் ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

55. மோனநிலை எய்த

மின்னாயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்றது
அன்னாள்; அகமகிழ் ஆனந்தவல்லி; அருமறைக்கு
முன்னாய் நடுஎங்குமாய் முடிவாய முதல்விதன்னை
உன்னாது ஒழியினும், உன்னினும் வேண்டுவது ஒன்று இல்லையே.

56. யாவரையும் வசீகரிக்கும் ஆற்றல் உண்டாக

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலம் எங்குமாய்
நின்றாள், அனைத்தையும் நீங்கி நிற்பாள்என்தன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா; இப்பொருள் அறிவார்
அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே.

57. வறுமை ஒழிய

ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு அண்டமெல்லாம்
உய்ய அறம்செய்யும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உன்தன் மெய்யருளே.

58. மனஅமைதி பெற

63. அறிவு தெளிவோடு இருக்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வையம், துரகம், மதகரி, மாமகுடம், சிவிகை
பெய்யும் கனகம், பெருவிலை ஆரம், பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு, அன்பு முன்பு
செய்யும் தவம் உடையார்க்கு உளவாகிய சின்னங்களே.

ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு அண்டமெல்லாம்
உய்ய அறம்செய்யும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உன்தன் மெய்யருளே.

58. மனஅமைதி பெற

அருணாம் புயத்தும் என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயத்தும் முலைத்தையல் நல்லாள், தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்,
சரணாம் புயமும் அல்லாற் கண்டிலேன் ஒருதஞ்சமுமே.

59. பிள்ளைகள் நல்லவர்களாக வளர

தஞ்சம் பிறதில்லை ஈதல்லது என்று உன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன் ஒன்றை; நீள்சிலையும்
அஞ்சும் அம்பும் மிக்கலராக நின்றாய்; அறியார் எனினும்
பஞ்சு அஞ்சும் மெல்லடியார் அடியார் பெற்ற பாலரையே.

60. மெய்யுணர்வு பெற

பாலினும் சொல் இனியாய்! பனி மாமலர்ப்பாதம் வைக்க
மாலினும் தேவர் வணங்கநின்றோன் கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு
நாலினும் சாலநன்றோ அடியேன் முடைநாய்த்தலையே?

61. மாயையை வெல்ல

நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந்தாய் என்ன பேறுபெற்றேன்?
தாயே! மலைமகளே! செங்கண்மால் திருத்தங்கச்சியே.

62. எத்தகைய அச்சமும் அகல

தங்கச்சிலை கொண்டு தானவர் முப்புரம் சாய்த்து, மத
வெங்கண் கரிபுரி போர்த்த செஞ்சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி! கோகனகச்
செங்கைக் கரும்பும், அலரும் எப்போதும் என் சிந்தையதே.

63. அறிவு தெளிவோடு இருக்க

தேறும்படி சில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும்பொருள் குன்றில்கொட்டும் தறிகுறிக்கும்; சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்
வேறும் சமயம் உண்டென்று கொண்டாடிய வீணருக்கே.

64. பக்தி பெருக

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்க அன்பு
பூணேன்; உனக்கு அன்பு பூண்டு கொண்டேன்; நின்புகழ்ச்சியன்றிப்
பேணேன்; ஒருபொழுதும் திருமேனி பிரகாசமின்றிக்
காணேன் இருநிலமும் திசை நான்கும் ககனமுமே.

65. ஆண்மகப்பேறு அடைய

ககனமும், வானமும், புவனமும் காணவிற் காமன் அங்கம்
தகனம்முன் செய்த தவப்பெருமாற்குத் தடக்கையும் செம்
முகனும் முந்நான்கு இருமூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயது அன்றோ? வல்லி நீ செய்த வல்லபமே!

66. கவிஞராக

வல்லபம் ஒன்றறியேன்; சிறியேன் நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்று ஒன்றிலேன் பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய்; வினையேன்தொடுத்த
சொல் அவமாயினும் நின்திருநாமங்கள் தோத்திரமே.

67. பகைவர்கள் அழிய

தோத்திரம் செய்து, தொழுது, மின்போலும் நின் தோற்றம்ஒரு
மாத்திரைப் போதும் மனதில் வையாதவர் வண்மை, குலம்
கோத்திரம், கல்வி, குணம், குன்றி நாளும் குடில்கள்தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்கு உழலாநிற்பர் பாரெங்குமே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

68. நிலம் வீடு போன்ற செல்வங்கள் பெருக

பாரும், புனலும், கனலும், வெங்காலும், படர்விசும்பும்,
ஊரும் முருகு சுவைஒளி ஊறொலி ஒன்றுபடச்
சேரும் தலைவி, சிவகாமசுந்தரி சீரடிக்கே
சாரும் தவமுடையார் படையாத தனம் இல்லையே.

69. சகல சௌபாக்கியங்களும் அடைய

தனந்தரும்; கல்வி தரும்; ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும்; தெய்வ வடிவுந்தரும்; நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும்; நல்லன எல்லாம் தரும்; அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

70. நுண் கலைகளில் சித்தி பெற

கண்களிக்கும்படி கண்டுகொண்டேன் கடம்பாடவியில்
பண்களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி மதங்கர் குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டிதன் பேரழகே.

71. மனக்குறைகள் தீர

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாதவல்லி; அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம் புயத்தாள்; பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றுநெஞ்சே இரங்கேல் உனக்கு என் குறையே!

72. பிறவிப் பிணி தீர

என்குறை தீரநின்று ஏத்துகின்றேன்; இனி யான் பிறக்கின்
நின்குறையே அன்றி யார் குறை காண்; இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்?
தன்குறை தீர எங்கோன் சடைமேல்வைத்த தாமரையே.

73. குழந்தைப் பேறு உண்டாக

தாமம் கடம்பு; படைபஞ்சபாணம்; தனுக்கரும்பு;
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது; எமக்கென்று வைத்த
சேமம் திருவடி; செங்கைகள் நான்கு; ஒளி செம்மை; அம்மை
நாமம் திரிபுரை; ஒன்றோடு இரண்டு நயனங்களே.

74. தொழிலில் மேன்மை அடைய

நயனங்கள் மூன்றுடை நாதனும், வேதமும், நாரணனும்
அயனும் பரவும் அபிராமவல்லி அடியிணையைப்
பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும், பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.

75. விதியை வெல்ல

தங்குவர் கற்பகத் தருவின் நீழலில்; தாயரின்றி
மங்குவர், மண்ணில் வழுவாப் பிறவியை; மால்வரையும்
பொங்குவர் அழியும்! ஈரேழ்புவனமும் பூத்த உந்திக்
கொங்கிவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே.

76. தனக்கு உரிமையானதைப் பெற

குறித்தேன் மனத்தில் நின்கோலம் எல்லாம்; நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலிவருகின்ற நேர்வழி; வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்பிரான் ஒருகூற்றை மெய்யில்
பறித்தே குடிபுகுதும் பஞ்சபாண பயிரவியே.

77. பகை அச்சம் நீங்க

பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்சபாணி, வஞ்சவர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி, காளி ஒளிரும்கலா
வயிரவி, மண்டலி, மாலினி, சூலி வராகி என்றே
செயிரவி நான்மறை சேர்திருநாமங்கள் செப்புவரே.

78. சகல செல்வங்களையும் அடைய

83. ஏவலர் பலர் உண்டாக

என்குறை தீரநின்று ஏத்துகின்றேன்; இனி யான் பிறக்கின்
நின்குறையே அன்றி யார் குறை காண்; இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்?
தன்குறை தீர எங்கோன் சடைமேல்வைத்த தாமரையே.

பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்சபாணி, வஞ்சவர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி, காளி ஒளிரும்கலா
வயிரவி, மண்டலி, மாலினி, சூலி வராகி என்றே
செயிரவி நான்மறை சேர்திருநாமங்கள் செப்புவரே.

78. சகல செல்வங்களையும் அடைய

செப்பும், கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராமவல்லி! அணிதிரளக்
கொப்பும், வயிரக் குழையும், விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத்தேன்என் துணைவிழிக்கே.

79. கட்டுகளில் இருந்து விடுபட

விழிக்கே அருளுண்டு; அபிராமவல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு; எமக்கு அவ்வழி கிடக்கப்
பழிக்கே சுழன்று எம் பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டினியே.

80. பெற்ற மகிழ்ச்சி நிலைத்திட

கூட்டியவா! என்னைத் தன் அடியாரில் கொடியவினை
ஓட்டியவா! எண்கண் ஓடியவா! தன்னை உள்ளவண்ணம்
காட்டியவா! கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா!
ஆட்டியவா நடம் ஆடகத்தாமரை ஆரணங்கே.

81. நன்னடத்தை உண்டாக

அணங்கே! அணங்குகள் நின் பரிவாரங்கள் ஆகையினால்
வணங்கேன்; ஒருவரை வாழ்த்துகிலேன்; நெஞ்சில் வஞ்சகரோடு
இணங்கேன் எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன்; அறிவொன்றிலேன் எண்கண் நீவைத்த பேரளியே.

82. மன ஒருமைப்பாடு அடைய

அளியார் கமலத்தில் ஆரணங்கே! அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திருமேனியை உள்ளுதொறும்
களியாகி, அந்தக்கரணங்கள் விம்மி, கரைபுரண்டு,
வெளியாய்விடின், எங்ஙனே மறப்பேன் நின்விரகினையேன்.

83. ஏவலர் பலர் உண்டாக

விரவும் புதுமலர் இட்டு நின்பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்ச வல்லார், இமையோர் எவரும்
பரவும் பதமும், அயிராவதமும், பகீரதியும்
உரவும் குலிசமும், கற்பகக் காவும் உடையவரே.

84. சங்கடங்கள் தீர

உடையாளை, ஒல்கு செம்பட்டு உடையாளை; ஒளிர்மதிசெஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடையாளை, தயங்குநுண்ணூல்
இடையாளை, எங்கள்பெம்மான் இடையாளை, இங்கு என்னை இனிப்
படையாளை, உங்களையும் படையாவண்ணம் பார்த்திருமே.

85. துன்பங்கள் நீங்க

பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும், பனிச்சிறை வண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும், கரும்பும் என் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும் சிற்றிடையும்,
வார்க்குங்கும முலையும், முலைமேல் முத்துமாலையுமே.

86. ஆயுத பயம் நீங்க

மாலயன் தேட, மறைதேட, வானவர் தேட, நின்ற
காலையும், சூடகக் கையையும், கொண்டு, கதித்தகப்பு
வேலை வெங்காலன் என்மேல் விடும்போது வெளிநில்கண்டாய்;
பாலையும் தேனையும், பாகையும் போலும் பணிமொழியே.

87. செயற்கரிய செய்து புகழ் பெற

மொழிக்கும், நினைவுக்கும் எட்டாத நின் திருமூர்த்தி என்தன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால்! விழியால் மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படி ஒருபாகம் கொண்டாளும் பராபரையே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

88. எப்போதும் அம்பிகை அருள் பெற

பரம் என்று உனை அடைந்தேன் தமியேனும்; உன் பக்தருக்குள்
தரம் அன்று இவன்என்று தள்ளத்தகாது; தரியலர் தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில்வாங்கிய போதில் அயன்
சிரம் ஒன்று செற்ற கையான் இடப்பாகம் சிறந்தவளே!

89. யோக சித்தி பெற

சிறக்கும் கமலத் திருவே! நின்சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும், நின் துணைவரும் நீயும் துரியம் அற்ற
உறக்கம் தரவந்து உடம்போடு உயிர் உறவற்ற, அறிவு
மறக்கும் பொழுது, என்முன்னே வரல்வேண்டும் வருந்தியுமே.

90. கணவன் மனைவி கருத்து வேற்றுமை நீங்க

வருந்தா வகைஎன் மனத்தாமரையினில் வந்துபுகுந்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனிஎனக்குப்
பொருந்தாது ஒருபொருள் இல்லை; விண்மேவும் புலவருக்கு
விருந்தாக, வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே.

91. அரசாங்கச் செயலில் வெற்றி பெற

மெல்லிய நுண் இடைமின் அனையாளை, விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன் அனையாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும்அடியாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம்தருமே.

92. மனநிலை பக்குவமடைய

பதத்தே உருகி, நின்பாதத்திலே மனம் பற்றி, உன்தன்
இதத்தே ஒழுக அடிமைகொண்டாய்; இனியான் ஒருவர்
மதத்தே மதிமயங்கேன்; அவர் போன வழியும் செல்லேன்;
முதல்தேவர் மூவரும், யாவரும் போற்றும் முகிழ்நகையே.

93. உள்ளத்தில் ஒளி உண்டாக

நகையே இஃதிந்த ஞாலம் எல்லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை; மானே முதுகண்; முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது; நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.

94. மனநிலை தூய்மையாக

விரும்பித் தொழும் அடியார், விழிநீர்மல்கி மெய்புளகம்
அரும்பி, ததும்பிய ஆனந்தமாகி; அறிவிழந்து,
சுரும்பிற் களித்து மொழி தடுமாறி, முன் சொன்னஎல்லாம்
தரும்பித்தர் ஆவரென்றால், அபிராமி சமயம் நன்றே.

95. மன உறுதி பெற

நன்றே வருகினும், தீதே விளைகினும், நான் அறிவது
ஒன்றேயும் இல்லை; உனக்கே பரம் எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனதென்று அளித்து விட்டேன்; அழியாத குணக்
குன்றே! அருட்கடலே! இமவான் பெற்ற கோமளமே!

96. எங்கும் பெருமை பெற

கோமள வல்லியை அல்லியம் தாமரைக்கோயில் வைகும்
யாமள வல்லியை, ஏதம் இலாளை, எழுதரிய
சாமள மேனிச் சகலகலா மயில் தன்னைத் தம்மால்
ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் ஆதிபரே.

97. புகழும் அறமும் வளர

ஆதித்தன், அம்புலி, அங்கி, குபேரன், அமரர்தங்கோன்
போதிற் பிரமன், புராரி, முராரி, பொதியமுனி,
காதிப் பொருபடைக் கந்தன், கணபதி, காமன் முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.

98. வஞ்சகர் செயல்களிலிருந்து பாதுகாப்பு பெற

100. அம்பிகையை மனத்தில் காண

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதத்தே உருகி, நின்பாதத்திலே மனம் பற்றி, உன்தன்
இதத்தே ஒழுக அடிமைகொண்டாய்; இனியான் ஒருவர்
மதத்தே மதிமயங்கேன்; அவர் போன வழியும் செல்லேன்;
முதல்தேவர் மூவரும், யாவரும் போற்றும் முகிழ்நகையே.

ஆதித்தன், அம்புலி, அங்கி, குபேரன், அமரர்தங்கோன்
போதிற் பிரமன், புராரி, முராரி, பொதியமுனி,
காதிப் பொருபடைக் கந்தன், கணபதி, காமன் முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.

98. வஞ்சகர் செயல்களிலிருந்து பாதுகாப்பு பெற

தைவந்து நின்னடித் தாமரைசூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும், தலைவந்த ஆறும் கரந்தது எங்கே?
மெய்வந்த நெஞ்சில் அல்லால் ஒருகாலும் விரகர் தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புக அறியா மடப் பூங்குயிலே.

99. அருள் உணர்வு வளர

குயிலாய் இருக்கும் கடம்படாவியிடை; கோல இயல்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை; வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில்; கமலத்தின் மீது அன்னமாம்
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே.

100. அம்பிகையை மனத்தில் காண

குழையைத் தழுவிய ஒன்றை அம்தார் கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந்தோளும், கரும்புவில்லும்
விழையப்பொருதிறல்வேரி அம்பாணமும்; வெண்ணகையும்,
உழையப் பொருகண்ணும், நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றனவே.

101. நூற்பயன்

ஆத்தாளை, எங்கள் அபிராமவல்லியை, அண்டம் எல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூநிறத்தாளை, புவிஅடங்காக்
காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும், கரும்பும், அங்கை
சேர்த்தாளை, முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கு இல்லையே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அபிராமி அம்மை பதிகங்கள்

பதிகம் - 1

காப்பு

தூயதமிழ்ப் பாமாலை சூட்டுதற்கு மும்மதம், நால்
வாய், ஐங் கரன்தாள் வழுத்துவாம் - நேயர்நிதம்
எண்ணும் புகழ்க்கடவூர் எங்கள்அபி ராமவல்லி
நண்ணும்பொற் பாதத்தில் நன்கு

நூல்

பதினாறு செல்வங்களும் பெற

கலையாத கல்வியும், குறையாத வயதும், ஓர் கபடு வாராத நட்பும்,
கன்றாத வளமையும், குன்றாத இளமையும், கழுபிணி இலாத உடலும்,
சலியாத மனமும், அன்பு அகலாத மனைவியும், தவறாத சந்தானமும்,
தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும், தடைகள் வாராத கொடையும்,
தொலையாத நிதியமும், கோணாத கோலும், ஒரு துன்பம் இல்லாத வாழ்வும்,
துய்ய நின்பாதத்தில் அன்பும் உதவிப், பெரிய தொண்டரொடு கூட்டு கண்டாய்;
அலைஆழி அறி துயில்கொள் மாயனது தங்கையே! ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி! அருள் வாமி! அபிராமியே! (1)

கொடிய வினை தீர

கார் அளக பந்தியும், பந்தியின் அலங்கலும், கரிய புருவச் சிலைகளும்,
கர்ண குண்டலமும், மதி முக மண்டலமும், நுதல் கத்தூரிப் பொட்டும் இட்டுக்,
கூர் அணிந்திடு விழியும், அமுத மொழியும், சிறிய கொவ்வையின் கனி அதரமும்,
குமிழ் அனைய நாசியும், குந்த நிகர் தந்தமும் கோடு சோடான களமும்,
வார் அணிந்து இறுமாந்த வனமுலையும், மேகலையும், மணி நூபுரப் பாதமும்,
வந்து எனது முன் நின்று, மந்தகாசமுமாக வல் வினையை மாற்றுவாயே;
ஆர மணி வானில் உறை தாரகைகள் போல நிறை ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி! அருள் வாமி! அபிராமியே! (2)

உயர் பதவிகள் பெற

மகர வார் குழை மேல் அடர்ந்து, குமிழ் மீதினில் மறைந்து, வாளைத் துறந்து,
மைக் கயலை வென்ற நின் செங்கமல விழி அருள் வரம் பெற்ற பேர்கள் அன்றோ-
செகம் முழுதும் ஒற்றைத் தனிக் குடை கவித்து, மேல் சிங்க ஆதனத்தில் உற்றுச்,
செங்கோலும், மனு நீதி முறைமையும் பெற்று, மிகு திகிரி உலகு ஆண்டு, பின்பு
புகர் முகத்து ஐராவதப் பாகர் ஆகி, நிறை புத்தேளிர் வந்து போற்றிப்
போக தேவேந்திரன் எனப் புகழ விண்ணில் புலோமசையொடும் சுகிப்பர்;
அகர முதல் ஆகி வளர் ஆனந்த ரூபியே! ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி! அருள் வாமி! அபிராமியே! (3)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உறவுகளோடு உறவாட

மறி கடல்கள் ஏழையும், திகிரி இரு நான்கையும், மாதிரக் கரி எட்டையும்,
மா நாகம் ஆனதையும், மா மேரு என்பதையும், மா கூர்மம் ஆனதையும், ஓர்
பொறி அரவு தாங்கிவரு புவனம் ஈர் ஏழையும், புத்தேளிர் கூட்டத்தையும்,
பூமகளையும், திகிரி மாயவனையும், அரையில் புலி ஆடை உடையானையும்,
முறை முறைகளாய் ஈன்ற முதியவளாய்ப், பழைமை முறைமை தெரியாத நின்னை-
மூவுலகில் உள்ளவர்கள் வாலை என்று அறியாமல் மொழிகின்றது ஏது சொல்வாய்?
அறிவு நிறை விழுமியர்தம் ஆனந்த வாரியே! ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி! அருள் வாமி! அபிராமியே! (4)

வளமாக வாழ

வாடாமல் உயிர் எனும் பயிர் தழைத்து ஓங்கி வர, அருள் மழை பொழிந்தும், இன்ப
வாரிதியிலே நின்னது அன்பு எனும் சிறகினால் வருந்தாமலே அணைத்துக்,
கோடாமல் வளர் சிற்றெறும்பு முதல் குஞ்சரக் கூட்டம் முதலான சீவ
கோடிகள் தமக்குப் புசிக்கும் புசிப்பினைக் குறையாமலே கொடுத்தும்,
நீடாழி உலகங்கள் யாவையும் நேயமாய் நின் உதர பந்தி பூக்கும்
நின்மலி! அகிலங்களுக்கு அன்னை என்று ஓதும்; நீலி என்று ஓதுவாரோ?
ஆடாய நான்மறையின் வேள்வியால் ஓங்கு புகழ் ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி! அருள் வாமி! அபிராமியே! (5)

செய் தொழில் சிறக்க

பல் குஞ்சரம் தொட்டு எறும்பு கடையானது ஒரு பல் உயிர்க்கும், கல் இடைப்
பட்ட தேரைக்கும், அன்று உற்பவித்திடு கருப் பை உறு சீவனுக்கும்,
மல்கும் சராசரப் பொருளுக்கும், இமையாத வானவர் குழாத்தினுக்கும்,
மற்றும் ஒரு மூவருக்கும், யாவருக்கும், அவரவர் மனச் சலிப்பு இல்லாமலே,
நல்கும் தொழில் பெருமை உண்டாய் இருந்தும், மிகு நவ நிதி உனக்கு இருந்தும்,
நான் ஒருவன் வறுமையில் சிறியன் ஆனால், அந் நகைப்பு உனக்கே அல்லவோ?
அல் கலந்து, உம்பர் நாடு அளவு எடுக்கும் சோலை ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி! அருள் வாமி! அபிராமியே! (6)

வளம் பெறுக

நீடு உலகங்களுக்கு ஆதாரமாய் நின்று, நித்தமாய், முத்தி வடிவாய்,
நியமமுடன் முப்பத்து இரண்டு அறம் வளர்க்கின்ற நீ மனைவியாய் இருந்தும்,-
வீடு வீடுகள் தோறும் ஓடிப் புகுந்து, கால் வேசற்று, இலச்சையும் போய்,
வெண் துகில் அரைக்கு அணிய விதியற்று, நிர்வாண வேடமும் கொண்டு, கைக்கு ஓர்
ஓடு ஏந்தி, நாடு எங்கும் உள்ளம் தளர்ந்து நின்று, உன்மத்தன் ஆகி, அம்மா!
உன் கணவன் எங்கெங்கும் ஐயம் புகுந்து, ஏங்கி, உழல்கின்றது ஏது சொல்வாய்?
ஆடு கொடி மாடமிசை மாதர் விளையாடி வரும் ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி! அருள் வாமி! அபிராமியே! (7)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மன இருள் அகல

ஞானம் தழைத்து, உன் சொரூபத்தை அறிகின்ற நல்லோர் இடத்தினில் போய்,
நடுவினில் இருந்து, உவந்து, அடிமையும் பூண்டு, அவர் நவிற்றும் உபதேசம் உட்கொண்டு,
ஈனம்தனைத் தள்ளி எனது, நான் எனும் மானம் இல்லாமலே துரத்தி,
இந்திரிய வாயில்களை இறுகப் புதைத்து, நெஞ்சு இருள் அற, விளக்கு ஏற்றியே-
வான் அந்தம் ஆன விழி அன்னமே! உன்னை என் அகத் தாமரைப் போதிலே
வைத்து, வேறே கவலை அற்று, மேல் உற்ற பர வசம் ஆகி, அழியாதது ஓர்
ஆனந்த வாரிதியில் ஆழ்கின்றது என்று காண்? ஆதி கடவூரின் வாழ்வே?
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி! அருள் வாமி! அபிராமியே! (8)

மனத்துயர் களைய

சலதி உலகத்தில் சராசரங்களை ஈன்ற தாய் ஆகில், எனக்குத்
தாய் அல்லவோ? யான் உன் மைந்தன் அன்றோ? எனது சஞ்சலம் தீர்த்து, நின்றன்
முலை சுரந்து ஒழுகு பால் ஊட்டி, என் முகத்தை உன் முந்தானையால் துடைத்து,
மொழிகின்ற மழலைக்கு உகந்துகொண்டு, இள நிலா முறுவல் இன்புற்று, அருகில் யான்
குலவி விளையாடல் கொண்டு, அருள் மழை பொழிந்து, அங்கை கொட்டி, வா என்று அழைத்துக்,
குஞ்சர முகன், கந்தனுக்கு இளையன் என்று எனைக் கூறினால், ஈனம் உண்டோ?
அலை கடலிலே தோன்றும் ஆராத அமுதமே! ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி! அருள் வாமி! அபிராமியே! (9)

மரணபயம் நீங்க

கைப் போது கொண்டு, உன் பதப் போது தன்னில் கணப் போதும் அர்ச்சிக்கிலேன்;
கண் போதினால், உன் முகப் போது தன்னை, யான் கண்டு தரிசனை புரிகிலேன்;
முப் போதில் ஒரு போதும், என் மனப் போதிலே முன்னி, உன் ஆலயத்தின்
முன் போதுவார் தமது பின் போத நினைகிலேன்; மோசமே போய் உழன்றேன்;
மைப் போதகத்திற்கு நிகர் எனப் போது எரு- மைக் கடா மீது ஏறியே,
மா கோர காலன் வரும்போது, தமியேன் மனம் கலங்கித் தியங்கும்
அப் போது, வந்து உன் அருட்போது தந்து அருள்; ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி! அருள் வாமி! அபிராமியே! (10)

பிறவித் துன்பங்கள் போக்க

மிகையும் துரத்த, வெம் பிணியும் துரத்த, வெகுளி ஆனதும் துரத்த,
மிடியும் துரத்த, நரை திரையும் துரத்த, மிகு வேதனைகளும் துரத்தப்,
பகையும் துரத்த, வஞ்சனையும் துரத்தப், பசி என்பதும் துரத்தப்,
பாவம் துரத்தப், பதி மோகம் துரத்தப், பல காரியமும் துரத்த,
நகையும் துரத்த, ஊழ் வினையும் துரத்த, என் நாளும் துரத்த, வெகுவாய்
நா வறண்டு ஓடிக், கால் தளர்ந்திடும் என்னை நமனும் துரத்துவானோ?
அகில உலகங்கட்கும் ஆதார தெய்வமே! ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி! அருள் வாமி! அபிராமியே! (11)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதிகம் - 2

பக்தி பெருக

கங்கையொடு தும்பையும் அணிந்தவர் வியக்கும் கலா மதியை நிகர் வதனமும்,
கருணை பொழி விழிகளும், விண் முகில்கள் வெளிறெனக் காட்டிய கரும் கூந்தலும்,
சங்கை இல்லாது ஒளிரும் மாங்கல்ய தாரணம் தங்கு மணி மிடறும், மிக்க
சதுர் பெருகு துங்க பாசாங்குசம் இலங்கு கர தலமும், விரல் அணியும் அரவும்,
புங்கவர்க்கு அமுது அருளும் அந்தர குசங்களும், பொலியும் நவமணி நூபுரம்
பூண்ட செஞ் சேவடியை நாளும் புகழ்ந்துமே- போற்றி என வாழ்த்த, விடை மேல்
மங்களம் மிகுந்த நின் பதியுடன் வந்து, அருள் செய்; வளர் திருக் கடவூரில் வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ் வாமி! அபிராமி உமையே! (1)

அருள் பெறுக

சந்திர சடாதரி! முகுந்த சோதரி! துங்க சலச லோசன மாதவி!
சம்ப்ரம பயோதரி! சுமங்கலி! சுலட்சணி! சாற்ற அரும் கருணாகரி!
அந்தரி! வராகி! சாம்பவி! அமர தோத்ரி! அமலை! செக சால சூத்ரி!
அகில ஆத்ம காரணி! வினோத சய நாரணி! அகண்ட சின்மய பூரணி!
சுந்தரி! நிரந்தரி! துரந்தரி! வரை ராச சுகுமாரி! கௌமாரி! உத்-
துங்க கல்யாணி! புட்ப அத்திர அம்புய பாணி! தொண்டர்கட்கு அருள் சர்வாணி!
வந்து அரி, மலர்ப் பிரமராதி துதி, வேத ஒலி வளர் திருக் கடவூரில் வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ் வாமி! அபிராமி உமையே! (2)

ஆசைகள் அறுக

வாச மலர் மரு அளக பாரமும், தண் கிரண மதி முகமும், அயில் விழிகளும்,
வள்ள நிகர் முலையும், மான் நடையும், நகை மொழிகளும், வளமுடன் கண்டு, மின்னார்
பாச பந்தத்திடை, மனம் கலங்கித், தினம் பல வழியும் எண்ணி, எண்ணிப்
பழி பாவம் இன்னது என்று அறியாமல், மாயப்ர- பஞ்ச வாழ்வு உண்மை என்றே,
ஆசை மேலிட்டு, வீணாக, நாய் போல் திரிந்து அலைவது அல்லாமல், உன்றன்
அம்புயப் போது எனும் செம் பதம் துதியாத அசடன் மேல் கருணை வருமோ?
மாசு இலாது ஓங்கிய குணாகரி! பவானி! சீர் வளர் திருக் கடவூரில் வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ் வாமி! அபிராமி உமையே! (3)

நன்றே என்றும் நடக்க

நன்று என்று, தீது என்று நவிலும் இவ் இரண்டனுள், நன்றதே உலகில் உள்ளோர்
நாடுவார் ஆதலின், நானுமே அவ்விதம் நாடினேன்; நாடினாலும்
இன்று என்று சொல்லாமல், நினது திரு உள்ளம் அது இரங்கி, அருள் செய்குவாயேல்
ஏழையேன் உய்குவேன், மெய்யான மொழி இது; உன் இதயம் அறியாதது உண்டோ?
குன்றம் எல்லாம் உறைந்து, என்றும் அன்பர்க்கு அருள் குமார தேவனை அளித்த
குமரி! மரகத வருணி! விமலி! பைரவி! கருணை குலவு கிரி ராச புத்ரி!
மன்றல் மிகு நந்தன வனங்கள், சிறை அளி முரல, வளர் திருக் கடவூரில் வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ் வாமி! அபிராமி உமையே! (4)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீராத் துயர் தீர

ஒரு நாள், இரண்டு நாள் அல்ல; நான் உலகத்து உதித்த இந் நாள் வரைக்கும்
ஒழியாத கவலையால், தீராத இன்னல் கொண்டு, உள்ளம் தளர்ந்து, மிகவும்
அரு நாண் அற்றிட்ட வில் போல் இருக்கும் இவ் அடிமைபால் கருணை கூர்ந்து, இங்கு
அஞ்சேல் எனச் சொல்லி, ஆதரிப்பவர்கள் உனை அன்றி இலை உண்மையாக;
இரு நாழிகைப் போதும் வேண்டாது, நிமிடத்தில் இவ் அகில புவனத்தையும்
இயற்றி, அருளும் திறம் கொண்ட நீ, ஏழையேன் இன்னல் தீர்த்து, அருளல் அரிதோ?
வரு நாவலூரர் முதலோர் பரவும், இனிய புகழ் வளர் திருக் கடவூரில் வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ் வாமி! அபிராமி உமையே! (5)

புண்ணியம் பெருக

எண்ணிக்கை இல்லாத துன்பங்கள் மேன்மேல் ஏறிட்டு ஒறுக்க, அந்தோ!
எவ்விதம் உளம் சகித்து உய்குவேன்? இப்பொழுது எடுத்திட்ட சன்மம் இதனில்,
நண்ணி எள் அளவு சுகம் ஆனது ஒரு நாளினும் நான் அனுபவித்தது இல்லை;
நாடு எலாம் அறியும், இது கேட்பது ஏன்? நின் உளமும் நன்றாய் அறிந்து இருக்கும்;
புண்ணியம் பூர்வ சனனத்தினில் செய்யாத புலையன் ஆனாலும், நினது
பூரண கடாட்ச வீட்சண்ணியம் செய்து, எனது புன்மையை அகற்றி அருள்வாய்;
மண்ணவர்கள், விண்ணவர்கள் நித்தமும் பரவும், இசை வளர் திருக் கடவூரில் வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ் வாமி! அபிராமி உமையே! (6)

இறை அருள் பெருக

தெரிந்தோ, அலாது, தெரியாமலோ, இவ் அடிமை செய்திட்ட பிழை இருந்தால்
சினம் கொண்டு அது ஓர் கணக்காக வையாது, நின் திரு உளம் இரங்கி, மிகவும்
பரிந்து வந்து இனியேனும் பாழ் வினையில் ஆழ்ந்து, இனல் படாது, நல் வரம் அளித்துப்,
பாதுகாத்து அருள் செய்ய வேண்டும்; அண்டாண்ட உயிர் பரிவுடன் அளித்த முதல்வி!
புரந்தரன், போதன், மாதவன் ஆகியோர்கள் துதி புரியும் பதாம்புய மலர்ப்
புங்கவி! புராந்தகி! புரந்தரி! புராதனி! புராணி! திரி புவனேசுவரி!
மருந்தினும் நயந்த சொல் பைங் கிளி! வராகி! எழில் வளர் திருக் கடவூரில் வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ் வாமி! அபிராமி உமையே! (7)

நல்வழியில் நடந்திட

வஞ்சகக் கொடியோர்கள் நட்பு வேண்டாமலும், மருந்தினுக்கா வேண்டினும்,
மறந்தும் ஓர் பொய்ம்மொழி சொலாமலும், தீமை ஆம் வழியினில் செல்லாமலும்,
விஞ்சு நெஞ்சு அதனில் பொறாமை தரியாமலும், வீண் வம்பு புரியாமலும்,
மிக்க பெரியோர்கள் சொலும் வார்த்தை தள்ளாமலும், வெகுளி அவை கொள்ளாமலும்,
தஞ்சம் என நினது உபய கஞ்சம் துதித்திடத், தமியேனுக்கு அருள் புரிந்து,
சர்வ காலமும் எனைக் காத்து அருள வேண்டினேன்; சலக் கயல்கள் விழியை அனைய
வஞ்சியர் செவ்வாய் நிகரும் வாவி ஆம்பல் மலரும் வளர் திருக் கடவூரில் வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ் வாமி! அபிராமி உமையே! (8)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செல்வம் பெருக

எனது இன்னல் இன்னபடி என்று வேறு ஒருவர்க்கு இசைத்திடவும், அவர்கள் கேட்டு, இவ்
இன்னல் தீர்த்து, உள்ளத்து இரங்கி, நன்மைகள் செயவும், எள் அளவும் முடியாது; நின்
உனதம் மருவும் கடைக் கண் அருள் சிறிது செயின், உதவாத நுண் மணல்களும்
ஓங்கு மாற்று உயர் சொர்ண மலை ஆகும்; அது அன்றி உயர் அகில புவனங்களைக்
கனமுடன் அளித்து, முப்பத்து இரண்டு அறங்களும் கவின் பெறச் செய்யும் நின்னைக்
கருது நல் அடியவர்க்கு எளி வந்து, சடுதியில் காத்து, ரட்சித்தது ஓர்ந்து,
வனசம் நிகர் நின் பாதம் நம்பினேன், வந்து அருள் செய்; வளர் திருக் கடவூரில் வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ் வாமி! அபிராமி உமையே! (9)

ஆயுள் அதிகரிக்க

கரு நீல வடிவமார் மாடு ஏறி, உத்தண்ட கன தண்ட வெம் பாசமும்,
கைக் கொண்டு, சண்ட மா காலன் முன் எதிர்க்க, மார்க்- கண்டன் வெகுண்டு நோக்க,
இரு நீல கண்டன் எனும் நின் பதியை உள்ளத்தில் இன்பு கொண்டு, அருச்சனை செய,
ஈசன், அவ் இலிங்கம் பிளப்ப, நின்னொடு தோன்றி, யமனைச் சூலத்தில் ஊன்றிப்
பெரு நீல மலை என, நிலத்தில் அன்னவன் விழப், பிறங்கு தாளால் உதைத்துப்,
பேசு முனி மைந்தனுக்கு அருள் செய்தது, உனது அரிய பேர் அருளின் வண்ணம் அலவோ?
வரு நீல மட மாதர் விழி என்ன, மலர் வாவி வளர் திருக் கடவூரில் வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ் வாமி! அபிராமி உமையே! (10)

எல்லா இன்பங்களும் பெற

சகல செல்வங்களும் தரும் இமய கிரி ராச தனயை! மா தேவி! நின்னைச்
சத்யமாய், நித்யம் உள்ளத்தில் துதிக்கும் உத்தமருக்கு இரங்கி, மிகவும்
அகிலமதில் நோய் இன்மை, கல்வி, தன தானியம், அழகு, புகழ், பெருமை, இளமை,
அறிவு, சந்தானம், வலி, துணிவு, வாழ் நாள், வெற்றி, ஆகு நல்லூழ், நுகர்ச்சி
தொகை தரும் பதினாறு பேறும் தந்து அருளி, நீ சுக ஆனந்த வாழ்வு அளிப்பாய்;
சுகிர்த குண சாலி! பரி பாலி! அநு கூலி! திரி சூலி! மங்கள விசாலி!
மகவு நான், நீ தாய், அளிக்க ஒணாதோ? மகிமை வளர் திருக் கடவூரில் வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ் வாமி! அபிராமி உமையே! (11)

1. ஸத்சங்கம் அருளுவாய்!

காலம் உண்டு புனல் உண்டு பூ உண்டு
 கனிகள் உண்டு கவுமாரி நின்திருக்
கோலம் உண்டு இதை உட்கொண்டு தொண்டரைக்
 கூடிக்கொண்டு குலாவித் திரிந்திலேன்
ஞாலம் உண்ட திருமாலும் தேவரும்
 நாணி ஓட நரலையிலே எழும்
ஆலம் உண்ட கடவூர் இறைவரை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. பிறப்பு, இறப்பு தவிர்ப்பாய்!

துஞ்சல் என்று உடன் தோன்றுதல் என்றுமாய்ச்
சுழலும் வண்டு எனச் சுற்றித் திரிந்தபின்
மிஞ்சல் ஒன்றையும் காணேன் இதற்கு இனி
மேல் எனக்கு ஒரு மெய்வழி காட்டுவாய்!
உஞ்சல் என்று அழகாய் அக் கொடும் பகடு
ஊரும் கூற்றை உதைத்துச் சிறுவனை
அஞ்சல் என்ற கடவூர் இறைவரை
ஆளும் செல்வி! அபிராம வல்லியே!

3. வறுமையில்லா வாழ்வளிப்பாய்!

உம்பலைக் குறும்கார் இரும்பு ஆகியது
உள் உடைக்கும் படிமிடி மேற்படப்
பம்பு அலைக்குள் சுழல்துரும்பு ஆகிஅப்
பதங்கில் ஏசற்றுப் பாழ்த்திடில் இன்பமோ?
கம்பலைக் குடம் காவிரி பாய்ந்திடும்
கழனி தோறும் கதிர்த்தரளங்களை
அம்பு அலைக்கும் கடவூர் இறைவரை
ஆளும் செல்வி! அபிராம வல்லியே!

4. பாவிகளின் பின் செல்லாமல் காப்பாய்!

முலை அசைக்கும் பரத்தையர் ஆசையில்
மூழ்கி மூழ்கி முதுவரி ஓந்தி போல்
தலை அசைக்கும் பதிதரைப் பின் சென்று
சஞ்சரிப்பது கொஞ்சமதோ? சொலாய்!
குலை அசைக்கும் குரங்கு இளம் தெங்கினில்
குதித்து அசைக்கக் குடவால் வளை எறிந்து
அலை அசைக்கும் கடவூர் இறைவரை
ஆளும் செல்வி! அபிராம வல்லியே!

5. நின் கமலவிழி பார்வை தந்தருள் தாயே!

கண்டு அரைத்துப் பிழிந்தது போல் சொலும்
கவியைச் சாடும் கவியை ஒப்பு ஆகிய
வண்டர் அண்டையில் கொண்டு சொல்லாமல் உன்
வனசப்பார்வை வழங்கில் குறையுமோ?
தொண்டர் போற்றக் கலயனும் போற்ற மெய்ச்
சுருதி போற்று (அ)ச் சுதன் போற்ற வாசவன்
அண்டர் போற்றும் கடவூர் இறைவரை
ஆளும் செல்வி! அபிராம வல்லியே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. காலன் வருமுன் வந்து காத்தருள்வாய்!

நீத ரிக்கும் தமியேன் என் ஆருயிர்
சிந்த அந்தகன் வந்திடு முந்தியே
நீத ரிக்கும் சிலையொடு வந்து முன்
நிற்பதே அன்றிச் சற்பனை செய்வையோ!
ஓத ரிக்கும் விதிக்கும் எட்டாப் பதம்
உதவி மைந்தன் மதி மயங்காமலும்
ஆத ரிக்கும் கடவூர் இறைவரை
ஆளும் செல்வி! அபிராம வல்லியே!

7. காமக் குழியில் விழாது காத்தருள்வாய்!

ஒழிவு இலாத கொடுங்காமக் கும்பியில்
உணர்வு இலாதழும் ஊர்ப்பன்றி போல நான்
இழிவு இலாதபடி எள் அளவும் நீ
இரங்கிடாததும் ஏதோ? அறிந்திலேன்
பொழிவு இலாது அப்புரந்தரன் ஆகியோர்
பொன்று காலத்தும் பொன்றாது எக்காலத்தும்
அழிவு இலாத கடவூர் இறைவரை
ஆளும் செல்வி! அபிராம வல்லியே!

8. கரும்பு வில்லுடன் வந்து என் துயர் துடைப்பாய்

கன்று அருந்துயர் தீர்க்கும் பசுவின்நீ
கன்னல் வில்லுடன் என் அருகில் வந்து
நின்று அருந்துயர் நீக்கி நன்று ஆக்கி வெண்
நீறு அணிந்து உளம் ஏய்ரண மாற்றுவாய்!
பொன் தரும் துயல் பூண் முலை மார்பெறப்
பொருந்து நீ எனப் போந்து பலி இரந்து
அன்று அருந்தும் கடவூர் இறைவரை
ஆளும் செல்வி! அபிராம வல்லியே!

9. வறுமையற்ற வாழ்வளிப்பாய்!

சலம் கவர்ந்த மழைமுகில் ஆனதும்
சண்ட மாருதம் தாக்கியபோது தன்
பெலம் குலைந்தது போலே மிடியினால்
பிஞ்சு நெஞ்சகம் பேதகம் ஆவனோ?
கலங்கல் என்று வந்து ஆடகச் சூடகக்
கை அமர்த்திக் கருணை வந்து ஆளுவாய்!
அலங்கல் வேணிக்கடவூர் இறைவரை
ஆளும் செல்வி! அபிராம வல்லியே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

10. உன்னைப் போற்றும் உபாயம் அறியேனே!

சோகம் நல்குரவும் தவிர்த்து ஆள்கெனத்
தொல் புவிக்குத் துரந்தரன் ஆதியோர்
யோகம் என்றும் உற்று உத்தமியே! புகழ்ந்து
உன்னைப் போற்றும் உபாயம் அறிந்திலேன்
போகம் நல்கும் புணர்முலை மார்பெறப்
புல்லி நீங்கிப் பொறுமையினால் எனக்கு
ஆகம் நல்கும் கடவூர் இறைவரை
ஆளும் செல்வி! அபிராம வல்லியே!

அபிராமி பதிகங்கள் முற்றுப் பெற்றது.

கச்சி அபிராமி அஷ்டகம்

தவறுவ றொட்டா துரியசமதிதனைநம் பினபேர்க்கு
தனதா னியசம் பத்து முற்றும் தருவாள் உலகாள்வாள்
எவரும் மதிக்க எவரும் துதிக்க எவரும் கதிக்கத் தருவாளே
ஏக சவுக்கிய போக துரங்க சம்பத் தருள் புரிவாய்
கவட ரிடத்தே நில்லாள் செல்லாள் கனகத் திருமுலையாள்
கதிநிர் மலை திரு மறைமுடிவடிவாள் காக்கும் யாமளையாள்
அவசர சத்தி யெதுவு முடிப்பாள் அண்டர்க் கறிவரிதாம்
அம்பிகை கச்சிக் காமக் கோட்டத்தபிரா மித்தாயே.

உன்னைக் கனவிலும் நனவிலும் மறவேன் உன்னடி தலைவைப்பேன்
உன்னடி யார்க்குப் பணிவிடை செய்வேன் உன்னைப் பாடுவன்யான்
என்னைத் தயவொடு பாலித் தருள்வாய் இன்புற ரட்சிப்பாய்
என்னிரு கண்ணே கண்ணிற் கொளியே இகபர முழுமுதலே
கன்னித் தவமுறு பவளக் கொடியே காட்சிக் கொருமுகிலே
கருணைக் கடலே சிந்தைக் கிதயே கனியே மடமயிலே
அன்னப் பேடே வன்னக் குயிலே அமுதே கிளிமொழியே
அம்பிகை கச்சிக் காமக் கோட்டத்தபிரா மித்தாயே.

படியினில் மிடிபிணி தீர்ப்பாய் கவியது பாடப் புகழ்விப்பாய்
பாடலுடன் சோறு உண்ண வுடுக்கப் பட்டுந் திரவியமும்
பிடிபிடி இந்தா என்று கொடுப்பாய் பிள்ளைக் கதிசயமாய்
பின்னொரு மண்ணாட் டுள்ளது கேளாய் பிறவித் துயர்கெடவே
வடிவுடை யிமவான் பருவத ராசன் மருவுகு மாரத்தி
மதுரச் சொல்சிவ காம சவுந்தரி மாதே அடியேனுக்
கடியிணை பாலித் தெண்ண முடிப்பாய் அபரஞ்சிக் கொடியே
அம்பிகை கச்சிக் காமக் கோட்டத் தபிரா மித்தாயே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாமளி யுத்தமி பத்தினி நித்திய சம்பிர கலியாணி
சத்தி இருமுச் சமயத் தலைவி சமையா சமையத்தி
தேன்மொழி பூரணி திங்கள் முகத்தி சிந்துர திலகத்தி
செப்பார் முலைமேல் உத்தரிகத்தி சிலம்பணி பாதத்தி
கோமள வல்லி குண்டலி மண்டலி கொண்டலி குழலழகி
கொண்ட லொளித்திடு குழலீ என் பிழை கொண்டு பொறுத்தருள்வாய்
ஆமளி தேவி பராபரி கௌரி அட்சர ரீங்காரி
அம்பிகை கச்சிக் காமக் கோட்டத் தபிரா மித்தாயே.

ததிகா லத்துப தேசப் பொருளது தானது கிட்டுங்கால்
தாய்பார்த் தொருவரை ரட்சித்தாலித் தரணிக் கரசாள்வார்
பதிபா ரச்சதுர் வேதத் திரள்பல பாக்கிய முடனாகும்
பார்த்தால் சத்துரு நில்லார் சமரில் பாரில் படைமுறையும்
எதுபா ரம் உனக் கம்மா தேவர்கள் எதிரோ ஒரு தெய்வம்
அதிபா ரத்தொழி லைந்தும் ஆடத்து உதியா அருளார்ந்த
அம்பிகை கச்சிக் காமக் கோட்டத்தபிரா மித்தாயே.

பிச்சைப் பெருமான் கம்ப ரிடத்தில் பிரியாப் பெருவாழ்வே
பேசும் அருளாம் கடலே யுடையாய் பிறக்கப் பண்ணினையே
அச்செல் வம்படி கட்டளை யிட்டோர் அமைவே தருகுவையே
எச்சுப் பேச்சுகள் பேசுவர் செல்வத் திருட ரிடத்தேசென்று
இரக்கா தோர்வரம் மறக்காதேன் எளியேன்தன் னாலே
அச்சப் படுவேன் அண்டிக் கிடக்க அதுவும் நீயறிவாய்
அம்பிகை கச்சிக் காமக் கோட்டத் தபிரா மித்தாயே.

மெய்யினில் ஒருநோய் இல்லா மல்பசி வேளைக் கமுதிடுவாய்
மேவிய வினையின் வெப்பம் தண்ணென மேன்மேல் அருள்வாய்நீ
துய்யநற் சுடரே தோன்றும் வேட்கைஉன் துதிஆ கும்படியே
தோதுடன் வகைசெய் ஆதி பார்வதி தொற்றிப் பற்றினன்யான்
பொய்துயர் யாவையும் வாங்கிப் போம்பஜ புவிமீ தேஅருள்வாய்
போற்றும் செயலே ஆற்றும் செயலாய்ப் புரியப் பணித்திடுவாய்
செய்யதாள் திருவே காட்சி கொடுத்தும் சேவடி அடைவிப்பாய்
அம்பிகை கச்சிக் காமக் கோட்டத் தபிரா மித்தாயே.

சொந்தப் பாசம் தாயுந் தந்தை கருபப் பெண்டீரும்
சுற்றமும் மக்களும் வீடும் வாசலும் தொலையாப் பெருவாழ்வும்
சந்தைக் கூட்டத் தெல்லாம் ஐயோ சகமும் பொய்யலவோ
சவலைப் பிறவிக் கடலைத் தாண்டச் சரணம் எனக்கருள்வாய்
இந்தப் பிறவியில் காவாய் ஆகில் எனக்குக் கதி ஏது?
ஏற்றுரு வானதாம் இந்தப் பிறவியில் இடர்தவிர்த் தாள்வாய்நீ
அந்திப் பிறைமுடி அரனுக் கருள்கொண் டருகே சேர்கச்சி
அம்பிகை கச்சிக் காமக் கோட்டத்தபிரா மித்தாயே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்கடவூர் அமுதகடேசுவரர் பதிகம்

(ஆசிரிய விருத்தம்)

சுடர்மணிக் குழையும் மலர்க்கரத் துழையும் தும்பிகள் இடையிடை நுழையும்
தும்பமா லிகைபும் வம்புவார் சடையும் துண்டவெண் பிறையுமுந் நூலும்
நடனபங் கயமும் கிரணகங் கணமும் நங்கைபங் கமர்ந்தசுந் தரமும்
நயனமூன் றுடைய கோலமுங் கண்டோர் நமனையுங் காணவல் லவரோ?
கொடிபல தொடுத்த நெடியமா மணிபொற் கோபுரம் பாரிடந் தொடுத்துக்
கொழுந்துவிட் டெழுந்து வாணில வெறிப்பக் கொண்டல் வந் துலவியே நிலவும்
கடிமலர்த் தடமுஞ் சுருதியோ திடமும் கன்னிமா மாடமுஞ் சூழ்ந்து
கனவளஞ் செறிந்த கடவையம் பதியாய்! காலனைக் காய்ந்ததற் பரனே! 1.

தண்டமுங் கயிறுஞ் சூலமும் புகைந்த தழலுமிழ் கண்களும் வளைந்த
தந்தமுஞ் சிவந்த குஞ்சியுங் கரிய சைலமே அனையமே னியுமாய்
அண்டிய சமனைக் கண்டுள மயங்கி அறிவழிந் திருவிழி களும்பஞ்(சு)
அடைந்துவாய் புலர்ந்து மெய்மறந் திடும்போ(து) அம்பிகை தன்னுடன் வருவாய்!
வண்டுகள் முரன்று முகைமுறுக் குடைந்து மதுமழை பொழிந்துதா தளைந்து
மடல்விரிந் தலர்ந்து பொன்னிறம் பொதிந்த மண்டலங் கொன்றைவார் சடையாய்!
கண்டவர் உளமுங் கண்ணுமே கவருங் கனதன வனிதையர் நெருங்கும்
கனவளஞ் செறிந்த கடமைவையம் பதியாய்! காலனைக் காய்ந்ததற் பரனே! 2.

தனபதி யனைய செல்வமே பெறினும் சதமகன் போகமே பெறினும்
தாரணி சுமக்குஞ் சேடனே நிகராய்த் தக்கதோ ரறிவெலாம் பெறினும்
அனகனையத்த அழகுதான் பெறினும் அருமறைக் கிழவனே எனினும்
ஐய! நின் கடைக்கண் அருள்தவ றியபேர் அங்கையோ டேந்திநின் றுழல்வார்;
பனககங் கணத்தாய்! அளப்பெருங் குணத்தாய்! பார்வதி வாமபா கத்தாய்!
பவளநன் நிறத்தாய்! தவளதா ளிதத்தாய்! பரிபுரம் அலம்புபொற் பதத்தாய்!
கனகமுந் துகிலுந் தரளமும் வயிரக் கலன்களும் நிலந்தொறு மிடைந்த
கனவளஞ் செறிந்த கடவையம் பதியாய்! காலனைக் காய்ந்ததற் பரனே! 3.

தந்தையை மனையை ஒக்கலைத் துணையைத் தாயைமென் குதலைவாய்ச் சேயைத்
தனத்தையெள வனத்தை இன்பபோ கத்தைத் தையல்நல் லாள்பெறுந் திறத்தை
அந்தியும் பகலும் விரும்பிமெய் சோம்பி ஆழ்கடற் படுதுரும் பாகி
அலக்கழிந் தேனைப் புலப்படத் திருத்தி ஆட்கொள நினைத்திலாய் அன்றோ!
சிந்தைநந் துருக இன்னிசை படித்துச் சிலம்பொலி யாரவே நடித்துச்
செழும்புனற் சடைமேற் கரந்தையை முடித்துத் திருவெணீ(று) உடலெலாந் தரித்துக்
கந்தைகோ வணம்தோல் பொக்கணந் தாங்கிக் கபாலமொன் றேந்திநின் றவனே!
கனவளஞ் செறிந்த கடவையம் பதியாய்! காலனைக் காய்ந்ததற் பரனே! 4.

வஞ்சகக் கிணறாய்த் துன்பவா ரிதியாய் வறுமையென் பதற்கிருப் பிடமாய்
மறம்பொதி குடிலாய் அசத்திய வினதயாய் மயல்விளை கழனியாய்ப் பாவ
சஞ்சிதவடிவாய்ச் சருச்சரைப் புரமாய்ச் சங்கட நோய்க்களஞ் சியமாய்த்
தலைதடு மாறித் திரியுமென் றனக்குன் தண்ணருள் கிடைக்குமோ? அறியேன்;

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நஞ்சமும் பகுவாய்ச் சுடிகைமுள் ளெயிற்று நகைமணிப் பாந்தளஞ் சூழ்ந்த
நளிரிளம் பிறையோ டொளிர்செழுஞ் சடையாய்! நங்கையர் முழுமதி முகத்தைக்
கஞ்சமென் மலர்கள் கண்டுவா யடுங்கும் கந்தமுந் தியதடஞ் சூழும்
கனவளஞ் செறிந்த கடவையம் பதியாய்! காலனைக் காய்ந்ததற் பரனே! 5.

பிரமனுஞ் சலிக்கத் தாயர்சஞ் சலிக்கப் பேதையர் கண்(டு) அசங் கதிக்கப்
பிணிகளும் பகைக்க மூப்புவந் தலைக்கப் பின்றொடர்ந்(து) ஆசைசென் றிழுக்கத்
தருமனும் வெறுக்க நரகமும் ஒறுக்கத் தாரணி சுமந்துநொந் திளைக்கச்
சகடெனச் சுழலும் கறங்கெனக் கொடிய சடலம தெடுக்கநான் இலக்கோ?
குடுமணி இமைக்கும் புதுமலர்த் தடத்தில் கோட்டிள மோட்டுமா மேதிக்
குலங்கள்போய் படிந்து நலங்கிளர் செழுந்தேன் குவளைமென்(று) ஒழுக்கிய தோற்றம்
1. கரியமா கடலிற்புகுந்துநீர் அருந்துங் காளமே கங்களோ வெனவாய்க்
கனவளஞ் செறிந்த கடவையம் பதியாய்! காலனைக் காய்ந்ததற் பரனே! 6.

மறுகுவெஞ் சினத்தர் தெருமவ குணத்தர் வஞ்சகம் பொதிந்தநெஞ் சகத்தர்
வழக்கமொன் றில்லாப் பிணக்குறு மூடர் மதியிலாப் பதிதர்பால் அணுகிப்
பொறுமையில் தருமன் நெறியினில் சேடன் புலமையில் குறியமா முனிவன்
புரந்தரன் எனவும் நிரந்தரம் புகழ்ந்து பொழுதவம் போக்கினன் அந்தோ
வெறிமலர்ப் பிரசஞ் சொரிந்துவண் டினங்கள் மிடைந்துமா முகிலினைக் கிழித்து
2. மேலிடத்(து) இரவிப் பசும்புர விகளாய் விளங்கியே விண்டல முகட்டைக்
கருவினின் றோங்கிச் செறியும்ஐந் தருக்குள் கற்பகத் தருவினை யப்பாய்!
கனவளஞ் செறிந்த கடவையம் பதியாய்! காலனைக் காய்ந்ததற் பரனே! 7.

நெஞ்சகக் குழைந்து பணிவிடைக் கிசைந்து நீறொடு கண்டிகை புனைந்து
நிலவுபொற் கோயி லதைவலம் புரிந்து நெகிழுமுன் நாண்மலர் எடுத்து
வஞ்சமா மயக்கில் மயங்கும்ஐம் புலனாம் மாற்றலர் வலிமையைக் களைந்துன்
மலர்ப்பதத்(து) இருத்தி அலக்கணைத் துரத்தி மதிமிகு வாழ்வளித் திடும்ஓம்
3. சுஞ்சகர் எனுநற் றூயமூன் றெழுத்தைச் சுகிர்தமாய் கொண்டருச் சனைசெய்
தொண்டர்கள் உறவைக் கொண்டுனைப் பணியச் சுணங்கனாம் எனக்கருள் புரிவாய்;
கஞ்சமென் மலர்மீ(து) அஞ்சமே படரக் கார்மயில் ஒரமாய் நடிக்கும்
கனவளஞ் செறிந்த கடவையம் பதியாய்! காலனைக் காய்ந்ததற் பரனே! 8.

மைக்கயல் விழியால் மயக்கியுள் ளுருக்கி மஞ்சளால் முகத்தினை மினுக்கி
மணிநகை பெருக்கி ஆசையுண் டாக்கி வளரிள முலைத்துகில் இறுக்கிப்
பக்கல்வந் தமர்ந்து மென்மொழி பகர்ந்து பரவசம் அடைந்துமேல் விழுந்து
படிற்றுளம் உணர்த்தாச் சத்திய முரைத்துப் பறித்திடப் பயிலுபா வையர்க்காய்த்
4. துக்கசா கரத்தில் அழுந்திநா டோறும் தோதகப் பட்டபா தகனைத்
துய்யசெங் கமலச் செய்யதா ளிணைக்கே தொண்டுகொண் டால்குறை யுமோ?
கைக்கழங் காடுந் திறத்தினை நிகராய்க் கமலமென் மலர்மிழை அறுகால்
களியடு சுழலுங் கடவையம் பதியாய்! காலனைக் காய்ந்ததற் பரனே! 9.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செயல்பணி விடையாய்ச் செப்பல்ஐந் தெழுத்தாய்த் திரிதலே வலம்புரி தலுமாய்ச்
சிந்தையின் நினைவே தியானமாய் உண்டு தெவிட்டல்நை வேதனம் சிறப்பாய்த்
துயிறல்வந் தனையாய்த் திருவுளத் துவந்து துள்ளுவெள் விடையினில் ஏறித்
தொண்டரும் விசும்பில் அண்டருங் காணத் தோகையோ(டு) எனக்குவந் தருள்வாய்;
வயல்கரம் புறைந்த கடைசியர் முகத்தை மதியம்என்(று) அதிசய மிகுந்து
வரும்பக லிடத்தும் இரவினும் குவளை வாயடுங் காமலே விளங்கும்
கயனெடுந் தடமுங் கமுகமுங் கமுகைக் காட்டிய கன்னலும் பொதிந்த
கனவளஞ் செறிந்த கடவையம் பதியாய்! காலனைக் காய்ந்ததற் பரனே! 10.

திருக்கடவூர்க் கால சம்ஹாரமூர்த்தி சபதம்

(சந்த விருத்தம்)

அந்தரத் தமரர் மந்தரத் தையலி அலைக டற்றலை நிறுத்திநின்(று)
அழலுறாக் கடைய அதனிடைத் துடைய அமுத முற்றடையும் அண்ணலார்
கந்த ரத்திடை கறுப்பி னார்கவுரி கண்க ளித்திடு முறுப்பினார்
கால காலகட வூரர் கோலமது கண்டு தண்டனிட வல்லபேர்
பந்தம் ஆசைய வமான நிந்தையடு பழிப்ப சத்திய மனப்பயம்
படிறு வஞ்சனை அனர்த்தமா கொடுமை பாப மீறுகொலை சஞ்சலம்
தொந்த மோகமவி வேக மாசுசதி துயர மூடமுழு வைரநீள்
தோதகங் குடிலம் அவகுணந் தவறு சோகமுந் தவிரு வார்களே. 1.

வெங்கயத் துரியர் பங்கையர்க் கரியர் வேத வாம்பரியர் தீதிலர்
வீரர் விஞ்சுகர் வினோதர் கஞ்சுகர் வெற்றிமால் மகிழும் அத்தனார்
கங்க ணத்தர்மிகு வெங்க ணத்தலைவர் நளத்தி சைந்தபொரு நிர்த்தனர்
கால காலகடவூரர் கோலமது கண்டு தணடனிட வல்லபேர்
திங்கள் வெண்குடை கவிப்ப மும்முரசு சென்று சென்றெதிர் ஒலிப்பஎண்
திசைபுரக்கு மனர்கை முகிழ்ப்பஇகல் எவ்வருந் திறைய ளப்பமேல்
மங்கை மார்கவரி காலசைப் பநெடு மகர தோரண வளப்பமாய்
மத்த யானைமிசை வெற்றி யாளரென வைய கந்தனில் இருப்பரே. 2.

திருகு வெள்ளெயிறு வரிநெடுங் கயிறு செய்ய குஞ்சியடு நஞ்செனச்
சீறு கோபமுடன் ஏறுதீபவிழி தெறுமிடிக் குரல்மு ழக்கியே
கரும லைக்குநிகர் எருமையிற் பெரிய கால்மலைக் குவடு போல்வருங்
கால காலகட வூரர் கோலமது கண்டு தண்டனிட வல்லபேர்
பொரும முப்படை இலங்கு செஞ்சடை பொருந்து வெள்ளிடை திருந்துவெண்
பூதி யாகமொடு தோகை பாகமழல் பொங்கு நாகமணி கங்கணம்
பெருகு கங்கைநதி முடிவிளங் கிவதி பிஞ்சு மாமதி கொழுந்தழல்
பெய்த பெற்றிபெறும் ஒற்றை நெற்றிவிழி பெற்றிருப் பர்அடை யாளமே. 3.

பெண்ணி டும்பரி புரத்தி னாரொலி பிறந்தி டும்பரி புரத்தினார்
பிறைமு டிக்குளணி கங்கை யார்மறைப் பொருளை வைத்துளணி கங்கையார்
கண்ணி சைந்தொரு மூன்றினா ருரிய கயிலை தாழநக மூன்றினார்
கால காலகட வூரர் கோலமது கண்டுதண்டனிட வல்லபேர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மண்ண ளந்தச ரணர்க்கு மென்முளரி மாலை யாபர ணர்க்கு மோர்
வச்சி ரத்திறை வருக்கு எண்டிகிரி மாத்தி ரத்திறை வருக்குமே
விண்ண வர்க்குமிகு பண்ண வர்க்குமுயர் வித்த கர்க்குமதி யத்துவாழ்
மெய்த்த வத்துநிலை பெற்ற வர்க்குமவர் மேலிருப் பர்அடயாளமே. 4.

உரக குண்டலர் நெருங்கி விண்டலர் உறைத்த வண்டுமுரல் கொன்றையார்
உத்த ரீகமல ரொப்பி லாதசிலை ஒத்த நெற்றிமுலை மங்கையார்
கரக பாலர்திரி சூலர் நீலமணி கண்டர் புண்டரிக ஆடையார்
கால காலகட வூரர் கோலமது கண்டு தண்டனிட வல்லபேர்
விரக மானதில் உணங்கி டார்; உடல் வேத னைப்பட அறிந்திலார்;
வெகுளி யானது செறிந்திடார்; உலகை வேண்டி ஈனரை வணங்கிடார்;
நரக மென்பதினி எய்திடார்; கருமம் நல்ல(து) அல்லதவர் செய்திடார்;
நமனிருந் ததிசை கண்டிடார்; இறுதி நாளுமே பகுதி யாவரே. 5.

துலைநி றுக்குமொரு வணிக னுக்குமது சூதனுக்குமநு நீதிசேர்
தொல்புவிக் கரச னுக்குமிக் கதமிழ் சொல்லுமோர் புலவ னுக்குமெய்க்
கலைய னுக்குமதி நடுவ னுக்குமுனி காத லர்க்குமினி தருள்செயுங்
கால காலகட வூரர் மேவிவளர் கயிலை போலவரு மயிலானார்
முலைய ரும்பிவரு பனசமே இனிய மொழியும் இன்பமுறு வனசமே
முத்தை யத்தமணி மூரலே அளிகள் மொய்த்த தோள்களிள வேரலே
சிலையி ரண்டனைய புருவமே இரதி தேவி யத்தவள் உருவமே
திருமிடற் றழகு சங்கமே அமுது சிந்து மாணடிபு சங்கமே. 6.

விதிசி ரத்தையரி பழியர் அஞ்சுகணை வேளுரத் தையெரி விழியர்மா
மேருவிற் கையினர் நேர்கடுக் கையினர் வேள்வியிற் பணியும் வள்ளலார்
கதிர வன்றனது தந்தம் அம்புவியில் உதிர வன்பொடு புடைத்திடும்
கால காலகட வூரர் மேவிவளர் கயிலை போலவரு மயிலனார்
மதியில் நஞ்சமு மிருக்குமோ கரிய மஞ்சு மாலிகை கரிக்குமோ?
வாளரா அமுதம் ஊறுமோ? கனக வரையிலே புளக மீறுமோ?
எதிர்க லன்பல திருத்துமோ? இடையில் இலகுமே கலைபொ ருந்துமோ?
விளங்கு தோட்கழை வியக்குமோ? இனிமை விண்ட சொற்கழை விளங்குமே. 7.

இகல றிந்துதரு பகையி னார்புரம் எரித்திடுங் கொடிய நகையினார்
எரிம ழுப்படை வலத்தினார் முடியில் ஏறு மீறிய சலத்தினார்
ககன மண்டலமும் உருவி நின்றுவிதி காணொ ணாதொரு தாணுவார்
கால காலகட வூரர் மேவிவளர் கயிலை போலவரு மயிலனார்
முகம திக்குவமை புகலுவார் அளிகள் மொய்குழற் குவமை நுவலுவார்
முலையி னுக்குவமை பகருவார் இனிய மொழியி னுக்குவமை மொழிகுவார்
நகையி னுக்குவமை கூறுவார் சரண நடையி னுக்குவமை பேசுவார்
நயமறிந் திளமை சொல்லுவார் எவரும் நடுவறிந் தவர்கள் இல்லையே. 8.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிறைய னத்தநறை யெழுவளத் தறிவர் தினமனத் திடைதி யானமே
செய்து தங்கள்வரம் எய்துதற் கரிய தேவ தேவர்பரி பூரணர்
கறைமிடற் றலைவர் அலைகடற் பரியர் கதிதரும் குரவை வெருவிலார்
கால காலகட வூரர் கோலமது கண்டு கைதொழுது கொண்டுகாண்;
எறிதி ரைப்பறை முழக்கி அங்கைதனில் இக்குவார் சிலைவ ணக்கிநீள்
இருதலைக் குமளி நாணி றுக்கிமுன் எழுந்து மீசையை முறுக்கிவேள்
வெறிம லர்க்கணை யெடுத்துங் கொடிய வேகமாயது தொடுத்தும்
மெய்யி னிற்பட விடுத்துஞ் செவியில் விண்டு விண்டுசொல வேணுமே? 9.

குயில்மொ ழிப்புணர் முலைக்கருங் கணொடு கோதை பாதியுறை சோதியார்
கொக்க ரித்துவரு தக்க னாருயிர் குறைத்தெ ழுந்திடு மறத்தினார்
கயிலை நாதர்கண நாதர் பூதியணி காய தாயசுமு மாயினார்
கால காலகட வூரர் கோலமது கண்டு கைதொழுது வண்டுகாள்!
அயிலி னுங்கொடிய அம்பினால் மதுர ஆர வாரமிசை வேயினால்
அந்த ரந்தனில் அசைந்துநின்(று) அடரும் அம்புலிக் கொடிய தீயினால்
துயில்து றந்துமெய் மறந்து வாடிமிக சோக மோகம் பிறந்துளத்
தோதகப் படவும் நானகப் படுதல் சொல்லுவீர் மதனை வெல்லவே. 10.

திருக்கடவூர் காலசம்ஹார மூர்த்தி பின்முடுகு

வெண்பா

என்று தொழுவேன் எளியேன்; அளிமுரலும்
கொன்றைஅணி தென்கடவூர்க் கோமானே! - துன்றும்
கனற்பொறிகட் பகட்டிலுற்றுக் கறுத்ததெற்குத் திசைக்குளூரத்
தனைச்சினத்திட் டுதைத்தபத்மத் தாள். 1.

தொண்டருடன் கூடித் துதித்திரண்டு கண்ணாரக்
கண்டு தொழுவேனோ? கடவூரா! - பண்டோர்
அமுதிருக்குஞ் சிறுகடத்(து) அன்றெழும் உனக்(கு)அன் பரைமருட்டும்
எமனையெற்றும் பரிபுரச்செந் தாள். 2.

பற்றிப் பணிந்து பரவ வரந்தருவாய்
கற்றைச் சடையா! கடவூரா! - வெற்றிநெடுங்
கொண்டலொக்குங் கண்டசத்தங் கொண்டெதிர்த்(து)அங்ககங்கருக்கும்
சண்டனைக்கண் டன்றுதைக்கும் தாள். 3.

மேகங் கவிந்ததுபோல் மேலெழுந்த காலனைக் கண்(டு)
ஆகந் தளர்ந்துநெஞ்சம் அஞ்சாமுன் - மாகடவூர்ப்
பூதநாதா! வேதகீதா! பூவிதாதா! தேடுபாதா!
மாதுபாகா! காலகாலா! வா. 4.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்றயன்மால் காணா அடிமுடியைக் காண்பதற்குத்
தென்றிசைக்கோன் என்னதவஞ் செய்தானோ? - வென்றிதிகழ்
ஆடரவாளா? நீறணிதோளா! ஆதிரைநாளா! மாதுமணாளா!
தோடவிர்காதா! மாகடலூரா! சொல். 5.

ஆற்றுமோ நெஞ்சத் தடங்குமோ கொண்டமையல்
கூற்றுதைத்த தென்கடலூர்க் கோமானே! - மாற்றுயர்பொற்
கும்பமுலைத் திங்கள்நுதற் கொந்தளகக் கொம்பைவெறுத்(து)
அம்புதொடுத்(து) அங்கசன்விட் டால். 6.

தென்றல் உலவுந் திருக்கடவூர் எம்பெருமான்
மன்றல் செறிந்தே மதுவூறும் கொன்றைக்காப்
பொன்பரவுந்திண் கொங்கையிரண்டும் புண்பட நொந்தும் துன்பமிகுந்தும்
அன்புதிரண்டும்பெண் கொடிநெஞ் சும். 7.

சுடுமோ இளந்தென்றல் தோகையின்மேல் அம்பு
படுமோமெய் வாதை படுமோ? - கடவூரா!
நீரணங்கார் வேணிநம்பா! நீலகண்டா! மேனியின்பால்
ஆரணங்கார் காலசங்கா ரா. 8.

பாலனுக் காவன்று பகடேறி வந்தெதிர்த்த
காலனுக்குக் காலா! கடவூரா! - மேலோர்
கரும்புகொண்டங்(கு) எதிர்ந்துவந்(து)அங் கசன்பொருஞ் செஞ்சரங்கள்கண்டு
மருண்டுநெஞ்சங் கலங்குமென் றன்மான். 9.

நீதிநெறி வேதியர்கள் நீங்கா மறைபயிலும்
ஆதிகட வூரிலுறை அம்மானை - பாதம்
பரவியங்கம் புளகி வணங்கும் பொழுதுநெஞ்சங்
கரவுதுஞ்சுஞ் சமனஞ்சுங் காண். 10.

திருக்கடவூர்ப் பிரபந்தங்கள் முற்றிற்று.

ஸ்ரீ அபிராமி ஸ்தோத்திரம்

1. நமஸ்தே லலிதே தேவி ஸ்ரீமத் ஸிம்ஹாச நேஸ்வரி
பக்தானாம் இஷ்ட தேஹி மாத: ஸ்ரீ அபிராமி நமோஸ்துதே

2. சந்த்ரோதயம் கிருதவதி தாடங்கேன, மஹேஸ்வரி |
ஆயுர்தேஹி ஜகன்மாத: ஸ்ரீ அபிராமி நமோஸ்துதே |

3. ஸுதா கடேச ஸ்ரீ காந்தே சரணாகத வத்ஸலே |
ஆரோக்யம் தேஹிமே நித்யம் ஸ்ரீ அபிராமி நமோஸ்துதே |

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. கல்யாணம், மங்களம் தேஹி ஜகத் மங்கள காரிணி |
ஐஸ்வர்யம் தேஹிமே நித்யம் ஸ்ரீ அபிராமி நமோஸ்துதே |

5. சந்த்ர மண்டல மத்யஸ்த்தே மகாத்ரிபுர சுந்தரி |
ஸ்ரீ சக்ரராஜ நிலயே ஹி ஸ்ரீ அபிராமி நமோஸ்து தே |

6. ராஜீவ லோசனே, பூர்ணே பூர்ண சந்ர விதாயினி |
சௌபாக்யம் தேஹிமே நித்யம் ஸ்ரீ அபிராமி நமோஸ்துதே |

7. கணேச ச ஸ்கந்த ஜனனி வேதரூபே தனேஸ்வரி |
வித்யாம் ச தேஹிமே நித்யம் ஸ்ரீ அபிராமி நமோஸ்து தே |

8. ஸுவாஸிநிப்ரியே மாதா: ஸௌமாங்கல்ய விவர்த்தினி |
மாங்கல்யம் தேஹிமே நித்யம் ஸ்ரீ அபிராமி நமோஸ்து தே |

9. மார்க்கண்டயே மஹாபக்த ஸுப்ரமண்ய ஸுபூஜிதே |
ஸ்ரீராஜராஜேஸ்வரி த்வம் ஹி ஸ்ரீஅபிராமி நமோஸ்து தே |

10. ஸாந்நித்யம் குரு கல்யாணி மம்பூஜா க்ருஹே சுபே |
பிம்பே தீபே ததா புஷ்பே ஹரித்ராகுங்குமே மம |

11. ஸ்ரீஅபிராம்யா இதம் ஸ்தோத்ரம் ய: படேத் சக்தி சந்நிதௌ |
ஆயுர் பலம் யசோ வர்ச்சோ மங்களம் ச பவேத்ஸுகம் |

| மஹாம்ருத்யும்ஜய ஸ்தோத்ரம் |

(இது மார்க்கண்டேயரால் இயற்றப்பட்டது. யமபயம் நீங்கும். துர்ஸ்வப்னம் பலிக்காது. எதிரிகள் நாசமடைவார்கள். குரு மறைவுஸ்தானத்திலிருந்து குரு தசை, குரு புக்தி மோசமாயிருப்பவர்கள் தினமும் இதைப் படிப்பது நல்லது.)

ஓம் அஸ்ய ஸ்ரீ மஹா ம்ருத்யும்ஜய ஸ்தோத்ர மந்த்ரஸ்ய | ஸ்ரீ மார்கண்டேய ருஷி: அனுஷ்டுப் சந்த: | ஸ்ரீ ம்ருத்யும்ஜயோ தேவதா | கௌரீ சக்தி: | மம ஸர்வாரிஷ்ட ஸமஸ்த ம்ருத்யு ஸாம்த்யர்தம் ஸகலைச்வர்ய ப்ராப்த்யர்தம் ஜபே விநியோக: |

| அத த்யானம் |

1. சந்த்ரார் காக்நி விலோசனம் ஸ்மிதமுகம் பத்மத் வயாந்த ஸ்திதம்
முத்ராபாஸ்ம்ருகாக்ஷ ஸூத்ர விலஸத் பாணிம் ஹிமாம் ஸுப்ரபம்
கோடீந்து ப்ரகலத் ஸுதாப்லுததனும் ஹாராதி பூஷோஜ்வலம்
காந்தம் விஸ்வ விமோஹனம் பஸுபதிம் ம்ருத்யுஞ்ஜயம் பாவயேத்

(சந்திரன், சூரியன், அக்னி இவர்களை விழிகளாகக் கொண்டவனும், மந்தகாசமான வதனம் உடையவனும், இரண்டு தாமரை மலர்களில் அமர்ந்தவனும், சின்முத்திரை, பாசம், மான், ருத்ராட்ச மாலை இவைகளால் பிரகாசிக்கின்ற கைகளை உடையவனும், சந்திரனைப் போன்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒளி படைத்தவனும், கோடி சந்திர மண்டலங்களிலிருந்து பெருகுகின்ற அமிர்த தாரைகளால் நனைந்திருப்பவனும், முத்தாபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவனும், அழகனும், உலகங்களை மோகிக்கஸ் செய்பவனும், பசுபதியும், காலனை ஜெயித்தவனுமான பரமசிவனைத் தியானிக்க வேண்டும்.)

2. ஓம் ருத்ரம் பசுபதிம் ஸ்தாணும் நீலகண்ட உமாபதிம்
நமாமி ஸிரஸா தேவம் கிம்நோ ம்ருத்யு: கரிஷ்யதி

(பாபம் செய்தவர்களுக்கு துக்கத்தைக் கொடுப்பவனும், அஞ்ஞானத்தை அழிப்பவனும், அழிவற்றவனும், கருநீலமான கழுத்தை உடையவனும், உமா தேவியின் மணாளனுமான மகாதேவனை சாஷ்டாங்கமாய் நமஸ்கரிக்கின்றேன். எங்களை ம்ருத்யு என்ன செய்ய முடியும்?)

3. காலகண்டம் கால மூர்த்திம் காலஜ்ஞும் கால நாசனம்
நமாமி ஸிரஸா தேவம் கிம்நோ ம்ருத்யு: கரிஷ்யதி

(நஞ்சை கழுத்தில் வைத்திருப்பவனும், கால ரூபியும், காலத்தை உணர்த்துபவனும், யமனை சம்கரித்தவனுமான தேவ தேவனை நமஸ்கரிக்கின்றேன். எங்களை ம்ருத்யு என்ன செய்ய முடியும்?)

4. நீலகண்ட விரூபாக்ஷம் நிர்மலம் விமல ப்ரபம்
நமாமி ஸிரஸா தேவம் கிம்நோ ம்ருத்யு: கரிஷ்யதி

(நீலமான கழுத்தை உடையவனும், மூன்று கண்களைக் கொண்டவனும், நிர்மலனும், சுத்தமான காந்தி உடையவனுமான தேவனை சிரசு பூமியில் பட நமஸ்கரிக்கின்றேன். எங்களை ம்ருத்யு என்ன செய்ய முடியும்.?)

5. வாமதேவம் மகாதேவம் லோகநாதம் ஜகத்குரும்
நமாமி ஸிரஸா தேவம் கிம்நோ ம்ருத்யு: கரிஷ்யதி

(வாமதேவனும் மகாதேவனும் உலகங்களை ரட்சிப்பவனும், எல்லா உலகங்களுக்கும் குருவுமான தேவனை சாஷ்டாங்கமாய் நமஸ்கரிக்கின்றேன். எங்களை யமன் என்ன செய்ய முடியும்.?)

6. தேவ தேவம் ஜகன்னாதம் தேவேஸம் வ்ருஷபத்வஜம்
நமாமி ஸிரஸா தேவம் கிம்நோ ம்ருத்யு: கரிஷ்யதி

(தேவர்களுக்கெல்லாம் தெய்வமும், ஜகங்களில் தலைவனும், தேவர்களால் பூஜிக்கப்படுபவனும், விருஷக் கொடி உடையவனுமான ஈசனைத் தலையால் நமஸ்கரிக்கின்றேன். எங்களைக் காலன் என்ன செய்ய முடியும்?)

7. கங்காதரம் மஹாதேவம் ஸர்வாபரண பூஷிதம்
நமாமி ஸிரஸா தேவம் கிம்நோ ம்ருத்யு: கரிஷ்யதி

(சிரசில் கங்கையைத் தாங்கியவனும், மகாதேவனும், சகலவிதமான ஆபரணங்களையும் அணிந்து ஜ்வலிப்பவனும் (பார்வதி, மீனாட்சி திருமண சமயங்களில்) ஆன தேவர் தலைவனை நமஸ்கரிக்கும் எங்களை ம்ருத்யுவால் என்ன செய்ய முடியும்?)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8. அநாத: பரமானந்தம் கைவல்ய பததாயினம்
நமாமி ஸிரஸா தேவம் கிம்நோ ம்ருத்யு: கரிஷ்யதி

(காலங்களுக்கு அப்பாற்பட்ட பரமானந்த வடிவமும், மோட்சத்தைத் தரக்கூடியவருமான பரமேஸ்வரனை நமஸ்கரிக்கும் எங்களை ம்ருத்யுவால் என்ன செய்ய முடியும்)

9. ஸ்வர்கா பவர்கதாதாரம் ஸ்ருஷ்டி ஸ்தித்யந்த காரிணம்
நமாமி ஸிரஸா தேவம் கிம்நோ ம்ருத்யு: கரிஷ்யதி

(சொர்க்க வாசத்தையும், முக்தியையும் கொடுக்கின்றவரும், ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களைச் செய்கின்றவருமான தேவாதி தேவனைத் தஞ்சமெனக் கொண்டவர்களை ம்ருத்யுவால் என்ன செய்ய முடியும்.?)

10. உத்பத்தி ஸ்திதி ஸம்ஹார கர்த்தா ரஞ்சேஸ்வரம் குரும்
நமாமி ஸிரஸா தேவம் கிம்நோ ம்ருத்யு: கரிஷ்யதி

(பிறப்பு, வளர்ப்பு, மரணம் ஆகியவற்றை நடத்துகின்றவனும், ஐச்வர்யத்தை உடையவரும், குருவான தட்சிணாமூர்த்தியானவனுமான ஈஸ்வரனைப் பணியும் எங்களை ம்ருத்யுவால் என்ன செய்ய முடியும்.?)

11. மார்கண்டேய க்ருதம் ஸ்தோத்ரம்ய: படேத் ஸிவ ஸந் நிதௌ
தஸ்ய ம்ருத்யு பயம் நாஸ்தி நாக்னி ஸௌரபயம் க்வசித்

(மார்கண்டேயரால் செய்யப்பட்ட இந்த ஸ்லோகத்தை சிவசன்னதியில் ஏகாக்ர சிந்தையுடன் படிக்கிறவர் குடும்பத்தில் அகால மரணம் சம்பவிக்காது. நெருப்பு, கள்வர்கள் என்ற சம்சார துக்கங்களும் ஏற்படாது.)

12. ஸதா வர்த்தம் ப்ரகர்த்தவ்யம் ஸங்கடே கஷ்ட நாசனம்
ஸூசிர்பூத்வா படேத் ஸ்தோத்ரம் ஸர்வஸித்தி ப்ரதாயகம்

(தாங்க முடியாத அபாய காலத்தில் நூறு முறை படித்தால் ஆபத்து நீங்கி விடும். மனமும், உடலும் தூய்மையாக இருக்க வேண்டும். இடையூறு ஏற்படும் காரியங்களும் தடை நீங்கிப் பூரணமாகும்.)

13. ம்ருத்யுஞ்ஜய மஹாதேவ த்ராஹிமாம் ஸரணாகதம்
ஜன்ம ம்ருத்யு ஜரா ரோகை: பீடிதம் கர்ம பந்தனை

(ஓ, யமனை ஜெயித்தவனே! மஹா தேவனே! கர்மாவின் விளைவுகளான பிறப்பு, வியாதி, முதுமை, இறப்பு இவைகளில் சிக்கித் தவிக்கும் என்னை, உன்னைச் சரணமடைந்த காரணத்திற்காகவாவது காத்தருள வேண்டும்.)

14. தாவகஸ்த்வத் கத்ப்ராண ஸ்த்வச் சித்தோஹம் ஸதாம்ருட
இதி விஞ்ஞாப்ய தேவேஸம் த்ரியம்ப காக்யம் மனும் ஜபேத்

(சுகத்தை அளிப்பவரே! நான் எனது உயிரையும், மனதையும் உங்களிடம் கொடுத்துவிட்டேன். "நான் உங்களது சொந்தம்" எனக் கூறி 'ஓம் நமசிவாய' என முடிந்தவரை ஜபிக்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

15. நம: சிவாய ஸாம்பாய ஹராய பரமாத்மனே
ப்ரண தக்லேஸ நாஸாய யோகினாம் பதயே நம:

(தேவிக்குப் பாதி உடலைத் தந்தவனும், பாபங்களை அழிப்பவனும், சரணமடைந்தவர்களின் மனக் கவலையைப் போக்குகின்றவனும், ஞானிகளுக்குப் பதியுமான பரமேஸ்வரனை நமஸ்கரிக்கின்றேன்.)

ஸ்ரீ மார்கண்டேயபுராணே மஹா ம்ருத்யும்ஜய ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்

மார்க்கண்டேயர் அருளிய சந்திரசேகர அஷ்டகம்

(மிருகண்டு முனிவரின் குமாரரான மார்கண்டேயரால் இயற்றப்பட்ட இந்தப் பாடலைப் பாராயணம் செய்வதால், யமபயம் நீங்கி, தன தானிய குறைவின்றி, ஆரோக்கியமாக வாழ்ந்து, இறுதியில் வீடு பேறும் கிடைக்கும்)

1. ரத்ன ஸானுசராஸன ரஜதாத்ரிஸ்ருங்க நிகேதனம்
ஸிஞ்ஜினீக்ருத பந்நகேஸ்வர(ம் அ)ச்யுதானன ஸாயகம்
க்ஷிப்ரதக்த புரத்ரயம் த்ரிதிவாலயரபி வந்திதம்
சந்திரசேகரமாஸ்ரயே மம கிம் கரிஷ்யதி வை யம:

2. பஞ்சபாதப புஷ்பதக்த பதாம்புஜத்வய சோபிதம்
பாலலோசன ஜாதபாவக தக்தமன்மத விக்ரஹம்
பஸ்மதிக்த கலேபரம் பவநாசனம் பவமவ்யயம்
சந்திரசேகரமாஸ்ரயே மம கிம் கரிஷ்யதி வை யம:

3. மத்தவாரண முக்யசர்ம க்ருதோத்தரீய மனோஹரம்
பங்கஜாஸன பத்மலோசன பூஜிதாங்க்ரி ஸரோருஹம்
தேவஸிந்து தரங்கசீகர ஸிக்தசுப்ர ஜடாதரம்
சந்திரசேகரமாஸ்ரயே மம கிம் கரிஷ்யதி வை யம:

4. யக்ஷராஜஸகம் பகாக்ஷஹரம் புஜங்க விபூஷணம்
சைலராஜஸுதாபரிஷ்க்ருத சாருவாம கலேபரம்
க்ஷ்வேல நீலகலம் பரச்வததாரிணம் ம்ருகதாரிணம்
சந்திரசேகரமாஸ்ரயே மம கிம் கரிஷ்யதி வை யம:

5. குண்டலீக்ருத குண்டலேஸ்வர குண்டலம் வ்ருஷவாஹனம்
நாரதாதி முனீஸ்வரஸ்துத வைபவம் புவனேஸ்வரம்
அந்தகாந்தக மாஸ்ரிதாமர பாதபம் சமனாந்தகம்
சந்திரசேகரமாஸ்ரயே மம கிம் கரிஷ்யதி வை யம:

6. பேஷஜம் பவரோகிணாம் அகிலாபதா மபஹாரிணம்
தக்ஷ யஞவிநாசனம் த்ரிகுணாத்மகம் த்ரிவிலோசனம்
புக்திமுக்தி பலப்ரதம் ஸகலாகஸங்க நிபர்ஹணம்
சந்திரசேகரமாஸ்ரயே மம கிம் கரிஷ்யதி வை யம:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7. பக்தவத்ஸல மர்சிதம் நிதி மக்ஷயம் ஹரிதம்பரம்
ஸர்வபூதபதிம் பராத்பர மப்ரமேய மனுத்தமம்
ஸோம வாரி நபோ ஹுதாசன ஸோமபானிலகா க்ருதிம்
சந்திரசேகரமாஸ்ரயே மம கிம் கரிஷ்யதி வை யம:

8. விஸ்வஸ்ருஷ்டி விதாயினம் புனரேவ பாலன தத்பரம்
ஸம்ஹரந்தபி ப்ரபஞ்ச மசேஷலோக நிவாஸினம்
க்ரிடயந்த மஹர்நிசம் கணநாதயூத ஸமன்விதம்
சந்திரசேகரமாஸ்ரயே மம கிம் கரிஷ்யதி வை யம:

ஐயன் ஸ்ரீ அமிர்த கடேஸ்வரரையும், அன்னை அபிராமியையும் என்றும் நினையுங்கள். அவள் ஆலயம் சென்று தரிசியுங்கள். நல்லன எல்லாம் அருளும் அன்னை அவள். கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர் கபடு வாராத நட்பும் கன்றாத வளமையும் குன்றாத இளமையும் கழுபிணியிலாத உடலும் சலியாத மனமும் அன்பகலாத மனைவியும் தவறாத சந்தானமும் தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும் தடைகள் வாராத கொடையும் தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு துன்பமில்லாத வளமான வாழ்வும் தந்து அவள் திருப் பாதங்களில் நீங்காத அன்பும் கொண்டிருக்க அவள் அருள்வாள்.

எல்லாம் வல்ல அருள்மிகு அன்னை அபிராமியின் அருளடிகளே அடைக்கலம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Public domain. Digitization Muthulakshmi Research

Public domain. Digitization Muthulakshmi Research Academy